வில்லி பாரதம்

பாகம்  ஐந்து

ஸ்ரீ

வில்லிபுத்தூரார் பாரதம்

ஐந்தாவது

உத்தியோக பருவம்

சே. கிருஷ்ணமாசாரியரும்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரும்

இயற்றிய

உரையுடன்

வை. மு. நரசிம்மன்

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர் கம்பெனி

17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

விசுவாவசு ஐப்பசி

1966 விலை ரூ. 4—50

ஆறும் பதிப்பு, ஏப்ரல்—1966.

ஆனந்தா பார்வதி அச்சகம், 80, இடைப்பாளையம், தெரு, சென்னை-3.

முகவுரை.

அருந்தமிழபிமானிகட்கு ஓர் விண்ணப்பம்.

கம்பராமாயணம் முழுவதற்கும் உரைகண்டு வெளியிட்டபின், வில்லிபுத்தூரார் பாரதம் முழுவதுக்கும் உரைகாண வேணுமென்று அடியேன் திருத்தமப்பனூர் ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகளைப் பலர் ஊக்கியதுண்டு. அவர்களின் விருப்பப்படியே அவர் தமது ஆசிரியன்மாரான ஸ்ரீமாந். வை. மு. சடகோபராமாநுஜாசார்ய ஸ்வாமிகள், ஸ்ரீமாந். சே. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் இருவரும் முந்துறவே பெரும்பாலான பகுதிகட்கு உரைகண்டிருப்பவற்றைக்கொண்டும் அவர்கள் உரையெழுதாது விட்ட பகுதிகளுக்குத் தாமே உரைகண்டும் வில்லிபாரதம் பத்துப்பருவங்களுக்கும் நல்லுரையைப்பூர்த்தி செய்தனர்.

அவற்றுள் ஐந்தாவதாகிய உத்தியோகபருவம் இஞ்ஞான்று வெளியிடப்படுகிறது. செய்யுண்முதற்குறிப்பகராதி, அபிதானசூசிகையகராதி, அரும்பதவகராதி முதலியன சேர்க்கப்பட்டு இவ்வுரை மேலும் மிளிர்கிறது. இந்தப்பருவத்தின் உயிர்நிலையாயிய கிருட்டிணன் தூது சருக்கம் அனைவரும் விரும்பிக் கற்கின்றதொன்றாகலின், விழுமிய உரை திறம்பட எழுதப்பட்டுள்ளமை பிரசித்தம். இந்தப் புதிய பதிப்பு அச்சாகுங்கால் பிழைகளைக் களைந்து மேற்குறித்த சேர்க்கைகளைக் கூட்டிச் செம்மையுறவாக்கி உதவியவர், விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத்தமிழ்ப்பேராசிரியரான ஸ்ரீ. உ. வே. வித்வான். C. ஜெகந்நாதாசார்யர், M. A. (Hist), M. A. (Tamil), L. T., P.O.L., Dip. Geog. ஆவர். இவருடன் சகை ஸ்ரீ. E. S. வரதாசார்யர், B. A. அவர்களும் உதவி புரிந்தார். இவ்விருவர்திறத்தும் நன்றியறிதலுடையேன்.

இந்நூல் செவ்வன் முற்றுப்பெறத் தோன்றுத்துணையாயிருந்த தேர்கடவிய பெருமானின் கஞைகழல்களை அஹரதமும் வழுத்துவேன்.

இங்ஙனம்,

வை. மு. நரசிம்மன்.

விசுவாவசு வரு
பங்குனி மீ
1966

பொருளடக்கம்

			பக்கம்
முகவுரை			
1.	உலூகன் தூதுசருக்கம்	...	1
2.	வாசுதேவகூனப்படைத்துணையழைத்த சருக்கம்	...	34
3.	சஞ்சயன் தூதுசருக்கம்	...	55
4.	கிருட்டிணன் தூதுசருக்கம்	...	72
5.	படையெழுச்சிச் சருக்கம்	...	289
6.	முகூர்த்தங்கேள்விச் சருக்கம்	...	312
7.	களப்பலியூட்டு சருக்கம்	...	317
8.	அணிவகுப்புச் சருக்கம்	...	326
9.	செய்யுண்முதற்குறிப்பகராதி	...	357
10.	பிழைத்திருத்தம்	...	360
11.	அபிதானசூசிகையகராதி	...	361
12.	அரும்பதவகராதி முதலியன	...	367

முதலாவது

உலூகன் தூது சருக்கம்

உலூகனது தூதின் செய்கையைக் கூறுகின்றதொரு நூற் கூறுபாடென்பது பொருள். உலூகன் - பாண்டவர்களால் துரியோதனனிடம் அனுப்பப்பட்டானொரு அந்தணன். தூது - இங்கே தூதுசென்ற செய்தி. சருக்கம் - முடிபு அல்லது படைப்பு என்று பொருள்: அது சங்கேதத்தால், இந்நூலில் ஒரு பெரிய வகுப்பினுட்பட்ட சிறிய பாகத்தைக் குறிக்கும். இம்மூன்று சொற்கள் தொடர்ந்ததொரு தொடர்மொழியிலுள்ள இரண்டு புணர்ச்சியுள் முன்னது ஆறும்வேற்றுமைத்தொகையும், பின்னது இரண்டனுருபும் பயனுமுடன் தொக்கதொகையுமாம். இனி, பின்னதைத் தூதினது சம்பந்தமான சருக்கம் எனவிரித்து, விஷயமாக வுடைமையாகிய சம்பந்தப்பொருளில் வந்த ஆறும் வேற்றுமைத் தொகை யென்றுங் கொள்ளலாம். பாண்டவர்கள் அஜ்ஞாதவாசம் கழிந்தபின் கண்ணன் முதலானோரோடு ஆலோசித்து முடிவுசெய்து உலூகனென்னும் அந்தணனை திருதராட்டிரனிடம் தூதனுப்ப, அவ்வேதியன் சென்று செய்திகூறி, அங்குத் துரியோதனன் துரோணர் முதலிய பெரியோர்கள் பலர் சொல்லவுங் கேளாமல் கர்ணன் முதலிய சிற்றினத்தவரின் கருத்தையே முக்கியமாகத் தழுவிச் சிறிதும் இராச்சியங்கொடுக்கமாட்டேனென்று சொல்லி விட்டதைக் கேட்டுவந்து பாண்டவர்களுக்குங் கண்ணபிரானுக்குந் தெரிவித்த செய்தியை விளக்கும் பாகமென்பது இரண்ட பொருளாம். 'தூதுச் சருக்கம்' என்ற பாடத்துக்கு - இரண்டாம் வேற்றுமைத்தொகையாதலின், சிறப்பு விதியால் வலிமிக்கதென்க: மேல் 'சஞ்சயன் தூது சருக்கம்' 'கிருஷ்ணன் தூதுசருக்கம்' என்பவற்றிற்கும் இங்ஙனமே காண்க.

கடவுள் வணக்கம்.

1. மீனமாகியுங்கமடமதாகியுமேருவையெடுக்குந்தா
ளேனமாகியுநரவரியாகியுமெண்ணருங்குறளாயுங்
கூனல்வாய்மழுத்தரித்தகோவாகியுமரக்கரைக்கொலைசெய்த
வானநாயகனுகியுநின்றமான்மலரடிமறவேனே.

(இ - ள்.) மீனம் ஆகியும்-மீன்வடிவமாயும், கமடமது ஆகியும்-ஆமை வடிவமாகியும், மேருவை எடுக்கும் தாள் ஏனம் ஆகியும் - மகா மேருமலையைத் தாங்கவல்ல பாதத்தை யுடைய பன்றிவடிவமாயும், நர அரி ஆகியும் - நரசிங்க வடிவமாயும், எண் அரு குறள் ஆயும் - (இத்தன்மையதென்று) கணிதத்தற்கும் அருமையான வாமனவடிவமாகியும், கூனல் வாய் மழு தரித்த கோ ஆகியும் - வளைவான நுனியையுடைய கோடாலிப்படையை (க் கையில்) ஏந்திய பரசுராம வடிவமாயும், அரக்கரை கொலைசெய்த வானம் நாயகன்

ஆகியும் - (இராவணன் முதலிய) இராக்கதர்களை வதைத்தல் செய்தருளின முத்தியுலகத்துக்குத் தலைவனுன ஸ்ரீராமவடிவமாயும், நின்ற - (திருவவதாரஞ்செய்து) நின்ற, மால் - திருமாலாகிய கண்ண பிரானது, மலர் அடி - தாமரைமலர்போன்ற திருவடிகளை, மறவேன் - (எப்பொழுதும்) மறக்கமாட்டேன்; (எ - று.)—ஏ-தேற்றம்; ஈற்றசை யெனினும் அமையும்.

"தேவுடைய மீனமா மாமையா மேனமா மரியாய்க் குறளாய் மூவுருவி லிராமனுய்க் கண்ணனுய்க் கற்கியாய் முடிப்பான்" "மச்சா கூர், மா கோலா சிங்கா வாமா ராமா ரா, மா கோபாலா மாவாவாய்" என்றபடி மத்ஸ்யம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசு ராமன், தசரதராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்ற திருமா லின் பத்துத்திருவவதாரங்களுள், கிருஷ்ணவதாரமூர்த்தி இந் நூலின் வரலாறு நிகழ்ந்த காலத்தில் எழுந்தருளியுள்ளதனுல் அவரை 'நின்றமால்' என விசேடிய முகத்தாற்கூறி, பலராமாவ தாரம் கிருஷ்ணவதாரத்தில் ஐக்கியமாதலாலும் கற்கியவதாரம் இனி நிகழ்வதாதலாலும், அவ்விரண்டையும் நீக்கி, மற்றை யேழு நிகழ்ந்த திருவவதாரங்களையே இங்கு முறைபடக் கூறினர்.

முன்னெருகாலத்தில் பிரமதேவன் கண்துயில்கையில், சோமக னென்னும் அசுரன் வேதங்களையெல்லாங்கவர்ந்துகொண்டு கடலி னுள் மறைந்து செல்ல, பிரமன்முதலிய தேவர்களின் வேண்டு கோளால் திருமால் மத்ஸ்யமாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனைத் தேடிப் பிடித்துக்கொன்று, அவன் கவர்ந்துசென்ற வேதங்களை மீட்டுக் கொணர்ந்து, அன்னவடிவமாய் அவற்றைப் பிரமனுக்கு உபதேசித்தருளினர். துருவாசமுனிவரது சாபத்தாற் கடலினுட்புக்கு ஒளித்த சுவர்க்கலோகத்துச் செல்வங்களையெல் லாம் மீளவும் பெறும்பொருட்டு இந்திரன முதலிய தேவர்கள் திருமாலின் நியமனப்படி அசுரர்களுடன் கூடிச்சென்று மந்தர மலையை மத்தாக நாட்டி வாசுகி யென்னும் பெரும்பாம்பைக் கடை கயிருகப் பூட்டித் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது, அம்மந்தரகிரி கடலினுள்ளே சென்று அழுந்திவிடாதபடி எம்பெருமான் மகாகூர்ம ரூபத்தைத்தரித்து அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தார்: அன்றியும், உலகங்களின் கீழ் நின்று அவற்றை எப்பொழுதுந் தாங்கியருளும் ஆதிகூர்மமூர்த்தியும் உண்டு. ஒரு காலத்தில் பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிப் போன இரணியாக்கனைத் திருமால் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால் மகாவராகரூபமாகத் திருவவதரித்துக்கொன்று பூமியைக் கோட்டாற்குத்தியெடுத்துக்கொண்டுவந்து பழையபடி விரித்தருளினர். எல்லாமலைகளிலும் பெரிய மகாமேருகிரி சிலம்பி னிடத்துச் சிறிய பருக்கைக் கற்போலத் தன்குளம்பினிடத்து மிகச் சிறுபொருளாகுமாறு கொண்ட பெரிய பன்றித்திருவடிவமாதலால், 'மேருவையெடுக்குந் தாளேனம்' என்றது; "சிலம்பினிடைச் சிறு பரல்போற் பெரியமேரு திருக்குளம்பிற் கணகணப்பத் திருவாகாரங், குலுங்க நிலமடந்தைதனே யிடந்துபுல்கிக்கோட்டிடை வைத்தருளிய

வெங்கோமான்கண்டீர்" என்னும் பெரிய திருமொழியையும், "பாருக் கரந்தை தவிர்ப்பதற்காகப் பழிப்பில்பெருஞ் சீருற்றசெங்கட் கரும் பன்றியாகித்திருக்குளம்பின் மேருக் கணகணமாத் தலைநாளில் விகோதிப்பரே" என்னுந் திருவரங்கத்துமாலையையும், "குரமத்ய கதோ யஸ்யமேரு: கணகணயதே" என்னும் வடநூல் மேற்கோளையுங் காண்க. தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும், ஐம் பெரும் பூதங்களாலும், ஆயுதங்களாலும் தனக்கு மரணமில்லாதபடி அளவற்ற வரங்களைப்பெற்றுத் தேவர் முதலிய யாவர்க்குங்கொடுமை யியற்றித் தன்னையேகடவுளாக வணங்கச்செய்த (இரணியாக் கனது உடன்பிறந்தவனை) இரணியன் தன்புத்திரனும் மகாவிஷ்ணுபக்தனுமான பிரகலாதாழ்வான் தன்பெயர்சொல்லிக் கல்விகற்காமல் நாராயணநாமஞ் சொல்லி வரவே அவனைக்கொல்லு தற்கு என்ன உபாயஞ்செய்தும் அவன் பகவானருளால் இறக் திலனாக இரணியன் மகனை நோக்கி, 'நீ சொல்லும் நாராயண னென்பான் எங்கு உளன்? காட்டாய்' என்ன, அப்பிள்ளை "சாணினுமுளனேல் தண்மையனு விளைச்சதகூறிட்ட கோணினு முளன் மாமேருக்குன்றினுமுளன இங்கின்ற தூணினுமுளன் நீ சொன்ன சொல்லினுமுளன் இத்தன்மை, காணுதிவிரைவின்" என்று சொல்ல உடனே இரணியன் சென்றென்று சினந்து தூணைப் புடைக்க, அதில் நின்றும் பகவான் நரசிங்கவுருவமாய்த் தோன்றித் திருக்கைக் நகங்களால் அவன் மார்பைப் பிளந்து அழித்திட்டார். மகாபலியென்னும் அசுரராசன் தன்வல்லமையால் இந்திரன் முதலிய யாவரையுஞ்சயித்து மூவுலகங்களையும் தன்வசப்படுத்தி அரசாண்டு செருக்குக்கொண்டிருந்தபொழுது, அரசிழந்த தேவர்கள் திருமாலைச் சரணமடைந்துவேண்ட, அவர் குள்ள வடிவமான வாமனவதார மெடுத்துக் காசியப முனிவருக்கு அதிதி தேவியினிடந் தோன்றின பிராமணப் பிரமசாரியாகி வேள்வியியற்றி யாவர்க்கும்வேண்டிய அனைத்தையுங் கொடுத்துவந்த அப்பலியினிடஞ் சென்று, தவஞ் செய்தற்குத் தன் காலடியால் மூவடி மண்வேண்டி அது கொடுத்தற் கிசைந்து அவன் தத்தஞ்செய்த நீரைக் கையிலேற்று, உடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தை அளாவி வளர்ந்து ஓரடியால் மண்ணை யும் ஓரடியால் விண்ணையும் அளந்து மற்றோரடியால் அவனையும் பாதாளத்தி லமுத்தி அடக்கினர். உலகத்திலே எவரும் அழிப்பவ ரில்லாமையால் கொழுத்துத்திரிந்து கொடுமையியற்றிவந்த க்ஷத் திரியவம்சங்கள் பலவற்றை நாசஞ் செய்யும்பொருட்டு நாராயண மூர்த்தி ஜமதக்கினிமுனிவரது மனைவியான ரேணுகையிடம் ராமனுய்த் திருவவதரித்து, பரசு எனனுங் கோடாலிப்படையையே ஆயுதமாகக் கொண்டு தமதுதந்தையின் ஓமதேனுவைக்கவர்ந்து அவரைக் கொன்றிட்டது காரணமாகக் கார்த்தவீரியார்ச்சுனனையும் அவனது குமாரர்களையுங் கொன்று அழித்து, அதனாலேயே க்ஷத்திரியவமிசம் முழுவதன்மேலுங் கோபாவேசங்கொண்டு, உலகத்திலுள்ள அரசர் கள் பலரையும் இருபத்தொருதலைமுறை பொருது ஒழித்திட்டார். ஒருகாலத்தில் தேவர்களெல்லோரும் இராவணன் முதலிய ராக்ஷசர் களின்உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஸ்ரீமகாவிஷ்ணுவைச் சரண

மடைந்துவேண்ட, அவர் தசரதசக்கரவர்த்திகுமாரனய் ஸ்ரீராமனுகத் திருவவதரித்து அரக்கர்கள் அனைவரையும் அழித்து நல்லோரைக் காத்தருளினர். துஷ்ட அசுரர்கள் பலரும் கெட்ட அரசர்கள் பலரும் ஒருங்கேகூடி வசிப்பதாலுண்டான பூமிபாரத்தை நிவிருத்தி செய்யும்பொருட்டு அப்பூமிதேவியின் பிரார்த்தனையின்படி தேவர் கள் வேண்டுகோளால் திருமால் வசுதேவகுமாரராய்ப் பலராம கிருஷ்ணர்களாகத் திருவவதரித்தார். கலியுகத்தின் இறுதியில் முழுவதுமழிகிற தருமத்தை நிலைநிறுத்தும்பொருட்டு மகிமை யுடையதொரு குதிரையின் வடிவமாகத்தோன்றுவது, கற்கியவ தாரம். காத்தற்றொழிற்குரியகடவுளான திருமால் பயிரைவளர்த் தற்குக்களையைப்பறித்தல்போலச் சிஷ்டர்களைப்பரிபாலனஞ்செய்யும் பொருட்டுத் துஷ்டர்களை நிக்கிரகிப்பதற்காக அருளாற் கொள்ளும் அவதாரங்கள் இவையென்றும், இவை மற்றையோரது பிறப்புக்கள் போலக் கருமசம்பந்தத்தால் உண்டாகுமவையன்றி, பகவானது இச்சாமாத்திரத்தால் வேண்டியபொழுது உதிப்பவையென்றும் உணர்க. இப்பத்தவதாரங்களுள் பரசுராம பலராமாவதாரங்கள் ஆவேசாவதாரமென்றும், மற்றவை அம்சாவதாரமென்றும், அவற் றுள்ளும் ஸ்ரீ ராமகிருஷ்ணாவதாரங்கள் பூரணாவதாரமென்றும் கூறப் படும்.

மேரு - பூமி மத்தியில் இருக்கும் பொன்மயமானதொரு பெரு மலை. நரவரி - மனிதவடிவமுஞ் சிங்கவடிவமுங் கலந்தமூர்த்தி. நரன் - மனிதன். அரி - சிங்கம் யானைமுதலிய பெரியவிலங்குகளை யும் அரிக்கவல்லதென்று பொருள்; அரித்தல் - அழித்தல். 'மேருவை யெடுக்குந்தாள்' என அடைமொழிகொடுத்து வராகாவ தாரத்தை விசேடித்தது மற்றைய அவதாரங்கள்போல உலகத்தாரது துன்பத்தைத்தீர்ப்பதன்றி உலகத்துக்கே நேர்ந்ததுன்பத்தைத் தீர்ப்பதும், அடியவர்களைக் காத்தலேயன்றி அடியவர்களுள் தலைவி யான நிலமகளைக்காத்தலுமாகிய அவ்வவதாரத்தினது சிறப்புத் தோன்றவென்க. இரணியன் தனித்தனி மனிதர்களாலும் மிருகங்க ளாலும் தேவர்களாலுஞ் சாவதில்லையென்று வரம்பெற்றிருந்த தனால், அவனைக் கொல்லுதற்கு, மனிதத்தன்மையும் விலங்கின் தன்மையும் கலந்ததொருவடிவத்தை யெடுத்தருளினர். மிகச்சிறிய வாமன ரூபம் மிகப்பெரிய திரிவிக்கிரமரூபத்தை உள்ளடக்கிக் கொண்டிருந்த உயர்வுதோன்ற 'எண்ணருங்குறள்' எனப்பட்டது; "ஆலமர்வித்தினருங்குறளானன்" என்றும், "அற்புதனற்புதரே யறியுந்தன், சிற்பதமொப்பதொர்மெய்க்கொடு சென்றான்" என்றுங் கம்பர் கூறியவாறுங்காண்க. கம்பர் "பய்ந்தவர்களுமிகழ்குறளன்" எனக்கூறியதற்கேற்ப எண்ணருங்குறள் என்பதற்கு - (வடிவத் தின் சிறுமையைப்பார்த்தவர் எவரும்) நன்கு மதித்தற்குக் கூடாத வாமனனென்றும் பொருள் கூறலாம். திரிகரணங்களுள் மற்றைய வற்றின் செய்கைக்குக் காரணமான மனத்தினால் எண்ணுதற் கருமைகூறவே, வாயாற்சொல்லுதற்கும் கண்ணால் நோக்குதற்கும் அருமை தானே பெறப்படும். குறள் - சிறுமை, பண்புப்பெயர்; குறு - பகுதி, அள் - விகுதி, இது - பண்பாகுபெயராய், சிறுமை

யுடைய வடிவத்தைக் குறிக்கும். இரண்டடியளவுள்ளதற்குக் குறளென்றும், மூன்றடியுயரமுள்ளதற்குச் சிந்தென்றும் பெயர்; அதனை யரப்பிலக்கணத்தில், இரண்டடிவெண்பாவைக் குறள் வெண்பாவென்றும், மூன்றடிவெண்பாவைச் சிந்தியல்வெண்பா வென்றும், இருசீரடியைக்குறளடியென்றும், முச்சீரடியைச் சிந்தடி யென்றும் கூறுவதுகொண்டும் உணர்க. கூன் நல் எனப்பிரித்து, வளைவையும் நன்மையையும் உடைய எனவும் பொருள்கொள்ளலாம். நன்மை - அழகும் துஷ்டநிக்கிரகமும். வாய் - வெட்டுமிடம். பரசு ராமர் பிராமணகுமாரராயிருந்தும் தமது தந்தையின் கருப்போற்பத் திக்குக் காரணமான சருவினது [சரு - ஒருவகைச் சோறு] பேதத் தால் கோபம் தாபம் போர் வெற்றி பலம் பராக்கிரமம் முதலிய க்ஷத்திரியாசாரமுடையவரான தன்மை தோன்ற, அவரை 'கோ' என்ற பெயராற்கூறினர்; இனி, அரசர்களனைவரையும் வேரறுத்து அவர்களுடைய இராஜ்யத்தையெல்லாம் தனதாக்கிக்கொண்டு, பின்பு காசியபமுனிவருக்குத் தானஞ்செய்த பெருந்தகைமைபற்றி, 'கோ' என்றதாகவுங் கொள்ளலாம். அரக்கர் - படைத்தற்கடவு ளான பிரமதேவர், ஆதியில் நீரைப்படைத்து அதனைக்காக்கும் பொருட்டுச் சிலபூதங்களைச் சிருஷ்டித்து 'நீங்கள் இதனைக்காக்கக் கடவீர்' என்றபோது, அவர்களிற்பசியுற்ற சிலர் "ஜக்ஷாம [உண்ணக் கடவேம்]" என்றும், பசியுறுத சிலர் 'ரக்ஷாம [காக்கக்கடவேம்]' என்றுங்கூற, அதுகேட்டு அக்கடவுள், ஜக்ஷாம என்றவர் யக்ஷராகக் கடவரென்றும், ரக்ஷாம என்றவர் ராக்ஷஸராகக்கடவரென்றும் அருளிச் செய்ததனால், யக்ஷர் என்று ஒரு குலத்தாரும், ராக்ஷஸர் என்று மற்றொரு குலத்தாரு மாயினரென நூல்கள் கூறும். இவர்கள் பின்பு அளவில்லாத வலிமைபெற்று மிகச்செருக்குற்று உலகத் துக்குத் துன்பமியற்றுபவரானார்கள். "அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி" என்றபடி இராமபிரான் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளுகையில் அயோத்தியிலுள்ள சகல பிராணிகளுக்கும் ஸ்ரீ வைகுண்டமளித்த மகிமை விளங்க, அவரை "வானநாயகன்' என்றார். வான் என்ற ஆகாயத்தின் பெயர் - இங்கே இலக்கணை யாய், எல்லா வுலகங்களுக்கும் மேலுள்ள மோக்ஷ சமமான ஸார்வ பௌமனென்னும் லோகத்தை உணர்த்திற்று; இனி, வான் - இடவாகு பெயராய், வானநாயகன் - பரமபதத்திலுள்ள நித்தியசூரிகளுக்குத் தலைவனென்றுமாம். இனி, வானநாயகன் - தேவாதிதேவனுமாம்; உபேந்திர மூர்த்தியுமாம். வானம் - மூலப்பிரகிருதியுமாம். நின்ற என்றது - தான் அவதரித்த காரியமாகிய பூமிபாரநிவிருத்தியை நிறைவேற்றும்பொருட்டுப் பாண்டவ சகாயனுய்க் காலம்நோக்கி யிருந்த தன்மையை விளக்கும். மால் - பெருமை; அதனை யுடைய வனுக்குப் பண்பாகுபெயர்; இனி, மால் - விருப்பமாய், அதனை எல்லா உயிர்களிடத்திலும் கொண்டவனும், எல்லாராலும் விரும் பத்தக்கவனுமானவனென்றும் பொருளுரைக்கலாம். திருவடி களுக்குத் தாமரைமலர் உவமை, செம்மை, மென்மை, குளிர்ச்சி யழகுகளுக்கென்க. "அன்று நான்பிறந்திலேன்" என்றற்போல, 'மறவேனே' என்றார்.

இங்ஙனம், கொடியவர்களைக்கொன்று அடியவர்களையளித் தருளுகிற ஆதிதேவன் விஷயமான வணக்கங் கூறியதனால், கவி தாம் எடுத்துக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிதுமுடியு மென்பது கருத்து. இங்கு ஆகி என்றும், ஆய் என்றும் வந்தவை - அந்தந்த வடிவமாகப் பிறந்தபொழுது தமது தெய்வத்தன்மை மேலிடாமல், அந்தந்தப் பிறப்புக்கு உரிய உருவம் குணம் செயல் களைக் கொண்டுள்ளமையைத் தெரிவிக்குமென்பது, சம்பிரதாயம்; இதனைத் திருவிருத்தத்தில் "உயிரளிப்பான்" "எங்கின்றயோனியு மாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா" என்றவிடத்து 'ஆய்' என்ற தன் வியாக்கியானங்களைக்கொண்டு அறிக. இப்பாட்டுக்கு 'நான்' என்னுந் தோன்று எழுவாய் வருவிக்க. இப்பாட்டு மொழிமாற்று முதலியன இன்மையால், யாற்றுநீர்ப்பொருள்கோள். "மீனமை கோல நெடுநரசிங்கமாகி நிலம்விரகாலளந்த குறளாய், ஆனது சீறுமழு வல்வில்லும் வெல்லுமுனையலமுற்ற செங்கையவராய், வானுடர் வந்துதொழமண்ணுடர்யாவரையுமடிவிக்க வந்தவடிவாய், நானுவிதங்கொள் பரியாளாகி நின்றருளு நாராயணையநமவே" என்பர், மேல் சல்லியபருவத்தும்.

இதுமுதல் இச்சருக்கம் முடிகிறவரையில் இருபத்தொரு கவிகள்-பெரும்பாலும் முதற்சீர் மாச்சீரும், ஆருஞ்சீர் மாங்காய்ச் சீரும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (1)

தூதனுப்பித் துரியோதனன் கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கண்ணன் கூறுதல்.

2. வல்லினுலவன்கொண்டமண்மீளவும்வல்லினற்கொளலன்றி
வில்லினுலமர்மலைந்துகொள்ளுதுமெனல்வேத்துநீதியதன்றுல்
சொல்லினுலொருதூதினிலறியலாஞ்சுயோதனனினவென்று
கல்லினல்வருகன்முகில்விலக்கியகரியமாமுகில்சொன்னன்.

(இ - ள்.) 'வல்லினுல் - சூதாட்டத்தினுல், அவன் - துரியோ தனன், கொண்ட - கவர்ந்துகொண்ட, மண் - இராச்சியத்தை, மீளவும் - மறுபடியும், வல்லினுல்-அச்சூதாட்டத்தினாலே, கொளல் அன்றி - சயித்துப்பெறுவது தகுதியேயல்லாமல், வில்லினுல் - வில்லைக்கொண்டு, அமர் மலைந்து - போரைச்செய்து, கொள்ளுதும்- பெறுவோம், எனல்-என்று நிச்சயிப்பது, வேந்து நீதியது அன்று- அரச நீதியாகாது; சுயோதனன் நினைவு-(இவ்விஷயத்தில்) துரியோ தனனது எண்ணத்தை, சொல்லினுல் - (அவன் சொல்லுஞ்) சொல்லின்மூலமாய், ஒரு தூதினில் - ஒரு தூதனைக் கொண்டு, அறியலாம் - தெரிந்துகொள்ளலாம், என்று—, வரு கல் முகில் கல்லினுல் விலக்கிய கரிய மா முகில் - (இந்திரனேவலால்) வந்த கல் மழையை (க் கோவர்த்தனமென்னும்) மலையினுல் தடுத்த கருநிற முடைய அழகிய மேகம்போன்ற கண்ணன், சொன்னன் - (அப்

பொழுது ஆலோசனைச் சபையில் எல்லா அரசர்களையும் நோக்கிக்) கூறியருளினன்; (எ - று.)—ஆல் - ஈற்றசை; ஆதலால் என்பதன் விகாரமெனினும் அமையும்.

வல்-சூதாடுகருவி; இங்கே இலக்கணையாய் ஆட்டத்தைக் குறித்தது. அவன் - சேய்மைச்சுட்டு. வேந்து - அரசத்தன்மை; இங்கே வேந்தனுக்குப் பண்பாகுபெயர்; அரசு அமைச்சு தூது என்பனவும் இங்ஙனமேயிற்கும். நீதி-நல்வழியடைவிப்பதென்று காரணப்பொருள். ஸுயோதனன் என்னும் பெயர்க்கு நல்ல [வெற்றியைத் தருகிற] போரையுடையவனென்று பொருள் [சு - நன்மை, யோதனம் - யுத்தம்]. என்று சொன்னன் என்றும், கல்லினல் விலக்கிய என்றும் இயையும். கல் - மலைக்கு இலக்கணை. முகில் என்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது மழைக்கு முதலாகுபெயரும், பின்னது கண்ணனுக்கு உவமவாகுபெயருமாம். முகில் என்பது - சொல்லால் பால்பகாஅஃறிணையாயினும், பொருளால் உயர்திணையாண்பாலாதலால் சொன்னன் என்பதைக் கொண்டது. திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங் கூடி மழையின்பொருட்டாக இந்திரனை யாராதித்தற்கென்று சமைத்த சோற்றைக் கண்ணன் அவனுக்கிடாதபடி விலக்கிக் கோவர்த்தன மலைக்கு இடச்சொல்லி, தானே ஒருதேவதாரூபமாய் அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தகம் முதலிய மேகங்களை ஏவிக் கண்ணன் விரும்பி மேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையருக்கும் இடைச்சியருக்குந் தீங்கு தரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது, பெய்வித்தபொழுது கண்ணன் கோவர்த்தனமென்னும் மலையையெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையும் இடையூறு சிறிதுமின்றிக் காத்தருளின னென்பது - இதிற்குறித்த கதை. கரியமாமுகில் சொன்னன் என்பதற்கு- "சேயோன் வீழ்வுவிழைவோடு சிறந்தபின்னர் மாயோனுமாயாக்குரு மைந்தரு மன்னர்யாரும், போயோதை வீதி யுபலாவி புகுந்து தங்கள், ஆரோதனத்துக்குறு நீர்மைக ளாயலுற்றார்" எனக் கீழ்க் கதைத் தொடர்ச்சியை யுணர்க. பாண்டவ சகாயனை கண்ணன் இங்ஙனம் முதலிற்சொன்னது, அங்குள்ள மற்றையோரது கருத்து வெளியாதற்பொருட்டென்க. 'கன்முகில் கல்லினல் விலக்கிய முகில்' என ஒரு சாதுரியந்தோன்றக் கவி கூறினர். கண்ணனுக்கு முகில் உவமை - கருமைக்கு மாத்திரமேயன்றிக் கைம்மாறு கருதாது கருணை மழை பொழிதற்கும் தண்மையுடைமைக்குமாம். (2)

துரியோதனனிடத்தினின்று இராச்சியத்தை மீட்டல் தகாதென்று பலராமன் கூறுதல்.

3. உரியவம்புவியுதிட்டிரன் றன்னியவணுற்றவர் பலர்காணப்
பரியவன்பெருஞ்சூதினுல்வென்று பல்லாண்டடிப்படவாண்டான்
திரியவன்புடன்வாங்குதற்கெண்ணுமித்தீமதிகொடிதென்று
கரியவன்புகல்கட்டுரைகேட்டபின்காமபாலனுஞ்சொன்னன்.

(இ - ள்.) கரியவன் - கரிய திருநிறமுடைய கண்ணபிரான், புகல்- (இவ்வாறு) சொன்ன, கட்டு உரை - உறுதிமொழியை, கேட்டபின் - செவியுற்றவுடனே, காமபாலனும் - பலராமனும், பரியவன் - பெருமை யையுடைய துரியோதனன், அவண் உற்றவர் பலர் காண - அவ் விடத்தில் [சபா மண்டபத்தில்] வந்துள்ளவர் பலரும் (பிரதியக்ஷ மாகப்) பார்க்கையில், யுதிட்டிரன்தனை - தருமபுத்திரனை, பெருசூதி னால் - பெரியசூதாட்டத்தினால், வென்று - சயித்து, உரிய அம் புவி- (அத்தருமனுக்கு) உரியதாயிருந்த அழகிய பூமியை, பல் ஆண்டு - அநேக வருஷ காலம், அடிப்பட - தன்கீழ்ப்பட்டு அமைய, ஆண் டான் - அரசாண்டான்; (அங்ஙனம் அவன் வென்று பலநாள் ஆண்ட இராச்சியத்தை), திரிய - மீளவும், வன்புடன் - பலாத்கார மாக, வாங்குதற்கு - பறித்துக் கொள்வதற்கு, எண்ணும் - நினைக்கிற, இ தீ மதி - இந்தக் கெட்ட அறிவு, கொடிது - கொடுமையுடையது, என்று சொன்னன்—; (எ - று.)

துரியோதனன் பலராமனிடங் கதாயுதப் பயிற்சியை விசேஷ மாகக்கற்றுக் கொண்டது பற்றிப் பலராமன் அவனிடம் மிகுந்த பக்ஷபாதமுடையவனுதலாலும், தனது தங்கையான சுபத்திரையைத் துரியோதனனுக்கும், தனது மகளான வத்சலையைத் துரியோதனன் மகனை லக்ஷ்மணகுமாரனுக்கும் மணஞ் செய்விக்கக் கருதியிருந்த எண்ணம் நிறைவேறுதபடி கிருஷ்ணன் சுபத்திரையை அருச்சுன னுக்கும் வத்சலையை அருச்சுனகுமாரனை அபிமன்யுவுக்கும் தந்திர மாக மணஞ் செய்து வைத்ததாலும் பலராமனுக்குப் பழைய அபி மானம் துரியோதனனிடத்தில் நீங்காதிருந்ததனாலும் இங்ஙனங் கூறினதென அறிக. எந்த வகையிலோ ஒருகால் தருமனென்று துரியோதனனாற் கொள்ளப்பட்டதாதலாலும், பதின்மூன்று வருஷ மாய் விட்டதனாற் காலதோஷம் வந்து விட்டதனாலும், மறுபடி அந்த இராச்சியத்தைப் பாண்டவர் எவ்வித தந்திரமாயினும் பெற முயல்வது நீதியன்று என்பது, இதன் கருத்து. திருதராஷ்டிரன், பாண்டு என்ற இரண்டு ஜாதிகளுள் மூத்தவனுதலால் இராச்சி யத்துக்கு உரியவனான திருதராஷ்டிரனது புத்திரனுதல் பற்றியும், துரியோதனனுக்கு அந்த இராச்சியத்தில் அதிக பாத்தியதை இருக்கிறதென்ற கருத்து, 'பரியவன்' என்ற சொல்லில் தொனிக்கு மாறுங் காண்க. "அவனும் முடிக்குரியான் தோன்றல் அவனுக்கு, இவனும் இடுகவற்றுல் தோற்றுன் - அவனும் அரசிழவா வண்ணம் அறிந்துரைமி னென்றுன், வரைகெழுதோள் மன்னன் மதித்து" என்பது, பாரத வெண்பா.

பூமிக்கு அழகு, பலவளங்களையு முடைமை. யுதிட்டிரன் - போரில் (பின் வாங்காமல்) நிலைநிற்பவனென்று பொருள். இப் பெயர், இவனது பல பராக்கிரமங்களை விளக்கும். அவண், அண் - இடப்பொருள் காட்டும் விகுதி. பரியவன் வென்று—வெல்லுதல் வினைக்குத் துரியோதனன் - ஏவுதற்கருத்தா; துரியோதனனது கருத்தின்படி அவன் மாமனான சகுனி சூதாடித் தருமனை வென்றன னுதலால், சகுனியின் பக்கத்துக்கு வேண்டிய பந்தயம் வைத்தவன் துரியோதனனுதலால், அவ்வாட்டத்தில் வெல்லப்படும் போரு

சூக்குத் துரியோதனனே உரியவனுதல் பற்றி, 'பரியவன் பெருஞ் சூதினால் வென்று' என்றதாகவும் கொள்ளலாம். இனி, வெல் வித்து என்பது பிறவினை விகுதி தொக்கு நின்ற தென்றுவது, வென்று என்பது பிறவினைப் பொருளில் வந்த தன்வினையென் றுவது கொள்ளுதலும் ஒன்று. பலராமனுக்குச் சூதாட்டத்தில் மிகப் பிரியமாதலால் அவன், 'பெருஞ் சூது' என்றான்; அவனுக்குச் சூதில் மிக விருப்பமாதலைப் பாகவதம், விஷ்ணுபுராணம் முதலிய வற்றில் விளங்கக் காண்க. சூதில் வென்றதையே பிரதானமான வெற்றியாக இங்கு எடுத்துக் கூறிச் சாதித்தற்கு இதுவும் ஒரு காரணம். இனி, போர் முதலிய எவ்வகை முயற்சிகளாலும் பெறு தற்கரிய இராச்சியம் முதலிய பொருள்களை எளிதிற் பெறுவித்த மகிமையைக் கருதி 'பெருஞ்சூது' என்றாருமாம். பரிய வல் எனப் பிரித்து, மிக வலிய எனப் பொருள் கொண்டு, சூதுக்கு அடை மொழி யாக்கினும் அமையும். அப்பொழுது, ஆண்டான் என்பதற்கு துரியோதனனென்றே எழுவாய் வருவித்தல் வேண்டும். துரியோ தனனைப் பரியவனென்றது மிக்க வலியுடைமையாலும், பெருங்குடும்ப முடைமையாலும், பெருஞ்சேனையுடைமையாலும், பெருஞ்செல்வமும் பேரிராச்சியமு முடைமையாலும், 'ராஜராஜன்' என அரசர்கள் பலர்க்குப் பெரியவனுதலாலும், பாண்டவர்களுள் அருச்சுனன் முதலிய மூவரினும் பிராயத்தில் மூத்தவனுதலாலு மென்க. பரியவன் - பருமையென்னும் பண்படியாப் பிறந்த பெயர். இனி, பரியவன் - சூதிரைச் சேனையையுடையானென்றுமாம். பரி-சூதிரை; (பாரங்களைப்) பரிப்பது; பரித்தல் - சுமத்தல்; கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்துகெட்ட காரணப்பெயர். அடிப்பட - வசப்பட, பழக என்றுமாம். திரிய - (அவன்) மனம் மாறுபட என்பாருமுளர். அன்புடன் எனப் பிரித்து, ஆசையோடு எனவுமாம். கரியவன் - கிருஷ்ணனென்னும் வடசொல்லின் பொருள் கொண்ட பெயர். காமபாலனென்னும் பெயர்க்கு - (அடியார்களது) வேண்டுகோளைப் பாதுகாப்பவனென்று பொருள்; காமம் - விருப்பம், உம்மை இழிக் கவியில் 'கரியமரமுகில் சொன்னன்' என்றதனை நோக்குதலால், இறந்தது தழுவிய எச்சம்; இங்ஙனம் எச்சவும்மை கதைத் தொடர்ச் சியை விளக்கப் பலவிடத்தும் வரும். துரியோதனன் தருமனைச் சூதில் இரகசியமாக வென்றுனில்லை யென்பார், 'பலர்காண' என்றார். அவன் உற்றவர் பலர்-பீஷ்மர் துரோணர் கிருபர் அசுவத்தாமன் முதலிய பெரியோர்களும், கர்ணன் முதலிய ஒத்த அரசர்களும், பிறரு மென்க. புகல் கட்டுரை - இறந்தகால வினைத்தொகை. உற்று அவர் எனப் பதம் பிரித்து, அப்பாண்டவர்களும் மற்றும் பலரும் அவ்விடத்திற் பொருந்தியிருந்து காணவென்றுங் கொள்ள லாம். பலர் காண ஆண்டான் என்றலுமொன்று. பலராமன் - கிருஷ்ணனது தமையன்; விஷ்ணுவின் எட்டாம் அவதாரம்; வசுதேவருடைய பத்தினிகளுள் தேவகியின் வயிற்றில் ஆறு மாதமும் உரோகிணியின் வயிற்றில் ஆறுமாதமும் இருந்து பிறந் தவன்; இவனை ஆதிசேஷனது அம்சமென்றும் நூல்கள் கூறும்.

சாத்தகி பலராமனைப் பழித்தல்.

4. இளைய சாத்தகி தமையனை மிகக்கரிதிதயமாயினுநாவில்
விளையுமாற்றதின்றிருவடிவினுமிகவெள்ளையாகியதென்ன
வுளையவார்த்தைகளுரைத்தனனுரைத்தலுமுற்றவரிடுக்கண்கள்
களையுமாப்புயலிருவருமொழிமினுங்கட்டுரையினியென்றான்.

(இ - ள்.) (உடனே), இளைய சாத்தகி - (பலராமகிருஷ்ணர் களுக்கு) இளையவனான சாத்தகியென்பவன், தமையனை - (தனது பெரிய) தமையனான பலராமனை, (நோக்கி), 'இதயம் மிக கரிது ஆயினும் - (உனது) மனம் மிகவும் கருமையுடையதானாலும், நாவில் விளையும் மாற்றம்-(உனது)நாக்கினிடத்து உண்டாகின்ற வார்த்தை, னின் திருவடிவினும் மிக வெள்ளை ஆகியது - உனது அழகிய உடம் பைக்காட்டிலும் மிகவெளுத்ததாயிருந்தது,' என்ன-என்று. உளைய-(பலராமனது மனம்) வருந்தும்படி, வார்த்தைகள் உரைத்தனன் - பரிகாச வார்த்தைகளைச் சொன்னான்; உரைத்தலும் - (அங்ஙனஞ்) சொன்னவளவிலே, உற்றவர் இடுக்கண்கள் களையும் மா புயல் - (தன்னைச்) சரணமடைந்தவரது துன்பங்களை ஒழித்தருளுகிற சிறந்த காளமேகம் போன்ற கண்ணபிரான், இனி இருவரும் நும் கட்டுரை ஒழிமின் என்றான் - 'இப்பொழுது நீங்களிரண்டு பேரும் உங்களு டைய உறுதிமொழிகளை ஒழியுங்கள்' என்று சொன்னான்; (எ-று.)

'இதயம் கரிதாயினும் மாற்றம் வடிவினும் வெள்ளையாகியது' என்றதனால் மனமாகிய அகமும், மொழிமெய்களாகிய புறமும் ஒற்றுமைப்பட்டிராது வேறுபட்டிருப்பதனைப் பழித்தவாறு. இரிகரணங்கள் பேதப்பட்டிருப்பது உத்தமர்க்கு உரியதன்று. இதயம் மிகக்கரிது என்பதற்கு - மனம் மிகக் களங்கமுடைய தென்றும், நீதி அநீதிகளை நடுவுநிலைமையாக உணருந் தெளிவு இல்லாத குற்றமுடையதென்றும், கருத்து. கருமை யென்பது இருளென்ற பொருளாய் அறியாமை மேல் நிற்பதை "புறங்குன்றி கண்டனையரேனும் அகங்குன்றி, மூக்கிற்கரியா ருடைத்து" எனத் திருக்குறளிலும் காண்க. மாற்றம் மிக வெள்ளையாகியது என்றது - சொல் சிறிதும் சாரமற்றது என்று கருத்து. வெண்மை என்பது - சாரமின்மை யென்னும் பொருளதாய் அறிவு முதிராமை மேல் நிற்பதை "வெண்மை யெனப்படுவதியாதெனி னெண்மை, யுடை யம்மா மென்னுஞ் செருக்கு" எனத் திருக்குறளிலும், "வெள்ளைமை கலந்த நோக்கின்" எனச் சீவகசிந்தாமணியிலும், "வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்" "வெள்ளியையாதல் விளம்பினை" எனக் கம்பராமாயணத்திலும் காண்க. இங்கே, உற்றவரிடுக்கண்கள் களையும் மாப்புயல் என்றது - தன்னைச் சேர்ந்த பாண்டவர்களின் ஆபத்துக்களைக் கண்ணன் பலவகையிலும் தீர்த்தருளுதலால்; இனி, உற்றவர் என்ற சொல்லுக்கு உறவினரென்ற பொருளும் உள்ளதாதலால், தனது தமையன் தம்பிமார்களுக்கு நேர்ந்த மனஸ் தாபத்தை மத்தியஸ்தராய் நடுநின்று தீர்த்தல்பற்றி, 'உற்றவரிடுக் கண்கள் களையு மாப்புயல்' என்றதெனவுங் கொள்ளலாம். உம் கட்டுரை என்றும் பிரிக்கலாம்.

யதுகுலத்தரசர்களுள் வசுதேவனுக்கு உடன் பிறந்த முறையாகிய சத்தியகனது குமாரனும், பிராயத்தில் பலராமகிருஷ்ணர்களினும் இளையவனுமாதலால், சாத்தகி இவர்க்குத் தம்பி முறையாவன். இவன் கண்ணனிடம் மிகுந்த அன்புகொண்டு அவனது கருத்துக்குச் சிறிதும் மாறுபடாது நடப்பவன். அன்றியும், இவன் அருச்சுனனிடம் வில்வித்தையைக் கற்றறிந்த மாணாக்கனுதலால், ஆசிரியனுகிய அருச்சுனனிடத்தும் மற்றைப் பாண்டவரிடத்தும் நீதிமுறைவழுவாது அன்பு கொண்டொழுகுபவன்; ஆதலால், பாண்டவர்க்கு விரோதமாக அக்கிரமமாகப் பேசின பலராமன் தனக்குத் தமையனுயினும், மனம் பொருது அவன்பால் மாறுபாடு கொண்டான். 'நின் திருவடிவினும் மிக வெள்ளையாகியது' என்றது, பலராமன் வெண்ணிறமுடையவனுதலால்; அதனை "மடல் சேர்கழு நீர்மலர் வாட்கணுரோணி செம்மல், சுடர்கான் மதியிற் சுடர்கின்ற தொர்தோற்றமேய, அடலேறனையான்" என்ற பாகவதத்தாலும் அறிக.

சாத்தகி - சத்யகனது குமாரனென்று பொருள்; பிள்ளைப் பொருளில் வந்த தத்திதாந்தநாமம். மாறறம் என்பதற்கு நாவில் விளையும் என்ற அவசியமில்லாத அடைமொழி கொடுத்தது- பலராமனது நாக்கு பாண்டவர்திறத்து நடுவுநிலைமையுள்ள சொற் பயின்றறியாததென இழிவை விளக்கும்; அவர் பாண்டவர்க்கு மாறுகவே பேசுவதைப் பாரத கதையிற் பலவிடத்துங் காணலாம். தம்பிக்குத் தமையனிடம் இயல்பாக இருக்கவேண்டிய மரியாதை பற்றி, 'திருவடிவு' என்றார்; இனி இதுவும் பரிகாசத்தைப்பற்றிய தாகலாம். உரைத்தலும் - உம் சறறு இறந்தகாலவினையெச்சம். பிற்பொருளோடு விரைவுங் குறித்தது. துனபம் நேர்கிறகாலத்துக் கண் இடுங்குதலால், இடுக்கண் என்பது காரணப்பெயராம்; இடுங்கு கண் என்பது இடுக்கண் என விகாரப்பட்டதென்க. 'இடுக்கண் என்றது - மலர்ந்த நோக்கம் இன்றி மையல் நோக்கம்பட வரும் இரக்கம்' என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இடுக்கண்களாவன - தன்னைப்பற்றி வருவனவும், பிற வுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையான் வரும் பிறவித் துன்பங்கள். களையும்-எதிர்காலப் பெயரெச்சம், காலங்குறியாது தன்மை குறித்தது. இருவர் என்றது - சாத்தகியையும் பலராமனையும். இருவரும் ஒழிமின்-இடவழுவமைதி. 'இனி' எதிர்காலங் குறியாமல், இப்பொழுதென்னும் பொருள் தந்தது: "இனி நினைந் திரக்கமாகின்று" என புறநானூற்றிலும், "எண்கையாய்கேளினி" எனக் கலித்தொகையிலும் போல. என்று சொன்னனென்ற பொருளில் என்றனென வருதலைச் சொல்லெச்ச மென்பர். "வாய்ப்பறை யாகவும் நாக்கடிப்பாகவும்" வார்த்தை பேசப்படுதலால், 'நாவில் விளையும் மாற்றம்' எனப்பட்டது; "யாகாவாராயினு நாகாக்க" "ஆருதே, நாவினுற் சுட்டவடு' என்பனகாண்க. 'வார்த்தைகள்" எனவேண்டாது கூறியது அவற்றின் பழிப்புடைமையை உணர்த்தும். 'வெண்மையதாகியது' என்னவேண்டியதை 'வெள்ளையாகியது' என்றது, பண்பியைப் பண்பாகக் கூறின உபசாரவழக்கு.

வெண்மையென்பது வடிவத்துக்கு - நிறத்திலும், சொல்லுக்கு - அறியாமையிலும் சென்றனவாயினும், பண்பால் ஒத்தலால், சிலேடையாக வெள்ளையென ஒரு சொல்லாற் கூறினர். புயல் - உவமவாகுபெயர். (4)

கண்ணன் உலூகனைத் தூதுபோகச்சொல்லித் தான் துவாரகை சேர்தல்.

5. பேருலூகமும்பிணையுநல்கியபெரும்பிறப்புடைப்பரித்திண் டேர்க்
காருலூகலநிகரடிக்களிறுடைக்கண்ணிலாவரசன்பாற்
சீருலூகனைத்தூதுசென்றிவர்மனஞ்செப்பிமீள்கெனப்போக்கி
யோருலூகலமுடன்றவழ்ந்தவன்றனதூர்புகுந்தனனன்றே.

(இ - ள்.) (என்று சொன்னபின்), ஓர் உலூகலமுடன் தவழ்ந்தவன் - ஒரு உரலுடனே தவழ்ந்துசென்றவனுகிய கண்ணன்,—சீர் உலூகனை - சிறப்புடைய உலூகனென்னும் அந்தணனை நோக்கி, பேர் - பிரசித்திபெற்ற, உலூகமும் - உயர்ந்தசாதி யாண்குதிரையும், பிணையும் - (அந்தச்சாதிப்) பெண் குதிரையும், நல்கிய - (சேர்ந்து) பெற்ற, பெரு பிறப்பு - சிறந்த உற்பத்தி முறைமையை, உடை - உடைய, பரி - குதிரைகளையும், திண் தேர் - வலியதேர்களையும், கார் உலூகலம் நிகர் அடி களிறு - பெரிய உரலையொத்த கால்களையுடைய யானைகளையும், உடை - உடைய, கண் இலா அரசன்பால் - பிறவிக் குருடனான திருதராஷ்டிர மகாராசனிடத்து, தூதுசென்று - (நீ) தூதுபோய், இவர் மனம் செப்பி - இப்பாண்டவரது கருத்தைக் கூறி, மீள்க - (அவன் கருத்தை யுணர்ந்து) திரும்பிவருவாயாக,' என - என்று சொல்லி, போக்கி - (அவ்வுலூகனை அத்தினபுரத்துக்குச்) செல்ல உடன்படுத்தி, தனது ஊர் புகுந்தனன் - தனது துவாரகாபுரியை அடைந்தான்; (எ-று.)—அன்று, ஏ - ஈற்றசை; - தேற்றப்பொருளில் வருதலு முண்டு: அப்போழுதே யென்றுமாம்.

சதுரங்கசேனைகளுள் பிரதானமான குதிரை தேர் யானை என்ற மூன்றையுங் கூறி, அவற்றை வாகனமாகக்கொண்டு ஏறிநடத்தும் வீரரையும் காலாட்சேனையையும் உபலட்சணத்தாற் பெறவைத்தார். ஒரு பிராணி சிறந்ததாயிருத்தற்குத் தந்தைமரபு தாய்மரபு என்ற இரண்டும் முக்கிய காரணமாதலால் 'பேருலூகமும் பிணையு நல்கிய பெரும்பிறப்புடைப் பரி' என்றார். உலூகமென்பதற்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இங்கு ஆண்குதிரை யெனப் பொருள் கொள்ளப்பட்டது. பிணை - பெண்பாற்பெயர்: இது குதிரைக்குரிய தாதலை "புல்வாய்கவ்வியுழையேகவரி, செல்வாய்நாடிற் பிணையெனப் படுமே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்து 'செல்வாய் நாடின்' என்ற மிகையாற் கொள்ளவேண்டும். 'பிணை - பிணைவது எனக் காரணப்பெயர்; பிணைதல் - சேர்தல்; கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்து கெட்டது; இச்சொல்லின் பொருளை 'பிணையென்னுஞ் சொற்பொருளினை உண்மைநோக்கின் பிரியாது பிணையும் பிற சாதிக்கும் சேவற்கும்செல்லும்' என்றதனாலும் அறிக. கருமையென்னுஞ் சொல் - கருப்பு நிறத்தையே யன்றி, பெருமைக் குணத்

தையும் உணர்த்தும்; "கருந்தனம் கைத்தலத்தவுய்த்துச் சொரிந்திட்டு" என்னுமிடத்துக் காண்க. இனி, கார் என்பதற்கு - கரிய வென்று உரைத்து, களிறு என்பதனோடு சேர்த்தலுமாம்; பண்பாகு பெயராய், மேகம் போன்ற எனினும் அமையும். யானைக்காலுக்கு உரல் உவமை வடிவத்துக்கும் வலிமைக்குமென்க; 'உரற்கால்யானை" என்றார் முன்னேரும். களிறு - ஆண்பாற்பெயர்; இது யானைக்கு உரியதாதலை "வேழக்குரித்தேவிதந்து களிறென்றல்" என்ற தொல் காப்பியத்தா லறிக; மதக்களிப்பையுடையதெனக் காரணப்பெயர்; இது, பால்பகாஅஃறிணைப்பெயராதலால், று - ஒன்றன்பால் விகுதி யாகாது; இதன் பெண்பால் - பிடி.

விசித்திரவீரியன் மனைவியருள் ஒருத்தியான அம்பிகை, கணவனை யிழந்த பின்பு சந்ததிவிருத்தியின்பொருட்டு மாமியார் கட்டளைப்படி மைத்துனனோடு சேர்கையில், கூச்சத்தால் கண்விழியா திருந்ததனால் அவளிடம் திருதராஷ்டிரன் பிறவிக்குருடனைப் பிறந் தான். இங்கே உலூகனுக்குச் சீர் என்றது, தூதுசைப்பார்க்கு இன்றியமையாத அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை, உயர் குடிப்பிறத்தல், தானே வருத்துச் சொல்லுமாற்றல் முதலிய குணங்களை. கண்ணன் குழந்தையாயிருக்குங் காலத்தில் துன்பப் படுத்துகின்ற பல திருவிளையாடல்களைச் செய்யக்கண்டு கோபித்த நந்தகோபர்மனைவியான யசோதை, ஒருநாள் கிருஷ்ணனைத் திரு வயிற்றில் கயிற்றினுற்கட்டி ஒருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலியிழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருத மரத்தின் நடுவிலே எழுந்தருளியபொழுது, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்த வளவில், முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன் மணிக்கிரீவன் என்னுங் குபேரபுத்திரரிருவரும் சாபம் தீர்ந்து சென்றனரென்பது கதை. உலூகனைத் தூதனுப்பின சம யத்தில் கண்ணனுக்கு இராசதானியான ஊர் மதுரையன்றித் துவா ரகையாதலை, அடுத்த சருக்கத்தில் (3) "மாயவன் றன்னைக் கூட்ட வளர்மதிற்றுவரை சேர்ந்தான்" என்பதனாலு மறிக; தவழ்ந்தவன் உலூகனைக் கண்ணிலான்பால் தூதுசென்று மீள்கெனப்போக்கித் தனதூர்புகுந்தனனென்று அன்வயம். (5)

அங்குவந்துள்ள அரசர்கள் யாவரும் திருதராஷ்டிரன் இராச்சியம் தராவிட்டால் செய்தி தெரிவிக்கும்படி கூறித் தம்தம் நகரமடைதல்.

3. இந்தவந்தணனீயிசைத்தனவெலாமியல்புடனினிதாக
வந்தவந்தனோடுரைத்தபினவனின தவனிதந்திலனுகின்
முந்தவந்தண்மாமுரசகேதனதிருமுகம்வரவிடுகென்று
வந்தவந்தமன்னவர்களுந்தத்தமாநகரடைந்தனர்மன்னோ.

(இ - ள்.) அம் - அழகிய, தண்-குளிர்ந்த [செவிக்கினிய ஒலியை யுடைய], மா - பெரிய, முரசம் - போரிகைவாத்தியத்தின் வடிவத்தை யெழுதின, கேதன - துவசத்தையுடைய் தருமபுத்திரனே!—இந்த அந்தணன் - (உலூகனென்னும்) இந்தப்பிராமணன், நீ இசைத்தன

எலாம் - நீ சொன்ன கருத்துக்களெயெல்லாம், இயல்புடன் - (தூது செல்வோர்க்குரிய) முறைமையோடு, இனிது ஆக - இனிமையுடையதாம்படி, அந்த அந்தவேடு - பிறவிக்குருடனாகிய அத்திருதராட்டிரனுடன், உரைத்தபின் - (சென்று) சொன்ன பின்பு, அவன் - அத்திருதராட்டிரன், நினது - உன்னுடைய, அவனி - இராச்சியத்தை, தந்திலன் ஆகில் - கொடுத்திடானாயின், முந்த-முன்னதாக [உடனே என்றபடி], திருமுகம் - பத்திரிகையை, வரவிடுக - (எங்களுக்கு) வந்துசேரும்படி அனுப்புவாயாக, என்று - என்று சொல்லி, வந்த அந்த மன்னவர்களும் - (அஜ்ஞாதவாசங்கழிந்த செய்தியறிந்து பாண்டவர்களைப் பார்த்தற்கு) வந்த அவ்வரசர்களெல்லோரும், தம் தம் மாநகர் அடைந்தனர் - தங்கள் தங்களுக்கு உரிய பெரியபட்டணத்தைச் சேர்ந்தார்கள்; (எ - று.)—மன், ஓ - ஈற்றசைகள்.

அந்தணன் - அம் தண் அன் எனப்பிரித்து, அழகிய தண்மையை [அதாவது - அருளை] உடையவனென்றும்; அந்த அணவு அன் எனப்பிரித்து, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பவனென்றும் பொருள் கொள்ளலாம். இது - காரணங்கருதியவழி அருளையும் வேதாந்த ஞானத்தையுமுடைய பிறசாதியார்க்கும் பெயராகத்தக்கதாயினும், அங்ஙனமின்றி, இடுகுறியளவாய் வேதியர்க்கே பெயராக வழங்குதலால், காரணவிடுகுறிப் பெயர்; இங்கே 'நீ இசைத்தனவெல்லாம்' என்றதனால், கீழ்த்தருமன் தன் கருத்தை விளக்கிச் சில வார்த்தைகளை எல்லாவரசர்கள் முன்னும் வெளிப்படையாகக் கூறினனென அறிக; இது - கீழ்கண்ணன் வார்த்தையில் 'வில்லினலமர் மலைந்து கொள்ளுது மெனல்', 'இவர் மனம்' என்றவற்றாலும் பெறப்படும். இயல்பு என்றது, நூல்களிற் கூறப்பட்ட தூதவிலக்கணவமைதியை. "தூவாதநீக்கி நகச்சொல்லி, நன்றி பயப்பதாந் தூது" என்றபடி தான் வேற்றரசர்க்கு இன்னாத காரியங்களைச் சொல்லும்பொழுது வெய்ய சொற்களைநீக்கி இனிய சொற்களால் மன மகிழச்சொல்லிக் காரியத்தைத் தவறாமல்முடித்துத் தன் அரசனுக்கு நன்மைபயப்பது நல்ல தூதனது முறைமையாதலால், 'இனிதாகவுரைத்தபின்' என்றார். அந்தன் என்ற சொல்-புறமாகிய ஊனக்கண் இல்லை யென்ற மாத்திரத்தை யுணர்த்துவதோடு, அகமாகிய ஞானக்கண்ணுமில்லை யென்ற கருத்தையுங் குறிப்பதாகக்கொள்ளலாம்; கீழ்க் கவியில் 'கண்ணிலாவரசன்' என்றதிலு மிது. அவனி - பூமி; (அரசர்களாற்) காத்தற்குரியதென்ற பொருள்பற்றிய காரணப்பெயர்; அவநம் - காத்தல். முந்த வரவிடுகென இயையும். தனது வெற்றிக்கு அடையாளமாகவும் மங்களகரமாகவும் முரசத்தின்வடிவத்தைத் தருமன் கொடியிற்கொண்டான் போலும். திருமுகம் என்ற சொல்லுக்கு - அழகிய முகமென்று பொருள்; இப்பெயரால் ஓலையைக் கூறுவது, மங்கலவழக்கென்பர்; வடமொழியில் 'ஸ்ரீமுகம்' என்று வழங்கும். வந்த வந்த எனவே கொண்டு அடுக்கை - மிகுதி பற்றிய தென்னலாம். வந்த வந்த மன்னவர்கள் என்றது, கீழ் வெளிப்பாட்டுச் சருக்கத்தில் "பாஞ்சாலர் போசகுலமன்னவர் பாண்டிவேந்தர், வாஞ்சாமனத்தின் வயமத்திரர் மாகதேயர், பூஞ்சாபவெற்றிக்கொடிக்கேரளர் பொன்னிநாடர்,

தாஞ்சால்புடனப்பதி வந்தனர் தாணையோடும்" எனக் கூறப்பட்டவர் களீ. அம்தண் என்பதற்கு - அழகையும் குளிர்ந்த கருணையையு முடைய என்று உரைத்து முரசகேதனனுக்கு அடைமொழியாக்கினும் அமையும். திருமுகம் என்றது - தனது சொல்லாற்றலால் யுதிட்டிர னிடம் அவ்வரசர்களுக்குள்ள மதிப்பை நன்கு விளக்கும். 'முந்தத் திருமுகம் வரவிடுக' என்றது, போரை விரைந்து செய்தற்பொருட்டுத் தாம் துணையாய் வருதற்கு என்க; தங்களீத் துரியோதனன் படைத் துணையாக விரும்புமுன் ஈ பத்திரிகையனுப்பிவிடுவாய் என்ற பொரு ளும் இதில் ஏற்படும். அவன்-துரியோதனனென்றுங் கொள்ளலாம். அந்தம் மன்னவர் எனப் பிரித்தால், அழகையுடைய அரசரென்று பொருள்படும். (6)

தருமன் உலூகனைத் தூதனுப்புதல்.

7. அரசர்போனபின்மால்பணிதவறுருதம்முனிதனைநோக்கி
முரசகேதனனீயெழுந்தருள்கெனமுனிவனைத்தொழுதேத்தி
விரைசெய்தார்புனைவீடுமனெந்தைமெய்விதுரன்வேதியர்கோவை
பரசினேமடியென்றுபின்னுரியசொற்பணித்தருளெனப்போந்தான்.

(இ - ள்.) அரசர் போன பின் - வந்த அரசர்கள்யாவரும் (தத் தம் நகருக்குச்) சென்றபின்பு, முரசகேதனன் - பேரிகைவடிவையெழு திய் கொடியையுடைய தருமபுத்திரன்,—மால் பணி தவறுருது-திரு மாலின் திருவவதாரமான கண்ணபிரானது கட்டளையைப் பிழையா மல் [கட்டளைப்படியே என்றபடி], அ முனி தனை நோக்கி-அந்த உலூக முனிவனைப் பார்த்து, ஈ எழுந்தருள்க என - 'ஈ கருணையுடன் தூது செல்வாயாக' என்றுகூறி, முனிவனை - அவ்வுலூகனை, தொழுது - வணங்கி, ஏத்தி - துதித்து, 'விரைசெய் - நல்வாசனையை வீசுகிற, தார் - பூமாலையை, புனை - தரித்துள்ள, வீடுமன்-பீஷ்மனும், எந்தை - எமது பெரிய தந்தையான திருதராட்டிரனும், மெய் விதுரன் - சத்தி யந்தவறுத விதுரனும், வேதியர் கோவை - அந்தணர்களுக்குத் தலை வனான துரோணாசாரியனும் என்னும் இவரை, அடி பரசினேம் என்று - திருவடிகளை நமஸ்கரித்தோம் என்று முதலிற்கூறி, பின்-அதன் பின்பு, உரிய சொல் பணித்தருள் - (ஈ செல்லும் தூத காரி யத்துக்கு) உரிமையுடைய சொற்களைக் கூறியருள்வாய்,' என - என்று பிரார்த்திக்க,—போந்தான் (அம்முனிவன் புறப்பட்டுச்) சென் றான்; (எ - று.)

இப்பாட்டில், கண்ணன் முதலியோர் சென்றபின்பு தருமன் நிலகூறி வேண்டியபின் உலூகன் சென்றான் என்றதனால், கீழ் ஐந்தாங்கவியில் கண்ணன்செய்கையாக 'போக்கி' என்றதற்கு - செல்ல உடன்படுத்தியென்று கருத்துக் கொள்க. முனி - கடவுளை எப்பொழுதும் தியானஞ் செய்பவன் அல்லது திரிகால ஞானமுடை யவன் என்றுபொருள்; இனி, எல்லாப்பற்றுக்களையும் முனிந்தவன் [வெறுத்துவிட்டவன்] ஆதலால் முனி என்று தமிழ்வகையாற் காரணப்பொருள் கூறலாகாது. நோக்கி என என்று இயையும். எழுந்தருள்க என்றதில், அருள் என்றது துணைவினை மரியாதையை

விளக்கும். விரைசெய்தார் என்றது - அடையாளப்பூமாலையையும், வெற்றிப்பூமாலையையும். விரைசெய் தார்புனை என்ற அடைமொழி யைப் பிறர்க்கும் கூட்டலாம். இரத்தினவாரத்தினும் வேறுபாடு தோன்ற, பூமாலை யென்றற்கு, 'விரைசெய்' என்ற அடைமொழி தாருக்குக் கொடுக்கப்பட்ட தென்க. திருதராஷ்டிரனுக்குப் பாண்ட வர்களிடம் அன்பில்லையாயினும், இவர்களுக்கு அவனிடம் அன்புண் டென்பது, அவனைத் தருமன் இங்கு 'எந்தை' என்றதனால் விளங்கும். விதுரன், யமதருமராசனது அமிசமாவன். மற்றைப் பீஷ்மர் முதலியோரினும் பாண்டவர் பக்கல் விதுரனுக்கு மெய்யன்பு மிகுதியாதலின், 'மெய்விதுரன்' என்றது; "மெய்விதுரன் வீடணன் தான் வேறு" என்றார் பெருந்தேவனாரும். வேதத்தை ஓதுதல் ஓதுவித்தல் என்னும் இருதொழிலுக்கும் உரியவர் அந்தணரே யாதலால், வேதியரென்ற காரணப்பெயர் அவருக்கே வழங்கும். வேதியர்கோ என்ற சொல்லில், இரட்டுறமொழிதலால் இருபாசாரி யனையும் அசுவத்தாமனையும் அடக்கலாம். வீடுமன் முதலியன இறுதியிற் பலர்பாலால் முடியாததனால், இவற்றை உம்மைத் தொகையாகக் கொள்ளாமல், ஒவ்வொரு சொல்லினிறுதியிலும் ஐ என்ற இரண்டனுருபை எடுத்துக் கூட்டிப் பெயர்ச்செவ்வெண்ணைக் கொள்க. பணித்தருள் - இதுபோல்வனவற்றை வினைப்பகுதி தானே ஒசைவேறுபாட்டால் ஏவலொருமைப் பொருளுணர்த்திற் றென்றும், ஏவலொருமைக்கு உரிய ஆய்விகுதி புணர்ந்து கெட்ட தென்றும் இருவகையாகக் கூறுவர். பின் இரண்டடிகள், பெரியோர்களிடத்தில் தருமனுக்கு உள்ள விநயத்தைத் தெரிவிக்கும். இரண்டாமடியி லுள்ள முனிவனை யென்றது, சுட்டுமாத்திரையாய் நின்றது. அடி பரசினேம் என்பது - ஒருசொல்லாய், வணங்குதலெனப் பொருள் பட்டு, கோவையென்னும் இரண்டாம் வேற்றுமைக்கு முடிக்குஞ் சொல்லாம்; இனி கோவை - கோவினது என உரைத்து உருபுமயக்க மென்றுவது, ஐ அசையென்றுவது கொள்ளினும் அமையும்; கோவை அடியில் பரசினேம் என்றலுமொன்று. (7)

அத்தினபுரிக்கு வந்த உலூகமுனிவனை வணங்கித் துரியோதனன் ஆசனத்தில் இருத்துதல்.

8. போனநான்மறைப்புரோகிதனத்தினபுரிபுகுந்தெரிபைம்பொன் மானவார்கழற்றிருதராட்டிரனெனுமன்னவைதனிலெய்த ஞானமாமுனிவரவுகண்டெதிர்கொளாநயந்திருபதப் போற்றி யானமாமணியாசனத்திருத்தினரவவெங்கொடியோனே.

(இ - ள்.) போன - (அங்ஙனம்) தூதுசென்ற, நால்மறை புரோ கிதன் - நான்குவேதங்களையுமறிந்த (விராடனது) புரோகிதனாகிய உலூகன், அத்தினபுரி புகுந்து - அஸ்தினபுரிபட்டணத்தை அடைந்து, எரி - விளங்குகிற, பைம்பொன் - பசும் பொன்னாலாகிய, மானம் வார் கழல் - பெருமைக்கு அடையாளமான நீண்ட வீரக்கழலை யுடைய, திருதராட்டிரன் எனும் மன் - திருதராஷ்டிரனென்னும் அரசனது, அவைதனில் - சபையிலே, எய்த - சேர,—அரவம் வெம் கொடியோன் - பாம்பின் வடிவத்தை யெழுதின (பகைவர்க்குப்)

பயங்கரமான துவசத்தையுடைய துரியோதனன், ஞானம் மா முனி வரவுகண்டு - சிறந்த அறிவையுடைய மகிமையுள்ள சிறந்த இருடி யாகிய அவ்வுலூகனது வருகையைப் பார்த்து, எதிர் கொளா-எதிர் சென்று உபசரித்து அழைத்துக்கொண்டுவந்து, நயந்து இருபதம் போற்றி - விரும்பி [அன்புடனே] (அம்முனிவனது) உபயபாதங்களை வணங்கி, ஆன மா மணி ஆசனத்து - ஏற்ற சிறப்புடையதான பெரிய நவரத்தினமிழைக்கப்பெற்ற திவ்வியாசனத்திலே, இருத் தினன் - (அவனை) எழுந்தருளப் பண்ணினன்; (எ - று.)

அரசன் முனிவர்க்குச் செய்யவேண்டிய உபசாரங்களையெல் லாம் குறைவின்றி மனமகிழ்ச்சியோடு செய்தனனென்பதாம். நயந்து போற்றி இருத்தினன் என்றதனால், திரிகரணங்களாலும் உபசரித் தமை தோன்றும். நால்மறை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன; தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமம் என்றலு மொன்று. புரோகிதன் என்னுஞ் சொல்லுக்கு - (வைதிககாரியங் களிலும் மந்திராலோசனையிலும்) முன்னே வைக்கப்படுபவ னென்றும், பின்னேவரும் நன்மைதீமைகளை முன்னமே அறிந்து சொல்பவனென்றும் காரணப்பொருள். சந்திரகுலத்திற் பிரசித்தி பெற்ற அஸ்தியென்னும் அரசனால் ஏற்படுத்தப்பட்டதுபற்றியும், யானைச் சேனையை மிகுதியாகவுடைமையாலும், அஸ்தினபுரியென்னுங் காரணப்பெயர் வந்ததென்பர்; ஹஸ்தீ - ஓர் அரசன்; அல்லது யானை; (ஹஸ்தம் - கை, இங்கே துதிக்கை; அதனையுடையது) கழல்-வீரர் காலணி. ஞானம் - இயற்கையறிவும், கல்வி கேள்விகளினா லாகிய செயற்கையறிவும், உலக நடையையறிதலும், பொருள் களின் உண்மையையுணருந் தத்துவ ஞானமும். அரவவெல்கொடி யோன் என்றது - அவன்கொடியே அவனது கொடுந்தன்மையை யும், நாவிரண்டுடைமையையும், நன்றியறிவின்மையையும் எப்போ தும் வக்கிரகதியிற்செல்லுந் தன்மையையும் விளக்கும் என்றற் குப்போலும். இனி, நல்லபாம்புபோல மிகக்கொடியனென்றும் பொருள் கொள்ளலாம். ஞானம் ஆம் முனி எனப்பிரித்து, தத்துவ ஞானவடிவமான முனி யெனினுமாம். (இ)

துரியோதனன் முதலியோர் மனங்கொதிக்கும்படி உலூகன் தான் வந்த வரலாற்றைக் கூறத்தொடங்குதல்.

9. விந்தமன்னதோள்வீடுமன்முதலியோர்விழைவுடன்றொழுதேத்தி
வந்தவாறுரைத்தருள்கெனமுனிவனும்வரன்முறையடைவாக
வந்தனுகியகந்தட்கடகளிற்றரசனுமவன்றந்த
மைந்தர்யாவருங்கன்னனுஞ்சகுனியுமனங்கனன்றிடச்சொல்வான்.

(இ - ள்.) விந்தம் - விந்தியமலையை, அன்ன - ஒத்த, தோள் - புயங்களையுடைய, வீடுமன் முதலியோர் - பீஷ்மன் முதலானவர்களை, விழைவுடன் - விருப்பத்துடனே, தொழுது - (அம்முனிவனை) வணங்கி, ஏத்தி - துதித்து, வந்த ஆறு உரைத்தருள்க என்று

இங்கு) எழுந்தருளிய காரணத்தைச் சொல்லியருள்வாயாக என்று வேண்ட, முனிவனும் - அவ்வுலோகனும்,—அந்தன் ஆகிய - பிறவிக் குருடனான, கந்து அடர் கடம் களிறு அரசனும் - கட்டுத்தறியை முறிக்கின்ற மதம்பொழிகிற யானைச்சேனையையுடைய திருதராட்டிரனும், அவன் தந்த மைந்தர் யாவரும் - அவன்பெற்ற (துரியோதனன் முதலிய) புத்திரரெல்லோரும், கன்னனும் - கர்ணனும், சகுனியும்—, (என்னும் இவர்கள்), மனம் கனன்றிட - மனங்கொதிக்கும்படி, வரன்முறை - (தான்) வந்த வரலாற்றை, அடைவு ஆக - முறைமைப்படி, சொல்வான் - சொல்பவனானான்; (எ - று.)—அதனை, மேல் மூன்றுகவிகளிற் காண்க.

தோளுக்கு மலை உவமை பருமைக்கும், வலிமைக்கும், ஆயுதங்களால் அழிவடையாமைக்கு மென்க. இங்கே பிறமலைகளையெடுத்துக் கூறாமல் விந்தியமலையை யெடுத்துக்கூறினது, அது முன்னொருகாலத்தில் மலையரசனான இமவானோடு மாறுபட்டுத் தான் எல்லா மலைகளினும் மேலாகுமாறு வானத்தில் சூரியசந்திரரது கதியையும் தடுத்து உயர்ந்து சென்றதாதலின், அவ்வுயர்வைக்கருதியென்க. முதலியோர் என்றது - விதுரன், துரோணன், இருபன் ஆகியவரை. கந்து - மரக்கிளை; இலக்கணையாய், யானை கட்டுந் தறியை யுணர்த்தும். மதயானை கட்டுத்தறியை முறிக்கும் தன்மையது. கடம் - கன்னம்; இது அதனினின்றுவழியும் மத நீருக்கு இடவாகுபெயர். இங்கே களிறு என்றது, தேர் குதிரை காலாள் என்னும் மற்றையங்கங்களுக்கும் உபலக்ஷணம். அழகியதும் பெரியதுமாய் மதத்தாற் கதஞ்சிறந்து தானும்போர்செய்யும் யானை மற்றைத் தேர்முதலியவற்றினுஞ் சிறந்ததென்ற கருத்தால், இங்கு அதனையே பிரதானமாகக் கூறினர். "குஞ்சர நகரத்து" அரசனென்பதுதோன்ற, களிற்றரசனென்ரு ரெனினுமமையும். இனி, யானை போன்ற அரசனென்றுமாம்; வலிமை கம்பீரத்தன்மை, நடை, நோக்கம், கோபத்தைமறைத்தற் குரியகாலத்தில் மறைத்துவைத்து வெளிப்படுத்தற்குரியகாலத்தில் வெளிப்படுத்தல் என்பனவற்றில் வீரனுக்கு யானை உவமை. "கராசலம்பதினாயிரம் பெறுவலிக்காய மொன்றினிற் பொற்றேருள், இராசகுஞ்சரம்பிறந்திடும் விழிப்பல னில்லை மற்றதற்கென்றான்" என முன் வியாசர் கூறியபடி இவன் பதினாயிரம் யானைபலங்கொண்டவன் என்பது தோன்ற, களிற்றரசனென்ரு ரென்றலும் பொருந்தும். சகுனி - காந்தாரதேசத்தரசன்; திருதராஷ்டிரன் மனைவியான காந்தாரியுடன் பிறந்தவனாதலால், துரியோதனாதியர்க்கு மாமன்; சுபலனென்னும் அரசனது புத்திரன். இராச்சியபாகங் கேட்கும் வார்த்தையாதலால், இவர்கள்மனங்கனல்வதாயிற்று. 'அந்தனாகிய அரசனாகிய அவன் தந்த மைந்தர்யாவரும்' என்ற சொற்போக்கு - தந்தை ஞானக்கண்குருடன் மைந்தர் ஞானக்கண்குருடர் என்ற இழிவைத் தொனிப்பிக்கும். இவர்கள் மனங்கனன்றிடச் சொல்வான் என்றதனால், உலூகன்சொல்லும் வார்த்தை இவரொழிந்த மற்றையோர்க்கெல்லாம் சம்மதமென்பது பெறப்படும்.

இது முதல் மூன்று கவிகள்-ஒருதொடர்: உலூகமுனிவன் வார்த்தை.

10. ஆண்டுபன்னிரண்டடவியுற்றெருவருமறிவுருவகைமற்றேர்
ஆண்டுமன்னியபாண்டுவின்மதலையரைவரும்வெளிப்பட்டார்
ஆண்டுமன்னர்முன்சூதுபோர்பொருதழிந்திடுதலினதுநீர்கொண்டு
ஆண்டுவந்தபார்நும்மொழிப்படியவர்க்களித்திரோவளியீரோ.

(இ - ள்.) பன்னிரண்டு ஆண்டு - பன்னிரண்டு வருஷ காலம், அடவி உற்று - வனத்திலே பொருந்தி வசித்து, மற்று ஓர் ஆண்டு - இன்னெரு வருஷம், ஒருவரும் அறிவுரு வகை - எவரும் (தம்மை) அறியாதபடி [அஜ்ஞாத வாசமாக], மன்னிய - (விராடநகரத்தில்) வசித்த, பாண்டுவின் மதலையர் ஐவரும் - பாண்டு குமாரர்களைந்து பேரும், வெளிப்பட்டார்—; ஆண்டு - அவ்விடத்தில் [சபாமண்டபத்தில்], மன்னர்முன்-பல அரசர்கள் எதிரில், சூது போர் பொருது - (சகுனியோடு) சூதாட்டத்தையாடி, அழிந்திடுதலின் - (தருமன்) தோற்று இராச்சியத்தை யிழந்ததனால், நீர்-நீங்கள், அதுகொண்டு - அக்காரணத்தால், ஆண்டு வந்த - அரசாட்சிசெய்து வந்த, பார் - (அவர்களது) இராச்சியபாகத்தை, நும் மொழிப்படி - (முன்னே) நீங்கள் சொன்ன வார்த்தையின்படி, அவர்க்கு - அப்பாண்டவர்களுக்கு, அளித்திரோ - (இப்பொழுது) கொடுப்பீர்களோ? அளியீரோ - கொடுக்கமாட்டீர்களோ? (எ - று.)

கீழ்ச் சூதுபோர்ச் சருக்கத்தில் "அரிவையோ டகன்று நீவிரை விருமடவியெய்திச், சுரர்தினமீராறங்கண் துன்னுதிர் மன்னு நாட்டின், ஒருவருமறியர் வண்ண மொருதினமுறைதி ருங்கள், பெரு விறலரசும் வாழ்வும் பின்னுறப் பெறுதிரென்றான்" என்று கூறியபடி இப்பொழுது நடக்க உங்களுக்குச் சம்மதமா? இல்லையா? என்று உலூகன் துரியோதனனியரை வினவினன். அம்பாலிகை வியாசரோடு சேர்கையில், கூச்சத்தால் உடம்பு முழுவதும் நிறம் வேறுபட்டு வெண்மையடைந்ததனால், அவளிடம் பாண்டு விளர்த்த உடலுடையவனைப் பிறந்தான். ஒருவர் என்ற பலர்பால், அறிதற்கரியதை அறியவல்ல அறிவினுயர்வை விளக்கும்: ஆண்டு - அக்காலத்தி லென்றுமாம். வெற்றி தோல்விகளுக்கு இடமாதலாலும், அரசாட்சிச் செல்வத்தைப்பெறுதல் இழத்தல்களுக்குக் காரணமாதலாலும், சூதாட்டத்தை 'போர்' என்றது; போர்-யுத்தம். அளி என்ற விணைப்பகுதி பாண்டவர்கள் இராச்சியத்தையிழந்த தாழ்வும், துரியோதனனியர் அதனை யாண்டு வந்த உயர்வும் தோன்ற நின்றது. இப்பாட்டில் முதலடி யொழிந்த மற்றை மூன்றடிகளிலும், முதலில் ஆண்டு என்ற சொல் வெவ்வேறு பொருளில் வந்தது, யமகமென்னுஞ் சொல்லணியாம்; மூன்றுமடியிலுள்ள ஆண்டு என்பது சுட்டடியாப் பிறந்த அண்டு என்பதன் நீட்டலெனப்படும். (10)

11. முன்னரும்பொருதுளதுநீர்சூதுபோர் மோதுபோர்கருதாமல், இன்னமும் பொரவேண்டுமேற்பொருதிடுமிலஞ்சியிற்பொலஞ்செங்

கால், அன்னமுங்கிரிமயில்களுமுடன்விளையாடு நல்வளநாட்டீர், பின் னமும்பிறவாதினிப்பண்டுபோற்பீடுறும்பெருவாழ்வும்.

(இ - ள்.) இலஞ்சியில் - நீர் நிலைகளிலுள்ள, பொலம் செம் கால் அன்னமும் - பொன்னிறமான சிவந்த கால்களையுடைய அன்னப் பறவைகளும், கிரி மயில்களும் - மலையிலுள்ள மயிற் பற வைகளும், உடன் விளையாடும் - ஒருங்கே விளையாடப்பெற்ற, நல் வளம் நாட்டீர்-சிறந்த வளங்களை யெல்லாமுடைய குருநாட்டி னரசர் களே! மோது போர் கருதாமல் - (ஒருவரோடொருவர்) தாக்கிச் செய்யும் யுத்தத்தை யெண்ணுமல், நீர் முன்னரும் பொருது உளது- நீங்கள் (பாண்டவரது இராச்சியத்தைப்பறித்துக் கொள்ளும் பொருட்டு) முன்பு செய்துள்ளதும், சூது போர் - சூதாட்டமே யாம்; (ஆதலால் அவ்விராச்சியத்தை அவர் மீட்டுக்கொள்ளும் பொருட்டு), இன்னமும் பொர வேண்டும்எல் - இனியும் (மோது போரில்லாமல் சூதுபோரைச்) செய்யவேண்டுமென்றல், பொரு திடும் -(அவர்களோடு அதனையே) செய்யுங்கள், (இங்ஙனம் நியாயப் படி நடப்பீராஞல்), இனி பின்னமும் பிறவாது - இனிமேல் (உங்கள் இருதிறத்தாருள்) மாறுபாடும் உண்டாகாது; பெரு வாழ்வும்-பெரிய (உங்கள்) அரசாட்சிச் செல்வமும், பண்டு போல் பீடுஉறும் - முன் போலப் பெருமையடையும்; (எ - று.)

மொழிப்படி கொடாவிட்டாலும், முன்போல மறுபடி இருதிறத் தாருஞ் சூதாடுவது, அதில் பாண்டவர்கள் சயித்தால் அவர்களுக்கு இராச்சியங் கொடுத்து விடுவது, இதுவாவது செய்யவேண்டுவது நலம் என்றன். மோது போர் கருதாமலென்றது - முன் வாக்கியத் திலும் பின் வாக்கியத்திலுஞ் சேர்ந்து இடையில் மத்திமதீபமாய் நிற்கும். காலும் மூக்குஞ் சிவந்து உடம்பு வெளுத்திருக்கும் அரச வன்ன மென்பார், செங்காலன்ன மென்றார். நாடும் நாடு சார்ந்த இடமுமாகிய மருதநிலத்தின் கருப்பொருளான அன்னங்களும், மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சிநிலத்தின் கருப்பொரு ளான மயில்களும், ஓரிடத்திற்கூடி விளையாடுவதைனத் திணைமயக் கங்கூறியவாறு. வெவ்வேறு நிலத்திலுள்ளனவான விவேகமில்லாத அஃறிணையுயிர்களாகிய பறவைகளும் தமக்குள் பேதமின்றி உமது நாட்டில் ஒற்றுமைப்பட்டிருக்க, விவேகிகளான நீங்கள் உங்களினத் தவரான பாண்டவர்களோடு பேதப்பட்டிருப்பது தகுதியன்றுஎன்ற பொருள் இவ்வருணனையில் தொனிக்குமாறு காண்க. மருதநிலத்து ராஜஹம்சம் - நாட்டில் அரசாளுந் துரியோதனனையும், கிரி மயில்கள் - வனவாசஞ் செய்த பாண்டவர்களையும் ஞாபிக்கும். முன்னமும் பொருசூதுபோர் மோதுபோர் முனிவுடன் என்றும் முதலடியிற் பாடம். (11)

12. அன்றியேயவருடன்மலைகுவமெனவழிவிணைக் கருதாமல்
வென்றியேநினைந்தெதிர்த்திரே லுங்களால்வெல்லுதலரிதம்மா
கன்றியேயடல்வீமனும்விசயனுங்களம்புகிலணைவீரும் [தே.
பொன்றியேவிடுகின்றினிர்முனிவர்சொற்பொய்க்குமோபொய்யா

(இ - ள்.) அன்றியே - (இங்ஙனஞ் சூதாட்ட வழியில்) அல்லாமல், அழிவினை கருதாமல் - தோல்வியை (நேரக் கூடுமென்று) நினையாமல், வென்றியே நினைந்து - ஜயித்தலையே (நேருமென்று) நினைத்து, அவருடன் மலைகுவம் என - அப்பாண்டவர்களோடு போர் செய்வோமென்று நிச்சயித்து, எதிர்த்திரேல் - (அவர்களை) எதிர்ப்பீராஞல், உங்களால் வெல்லுதல் அரிது - உங்களால் (அவர்களைச்) சயித்தல் முடியாது; அடல் - வலிமையுடைய, வீமனும் - பீமசேனனும், விசயனும் - அருச்சுனனும், கன்றியே - கோபங்கொண்டு, களம் புகில் - போர்க்களத்தையடைந்த மாத்திரத்தில், அனைவீரும் - நீங்க ளெல்லீரும், பொன்றியே விடுகின்றினிர் - (யுத்தத்தில்) நிச்சயமாக இறந்தே விடுவீர்கள்; முனிவர் சொல் பொய்க்குமோ பொய்யாதே - முனிவரது வார்த்தை தவறுமோ? தவறவேமாட்டாது; (எ - று.)

அம்மா - வியப்பிடைச்சொல்; பாண்டவர்களது பராக்கிரமங்களை நோக்கிய அதிசயத்தால் வந்தது. 'உங்களெல்லோரையும் ஒழித்தற்கு வீமன் விசயன் என்ற இருவரும் ஒருங்குவேண்டுவதில்லை, இருவருள் எவனையினும் ஒருவன் போதும்' என்ற கருத்து விளங்க, 'வீம விசயர்' என உம்மைத் தொகையாற் சேர்த்துக் கூறாமல் 'வீமனும் விசயனும்' எனத் தனித்தனி பிரித்துக் கூறினர். 'உங்களை அழித்தற்கு அவர்கள் போர்செய்யவேண்டா. போர்க்களத்தில் வருதல்மாத்திரமே அமையும், அம்மாத்திரத்திலே நீங்கள் அச்சத் தால் இறப்பீர்கள்' என்ற பொருளைத் தோற்றுவித்தற்கு, 'களம் புகில்' என்றார். பொன்றிவிடுவீரென எதிர்காலத்தாற் கூறவேண்டிய விடத்து 'பொன்றிவிடுகின்றினிர்' என நிகழ்காலத்தாற் கூறினது நிச்சயமும் விரைவும்பற்றி வந்த காலவழுவமைதி. பொன்றுகின்றீர் என்னாது பொன்றிவிடுகின்றினிர் எனக் கூறியதில் விடு ஏன்பதும் அத்துணிவையே உறுதிப்படுத்தும். பாண்டவரைவருள் வீம அருச் சுனரையே எடுத்துக் கூறினது, இவ்விருவரும் துரியோதனுடையரை யும் கர்ணனையும் கொல்வதாக முன்னர்ச் சபதஞ்செய்திருத்தலாலும் பலபராக்கிரமங்களிற் சிறந்தவராதலாலும் என்க. 'முனிவர் சொற் பொய்க்குமோ பொய்யாதே' என்ற பொதுப்பொருளால் முன்வர்க்கி யங்களில் வந்த சிறப்புப்பொருளை விளக்கியதனால், வேற்றுப் பொருள் வைப்பணி: பொதுப்பொருளாற் சிறப்புப்பொருளையாவது சிறப்புப் பொருளாற் பொதுப்பொருளையாவது சாதித்தல், இவ்வணியின் இலக்கணமாம்.

அருள்கொண்டு கூறினலும் வெகுண்டுகூறினலும் அவ்வப் பயன்களைத் தவறுமல் தந்தேவிடுகின்ற பழுதுபடாத பொருள் நிரம் பின சொற்களையுடைய நிறைமொழிமாந்தரான முனிவரது வார்த்தை பயன்தராது விடாதாதலின், 'முனிவர்சொற் பொய்க்குமோ பொய் யாதே' என்றார். 'பொய்க்குமோ; பொய்யாதே' என்ற இரண்டனுள் யாதாயினும் ஒன்றே அமைவதாயிருக்க, உடன்பாடு எதிர்மறை என்ற இரண்டுமுகத்தாலும் கூறினது, அது தவருமையை உறுதிப் படுத்தும்பொருட்டென்க; இதனை "வளம்பட வேண்டாதாய்யார் யாருமில்லை" "உண்டோ உணர்ச்சி மற்றில்லாகும்" என்பனபோலக் கொள்க. 'முனிவர்சொல்' என்றது, மேற் கூறியபருவத்தில் துரு

வாச மகாமுனிவர் 'வண்டோலிடுந்தார்ப்பேரதத்தின் மகனே யுன்னை யரசென்று, கொண்டோரல்லா லெதிர்ந்தோரில் யாரேவாழ்வார் குவலயத்தில்" என்பது முதலியவற்றை. இனி, 'முனிவர் சொற்பொய்க்குமோ பொய்யாதே' என்றதை உலூகன்வார்த்தையாகக் கொள்ளாமல் கவிக்கூற்றாகக்கொண்டு. 'கன்றியேயடல் வீமனும் விசயனும் களம்புகில் அனைவீரும், பொன்றியே விடுகின்றிலிர்' என்று இங்கே உலூகமுனிவன் சொன்ன வார்த்தை பொய்யாகாதுபலித்தே தீரும் எனறதாகவும் கருதலாம். அன்றியும், சாபானுக்கிரக சக்தியுடைய அந்தணர் பலர் துரியோதனனுக்கு அப்பொழுதப்பொழுது புத்தி கூறி அவன் கேளாததுகாரணமாக அவனுக்குக்கொடுத்த சாபங்களும், பாண்டவர்களது நற்குண நற்செய்கைகளை நோக்கி மகிழ்ந்த முனிவர் பலர் அவர்களுக்குச் செய்த அனுக்கிரகங்களும் அனேகம் உண்டு. போரில் வெற்றி தோல்விகள் ஒருதலையன்றுதலால் அங்ஙனங்கருதுதல் தகுதியன்றென்பார். 'அழிவினைக்கருதாமல் வென்றியேநினைந்து' என்றார்.

அடல் என்பதை விசயனுக்கும் கூட்டுக. வீமனுக்கு அடல் - தேகபலமும், கதைவலிமையும்; அருச்சுனனுக்கு அடல் - வில்வன்மையும், பாசுபதம் முதலிய அஸ்திரபலமுமாம். வீமன் (பகைவர்க்குப்) பயங்கரனனவன் என்று பொருள். விசயன் - விசேஷமான வெற்றியுடையவனென்று பொருள். இராஜசூய யாகத்திற்காக வடக்கிற் சென்று பல அரசர்களைச் சயித்ததனலும், காண்டவ தகனகாலத்துத் தேவர்களை வென்றதனலும், பாசுபதம் பெறுங்காலத்துப் பரம சிவனையெதிர்த்து விற்கழற்றால் முடியிலடித்ததனலும், பின்பு தேவர்க்குப் பகைவராகிய நிவாதகவசர் காலகேயர்களை வதைத்ததனலும், இவை முதலிய வெற்றிகளால், இவனுக்கு இப்பெயர் அமைந்தது. இனி, விசயன் - தன்னைச் சயிப்பாரெவரும் இல்லாதவன் என்றும் பொருள்கொள்வர். முன்னையபொருளில், வி - விசேஷமும், பின்னைய பொருளில் வி - எதிர்மறையுங் குறிப்பனவாம்; இரு பொருளிலும், ஜயம் - வெற்றி. 'அரிது' என்பதில், அருமை-இன்மை குறிக்கும். (12)

துரியோதனன் அலட்சியமாக மறுமொழி கூறுதல்.

18. என்றபூசுரனியம்பலுங்குங்குமமெழிலுறுமிணைமேருக்
குன்றுபூசியதனையபொற்றடம்புயக்குருகுலவயவேந்தன்
இன்றுபூசைபோலிருந்துழியுரைக்குமீதிகலதன்றிருவர்க்குந்
துன்றுபூசலிற்காணலாமாண்மையுந்தோள்வலிமையுமென்றான்.

(இ - ள்.) என்று—, பூசுரன் - (உலூகனென்னும்) அந்தணன், இயம்பலும் - சொன்னவளவிலே,—குங்குமம் பூசியது - குங்குமப் பூவின் குழம்பைப் பூசப்பெற்றதான, எழில் உறும் இணை மேரு குன்று - வளர்ச்சிமிக்க மேருமலை இரண்டு இருந்தால் அவற்றை; அனைய-ஒத்த, பொன் தட புயம்-அழகிய பெரிய தோள்களையுடைய, குரு குலம் வய வேந்தன் - குருவம்சத்திலேபிறந்த வலிமையுடைய இராசராசனனை துரியோதனன்,—இன்று - இப்பொழுது, பூசை

போல் - பூணையைப்போல், இருந்த உழி - உள்ளிடத்திலேயிருந்து கொண்டு, உரைக்கும் - வீரமாகப்பேசுகிற, ஈது - இவ்வார்த்தை, இகலது அன்று - வலியதாகாது; இ ஈவர்க்கும் - எங்கள் இருதிறத் தார்க்கும், துன்று பூசலில் - நெருங்கி நேரும் போரில், ஆண்மையும் - பராக்கிரமத்தையும், தோள் வலிமையும் - புயங்களின் பலத்தையும், காணலாம் - (இன்னரிடத்திலுள்ளதென்று வெளிப்படையாகப்) பார்க்கலாம், என்றான் - என்று கூறினன்; (எ-று.)

இங்ஙனங்கூறினது, ஆண்மையும் தோள்வலிமையும் போரில் தங்களிடத்தே மிக்குவிளங்குமென்றகருத்தால். பூஸுரன் என்னும் சொல்லுக்கு - பிரமதேஜசினால் பூமியில் தேவன்போல விளங்குபவ னென்று பொருள்; இது - அந்தணர்க்குச்சிறப்புப்பெயர்: "மேலாத் தேவர்களும் நிலத்தேவரும் மேவித்தொழும்" என்றார், திருவாய் மொழியிலும். துரியோதனனது பெரியவலிய தோள்களுக்கு உவமை யாகக்கூறுகிற மகாமேரு கிரிக்கு 'குங்குமம் பூசியது' என்ற அடை மொழி கொடுத்தது, அத்தோள்கள் எப்பொழுதும் குங்குமக் கலவைச்சாந்தைப் பூசப்பெற்றுள்ளன வாதலின். குங்குமம்பூசிய எழிலுறுமேரு இரண்டு - இல்பொருளுவமை. குங்குமமென்னும் மரத்தின்பெயர், அதன் பூவின் குழம்பிற்கு இங்கே இருமடியாகு பெயர். எழிலாவது வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளருமென்பதுபோன்று காட்டுதல் என்றார் நச்சினார்க்கினியர்; என்றது, புஷ்டி யென்றபடி. இணை மேரு பூசியது - ஒருமைப்பன்மைமயக்கம். இணை - இரண்டும் ஒன்றோடொன்று ஒத்த என்றுமாம். பொன் - கருவியாகுபெயராய், பொன்னுபர ணங்களை யணிந்த வென்றுங் கொள்ளலாம். குரு என்பவன் - சந்திர குலத்தில் பிரசித்திபெற்ற ஓரரசன்; இவனால் அக்குலம் குருகுலமென்றும், அக்குலத்தவர் கௌரவரென்றும், அந்நாடு குருநா டென்றுங் கூறப்படும். வய - வலிமையுணர்த்து முரிச்சொல். துரியோதனன் பதினாயிரம் யானைபலங் கொண்டவனதலால், அவனை 'வயவேந்தன்' என்றார். இனி, வயம் எனப் பிரித்தால், பெயர்ச் சொல்லாய், வெற்றியென்று பொருள்படும். காடு முதலிய இடங்களி லன்றி வீட்டினுள்ளே வசிக்கும் பூனைக்குப் பூசையென்று பெயராத லால், 'பூசைபோலிருந்துழி' என உவமை கூறப்பட்டது; அதனை 'வெவ்வாய்வெருகினைப் பூசையென்றதும்' என்ற தொல்காப்பியங் கொண்டும் "இளர்மாடத்துள்ளுறையும் பூசை" என்ற கம்பராமா யணங்கொண்டும் அறிக. ஆண்மை - ஆண்தன்மை, பௌருஷம். தோள்வலிமை-புஜபலம். (13)

விதுரன் துரியோதனனுக்கு நற்புத்தி கூறுதல்.

14. கல்விதூயநெஞ்சிலாதவச்சுயோதனன்கழறியமொழிகேட்டு
விஃவிதூரனிவ்வேதியன்மொழிப்படிமேதினிவழங்காமற்
புல்விதூடகரினுமுணர்வில்லாதவர்புகலும்வாசகங்கேட்கிற்
செல்விதூரியளாய்விடுஞ்சுற்றமுஞ்சேனையுங்கெடுமென்றான்.

(இ - ள்.) கல்வி - படிப்பினாலே, தூய - (குற்றமற்றுச்) சுத்தமான, நெஞ்சு-மனம், இலாத - இல்லாத, அ சுயோதனன் - அந்தத் துரியோதனன், கழறிய - உறுதியாகச்சொன்ன, மொழி-அவ்வார்த்தையை, வில்வித்தூரன் - வில்வித்தையில் வல்ல விதுரன், கேட்டு - செவியுற்று, (துரியோதனனை நோக்கி), 'இ வேதியன் மொழிப்படி - இந்த அந்தணனது வார்த்தையின்படி, மேதினி வழங்காமல் - (பாண்டவருக்குப்) பூமியைக்கொடாமல், புல் வித்தூடகரினும் உணர்வு இலாதவர் புகலும் வாசகம் கேட்கில் - இழிவான வித்தூஷகர்களைக் காட்டிலும் அறிவில்லாதவர்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பாயானால், செல்வி தூரியள் ஆய்விடும் - (உனக்குத்) திருமகள் தூரத்திலுள்ளவளாய்விடுவள் [விலகிப்போவாள் என்ற படி]; சுற்றமும் சேனையும் கெடும் - (உனது) பந்துவர்க்கமும் சேனைகளும் போரில் அழியும்,' என்றான்-என்று சொன்னான்; (எ-று.)

இராவணன்போலப் படித்துக்கெட்டவனல்லாமல், துரியோதனன் படியாது கெட்டவனுதலால், 'கல்வி தூயநெஞ்சிலா வச்சுயோதனன்' என்றார். தூயநெஞ்சிலாத எனவே, தீயநெஞ்சுடைமை அருத்தாபத்தியால் தானே பெறப்படும். விதுரனது வில் வல்லமை பிரசித்தம்: "வெற்றிவிதுரன் கைவில்லிருக்க மேதினியின் - மற்ற வனை வெற்றி கொள்ளுமாறுண்டோ" என்னும் பாரதவெண்பாவினாலும் அறிக. வித்தூஷகர் - தமக்கு நேரிற் பகையில்லாதிருக்கையிலும் ஒரு பயனையுங் கருதாமல் தானும் பிறரும் நகைத்தலொன்றையே நல்ல பயனுகக்கொண்டு எப்பொழுதும் பிறரை நிந்தித்துத் திரியும் அவிவேகிகள்; வி - மிகுதியாய், தூஷகர் - தூஷிப்பவர், பழிப்பவர் என்க. புல் வித்தூடகரினும் உணர்விலாதவரென்றது, கர்ணன் சகுனி துச்சாதனன் முதலியோரை. கல்வி தூய - மூன்றும் வேற்றுமைத்தொகையில் வலி இயல்பாயிற்று. இனி, உம்மைத் தொகையாய், கல்வியுந் தூயநெஞ்சுமில்லாத என்றுமாம். வித்தூர னென்ற ரீட்டல் விகாரம், எதுகைத்தொடை நோக்கியது. மேதினி என்ற சொல்லுக்கு-(திருமாலாற்கொல்லப்பட்ட மதுகைடபரென்னும் அசுரரது) உடற்கொழுப்பினால் ஈனைக்கப்பட்டதென்று காரணப் பொருள்; மேதஸ் - நிணம். செல்வி - செல்வங்களுக்கு உரியவள். இனி, தூரியளாய், விடும் என இரண்டாகக்கொண்டு, சிறிது சிறிதாகச் சேய்மையிற் சென்று நின்று பின்பு விட்டேயொழிவளென்றுங் கருத்துக்கொள்ளலாம். சுற்றம் - (சுப அசுபகாலங்களில் ஒருவனை வந்து) சூழ்ந்தன்மையதுபற்றி வந்த பெயர். சுற்றமென்னும் பால்பகா அஃறிணைப்பெயர் - ஆகுபெயர்ப்பொருளால் உயர்திணைப்பலர்பால் குறிப்பதாயினும், சொல்லிலக்கு ஏற்ப, கெடும் என்னுஞ் செய்யுமென்முற்றைக் கொண்டது. (14)

துரோணனும் கிருபனும் நற்புத்தி கூறுதல்.

15. திரத்துவாய்மைநீதவறிமற்றவருடன் சேனையுந்திறலுங்கொண்டு
ரத்துவாளமருடற்றலோபெரும்பிழையுடன்றனையாமாகிற்
சரத்துவாய்தொறுஞ்சோரிகக்கிடவிடுந்தனஞ்சயன்றனுவென்று
பரத்துவாசனும்பகர்ந்தனன்கிருபனும்பகர்ந்ததேபகர்ந்திட்டான்.

(இ - ள்.) (அப்பொழுது), பரத்துவாசனும் - பரத்துவாச குமாரனான துரோணாசாரியனும், (துரியோதனனே நோக்கி), 'ஈ—, திரத்து வாய்மை தவறி - உறுதியான சத்தியத்தைத் தப்பி, சேனையும் திறலுங்கொண்டு - (உனது) சேனைகளையும் மற்றை வலிமைகளையுமே முக்கியமாகக்கொண்டு அவற்றால், அவருடன் - அப்பாண்டவர்களோடு, உரத்து வாள் அமர் - வலிமையுள்ளதான ஆயுதங்களாற் செய்யும் போரை, உடற்றலோ - செய்யத் தொடங்குதலோ, பெரு பிழை-பெரிய குற்றமாகும்; உடன்றனை ஆம் ஆகின் - (அங்ஙனம்) போரைச்செய்வாயாகில், தனஞ்சயன் தனு - அருச்சுனனது (காண்டீவமென்னும்) வில், சரத்து வாய் தொறும் - அம்புகள் தைத்த இடங்களிலெல்லாம், சோரி கக்கிட - இரத்தம் பெருகும்படி, விடும் - (அம்புகளை) வீசும்,' என்று, பகர்ந்தனன் - சொன்னான்; கிருபனும் - கிருபாசாரியனும், பகர்ந்ததே பகர்ந்திட்டான் - (கீழ்த்துரோணன்) கூறியதையே தானும் கூறினான்; (எ - று.)

துரோணனும் கிருபனும், சொன்னசொல் தவறாமல் இராச்சியத்தைத் தருமனுதியர்க்குக் கொடுத்தலே செய்யத்தக்கது; வாய்மை தவறிப்பொருதாலோ அருச்சுனன் கணைக்குத் தப்புவது முடியாது என்று தம் கருத்தைத் தெரிவித்தன ரென்க. கௌதம முனிவனது பௌத்திரனும். சரத்துவந்த முனிவனது குமாரனும் ஆகிய கிருபாசாரியன் முதலிலும், அக்கிருபனது உடன் பிறந்தவளான கிருபியினது கணவனான துரோணன் அதன் பின்னும் கௌரவ பாண்டவர்க்கு வில்வித்தை பயிற்றிவைத்தனரென அறிக. இம்மை மறுமைகளில் சத்தியமே நன்மையை விளைத்தலால், திரத்து வாய்மை எனப்பட்டது.

வாய்மை - மெய்யினது தன்மை. மற்று - அசை; வினைமாற்றென்றுங் கொள்ளலாம். மற்றவரென எடுத்து, எதிரிகளான அவர்களுடனே எண்ணுமாம். வாள் என்னுஞ் சிறப்புப்பெயர் இங்கும் பொதுவாக படைக்கலமென்ற மாத்திரமாய் நின்றது; இங்ஙனம் சிறப்புப்பெயர் பொதுப்பொருளையும், பொதுப்பெயர் சிறப்புப் பொருளையும் உணர்த்துவது - ஒருவகைப் பாஷை வழக்கம். இனி, வாளென்னும் ஆயுதவிசேடத்தின் பெயர் மற்றைப்படைகள் பலவற்றிற்கும் உபலக்ஷணமென்றுங் கொள்ளலாம். வாய் - படுமிடமாதலால் "வாள்வாயுமின்றிவடுவெங்கணை வாயுமின்றி" எனச்சிந்தாமணியிலுங் காண்க. தொறு என்பது - தன்னை யேற்ற பெயர்ப் பொருளெங்கும் அப்பெயர்ப்பொருளோடு இயையும் பொருளிருக்கையைக் குறிக்குமிடைச்சொல். சோரிவது, சோரி; காரணப்பெயர்.

தனஞ்சயன் என்பதற்கு - செல்வத்தைச் சயித்தவனென்று பொருள். தருமபுத்திரன் இராஜசூயயாகஞ் செய்ய வேண்டிய பொழுது, அவர் கட்டளையால் அருச்சுனன் வடதிசையிற்சென்று பல அரசர்களை வென்று அவர்கள் செல்வத்தைத் திறையாகக் கொணர்ந்ததனால், இவனுக்கு இப்பெயர் வந்தது. இனி இதற்கு வெற்றியையே செல்வமாகக் கொள்பவனென்றும் பொருள் கொள்ளலாம். பரத்துவாசன் என்பது, அவன் மைந்தனென்னும் பொருளில்

தத்திதர்ந்தமாக வந்த பாரத்துவாசன் என்ற மொழியின் குறுக்கல் விகாரம். துரோணாசாரியர் பரத்துவாச முனிவரின் குமாரராவர். (15)

வீடுமன் திருதராட்டிரனுக்கு உறுதி கூறல்.

16. காடுமன்னுநின்புதல்வருக்கறுதிசெய்காலமோகழிந்தன்று
நாடுமன்னவகொடாமல்வெஞ்சமர்பொரநாடினேயெனினுனக்
கோடுமன்னுவிலருச்சுனற்கெதிரெவர்குனிக்க வல்லவரென்று
வீடுமன்றிருத்தனயனேடுறுதிகள் வெகுண்டுரைத்தனனன்றே.

(இ - ள்.) (அப்பொழுது), வீடுமன் - பீஷ்மன், வெகுண்டு - கோபங்கொண்டு, திரு தனயனேடு - (தனது) சிறந்த குமாரனான திருதராட்டிரனுடனே, 'மன்னவ - அரசனே! காடு மன்னும் நின் புதல்வருக்கு - வனத்தில் வசித்திருந்த உனது குமாரர்களான பஞ்ச பாண்டவர்க்கு, அறுதி செய் காலமோ - (வனவாசமும் அஜ்ஞாத வாசமுமாக) வரையறைசெய்யப்பட்டிருந்த (பதின்மூன்று வருஷ) காலமோ, கழிந்தன்று - கழிந்துவிட்டது; (இனி மேல்), நாடு கொடாமல் - (அவர்களுக்கு) இராச்சிய பாகத்தை அளித்திடாமல், வெம் சமர் பொர - (அவர்களுடன்) கொடிய போரைச் செய்தற்கு, நாடினை எனின் - விருப்பங்கொண்டாயானால், நாளை - நாளைக்கு, (யுத்தகளத்தில்), அருச்சுனற்கு எதிர் - அருச்சுனனுக்கு எதிராக, கோடு மன்னு வில் குனிக்க வல்லவர் - வளைவுபொருந்தின வில்லை (ப்போர் செய்தற்கு) வளைக்கவல்லவர், எவர் - (இந்தப்பக்கத்தில்) யாவர்உளர்? (எவருமில்லை யன்றோ?) என்று—உறுதிகள் உரைத்தனன் - நன்மையைத் தரும் வார்த்தைகளைக் கூறினன்; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

துரோணரிருபர் துரியோதனனிடம் கூறியதுபோலவே வீடுமனும் தன் கருத்தைத் திருதராட்டிரனிடம் தெரிவித்தனனென்க. இங்கே, வெகுளி, திருதராட்டிரனும் துரியோதனனும் பாண்டவர் நிறத்தில் அநீதியை நடத்தலால் வீடுமனுக்கு உண்டாயிற்று. அறுதி - வரையறுத்தல், பீஷ்மனது தம்பியான விசித்திரவீரியனது புத்திரனான திருதராட்டிரனை 'தனயன்' என்றது - அவனை வளர்த்தவன் வீடுமனுதலாலும், பெரிய தந்தையெனப்படுவானுதலாலும், தந்தைக்கு உள்ள அவ்வளவு அன்பு இவனுக்கு அவனிடம் இருக்குமாதலாலு மென்க. பாண்டவரை 'நின்புதல்வர்' எனத் திருதராட்டிரகுமாரராக அபேதப்படுத்திக் கூறியதற்குங் காரணம் இதுவே. காலமோ, ஓ-உயர்வு சிறப்பு; அது அவ்வனவாச அஜ்ஞாத வாசங்களின் கழிதற்கருமையை விளக்கும். கழிந்தன்று - உடன் பாட்டு ஒன்றன்பால் வினைமுற்று; நாளை - எதிர்காலங் குறிப்பதொரு இடைச்சொல்; இனி, விரைவில் என்றபடி. கோடு - வளைவு; முதனிலைத்தொழிற்பெயர். இனி கோடு - வினைத்தொகையாய், வளைந்த உறுதிபெற்ற வில்லுமாம், அர்ச்சுனன் - வெண்ணிற முடையவன் என்பது பொருள். இது முதலில் இந்நிறமுடைய கார்த்தவீரிய மகாராசனுக்குப் பெயராயிருந்தது. பின்பு அவனைப்

போன்ற சௌரிய தைரியங்களையுடைய பார்த்தனுக்கு இட்டு வழங்கப் பட்டது; இது - உவமவாகுபெயரின்பாற்படும்: பார்த்தன் கருகிற முடையவனுதலால் அவனுக்கு அருச்சுனனென்பது நிறம்பற்றி வந்த பெயரென்றல், பொருந்தாது; இனி, "குருச்சுடர் மணிசெய் பச்சைக் கொழுந்துடற் பொலிவுநோக்கி, யருச்சுனனென்பரீதென் னரும்பெயர் வந்த பான்மை" என்ற நல்லாப்பிள்ளை பாரதச் செய்யு ளைக்கொண்டு அருச்சுனனென்பது பசுமைநிறம்பற்றிவந்த பெய ரென்றலும் ஒன்று. எவர் என்ற வினுப்பெயர், இன்மை குறித்து நின்றது. கோடுமன்னுவில் என்பதை அருச்சுனனுக்கு அடைமொழி யாக்கிவிட்டால், குனிக்க என்பதற்கு - வில்லையென்னுஞ் செயப்படு பொருள் வருவித்தல் வேண்டும். (16)

கர்ணன் வீடுமனை நோக்கிக் கோபத்தோடு கூறுதல்.

17. முன்னமேயுகிரிழந்தவெம்புலியெனமுரணழிமுனிமைந்தன்
றன்னமற்றவனிடத்துநீகற்றவெஞ்சரத்தின் வென்றமையல்லால்
என்னசேவகங்கொண்டுநீயாரையுமிகழ்ந்துரைப்பதுவென்று
கன்னனுந்திறற்காங்கெயன்றனுெடுகண்சிவந்துரைசெய்தான்.

(இ - ள்.) (அதுகேட்டு), கண் சிவந்து -(கோபத்தாற்) கண்கள் சிவந்து, கன்னனும் - கர்ணனும்,—'உகிர் இழந்த வெம் புலி என - ஈகம் போகப்பெற்ற கொடிய (கிழப்) புலிப்போல, முன்னமே முரண் அழி - முற்காலத்திலேயே (தசரத ராமனுல்) வலிமையொழிந்த, முனி மைந்தன் தன்னை - ஜமதக்கி முனிவனது குமாரனுகிய பரசுராமனை, மற்று - பின்பு, அவனிடத்து நீ கற்ற வெம் சரத்தின் - அவனிடம் நீ அறிந்துகொண்ட கொடிய அம்புகளால், வென்றமை அல்லால் - சயித்துவிட்டதேயல்லாமல், என்ன சேவகம் கொண்டு-வேறு என்ன பராக்கிரமத்தால், நீ—, யாரையும் இகழ்ந்து உரைப்பது - எல்லோரை யும் அவமதித்துப் பேசுவது?' என்று—, திறல் காங்கெயன் தன் னெடு - வலிமையையுடைய கங்காபுத்திரனை வீடுமனுடனே, உரை செய்தான் - சொன்னன்; (எ-று.)

வீடுமனைநோக்கி இங்ஙனம் கூறினன் கர்ணன் என்பதாம். கீழ் வீடுமன் அருச்சுனனுக்கெதிரில் வில்வீரப்பாரில்லை யென்று கூறியதைத் தனக்கு விஞ்சினவர் எவருமில்லை யென்ற செருக்கினுல் எல்லா வீரரையுங் கீழ்ப்படுத்தித் தன்னலாகாத காரியத்தைப் பிற ராலும் ஆகாததாகக் கூறினதெனக் கொண்டு, கர்ணன் மிக வெகுண்டான். கர்ணன் தன்னிடம் எவ்வளவு சாமர்த்தியம் உண்டோ அவ்வளவினும் மிக அதிகம் உள்ளதென்று கருதிக் கர்வங் கொண்டவனுதலாலும், பாண்டவர்களிடத்தும் அவர்களுள் முக்கிய மாக அர்ச்சுனனிடத்தும் வெகுகாலமாக வைரங்கொண்டவனுத லாலும், அர்ச்சுனனை வீடுமன் மிகச் சிறப்பித்துப் பேசினமைப் பொருமல் கண்சிவப்பவனுனன். மனிதர் தேவர் முதலாக யாவரையும் திக்குவிசயஞ் செய்து வென்ற இராவணனை எளிதிற் சிறையிலிட்ட கார்த்தவீரியார்ச்சுனன் முதலாக நிலவுலகத்து அரசர்பலரையும் வேரறுத்த பரசுராமனை இளமையிலேவென்றிட்ட தன்னுல் ஆகாத

காரியம் பிறரெவராலும் ஆகமாட்டாதென்ற உறுதி வீடுமனுக்கு இருத்தல் கூடுமென்று கருதி, கர்ணன் அதனை யெடுத்துக் காரணங் காட்டிக் கண்டித்துப் பேசுகிறான். தசரதராமன் சீதையை மணம் புரிந்து மிதிலையினின்று மீண்டுவருகையில், அவனை வலியச்சென்று எதிர்த்துப் பரசுராமன் அவனால் வெல்லப்பட்டு அப்பொழுது எல்லா வலிமைகளையுமிழந்தனனாதலாலும், 'பாம்பின் கால் பாம்பறியும்' என்றபடி அவனது வில்வித்தையிலுள்ள அந்தரங்கமான பொருள் களை யெல்லாம் அவனிடம் நீ மாணாக்கனாயிருந்து அறிந்தவனாதலாலும், நீ அவனுடன் பொருதகாலத்திலும் அவன் பிராயம் முதிர்ந்தவனும் நீ நல்ல தருண வயதுடையவனுமாதலாலும், அவனை வென்றது ஒரு வெற்றியாகச் சிறிதும் மதிக்கத்தக்க தன்றென்று இகழ்ந்தவாறு. கர்ணன் இளம்பிராயத்திற் பிராமண வடிவங்கொண்டு பரசுராமனிடஞ்சென்று வில்வித்தையைக் கற்றுக் கைதேர்ந்துவருகையில், க்ஷத்திரியவம்சநாசகனான அவன், இவனை க்ஷத்திரியசாதியானென்று அறிந்து கடுங்கோபங்கொண்டு 'யான் உனக்குக் கற்றுக் கொடுத்த கல்வியனைத்தும் தக்க சமயத்தில் உதவாதபடி மறந்து போய்விடக்கடவது' என்று சாபங்கொடுத்ததுபற்றிக் கர்ணன் பரசுராமன் மீது துரபிப்பிராயமுடையவனாதலால், இங்கே வீடுமனைப் பழிக்கிற சந்தர்ப்பத்தில் அவனையும் பழித்தான். காசிராஜனது பெண்கள் மூவரைத் தன் தம்பியான விசித்திரவீரியனுக்கு மணம் புரிவிக்கும் பொருட்டுச் சுயம்வரத்தில் வீடுமன் வலியத்தேரேற்றிக் கொண்டு செல்லுகையில், அரசர்கள் பலர் வந்து பொருது தோல்வியடைய, அவர்களுள் சிறிது போரில் முன்னிட்ட சாலுவனிடத்து அம்பை யென்பவள் மனத்தைச்செலுத்தி வீடுமனின்று நீங்கிச் சாலுவனிடஞ் சென்று சேர, அவன் 'பகைவர் கவர்ந்து போன உன்னை யான் தொடேன' என்று மணம்மறுத்துவிட்டதனால், அவள் பின்னர் வீடுமனை மணஞ்செய்யும்பொருட்டுப் பலவாறு முயன்றும் பயன்படாமையால், முடிவில் பரசுராமனைச் சரணமடைய, அப்பிரான் அருளால் விரைந்துவந்து வீடுமனை மணஞ்செய்யும்படி வற்புறுத்த, விரதவுறுதியையுடைய வீடுமன் அதனை மறுக்கவே, அவன் கோபங்கொண்டு அறைகூவிப் பெரும்போர்செய்ய, அப் போரில் வீடுமன் பரசுராமனை வென்றிட்டனனென்பது வரலாறு; இதனைக் கீழ்க் குருகுலச் சருக்கத்திலும் காணலாம்.

முதலடி உவமையணி. பரசுராமனுக்குப் புலியும், வலிமைக்கு உவமை. சேவகம் - வீரமாதலை "சார்ங்கவிற் சேவகன்" எனப பெரியாழ்வார் திருமொழியிலும், "ஏறுசேவகன்" எனக் கம்பராமாயணத்திலுங் காண்க. மற்று - இடைச்சொல்; இங்கு, பிற பொருள் தந்தது. காங்கெயன் - விகாரம்; காங்கேயன் தந்திதாந்தகாமம். கண் சிவத்தல் - கோபக்குறிப்பு. புலிக்கு மற்றையுயிர்களை வருத்துதற்குக் கருவி நகமாதலால், அதனைப் பரசுராமனது வலிமைக்கு உவமை கூறினர். வெம் புலியென உபமானத்தை விசேடித்தது, உபமேயமான பரசுராமன் முன்பு பல அரசர்களைக் கருவறுத்த வீரமுடையவனாதலின். ஆவேசாவதாரம் அம்சாவதாரத்திலுங் குறைவுபட்டதாதலால், ஆவேசாவதாரமான பரசுராமனுடைய சக்தி

அம்சாவதாரமான ரகுராமனுற் கவர்ந்துகொள்ளப் பட்டதென்றும், பரசுராமனிடம் ஆவேசித்திருந்த திருமாலின் சக்தி அங்ஙனம் நீங் கினபின்பு அவன் வீடுமனிடந் தோல்வி யடைந்தன னென்றும் உண்மையுணர்க. 'நீ கற்ற வெம்சரத்தின் வென்றமையல்லால்' என்றது, நீ அவனிடம் கல்விபயிலாமலிருந்தால் அவனை வென்றி ருக்க மாட்டாயென்பது தோன்ற நின்றது. (17)

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்: அவற்றுள் முதலிரண்டு கவிகள் – வீடுமன் வெகுண்டு கர்ணனைப் பரிகசித்துச் சொல்லும் உத்தரம்.

18. தூமவெங்கனற்றேன்றியதோகையந்தொடையல்சூட்டியநாளில்
நாமவெஞ்சிலைநாணெடுத்தனையடாநரனெடும் போர்செய்தாய்
தாமவெண்குடைநிருபனையந்தரசரிதர்கொண்டேகாமல்
வீமன்வெஞ்சிறைமீட்டநாளினுந்திறல்வினைபுரிமுனைவென்றுய்.

(இ - ள்.) அடா—கர்ணா! தூமம் - புகையையுடைய, வெம் - வெப்பத்தையுடைய, கனல் - அக்கினியிலே, தோன்றிய - பிறந்த, தோகை - மயில்போன்ற சாயலையுடைய திரௌபதி, அம் தொடை யல் - அழகிய மணமாலையை, சூட்டிய நாளில் - (அருச்சுனனுக்கு) இட்டகாலத்தில், நாம வெம்சிலை நாண் எடுத்தனை - அச்சத்தைத் தருகிற கொடிய வில்லில் நாணியை யேற்றி, நரனெடும் போர் செய் தாய் - அருச்சுனனுடனே யுத்தம்பண்ணி வென்றுய்! (அன்றியும்), தாமம் - ஒளியையுடைய, வெள்குடை - வெண்கொற்றக்குடையை யுடைய, நிருபனை - துரியோதனராசனை, அந்தர சரிதர் - ஆகாயத் திற் சஞ்சரித்தலையுடைய (சித்திரசேனன் முதலிய) கந்தருவர்கள், கொண்டு ஏகாமல் - கட்டித் தூக்கிக்கொண்டு செல்லாதபடி, வீமன் - வீமசேனன், வெம் சிறை மீட்ட நாளினும் - பயங்கரமான காவலி னின்று விடுவித்த காலத்திலும், திறல் வினை புரி முனைவென்றுய் - வலிமையையுடைய போர்த்தொழிலைச் செய்யுமிடமான யுத்தகளத் தில் (அவனைச்) சயித்திட்டாய்! (எ - று.)

போர் செய்தாய், முனை வென்றுய் என்றவற்றில், அக்காலங் களில் யாதொன்றுஞ் செய்யமுடியாது தோற்று ஓடிப்போனயே? இப்பொழுது வீண் வீரவாதஞ் செய்வதிற் பயனென்ன? என்னும் பொருள் தொனிக்கும். போர்செய்தாய், வென்றுய் என்பன - பிற குறிப்பின்பாற்படும்; இகழ்ச்சிக்குறிப்பு; எதிர்மறையிலக்கணையுமாம். திரௌபதியின் கலியாண காலத்தில் பிறரால் அறுத்தற்கு முடியாத மத்ஸ்யயந்திரத்தை அருச்சுனன் அறுத்திட்டு அவளால் மாலை சூட்டப்பட்டது காரணமாக அழுக்காறுகொண்டு துரியோதனு னியரும் கர்ணனும் மற்றும் பல அரசர்களோடு எதிர்த்துப்போர் செய்து அருச்சுனனுலும் வீமனுலும் வென்று அடித்துத் துரத்தப் பட்டு ஓடினரென்பது பிரசித்தம். "புகைத்தகனல்விழிகன்னன் தருக்கா லெள்ளிப் பூசுரனென்றவமதித்துப் புனைவில்வாங்கி, உதைத்த பகழியுமுகைத்தா னுரனுந் தன்கை யொரு கணையா லுடல் பிளந்தானுருமேறெப்பான்" எனக் கேட்டு திரௌபதி மாலை

யிட்ட சருக்கத்தில் வந்ததுங் காண்க. பாண்டவர் வனவாசஞ் செய்கையில், ஒருநாள் துரியோதனன் தன் பெருமையைப் பாராட்டிப் பாண்டவரை அழுங்கச் செய்யவேண்டு மென்று ஆடம்பரத்துடனே அருகிற்சென்றபோது, இந்திரனேவலால் சித்திரசேனனென்னுங் கந்தருவராசன் வந்து துரியோதனனைக் கயிற்றாற் கட்டி வானத்தில் தூக்கிக்கொண்டுபோக, அப்பொழுது கர்ணன் முதலாயினோர் எதிர்த்துப்பொருது தோற்று ஓட, பின்பு துரியோதனனது பரிதாபகரமான நிலைமையை அவனது பரிவாரத்தாலறிந்த தருமபுத்திரனது கட்டளையால் வீமன் அருச்சுனனோடு சென்று கந்தருவனை வென்று துரியோதனனை மீட்டனனென்பது பின்னிரண்டடியிற் குறித்த கதை.

அங்கிவேச முனிவனிடத்தில் துரோணாசாரியனுடன் வில்வித்தையைக் கற்றுவந்தபோது 'எனக்கு இராச்சியங் கிடைத்த பின்னர்ப் பாதி உனக்குப் பங்கிட்டுக் கொடுப்பேன்' என்று அவனுக்கு வாக்குத்தத்தஞ் செய்திருந்த பாஞ்சாலராசனாகிய துருபதன் பின்பு ஒரு காலத்தில் அத்துரோணன் தன் குழந்தைக்குப் பாலுக்காகப் பசு வேண்டுமென்று சென்று கேட்டபொழுது முகமறியாதவன் போல் 'நீ யார்?' என்று வினவிச் சில பரிகாச வார்த்தைகளைச் சொல்லிச் சபையிற் பங்கப்படுத்த, அப்பொழுது அவன் 'என் மாணாக்கனாகிய இராசகுமாரனொருவனைக் கொண்டு உன்னை வென்று கட்டிக் கொணரச் செய்து உன் அரசையுங் கைக்கொள்வேன்' என்று சபதஞ் செய்துவந்து, பின் அங்ஙனமே அருச்சுனனைக் கொண்டு பங்கப்படுத்தி அப் பிரதிக்ஞையை நிறைவேற்றிவிட, யாகசேனன் துரோணன் மீது மிகக் கறுக்கொண்டு அவனைக்கொல்லும்பொருட்டு ஒரு புத்திரனும், அருச்சுனனது பலபராக்கிரமங்களைக் கண்டு மகிழ்ந்து அவனுக்கு மணஞ்செய்து கொடுக்கும் பொருட்டு ஒரு புத்திரியும் உதிக்கவேண்டும்' என்று புத்திரகாமயாகஞ் செய்விக்க, அவ்வேள்வித் தீயினின்றும் திருஷ்டத்யும்நனும், திரௌபதியுந் தோன்றினராதலின், 'கனற்றோன்றிய தோகை' எனப்பட்டாள்.

ஆசாரிய சிஷ்யக்கிரமத்தை அனைவரும் அறிந்து அனுஷ்டிக்கவுய்யுமாறு சிஷ்யனுங் குருவுமாகிப் பதரிகாச்சிரமத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவின் அமிசமாகிய நரன் நாராயணன் என்னும் முனிவர்களே இங்கு அருச்சுனனும் கிருஷ்ணனுமாகத் தோன்றினதனால், நரனென்று அருச்சுனனுக்கு ஒரு பெயர். இனி, நரனென்னும் மனிதனை யுணர்த்தும் பெயர், சிறப்பாய், அம்மனிதருட் சிறந்த அருச்சுனனை உணர்த்துவதெனக் கொள்ளலு மொன்று. வெம்மை - கனலுக்கு இயற்கை யடைமொழி; இனம்விலக்க வந்ததன்று. தோகையென்னும் மயில் வாலின் பெயர்; அதனையுடைய மயிலுக்குச் சினையாகுபெயரும், அம்மயில் போன்ற சாயலையுடைய பெண்ணுக்கு உவமையாகுபெயருமாதலால் இருமடியாகுபெயர். கனற்றோன்றிய தோகையென்றது மனிதர் வயிற்றிற் பிறவாத அவளது தெய்வத்தன்மையை விளக்கும். (மலர்களைக்கொண்டு) தொடுக்கப்படுவது தொடை எனக் காரணக்குறி. 'அத் தொடை

யல்' என்ற பாடத்துக்கு அகரச்சுட்டு பிரசித்தியைக் காட்டிற்றென்க; சூட்டிய அந்நாளில் என இயைத்தலுமாம். நாம் - அச்சமுணர்த்தும் உரிச்சொல்; இதன்மேல், அ - சாரியை. அம் - சாரியை; மவ்வீறுற்றழிந்தசினும் அமையும்; இனி, நாம் என்பதை உரிச்சொல்லடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சமெனக் கொள்ளலுமாம். நாமம் எனப்பிரித்து பிரசித்தமான என்றுவது, புகழைத் தருகிற என்றுவது கொள்ளினுமாம். அடா - இகழ்ச்சி பற்றிவரும் முன்னிலை யொருமை யாண்பால் இடைச்சொல். இதன் பெண்பால் - அடி. தாமம் - குடையிற் சுற்றிலும் தொங்கவிடப்படும் முத்து மாலைகளுமாம். நீதி தவறுது புகழோடு கூடிய அரசாட்சியை வெண்குடை யென்றல் கவிமரபு. காவலின்பெயர் - இலக்கணையாய், இங்கே கட்டையுணர்த்திற்று. இனி, அடா நரன் - உனக்கு ஏற்றவனல்லாத அருச்சுனனென்றுமாம். அடர் நரன், மீட்ட காளிலும் என்றும் பாடம். (18)

19. ஒருதன்மா நெடுந்தேரினை யறிவுருவுத்தரன் விரைந்தூர
நெருநலானிரைகவர்தருமுகத்தினுநின்றனை நெடும்போது
மருநருவுமிழ்துழாயவன்றோர்விடமலையுநாள்வயவாளி
வெருநர்மேல்விடாவிசயனை நீயலால்வெல்லவல்லவருண்டோ.

(இ - ள்.) ஒரு - ஒன்றுன, தன் - தனது, மா - பெரிய, நெடு - உயர்ந்த, தேரினை - இரதத்தை, அறிவுரு உத்தரன் - (செலுத்துதற்கு) அறியாத உத்தரகுமாரன், விரைந்து ஊர - துரிதமாகச் செலுத்த, நெருநல் - நேற்று, ஆன் நிரை - பசுக் கூட்டங்களை, கவர்தரு - (அருச்சுனன்) மீட்டுக்கொண்டு போன, முகத்தினும் - போர் முகத்திலும், நெடுபோது நின்றனை - வெகுநேரம் (அருச்சுனன் முன் நீ எதிர்த்து) நிலைநின்றாய்; மரு - வாசனையையும், நரு - தேனையும், உமிழ் - வெளிப்படுத்துகிற, துழாயவன் - திருத்துழாய்மாலையையுடைய கண்ணபிரான், தேர் விட - (தனது) தேரைச் செலுத்த, மலையும் நாள் - (அருச்சுனன் இனிப்) பெரும்போர் செய்யும்பொழுது, வெருநர் மேல் வயவாளி விடா விசயனை - (போரில்) அஞ்சுகிறவர்கள்மீது வலிமையையுடைய அம்பைச் செலுத்தாத தன்மையையுடைய அருச்சுனனை, வெல்ல வல்லவர் - சயிக்க வல்லவர், நீ அலால் உண்டோ - நீ யல்லாமல் (வேறு யாவராயினும்) உளரோ? [எவரும் இல்லைபோலும் எனப் பரிகாசமாகக் கூறியபடி]; (எ - று.) நன்மா நெடுந்தேரினை என்றும் பாடம்.

நெடும்போது நின்றனை என்றது, சிறிது பொழுதாயினும் உறுதியோடு முன்நிற்கவும் மாட்டாமல் ஓடினாய் - என்றதைக் குறிப்பால் உணர்த்தும். விராடநகரத்திற் பாண்டவர் ஒளித்திருத்தல் கூடுமென்று துரியோதனாதியர் அந்நகரத்தின்மேல் படையெடுத்து வடபுறத்திற் சென்று பசுக்களைக் கவர்ந்து கொண்டனர். அதனையறிந்து நிரைமீட்டற்குப் போருக்குவந்த உத்தரகுமாரனுக்குச் சாரதியாய் நின்ற பேடிவடிவமான அருச்சுனன் உத்தரனைத் தேர்செலுத்தச்சொல்லித் தான் போர் செய்து அத்தனை பேரையும் வென்று துரத்திப் பசுக்களைத் திருப்பியோட்டிக்கொண்டு சென்றனன் என

பதுகீழ் விராடபருவத்தில் நிரைமீட்சிச் சருக்கத்தின் வரலாறு. அப்பொழுது கர்ணன் அருச்சுனனை எதிர்க்கமாட்டாமல் தோற்றோடினன் என்பதைக் கீழ் அச்சருக்கத்தில் "இம்முறை வந்து வந்தெதிர்ந்து வெஞ்சமர், மும்முறை முறிதலும் முனிவன்மாமகன், அம்முறை முதுகிடும் அருக்கன்மைந்தனை, தெம்முறைமையிற் சில வார்த்தை செப்புவான்" என்ற கவியாலும் உணர்க. போர்த்தொழிலையும் போர்க் குதிரை செலுத்துந் தொழிலையுஞ் சிறிதும் அறியாத அதைரியசாலியான உத்தரனென்னுஞ் சிறுவனைப்பேருக்குச் சாரதியாக வைத்துக் கொண்டு தானே சாரதியும் ரதியுமாக வேறுதுணையின்றித் தனியே வந்து போர் செய்த காலத்திலும் அருச்சுனனை வெல்லமாட்டாத நீயோ, போர்த் தொழிலையும் போர்க் குதிரை செலுத்துந் தொழிலையும் முழுவதுமறிந்த தந்திரசாலியும் மிக்க தைரியமுடையவனுமான கண்ணபிரானைச் சாரதியாக வைத்துக்கொண்டு பெருஞ் சேனையோடு வந்து அருச்சுனன் எதிர்த்துப் பெரும்போர் செய்யும்பொழுது அவனை வெல்வாய்? என்றவாறு.

மா நெடு - ஒருபொருட்பன்மொழியாய், மிகப்பெரிய என்றலுமாம்; இனி, மா - குதிரை பூட்டிய எனினுமாம். நெருநல் - இறந்த காலங் குறிக்கும் இடைச்சொல்; இங்கே, நெருநல் என்றது, மிகச் சில நாளுக்கு முன் என்றவாறு. முகத்தின் - போர்க்களத்தின் முன்னிடத்திலென்றபடி. அறிவுரு உத்தரன் என்றது, உணர்வு தோன்றுத மிக்க இளம்பிராயத்தையுடையவனென்பதைக்குறிக்கும். உத்தரன் - மச்சதேசத்தரசனை விராடனது இளைய குமாரன்; மூத்தமைந்தன் பெயர், சுவேதன், 'வயவாளிவெருநர்மேல் விடா விசயன்' என்றது, அவனது, தரும யுத்தத்தைக் குறிப்பிக்கின்றது. கீழ் நிரைமீட்சியில் "அரிவையர் வெஞ்சமரஞ்சுவோர் பெருங், குரவ ரென்றிவர்களைக் கோறல் பாவமே" என்றதனாலும், போரில் அஞ்சுபவர்மேல் அம்பு செலுத்துதல் அதருமமாதல் அறிக. 'என்று' என இறுதியில் வருவித்து, அடுத்த கவியில் 'புகல்' என்பதனோடு இயைக்க. இங்கே 'வயவாளி வெருநர்மேல் விடா விசயன்' என்றதனால், நீ அவனை எதிர்த்து வெல்லமாட்டாது அஞ்சிப் புறங் கொடுத்து ஓடுகையில் தருமம் நோக்கி அவன் உன்மேல் அம்பு செலுத்தாமையின், நீ ஒருகால் உய்தல் கூடியதேயன்றி, இன்றுயின், உயிர்த்திருக்கமாட்டாயென்றதாம். உத்தரகோக்கிரகண காலத்திலேயே ஒழிந்திருப்பா யென்றபடி. விசயனை நீயலால் வெல்ல வல்லவருண்டோ - விசயனை வெல்ல நின்னால் ஆகாது. ஆனிரை - ஒன்றன்கூட்டத் தற்கிழமைப்பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத்தொகை. தேரினை ஊர என இயையும். (19)

பாண்டவர்க்குப் பாகமில்லை யென்று துரியோதனன் கூற, உலூகன் பாண்டவரிடம் செய்தி கூறுதல்.

20. கங்கைமாமகனிவையிவைபுகலவுங்கன்னனைக்கசிந்துட்கொண்
டங்கைகொட்டிநக்கிருந்தவந்தணனையுமவமதித்தெமதேபார்
தங்கள்கானகந்தமதெனப்புகன்றனன்சர்ப்பகேதனனந்தப் [ஞன்.
பங்கயாசனமுனிவனுமீண்டுபோய்ப்பாண்டவர்க்கவைசொன்

(இ - ள்.) கங்கை மா மகன் - கங்காதேவியின் சிறந்த குமாரனை வீடுமன், இவை இவைபுகலவும் - இந்த இந்த வார்த்தைகளைச் சொல்லவும், (சிறிதும் லக்ஷ்யஞ் செய்யாமல்), சர்ப்ப கேதனன்-பாம்புக் கொடியையுடைய துரியோதனன், கன்னனை கசிந்து உள்கொண்டு - கர்ணன் வார்த்தையையே விரும்பிக் கொண்டாடி, இருந்த அந்தண னையும்-(அங்குத் தூதனாய் வந்து) வீற்றிருந்த உலூகமுனிவனையும், அம் கை கொட்டி நக்கு அவமதித்து - அகங்கைகளைத் தட்டிச் சிரித்துப் (பரிகாசஞ் செய்து) அலக்ஷ்யம் பண்ணி, 'பார் - இந்த ராச்சியம், எமதே-எங்களுடையதே; தங்கள் கான் அகம் - பாண்டவர் கள் தாங்கள் இவ்வளவு காலம் வசித்திருந்த காட்டினிடம், தமது - அவர்களுடையதேயாம், என-என்று, புகன்றனன் - சொன்னான்; (அதுகேட்டு உடனே), அந்த பங்கயம் ஆசனம் முனிவனும் - திரு மாலின் திருநாபித் தாமரை மலரைத் தங்குமிடமாகவுடைய பிரம தேவனைப் போன்ற அவ்வுலூக முனிவனும், மீண்டுபோய் - திரும்பி (உபப்பிலாவியத்துக்கு)ச் சென்று, அவை - அங்கு நடந்த அவ்வர லாறுகளை, பாண்டவர்க்கு சொன்னன் - பாண்டுகுமாரர்களுக்குச் சொல்லியருளினான்; (எ - று.)

'இவையிவை' என்றது, கீழிரண்டு கவிகளிலும் கூறியவற்றை. கசிந்து உட்கொண்டு - அன்புகொண்டு அங்கீகரித்து என்றபடி. அகம் + கை = அங்கை: "அகமுனர்ச் செவி கை வரின இடையன கெடும்" என்னுஞ் சூத்திர விதி. இனி, அம் கை-அழகிய கை என்று மாம். இராச்சியபாகம் வேண்டுகிற பாண்டவரிடத்து உள்ள அலட்சியத்தையும் பரிகாசத்தையும் அவர்களுக்குத் தூதனாய் வந்த உலூகன்மேற் காட்டினான் துரியோதனன். பங்கயம் - சேற்றில் முளைப்பது என்று பொருள்: காரணவிடுகுறிப்பெயர்; பங்கய மென்னுங்கொடியின் பெயர், அதன் மலரைக் குறித்தலால், பொரு ளாகுபெயர்: இதுபோல்வனவற்றை முதலுக்குஞ் சினைக்கும் பொது வென்பாரு முளர். உலூகனுக்குப் பிரமன் உவமை - தூய்மைக்கும் சிறந்த அறிவுக்கும், எப்பொழுதும் வேதமோதுதற்கும், நல்லொழுக் கத்துக்கு மென்க. பங்கயாசன முனிவன் - உவமைத்தொகை. இவை யிவை' என்ற அடுக்கு, பன்மைப் பொருளது. இனி, பங்கயாசன முனிவன் என்பதற்கு - (யோகத்துக்குரிய அங்கங்கள் எட்டனுள் ஒருவகையிற் சேர்ந்த) பதுமாசனத்தையுடைய முனிவனென்றும் உரைக்கலாம்; பதுமாசனமாவது-இருதொடையின் மேலும் இரண்டு உள்ளங்காலையும் மாறி மேல்தோனற வைத்து உட்காரும் நிலை. (20)

அருச்சுனனைத் தன்னிடம் வரும்படி கண்ணன் உலூகனிடம் செய்தி கூறியனுப்புதல்.

21. ஆங்கவர்க்கிவனவணிகழ்ந்தனவெலாமருந்தகையுடன்சொல்லி
யீங்குவந்தெழில்யாதவற்கியம்பலும்யாதவன்மகிழ்வுற்று
வாங்குவெஞ்சிலைவிசயனைவிரைவினில்வரவிடுகெனமீள
வோங்குமாதவவுலூகனைப் போக்கினனவனும்வந்துரைசெய்தான்.

(இ - ள்.) இவன் - உலூகன், ஆங்கு - அவ்விடத்தில் [உபப்பிலாவியத்தில்], அவர்க்கு - அப்பாண்டவர்களுக்கு, அவண் நிகழ்ந்தன எலாம் - அவ்விடத்து [அத்தினபுரியிலே] நடந்த செய்கைகளையெல்லாம், அருந்தகையுடன் சொல்லி - (பிறருக்கு) அருமையான தகுதியுடனே சொல்லி, ஈங்கு வந்து-இவ்விடத்தில் [துவாரகையில்] வந்து, எழில் யாதவற்கு - அழகையுடைய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு, இயம்பலும்-சொன்னவளவிலே, யாதவன்-அந்தக் கண்ணபிரான்,—மகிழ்வு உற்று - (அதுகேட்டு) மகிழ்ச்சியடைந்து, 'வாங்கு வெம் சிலீ விசயனை-வளைந்த கொடிய வில்லையுடைய அருச்சுனனை, விரைவினில் வர விடுக-சீக்கிரத்தில் (இவ்விடம்) வரும்படி அனுப்புவாயாக,' என - என்று சொல்லி, மீள-மறுபடி, ஓங்கு மா தவம் உலூகனை - சிறந்த பெருந்தவத்தையுடைய உலூகமுனிவனை, போக்கினன் - (உபப்பிலாவியத்துக்கு) அனுப்பினன்; அவனும்-அவ்வுலூகனும், வந்து - (உபப்பிலாவியத்துக்கு) வந்து, உரைசெய்தான் - கிருஷ்ணபகவான் வரச் சொன்ன செய்தியை அருச்சுனனுக்குச் சொல்லி யருளினன்; (எ-று.)

தகை - தகுதி; இது - தொழிலடியாகப் பிறந்ததாயினும், பொருளாற் பண்புப்பெயர். யாதவன் - யதுகுலத்தில் அவதரித்தவன்; தத்திதாந்தநாமம். துரியோதனன் பாண்டவர்க்கு இராச்சியத்தைக் கொடுத்தற்குச் சம்மதியாதது பாரதயுத்த மூலமாகப் பலரை ஒழித்துத் தான் அவதரித்த தன் காரியமான பூமிபாரநிவிருத்தியை விரைவில் நடத்துதற்குக் காரணமாகுமென்ற கருத்தால், கண்ணன் மகிழ்வு மிகுவானாயினன். அவர்க்கு அவண் நிகழ்ந்தன எலாம் - அப்பாண்டவர்கள் விஷயமாக அங்கு நடந்த வார்த்தைகளையெல்லாம், அருந்தகையுடன் சொல்லி - (பிறரிடத்தில்) அருமையான நற்குணங்களையுடைய தருமனுடனே கூறி என்று உரைப்பினும் அமையும்; இவ்வுரைக்கு, அருந்தகை - பண்புத்தொகையன்மொழி. தகையுறச் சொல்லி என்றும் பாடம். (21)

உலூகன்தூது சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது

வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம்.

அதாவது - வசுதேவகுமாரனை கண்ணபிரானைத் தம்தமக்குப் போரில் ஏற்ற துணையாகும்படி துரியோதனனும் அருச்சுனனும் ஒருங்கே சென்று கூப்பிட்ட வரலாற்றைக் கூறும் பாகமென்று பொருள். வாஸுதேவன் - வசுதேவகுமாரன்; காரணப்பெயர். இது திருமாலின் திருநாமங்களுள் ஒன்று. வாசுதேவனை யழைத்த என இயையும். படை - போர்செய்தல், பகைவரை யழித்தல்; சேனை யென்றும் பொருள்.

கடவுள் வணக்கம்.

1. அராவணை துறந்துபோந்தன்றசோதைகண்களிப்பநீடு
தராதலம்விளங்கவெண்ணெய்த்தாழிசூழ்தரநின்றுடிக்
குராமணங்கமழுங்கூந்தற்கோவியர்குரவைகொண்ட
புராதனன்றனையேயேத்தும்புனிதர்தாள்போற்றிசெய்வாம்.

(இ - ள்.) அரா அணை - ஆதிசேஷனுகிய சயனத்தை, துறந்து - விட்டு, போந்து - (வடமதுரையில் கண்ணனுக) வந்து அவதரித்து, அன்று - அக்காலத்தில், அசோதை கண் களிப்ப - (தன்னைவளர்க்கிற தாயாகிய) யசோதைப் பிராட்டி கண்களாற்கண்டு ஆனந்தத்தையடையவும், நீடு தராதலம் விளங்க - நீண்ட பூலோகத்தினிடம் செழிப்பையடையவும், வெண்ணெய் தாழி சூழ்தர நின்று ஆடி - வெண்ணெய் வைக்கும் பாத்திரத்தைச் சூழ்ந்து கூத்தாடி, குரா மணம் கமழும் கூந்தல் - குராவென்னும் மரத்தின்மலர் நறுமணம் வீசப்பெற்ற தலைமயிரையுடைய, கோவியர் - இடைப்பெண்களுடனே, குரவைகொண்ட - குரவையென்னுங் கூத்தை ஆடியருளின, புராதனன் தன்னையே - மிகப் பழையவனான திருமாலையே, ஏத்தும் - (எப்பொழுதும்) வணங்குகின்ற, புனிதர் - பரிசுத்தர்களான அடியார்களது, தாள் - திருவடிகளை, போற்றி செய்வாம் - (யாம்) வணங்கித் துதித்தல் செய்வோம்; (எ - று.)

சர்ப்பங்களுக்குத் தலைவனை ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷன் திருமாலுக்குப் படுக்கையாதலை "சென்றுற் குடையா மிருந்தாற் சிங்காசனமாம், நின்றுல் மரவடியாம் நீள்கடலுள்—என்றும், புனையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும், அணையாம் திருமாற்கு அரவு" என்ற பொய்கையாழ்வார் பாசுரத்தாலும் அறிக. 'அராவணை துறந்துபோந்து' என்றது, "ஆதியஞ் சோதியுருவை யங்குவைத்து இங்குப்பிறந்த" என்றபடியே திருப்பாற்கடலில் தமது மூலகாரணமான வடிவம் நிற்க, தேவர்கள் வேண்டுகோளால் அதில் நின்று அமிசமாய் இங்கே அவதரித்ததை. இங்கு அவதரித்த விடத்தில் ஆதிசேஷன் பலராமனைத் தோன்றி உடன் இருந்தாலும், தமக்கு ஏற்ற திருப்பள்ளி மெத்தையாகும் தன்மை இல்லையாதலால், 'அராவணை துறந்து' என்றது. அசோதை - (தனது நற்குண நற்செய்கைகளால் தான் பிறந்த குலத்துக்கும் புகுந்த குலத்துக்கும்) புகழைத் தருபவளென்று பொருள்; இவள் - வடமதுரைக்குச் சமீபத்திலுள்ள கோகுல பிருந்தாவனம் எனப்படுகிற திருவாய்ப்பாடியிலிருக்கிற இடையர்களுக்கெல்லாந் தலைவரான நந்தகோபர்க்கு மனைவி. வசுதேவரும் தேவகியும் கம்சனால் சிறையில் இருத்தப்பட்டுத் தலைபூண்டிருக்கையில், திருமால் தேவகியினிடம் எட்டாவது கருப்பத்தில் கண்ணனுய் அவதரிக்க, அக்குழந்தையைக் கம்சன் கொன்றுவிடக் கூடுமென்ற அச்சத்தால் தாய் தந்தையர் அத்தெய்வக் குழவியின் அனுமதிபெற்று, அந்தச் சிசுவை அது பிறந்த நடுராத்திரிலேயே நந்தகோபரது திருமாளிகையிலே இரகசியமாகக் கொண்டு சேர்த்துவிட்டு அங்கு அப்பொழுது யசோதைக்கு மாயையின் அமிசமாய்ப் பிறந்திருந்ததொரு பெண் குழந்தையை எடுத்துக்

கொண்டு வந்துவிட, அதுமுதல் கம்சனைக் கொல்லுகிறவரையில் இளம்பருவத்திலெல்லாம் கண்ணபிரான் அவ்வாய்ப்பாடியிலேயே பலவகைத் திருவிளையாடல்கள் புரிந்து வளர்ந்தருளினனென்பது வரலாறு. குடக்கூத்து, குரவைக்கூத்து முதலியன - இடையர்கள் தமது செல்வச் செருக்குக்கு அறிகுறியாகவும், பெரியோர்கள் கொண்டாடவும், தமது வாசஸ்தானமான முல்லை நிலமும் அதிலுள்ள பசுக்கள் முதலிய செல்வங்களும் எக்குறையுமின்றிச் செழித்துவளரவும் ஆடுவனவாதலால், 'யசோதை கண்களிப்ப நீடுதராதலம் விளங்க' எனப்பட்டது.

குரவம் முல்லைநிலத்து மலராதலால், 'குராமணங்கமழுங் கூந்தற் கோவியர்' என அதனை எடுத்துக் கூறினர். குராவென்னும் மரத்தின் பெயர், பூவுக்கு முதலாகுபெயர், பசுக்களைக் காப்பவனென்னுங் காரணத்தால் இடையனுக்கு வடமொழியில் கோபனென்று பெயர்; அதன் பெண்பாலான கோபீ என்பது விகாரப்பட்டுக் கோவியென நின்று பலர்பால் விகுதியேற்றது. குரவையாவது - கைகோத்தாடுங் கூத்து; "குரவைக்கூத்தே கைகோத்தாடல்" என்பது நிகண்டு. பல நாட்டியப் பெண்கள் வட்டமாய் நின்று விசித்திரமான தாளலயைகளுடன் மெதுவாகவும் உன்னதமாகவும் கூத்தாடுதல், இதனிலக்கணமாம்; குரவையென்பது - காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனுங் கைபிணைந் தாடுவது; 'குரவையென்பது கூறுங்காலைச், செய்தோர்செய்த காமமும்விறலும், எய்தக்கூறு மியல்பிற்றென்ப' எனவும் 'குரவையென்ப தெழுவர்மங்கையர், செங்கிலைமண்டலக் கடகக் கைகோத்து, அங்கிலைகொட்ப நின்றுடலாகும்' எனவுஞ் சொன்னரோதலின்' என்பது, சிலப்பதிகாரத்து அடியார்க்குநல்லாருரை. கண்ணன் கோபஸ்திரீகளுடனே ராஸக்கிரீடை செய்கையில், தான் விரைவாய்ப்பாயும் லாகவ சமத்காரத்தினாலே, தன்னைவிட்டு நீங்க மனமில்லாமல் தன் கையையே தனித்தனி பிடித்திருக்கக்கருதிய அவ்வாயர் மகளிர் யாவர்க்கும் பக்கத்திலிருந்தவன் போலக் காணப்பட்டனனாதலால், கோவியர் குரவை கொண்ட புராதனனென்றது, "ஊருந் திரைப் பொன்னிநன்னீரரங்க வுருப்பலவாய்க், காருந்தடித்துங் கலந்ததுபோ லிடைக்கன்னியர்கள், யாருங்களிக்க விடையிடையே கலந்தின்ப நலங், கூருந்திருநடமாடிய மாயமென் கூறுகவே" என்றபடி ஏககாலத்தில் பலவடிவங்கொண்டு அவர்களிடையிடையே நின்று ஒவ்வொருத்தியது இவ்விருகைகளிலும் தன்கைகளிரண்டும் பொருந்த ஆடினதாகவுங் கூறுப.

புராதனன் - மிகப்பழையவனென்று பொருள்; அநாதிமூர்த்தியென்க. ஏ - பிரிநிலை; இதனால்; தேவாதிதேவனான எம்பெருமானைத் திருவடிதொழுபவர் தேவதாந்தரங்களை அடைதல் கூடாதென்பது விளங்கும். "மறந்தும் புறந்தொழாமாந்தர்" என்றார் திருமழிசையாழ்வாரும். புனிதர்-பரிசுத்தராக்கப்பட்டவர், போற்றி-இங்கே தொழிற்பெயர்; இ - விகுதி. இப்பாட்டால், இந்நூலாசிரியர் தமக்குப் பாகவதர்களிடத்திலுள்ள பரமபக்தியை வெளியிட்

டார். செய்வாம் - தானெருவன் கடவுளை யறிந்து அன்பு கூர்ந்து வணங்கி அப்பயனைத் தான்மாத்திரமே யடைதலினும், சிருஷ்டி தொடங்கித் தன்கோத்திரத்தாரையும் தன்னெடுகூட்டி வணங்கி அவர்க்கும் அப்பயனை யடைவித்தலே சிறந்ததெனக் கருதி அவர்களை உளப்படுத்திய தன்மைப்பன்மை யென்று கொள்ளலாம்: இனி தமது மாணாக்கர்களையும், இந்நூல் படிப்பவர்களையுங் கூட்டிக் கூறியது என்பாருமுளர். உத்தம அங்கமாகிய தலையிலுள்ள கூந்தலின் சிறப்பை எடுத்துக்கூறியது, மற்றை அங்கங்களின் சிறப்புக்கும் உபலக்ஷணம். அசோதைதகண்களிப்ப நீடுதாரதலம் விளங்கப் போந்து என அன்வயித்து, யசோதைப்பிராட்டியின் கண்கள் களிப்பையடையவும், நீண்டபூமி முழுவதும் பாரந்தீர்ந்து விளக்கமடையவுங் கண்ணனுய் அவதரித்து என்றும் உரைக்கலாகும்.

இதுமுதல் இச்சருக்கம் முடிகிறவரையில் இருபதுகவிகள்- பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (22)

அப்போது துரியோதனன் மந்திரிமாரோடு ஆலோசனை செய்தல்.

2. புரோகிதன் றூது வந்து போனபின் புயங்க கேது
விரோசனன்சுதனைக்கங்காசுதனெடும்வெகுளிமாற்றித்
துரோணனைமுதலாமிக்கதொன்மதியமைச்சரோடுஞ்
சரோருகசதனமென்னத்தனித்திருந்தெண்ணினனே.

(இ - ள்.) புரோகிதன் - (உலூகனென்னும்) புரோகிதன், தூது வந்து போன பின் - (பாண்டவர்களிடத்தினின்று) தூதனுப்வந்து சென்ற பின்பு,—புயங்க கேது - பாம்புக்கொடியையுடைய துரியோதனன்—விரோசனன் சுதனை - சூரியனது குமாரனன கர்ணனையும், கங்கா சுதனெடும் - கங்கையின் குமாரனன வீடுமனையும், வெகுளி மாற்றி - கோபந்தணியச் செய்து—(பின்பு)—துரோணனை முதலாம்மிக்க தொல் மதி அமைச்சரோடும்-துரோணாசாரியனை முதலாகவுடைய மிகுந்த பழமையான நல்லறிவையுடைய மந்திரிகளுடனே, சரோருக சதனம் என்ன - தாமரையிலேபோல, தனித்து இருந்து - தனியனுயிருந்து, எண்ணினன் - ஆலோசித்தான்; (எ - று.)

உலூகன் பாண்டவதூதனுகி வந்து போனபின்பு, துரியோதனன் பீஷ்மனுக்கும் கர்ணனுக்கும் உண்டான கோபத்தைத் தணிப்பித்து, துரோணர் முதலிய அமைச்சரோடு தனித்திருந்து ஆலோசித்தனனென்பதாம், 'சரோருகசதனமென்னத் தனித்திருந்து' என்பதற்கு - தாமரையிலை நிர்மலமான பல நீர்த்துளிகளோடு கூடியிருந்தாலும் அவற்றுடன் தான் கலவாமலே யிருத்தல் போல, துரியோதனன் துரோணன் முதலிய குற்றமற்ற பல பெரியோருடன் கூடியிருந்தாலும் அவர்களோடு மனங்கலவாத தன்மையுடையவன் என்று கருத்துக் கூறுவர். சதனம் - இனி, இலக்கு

மிக்கு வாசஸ்தாநமான தாமரை மலரிற்போல, (ஜகுவரியம் மிகுந்த தனது அரண்மனையில்) தனிப்பட்ட மந்திரிகளோடு ஆலோசித்தானென உரைத்தலுமாம். 'தொன்மதியமைச்சர்' என்றது, பலகால மாகப் பலகாரியங்களில் மிகப்பழகி அனுபவமுடைய இயற்கையறிவோடுங் கூடின மந்திரிகளென்றபடி.

துரோணகும்பத்திலிருந்து தோன்றினதனால், துரோணனென்று காரணப்பெயர். ஸரோருகம் - குளத்தில் முளைப்பது; தாமரைக்குக் காரணவிடுகுறிப் பெயர். புஜங்ககேது - வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பாம்பைக் கொடியிலுடையவனென விரிக்க. புஜங்கம் என்பதற்கு-(கால்களில் லாமையால்) மார்பினுற் செல்வதென்றும், வக்ரகதியாய்ச் செல்வ தென்றும் பொருள்; புஜமென்னும் தோளின்பெயர் - மார்புக்கு இலக்கணையாம்; புஜம் - வக்ரம். விரோசனன் - மிகுதியாகப் பிரகாசிப்பவனென்பது பற்றிச் சூரியனுக்குக் காரணக்குறி. அமைச்சர்-அருகிலிருப்பவரென்று பொருள்; அமா - அண்மை: இடைச்சொல். மந்திரிக்குத் தமிழில் 'உழையிருந்தான்', 'உழையன்' எனப் பெயர் வழங்கும். தூது - தூதனுக்குப் பண்பாகுபெயர். (23)

பலதேயத்து அரசர்களை ஒருங்கே சேர்க்குமாறு தூதனுப்பி விட்டுத் துரியோதனன் கிருஷ்ணனையழைக்கத் தானே செல்லுதல்.

8. தேயமெங்கெங்குஞ்செங்கோல்செலுத்துமத்திகிரிவேந்த
ராயவர்தம்மைக்கூட்டவடைவினிற்றூதுபோக்கிக்
காயமுமுயிருமாகிப்பொருடொறுங்கலந்துநின்ற
மாயவன்றன்னைக்கூட்டவளர்மதிற்றுவரைசேர்ந்தான்.

(இ - ள்.) (அங்ஙனம் ஆலோசித்தபின்பு துரியோதனன்),—தேயம்எங்கு எங்கும் - பூமியில் பலபல நாடுகளில்,—செம்கோல் - நீதிதவறுத அரசாட்சியை, செலுத்தும் - நடத்துகின்ற, அத்திகிரி வேந்தர் ஆயவர்தம்மை - பிரசித்தமான ஆஜ்ஞாசக்கரத்தையுடைய அரசர்களை, கூட்ட - (தனக்குப்படைத்துணையாகச்) சேர்ப்பதற்கு, அடைவினில் தூதுபோக்கி - முறையே தூதர்களை அனுப்பிவிட்டு,—காயமும் உயிரும் ஆகிபொருள்தொறும் கலந்துநின்ற மாயவன் தன்னை - எல்லாப்பிராணிகளினிடத்தும் வியாபித்துநின்ற மாயையுடைய ஸ்ரீ கிருஷ்ணபகவானை, கூட்ட - (தனக்குப்படைத்துணையாகச்) சேர்த்துக்கொள்வதற்கு, வளர்மதில் துவரை - ஓங்கின மதில்களையுடைய (அவனது) துவாரகாபுரியை, சேர்ந்தான் - அடைந்தான்; (எ - று.)

மற்றையரசர்களைப் படைத்துணையாகச் சேர்த்துக்கொள்வதற்குத் தூதர்களை அனுப்பிவிட்டு, ஸ்ரீகிருஷ்ணபகவானைத் தனக்குப் படைத்துணையாக அழைப்பதற்குத் துரியோதனன் தானே துவாரகைக்குச் சென்றனனென்பதாம். இக் கவியில் 'போக்கி', 'சேர்ந்தான்' என்ற வினைகளுக்கும், கீழ்க்கவியிலுள்ள 'புயங்ககேது' என்பதை எழுவாய். 'காயமுமுயிருமாகிப் பொருள்

தொறுங் கலந்துநின்ற' என்றது—ஸர்வாந்தர்யாமியாய் எல்லாப் பொருள்களிலும் மறைந்துநின்று தொழில்செய்பவனென்றபடி: சரீரத்தினுள் ஜீவாத்மா இன்றியமையாததாய் மறைந்து நின்று அதனைக்கொண்டு தொழில்களையெல்லாம் நடத்துதல்போல, அந்தச் சீவாத்மாவினுள்ளும் பரமாத்மா இன்றியமையாது மறைந்து நின்று தொழில்களையெல்லாம் நடத்துகின்றனனென்பது நூற்கொள்கை. "திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை, படர்பொருள் முழுவது மாயவையவைதொறும், உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன், சுடர்மிகு சுருதியுளிவையுண்டசுரனே" என்னும் திருவாய் மொழியையும் காண்க. ஆகி - உவமவுருபு. இனி, 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்றபடி காணப்படுந் தோற்றமுடைய உடம்பும் உயிரும் என்ற அனைத்தின் வடிவமாய் எனினும் அமையும். 'வளமதில்' என்ற பாடத்துக்கு - அழகிய மதிலென்க. மூன்று மடியிற்கூறியதுபோன்ற திருமாலுக்குஉரிய அடைமொழிகள், அவனது அவதார விசேஷமான கண்ணனுக்கும் பொருந்தும். எங்கெங்கும் என்ற அடுக்கு - பன்மைபற்றியது. நீதி தவறுத அரசாட்சி கோணுதலில்லாத கோல் போலுதலால், அதனைச் செங்கோல் என்றது - உவமவாகுபெயர்; இதன் எதிர்மொழி - கொடுங்கோல்; வளைவான கோல்போல நீதிகோணிய தென்பதாம். ஆளுகைகைக் கோலென்றும், கட்டளையைச் சக்கரமென்றும் கூறுதல் - கவிமரபு. (24)

இதுமுதல் நான்குகவிகள் - துவாரகாபுரியின் வருணனை: அவற்றுள் இம்முதற்கவி - மதிலின் சிறப்பைக் கூறும்.

4. மாடநீள்வீதிமூதூர்வயங்குமாமதிலின்தோற்றம்
ஏடவிழ்துளபமாலங்கிருந்தனனென்றுகேட்டுச்
சேடன்வந்தநந்தகோடிசெங்கதிர்மணியின்பத்திச்
சூடிகாமகுடத்தோடுஞ்சூழ்ந்ததோர்தோற்றம்போலும்.

(இ - ள்.) மாடம் - பெரிய மாளிகைகளையுடைய, நீள் - நீண்ட, வீதி - தெருக்களையுடைய, முது ஊர் - பழமையான துவாரகாபுரியின் புறத்தில், வயங்கும் - விளங்குகின்ற, மா - பெரிய, மதிலின் - மதிலினது, தோற்றம் - காட்சி, (எத்தன்மையதெனின்),—சேடன் - (திருமாலுக்குச் சயநமான) ஆதிசேஷன், ஏடு அவிழ் துளபம் மால் அங்கு இருந்தனன் என்று கேட்டு - இதழ்கள் விரிந்த திருத்துழாய் மாலையையுடைய திருமால் அந்தகரத்தில் (கண்ணனாய்) எழுந்தருளியிருக்கிறானென்று செவியுற்றறிந்து, அந்த கோடி - அநேக கோடிகளான, செம் கதிர் மணியின் பத்தி சூடிகா மகுடத் தோடும் - சிவந்த ஒளிபொருந்திய மாணிக்கங்களின் வரிசைகளோடு கூடிய உச்சிக் கொண்டையையுடைய (தனது ஆயிரம்) முடிகளோடே, வந்து சூழ்ந்தது ஓர் தோற்றம் - வந்து சூழ்ந்ததாகிய ஒருகாட்சியை, போலும் - ஒக்கும்; (எ - று.)

மதிலினது வனப்பு பருமை மீட்சிகளுக்கு - ஆதிசேஷனது உடம்பின் வனப்பு பருமை மீட்சிகளும், காஞ்சில் முதலாக மதிலின்

மீது உயர்ந்து தோன்றுகிற உறுப்புக்களுக்கு - ஆதிசேஷனது சூட்டோடுகூடிய தலைகளும், மதிலின்மேல் இழைக்கப்பட்டுள்ள இரத்தினங்களுக்கு ஆதிசேஷனது தலையிலுள்ள மாணிக்கங்களும் உவமையாம். இங்கு ஆதிசேஷன் வருவதற்கு, 'ஏடவிழ்துளபமாலங்கிருந்தனன் என்றுகேட்டு' எனக்காரணங் கற்பித்தபடி, இது - தற்குறிப்பேற்றவணி. சராசந்தனும் காலயவனனும் ஏககாலத்தில் மதுரையில் வந்து எதிர்த்தால் யாதவர்களுக்கு நாசமுண்டாகக் கூடுமென்று கருதிக் கண்ணன் மதுரையிலுள்ள குடிகளை வேற்றிடத்திற் சேர்ப்பிக்கும் பொருட்டுச் சமுத்திரராசனைப் பன்னிரண்டு யோசனை தூரம் இடம் விடும்படி கேட்டு அவ்விடத்தில் மிகவும் அழகாய்ப் புதிதாக நிருமித்துவைத்த துவாரகா நகரத்தை 'மூதூர்' எனப் பழையதாகக் கூறினது, அந்நகரம் பகவானது சங்கற்பத்தால் செயற்கைபோலத் தோன்றாமல் சிருஷ்டிகாலத்தில் இயற்கையாய்த் தோன்றினதுபோல அமைந்ததாதலினென்க; அன்றியும், கண்ணனது பழைய இராசதானியான மதுராபுரிபோலவே எல்லாம் அமைந்ததாதலின் மூது சென்றதாகவுங் கொள்ளலாம்.

மாடம் - உபரிகை வீடு. தோற்றம் - தோன்றும் நிலை. சேடன் என்ற சொல்லுக்கு-(பிரளயகாலத்திலும் அழியாது) மிகுபவனென்று பொருள்; நித்திய னென்று கருத்து: சேஷித்தல் - விஞ்சுதல். இனி, சேடனென்பது - "சென்றுற்குடையாம் இருந்தாற் சிங்காதனமாம், நின்றுல் மரவடியாம் நீள் கடலுள்—என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம், திருமாற்கரவு" என்றபடி திருமாலுக்குப் பலபடியாக சேஷவிருத்தியை [அடிமைத்தொழிலை]ச் செய்வதால் வந்த பெயரெனினும் அமையும். மகுடம் என்னும் சொல், இங்கே தலைக்கு இலக்கணை. (25)

இது - அகழியின் அமைதி கூறுகின்றது.

5. கார்க்கடல்வண்ணன்றன்பாற்கண்டுயிலொழிந்துபோந்து
மேற்கடற்றுவரைமூதூர்மேவரும்விரகுநோக்கிப்
போர்க்கடற்பொறிகள்யாவும்பொறித்தவப்புரிசைதன்னைப்
பாற்கடல்வளைத்ததொக்கும்பன்மலரகழியம்மா.

(இ - ள்.) பல்மலர் - பலவகையான புஷ்பங்களையுடைய, அகழி - அகழியானது,—பால் கடல் - திருப்பாற்கடல், கார் கடல் வண்ணன் - கருங்கடல் போன்ற திருநிறத்தையுடைய திருமால், தன்பால் - தன்னிடத்தில், கண் துயில் ஒழிந்து - யோகநித்திரை செய்தலைவிட்டு, போந்து - சென்று, மேல் கடல் துவரை மூதூர் மேவரும் - மேற்கடலிலேயுள்ள துவாரகையாகிய பழைய நகரிலே எழுந்தருளியிருக்கிற, விரகு - உபாயத்தை, நோக்கி - பார்த்து, —போர் கடல் பொறிகள் யாவும் - போராகிய கடலைக் கடத்தற்கு உரிய (ஆயுதரூபமான) பலவகை யந்திரங்களையும், பொறித்த - தாங்கிய, அ புரிசை தன்னை - அந்த (த்துவாரகாநகரத்தின்) மதிலை, வளைத்தது - வந்துசூழ்ந்ததை, ஒக்கும் - போலும்; (எ-று.)—அம்மா - சற்றசை; அவ்வகழியின் ஆழம் பரப்பு முதலியவற்றைக் கருதின வியப்புப்பற்றி வந்ததுமாம்.

திருப்பாற்கடல் தனது நடுவிற் பள்ளிகொள்ளுகின்ற திருமால் அவ்விடத்தைவிட்டு இந்தத் துவாரகாபுரியில் வந்திருக்கிறு னென் பதைக் கேள்வியுற்று இங்குத்தானே வந்து இந்நகரத்து மதிலைச் சூழ்ந்தது போன்றுள்ளது, அந்தத் துவாரகாநகரியின் மதிலைச் சூழ்ந்துள்ள அகழி யென்க. இதுவும் தற்குறிப்பேற்றவணி. அவ் வகழி நீரின் ஆழ்சி, அகற்சி, நீட்சி, தெளிவு என்பவற்றிற்குப் பாற்கடல் உவமையாம். ''வாளாற் காய்ந்தே கடந்தான் பகை வேந்தே'' என்றாற்போல, 'போர்க்கடற்பொறிகள்' என்றார்; இனி, போர்க்கு அடல் எனப் பதம்பிரித்து, போர்செய்தற்கு வலிமையை யுடைய யந்திரங்களென்றுமாம்; பொறிகள் - நூற்றுவரைக்கொல்லி முதலாகச் சிந்தாமணியிலும் பிற நூல்களிலுங் கூறப்பட்டவை. கண் துயில் - எல்லாப்பொருள்களையும் மனத்தாற்கண்டுகின்றே, வெளிக்கு உறக்கமாகப் பாவனைகாட்டும் அறிதுயில். பன்மலர் - தாமரை முதலியன. அகழப்படுதலின், அகழியென்று காரணப் பெயர்: அகழ்தல் - தோண்டுதல். விரகு - மாயை; தந்திரம். (26)

இது - கொடிகளின் காட்சி.

6. ஈண்டுநீவரினுமெங்களெழிலுடையெழிலிவண்ணன்
பாண்டவர்தங்கட்கல்லாற்படைத்துணையாகமாட்டான்
மீண்டுபோகென்றென்றந்தவியன்மதிற்குடுமிதோறுங்
காண்டகுபதாகையாடைகைகளாற்றடுப்பபோன்ற.

(இ - ள்.) வியன் - விசாலமான, அந்த மதில் - அந்நகரத்து மதில்களின், குடுமிதோறும் - சிகரங்களிலெல்லாம், காண் தகு - காணுதற்குத்தக்க [மிக அழகிய], பதாகை ஆடை - கொடிச் சீலைகள்,—'ஈண்டு நீ வரினும்-இந்நகரத்திற்கு நீ வந்தாலும், எழில் உடை - அழகையுடைய, எங்கள் எழிலி வண்ணன் - மேகம்போன்ற திருநிறத்தையுடைய எங்கள் தலைவனை கண்ணபிரான், பாண்ட வர்தங்கட்கு அல்லால்-பாண்டவர்களுக்குப் (படைத்துணையாவனே) அல்லாமல், படை துணை ஆகமாட்டான் - (உனக்குப்) போருக்கு உதவியாகமாட்டான்; (ஆதலால், நீ இங்குவருவதிற் பயனில்லை); மீண்டு போகு - திரும்பிப் போய்விடு, என்று என்று - என்று என்று கைகளினால் பலமுறை தெரிவித்து, கைகளால் தடுப்ப - (தமது) அசைத்து (த் துரியோதனனது வருகையை)த் தடுப்பவற்றை, போன்ற - ஒத்தன; (எ - று.)

துரியோதனன் அந்நகரத்தினருகில் செல்லும்பொழுது, அந்நக ரத்து மதில்களின்மேலுள்ள கொடிகள் காற்றில் இயற்கையிற் பலமுறை அசைதலை அத்துரியோதனனை நோக்கி நீ இங்கு வாராதே' என்று குறிப்புக் காட்டிக் கைகளால் மறுத்துத் தடுப்பது போன்ற தென வருணித்தார், தற்குறிப்பேற்றவணி. கொடிச்சீலையைக் கையாகவும், துவசதண்டத்தை அந்தக்கைக்கு உடையவனுகவும் கருதுக; பதாகையைக் கைகளாகவும், ஆடையைக் கைவிரல்களாக வும் கொண்டு, மதிலை அவற்றிற்கு உடையவரெனக் கருதுதலும் அமையும். 'ஈண்டு நீ வரினும் என்றது' மற்றையரசர்களுக்குப் போலத் தூது போக்காமல் நீயே நேரில்வரினும் என்பது தோன்ற நின்றது. என்று என்று - அடுக்கு; பலமுறை குறிக்கும். (27)

இது - நகர வருணனை.

7. அருள்குடியிருக்குங்கண்ணனவதரித்தனனென்றெண்ணித்
தரணியின்மீதுவந்துதன்னுடைச்சோதிவைகும்
பரமமாஞானபோகப்பதிகுடியிருந்ததன்ன
திருநகர்வீதிபுக்கான்சித்தசித்துணர்விலாதான்-

(இ - ள்.) 'அருள் குடி இருக்கும் கண்ணன் - கருணை நிலைத் திருக்கப்பெற்ற திருக்கண்களையுடைய திருமால், அவதரித்தனன் - (கண்ணனுகத்) திருவவதாரஞ்செய்தருளினன்,' என்று எண்ணி-என்று மனத்தில் அறிந்து, தன்னுடை சோதி - தன்னுடைய (கண்ணனது எல்லா அவதாரங்களுக்கும் ஆதிகாரணமான) ஒளி வடிவமான சொரூபம், வைகும் - நிலையாய் எழுந்தருளி யிருக்கப் பெற்ற, பரமம் மா ஞானம்-(எல்லா அறிவுகளினும்) மேலான சிறந்த தத்துவ ஞானத்தாற் பெறுதற்கு உரிய, போகம்-நிரதிசயப்பேரின் பத்தைத் தருகிற, பதி - பதவியான வைகுண்ட நகரம், தரணியின் மீது வந்து - பூமியிலே (இழிந்து) வந்து, குடி இருந்தது அன்ன - குடியிருந்ததைப் போன்ற, திரு நகர் - சிறந்த துவாரகா நகரத் தினது, வீதி - திருவீதியில்—சித்து அசித்து உணர்வு இலாதான்-சித்தின் நிலைமையையும் அசித்தின் நிலைமையையும் அறிதலில்லாத துரியோதனன், புக்கான் - சேர்ந்தான்: (எ - று.)

மிகுந்த இன்பந்தருகிற நகரமாதல்பற்றித் துவாரகையை வைகுந்த நகரம் வந்ததுபோன்றதென்றார்: முதலடி - இதற்குக் காரணங் கற்பித்தவாறு. தற்குறிப்பேற்றவணி. முத்திதரும் நகரம் ஏழனுள் துவாரகை ஒன்றுதலால், முத்திபெறுதற்குக் காரண மாகிய அந்நகருக்குப் பயனுகிய முத்தியுலகத்தையே உவமை கூறுதல் ஏற்கும்; அன்றியும், திருமால் எழுந்தருளியுள்ள நகரத் துக்கு - அத்திருமாலின் திவ்விய நகரந்தானே உவமை கூறத்தகும். "வெற்றவின்பம் விழைவிப்பான் விண்ணுவந்து வீழ்ந்தென, மற்றை நாடு வட்டமாக வைகுமற்றந்நாட்டரோ" எனச் சிந்தாமணியி லும் நாட்டின் இன்பந்தருதற் சிறப்புக்கு மேலுலகப் பதவியையே உவமை கூறியவாறு காண்க. பிறர்மேற் கண்சென்றவிடத்து அவ் வழியே கருணை நிகழ்தலாலும், கருணைக் குறிப்பு கண்ணின் சோக் கத்தில் காணப்படுதலாலும், 'அருள்குடியிருக்குங் கண்ணன்' என் றது. அவதரித்தல் - அங்கு நின்று இங்கு இழிதல். உயிர் என்றும் நிலைத்திருக்கும் தன்மையையும் உடல் நிலைத்திராததன்மையையும் ஆராய்ந்து அறியாமல், சித்தாகிய உயிருக்கு நற்கதிபெறுதற்கு வேண்டிய நற்றொழில்களுள் ஒன்றையுஞ் செய்தலின்றி, அசித்தாகிய உடம்பை வளர்த்தற்குவேண்டிய பாடுகளையே எப்பொழுதும் பட்டு அலைபவனுதலால், துரியோதனனை 'சித்தசித்துணர்விலாதான்' என்றார். பரமம்ஆம் ஞானம் என்றும் பிரிக்கலாம்; சிறந்ததான அறி வெனக. தரணியென்னும் சொல்லுக்கு - (எல்லாப்பொருள்களையும்) தரிப்பதென்று பொருள். தரணியின்மீது வந்து என்பது-'அவதரித் தனன்' என்றதனோடும் இயைதற்குவற்றாம். சித் என்பதற்கு உணர்வுடையதென்றும், அசித் என்பதற்கு உணர்வில்லாத

தென்றும் பொருள். சித் சேதனம் என்பனவும், அசித்அசேதனம் என்பனவும்-ஒருபொருளன. சித்து-ஆத்மா, அசித்து-தேகம். (28)

ஸ்ரீ கிருஷ்ணன் அப்போது பள்ளிகொண்டிருத்தல்.

8. வந்தமையறிந்துகொற்றவாயிலோர்தம்மைநோக்கி
அந்தன்மாமதலைவந்தாலறிவியாதழைமினென்று
சந்திரனெடுங்கிநிற்பத்தபனனேசரிக்குமாறு
பந்தணையிலாதான்யோகத்துயில்வரப்பள்ளிகொண்டான்.

(இ - ள்.) பந்தணை இலர்தான் - (இயல்பாகவே) பாசங்களின் தொடர்ச்சியில்லாத கண்ணபிரான்—வந்தமை அறிந்து - (துரியோதனன் அருச்சுனனுக்கு முன்பு துவாரகைக்குள்) வந்து சேர்ந்து விட்ட செய்தியை (த் தனது ஞானதிருஷ்டியால்) உணர்ந்து, கொற்றம் வாயிலோர் தம்மை நோக்கி - வெற்றி விளங்கும் (தனது அரண்மனை) வாயில் காவலாளரைப் பார்த்து, 'அந்தன் மாமதலை வந்தால் - பிறவிக்குருடனான திருதராட்டிரனது மூத்த குமாரனான துரியோதனன் இங்கு வந்தால், அறிவியாது - (எனக்கு முன்பு செய்தி) தெரிவிக்காமலே, அழைமின் - (அவனை உள்ளே) வரவிடுங்கள்,' என்று-என்று கட்டளையிட்டு, சந்திரன் ஒடுங்கி நிற்பதபனனே சரிக்கும் ஆறு-சந்திரகலை குறைந்து நிற்கச் சூரியகலையே மிகுதியாக உலாவும்படி, யோகம் துயில் வர - (தனக்கு வழக்கமான) யோகநித்திரை வந்து பொருந்த, பள்ளிகொண்டான் - சயனித்துக்கொண்டான்; (எ-று.)

மூக்கின் இடப்பக்கச் சுவாசத்துக்குச் சந்திரகலை யென்றும், வலப்பக்கச் சுவாசத்துக்குச் சூரியகலை யென்றும் பெயராதலால், சந்திரன், தபனன் என்பன - அக்கலைகளை உணர்த்தின; சாய்ந்த பக்கத்துச் சுவாசம் அதிகப்பட்டும், மற்றைப் பக்கத்துச் சுவாசம் குறைந்தும் நிற்குமாதலால், வலப்பக்கம் ஒருக்கணித்துச் சாய்ந்து படுத்தனனென்பார், 'சந்திரன் ஒடுங்கி நிற்பத் தபனனே சரிக்குமாறு' என்றார்: திருமால் பள்ளிகொள்கையில் வலப்புறமாக ஒருக்கணித்திருத்தல் வழக்கமாதலை "குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி, வடதிசை பின்புகாட்டித் தென்திசை யிலங்கை நோக்கிக், கடல்நிறக் கடவுளெந்தை அரவணைத் துயிலுமா கண்டு, உடலெனக் குருகுமாலோ என்செய்கே னுலகத் திரே" என்கிற திருமாலைப் பாசுரங் கொண்டும், "தாமக்கடையுகத் துள்ளே விழுங்கித்தரித்த பழஞ், சேமப் புவனஞ் செரிக்குமென்றே சிவன்மாமுடிக்கு, நாமப்புனல்தந்த பொற்றா ளரங்கர் நலஞ்சிறந்த, வாமத்திருக்கரமேலாகவே கண்வளர்வதுவே" என்னும் திருவரங்கத்துமாலைச் செய்யுளாலும் அறிக. சந்திரகலை இடைகலை என்பன - இடமூக்கின் நாடிக்கும், சூரியகலை, பிங்கலை என்பன - வலமூக்கின் நாடிக்கும் பெயராம். இனி ஒளியிற்குறைவுள்ள சந்திரன் ஒடுங்கி நிற்க ஒளியில் மிகுந்த சூரியனே சஞ்சரிக்கும்படி என்றது-ஆற்றலிற் குறைவுள்ள துரியோதனன் அழிவுபெற, ஆற்றலில் மேம்பட்ட அருச்சுனனே வென்று வாழும்படி திருவுள்ளத்திற் கருதி என்ற பொருளைப் பிறிதுமொழிதலென்னும் அணியின்

வகையால் விளங்குவதாகக்கொள்ளல் பொருந்தும். எல்லாப் பொருளையும் பற்றினின்றே பற்றற்ற இறைவனென்பார், 'பந்தனை யிலாதான்' என்றார்; தனக்கு இயல்பாகக் கரும சம்பந்த மில்லை யென்பதனோடு, தனக்குச் சரீரமாகவுள்ள சராசரங்களின் கருமத்தின் தொடர்ச்சியும் பகவானுக்கு இல்லையென்பது இதில் விளங்கும்: உடம்பினுள்ளிருந்து தொழில் செய்விக்கிற உயிருக்கு அவ்வுடம்பின் குணமான கருமை செம்மை பெருமை சிறுமை வளர்ச்சி தேய்வு முதலியவற்றின் தொடர்ச்சி இல்லாதவாறு போல, அச்சிவான்மாவினுள்ளிருந்து தொழில்செய்விக்கின்ற பரமான்மாவுக்கும் அவ்வுயிரின் குணங்களாகிய நல்வினை தீவினை முதலியவற்றுள் யாதொரு சம்பந்தமும் இல்லை யென அறிக. அறிவியாது அழைமின் என்றது - முன்னே அருச்சுனனைக் கண்டு அவனுக்குத் தான் படைத்துணையாம்படி அருள்புரியவேண்டு மென்னும் திருவுள்ளத்தால் எனக. 'கொள்கை கொளாமை யிலாதான், எள்கலிராகமிலாதான்" "ஈடுமெடுப்புமிலீசன்" "வேண்டுதல் வேண்டாமையிலான்". "பகைநண்பொடில்லான்" என்றபடி இயற்கையில் இறைவன் விருப்புவெறுப்பில்லாதவனுயினும், அவதாரகாரியமான துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலநத்தின் பொருட்டு ஒருவனிடத்தில் விருப்பும் ஒருவனிடத்தில் வெறுப்புங் காட்டின னென்பது, 'பந்தனை யிலாதான் யோகத்துயில் வரப் பள்ளிகொண்டான்' என்றதில் தொனிக்கும். யோகத்துயில், அறிதுயில், விழிதுயில், துயிலாத்துயில், பொய்த்துயில் என்பன ஒரு கருத்துடையன. தபஸ் என்பதற்கு-(எல்லாப்பொருள்களையும்) தபிப்பவனென்று பொருள். (29)

துரியோதனன் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பள்ளிகொண்ட சயனத்தின் தலைப்பக்கத்தி லிட்ட ஆசனத்திற் சேர்தல்.

8. பொற்புடைப்புனிதன்கோயிற்புறத்தினிலனிகநிற்பச்
சற்பவெம்பதாகைவேந்தன்றடையறத்தனிச்சென்றெய்தி
உற்பலவண்ணன்பள்ளியுணர்தருகாறுமிட்ட
சிற்பவண்டவிசினேறித்திருமுடிப்பக்கஞ்சேர்ந்தான்.

(இ - ள்.) சற்பம் வெம் பதாகை வேந்தன்-பாம்பின் வடிவத்தை யெழுதின பயங்கரமான துவசத்தையுடைய துரியோதனராசன்—பொற்பு உடை புனிதன் கோயில் புறத்தினில் - அழகையுடைய பரிசுத்தமூர்த்தியான கண்ணபிரானது அரண்மனையின் வெளிப்புறத்திலே, அனிகம் நிற்ப - (தனது) சேனை நின்றுவிட—தனி - தான் தனியனாய், தடை அறசென்று எய்தி - தடையில்லாமல் உள்ளே போய்ச்சேர்ந்து, உற்பலம் வண்ணன் பள்ளி உணர்தரு காறும் - கருங்குவளைமலர்போன்ற திருநிறத்தையுடைய அக்கண்ணபிரான் தூக்கம் விழித்தெழுந்திருக்குமளவும், இட்ட - (அங்கு) அமைத்து வைக்கப்பட்ட, சிற்பம் - விசித்திர வேலைப்பாடமைந்த, வள்தவிசின் - அழகிய (பெரிய) சிங்காசனத்தில், ஏறி - விற்றிருந்து, திருமுடி பக்கம் சேர்ந்தான் - (கண்ணபிரானது) அழகிய முடியின் பக்கத்தை அடைந்தான்; (எ - று.)

துரியோதனன் அளவிறந்த செருக்குக் கொண்ட வணங்காமுடி மன்னனுதலால், அங்கு இருந்த ஆசனங்களுள் சிறந்ததான்றன் மேலேறி உட்கார்ந்து அதனைக் கண்ணனது தலைப்பக்கத்தே சேர்த் திருந்தனனென்க. கீழ், 'அந்தன் மாமதலைவந்தா லறிவியாதழைமின்' என்றதனால், தடையறச் சென்று எய்துபவனுனன். இனி, அடிப் பக்கத்தினுஞ் சிறந்த முடிப்பக்கமென்பார், 'திருமுடிப்பக்கம்' என்று சென்றுங்கொள்ளலாம்; திரு - சிறப்பு. பொற்பு - பொலிவுணர்த்தும் உரிச்சொல். பள்ளியென்னும் படுக்கையின் பெயர், துயிலுக்கு ஆகு பெயர். மயிர் - முடியப்படுதலால், முடியென்று தலைக்குப் பெயர். (30)

அருச்சுனன் திருவடிப்பக்கத்தில் வந்துசேர, ஸ்ரீகிருஷ்ணன் முந்துற அவனைக் கடாட்சித்தல்

10. வந்திலன்விசயனென்றுவான்றுயில்புரிந்தவண்ணல்
சிந்தனைசெய்யும்வேளைச்சிந்தையிற்கடியதேரோன்
பந்தனையறுக்கும்பாதபங்கயம்பணிந்துநிற்ப
முந்துறவிழித்துநோக்கிமுகமலர்ந்தருள்செய்தானே.

(இ - ள்.) வான் துயில் புரிந்த அண்ணல் - சிறந்த யோகநித்திரையைக் கொண்டருளின கண்ணபிரான், விசயன் வந்திலன் என்று - (இன்னும்) அருச்சுனன் வந்தானில்லையே யென்று, சிந்தனை செய்யும் வேளை - (அருச்சுனனது வருகையை) நினைத்தல் செய்கிற சமயத்திலே, சிந்தையின் கடியதேரோன் - மனவேகத்தினும் மிக்க வேக முடைய தேரையுடைய அருச்சுனன், (வந்து), பந்தனை அறுக்கும் பாத பங்கயம் பணிந்து நிற்ப - (சரணமடைந்த அடியார்களுடைய) ஊழ்வினைக்கட்டுக்களை அறுத்தருளுகிற செந்தாமரைமலர்போலும் (கண்ணபிரானது) திருவடிகளைச் சேவித்து (அத்திருவடிப்பக்கத்தில்) நிற்க,—(ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி), முந்துற விழித்து நோக்கி - முற்பட (அவ்வருச்சுனனை) விழித்துப் பார்த்து, முகம் மலர்ந்து அருள் செய்தான்-(மகிழ்ச்சியால்) திருமுகமலர்ச்சி பெற்று (அவன் பக்கல்) கருணைபுரிந்தான்; (எ - று.)

'வந்திலன் விசயனென்று' என்பதுவே, வான் துயில் புரிந்ததற்குங் காரணமாம். மற்றையோரது தூக்கம்போலத் தம்மை மறந்து உறங்கும் உறக்கமின்றி எல்லாவற்றையும் அறிந்து நின்றே ஆலோசனையோடு செய்வது யோக நித்திரை யாதலால், வான் துயிலென அதனைச் சிறப்பித்தார். எவ்வளவு தூரத்திலுள்ள பொருளையும் நினைத்தமாத்திரத்தில் மனம் அப்பொருளினிடத்துச் செல்லுதலால், அது - மிக்க விரைவுக்கு உவமை கூறப்படும்; அதனினும் அதிகமான விரைவுடைய குதிரைகளைப் பூட்டிய இரத மென்பார், 'சிந்தையிற் கடிய தேர்" என்றார். சிறந்த வலிய தொரு தேரும், விரைந்த அழகிய நான்கு வெள்ளைக் குதிரைகளும் காண்டவதகனகாலத்தில் அருச்சுனனுக்கு அக்கினிபகவானால் அளிக்கப்பட்டன என அறிக. "உடற் பகையை வேரறுக்கு மொள் வாள்" ஆதலால், 'பந்தனையறுக்கும் பாதம்' என்றார்; ஊழ்வினைத் தொடர்ச்சியை ஒழித்தலைக் கட்டறுத்தலாக உருவகப்படுத்திய

தற்கு ஏற்ப, இருவடியை வாளென்றதது - ஏகதேசவுருவகம். விழித்து நோக்கி அருள் செய்தானென்பது - கிருபாகடாக்ஷம் வைத்தான், கண்ணோட்டஞ் செய்தான் என்றதாம். அருச்சுனன் கண்ணனிடத்தில் மெய்யன்பும் விசுவமு முடையவனுதலால், அவன் காற்கடையில் வணங்கி நின்றனென்க. பங்கயபாதம் - முன்பின்னுகத் தொக்குவந்த உவமைத்தொகை; திருவடியாகிய தாமரையென உருவகமாக்கி உரைத்தற்கு இங்கே இயையின்று; பாதபங்கயஞ் சூடியென வருமாயின் உருவகமாகும். வந்து மாலைப் பணிந்து மன்னையும் வணங்கி நிற்ப, என்ற பாடத்திற்கு - வந்து திருமாலினவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணனை வணங்கிப் பின்பு தனக்கு அண்ணனுகின்ற துரியோதன மகாராசனையும் வணங்கி நிற்க எனப் பொருள் காண்க. வந்து மாலைப் பணிந்து பின்னையும் வணங்கி நிற்ப என்று சில பிரதிகளில் மூன்றுமடி. (31)

அருச்சுனனுல் துரியோதனனது வருகையை யறிந்து ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்கு முகமன் கூறுதல்.

நின்றவனிருந்தவேந்தன்வரவினைநிகழ்த்தநேமிப்
பொன்றிகழ்படையோனந்தப்பொய்த்துயிற்பாயனீங்கி
மன்றலந்தொடையன்மார்பாவரவெமக்குரைசெயாதென்
என்றுரநெருங்கப்புல்லியின்சொலாலுவகைசெய்தான்.

(இ - ள்.) (பின்பு), நின்றவன் - (திருவடிப்பக்கத்தில் வணங்கி) நின்ற அருச்சுனன், இருந்த வேந்தன் வரவினை நிகழ்த்த - (திருமுடிப்பக்கத்தில் பெரிய ஆசனத்தி லேறி) வீற்றிருந்த துரியோதனனது வருகையைச் சொல்லித் தெரிவிக்க, (உடனே), நேமி பொன் திகழ் படையோன் - (சுதரிசனமென்னுஞ்) சக்கரமாகிய அழகு விளங்கும் ஆயுதத்தையுடைய அக்கண்ணன், அந்த பொய் துயில் பாயல் நீங்கி - பொய்யான உறக்கத்தைக் கொள்ளுதற்கு இடமாயிருந்த அந்தப் படுக்கையை விட்டு எழுந்து (மரியாதை செய்து அத் துரியோதனனை நோக்கி), மன்றல் அம் தொடையல் மார்பா - பரிமளத்தையுடைய அழகிய (நஞ்சாவட்டைப்பூ) மாலையைத் தரித்த மார்பையுடைய அரசனே! 'வரவு எமக்கு உரை செயாது என் - (உன்னுடைய) வருகையை நமக்குத் தெரிவியாதது என்ன காரணம்' என்று - என்று சொல்லி,—உரம் நெருங்க புல்லி - (அவனைத் தன்) மார்போடு இறுகத் தழுவி, இன் சொலால் உவகை செய்தான் - இனிய உபசாரவார்த்தைகளைக் கூறி (அவற்றுல் அவனுக்கு) மகிழ்ச்சியை உண்டாக்கினன்; (எ - று.)

தன்னைக் காண வந்து தனது திருவடிப்பக்கத்தில் நின்று தனது திருவருளுக்குப் பாத்திரனை அருச்சுனன், அப்போது துரியோதனன் வந்திருப்பதை ஸ்ரீ கிருஷ்ணனிடம் தெரிவிக்க, அந்தப் பரமன் தான் யோகநித்திரை செய்த அந்தப் படுக்கையினின்று உடனே எழுந்து 'நீ வந்ததை எனக்கு ஏன் அறிவிக்கவில்லை?" என்று அவன் மனமகிழும்படி இன்சொற் கூறி அவனைத் தழுவிக்கொண்டனனென்பதாம். எம்பெருமானுக்குச் சக்கரம்

முதலியன - பகைவர்களுக்கு அச்சஞ்செய்து ஆயுதகோடியிலும், அடியார்களுக்கு அழகு செய்து ஆபரணகோடியிலும் அமைதலால், 'நேமிப்பொன்திகழ்படை' என்றார். பொன் திகழ்தல் - பொன் போல விளங்குதலுமாம். பொய்த்துயிற் பாயல் - 'பொய்யுறக்கங் கொண்டபிரான்'' என்றார் பெருந்தேவனாரும். உரை செய்தல் - சொல்லுதலைச்செய்தல்; என்றது, சொல்லுதலை முன்பு தூதன் மூலமாகச் செய்திதெரிவியாமை, பின்புவாயில் காவலாளராலறிவி யாமை, அதன்பின்பு தான் நேரிலெழுப்பாமை இவையெல்லாவற் றையும் அடக்கி, 'உரைசெயாதென்' என்றார். கீழ்க் களங்கமின்றி அருச்சுனனுக்கு முகமலர்ந்து அருள் செய்ததனினும் வேறுபாடு விளங்க, 'இன்சொலாலுவகை செய்தான்' என்றார்; துரியோதன னுக்கு மகிழ்ச்சியுண்டாக்கினது, சொல் மாத்திரத்தா லென்க. (32)

கிருஷ்ணன் இருவரையும் வந்த காரியத்தை வினவ, இருவரும் தெரிவித்தல்.

12. இருவிரும்வந்தவாறென்னியம்புதிரென்றுவாச
மருவிரிதுளபமாலைமரகதவண்ணன்கேட்பச்
செருவினீயெமக்குவெம்போர்செய்துணையாகவேண்டும்
பொருவிலோயென்றுகொண்டவ்விருவரும்புகன்றகாலை.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) (பின்பு இருவரையும் நோக்கி), வாசம் - பரிமளத் தையும், மரு - தேனையுமுடைய, விரி - மலர்ந்த, துளபம் மாலை - திருத்துழாய் மாலையையுடைய, மரகதம் வண்ணன்-மரகத ரத்தினம் போலும் திருநிறத்தையுடைய ஸ்ரீ கிருஷ்ணன், 'இருவிரும் வந்த ஆறு என் இயம்புதிர்' என்று கேட்ப - நீங்கள் இரண்டுபேரும் வந்த காரியம் யாது? கூறுவீர்' என்று (பொதுப்பட) வினவ—அ இருவரும் - துரியோதனனும் அருச்சுனனும், 'பொருவு இலோய் - ஒப்பில்லாதவனே! நீ—, செருவில்- (இனி நிகழும்) போரில், எமக்கு—, வெம் போர் செய் துணை ஆகவேண்டும் - கொடிய போரைச்செய்யும் உதவியாகவேண்டும்,' என்று கொண்டு புகன்ற காலை - என்று (ஒருபடிப்படச்) சொன்னபொழுதில்—(எ - று.)— 'சொன்னன்' என, மேற்கவியில் முடியும்.

ஒப்பில்லாமை கூறவே, உயர்வில்லாமை தானே விளங்கும். இனி, பொரு விலோய், எனப் பிரித்து. வினைத்தொகையாக, போர் செய்யும் வில்லையுடையவனே யென்றுங் கொள்ளலாம். திருமா லின் வில்லுக்குச் சார்ங்கமென்று பெயர். கொண்டு - அசை; 'என்றுகொண்டினையகூறி' எனக் கம்பராமாயணத்திலுங் காண்க: இது அசையாதலைப் புறனடைச் சூத்திரத்தாற் கொள்க: இனி, என்றுகொண்டு - என்று கருத்தமைத்து என்றலுமொன்று. இருவரும் பொருவிலோய் என விளித்தது, தம்மின் வலியுதவிலை நோக்கி. துரியோதனன் வார்த்தையில் எமக்கு - செருக்குப்பற்றிய உயர்வுத்தன்மைப்பன்மையும், ஆகவேண்டும் - கட்டளைப்பொருள் வியங்கோளு மாகலாம். வாசம் மரு - மிகுந்த வாசனையென

ஒருபொருட்பன்மொழியுமாம். மரகதம் - பச்சை இரத்தினம்: பசுமை கருமை நீலம் இம்மூறங்களுக்கு வேறுபாடு கருதாது ஒற்றுமை நயம்படக்கூறுதல் கவிமரபாதலால், 'மரகதவண்ணன்' என்றார்; "பச்சைமாமலைபோல் மேனி" என்றார் தொண்டரடிப்பொடியாழ்வாரும். (33)

ஸ்ரீ கிருஷ்ணன் தான் பாண்டவர்கட்கே போர்த்துணையாக வேண்டு மென்றல்.

18. உற்றமருதவிசெய்வானுதிட்டிரன்றனக்குமுன்னே
சொற்றனமாங்கணீங்குந்துயிலுணர்பொழுதத்தின்று
விற்றிறல்விசயன்முந்தவிழிக்கிலக்காஞனென்று
பற்றறத்துணிந்துசொன்ஞன்பாண்டவர்சகாயஞனன்.

(இ. ள்.) பாண்டவர் சகாயன் ஆனன் - பாண்டவர்களுக்குத் துணை செய்பவனான கண்ணபிரான்,— (துரியோதனனோக்கி), 'அமர்உற்று உதவி செய்வான் - போரிற் பொருந்தி உதவிசெய்யும் படி, உதிட்டிரன் தனக்கு - தருமபுத்திரனுக்கு, ஆங்கண் - அவ்விடத்தில் (உபப்பிலாவியத்தில்) முன்னே சொற்றனம் - முன்னமே கூறினேம்; (தருமபுத்திரனுக்குப் போர்த்துணை செய்வதாக வாக்குத்தத்தஞ் செய்துவிட்டோ மென்றபடி;) ஈங்கும் - இவ்விடத்திலும், இன்று-இப்பொழுது, துயில் உணர் பொழுதத்து - தூக்கம் விழிக்கும்பொழுதில், வில் திறல் விசயன் - வில்லில் வலிமையையுடைய அருச்சுனனே, முந்த - முற்பட, விழிக்கு இலக்கு ஆனன் - (என்) கண்ணெதிரிற் பட்டான், என்று—, பற்று அற - (தான் படைத்துணையாதலில் துரியோதனனுக்கு இருந்த) ஆசை நீங்க, துணிந்து சொன்ஞன் - உறுதியாகச் சொல்லிவிட்டான்; (எ-று.)

'பற்றறத் துணிந்துசொன்ஞன் பாண்டவர் சகாயஞனன்' என்றது - அருச்சுனனிடம் விருப்பமும் துரியோதனனிடம் வெறுப்புமாகப் பட்சபாதமில்லாமல் தக்க காரணம்பற்றி நடுவு நிலைமையாக நடத்துபவன்போல இங்ஙனம் நிச்சயித்துச் சொல்லிப் பாண்டவர்க்கே துணைவனனன் என்றவாறுமாம். யுதிஷ்டிரன் - போரில் ஸ்திரமாக இருப்பவன். (34)

ஸ்ரீகிருஷ்ணன் படையைத் தொடேனென்று துரியோதனனுக்கு அவன் வேண்டுகோளின்படி வாக்களித்து, படை தொடாத என்னால் யாது பயனென்று அருச்சுனனிடம் விளைவுதல்.

14. முடைகமழ்முல்லைமாலைமுடியவன்றன்னைப்போரிற்
படையெடாதொழிதியென்றுபன்னகதுவசன்வேண்ட
நெடியமாமுகிலுநேர்ந்துநினக்கினிவிசயபோரில்
அடுபடையின்றிச்செய்யுமாண்மையென்னைதியென்ருன்.

(இ - ள்.) (அதுகேட்டு), பன்னக துவசன் - பாம்புக்கொடியையுடைய துரியோதனன், முடை கமழ் முல்லை மாலை முடியவன்

தன்னை - முடை நாற்றம் வீசுகின்ற முல்லைப்பூமாலையைச் சூடிய மயிர் முடியையுடைய கண்ணபிரானை, 'போரில் படை எடாது ஒழிதி என்று - யுத்தகளத்தில் (பாண்டவர் பக்கத்தில்) ஆயுதத்தை யெடாமல் ஒழிவாயாக' என்று சொல்லி, வேண்ட - பிரார்த்திக்க— நெடிய மா முகிலும் - பெரிய கரிய மேகம் போன்ற கண்ணனும், நோக்கு - (அவ்வேண்டுகோளுக்கு) உடன்பட்டு—(அருச்சுனனை நோக்கி), 'விசய - அருச்சுனனே! அடுபடை இன்றி - கொல்லவல்ல ஆயுதத்தை யெடுத்தலில்லாமல், போரில் - யுத்தத்தில், நினக்கு - உனக்கு, (உதவியாக), இனி செய்யும் - இனிமேல் (நான்) செய்யத் தக்க, ஆண்மை - ஆண்தொழில், என - யாது? அறைதி - கூறு வாய்' என்றனன் - என்று சொன்னான்; (எ - று.)

'ஒழிமினென்று' எனப் பிரதிபேதம். முடைகமழ் என்ற அடைமொழி, கண்ணனுக்கு உரியது; முடை - நெய்க்கந்தம்: இடையர்க்கு உரிய இதனை, அவ்விடையர்சேரியில் வளர்ந்த கண்ணனது அடியார்க்கெளிமையை [சௌலப்பியத்தை] விளக்கும் பொருட்டு அக்கண்ணனுக்கு அடைமொழியாகக் கூறுதல், கவி மரபு; கண்ணன் திருவாய்ப்பாடியாகிய முல்லை நிலத்தில் வளர்ந்தவனாதலாலும், அந்நிலத்துக்கு முல்லை உரியதாதலாலும். "மாயோன் மேய காடுறை யுலகம்" என்றபடி அந்நிலத்துக்கு உரிய தெய்வம் கண்ணனாதலாலும், 'முடைகமழ் முல்லைமாலை முடியவன்' என்றது. பங்கம் என்பதற்கு - கால்களால் நடவாதெதென்றும். வலிவாகச் செல்வதென்றும் பொருள்: நெடிய - முன்னே திரிவிக்கிரமாவதார காலத்தில் நீண்ட, அல்லது பெருமைக் குணமுடைய என்றுங் கொள்ளலாம். (35)

அருச்சுனனது உத்தரம்.

15. செருமலியாழியங்கைச்செழுஞ்சுடர்நின்றென்றேரிற்
பொருபரிதூண்டினிற்பூதலத்தரசரொன்றே
வெருவருமியக்கர் விண்ணோர்விஞ்சையரெனினுமென்கை
வரிசிலைகுழையவாங்கிமணித்தலைதுமிப்பனென்றான்.

(இ - ள்.) (அதற்கு அருச்சுனன்), 'செரு - போர்த் தொழிலில், மலி - மிக்குவிளங்குகிற, ஆழி - சக்கராயுதத்தையேந்திய, அம் - அழகிய, கை - வலத்திருக்கையையுடைய, செழுசுடர் - (எல்லா வொளிகளினுஞ்) சிறந்த ஒளி வடிவமான எம்பெருமானே! (நீ), என் தேரில் நின்று - எனது இரதத்தின்மீது (முன்புறத்தில்) எழுந்தருளி, பொரு பரி தூண்டின் - போர் செய்தற்கு உரிய குதிரைகளைச் செலுத்தினால், இந்த பூதலத்து அரசர் ஒன்றே - இந்த நிலவுலகத்தினிடத்துள்ள (மனிதர்களான) அரசர்கள் மாத்திரமோ? (மற்றை எவ்வுலகத்திலுமுள்ள), வெருவரும் - (கண்டவர்) அஞ்சத்தக்க, இயக்கர் - யக்ஷர்களும், விண்ணோர் - தேவர்களும், விஞ்சையர் - வித்தியாதரர்களும், எனினும் - (எதிர்ப்பவர்) எவராயினும், என் கை வரிசிலை-எனது கையிலுள்ள கட்டமைந்தவில்லை, குழைய வாங்கி-வளையும்படி வளைத்து, மணி தலை துமிப்பன்- (அவர்

களது) அழகிய தலைகளைத் துணித்திடுவேன்', என்றான் - என்று கூறினான்; (எ-று.)

இது - தனது வீரவாத முகத்தால் கண்ணனது மகிமையை விளக்கியபடியாம். கண்ணன் வேறொரு தொழிலுஞ் செய்யாது தேர்செலுத்துதல் மாத்திரமே அமையுமென்பது கருத்து; புறவிருளை மாத்திரமே ஒழிக்கவல்ல சூரிய சந்திர அக்கினிய ரென்னும் முச்சுடர்களின் ஒளியெல்லாவற்றினும் மேம்பட்ட ஒளி யென்பார், 'செழுஞ்சுடர்' என்றார். சுடர் என்றது - நித்தியமாய் சுவயம்பிரகாசமான ஞானத்தைக் குணமாகவுஞ் சொரூபமாகவும் உடையவனென்றபடி. இங்கே சுடர் என்றது - சுடர் வடிவான வனுக்குப் பண்பாகுபெயரென்றுவது, தேவர்களை அஃறிணையாலுஞ் சொல்லலாம் என்ற நியாயம் பற்றி வந்த அஃறிணை யென்றுவது, உடைமைக்கும் உடையதுக்கும் உள்ள அபேதத்தை நோக்கின உபசாரவழக்கென்றுவது கொள்க.

"பொய்படுமொன்றே" என்ற குறளில்[836],பரிமேலழகர் 'ஒன்றே என்பது - எண்ணிடைச்சொல்' என உரைத்தனராதலால், இங்கும் அப்படியே கொள்ளவும். இயக்கர் முதலியோராயினும் என் கை வில்லை வளைத்துத் தலையை துணிப்பேன்: அப்படிப்பட்ட எனக்குப் பூதலத்தரசர், ஒன்றே - ஒரு பொருளோ? என உரைத்தலும் ஒன்று. இயக்கர் முதலியவர் - பதினெண்தேவகணத்தினுட் பட்டவர். மாயவித்தையை யுடையவர், விஞ்சையர். வெருவரு என்பதை முத்திறத்தார்க்குங் கூட்டுக. விண் - வானம்; இங்கே தேவலோகம்: அங்குள்ளவர், விண்ணோர். வரிசிலை - நீண்ட வில்லு மாம். குழைய வாங்கி - நன்றுகவளைத்து என்றபடி. மணி - கருவி யாகுபெயராம். நவரத்தினமிழைத்த கிரீடத்தையுடைய என்றலு மாம். செழுஞ்சுடர் என்றது - இயல்பாகிய அண்மைவிளி; முதல் வேற்றுமையாக்கி, முன்னிலைக்குப் படர்க்கைவந்த இடவழுவமைதி யென்று கொள்ளினுமாம்; சுடராகிய நீ என்று கருத்து. (36)

ஸ்ரீ கிருஷ்ணன் தான் படையெடுப்பதில்லையென்று துரியோதனனுக்கு உறுதிகூறுதல்.

16. அடர்சிலைவிசயனிவ்வாறிசைத்தலுமமலன்வஞ்சப்
படவரவுயர்த்தவென்றிப்பார்த்திவன்றன்னைநோக்கி
நடையுடைப்புரவித்திண்டேர்நானிவற்கூர்வதன்றி
மிடைபடையேவிநும்மோடமர்செயேன்வேந்தவென்றான்.

(இ - ள்.) அடர் - போர்செய்கின்ற, சிலை - வில்லையுடைய, விசயன் - அருச்சுனன், இ ஆறு - இந்தப்படி, இசைத்தலும் - சொன்னவளவிலே,—அமலன்-குற்றமில்லாதவனான கண்ணபிரான், வஞ்சம் - வஞ்சனையையுடைய, படம் அரவு உயர்த்த - படத்தை யுடைய பாம்பின் வடிவத்தை யெழுதிய கொடியை உயர நாட்டின, வென்றி - வெற்றியையுடைய, பார்த்திவன் தன்னை நோக்கி - துரியோதனராசனைப்பார்த்து, 'வேந்த-அரசனே! நான்—,இவற்கு - இந்த அருச்சுனனுக்கு, நடை உடை புரவி திண் தேர் - பலவகை

நடைகளையுடைய குதிரைகளைப் பூட்டிய வலிய தேரை, ஊர்வது அன்றி - செலுத்துவதையல்லாமல், மிடை படை ஏவி - நெருங்கின ஆயுதங்களைப் பிரயோகித்து, நும்மோடு - உங்களுடன், அமர் செயேன் - போர்செய்வேனில்லை', என்றான் - என்று சொன்னான்;

அருச்சுனன் 'எனக்கு நீ தேரூர்ந்தாயானாற்போதும், நான்வில் திறமையால் எனது பகையாக எவர்வரினும் வெல்வேன்' என்று ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கிக் கூற, அந்த ஸ்ரீ கிருஷ்ணன் அப்போது துரியோதனனை நோக்கி, அருச்சுனனுக்குத் தேரூர்வதன்றிப் படை யெடுத்து நும்மோடு போர்செய்வதில்லை என்று உறுதி கூறின னென்பதாம். பாண்டவர்களை மாய்ச்சூதில் வஞ்சனையால் வெற்றி கொண்டவனென்பார், 'வஞ்சவென்றிப் பார்த்திவன்' என்றார். அமலன் - துர்க்குணமில்லாதவன்; கருமத்தொடக்கற்றவன். வஞ்சப்பார்த்திவனென இயையும்; வஞ்ச அர வென்று இயைப் பினும் அமையும். அரவு - பாம்பின் வடிவத்தை யெழுதின கொடிக்கு இருமடியாகுபெயர். பிருதிவியை ஆள்பவன், பார்த் திவன், தந்திதாந்தநாமம். பிருதிவி - பூமி. பிருது சக்கரவர்த்தி யால் சீர்திருத்தப்பட்டதெனப் பொருள்பட்டு இதுவும் தந்திதாந்த நாமமாம். குதிரைக்குப் பலவகை நடையுண்டு; ஐங்கதி, நவகதி கூறப்படுதல் காண்க. நோக்கி என்றனென்க. (37)

ஸ்ரீ கிருஷ்ணன் தன்னைச் சேர்ந்தவரை யெல்லாம் படைத் துணையாகக் கொள்ளுமாறு துரியோதனனிடம் சொல்லுதல்.

17. எம்மையேயொழியவுள்ளயாதவகுலத்துளோர்கள்
தம்மையுமெம்முனைதாலகேதுவையுஞ்சேரச்
செம்மையோடுதவியாகக்கொண்டுநீசெல்கவென்று
மும்மையுமுணர்ந்தநாதன்முன்னுறப்பின்னுஞ்சொன்னான்.

(இ - ள்.) (என்று சொல்லி மற்றும்), மும்மையும் உணர்ந்த நாதன் - மூன்று காலத்துச் செய்கைகளையும் அறிந்த தலைவனான கண்ணபிரான், முன்உற - முன்னுக, (துரியோதனனை நோக்கி) எம்மையே ஒழிய உள்ள - எம்மைத்தவிர இருக்கிற, யாதவகுலத்து உளோர்கள் தம்மையும் - யதுகுலத்திலுள்ள அரசர்களையும், எம் முன் ஆன தாலகேதுவையும் - எமதுதமையனான பனைக்கொடியை யுடைய பலராமனையும், சேர - ஒருசேர, செம்மையோடு - மனநிறை வோடு, உதவி ஆக கொண்டு - படைத்துணையாக அழைத்துக் கொண்டு, நீ செல்க - நீ போவாயாக, என்று - என்று சொல்லி, பின்னும் சொன்னான் - மீண்டுஞ் சொல்பவனானான், (எ - று.)— அது மேற்கவியிற் காண்க.

'செம்மையோடு உதவியாகக்கொண்டு நீ செல்க' என்றது, பட்சபாதமின்றித் துரியோதனனுக்கு ஒருவகையில் உதவிபுரிவ தாகக் காட்டியபடியாம். மும்மையுமுணர்ந்த நாதன் - முன் நடந் தவை, இப்பொழுது நடக்கின்றவை, இனி நடப்பவை என்னும் இரிகால வரலாறுகளையும் அறிந்தவன். இங்கே 'மும்மையுமுணர்ந்த நாதன்' என்றது எத்தனைபேரைத் துணையாகக்கொண்டாலும்

துரியோதனன் போரிற் பாண்டவர்களை வெல்லமாட்டானென்று முன்னமே அறிந்துள்ளவனுதலால்.

எம்மை என்பதை உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகக் கொண்டு அதில் சாத்தகியை அடக்குதலுமொன்று: ஏ - பிரிநிலை. யாதவர்-யதுவின் சம்பந்தமானவர்; தத்திதாந்தநாமம்; யது என்பவன், சந்திரகுலத்திற் பிரசித்திபெற்ற ஓரரசன். முன் - முன்னமே பிறந்தவனுக்குக் காலவாகுபெயர். தாலகேது-பனைமரவடிவத்தைக் கொடியிலுடையவன்; 'பனந்துவசன் முசலி கருந்துகிலுடையவன் பலதேவன், பலபத்திரன் பேரே" என்பது நிகண்டு. வீடுமனுக்கும் பனைமரமே கொடியாதலால், இப்பெயர் அவனுக்கும் வழங்கும். தாலகேது - வேற்றுமைத்தொகையன்மொழி. மும்மை என்பது - இங்கே மூன்றின் தன்மையைக்குறியாமல் மூன்றைக் குறித்ததனால், மை - பகுதிப்பொருள்விகுதி, தன்மைப்பொருள் விகுதி அன்று. மும்மை - மூன்று காலத்துச் செய்திக்கு இருமடியாகுபெயர். (38)

துரியோதனன் பலராமனைக் காணுதல்.

18. கிருதவன்மாவக்குரோணிகிளர்படையோடுநின்பால்
வருவனென்றுரைத்துவேண்டுமதுரவாய்மைகளுங்கூறி
மருதுபோழ்ந்திட்டசெங்கண்மாயவன்விடுப்பவேகிக்
கருதலான்வினயமொன்றுங்கண்ணன்முன்னேனைக்கண்டான்.

(இ - ள்.) மருது - இரட்டை மருதமரங்களை, போழ்ந்திட்ட - (இடையிலே உரலொடு புகுந்து) முறித்துத் தள்ளின, செம் கண் மாயவன் - சிவந்த திருக்கண்களையுடைய கண்ணபிரான்—(துரியோதனனைநோக்கி)—'கிருதவன்மா - (நமது) கிருதவர்மாவென்பவன், அக்குரோணி கிளர் படையோடு - ஒரு அக்ஷௌஹிணியென்னுந் தொகையுள்ள விளங்குகின்ற (நமது) சேனையுடனே, நின்பால் வருவன் - உன் பக்கத்தில் (படைத்துணையாக) வருவான்' என்று உரைத்து - என்று சொல்லி, வேண்டும் மதுரம் வாய்மைகளுங்கூறி - (இன்னும் அச்சமயத்துக்கு) ஏற்ற இனிப்பான வார்த்தைகளையுஞ் சொல்லி, விடுப்ப - விடைகொடுத்தனுப்ப,—(துரியோதனன்), வினயம் ஒன்றும் கருதலான் - (அவ்வுதவியைப் பெறுதற்கேற்ற) வணக்கஞ் சிறிதையுஞ் செய்யநினையாதவனாய், ஏகி - சென்று, கண்ணன் முன்னேனை கண்டான் - ஸ்ரீகிருஷ்ணனது தமையனை பலராமனைப் பார்த்தான்; (எ - று.)

இங்கும், மதுரவாய்மைகள் கூறி என்றதனால், கண்ணனுக்குத் துரியோதனனிடம் இன்சொல்மாத்திரத்தால் அன்பேயன்றி மனப் பூர்வமான அன்பில்லை யென்பது விளங்கும்.

இதில் வர்மா என்பது - க்ஷத்திரிய சாதிக்கு உரிய பெயர்: (பிராமணர்க்குச் சர்மா என்றும், வைசியர்க்குக் குப்த என்றும், சூத்திரர்க்குத் தத்த அல்லது தாஸ என்றும் வழங்கும்.) கிருத

வர்மா - யதுகுலத்தில் இருதிகன்என்பவனது குமாரன்: இவனைக் கிருஷ்ணன் துரியோதனனுக்குப் படைத்துணையாகத் தான் அனுப்பும் யாதவசேனைக்குத் தலைவனுக்கி அனுப்புகிறான். வாய்மை - வாயின்தன்மை; அது - வாயினற் சொல்லுஞ் சொல்லுக்குக் கருவியாகுபெயர். மாயவன் என்பதற்கு - மாயைபோலக் கருநிறமுடையவனென்றும், வியக்கத்தக்க குணந்தொழில்களையுடையவனென்றுங் கருத்து உரைப்பர். வணங்காமுடிமன்னனுதலால், விநயமொன்றுங் கருதலானன். இனி, வினயமொன்றும் கருதலான் என்பதற்கு-கண்ணனது சூதுசிறிதையும் அறியாதவனுய் என்றும் உரைக்கலாம்; வினயம் - வஞ்சனை. (39)

துரியோதனன் பலராமனை யாதவருடன் போர்த்துணையாக வருமாறு அழைத்துவிட்டுச் செல்லுதல்.

19. கண்ணனங்கருளிச்செய்தகட்டுரைப்படியேசங்க
வண்ணனுக்கிளவல்சொன்னமாற்றமுமரசன்சாற்றி
எண்ணருந்தொகைகொள்சேனையாதவகுமரரோடே
அண்ணலேவருகென்றேதியத்தினுபுரிபுக்கானே.

(இ - ள்.) (கண்டு), அரசன் - துரியோதனராசன், கண்ணன் அங்கு அருளிச்செய்த கட்டுரை படியே - கிருஷ்ணமூர்த்தி அப்பொழுது சொல்லியருளின உறுதிச்சொல்லின்படியே,—சங்கம் வண்ணனுக்கு - சங்குபோல வெளுத்த நிறத்தையுடைய பலராமனுக்கு, இளவல் சொன்ன மாற்றமும் சாற்றி-(அவன்) தம்பியான கண்ணன் சொன்னவார்த்தையைச் சொல்லுதலுஞ் செய்து, 'அண்ணலே - பெருமையிற்சிறந்தவனே! எண் அரு தொகைகொள் சேனை யாதவ குமரரோடே - எண்ணியளவிடுதற்கருமையான பெருந்தொகையைக் கொண்ட யாதவசேனையோடும் யாதவகுமாரர்களோடும், வருக - (நீ என் பக்கல் போர்த்துணையாக) வருவாயாக', என்று ஓதி - என்று சொல்லி, அத்தினபுரி புக்கான் - (தனது) அஸ்தினபுரியைச் சேர்ந்தான்; (எ - று.)

பெரியோர்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் அருளோடு கூடியதென்னுங் கருத்தால், இங்கு 'அருளிச்செய்த' என்றது; இனி துரியோதனன் பெருங்கூட்டத்தைத் தனக்குத் துணையாக அனுப்புவதைக் கண்ணன் அருளோடு செய்ததாகக் கருதினனென்பார், 'அருளிச்செய்த' என்றருமாம். கட்டுரையென்றது, உள்ளே யடங்கிய கருத்து வெளித்தோன்றுதபடி நன்றாக அமைத்துச் சொல்லுஞ் சொல் என்றபடி. யாதவகுமார - கண்ணனுக்குப் பதினாயிரங் கோபஸ்திரீகளிடம் பிறந்த நாராயணகோபாலர்களும் பிறருமாம் படைத்துணையாக வரும்படி வேண்டுகின்றனனுதலின் அண்ணலேயென உயர்த்திக் கூறினன். அங்கு - அவ்விடத்தில் என்றுமாம். குமாரனென்னும் சொல்லுக்கு மன்மதனையுங் குறித்த ரூபமுடையவனுக்கவல்ல கட்டழகுடையவனென்று பொருள். (40)

அருச்சுனனும் கிருஷ்ணனும் தருமபுத்திரனுள்ள விடத்துச் செல்லல்.

20. கூறியவேகநாகக்கொடியவனகன்றபின்னர்த்
தேறியவிசயனேடுஞ்செழும்புனற்றுவரைநீங்கி
யாறிருநாமத்தோனுமையிருநாமத்தோனும்
ஊறியகருணைநெஞ்சினுதிட்டிரனிருக்கைபுக்கார்.

(இ - ள்.) கூறிய - (இவ்வாறு) சொன்ன, வேகம் நாகம் கொடியவன் - உக்கிரமான பாம்பின்வடிவத்தையெழுதின துவசத்தையுடைய துரியோதனன், அகன்றபின்னர் - (துவாரகையினின்று) நீங்கிச் சென்றபின்பு, (கண்ணபிரான்) தேறிய விசயனேடும் - (தான் படைத்துணையாதற்கு உடன்பட்டதனால்) மனந் தேறின அருச்சுனனுடனே, செழு புனல் துவரை நீங்கி - மிகுந்த நீர்வளத்தையுடைய துவாரகாபுரியினின்று புறப்பட்டு, (விரைவில்), ஆறு இரு நாமத்தோனும் ஐ இரு நாமத்தோனும் - பன்னிரண்டு திருப்பெயர்களையுடைய அக்கண்ணனும் பத்துத்திருப்பெயர்களையுடைய அருச்சுனனும், ஊறிய கருணை நெஞ்சின் உதிரட்டிரன் இருக்கை புக்கார் - மேன்மேற் சுரக்கின்ற அருளையுடைய மனத்தையுடைய தருமபுத்திரனது இருப்பிடத்தை [உபப்பிலாவியத்தில் அரண்மனையை] அடைந்தார்கள்; (எ - று.)

வேகம் - விரைவுமாம். ஏகம் எனப் பதம் பிரித்து, ஒப்பற்ற எனினுமாம். ஆறிருநாமத்தோன் - துவாதசநாமன்; அத்திருநாமங்கள் - கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், இருடீகேசன், பதுமநாபன், தாமோதரன் என்பவை. ஐயிருநாமம் - 'பார்த்தனருச்சுனன் கரியோன் விசயன், பாகசாதனி சவ்வியசாசிபற்குனன்பா, ரேத்து தனஞ்சயன் கிரீடி சுவேதவாகன் எனும் நாமம் படைத்த பிரான்" எனக் கீழ்த் தீர்த்தயாத்திரைச் சருக்கத்திற் கூறியவை. ஆறிரு நாமம், ஐயிருநாமம்என்பன - பண்புத்தொகைப் பன்மொழித் தொடர். இருக்கை - இருத்தல்: 'இருப்பிடத்துக்குத் தொழிலாகு பெயர். தேறிய விசையினேடும் என்ற பாடத்திற்கு - மிக்க விரைவுடனே யென்க. (41)

வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம் முற்றிற்று.

மூன்றாவது

சஞ்சயன் தூதுசருக்கம்.

சஞ்சயனென்னும் முனிவன் திருதராட்டிரனது வேண்டுகோளின்படி பாண்டவரிடம் தூது வந்த செய்தியைச் சொல்லும் பாகம். சஞ்சயன் கவல்கணனென்பவனது குமாரன். ஆதலால், இவனுக்குக் காவல்கணியென்று ஒரு பெயரும் வழங்கும். இவன் திருதராட்டிரனுக்கு மிகவும் இஷ்டனான நண்பன்; இவன் அவனுக்குச் சில சமயங்களில் தேர் செலுத்துதலுமுண்டு.

கடவுள் வணக்கம்

1. ஒருதலத்திடையவதரித்தணிபொதுவர்சிற்குடிலுறைவதோர்
மரகதப்புயறனையெடுத்தொருமகவெனத்தனதிறுதியால்
அரிதுபற்றியவலகைசெற்றிடவணிமுகிலப்பயனுகர்வுரு
மருதிடைத்தவழ்பொருவில்வித்தகன்மலரடிக்கண்வழுத்துவாம்.

(இ - ள்.) ஒரு தலத்திடை - ஓரிடத்திலே [வடமதுரையில் என்றபடி], அவதரித்து - திருவவதாரஞ்செய்து, அணி பொதுவர் சில் குடில் - அழகிய இடையர்களது சிலவான குடிசையிலே (மற்றோரிடத்தில் என்றபடி], உறைவது - வசித்தருளுந்தன்மையதான, ஓர் மரகதம் புயல் - ஒப்பற்ற பச்சையிரத்தினமும் மேகமும் போன்ற நிறத்தையுடையவனும்,—தனது இறுதியால் - தனது [பூதனையின்] மரணகாலம் சமீபித்ததனால், தனை ஒரு மகவு எனவெடுத்து - தன்னை [கண்ணனை] ஒரு சாதாரண சிறு குழந்தையைப் போலக் கையிலெடுத்து, அரிது பற்றிய - அருமையாகப் பிடித்திருந்த, அலகை - பேய் மகளாகிய பூதனையை, செற்றிட - கொன்றிடும்பொருட்டு, அணி முகில் பயம் - அழகிய (அவளது) தனத்தின் பாலை, நுகர்வுரு - குடித்தருளி, மருதிடை தவழ் - (பின்பு ஒரு காலத்தில் இரட்டை) மருதமரங்களிடையிலே தவழ்ந்து சென்ற, பொருவு இல் வித்தகன் - ஒப்பில்லாத ஞானவடிவமானவனுமாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினது, மலர் அடிக்கண் - செந்தாமரைமலர் போலுந் திருவடிகளை, வழுத்துவாம் - துதிப்போம்; (எ - று.)

"ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில், ஒருத்திமகனை யொளித்து வளர" எனப் பெரியார் அருளிச்செய்தபடி திருமதுரையில் வசுதேவ குமாரனுக்குத் தேவகியின் திருவயிற்றில் உதித்துத் திருவாய்ப்பாடியில் நந்தகோபர்மனையில் யசோதையின் திருமகனாய் வளர்ந்தருளின கண்ணனது தன்மையை 'ஒரு தலத்திடை யவதரித்தணிபொதுவர் சிற்குடி லுறைவது' எனக் கூறினார். கண்ணன் வளர்தற்கு இடமாதற்கேற்ற மகிமை [தவப்பயன்] உடைமையாலும், கண்ணனுக்கு மதுரையினும் ஆய்ப்பாடி இனியதாயிருந்ததனாலும், முன்பு எளிய காடாயிருந்தது கண்ணனது திருக்கடைக்கண்ணின் அருள் நோக்குமாத்திரத்தால் பின்பு மிகச் செழிப்படைந்ததனாலும், பொதுவர் சிற்குடிலுக்கு அணியென்று அடைமொழி கொடுத்தது.

குறிஞ்சி நிலத்துக்கும், மருதநிலத்துக்கும் பொதுவான இடம் (காடும் காடு சேர்ந்த இடமுமான) முல்லை நிலமாதலால், அங்குள்ள இடையர்க்குப் பொதுவர் என்று பெயர்; பொது - நடுவிடம், மத்தியஸ்தானம்; இடையரென்ற பெயர்க்குங் காரணம் இதுவே. மக - இளமை யுணர்த்தும் உரிச்சொல். உ - சாரியை; மகவுஎன்ற இது - இளமையையுடைய குழந்தைக்குப் பண்பாகுபெயர்.

பூதனைக்கு அழிவுகாலம் அருகில் வந்ததற்கு ஏற்பக் கண்ண னைக் கொல்லவேண்டுமென்னும் துர்ப்புத்தி உண்டாயிற்று என் பார், 'தனதிறுதியால்' என்றார். மிகுந்த அன்போடு அருமையாக எடுப்பதுபோல அக்குழந்தையைக் கையிலேந்தியதனால், 'அரிது பற்றிய' என்றது; அன்றியும், இப்படிப்பட்ட பரிசுத்தமான தெய் வக்குழந்தையை எந்தப்பிறுதல் பேய்மகளுக்கு என்றும் அரிதா மிறை; இத்தகைய கொடுஞ்செயலைப் பிறரெவருஞ்செய்ய உடன் படாராகிய் அருமைபற்றியும், 'அரிதுபற்றிய' என்னலாம். அவள் அப்பொழுது கண்டவர் காதல்கொண்டு நம்புதற்கு ஏற்ற கட்டழ குடைய வடிவத்தைத் தனது மாயையினால் எடுத்துவந்தன ளாதலா லும், கண்ணன் பால்அமுதுசெய்யும் பேறுபெறுதலாலும், அணி முலை யென்றது. அணிமுலை - (ஆரம் முதலிய ஆபரணங்களை) அணிந்தகொங்கையென விசேஷத்தாகையுமாம். தன்னைக்கொல்லப் பிறந்தவன் ஒளித்துவளர்கிருனென்று உணர்ந்த கம்சனால் விசேஷ மான பலம் சாமர்த்தியம் அழகு முதலிய சிறப்புக்களையுடைய குழந்தைகளைக்கொல்லும்படி ஏவியனுப்பப்பட்ட பூதனை யென்னும் ராட்சசி, நல்லபெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து தூங்கிக்கொண்டிருந்த கண்ணனையெ குழந்தையை யெடுத்து நஞ்சுதோய்ந்த தனது முலையைக் கொடுத்துக் கொல்லமுயல, பக வானனை குழந்தை அவ்வரக்கியின் முலைகளைக் கைகளால் இறுகப் பிடித்து அவளுயிரோடு உறிஞ்சிப் பேரிரைச்சலிட்டுக் கதறி விழுந்து இறக்கும்படி செய்ததென்பது கதை. வித் - (எல்லாப் பொருளையும்) அறியுந்தன்மையை, அகன்-தன்னிடத்தில் உடையவன் எனக் காண்க; இனி, வித்தகன்-ஒரு சொல்லாய், சதுரப்பாடு உடைய வனுமாம். முதலடியினால்-பரத்துவமும் சௌலப்பியமும், மூன்றாமடி யினால்-துஷ்டநிக்கிரகமும், நான்காமடியினால் - நிர்ஹேதுகக்ருணையும் விளங்கும்.

இதுமுதல் இச்சருக்கம்முடிகிறவரையில் பத்தொன்பதுகவிகள்-பெரும்பாலும் முதல்மூன்று ஐந்தாஞ் சீர்கள் - மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எழுசீரா சிரியவிருத்தங்கள். (42)

திருதராட்டிரன் பாண்டவரிடத்துத் தூதனுப்புமாறு சஞ்சய முனிவனை வருவித்துக் கூறத்தொடங்குதல்.

உ. நஞ்சநாகமுயர்த்தமீளிதனகர்புகுந்துழிநண்பறக்
கஞ்சமாமலை வென்றவன் செயல்கண்ணிலாளெடுரைத்தபின்
வஞ்சமைந்தரொடியவிமீளவுமண்கொடாதகுறிப்பினன்
சஞ்சயன்றனைவருகவென்றிருதாள்பணிந்திவைசாற்றுவான்.

(இ - ள்.) கஞ்சம் - விஷத்தையுடைய, நாகம் - பாம்பை யெழு தின கொடியை, உயர்த்த - உயர நிறுத்தின, மீளி - வலிமையிற் சிறந்த துரியோதனன், தன் நகர் புகுந்த உழி-(துவாரகையினின்று) தனது அத்தினபுரியைச் சேர்ந்தபொழுது, நண்பு அற கஞ்ச மாமனை வென்றவன் செயல் - உறவுமுறை சிறிதும் பாராட்டாமல் கம்சனுடைய தனது மாமனை அழித்திட்டவனை ஸ்ரீகிருஷ்ணனது செய்தியை [இருவர்க்கும் ஒவ்வொருவகையில் உதவிசெய்ய உடன் பட்டதை], கண் இலாஞெடு உரைத்த பின் - பிறவிக்குருடனை திருதராட்டிரனோடு சொன்னவுடனே—(அத்தன்தை)—வஞ்சம் மைந்த ரோடு மீளவும் உயவி - வஞ்சனைக் குணத்தையுடைய தன்மக்கள் நூற்றுவருடனே மறுபடியும் ஆலோசித்து, மண் கொடாத குறிப் பினன் - (அவ்வாலோசனையிலும்) இராச்சியபாகத்தை (ப் பாண்ட வர்களுக்கு)க் கொடுத்தலில்லாத கருத்தையே தேர்ந்தவனை, (பின்பு) சஞ்சயன் தீன வருக என்று-சஞ்சயமுனிவனை வருவாயாக வென்று (வரவழைத்து உபசரித்து), இரு தாள் பணிந்து - (அவனது) உபய பாதத்தை வணங்கி, இவைசாற்றுவான் - இவ்வார்த்தைகளைச் சொல்பவனானன்; (எ - று.)—அவற்றை மேல் இரண்டு கவிகளிற் காண்க.

நாகம் - (கால்களால்) நடவாததென்றும், மலைகளில் அல்லது (சந்தன) மரங்களில் வாசஞ்செய்வ தென்றும் காரணப் பொருள் கூறப்படும்; நகம் - நடத்தலில்லாதது; மலையும், மரமுமாம். கண்ண னைப்பெற்ற தாயான தேவகியினது உடன்பிறந்த முறையாகுபவ னுதலால், கஞ்சன் கண்ணனுக்கு மாமனுவன். தன்னைக்கொல்லப் பிறந்த தேவகிபுத்திரன் யசோதையினிடம் ஒளித்து வளர்தல் முதலிய விருத்தாந்தங்களை ஆதியோடந்தமாக நாரதர் சொல்லக் கேட்டு, கம்சன் அதிகோபங்கொண்டு கிருஷ்ணனைக் கொல்ல நிச்ச யித்து வில்விழாவென்கிற வியாஜம் வைத்து அவனை மதுரைக்கு வரவழைத்துப் பலவகையில் வதைக்க வழி தேடுகையில், சபையில் கிருஷ்ணபகவான் வேகமாக ஏழும்பிக் கஞ்சனது மஞ்சத்தின்மேலேறி அவனது கிரீடங் கழன்று கீழே விழும்படி-அவனைத் தலைமயிர் பிடித்துத் தரையில் தள்ளி அவன்மேல் தான் விழுந்து அவனைக் கொன்று ஒழித்தனனென்பது கதை. மகாவஞ்சகனுகிய கஞ்சனையும் வென்ற மாயவனது உதவி பாண்டவர்க்கு இருத்தலால், அவர்களை இந்த வஞ்சமைந்தரால் வெல்லலாகாதென்பது தோன்ற 'கஞ்சமா மனை வென்றவன்' என்றார். (43)

இதுவும் மேற்கவியும் - ஒரு தொடர்: திருதராட்டிரன் சிலகூறிச் சஞ்சயமுனிவனைப் பாண்டவரிடம் தூதனுப்புதல்.

8. குருகுலத்தரசர்க்குறுந்தொழில்கூறுநற்குருவாதலால்
இருகுலத்தினுமுற்பவித்தவரென்றுநின்சொன்மறுத்திடார்
பெருகுலக்கனலன்னபிள்ளைகள்பேசுகின்றபிணக்கறுத்
தொருகுலத்தவருதிரும்புவியாளுமாறினியுட்கொளாய்.

(இ - ள்.) (நீ) குருகுலத்து அரசர்க்கு - குருவென்னும் அரசனது மரபிலே பிறந்த மன்னர்களெல்லோருக்கும், உறும் தொழில் கூறும்-(செய்யத்) தக்க காரியங்களை (முன்னமே ஆராய்ந்து) சொல்லியருளுகின்ற, நல் குரு ஆதலால் - சிறந்த ஆசிரியனுகையால், இரு குலத்தினும் உற்பவித்தவர் - (என் குலம் என் தம்பியான பாண்டுவின் குலம் என்னும்) இரண்டு குலத்தினும் பிறந்த குமாரர்யாவரும், என்றும் நின்சொல்மறுத்திடார்-எப்பொழுதும் உனது வார்த்தையைத் தடுக்கமாட்டார்கள்; (ஆதலால், நீ பிரவேசித்து), உலை பெருகு கனல் அன்ன பிள்ளைகள் பேசுகின்ற பிணக்கு அறுத்து - (கொல்லனது) உலைக்களத்திலே வளர்ந்தெரிகின்ற அக்கினியைப் போன்ற (உக்கிரத்தன்மையையுடைய) பாண்டவரும் துரியோதனுதியரும் ஆகிய சிறுவர்கள் (தனித்தனிப்) பேசுகிற மாறுபாடான வார்த்தைகளை ஒழித்து, ஒரு குலத்தவர் உததி சூழ் புவி ஆளும் ஆறு - (இவ்விருவகையாருள்) ஒரு குலத்து இராசகுமாரர்கள் தாமே கடல் சூழ்ந்த நிலவுலகம் முழுவதையும் அரசாளும்படி, இனி-இப்பொழுது, உள்கொளாய்-திருவுள்ளத்திற் கொண்டருள்வாய்; (எ - று.)—இது, திருதராட்டிரன் சஞ்சயனை நோக்கிச் சொல்வது.

'நற்குரு' என்றது - தீமையையொழித்து எப்பொழுதும் நன்மையையே செய்தருளும் ஆசாரியமூர்த்தி யென்றபடி. கோபாக்கினியின் ஆவேசத்தால் ஒருவரையொருவர் ஒழித்திடுதற்குச் சிறுகின்றன ரிவரென்பான் 'பெருகுலைக் கனலன்ன பிள்ளைகள்' என்றான். பிள்ளை - இளமைப்பெயர்; இது உயர்திணையிளமைக்கு உரியதாதல், "தவழ்பவைதாமுமவற்றேரன்ன" என்ற தொல் காப்பியச் சூத்திரங்கொண்டு கொள்ளப்படும். உததி - நீர் தங்குமிடமெனக் காரணப்பெயர். உலைக்கனலன்னபிணக்கு எனஇயைத்தலுமாம். சஞ்சயன் நீசனத்தமாத்திரத்திலே தனது கருத்துத் தவருமல் நிறைவேறிவிடுமென்ற கருத்தால், 'உட்கொளாய்' என்றான். (44)

4. அறத்தின்மைந்தனுமீளுரும்புவியாசையற்றகலடவியின்
புறத்திருந்துதவஞ்செயும்படிபரிவுரைத்தருள்போயெனச்
செறுத்திடுந்திருதராட்டிரன்றனசிந்தையொப்பனசெப்பினன்
மறுத்திலன்பெருமுனியுமற்றவர்பாடிவீடுறமன்னினன்.

(இ - ள்.) அறத்தின் மைந்தனும்-யமதருமராசனது குமாரனை யுதிட்டிரனும், இளைஞரும் - அவன் தம்பிமாரான வீமன் முதலிய ஞால்வரும், புவி ஆசை அற்று - இராச்சிய பாகத்திலுள்ள ஆசை நீங்கி, அகல் அடவியின் புறத்து இருந்து தவம் செயும்படி - விசாலமான காட்டுப் பக்கங்களிலே தங்கித் தவத்தைச் செய்யுமாறு, போய்-(நீ அவர்களிடஞ்) சென்று, பரிவு உரைத்தருள் - அன்புள்ள வார்த்தைகளை (அவர்களுக்கு)ச் சொல்லியருள்வாய், என - என்று, செறுத்திடும் திருதராட்டிரன் - (பாண்டவர்களை) அழிக்குங் கருத்துள்ள திருதராஷ்டிரமகாராசன், தன சிந்தை ஒப்பன செப்பினன் - தனது எண்ணங்களுக்கு இசைந்தவையான வார்த்தைகளைச் சொன்னனை; (சொல்ல), பெருமுனியும் - மகிமையுள்ள சஞ்சயமுனிவனும், மறுத்திலன் - (அவ்வார்த்தைகளை) மறுக்காதவனாய், மற்று - பின்பு,

அவர் பாடி வீடு உற மன்னினன் - அப்பாண்டவர்களது படை வீடாகிய உபப்பிலாவியத்தை அடைதலைப் பொருந்தினன் [அடைந்தா னென்றபடி]; (எ - று.)

குளிர்ந்த நிழலையும் நீரையும் வேண்டிய சுவையினிய காய்கனி கிழங்குகளைத் தரவல்ல விருக்கவருக்கத்தையுமுடைய நல்லதொரு காட்டின் அகத்தில் இனிமையாக வசித்துக் காலங்கழிப்பாராயின் அதுவும் கண்ணிலாவரசன் கருத்துக்கு ஒவ்வாதாதலால், அவர்கள் கண்டவிடங்களிலும் அலைந்து வருந்தவேண்டு மென்பான், 'அகலட வியின் புறத்திருந்து' என்றான் போலும். தனஞ்சயனையொப்பன - தனது கவலைக்கு ஏற்றவை யென்றுமாம். 'தனஞ்சயனையொப்பன' எனவே, இவன் சொன்னவார்த்தைகள் உலகத்தா ரெவர் கருத்துக்கும் ஒப்பனவல்லவென்பது அருத்தாபத்தியால் விளங்கும். இவற்றை மறுக்காததற்குக் காரணம் முனிவனது பெருந்தன்மையே யாதல்வேண்டு மென்பது தோன்ற 'பெருமுனி' என்று சென்க. முனிக்குப் பெருமையென்ற அடைமொழி கொடுத்ததனால், திருதராட்டிரனுக்குப் பெருந்தன்மை யில்லை யென்பது தொனிக்கும். தருமத்தினின்றும் தவறினவர்களுக்குத் தகுந்த தண்டனை செய்து தருமத்தைக் காத்தலால், யமனுக்குத் தருமனென்று பெயர்; 'அறம்' என்ற பெயருக்குங் காரணம் இதுவே. 'தேவர்களை இருதிணையாலுஞ் சொல்லலாம்' என்ற நியாயம் பற்றி, 'அறம்' எனக் கூற்றுவன அஃறிணையாகக் கூறப்பட்டான். செறுத்திடும் என்பதற்கு-(நல்லோர் யாவராலும் மிக்க பொருமையை யுடையவனென்று) வெறுக்கப்படுகிற என்றும் உரைக்கலாம். 'எண்பது கோடி நினைந் தெண்ணுவன" என்றபடி திருதராட்டிரன் நினைக்கும் எண்ணங்கள் மிகப்பலவாதலால், சிந்தை இங்கே பன்மையாயிற்று. மற்றவர் என எடுத்து, எதிர்நிறத்தவரான பாண்டவரென்றலுமாம். பாடிவீடு - பாசறை; பகைமேற்செல்பவர் உறையுமிடம். பரிவுரைத்தல் - இதோபதேசம். பாடிவீடு உற மன்னினன் - பாடிவீட்டின் சமீபமாகச் சேர்ந்தனனென்க. (45)

சஞ்சயன் பாண்டவரிடம் சென்று பேசத்தொடங்குதல்.

5. சென்றவம்முனிசெலவறிந்தெதிர்சென்றுதத்தமசென்னிதாள்
ஒன்றவைத்துவணங்கியாசியுரைக்குமெய்ப்பயனுற்றபின்
மன்றலந்துளவோனுநல்லறன்மைந்தனுந்திறலனுசரும்
துன்றுபொற்றவிசினிலிருத்தவிருந்துசில்லுரைசொல்லுவான்.

(இ - ள்.) மன்றல் அம் துளவோனும் - பரிமளத்தையுடைய அழகிய திருத்துழாய் மாலையையுடைய கண்ணபிரானும், நல் அறன் மைந்தனும் - நற்குண நற்செய்கைகளையுடைய தருமபுத்திரனும், திறல் அனுசரும்-வலிமையையுடைய (அவனது) தம்பிமாரான (வீமன் முதலிய) நால்வரும், சென்ற அ முனி செலவு அறிந்து - (அத்தினபுரியினின்று புறப்பட்டு) வந்த அந்த சஞ்சயமுனிவனது வருகையை உணர்ந்து, எதிர்சென்று - எதிர்கொண்டுபோய், தத்தம் சென்னி தாள் ஒன்ற வைத்து வணங்கி - தங்கள் தலையை (அம்முனிவனது) திருவடிகளிலே பொருந்த வைத்து நமஸ்கரித்து, ஆசி உரைக்கும்

மெய் பயன் உற்றபின் - (அம்முனிவன்) ஆசீர்வாதங் கூறுதலாகிய உண்மையான பிரயோசனத்தைத் (தாங்கள்) அடைந்தவுடனே, துன்று பொன் தவிசினில் இருத்த-நெருங்கிய பொன்மயமான ஆசனத்தின் மேலே (அம்முனிவனை) எழுந்தருளச்செய்ய, இருந்து - (அவன் அச் சுவர்ணபீடத்தில்) வீற்றிருந்து, சில் உரை சொல்லுவான்-சில வார்த்தைகளைச் சொல்பவனுனன்; (எ-று)—அவற்றை மேல் ஐந்து கவிகளிற் காண்க.

சென்ற அம்முனி செலவு, செல்லுதல் - இங்கு தன்மைக்கு வந்தது. சென்னி தாள் ஒன்ற வைத்து - தமது சிரசின்மேலே அவன் பாதத்தைப் பொருந்த வைத்து, வணங்கி - சாஷ்டாங்கமாகத் தண்டன் சமர்ப்பித்து. நிறைமொழி மாந்தரான முனிவரது சொல் தவருது பயன் தருமாதலால், 'ஆசியுரைக்கும் மெய்ப்பயன்' என்றது. பொன் துன்று தவிசு என மாற இயைத்து, பொன்னினுலமைந்த ஆசன மெனினுமாம். சில் உரை-குளிர்ச்சியான வார்த்தை என்றலும் ஒன்று. ஆசியுரைக்கு மெய்ப்பயன் உற்றபின் - நிச்சயமாய்ப் பலிக்கும்படி அம்முனிவனுல் ஆசீர்வசனஞ் சொல்லப்பெற்ற பின்பு என்க. (46)

இதுமுதல் ஏழு கவிகள் – ஒரு தொடர்: ஐந்து கவிகள்-சஞ்சய முனிவன் வார்த்தை.

6. புடவியாளுதல்விட்டுநன்னெறிபுரியுமாதவர்தம்மினீர்
அடவியாளவும்வல்லிராயினிராதலானலமானதே
மடவியார்நிலையற்றசெல்வமகிழ்ந்துவாழ்தினமாறினுல்
விடவியாரழலுற்றெனப்பெருநரகிலாழ்வுறவீழ்வரால்.

(இ - ள்.) நீர் - நீங்கள், புடவி ஆளுதல் விட்டு-(அரசர்களாய்ப்) பூலோகத்தை அரசாள்வதை யொழித்து, நல் நெறி புரியும் மாதவர் தம்மின் - நல்ல கதியை (ப் பெற) விரும்புகிற மிக்கதவத்தையுடைய முனிவர்களைப்போல, அடவி ஆளவும் வல்லிர் ஆயினீர் - காட்டை இடமாகக்கொண்டு வசிக்கவும் வல்லவரானீர்கள்; ஆதலால் - ஆகையால், நலம் ஆனதே - (உங்களுக்கு இப்படியானது) நன்மையைத்தருவதான காரியமே; மடவியார் - அறியாமையையுடைய கீழ் மக்களோ வெனின், - நிலை அற்ற செல்வம் மகிழ்ந்து - (எவரிடத்தும்) நிலை பெறுதலில்லாத பொருளையே (முக்கியமாகக் கருதி அது நிலைத்த மாத்திரத்தில்) மிகமகிழ்ச்சிகொண்டு, வாழ் தினம் மாறினுல் - (தமது வாழ்) நாள் கழிந்தால், விடவி ஆர் அழல் உற்று என - மரங்கள் பெரு நெருப்பில் விழுந்தாற்போல, பெரு நரகில் - பெரிய நரகங்களிலே, ஆழ்வு உற வீழ்வர் - அழுந்தும்படி விழுந்து வருந்துவர் : (எ - று.)—ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம்.

பாண்டவர் தவத்தவர்க்குரிய காடாட்சியிற் பழகியதை இதனற் கொண்டாடுகின்றன். மடவியார் நிலையற்ற செல்வம் மகிழ்ந்து என் பதற்கு-இளம்பெண்களையும் நிலையில்லாப் பொருளையுமே உகந்து என்றும் பொருள் கொள்ளலாம். விடவியாரழலுற்றென என்பதை விடு அவி ஆர் அழல் உற்று என எனப்பிரித்து, சொரியப்பட்ட

நெய்யையுடைய பெரு நெருப்பில் விழுந்தாற்போல என்றும் உரைப் பர். கிலை - கிலைத்தல் என முதனிலைத் தொழிற்பெயரென்றுவது, நிற்றல் என ஐ விகுதி பெற்ற தொழிற்பெயரென்றுவது கொள்க. வாழ்தினம் - உயிர் உடம்போடு கூடி வாழும் ஆயுள்காள். விடபம் - மரக்கிளை, அதனையுடையது-விடபீ; விடவி என வந்தது திரிபு. (47)

7. உற்றயோனிகடம்மிலுற்பவியாமன்மானுடவுற்பவம்
பெற்றுவாழுதலரிதுமற்றதுபெறினுமாயைசெய்பெருமயக்
கற்றஞானியராய்விளங்குதலரிதுவீடுறுமறிவுபின்
பற்றுமாறிஃதிங்குனக்கிவைபண்பினேடுபலித்தவே.

(இ - ள்.) உற்ற - (எழுவகையாகப்) பொருந்தின, யோனிகள் தம்மில் - பிறப்புக்களில், உற்பவியாமல்- (வேறெருருபிறவியிற்) பிறவா மல், மானுட உற்பவம் பெற்று - மனிதசன்மத்தையே யடைந்து, வாழுதல் - வாழ்வது, அரிது - (உலகத்தில்) அருமையானது; அது பெறினும் - அந்த மனிதப்பிறப்பையடைந்தாலும், மாயை செய் பெரு மயக்கு அற்ற ஞானியர் ஆய் விளங்குதல் - மாயையினாலுண்டாக்கப் பட்ட பெரிய (அறியாமையென்கிற) மயக்கம் நீங்கின தத்துவஞான முடையவர்களாய் விளங்குவது, அரிது - அருமையானது; இஃது - கீழ்க்கூறிய தவமானது, பின் வீடுஉறும் அறிவு பற்றும் ஆறு-இவ் வுடம்பு நீங்கினபின் முத்தியைப்பெறுதற்குக் காரணமான அத் தத்துவஞானம் உண்டாகும் வழியாம்; இங்கு இவை உனக்கு பண்பி னோடு பலித்த - இங்குக்கூறிய இம் மூன்றும் உனக்கு இயற்கை யாகப் பலித்துள்ளன; (எ - று.)

மானுடராக வாழ்ச்சி, தத்துவஞானம், அந்தத் தத்துவ ஞானத் திற்குக் காரணமான தவம் இம்மூன்றும் இயற்கையாகத் தருமபுத் திரனுக்குத் தோன்றியுள்ளமையைச் சஞ்சயன் இதனாற் பாராட்டுகின் ருன். பாண்டவர்க்குப் பொதுவாக உள்ள நற்குணங்களைக் கூறி விட்டு, அரசனுகுபவன் தருமனேயாதலால், இனி, தருமனை நோக் கியே கூறுகின்ருன். இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனுள், வேண்டியதை வேண்டியவாறு முயன்று பெறுந் தன்மை மக்கட் பிறப்புக்கு மாத்திரமே உள்ளதாதலாலும். தேவர் முதலிய மற்றை யெந்தப் பிறப்புக்கும் அப்படிப்பட்ட சிறப்பு இல்லை யாதலாலும், 'மானுடவுற்பவம் பெற்று வாழுதலரிது' என்றது. உறுப்புக் குறை யாகப் பிறத்தல், பிறந்தும் அற்ப ஆயுளாய் அழிதல் இப்படிப்பட்ட குறைகளை ஒழித்தற்கு, 'பெற்று வாழுதல்' என்ருர்.

"அரியது கேட்கின் வரிவடிவேலோய், அரிதரிது மானிடராதலரிது, மானிடராயினுங் கூன் குருடு செவிடு, பேடுநீங்கிப் பிறத்தலரிது, பேடு நீங்கிப் பிறந்தகாலையும், ஞானமுங்கல்வியும் நயத்தலரிது, ஞானமுங் கல்வியும் நயந்த காலையும், தானமுந்தவமுந்தான் செயலரிது, தானமுந்தவமுந்தான் செய்வராயின், வானவர் நாடு வழி திறந்திடுமே" என்ற ஔவையார் பாடலையும், "அரிதாற் பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே", "காமனன்னதோர் கழிவனப் பறிவெய்துபெறினும், காமநாற்கதி நலவதரு நெறிபல

வொருவி, வாமனூனெறி வழுவறத்தழுவினசொழுக, லேமவெண் குடையிறைவமற்றி யாவதுமரிதே" என்ற சீவகசிந்தாமணியையும் இங்கே அறிக.

மற்று - வினைமாற்று: மாயை செய் பெருமயக்கு - அவித்தை எனப்படும்; அது - திரிபுணர்வு, விபரீத ஞானம். ஞானமாவது - பிறப்பு விடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களால் அன்றி உண்மையாக அறியும் மெய்யுணர்வு. வீடு - (எல்லாப்பற்றுக் களையும்) விட்டு அடையுமிடமெனக் காரணப்பெயர்; முக்தி-(உயிர்கள் மீண்டு வாராது சென்று சேரத்தக்க) வீடாகவுள்ளது என்றும் கருத்துக் கொள்ளலாம், இஃது என்பதில், ஆய்தம் உயிர்போ லொலித்தது. 'உமக்கு' என்ற பாடத்துக்கு - வீமனுதியோரையும் உட்படுத்திய தென்க. பலித்த - முற்று. மயக்கு - மயங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். அறிவு பின்பற்றும் ஆறு என எடுத்து, ஞானத்தையனுசரிக்கும் வழியெனலுமாம். (48)

8. திகந்தவெல்லையுறப்பெரும்புவிசெல்லநேமிசெலுத்தநும்
அகந்தையோடரசாளவெண்ணிலவ்வரவகேதனனுங்களோ
டுகந்துவாழவொருப்படானினியுற்றதாயமுரிமையும்
இகந்துமாதவமுயறலேகடனீறிலாவுலகெய்தவே.

(இ - ள்.) திக் அந்தம் எல்லை உற - திக்குக்களின் முடிவான இடமளவும் பொருந்தவும், பெரு புவி செல்ல - பெரிய பூலோகம் முழுதிலும் பரவவும், நேமி செலுத்த - (ஆஜ்ஞா) சக்கரத்தைச் செலுத்தும்படி, அரசு ஆள - (நீங்கள்) இராச்சியத்தை ஆளுதற்கு, நும் அகந்தையோடு - உங்களது செருக்குடனே, எண்ணில் - நினைத்தால், அ அரவ கேதனன் - பாம்புக்கொடியையுடைய அத் துரியோதனன், உங்களோடு உகந்து வாழ ஒருப்படான் - உங்களு டன் மகிழ்ச்சியாய்க் கலந்து வாழ்வதற்கு உடன்படமாட்டான்; (ஆதலால்), இனி - இனிமேல், உற்ற தாயமும் உரிமையும் இகந்து - (உங்களுக்குப) பொருந்தியுள்ள இராச்சியபாகத்தையும் அதன் அரசாட்சியுரிமையையும் விட்டு, ஈறு இலா உலகு எய்த மாதவம் முயறலே - அழிதலில்லாத முத்தியுலகத்தைப் பெறும் பொருட்டுப் பெரிய தவத்தைச் செய்வதுவே, கடன் - (உங்களுக்குக்) கடமை யாம்; (எ - று)

நீர், நிலையில்லாத அரசாட்சியை விரும்பி ஆளக் கருதினால் துரியோதனனை உங்களுடன்கூடி வாழ உடன்படான்; செருக்குக் கொண்டு போர் புரிதலோ தகுதியன்று; ஆதலால் அக்கருத்தை விட்டு நிலையான பெருநாடு பெறும்படி வனத்திற் சென்று தவமி யற்றுதலே தகுதியென்கிறான். எல்லா வுலகங்களும் அழியும் பிரளய காலத்திலும் நித்தியமான முத்தியுலகத்துக்கு அழிவு இல்லை யாத லாலும், அந்தமிலின்பத்தை யுடைமையாலும், பரமபதத்தை 'ஈறிலாவுலகு' என்றது. 'நேமி செலுத்தும் நும் அகந்தையோ டமராட எண்ணல்' என்ற பாடத்துக்கு - ஆஜ்ஞாசக்கரத்தைச் செலுத்தவேண்டுமெனக் கருதும் உமது செருக்குடனே போர்செய்ய

நிகீனயாதொழிக என்று பொருள். எண்ணல் - எதிர்மறை வியங் கோள். அகந்தை - அகங்காரம்; அதாவது-தானல்லாத உடம்பை யானென்றும், தன்னோடு இயைபில்லாத பொருளை எனதென்றும் கருதி, அவற்றினிடத்துச்செய்யும் அபிமானத்தை எனக்கொள்ளு தல் பொருந்தும்; எனவே, அகந்தையோடு - (நீங்காத) அபிமானத் துடனென்றபடி. (49)

9. பராசரன்குலமாகினும்பெறுபயனிறுக்கிலர்பாரிலே
துராசரன்பிலரென்சொலின்று சுயோதனதியர்கைக்கொளார்
சராசரங்களனைத்துமாகியசுகனையேநிகர்தன்மையாய்
நிராசர்நின்னளவிற்குறித்தவையுறுதியென்றினிநீகொளாய்.

(இ - ள்.) பராசரன் குலம் ஆகினும் - பராசர முனிவனது குலத்திலே பிறந்தவர்களாயிருந்தாலும், சுயோதன ஆதியர் - துரியோதனன் முதலியோர், பெறு பயன் - (இம்மனிதசன்மத்தாற்) பெறத்தகுந்த (நல்லொழுக்கமாகிய) பயனை, பாரிலே - இவ்வுல கத்திலே, இறுக்கிலர் - கடமையாகச் செய்துமுடித்தாரில்லை; துராசர் - கெட்ட பேராசையையுடையவர்கள், அன்பு இலர் - (உயிர்களிடத்துச்சிறிதும்) அன்பில்லாதவர்கள்; (ஆதலால்), என் சொல் இன்று கைக்கொளார் - எனது வார்த்தையை இப்பொழுது ஏற்றுக் கொள்கிறாரில்லை; சர அசரங்கள் அனைத்துமாகிய சுகனையே நிகர்தன்மையாய் - இயங்குதிணைப்பொருள்களும் நிலைத்திணைப் பொருள்களும்) ஆகிய எல்லாவற்றின் சொரூபமான சுக முனிவ னையே ஒத்த குணத்தையுடையவனே! நிராசர் - (பொருள்களிற்) பற்றில்லாத பெரியோர்கள், குறித்தவை-சித்தாந்தமாகக்கூறியுள்ள தத்துவ அருத்தங்களை, உறுதி என்று - (உயிருக்கு) நன்மையைத் தருவன என்று, இனி - இனிமேல், நின் அளவில் நீ கொளாய்-உன் மட்டில் நீ கொள்ளக்கடவாய்; (எ - று.)—'கொள்வாய்' என்றும்பாடம்.

தத்துவத்தை உள்ளபடி முழுதும் உணர்ந்த பராசர முனிவ னது சிறந்த மரபில் தோன்றியும், இவர்கள் தாம் பொருள்களின் உண் மையைச் சிறிதும் உணர்ந்து ஒழுகாமை மாத்திரமேயன்றி, உணர்ந் தவர் சொன்னவும் கேட்டிலரென்னும் இகழ்ச்சிமிகுதிதோன்ற முதலிரண்டடிகளால் கூறினர்; துரியோதனாதியர் கேளாவிட்டாலும் நீயாயினும் கேட்டு நடப்பது தகுதியென்பான், 'நின்னளவில் உறுதியென் றினிநீ கொளாய்' என்றார். வியாச குமாரனான சுகன் போலவே, வியாசகுலத்திற் பிறந்த நீயும் உடனே உலகப்பற்றை யொழித்து உயர்பதம் பெற முயல்வது தகுதியென்பார். 'சுகனையே நிகர் தன்மையாய்' எனத் தருமனை விளித்தார்; தருமன் அறிவு ஒழுக்கங்களில் மிக்கவ னென்க. பயன் நிறுக்கிலர் எனப்பதம் பிரித்து நல்லொழுக்கமாகிய பெறத்தக்க பயனைச்செய்து நிலை நிறுத்துகின்றாரில்லை என்பாருமுளர்.

சுகமுனிவர், பிறந்தபொழுதே இயற்கையிற் பற்றுக்களனைத் தையு மொழித்துப் பரம்பொருளை நோக்கித் தனியே சென்றதைக் கண்டு அவரது தந்தையான வியாசர் அவரது பிரிவைப் பொறுக்க

மாட்டாமல் பின்தொடர்ந்து சென்று அன்போடு 'மைந்தா!' என்று அழைத்தவளவில், அரணியத்திலுள்ள மரம் முதலியன எல்லாம் 'ஏன்'? என்று விடை தந்தன என்ற வரலாற்றால், 'சராசரங்களனைத்துமாகிய சுகன்' என்றதென அறிக. இதனால் வேதவியாச பகவானினும் மேம்பட்ட ஞானமுடையவன் சுகமுனியென்பதும், சுகமுனிவன் பகவானது அம்சமர்தலால் சராசரங்களெல்லாம் அவனது சொரூபமாமென்பதும் அறிக; இனி எல்லாப்பொருள்களிலும் உள்ளும் புறம்பும் நிறைந்துள்ள இறைவனை ஒற்றுமையுறப் பாவனை செய்தலால், சுகன் சராசரங்களனைத்துமாவன் என்றலும் ஒன்று. இந்தச் சுகனே பாகவத புராண சரித்திரத்தைப் பரீட்சித்து மகாராசனுக்குக் கூறுபவன்.

பராசரன்-வியாச முனிவரது தந்தை; வசிஷ்டமகாமுனிவரது புத்திரனை சக்தி முனியின் மைந்தன்; தத்துவ ஞானத்தில் மிகச் சிறந்தவன்; எல்லாப்புராணங்களுள்ளுஞ் சிறந்த ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை மைத்திரேய முனிவனுக்கு அருளிச்செய்தவன்; அன்றியும், ஸ்மிருதிகளெல்லாவற்றினும் கலியுகத்திற்குச் சிறந்ததெனப் படுகிறதொரு ஸ்மிருதியை இயற்றினவன். வியாசர் மூலமாக உற்பவித்த குலமாதலால், திருதராட்டிரன் பாண்டு இவர்களது குலம் 'பராசரன் குலம்' எனப்பட்டது. சரம் - சஞ்சரிப்பவை, அசரம் - சஞ்சரியாதவை. எழுவகைப் பிறப்பினுள், தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன இவ்வாறும் சரமும், ஸ்தாவரம் - அசரமுமாம். சரம், ஜங்கமம் இயங்குதிணைப்பொருள், இயங்கியற்பொருள் என்பனவும், அசரம், ஸ்தாவரம், நிலைத்திணைப் பொருள், நிலையியற்பொருள் என்பனவும் - ஒரு பொருளன. நிராசர் என்றது-முற்றத்துறந்த முனிவர்களை. (50)

10. பாரிலாசையுநின் னிராசபதத்திலாசையுமன்னுவெம்
போரிலாசையுநேயமங்கையர்போகமன்பொடுபுதிதுணுஞ்
சீரிலாசையும்விட்டுநன்னெறிசேரவுன்னுதிநீயெனத்
தூரிலாசையறத்துறந்தருள்சுருதிமாமுனிசொல்லவே.

(இ - ள்.) பாரில் ஆசையும் - பூமியினிடத்திலுள்ள ஆசையையும், நின் இராசபதத்தில் ஆசையும் - உனது இராச்சியாதிகாரத்திலுள்ள ஆசையையும், மன்னு வெம் போரில் ஆசையும் - பொருந்தின கொடிய யுத்தஞ்செய்தலிலுள்ள ஆசையையும், நேயம் மங்கையர் போகம் அன்பொடு புதிது உணும் சீரில் ஆசையும் - அன்புள்ள மாதர்களது கலவியின்பத்தை அன்புடனே புதிது புதிதாக அனுபவிக்கும் பெருமையில் உண்டாகும் ஆசையையும், விட்டு - (முழுவதும்) துறந்து, நீ—, நல்நெறி சேர - எல்லா (வழிகளிலுஞ்) சிறந்த முக்தி மார்க்கத்தை அடைவதற்கு, உன்னுதி - மனத்தில் நினைத்திடுவாய், என - என்று, தூர் இல் ஆசை அற துறந்தருள் சுருதி மாமுனி - அடங்குதலில்லாத ஆசையை முழுவதும் ஒழித்தருளிய வேதம் வல்ல பெரிய சஞ்சய முனிவன், சொல்ல - (தருமனோகோக்கிச்) சொன்னவளவில்—(எ - று.)—'எனக்கனன்றிவை பேசினன்' என மேல் பன்னிரண்டாம் கவியோடு குளகமாய் முடியும்.

"அற்றதுபற்றெனி லுற்றதுவீடு" "பற்றற்றகண்ணே பிறப் பறுக்கும்" என்றபடி எல்லாப் பற்றுக்களையும் ஒழித்தே முத்திநெறி சேர வேண்டுதலால் 'விட்டு நன்னெறிசேர வுன்னுதி' என்கிறான். மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை என்ற மூன்றுசைகளையும் முறையே கூறுவார், இடையில் மண் பொன்களைப் பெறுதற்குக் காரணமான போரிலாசையையுங் கூறினர். தம் பக்கல் எல்லா நற் குணங்களும் அமைந்தவரே பிறர்க்கு உபதேசித்தற்குத் தக்கவராதலால், அவ்வமைதி தோன்ற, 'தூரிலாசையறத் துறந்தருள் சுருதி மாமுனி' என்றார். இராசபதம் - அரசனுயிருக்கும் நிலை; அரசாட்சிச் செல்வம். நேயம் - இது போலியாய் நேச மென்றும் வழங்கும். தூரில் - தூர்தலில்லாத: தூர் - முதனிலைத் தொழிற் பெயர்; இனி ஆசை தூரிலற என இயைத்து ஆசை வேரோடு ஒழிய என்றும் உரைக்கலாம்; "ஆர்வ வேரரிந்து" என்றார் சிந்தாமணியாரும். "அருளிலார்க் கவ்வுலகமில்லை" "அறனுமருளுடையான் கண்ணதே யாகும்" எனத் துறவறத்திற்குச் சிறந்த அருளை உடையதாயிருத் தலை விளக்க 'துறந்தருள்' என்றார். (51)

இதுவும், அடுத்த கவியும் – தருமன் கூறும் உத்தரம்.

11. செம்மையல்லதுவிரகிலாதுதெரிந்தமேதகுசிந்தையான் [செய் மும்மையும்தெரிமுனியுரைத்தசொன்முன்னியொண்குறுமுறுவல் திம்மையேவசைநிற்கவீடுறவெண்ணிநீபுகல்வெனினும் வெம்மையேழ்நரகுந்தனித்தனிவீழ்வதேநலமிகவுமே.

(இ - ள்.) செம்மை - (பொருள்களின்) நன்மையையும், அல்லது-நன்மையல்லாத தீமையையும், விரகு இலாது - மாறுபாடில்லாமல், தெரிந்த - (உள்ளபடி பகுத்து) அறிந்த, மேதகு சிந்தையால் - மேன்மை பொருந்தின மனத்தினால், மும்மையும் தெரி - மூன்று காலத்து வரலாறுகளையும் அறிந்த, முனி - சஞ்சய முனிவன், உரைத்த - சொன்ன, சொல் - வார்த்தையை, (தருமபுத்திரன்),— முன்னி - (கேட்டு) மனத்திற் கொண்டு, ஒள் குறு முறுவல் செய்து-ஒள்ளிய புன்சிரிப்பைச் செய்து, 'நீ புகல்வு - நீ (இங்ஙனஞ்) சொல்லுதல், இம்மையே வசை நிற்க - இப் பிறப்பில் இவ்வுலகத்திலே பழி நிலைநிற்க, வீடு உற எண்ணி - முத்தி பெறுதலைக் கருதியே, என்னினும் - ஆயினும், (இங்குப் பழி நிற்க வீட்டுலகத்தையடைதலினும்), வெம்மை ஏழ் நரகும் தனித்தனி வீழ்வதே மிகவும் நலம் - கொடுமையையுடைய ஏழ்வகை நரகங்களிலுந் தனித்தனியே விழுந்து வருந்துவதே மிகவும் நன்மையாம்; (எ - று.)—'முறுவல் செய்து' என்பது. அடுத்த கவியில் 'பேசினன்' என்பதோடு குளகமாக முடியும்.

"வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய வாழ்வாரே வாழாதவர்" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும். செம்மை யென வந்ததனால், அல்லது-தீமையாயிற்று. விரகு - வஞ்சனை. புன் சிரிப்புச் செய்யுங்காலத்து வெள்ளியபற்களினொளி சிறிது வெளித் தோன்றுதலால், 'ஒண்குறு முறுவல்செய்து' என்றது. ஏழ்நரகம் -

அள்ளல், ரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி எனப்படும்: தமப்பிரபை, இமப்பிரபை, தூமப்பிரபை, வாலுகப்பிரபை, சாகரப்பிரபை, இரத்தப்பிரபை, அழற்பிரபை என்றும், அவையாவன - இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ என்றுங் கூறுவாருமுளர். செம்மையல்லது - உம்மைத்தொகை. ஒண்குறு முறுவல் - பண்புத்தொகை பன்மொழித்தொடர். ஏழ் என இது மெய்யீற்றுப் பெயரென்பது ஆசிரியர் தொல்காப்பியனார் கொள்கை; ஏழு என முற்றியலுகரவீற்றுப் பெயரென்பது - நன்னூலார் மதம். (52)

12. நின்னறத்தினினீர்மைதன்னினவிளங்குமாறுநிகழ்த்தினும்
மன்னறத்தினினவிட்டுநல்லறமன்னரானவர்முயல்வரோ
என்னறத்தினினின்றுதெவ்வரையிருவிசும்பினிலேற்றினுற்
பின்னறத்தினினினவுகூருமெனக்கனன்றிவைபேசினன்.

(இ - ள்.) நின் - உனக்கு உரிய, அறத்தின் - துறவறத்தினது, இன் நீர்மைதன்னின - இனிமையான தன்மையை, விளங்கும் ஆறு - நன்றாகத் தெரியும்படி, நிகழ்த்தினும் - (நீ) கூறினாலும், மன்னரான வர்-அரசர்கள், மன் அறத்தினின விட்டு-ராஜதர்மத்தை நீங்கி, நல் அறம் முயல்வரோ-சிறந்த துறவற வழியையே அடையப் பிரயத்தனப்படுவார்களோ? (படாரன்றே!), என் அறத்தினில் நின்று - எனக்குரிய ராஜதருமத்திலே தவறாமல் நிலைத்து நின்று, தெவ்வரை - பகைவர்களை, இரு விசும்பினில் ஏற்றினால் - பெரிய வீரசுவர்க்கத்திலே சேரச்செய்தால் [கொன்றால் என்றபடி], பின்-அதன் பின்புதான், அறத்தினில் நினவு கூரும் - துறவறத்தில் எண்ணம் மிகும், என-என்று, இவை - இவ்வார்த்தைகளை, கனன்று - கோபங் கொண்டு, பேசினன்-(சஞ்சயனைநோக்கி) சொன்னன்,(யுதிட்டிரன்);(எ-று.)

போரிற் பின்வாங்காமற் பகைவராலிறந்தவர் வீரசுவர்க்கமடைவ ரென்பது நூற்றுணிபு. துறவறம் முத்திபெறுதற்குரிய சிறந்த உபாயமாதலால், நல்லறமெனப்பட்டது. இராசதருமத்தினின்று பகை யொழித்தபின்பே மனத்திற்கு நிச்சலத்தன்மை தோன்றித் துறவறத்திற்குச் செல்லுமாதலால், சஞ்சயமுனிவனே! உன்னுபதேசத்துக்கு என்மனம் இப்போது இடங்கொடாது என்று மறுத்தவாறு. தெவ்-பகைமை யுணர்த்தும் உரிச்சொல்; "தெவ்வுப்பகைமை" எனபது தொல்காப்பியம்; அதனையுடையவர் தெவ்வர். விசும்பு - ஆகாயம். (53)

அதுகேட்டு வீமன் கூறத்தொடங்குதல்.

13. முனியுமப்பெருமுரசுயர்த்தவனும்புகன்றனமுன்னிநா
மினியுரைப்பதுகடனெனத்துணிவிழிசிவப்பெழவெழிலியின்
தனிதமுற்றனவுருமின்வெஞ்சினமூளமற்றிவைசாற்றுவான்
கனியெனத்தினகரனினவவ்வியகடவுண்மாருதிதுணிவனே.

(இ - ள்.) தினகரனின - சூரியபகவானை (நோக்கி), கனி என - ஒரு பழமென்று கருதி, வவ்விய - (கையாற்) கவர்தற்குத் தொடங்கின,

கடவுள்-தெய்வத்தன்மையுடைய, மாருதி - வாயுகுமாரனை அனுமானது, துணைவன் - தம்பியான வீமசேனன்,—முனியும் - சஞ்சயமுனிவனும், அ பெரு முரசு உயர்த்தவனும் - பெரிய பேரிகையின் வடிவமெழுதிய கொடியை (வெற்றிக்கு அறிகுறியாக) உயர எடுத்த அத்தருமபுத்திரனும், புகன்றன - சொன்ன வார்த்தைகளை, முன்னி - ஆலோசித்து, இனி நாம் உரைப்பது கடன் என - இனிமேல் நாமும் பேசுவது கடமையாமென்று நிச்சயித்து, துணை விழி சிவப்ப எழ - (தனது) இரண்டு கண்களிலும் செங்நிறம் மிகுதியாக உண்டாகும்படி, வெம் சினம் மூள - கொடிய கோபம் உண்டாகி வளராநிற்க, எழிலியின் தனிதம் உற்றன உருமின் - மேகத்தினது முழக்கத்தைப் பொருந்தினவான இடிகளைப்போல, இவை சாற்றுவான் - இந்த வார்த்தைகளைக் கூறுபவனனன்; (எ - று.)— அவற்றை, மேல் நான்கு கவிகளிற் காண்க.

மருத்-வாயு; அவனது குமாரன் மாருதி: தத்திதாந்தநாமம். சிவபிரானது அம்சமாதலாலும், இராமபிரானது பூர்ண கருணைக்கு விஷயமானவனுதலாலும், இனிப் பிரமபட்டம் பெறுதற்கு உரியவனுதலாலும் அனுமான் 'கடவுள் மாருதி' எனப்பட்டான். தாய் வேருயினும் வீமன் அனுமான் என்ற இருவரும் வாயுவின் மக்களாதலால், வீமனை 'மாருதி துணைவன்' என்றது. தினகரனைக் கனியென வவ்விய மாருதியினது துணைவனெனவே, வீமனும் தமையன்போலவே பல பராக்கிரம சௌரிய தைரிய வீரியங்களிற் சிறந்தவன் என்று குறிப்பித்தபடியாம். தனிதம் என்னும் இடியின் பெயர் - பின் 'உரும்' என வருதலால், முழக்க மாத்திரத்தை யுணர்த்திற்று. தினகரன் - (தனது சேர்க்கையாற் பகலையும் நீக்கத்தால் இரவையும் தந்து)நாளைச் செய்பவன். (54)

இது முதல் ஐந்து கவிகள்-ஒரு தொடர்; அவற்றுள், முதல் நான்கு கவிகள் – வீமன் வார்த்தை.

14. எமக்குநீபிரமப்பெருங்குருவெங்களோடெதிராகுவார்
தமக்குமொக்குமொருழையிலேயருள்சாரவோதுதறக்கதோ
அமர்க்குநென்னலுலூகநாமனெடுறுதியிட்டனரவினஞ்
சுமக்குமேதினியாளுவோர்விணவேறுபட்டதுசொல்வரோ.

(இ-ள்.) நீ—, எமக்கு - எங்களுக்கு, பிரமம் பெருகுரு - தத்துவப் பொருளை உபதேசிக்குஞ் சிறந்த ஆசிரியன்; எங்களோடு எதிர் ஆகுவார் தமக்கும் ஒக்கும் - (இத்தனமை) எங்களுடன் பகைவர்களாயுள்ள துரியோதனாதியர்களுக்கும் ஒத்ததே; (அப்படியிருக்க), ஓர் உழையிலே அருள் சார ஓதுதல் தக்கதோ - ஒரு இடத்திலே [பட்சபாதமாகத் துரியோதனாதியர் பக்கலிலே] கருணைபொருந்த இங்ஙனம் பேசுதல் (உனக்குத்)தகுதியோ? [அன்றென்றபடி]; நென்னல் உலூக நாமனெடு அமர்க்கு அறுதி இட்டனன் - நேற்று உலூகனென்னும் பேருள்ள முனிவனோடு(துரியோதனன்) போர் செய்தற்குத் துணிந்து சொன்னனன்; அரவு இனம் சுமக்கும் மேதினி ஆளுவோர் - பாம்பின் கூட்டத்தால் தாங்கப்படுகிற நிலவுலகத்தை அரசாளும் மன்னர்கள்,

வினைவேறுபட்டது சொல்வரோ - (மனம் ஒன்றுயிருக்கத்) தொழில் வேறுபட்ட வார்த்தையைச் சொல்வார்களோ? (சொல்லமாட்டார்கள் என்றபடி.] (எ - று.)

"மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில்வேறு, வினைவேறு பட்டவர்பால் மேவும் - மனமே, மனமொன்று சொல்லொன்று வான் பொருளுமொன்றே, கனமொன்று மேலவர் தங்கண்" என்றபடி திரி கரணங்களும் ஒத்திராமல் மனத்திலொன்றும் காரியத்திலொன்றும் சொல்லிலொன்றுமாக இருத்தல் அதமரியற்கையாம். எப்பொழுதும் யாரிடத்தும் நடுவுநிலைமை தவறுதல் சிறிதுந் தகாதாதலால், ஒருமையிலே 'அருள்சாரவோதுதல் தக்கதோ' என்றான். பிரமம் - வேதமும் ஒழுக்கமும் மந்திரமும் தவமும் ஞானமும் கடவுளுமாம். பிரமகுரு - இரண்டாம்வேற்றுமையுருபும்பயனுமுடன்தொக்க தொகை: உவமைத்தொகையாய், பரம்பொருளோடொத்த குரு என்றுமாம். அரவினம் என்றது - அஷ்ட மகா நாகங்களை: அவை - அநந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்ஷகன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்பன. ஆயிரந் தலைகளையுடைய சர்ப்பராசனை ஆதிசேஷன் கீழிருந்து அத்தலைகளால் பூமியைத் தாங்காநிற்க, இந்த எட்டுப்பாம்பும் எட்டுத்திக்கிலு மிருந்து பூமியை உடன் தாங்கும்: இவ்வஷ்ட நாகங்கள் காசியப முனிவனுக்கும் அவன் மனைவிமார் பலருள் கத்துரு என்பவளுக்கும் பிறந்தவை. (55)

15. இடக்கணைகவலக்கணைகவிரண்டுமொக்குமெனுமலே
பிடர்க்கணேமதியானகண்ணிலிபெற்றியல்லனபேசினன்
கடற்பெரும்படைகூடிநாளையணிந்தவெய்யகளத்தினு
னடற்கடுங்கதையாலடித்திடுமதிசயந்தனையகேள்.

(இ - ள்.) பிடர்க்கணே மதி ஆன கண் இலி - பின்னிடத்திலே புத்தியுள்ள பிறவிக்குருடனை திருதராட்டிரன், இடக்கண் ஆக வலக்கண் ஆக இரண்டும் ஒக்கும் எனுமலே - இடக்கண்ணேயாயினும் வலக்கண்ணேயாயினும் இவ்விரண்டுகண்களும் (ஒன்றோடொன்று வேறுபாடின்றித் தமக்குள்) சமமாம் என்று நினையாமலே, பெற்றி அல்லன பேசினன் - (தனக்குப்) பெருமையல்லாத வார்த்தைகளைச் சொன்னன். (அது நிற்க). நாளை - நாளைக்கு, கடல்பெரு படைகூடி அணிந்த வெய்யகளத்தில் - கடல்போன்ற பெரிய சேனைகள் சேர்ந்து முறையே வகுக்கப்பட்டு நின்ற கொடிய யுத்தகளத்திலே, நான—, அடல் கடு கதையால் அடித்திடும் - வெற்றியையுடைய கொடுமையான கதாயுதத்தால் (பகைவர்களை) அடிக்கப் போகிற, அதிசயந்தனை - வியப்பை, ஐய - ஐயனே! கேள் - கேட்பாயாக; (எ - று.)

திருதராட்டிரன் தன் புத்திரர் இன்பமும் நாங்கள் துன்பமும் அடையுமாறு எங்களை நாட்டையிழந்து காட்டில் வசிக்கக்கருதி, முன்பு "உன்னுணர்வு உனக்கேயுள்ளது உன் பெருந்துணைவரான கொன்னுனை வேலோர் வென்றுகொண்டன கொடுத்தலொல்லார், பின்னுறவுரிமையாவும் பெறுதி நின்பெருமைக்கேற்ப, முன்னுளோர் பலருஞ்செய்த முறைமையே முன்னுக" என்று கூறியதல்லாமல்

இப்பொழுதும் நாங்கள் நாட்டிற்பற்று ஒழியும்படி உன்னுடன் கூறியனுப்பியது சிறிதும் அறமெறியன்று என்றான். இனித் தன் மக்களுக்கு என்னால் நேரும் அபாயத்தைக் கருதாது தன்மக்கள் இராச்சியம் பெறும் உபாயத்தையே கருதுதலால், பிடர்க்கணே மதியான கண்ணிலியெனப்பட்டான். சத்துருகாதிதியென்னும் வீமனது கதையின் பெயருக்குப் பகைவரைக் கொல்வதென்பது பொருளாதலால், அக்கருத்துத்தோன்ற, அடற்கடுங்கதை யெனப் பட்டது. ஆக என்னுஞ் சொல் இரண்டும் - விகற்பப்பொருளன. இது - இடைச்சொல்லின்பாற்படும். (56)

16. உவந்துநீமொழிதவமருந்தவமல்லவொன்னலருடலுகுஞ்
சிவந்தசோரியின்மூழ்கிமாழ்குசிரங்கள்போய்நடமாடுமக்
கவந்தகானகமேவியூடுறுதீயவெவ்வினைகளைவதே
தவந்தனிற்றலையானவீடுறுதவமெமக்கிதுசாலுமே.

(இ - ள்.) நீ உவந்து மொழி தவம் - நீ மனமகிழ்ந்து உபதேசித்த தவவொழுக்கங்கள், அரு தவம் அல்ல - (எங்களுக்கு) அருமையான (சிறந்த) தவமல்ல; ஒன்னலர் - பகைவர்களது, உடல் - (அடிபட்ட) உடம்பினின்று, உகும் - பெருகுகிற, சிவந்த சோரியில் - செந்நிறமுடைய இரத்தத்திலே, மூழ்கி - நீராடி,—மாழ்கு சிரங்கள் போய் நடம் ஆடும் - அழிகிற தலைகள் நீங்கிக் கூத்தாடுகிற, கவந்தம் - உடற்குறைகளாகிய, அ கானகம் - அந்தப் போர்க்களமாகிய காட்டில், மேவி - பொருந்தினின்று, ஊடு உறு தீய வெவ்வினைகளைவதே - இடையிலே நேர்ந்த மிகவுங்கொடிய (பகைவர்களாகிய) செய்கைகளை நீக்குவதே, தவந்தனில் தலை ஆன வீடு உறு தவம் - (நீ சொல்லும்) தவத்தினுஞ் சிறந்ததான வினைநீங்குதல் பெறுதற்குரிய தவமாகும்; எமக்கு இது சாலுமே - எங்களுக்கு இத்தவமே அமையும்; (எ - று.)

"நீ மொழிதவம் அருந்தவமல்ல: ஒன்னலர்வினை களைவதே தலையான தவம்" என்று தவத்தினில் அத்தன்மையை மறுத்துப் பகைவெல்வதில் அத்தன்மையையேற்றிக் கூறியது அபநுதியணியாம்: இத்தவணி உருவகவணியை அங்கமாகப் பெற்றுவந்தது. பகைவினை களைவதே தவம் என்பதற்கேற்ப, மூழ்குதலும், கானகமேவுதலும், வினைகளைதலும், வீடுறுதலும் கூறப்பட்டன. முனிவர்க்கே சிறந்தது, அவ்வினை களைந்து வீடுறுந்தவம்; அரசராகிய எங்களுக்கோ, இவ்வினை களைந்து வீடுறு தவமே மிகச்சிறந்தது என்றான். நீராடுதலும், வனவாசஞ்செய்தலும் தவத்திற்கு உறுப்பாவதுபோல, இரத்த வெள்ளத்தில் ஆழ்தலும், தலையற்ற உடற்குறைகளினிடையே இருத்தலும், போர் வெற்றிக்கு உறுப்பாமென்க. கோபாவேசத்தோடு விரைந்து போர்செய்து நின்ற வீரர்களது உடல்கள் பகைவரால் தலையறுபட்டபின்பும் சிறிது நேரம் கீழ்விழாது நின்றவாறே பதைபதைத்துக் கைகால்கள் துடிப்பனவற்றை, 'மாழ்குசிரங்கள் போய் நடமாடு மக்கவந்த கானகம்' என்றார். சேனையில் மிகப்பலவுயிர் இறந்த பொழுது ஒரு கவந்தம் எழுந்து நின்று ஆடுமென்பதை இங்குக் குறித்ததாகவும் கொள்ளலாம்,

காட்டில் அடர்ந்துள்ள மரங்கள் காற்றில் அசைதல் போலப் போர்க் களத்தில் தொகுதியாக ஆடுங் கவந்தங்கள் அசைதலால், கவந்த கானகமென உருவகப்படுத்தப்பட்டது. இரத்தம் - செந்நீரெனப் படுதலால், 'சோரியின் மூழ்கி' என்றது பொருந்தும். (57)

17. போரதாகியபூமிசாலியின்வேலிசூழ்தருபூமியின்
பாரமானசுயோதனதியரென்னுமுறுபசுப்படுத்
தீரமானதயாமனத்தொடிராயசூயமகஞ்செயும்
வீரமாமுனிதன்னியங்களவேள்வியும்புரிவிப்பனே.

(இ - ள்.) போர் பூமியது ஆகிய - யுத்தகளமாகிய, சாலியின் - யர்கசாலியிலே, வேலி சூழ்தரு பூமியின் பாரம் ஆன சுயோதன ஆதியர் என்னும் - கடல்சூழ்ந்த நிலவுலகத்திற்குப் பெருஞ்சுமை யான துரியோதனன் முதலியோராகிய, நூறு பசு-நூறு பசுக்களை, படுத்து - கொன்று, ஈரம் ஆன தயா மனத்தொடு இராய்சூயமகம் செயும் வீர மா முனி தன்னியும் களவேள்வியும் புரிவிப்பன் - குளிர்ச்சியான அருளோடு கூடிய மனத்துடனே (முன்பு) ராஜசூய மென்னும் பெரிய யாகத்தையுஞ் செய்த வீரத்தன்மையையுடைய சிறந்த இராசவிருடியாகிய யுதிட்டிரனை (இப்பொழுது) களவேள்வி யாகிய இவ்யாகத்தையுஞ் செய்விப்பேன்; (ஈ - று.)

ஏதாவது ஒரு யாகத்தைச் செய்துமுடித்தபின்பு கொடுக்கப் படுந் தக்ஷிணை முதலிய தானமும் அவபிரதஸ்நானமும் போல யுத்த களத்தில் போரில் பகைவரைக் கொன்று வென்றபின் செய்யுந் தானம் முதலிய சில பரிகாரத் தொழில்கள் வேள்வியெனப்படும்; இது சிந்தாமணியிலும், புறநானூற்றிலுங் கண்டது. உருவகவணி. சுயோதனதியரென்னும் பசு என உருவகத்தில் உயர்திணை அஃறிணை யோடு மயங்கிற்று; திணைவழுவமைதி. யாகத்திற் கொல்லப்பட்ட பசுக்கள் நற்கதி பெறுவதாக நூல்களிற் கூறப்பட்டிருத்தல் போலப் போரிற் கொல்லப்பட்டவர் வீரசுவர்க்கம் பெறுதல் மரபு. விவேக மில்லாமல் ஆகாரம், நித்திரை, பயம் முதலியவற்றை மாத்திரமேயுடைய துரியோதனதியர் விலங்குபோலுதலால், 'சுயோத னதியரென்னும் பசு' என்றான். இராயசூயம் அரசர்களனைவரையும் வென்று அவர்தரும் திறைப் பொருள்கொண்டு செய்யப்படுவதொரு பெருவேள்வி. மிகக்கனமான மலை முதலிய பாரங்களையெல்லாம் பொறுக்கும் பூமிக்குப் பாவிகளைச் சுமத்தலே பொறுத்தற்கரிய பாரமாம் எனபது நூற்றிணையு; "அறனெக்கி யாற்றுங்கொல் வையம் புறனெக்கிப், புன்சொலுரைப்பான் பொறை" எனத் திருக் குறளிலுங் காண்க. ஈற்றடி - இரண்டு செயப்படுபொருள் வந்தவினை. (58)

சஞ்சயமுனிவனை நோக்கிக் கண்ணன் கூறுதல்.

18. நேமியானிவைசொன்னவீரனைநிற்கவென்றுநிறுத்தியுட்
காமியாதமுனிக்குநல்லுரைகட்டுரைத்தனனிவர்களைப்
பூமியாளுதலவர்களுக்கமருலகமேறுதல்புரிதவம்
யாமியாதுமுரைத்துமென்பயனீயெழுந்தருளென்னவே.

(இ - ள்.) இவை சொன்ன வீரனை - (என்று) இத்தன்மையான வார்த்தைகளைச் சொன்ன வீரனுகிய வீமனை, நேமியான்-சக்கராயுதம் முடைய கண்ணபிரான், நிற்க என்று நிறுத்தி - (இவ்வளவோடு) பேச்சொழிவாயென்று சொல்லிப் பேசாது நிறுத்திவிட்டு, 'இவர்கள் - இந்தப் பாண்டவர்களுக்கு, இ பூமி ஆளுதல் - இந்த நிலவுலகத்தை அரசாளுதலும், அவர்களுக்கு - அத்துரியோதனுதியர்களுக்கு, அமர் உலகம் ஏறுதல் - (இவர்களாற் போரிற் கொல்லப்பட்டுத்) தேவலோகத்து வீரசுவர்க்கத்திற்சென்று சேர்தலும், புரிதவம் - செய்யுந்தவமாம்; (ஆதலால், அவற்றைத் தடுத்திடுதற்கு), யாம் யாதும் உரைத்தும் பயன் என் - நாம் எந்தத் தருமத்தை உபதேசித்தாலும் பிரயோசனம் என்ன? [ஒன்றும் பயன்படாது]; (ஆகையால்), நீ எழுந்தருள் - நீ புறப்பட்டுச் செல்வாய்,' என்ன - என்று, உள் காமியாத முனிக்கு - மனத்தில் (யாதொரு பொருளையும்) விரும்புதலில்லாத சஞ்சயமுனிக்கு, நல் உரை கட்டுரைத்தனன் - நல்ல வார்த்தைகளை ஒழுங்காகக் கூறியருளினன்; (எ - று.)

கண்ணன் முக்காலமும் உணர்ந்த முழுமுதற் கடவுளாதலால், 'இவர்கள் இப் பூமியாளுதல் அவர்களுக்கமருலக மேறுதல் புரிதவம்' என முடிவை முன்னமே கூறினன். திருதராட்டிரனது வேண்டுகோளால் தருமனிடம் வந்து இவ்வாறு கூறினது மாத்திரமே யொழியச் சஞ்சயனுக்குத் தனக்காகத் துரியோதனுதியரிடம் விருப்பும் பாண்டவரிடம் வெறுப்பும் இல்லையென்பார், 'உட்காமியாத முனி' என்றார். இங்கே, காமம் வெகுளி மயக்கம் முதலிய மற்றைக் குற்றங்களுக்கும் உபலட்சணம். அமரருலகம் என்பது, அமருலகமென விகாரப்பட்டது; "அன்றேயாள்வாரமருலகே" என்றார் திருமங்கைமன்னனும். நரகம் போலன்றித் தேவருலகம் மேலுள்ளதாதலால், ஏறுதல் என வேண்டிற்று. யாம் என்ற முன்னிலையுளப்பாட்டுத் தன்மைப்பன்மையால், தன்னையும் சஞ்சயனேடு சேர்த்து அவனைச் சாந்தப்படுத்தியவாறு. உள் என்னும் உள்ளிடத்தின் பெயர் அங்குள்ள மனத்திற்கு இடவாகுபெயர். (59)

சஞ்சயமுனிவன் திரும்பிச்சென்று திருதராட்டிரனுடன் செய்திகூறுதல்.

19. இருந்தபேரவைவிட்டுமற்றவரிதயமிப்படியெனநினைந்
தருந்தவக்கடன்மீளவத்தினபுரியடைந்தவனிபனுடன்
பரிந்தறன்றருகாளைசொற்றதும்வீமனின்றுபகர்ந்ததுங்
குருந்தொசித்தருண்முகிலுரைத்ததுமுண்மையாம்வகைகூறினன்.

(இ - ள்.) அரு தவம் கடல்-(பிறராற் செய்தற்கு) அருமையான தவத்துக்குக் கடல்போன்ற சஞ்சய முனிவன், அவர் இதயம் இப்படி என நினைந்து - பாண்டவர்களது உள்ளக்கருத்து இத்தன்மையதென்று ஆலோசித்துக்கொண்டு, இருந்த பேர் அவை விட்டு - (தான்) சென்றிருந்த பெரிய சபையை நீங்கி, மற்று - பின்பு, மீள அத்தினபுரி அடைந்து - மறுபடி அத்தினபுரியைச் சேர்ந்து, அறன்

தரு காலை பரிந்து சொற்றதும் - யமதருமராசன் பெற்ற புத்திரனை யுதிட்டிரன் (இராச்சியத்தில்) விருப்பங்கொண்டு சொன்ன வார்த்தையையும், வீமன் நின்று பகர்ந்ததும் - வீமசேனன் (கோபத்தோடு) நின்று சொன்ன வார்த்தையையும், குருந்து ஒசித்தருள் முகில் உரைத்ததும் - குருந்தமரத்தை முறித்தருளின மேகம்போன்ற கண்ணபிரான் கூறியருளிய வார்த்தையையும், அவனிபனுடன் - திருதராஷ்டிர மகாராசனுடனே, உண்மை ஆம் வகை கூறினன் - உண்மையாகிய வகையிலே சொல்லியருளினன்; (எ - று.)

வந்த பிரயாணம் பயன்படாமல் உடனே மீண்டு சென்றமை தோன்ற, 'மீள அத்தினபுரியடைந்து' எனப்பட்டது. நீர் நிரம்பின கடல்போலத் தவம் நிரம்பின முனிவனென்பார், 'தவக்கடல்' என்றார். படி - வகையென்னும் பொருள் தரும் இடைச்சொல். அறன் என்பதை இறுதிப்போலிபெற்ற தெய்வமுணர்த்தும் அஃறிணைப்பெய ரென்றுவது, அறம் என்னும் அஃறிணையின்மேற் பிறந்த உயர்திணைப்பெயரென்றுவது கொள்க. காளை - இள வெருது; இது இங்கே யுதிட்டிரனுக்கு உவமவாகுபெயர்; இது - வீரனுக்கு நடை வலிமை காம்பீரியங்களால் உவமையாம். கம்சனு லேவப்பட்டு வந்த அசுரர்களுள் ஒருவன் அழகியதொரு குருந்த மரத்தின் வடிவங்கொண்டு கண்ணன்மேல் விழுந்து அவனைக் கொல்வதாக இருக்கையில், அம்மரத்தைக் கண்ணபிரான் விளையாட்டாக முறித்தருளினனென உணர்க, (60)

சஞ்சயன் தூதுசருக்கம் முற்றிற்று.

நான்காவது

கிருட்டிணன் தூது சருக்கம்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாண்டவர்க்காகத் துரியோதனனிடத்துத் தூது சென்ற வரலாற்றை யுணர்த்தும் பாகம். கிருஷ்ணன் என்ற வடமொழிப் பெயர் - கருநிறமுடையவனென்றும், (யாவர் மனத்தையும்) கவர்பவனென்றும், (எல்லாத்தொழில்களையுஞ்) செய்பவனென்றும், அசுரர்களையிரைப் பறிப்பவனென்றும், மற்றும் சிலவகையாகவும் பொருள்படும். கிருட்டிணனது தூது என ஆறும்வேற்றுமைத்தொகை.

கிருஷ்ணன் - திருமாலின் ஒன்பதாம் அவதாரமூர்த்தி; வசுதேவர்க்கும் தேவகிக்கும் திருமகனுய்த் திருவவதரித்து, இடையர் தலைவனுகிய நந்தகோபனும் அவன் மனைவியான யசோதையும் வளர்க்க வளர்ந்தவன்.

இந்நூலில் சங்கேதத்தால் பருவம் என்பது பெரும்பிரிவையும், சருக்கம் என்பது சிறுபிரிவையும் குறிக்கும்.

கடவுள் வணக்கம்.

1. பேர்படைத்த விசயனுடன் மும்மைநெடும் பிறவியினும் பிரியா ஞகிச், சீர்படைத்த கேண்மையினுற் றேரூர்தற் கிசைந்தருளுஞ் செங்கண் மாலைப், பார்படைத்த சுயோதனற்குப் படையெடேனமரி லெனப் பணித்த கோவைக், கார்படைத்த நிறத்தோனைக் கைதொழு வார் பிறவாழிக் கரைகண் டாரே.

(இ - ள்.) பேர் படைத்த - கீர்த்தியைப்பெற்ற, விசயனுடன் - அருச்சுனனுடனே, மும்மை நெடும் பிறவியினும் - மூன்று சிறந்த திருவவதாரங்களிலும், பிரியான் ஆகி - நீங்காதவனுயிருந்து, சீர் படைத்த கேண்மையினுல் - சிறப்புப் பொருந்திய நட்பினுல், தேர் ஊர்தற்கு இசைந்தருளும் - (அவ்வருச்சுனனுக்குச் சாரதியாய்த்) தேரைச் செலுத்துதற்கு உடன்பட்டருளிய, செம் கண் மாலை - சிவந்த திருக்கண்களையுடைய திருமாலின் திருவவதாரமானவனும், பார் படைத்த சுயோதனற்கு - இராச்சியத்தைப் பெற்றுள்ள துரியோதனனுக்கு, அமரில் படை எடேன் என பணித்த - போர்க்களத்தில் (எதிர்ப்பக்கத்தில்) ஆயுதத்தை யெடுத்துப் போர் செய்யே னென்று வாக்குத்தத்தஞ்செய்த, கோவை - (யாவர்க்கும்) தலைவனும், கார் படைத்த நிறத்தோனை - மேகம்பெற்ற கரிய நிறத்தைத் தான் உடையவனுமாகிய கண்ணபிரானை, கைதொழுவார் - கைகூப்பி வணங்குபவர், பிற ஆழி கரை கண்டாரே - பிறப்பாகிய கடலின் அக்கரையை அடைந்தவரே யாவர்; (எ - று.)

இது காப்புச்செய்யுள். இதனுல், தாம் எடுத்துக்கொண்ட சருக்கம் இடையூறில்லாமல் இனிது முடியும்பொருட்டு உயர்ந்தோர் வழக்கத்தின்படியே கவி கடவுள்வாழ்த்துக் கூறுகிறார். கடவுள் வணக்கம் இரண்டு வகைப்படும்; வழிபடுகடவுள் வணக்கமென்றும், ஏற்புடைக்கடவுள் வணக்கமென்றும்; வழிபடுகடவுள் வணக்கமாவது-தாம் தாம் குலதெய்வமாகக் கொண்டு ஆராதிக்கின்ற கடவுளை வணங்குதல்; இதற்கு உதாரணம் - வைஷ்ணவசமயத்தார் விஷ்ணுவையும், சைவமதத்தவர் சிவனையும், ஜைநர் ஜிநனையும், பௌத்தர் புத்தனையும் வணங்குதல் போல்வன; ஏற்புடைக்கடவுள் வணக்கமாவது - தாம் தாம் செய்ய எடுத்துக்கொண்ட காரியத்துக்குத் தகுதியையுடைய கடவுளை வணங்குதல்; இதற்கு உதாரணம் - இராமாயணங் கூறுபவர் இராமனையும், பாகவதஞ் சொல்பவர் கண்ணனையும், கந்தபுராணமுரைப்பவர் சுப்பிரமணியமூர்த்தியையும் வணங்குதல் போல்வன. ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தவரான இந்நூலாசிரியரால் கூறப்பட்ட இவ்வாழ்த்து தமக்கு வழிபடுகடவுளும், எடுத்துக்கொண்ட இதிகாசத்துக்கு ஏற்புடைக்கடவுளுமாகிய திருமாலைப் பற்றியதென அறிக. கண்ணபிரான் இந்நூலுக்கு ஏற்புடைக் கடவுளென்பது இந்நூலாசிரியர் தற்சிறப்புப்பாயிரத்தில் "முன்னு மாமறை முனிவருந்தேவரும் பிறரும், பன்னுமாமொழிப்பாரதப் பெருமையும் பாரேன், மன்னுமாதவன் சரிதமுமிடையிடை வழங்கும், என்னுமாசையால் யானுமீதியம்புதற் கிசைந்தேன்" எனக் கூறிய

தனால் பெறப்படும். இச்செய்யுள் பிற திருவவதாரங்களைப்பற்றிக் கூறியதாயினும், எல்லாம் ஸ்ரீ மகாவிஷ்ணுவினது மூர்த்தியேயாதலால், ஏற்புடைக்கடவுள் வாழ்த்து என்னத் தட்டில்லை.

மும்மை நெடும்பிறவி - நாராயணரும், இராமலக்குமணரும், கிருஷ்ண அருச்சுனரும்; இதனைமேல் வீட்டுமபருவத்தில் கீதையில் கண்ணன் அருச்சுனனைநோக்கி 'உன்னை யான் பிரிவதில்லை யொரு முறைபிரிந்து மேல் நாள், நன்னிலா எறிக்கும் பூணாய் நரனு நாரணனு மாமென்ம, பின்னொரு பிறப்பின் யாமே இராமலக்குமப்பேர் பெற்றோம், இந்நெடும்பிறப்பில் நீயும் யானுமா யீண்டு நின்றோம்" என்பதனால் உணர்க. நாராயணனும் இராமனும் கண்ணனென்றும், நரனும் இலக்குமணனும் அருச்சுனனென்றும் அறிக. இதனால், அருச்சுனன் திருமாலினது அவதாரமென விளங்கும். இனி, இம்மூன்று பிறவியினுள் இராமலக்குமணரை நீக்கி, இந்திரோபேந்திரரைக்கூட்டி இந்திரன் - அருச்சுனனும், உபேந்திரன் - கண்ணனுமெனஉரைப் பாருமுளர்; அது நூல்வழக்கோடு பொருந்தாது. (ஒருவருக்கொருவர் யோகக்ஷேம சமாசாரங்களைக்) கேட்பதுபற்றி, கேண்மை யென்று நண்பிற்குப் பெயர். கார் படைத்த, படைத்த - உவமவுருபாகவுமாம். கைகள் படைத்ததற்குப் பயன் எம்பெருமானைத் தொழுதலே யாம் என்ற சிறப்புப்பொருள் விளங்குதற்கு, 'கைதொழுவார்' என்றார். தொழுவார் என எதிர்காலத்தாற் கூறியதற்கு ஏற்ப, 'பிறவாழிக் கரை காண்பார்' எனக் கூறவேண்டியதை அங்ஙனங் கூறாமல் கண்டாரென இறந்தகாலத்தாற் கூறியது தெளிவும் விரைவும் பற்றி வந்த காலவழுவமைதி. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேராதார்" என்றபடியே எம்பெருமானைத் தொழுபவர்க்குப் பிறவியறுதலும் தொழாதவர்க்குப் பிறவியருமையுமாகிய இரண்டும் நியமமாதலால், 'தொழுவார் பிறவாழிக் கரைகண்டாரே' எனக் கூறினார். கடவுளைத் தொழுதமாத்திரத்தில் பிறவித்துயரம் தவறாமல் அழிந்தேவிடுமென்பார், 'பிறவாழிக்கரை கண்டாரே' என்றார். பிறவாழிக்கரைகண்டாரே என்றதனால் பிறப்பற்றுக் கருமசரீரமொழிந்து திவ்வியசரீரம்பெற்று மீளாதமுத்தியுலகஞ் சேர்ந்து நிரதிசய இன்பமடைந்து அங்கு என்றும் ஒருபடிப்பட வாழ்வரென்பதாம். பிற-பிறப்பு; முதனிலைத்தொழிற்பெயர். ஆழ்ந்திருப்பது-ஆழி எனக் கடலுக்குக் காரணப்பெயர், இ - கருத்தாப்பொருள்விகுதி; இனி (பிரளயகாலத்தில் உலகங்களை) அழிப்பதென்றும், வட்டவடிவாகவுள்ளதென்றும் பொருள் கொள்ளலாம். காரணகாரியத் தொடர்ச்சியாய்ப் பிறப்பு மேல்மேல் வருதலால், கடலெனப்பட்டது. பிறப்பாகிய கடலென்றதற்கேற்ப, 'முத்தியாகிய கரை' என்றதனால் - ஏகதேசவுருவகவணி. பிறப்பையொழித்து முத்தியைப்பெற வேண்டுதலால், அது அக்கடலைக்கடந்து அடையும் அக்கரையாயிற்று. இனி, "அறவாழியந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால், பிறவாழி நீந்தலரிது" என்ற திருக்குறளில், பிறவாழி என்பதற்கு - 'அதனிற் பிறவாகிய் கடல்கள்' என்று உரைத்துள்ளதனால், அங்ஙனமே இங்கும் பிற ஆழி என்பதற்கு-எம்பெருமானையொழிந்த விஷயார்த்தங்களாகிய கடல்களென்றும் பொருள் கொள்ளலாம்.

அருச்சுனனுக்கு இராச்சியமில்லையாயினும் கீர்த்தியுண்டு; துரியோதனனுக்கு இராச்சியமிருந்தும் கீர்த்தியில்லை என்ற சிறப்பும் இழிவும் தோன்ற, 'பேர்படைத்த', 'பார்படைத்த' என்ற சொற்களால் அவரை முறையே விசேடித்தார். யாவரினுஞ்சிறந்த திருமால் தேரூர்தலாகிய இழிதொழிலை ஏற்றுக்கொண்டு தனது சௌலப்பியத்தைக் காட்டியருளுதற்குக் காரணமாதலால், கண்ணனுக்கு அருச்சுனனிடத்திலுள்ள நட்பு, 'சீர்படைத்த கேண்மை' எனப்பட்டது; அருச்சுனனுக்குத் தேரூர்தலில 'செறிந்தமால் பெறுஞ் சிறப்பு' எனக்கீழ் நிலைமீட்சிச்சருக்கத்திற் கூறியதும் காண்க.

இதுமுதல் முப்பத்துமூன்று கவிகள்-பெரும்பாலும் ஈற்றுச்சீர் இரண்டும் மாச்சீரும், மற்றைநான்கும் காய்ச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (61)

சஞ்சயன் சென்றபின்பு தருமன் கண்ணனை நோக்கிச் சொல்லத் தொடங்குதல்.

2. ஞானமன்பொடினிதுரைத்து ஞானமுனியகன்றதற்பின் சாமபேத, தானதண்டமெனநிருபர்தருமமுறைமையிற்புகலுந் தகுதி நோக்கித், தூநறுந்தண்டுளவோலைத் தூதுவிடுவதற்கெண்ணிச்சூன கடோறு, மேனலந்தண்கிரிப் பெருந்தேனிறைக்குமெழிற் குருநாடனியம்புவானே.

(இ - ள்.) ஞானம் - தத்துவஞானத்தை, அன்பொடு - அன்புடனே, இனிது - இனிமையாக, உரைத்து - (தருமனுக்குச்) சொல்லி, ஞானம் முனி - தத்துவஞானமுடைய சஞ்சயமுனிவன், அகன்றதன்பின் - புறப்பட்டுப்போனபின்பு, —எனல் - இனைப்பயிர்க்கையுடைய, அம் - அழகிய, தண் - குளிர்ச்சியான, கிரி - மலைகள், சூலைகள் தோறும்-சூலைகளிலெல்லாம், பெருந்தேன் நிறைக்கும் - (தம்மிடத்திலுள்ள மலர்களாலும் தேன்கூடுகளாலும்) மிகுதியான மதுவை நிறைக்கப்பெற்ற, எழில் - அழகிய, குருநாடன்-குருநாட்டையுடையவனை யுதிட்டிரன்,—சாம பேத தான தண்டம் என - சாமமும் பேதமும் தானமும் தண்டமும் என்று, நிருபர் தருமம் - இராச தருமத்திலே, முறைமையின் புகலும்-முறையே கூறப்படுகிற, தகுதி-(நால்வகை உபாயங்களின்) தனமையை, நோக்கி - ஆலோசித்து, தூநறுந்தண்துளவோலை தூது விடுவதற்கு எண்ணி - பரிசுத்த குணத்தையும் நல்வாசனையையும் குளிர்ச்சியையுமுடைய திருத்துழாய்மாலையை யுடையவனை கண்ணபிரானை (த் துரியோதனனிடம்) தூதாக அனுப்பும்படி நினைத்து, இயம்புவான் - கூறுபவனை; (எ - று.)—அதை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

அரசற்கு உரிய நான்கு உபாயங்களுள், சாமம் முதலில் உபயோகிக்கத்தக்கதும், மற்றவை அதன்பின் முறையே உபயோகிக்கத் தக்கவையுமாதலால், தருமன், முதலிற் சாமோபாயத்திலே நின்று,

முன்னர் உலூகனைத் தூதனுப்பியதன்மேலும் இப்போழுது கண்ணனையும் தூதனுப்பக்கருதினன் என்க. சாமம் முதலிய முதல் மூன்று உபாயங்களாற் பகைவரை வழிப்படுத்தி அடக்க முடியாத பொழுதே இறுதியுபாயமான தண்டத்தை உபயோகிக்கவேண்டுமென்பது, அரசநீதி.

சஞ்சயன் என்ற பெயர் - (ஐம்புலன்களை) நன்றாக வென்றவனென்று காரணப் பொருள்படும். (இவன் கவல்கணனது குமாரனாதலால், காவல்கணியென்றும் ஒரு பெயர் பெறுவன்.) இவன் - திருதராஷ்டிரனுக்கு மிகவும் இஷ்டனான நண்பன்; இவன் அவனுக்குச் சில சமயங்களில் தேர்செலுத்துதலுமுண்டு. ஞானம் - ஞானத்தைவிளக்குஞ் சொற்களுக்குக் காரியவாகுபெயர். அன்பொடு என்றதனால், சஞ்சயன் துஷ்டரான துரியோதனதியரிடத்திலன்றிச் சாதுக்களான பாண்டவரிடத்து மெய்யன்புடையானென விளங்கும். அன்பொடு என்பதில், உடனிகழ்ச்சிப்பொருளுக்கு உரிய 'ஒடு' எனனும் மூன்றனுருபு - அடைமொழிப் பொருளது; அன்புடையவனாய் என்றபடி. இனிது - இம்மை மறுமைகட்கு இனிமையைத் தருவனவாக என்றவாறு. அகன்றதன்பின், குருநாடன், நோக்கி, எண்ணி, இயம்புவான் என அன்வயங் காண்க. சாமம் - இன்சொற்சொல்லல். பேதம் - மென்மையாலும் வன்மையாலும் பகைவர் மனத்தை வேறுபடுத்தல். தானம் - பகைவர் மனமகிழும்படி கொடுத்தல், தண்டம் - பகைவரைப் போர்செய்து அழித்தே விடுதல். அஃறினை உம்மைத்தொகைக்குப் பன்மையீற்றாலே முடியவேண்டுமென்கிற நியதி இல்லாமையால் சாமபேதான தண்டங்க ளெனப்படவில்லை.

சுனை - ஊற்றுள்ள மலையின் நீர்நிலை. தேன் இறைக்கும் எனப்பதம் பிரித்து, அழகிய குளிர்ந்த மலைகளிலே தினைப்புனத்துச் சுனைகளிலெல்லாவற்றினின்றும் மிக்க தேனை நீராக இறைக்கப்பெற்ற என்றும் உரைக்கலாம். தேனிறைக்கும் நாடு - பெயரெச்சம் இடப்பெயர்கொண்டது. நாட்டிற்கு அழகாவது - அளவிறந்த பொருளுடைமையால் பிறநாட்டவராலும் விரும்பப்படுதல். இனி எழில் - நிலவளம் நீர்வளம் முதலிய வளங்களுமாம். குருநாடு-சந்திரகுலத்துக் குரு வென்னும் அரசனால் சீர்திருத்தியாளப்பட்ட நாடு. பதின்மூன்று வருஷ காலமாக நாட்டையிழந்துள்ள தருமனை இங்கே 'குருநாடன்' என்றது, முன்னே அரசாண்ட பாண்டுவின் முதற் குமாரனும் துரியோதனதியரினும் பிராயத்தில் மூத்தவனும் அவர்களை அழித்தற்கு ஏற்ற ஆற்றலுடையவனுமாகிய இந்த யுதிட்டிரனே அந்நாட்டிற்கு உரியவனென்ற தகுதிபற்றியும், முன்பு அரசாண்டதுபற்றியும், இனி விரைவில் ஆள்வது பற்றியும் என்க. 'சுனைகள் தோறும் ஏனலந்தண்கிரிப் பெருந்தேனிறைக்கு மெழிற் குருநாடு' என நாட்டின் சிறப்புக்கூறவே, அத்தன்மையதான நாட்டை விட்டுக் காட்டுக்குச் செல்ல எவர்க்கும் மனமுண்டா காதென்பது குறிப்பிக்கப்பட்டது. தரும முறைமை - தருமசாஸ்திரமுமாம்; முறைமை - காரியவாகுபெயர்.

(62)

கண்ணனேநோக்கித் தருமன் கூறுதல்.

3. செஞ்சொன்முனி சஞ்சயனுக்கியாமுரைத்த கருமமு முன் சென்றகாலை, யஞ்சொன்முனிபுரோகிதனுக்கவனிசைத்த கருமமுநீ யறிதியன்றே, நஞ்சுதீமிகவருந்தி நன்மருந்து மந்திரமும் விரைந்து நாடாது, எஞ்சினர்தங்களாப்போலவிருக்குமதோ யார்மனத்துமிருக் குஞ்சோதீ.

(இ - ள்.) யார்மனத்தும் இருக்கும் சோதீ -(நற்குணநற்செயல் களின் சிறப்பினாலும் புகழினாலும்) யாவர்மனத்திலும் வீற்றிருக் கின்ற பேரொளியுடையவனே!—செம் சொல் முனி சஞ்சயனுக்கு - நல்வார்த்தைகளை உபதேசித்த சஞ்சயமுனிவனுக்கு, யாம்உரைத்த கருமமும் - நாம் சொன்ன செய்தியையும், அம் சொல் முனி புரோ கிதனுக்கு - அழகிய சொற்களைக் கூறும் புரோகிதனான உலூக முனிவனுக்கு, முன் சென்ற காலை - முன்னே (நமக்காகத்) தூது சென்ற பொழுதில், அவன் இசைத்த கருமமும் - அத் துரியோ தனன் சொன்ன செய்தியையும், (எல்லாவற்றையும்), நீ அறிதி அன்றே - நீ அறிவாயன்றோ? நஞ்சுதீனை மிக அருந்தி - விஷத்தை மிகுதியாக உண்டு, நல் மருந்தும் மந்திரமும் விரைந்து நாடாது - (அவ்விஷத்தை யொழிக்கத்தக்க) சிறந்த மருந்துகளையும் சிறந்த மந்திரத்தையும் விரைவாக [உயிர் நீங்குவதற்குள்ளே] தேடாமல், எஞ்சினர் தங்களை போல - உயிரொடுங்குபவரைப் போல, இருக்கும் அது ஓ - (நாம் யாதொரு முயற்சியும் செய்யாது) இருப்பது தகுதி யோ? (எ - று.)—இதுவும், அடுத்த கவியும் - ஒரு தொடர்.

"இன்று பூசைபோல் இருந்துழியுரைக்கும் ஈது இகலதன்று இருவர்க்கும், துன்று பூசலிற் காணலாம் ஆண்மையும் தோள்வலி மையும்" என்றும், "எமதே பார், தங்கள் கானகம் தமது" என்றும் துரியோதனனும், "என்னறத்தில் நின்று தெவ்வரை யிருவிசும் பினி லேற்றினால், பின்னறத்தினில் நீனவுகூரும்" என்றுயானும், "பாரமான சுயோதனுதியரென்னும் நூறு பசுப் படுத்து" என்று வீமனும், "இவர்களிப் பூமியாளுதல் அவர்களுக்கு அமருலக மேறுதல் புரிதவம்" என்று நீயும் கூறியதெல்லாம் உனக்குத் தெரியும்; இங்ஙனமிருக்க, இராச்சியத்தைப் பெறுதற்பொருட்டுத் தக்க உபாயத்தைச் செய்யாமலிருப்பது தகுதியன்று; அபாயத் திற்கே காரணமாம் என்று தருமன் கண்ணனை நோக்கிக் கூறினன் என்க. விரைவில் அதற்கு வேண்டிய மந்திராலோசனை செய்து முடிவு துணியவேண்டுமென்பது கருத்து.

யாம் - நானும் நீயும் வீமனும் என்க. செஞ்சொல் - இதமான சொல். முனி சஞ்சயன், முனி புரோகிதன்-முன்பின்னாகத் தொக்கு வந்த இருபெயரொட்டுப்பண்புத்தொகை; இதில், பொதுப்பெயர் முன்னும், சிறப்புப் பெயர் பின்னும் நின்றவாறு காண்க. தூத லக்ஷணத்தின்படி சமயோசிதமாக ஆராய்ந்து ஒழுங்கான சொற்களை உரைக்கத்தக்கவனென்பார், 'அஞ்சொல் முனிபுரோகிதன்' என்றார். அன்றே - தேற்றம். பின்னிரண்டடியிற்கூறிய உவமை - அபாயத்

திற்குக் காரணமான பகையை மிகமூட்டி அதனை ஒழித்தற்கு ஏற்ற உபாயங்களைத் தேடாதிருத்தலே விளக்கும். நல் மருந்து - உயிர்தரும் மருந்து. மந்திரம் - விஷமந்திரம். ஓ - எதிர்மறை. சோதீ, ஈறு நீண்டவிளி. 'யார்மனத்து மிருக்குஞ் சோதீ' என்றது பேதையரோடு ஞானியரோடு வாசியற அனைவரும் அறிந்து மனங்கொள்ளத்தக்க இவ்விய மகிமையையுடையவன் கண்ணபிரானென்பதைக் காட்டும்: மற்றும் இத்தொடர்-யாவரது மனத்திலும் அந்தர்யாமியாய் எழுந்தருளியிருக்கின்ற ஒளிவடிவ மானவனென்னும் பொருளையும் பெறும். எல்லார் கருத்தையும் நீ நன்கு உணர்ந்தவனைதலால் உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை யென்றற்கு, 'யார்மனத்து மிருக்குஞ் சோதீ' என விளித்ததுமாம். ()

தருமனையும் அவன் தம்பியரையும் நோக்கிக் கண்ணன் ஒன்று சொல்லத் தொடங்குதல்.

4. அருஞ்சமரம் புரியும்வகை யவருரைத்தாரானலு மறமொன் றின்றிப், பெருஞ்சமரம் விலக்குமதுகடனன்றென்றருள் வெள்ளம்பெரு கக்கூறும், பொருஞ்சமரநெடுமுரசப் பூங்கொடியோன் றனைநோக்கிப் புயப் போர்வாண, னிருஞ்சமரந் தொலைத்தபிரானிளைஞரையுமுட னிருத்தி யியம்புவானே.

(இ - ள்.) அருஞ் சமரம் புரியும் வகை - அருமையான போரைச் செய்யும்படி, அவர் உரைத்தார் ஆனலும் - அத்துரியோதனாதியர்கள் கூறினராயினும், அறம் ஒன்று இன்றி - சிறிதும் தருமமில்லாமல், பெருஞ் சமரம் விலக்குமது - (பலர்க்கு அழிவுண்டாகப்) பெரிய போரைச் செய்வது, கடன் அன்று - நீதியன்று, என்று—, அருள் வெள்ளம் பெருக கூறும் - கருணைப் பெருக்கு மிகச் சொல்லுகிற, பொரும் சமரம் நெடு முரசம் பூ கொடியோன் தனை நோக்கி - மோதுகின்ற போருக்கு உரிய பெரிய பேரிகையின் வடிவத்தை யெழுதிய அழகிய கொடியையுடையவனை யுதிட்டிரனைப் பார்த்து, —புயம் போர் வாணன் இருஞ்சமரம் தொலைத்த பிரான் - (ஆயிரங்) கைகளாலும் போர் செய்யவல்ல பாணாசுரனது பெரியபோரை ஒழித்திட்ட கண்ணபிரான்,—இளைஞரையும் உடன் இருத்தி - (அத் தருமனது) தம்பியர் நால்வரையும் கூட இருக்கச்செய்து, இயம்புவான் - (சில வார்த்தை) சொல்பவனானன்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

தருமபுத்திரன் மகாசாந்துவும் கருணைக்கடலுமாதலால் பல பேர்க்கு அழிவு உண்டாகுமாறு போர்செய்து அரசுபெற விரும்பு தலின்றிச் சமாதானத்தையே முக்கியமாகக்கொண்டு பேசின னென்க; மேலும் இது காண்க.

பிறவுயிரைக் கொல்லுதல் எல்லாத் தருமங்களுள்ளுஞ் சிறந்த கருணையின் ஒழிவேயாதலால், 'அறமொன்றின்றி' எனப்பட்டது. பூங்கொடி - அழகையுடைய கொடி யென்றல், இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் தொக்கதொகை; அழகாகிய கொடி யென்றல், பண்புத்தொகை. தனது வெற்றிக்கு அறிகுறியாகவும், மங்கலகர

மாகவும் தருமன் முரசத்தைக் கொடியிற் கொண்டனன். ஸமரம், முரஜம், புஜம், பாணன் - வடசொற்கள்.

வாணன் சமரத்தைத் தொலைத்த வரலாறு—பலிசக்கரவர்த்தியின் சந்ததியிற் பிறந்தவனை பாணசுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள் ஒருநாள் ஒருபுருஷனோடு தான் சேர்ந்ததாகக் கனாக் கண்டு, அவனிடத்தில் மிக்க ஆசைப்பட்டவளாய்த் தன் உயிர்த் தோழியான சித்திரலேகைக்கு அசசெய்தியைத் தெரிவித்து, அவள் மூலமாக, அந்தப்புருஷன் கிருஷ்ணனுடைய பௌத்திரனும் பிரத்யும்னனது குமாரனுமாகிய அநிருத்தனென்று அறிந்து கொண்டு 'அவனைப்பெறுதற்கு உபாயம் செய்யவேண்டும்' என்று அத்தோழியை வேண்ட, அவள் தன் யோகவித்தை மகிமையினால் துவாரகைக்குச்சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டுவந்து அந்தப் புரத்திலே விட, உஷை அங்கு அவனோடு இருக்க, இச்செய்தியைக் காவலாளரால்றிந்த அந்தப் பாணன் அநிருத்தனை நாகாஸ்திரத்தினாற் கட்டிப்போட்டிருக்க, துவாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாரும் கலங்கியிருந்தபோது நாரதமகா முனிவனால் நடந்தவரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீகிருஷ்ணபகவான், தனக்கு வாகனமான கருடனை நினைத்தருளி, உடனே வந்து நின்ற அக்கருடரழ்வானது தோளின்மேலேறிக்கொண்டு, பலராமன் முதலானோடுகூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளிப் பெரும்போர் செய்து சுதர்சனமென்கிற தனது சக்கரத்தைப் பிரயோகித்துப் பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாக இருக்கையில், சிவபிரான் வேண்டியபடி அவ்வாணனை நான்குகைகளோடும் உயிரோடும் விட்டருளின னென்பதாம்.

இடப்பக்கத்துக்கை ஐந்நூற்றிலும் ஐந்நூறுவிற்பிடித்து வலப்பக்கத்துக்கை ஐந்நூற்றிலும் அம்புகள் தொடுத்துப் போர் புரிபவனதலால், 'புயப்போர் வாணன்' என்றார். (பிரான் என்பதன் பெண்பால் - பிராட்டி.) இளைஞரென்ற சொல்லில், பாண்டவர்மனைவியான திரௌபதியையும், சாத்தகியையும் அடக்கவேண்டும்; அவர்கள் உடனிருந்தது, 41, 48 - ஆங் கவிகளில் விளங்கும். இளைஞர்-இளமையென்னும் பகுதி, ஈறுபோய் இடை அகரம் ஐயாயிற்று; ஞ-பெயரிடைநிலை; உம் - இறந்தது தழுவிய எச்சம். (64)

இதுவும் அது.

5. செய்வரால்வினமுகளுந்திருநாடுபெறநினைவோசென்றுமீளப், பைவராயருங்கானிற் பயின்று திரிதரநினைவோ பகைத்தபோரில், உய்வராரெனவிரைவினுருத் தெழுந்துபொரநினைவோ வுண்மையாக, ஐவராமவனிபர்க்கு நினைவே தென்றருள் புரிந்தானமரர்கோமான்.

(இ - ள்.) 'செய் - கழனிகளிலே, வரால் இனம் - வரால்மீன்களின் கூட்டம், உகளும் - துள்ளப்பெற்ற, திரு நாடு - அழகிய குருகாட்டை, பெற-(சமாதானத்தாற்) பெற்றுக்கொள்ள, நினைவோ-

எண்ணமோ? மீள சென்று - மறுபடியும் போய், பைவர் ஆய் - துன்பமனுபவிப்பவராய், அருங் காளில் - (வசித்தற்கு) அருமையான காட்டிலே, பயின்று திரிதர - பொருந்திச் சஞ்சரிக்க, நினைவோ - எண்ணமோ? பகைத்த போரில் - (ஒருவரோடொருவர்) பகைத்துச் செய்கிற யுத்தத்தில், உய்வர் ஆர் என - ('நமக்குள திரிற்) பிழைப்பவர் யார்?' என்றுகருதி, விரைவின் - விரைவாக, உருத்து எழுந்து - கோபங்கொண்டு புறப்பட்டு, பொர - போர்செய்தற்கு, நினைவோ - எண்ணமோ? ஐவர் ஆம் அவனிபர்க்கும் - ஐந்து அரசர்களுக்கும், உண்மை ஆக நினைவு ஏது - மெய்ம்மையாக எண்ணம் யாது?' என்று—, அமரர் கோமான் - தேவர்கட்குத் தலைவனன கண்ணபிரான், அருள்புரிந்தான் - கருணையோடு வினவியருளினன்;

'போரின்றிச் சமாதானத்திலே இராச்சியங் கிடைப்பதாலல் மாத்திரம் அதனைப்பெற்றுக்கொண்டு வாழப் பிரியமா? அல்லது, மூன்று பன்னிரண்டு வருஷம் வாசஞ்செய்து பழகியுள்ள கொடிய வனத்திற்கே மீளவுஞ்சென்று ஆயுளுள்ளவளவும் அங்குச் செல்வ மின்றி வறுமைத்துன்பத்துடனே வசிக்கப் பிரியமா? அன்றி, மானத்தையும் வீரத்தையுமே முக்கியமாகக் கொண்டு துணிவாகச் சென்று துரியோதனாதியரை யெதிர்த்துப் போர்செய்து வென்று இராச்சியத்தைப் பெறப் பிரியமா? உங்கட்குத் தனித்தனியுள்ள உத்தேசத்தைச் சொல்லுங்கள்' என்று கண்ணபிரான் பஞ்சபாண்டவரை நோக்கி வினவியருளினன் என்பதாம். மூன்றும் வாக்கியத்தில் 'பொர' என வருதலால், முதல் வாக்கியத்தில் 'பெற' என்றது சமாதானத்தாலென்றதாயிற்று. கழனியை 'செய்' என்பது - பன்றிநாட்டார் வழங்குந் திசைச்சொல்; செய் - கழனியாதலை 'நன்செய்', 'புன்செய்' என்ற விடங்களிலும் காண்க. வரால் என்னது 'வராலினம்' என்றதனால், வாளை கயல் மலங்கு முதலிய மற்றும் பலசாதிகள் கொள்ளப்படும். "செய்வராலினமுகளும்" என்றதனால் நிலவளத்துக்குக் காரணமான நீர்வளத்தின் மிகுதி கூறியவாறு. திருநாடு - செல்வம் நிரம்பிய நாடுமாம்.

ஓகாரம் மூன்றும் - ஐயவினா. பைவு - பை என்னும் பகுதியடியாப்பிறந்த தொழிற்பெயர்; வருந்துதலென்று பொருள்; (இதுதல் விகுதி பெற்று, பைதல் எனவும் நிற்கும்.) அதனையுடையவர் - பைவர். 'உய்வரார்' என்றது, எவரும் நமக்குமுன் எதிர்ப்பவர் பிழையாரென்ற துணிவை விளக்கும். ஐவராம் அவனிபர் - பஞ்சபாண்டவர்க்குத் தொகைக் குறிப்பு; இது - இங்கே, முன்னிலையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. அரசர்களான உங்களைந்து பேர்க்கும் என்க. அவனிபர் என்ற சொல் - பூமியைக் காப்பவரென்று பொருள்படும். அவனி - பூமி. அமரர் - (அமிருதமுண்டதனால்) மரணமில்லாதவர்; அமரர்கோமான் - தேவாதிதேவன். (65)

சமாதானத்திற் காரியத்தை முடிக்கவேண்டுமென்று தருமன் கண்ணனை நோக்கிக் கூறுதல்.

66. வயிரமெனுங் கடுந்தெருப்பை மிகமூட்டி வளர்க்கினுயர் வரைக்காடென்னச்,செயிரமரில் வெகுளிபொரச் சேரவிருதிறத்தேமுஞ்

சென்றுமாள்வேம், கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனக்குருநாட்டிற் கலந்துவாழ, வுயிரனீயாய் . சந்துபடவுரைத்தருளென்ருனத்தினுருவம்போல்வான்.

(இ - ள்.) 'உயிர் அனீயாய் - (எங்கட்கு) உயிரை ஒத்தவனே!— வயிரம் எனும் கடுநெருப்பை - பகைமையாகிய கொடியதீயை, மிக மூட்டிவளர்க்கின் - மிகுதியாக மூளச்செய்து விருத்திபண்ணினால், உயர் வரை காடு என்ன - உயர வளர்ந்த மூங்கிற்காடு (தானே அழிதல்) போல, செயிர் அமரில்-உக்கிரமான யுத்தத்தில், வெகுளி பொர - கோபத்தோடு போர்செய்தலால், சேர - ஒருசேர, இருநிறத்தேமும் - (துரியோதனுதியரும் நாங்களுமாகிய) இரண்டு பக்கத்தாரும், சென்று மாள்வேம் - போய் அழிவோம்; (அங்ஙனம் அழியாமல்),—கயிரவமும் தாமரையும் கமழ்பழனம் குருநாட்டில் - ஆம்பல் மலர்களும் தாமரை மலர்களும் வாசனீ வீசுகின்ற கழனிகளையுடைய குருநாட்டிலே, கலந்து வாழ-(நாங்கள் ஒருவரோடொருவர் பகையின்றிக்) கூடிவாழும்படி, சந்துபட-சமாதானமுண்டாக, உரைத்தருள்-(நீ அவர்கட்குத் தூது) சொல்லியருள்வாய்,' என்ருன்-என்று (கண்ணனீ நோக்கிச்) சொன்னனன்: (யாவனெனில்,)—'அறத்தின் உருவம் போல்வான் - தருமத்தினது வடிவத்தையொத்தவனனயுதிட்டிரன்; (எ-று.)

"வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கின்" என்றவிடத்து உருவகமும், 'வரைக்காடென்னமாள்வேம்' என்றவிடத்து உவமையும் உள்ளன. மூங்கிற் கூட்டம் ஒன்ரோடொன்று உராய்ந்து தீப்பற்றி எல்லாம் அழிதற்கு உவமை. வீரரின் தன்மை - வைரம். அது - வயிரம் என முதற் போலிபெற்றது; கயிரவம் என்பதும் இவ்வாறே; சேர்ந்தாரைக்கொல்லுதலால், வைரம் நெருப்பாக உருவகப்படுத்தப்பட்டது; "சினமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லி யினமென்னும், ஏமப் புணீயைச் சுடும்" என்ரூர் திருவள்ளுவரும். மூட்டி, மூள் என்பதன் பிறவினீயான மூட்டு - பகுதி. வரையென்னும் கணுவின்பெயர், அதனீயுடைய மூங்கிலுக்குச் சினீயாகுபெயர். இருநிறத்தேம் - படர்க்கையை உளப்படுத்திய தன்மைப்பன்மை. பகலிலே சூரியனீக்கண்டு மலரத்தக்க தாமரையும், இரவிலே சந்திரனீக் கண்டு மலரத்தக்க ஆம்பலும் ஒருங்கு கூடியுள்ள கழனிகளையுடையதென நாட்டை வருணித்ததனால், ஒன்றுக்கு ஒன்று மாறுபாடுள்ள அசேதனங்களும் ஒற்றுமைபபட்டு வாழுமிடத்து, பகுத்தறிவுடைய மனிதருள்ளுஞ் சிறந்த அரசராகிய நாங்கள் கூடி வாழாதிருப்பது தகுதியோ? எனக் குறிப்பித்தபடி.

பாண்டவர்க்குக் கண்ணன் உயிரோடொத்த நண்பனுதலாலும், உடம்பினுள் உயிர்போல உயிர்க்குள் உயிராய்ப் பரமாத்மா ஜீவாத்மாவினிடத்து அந்தர்யாமியாய்த் தங்குதலாலும், 'உயிரனீயாய்' என்றது ஏற்கும். அறத்தினுருவம் போல்வான் - நூல்களிற் கூறப்பட்ட தருமங்களெல்லாம் நிறைந்தவனென்றபடி. (66)

7.—சமாதானத்திற்கு வராத அவர்களை அழிப்பது தகுதியென்று கண்ணன் கூறுதல்.

அரவுயர்த்தோனுடன் மறுசூதாடிநீர் வென்றவந்நாளவன்ருன் சொன்ன, விரதமொழிதவிராமல் வெங்கானம் போய்மீண்டீர் வெய்யோனுங்கள், குருநிலத்திற்பாதியினிக் கொடாதிருந்தாலாங்கவனைக் கொன்றுபோரில், இருநிலத்தையாளவினித் துணிவதே கடனென்ரு னெம்பிரானே.

(இ - ள்.) 'அரவு உயர்த்தோனுடன் - பாம்புக்கொடியை உயர எடுத்தவனை துரியோதனனுடனே, மறு சூது ஆடி - இரண்டாம் முறை சூதாட்டமாடி, நீர் வென்ற அந்நாள் - (அவ்வாட்டத்தில்) நீங்கள் சயித்த அக்காலத்தில், அவன்தான் சொன்ன-அத்துரியோதனன் கூறிய, விரதம் மொழி-கட்டளையாகிய வார்த்தை, தவிராமல்-தப்பாமல், வெம் கானம் போய் மீண்டீர்-கொடிய வனத்திற்கு(ப் பல வருஷகாலஞ்)சென்று திரும்பி வந்து விட்டீர்கள்; இனி-இப்பொழுது, வெய்யோன் - கொடுமையுடையவனை துரியோதனன், உங்கள் குரு நிலத்தில் பாதி - குருநாட்டில் உங்களுக்கு உரிய அரைப்பங்கை, கொடாது இருந்தால்-கொடாமலிருப்பானுனால், ஆங்கு - அவ்விடத்தில், அவனை - அந்தத் துரியோதனனை, போரில் - யுத்தத்தில், கொன்று—, இரு நிலத்தை - இருநிறத்தாருடைய இராச்சியத்தையும் [பூமிமுழுவதையும்], ஆள - அரசாளும்படி, துணிவதே-நிச்சயிப்பதே, இனி கடன் - இனிமேற் செய்தற்கு உரிய கடமையாம்,' என்ருன் - என்று கூறினன், (யாவனெனில்),—எம்பிரான் - நமக் கெல்லாந் தலைவனுகிய கண்ணபிரான்; (எ - று.)

'மறுசூதாடிவென்ற' என்றது, முதலில் ஆடிய சூதாட்டங்களில் தோற்றுத் தாங்கள் அனைவரும் துரியோதனனுக்கு அடிமைப்பட்ட தன்மை நீங்குமாறு திரௌபதியின் வார்த்தைப்படி தருமபுத்திரன் மீண்டும் ஓராட்டமாடி அதில் வென்று அடிமையொழிந்ததை; 'அந்நாள் அவன்தான் சொன்னவிரதமொழி' என்றது - அதற்கு முன் அவன் "தந்தைதனருளாற் பெற்றீ ருரிமையுந் தம்பிமாரும், பைந் தொடிதானும் நீயும் பதிபெயர்ந்து உயர்ந்தவேயின், வெந்தழலனைய கானின வெளிப்படாதுறைமின் இன்றே, இந்தமாதரணிகைவிட் டேகுமி னெழுமி னென்ருன்"என்றதை, 'வெங்கானம் போய் மீண்டீர்' என்றதில் அஜ்ஞாதவாசமும் அடக்கப்பட்டது. 'விரதமாவது - இன்ன அறம் செய்வேனென்றும், இன்னபாவம் ஒழிவேனென்றும் தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்துகொள்வது' ஆதலின், இங்கே பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அஜ்ஞாதவாசமும் செய்துதீர்வோ மென்று தருமன் உறுதிப்பாடு செய்துகொள்ளுதற்குக் காரணமாகத் துரியோதனன் சொன்னவார்த்தை, 'விரதமொழி' எனப்பட்டது. விரதம் - நியமமென்றபடி. இனி, மாஸம் - மாதம், ச்வாஸம் - சுவாதம் என்பனபோல, விரஸ மென்னும் வடமொழி விரதமெனத் திரிந்ததாகக் கொண்டு, இனிமையில்லாத பேச்சு எனவும் கொள்ளலாம்.

தனது கொடுமைக்கு அறிகுறியாகத் துரியோதனன் பாம்பைத் தனது கொடியிற் கொண்டனன்; அது - அவனது நன்றியறி வின்மை, எப்பொழுதும் வக்கிரகதியிற்செல்லுந் தன்மை, நாவிரண் டுடைமை என்பவற்றிற்கும் அறிகுறியாகின்றது. 'அரவுயர்த்தோன்' என்ற விடத்தில் அரா என்ற குறியதன் கீழ் ஆக் குறுகிற்று. பாதி-பகுதி என்பதன் மரூஉ. கீழ்த் தருமன் 'அறமொன்றின்றிப் பெருஞ் சமரம் விளைக்குமது கடனன்று' என்றதைக் கண்ணன் 'ஆங்கவனைக் கொன்று போரில் இருநிலத்தையாள வினித்துணிவதே கடன்' என மறுத்துக் கூறினன். கொலை பொதுப்படக் கொடியதாயினும், சத்தி யத்திற்குக் கட்டுப்படாத அவனைக் கொல்வது பாவமாகாது தரும-தின் பாற்படு மென்றபடி. 'எம்பிரான்' என்பதில்—எம் என்ற பன்மை - எல்லா வுயிர்களையும் உளப்படுத்தியது, 'இனி' என்ற இடைச்சொல் - மூன்றாமடியில் நிகழ்காலமும், நான்காமடியில் எதிர் காலமும் காட்டிற்று. (67)

8.—'பலரைக் கொல்லுமாறு போர்செய்வது தகுதியன்று' என்று தருமன் கூறுதல்.

குரவரையுங் கிளைஞரையுங் குலத்துரியதுணைவரையுங்கொன்று போர்வென்று, அரவநெடுங்கடலாடையவனி யெலாந்தனியாளுமரசு தன்னிற், கரவுறையுமனத்தாதைமுனிக்குரைத்தமொழிப்படியேகானந் தோறும், இரவுபகற்பலமூலசாகநுகர்ந்துயிர்வாழ்தலினிதுநன்றே.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) குரவரையும் - பெரியோர்களையும், கிளைஞரையும் - உற வினரையும், குலத்து உரிய துணைவரையும் - ஒரு குலத்திலே பிறந்த (அன்பு செய்தற்கு) உரிய தம்பிமார்களையும், போர் - யுத்தத்திலே, கொன்று - வென்று சயித்து, அரவம் நெடுங் கடல் ஆடை அவனி எலாம் - ஆரவாரத்தையுடைய பெரியகடலை ஆடையாகவுடைய பூமி முழுவதையும், தனி ஆளும் - (மற்றொருவருமின்றித்) தனியே அர சாளுகின்ற, அரசு தன்னின் - அரசாட்சியைக் காட்டிலும்,—கரவு உறையும் மனம் தாதை - வஞ்சனை பொருந்திய மனத்தையுடைய பெரியதந்தையான திருதராட்டிரன், முனிக்கு உரைத்த - சஞ்சய முனிவனிடத்துச் சொல்லியனுப்பிய, மொழி படியே - சொல்லின் படியே, கானம் தோறும் - காடுகள்தோறும், (சென்று), இரவு பகல்-இராத்திரியிலும் பகலிலும், பலம் மூலம் சாகம் நுகர்ந்து - பழங்களை யும் கிழங்குகளையும் இலைகளையும் உண்டு, உயிர் வாழ்தல் - பிழைத் திருத்தல், இனிது நன்றே - மிகவும் நல்லதேயாம்; (எ - று.)—அரசு தன்னின், உயிர்வாழ்தல், இனிது நன்று என்க.

குரவர் என்றது - (பெரியபாட்டனாகிய) பீஷ்மர், (முதலாசிரிய ராகிய) கிருபர், (இரண்டாமாசிரியராகிய) துரோணர், (அவர்தமக னை) அசுவத்தாமா, (சிற்றப்பனாகிய) விதுரன் முதலியோரை. குரவர்-குரு என்பதன் பன்மையான குரவர் என்னும் வடசொல்லின் திரிபு. கிளைஞர் என்றது சகுனி முதலியோரை. கிளைஞர் என்ற சொல்லில், ஞ்பனரும் அடங்குவர். கிளைஞர் - மரத்துக்குக் கிளைபோல ஒருவ

னுக்கு அங்கமாகுபவர் எனக் காரணப்பெயர். துணைவர் - துரியோதனாதியர். அரவம் - ரவமென்னும் வடசொல், ரகரத்துக்கு அகரம் மொழிமுதலாக முன்வரப் பெற்றது. இனி, அரவமென்பதை - அரா என்னுந் தமிழ்மொழியின் விகாரமாகிய அரவு என்பது அம் சாரியை பெற்ற தெனக்கொண்டு, அரவம் - ஆதிசேஷனால் சுமக்கப்பட்ட, அவனி - பூமி யென்னலுமாம். பூமியைச்சூழ்ந்த கடலை, பூமியாகிய பெண் உடுக்கும் ஆடையாகக் கூறுதல், கவிமரபு. அவநம்-காத்தல்; எனவே, அவனி - காரணப்பெயர். இங்கு, எலாம் என்ற பெயர் - பொருளின் பன்மை குறியாமல் ஒரு பொருளின் பலவிடங் குறித்தது.

தாதை - தாத என்னும் வடசொல்லின் திரிபு. இரவு பகல்-உம்மைத்தொகைமேல் வந்த ஏழாம்வேற்றுமைத்தொகை. பலமூல சாகம் என்ற உம்மைத்தொகை - வடநூல் முடிபு. இனி, பல என்பதைத் தமிழாகக் கொண்டு அநேகமாகிய வேர்களையும் தழைகளையும் என்னவுமாம். இனிதுநன்று - ஒருபொருட்பன்மொழி. இங்கே, மிகுதி குறித்தது. இனி, இம்மைக்கு இனிது, மறுமைக்கு நன்று என்றதாகவும் கருத்துக் கொள்ளலாம். "நன்று பெரிதாகும்" என்ற தொல்காப்பியத்தால், நன்று என்பது-பெரிதென்னும் பொருளதாதலால், நன்று இனிது என இயைத்து, மிகவும் இனியது என்றுமாம். (68)

9.—'அது தகுதியன்று' என்று கண்ணன் கூறுதல்.

கோதிலா னிந்தமொழிகூறுதலு மாமாயன் கூறலுற்றான், மோத மருக்கிளைத்துநீர் மொய்த்தபெருங் கானகத்தே முடுகிச்சென்றால், பூதலத்தோரேசாரோ புகன்றபெரு வஞ்சினமும் பொய்த்திடாதோ, நீதியோவெனவுரைத்தா னுங்கதற்கு நிகழ்தருமனிகழ்த்த லுற்றான்.

(இ - ள்.) கோது இலான்-குற்றமில்லாதவனை தருமபுத்திரன், இந்த மொழி - இவ்வார்த்தையை, கூறுதலும் - சொன்னவளவிலே, மா மாயன் - மிக்க மாயையையுடையவனை கண்ணன், கூறல் உற்றான் - சொல்லத் தொடங்கினவனாய்,—நீர் - நீங்கள், மோது அமருக்கு இளைத்து - தாக்கிச் செய்யும் போருக்குப் பின்னிடைந்து, மொய்த்த பெரும் கான் அகத்தே - அடர்ந்த பெரிய காட்டினிடத்திலே, முடுகி சென்றால் - விரைந்து செல்வீர்களானால், பூதலத்தோர் ஏசாரோ - பூமியிலுள்ளவர் யாவரும் இகழ மாட்டார்களோ? புகன்ற பெரு வஞ்சினமும் பொய்த்திடாதோ - (திரௌபதியைத் துகிலுரிந்த காலத்தில் நீங்கள் சபையிற்) சொன்ன பெரிய சபதமும் பொய்யாகிவிடாதோ? நீதியோ-(நீங்கள் அப்படிச்செய்வது) ராஜதருமமாகுமோ?' என - என்று, உரைத்தான்-கூறியருளினான்; ஆங்கு - அப்பொழுது, அதற்கு-அக்கண்ணன் வார்த்தைக்கு, (உத்தரமாதை), நிகழ் தருமன்-விளங்குகிற யுதிட்டிரன், நிகழ்த்தல் உற்றான் - கூறத்தொடங்கினான்; (எ - று.)—அதனை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

துரியோதனன் சகுனியைக்கொண்டு சூதாடி வென்று பாண்டவரை அடிமைப்படுத்தியபின் திரௌபதியைத் துச்சாதனனைக் கொண்டு கூந்தல் பிடித்து இழுத்துவந்து துகிலுரிந்தும், மடியின்

மேல் உட்காரென்று சொல்லியும் பங்கப்படுத்தியும் பொழுது, திரௌபதி 'அத்தொடை வழியாகத் துரியோதனனுக்கு உயிர் நீங்குக' என்று சபித்து, 'துரியோதனனுடையர் நூற்றுவரையும் கொன்று வெற்றிமுரசறையும் பொழுதே விரித்த கூந்தலே யான் எடுத்து முடிப்பேன்' என்று பிரதிஜ்ஞைசெய்ய, அப்பொழுது 'துரியோதனனுடையர் நூற்றுவரையும் நானே கொல்வேன்' என்றும், 'துச்சாதனனைக் கொன்று அவனுடம்பி னிரத்தத்தைக் குடிப்பதன்முன் கையினால் நீரெடுத்துக் குடிப்பதில்லை' என்றும், 'எனது கதையுதத்தால் நீரை யடித்து அங்குத் தெறிக்கும் துளிகளையே உண்டு உயிர்வாழ்வேன்' என்றும் வீமனும், 'இங்ஙனம் துரியோதனன் துஷ்டகாரியம் செய்தற்குப் பெருந்துணையாய் நின்ற கர்ணனைப்போரிற் கொல்வேன்' என்று அருச்சுனனும், சகுனியின் தந்தையைத் தான் கொல்வதாக நகுலனும், சகுனியைக் கொல்வதாகச் சகதேவனும் சபதஞ் செய்ததைக் கீழ்ச் சூதுபோர்ச்சருக்கத்திற் காண்க. போரில்லாவிடின் இச்சபதமொன்றும் நிறைவேறு தாதலால், 'புகன்றபெரு வஞ்சினமும் பொய்த்திடாதே' எனப்பட்டது. கொடியபகைவரைக் கொல்லுதற்குக் கூசுதலும், இராச்சியத்தைப்பெற முயலாமையும், சபதந் தவறுதலும் (அரசர்க்குச் சிறிதுந் தருமமல்ல வாதலால்) 'நீதியோ' என்றார். லோகாபவாதத்திற்குப் பயப்படுவது எல்லாவற்றினும் முக்கியமாதலால், பூதலத்தோரேசாரோ என அதனை முதலிற் கூறினன்.

கோது - மனமொழி மெய்களின் குற்றங்களாகிய தீயசிந்தை, தீயசொல், தீய்செயல் என்பன. மாயையையுடையவன், மாயன்; மாயையாவது - செய்தற்கு அரியன செய்யுந் திறம்; பிரபஞ்சகாரணமான மூலப்பிரகிருதியுமாம்; ஆச்சரியகரமான குணங்களும் செயல்களு மென்னலுமாம். இனி, மாயைபோலக் கருநிறமுடையானென்றும் கொள்வர். ஏசாரோ - தவறுமல் ஏசுவர்; இரண்டு எதிர்மறை - உடன்பாட்டோடு தேற்றமும் உணர்த்திற்று: பொய்த்திடாதே என்பதிலும் இவ்வாறே; பொய்க்கவே பொய்க்குமென்க. அமர்-ஸமர மென்ற வடசொல்லின் விகாரம். நிகழ்தல் - ஒளி செய்தல். (69)

10.— இதுவும், மேற்கவியும் - கண்ணனுக்குத் தருமன் தூது பேசும் விதங் கூறுதல்.

நீதூதுநடந்தருளி யெமதுநினைவவர்க்குரைத்தானினைவின்வண்ணந்
தாதூதியளிமுரலுந் தண்பதியுந் தாயமுந்தான் ருராஞகின்
மீதூதுவகோக்குலமும் வலம்புரியுமிகமுழங்கவெய்யகாலன்
மாதூதர்மனங்களிக்கப்பொருதெனினும் பெறுவனிது வசையுமன்றே.

இதுமுதல் மூன்று கவிகள்-ஒரு தொடர்.

(இ - ள்.) நீ -, தூது நடந்தருளி - (எங்களுக்காகத் துரியோதனனுடையரிடம்) அருளுடன் தூது சென்று, எமது நினைவு அவர்க்கு உரைத்தால் - எங்களுடைய எண்ணத்தை அவர்கட்குச் சொன்னால், நினைவின் வண்ணம் - (நமது) எண்ணப்படி, தாது ஊதி அளிமுரலும் தண் பதியும் - பூ விதழ்களை (வாயினால்) ஊதி வண்டுகள்

ஒலித்தற்கு இடமான குளிர்ச்சியாகிய நாட்டின் பாகத்தையும், தாயமும் - அப் பங்குக்கு உரிய செல்வ அதிகாரங்களையும், (துரியோதனன்) கொடுப்பான்; தான் தர்ரான் ஆகில் - அவன் (அப்படி நமக்குக்) கொடாமற் போவானுனல், மீது - அதற்கு மேல்,—ஊது வகீ குலமும் - ஊதப்படுகிற (சாதாரணமான) சங்குகளின் கூட்டங்களும், வலம்புரியும் - (சிறந்த) வலம்புரிச் சங்குகளும், மிக முழங்க-மிகுதியாக ஒலி செய்யவும், வெய்ய காலன் மா தூதர் மனம் களிக்க-கொடிய யமனது பெரிய தூதர்கள் மனம் மிக மகிழவும், பொருது எனினும் - போர்செய்தாயினும், பெறுவன் - (இராச்சியத்தைப்) பெறுவேன்; இது - இங்ஙனம் முதலிற சமாதான வழியை முயன்று அது கூடாவிட்டால் பின்பு போர் செய்வது, வசையும் அன்றே - பழியுமாகாதே; (எ - று.)

இப்படிச் செய்வதில் குரவர்முதலியோரைக் கூசாது கொன்ரு னென்ற பழிப்பும் போருக்கு அஞ்சி வனம்புகுந்தானென்ற பழிப்பும் ஆகிய இரண்டுக்கும் இடமில்லை யென்ற கருத்தால், 'வசையு மன்று' என்ருன். முதல் மூன்று உபாயங்களில் வழிப்படாத எதிரிகளை முடிவில் தண்டோபாயத்தால் தொலைத்தல் இராஜநீதியாதலால் அது பழிபாவங்கட்கு இடமாகாது என்பது கருத்து. பொறுமையில்லாமல் உறவினர்களை அழிக்கத் தொடங்கி விட்டோ மென்று பின்பு ஒருவர் சொல்லுதற்கு இடமில்லாதபடி பகைவர் கொள்கையை முழுதும் தெளிவாக முன்னமே அறிந்திடுதல் அவசியம்; ஆதலால், முன் ஒருமுறை புரோகிதன் தூதுசென்றதையன்றி மீண்டும் ஒருமுறை எல்லாவுபாயங்களிலும் வல்லவனை நீயே நேரிற் சென்று தந்திரமாகக்கேட்ட பின்பும் துரியோதனன் இராச்சியபாகம் கொடுத்திடாது மறுப்பனுயின் அதன் பிறகு நாம் அப் பக்கத்தாரைப் போரில் அழிப்பது தவருகாது: ஆனதுபற்றி, நீ எங்கட்காக ஒருகால் தூது சென்றருளவேண்டும் என்று வேண்டியபடி.

நினைவின் வண்ணம் தர்ரானுகில் என இயையும். *தாது-மகரந்தப் பொடியுமாம். தாதூதி* யிளிமுரலும், தண் என்ற அடைமொழிகள் - நாட்டின் நிலவள நீர்வளங்களை உணர்த்தும். வகீக் குலம் - ஒன்றன்கூட்டத் தற்கிழமைப்பொருளில் வந்த ஆரும் வேற்றுமைத்தொகை. பின்னே 'வலம்புரி' என்றமையின், 'வகீக் குலம்' என்றது, இடம்புரியைக் குறிக்கு மென்னலாம். வகீ - (உள்ளே) சுழிந்த வடிவமுடையது; வலம்புரி-வலப்பக்கத்தாற் சுழிந்திருப்பது; காரணப்பெயர்கள். (வலம்புரிக்கு எதிர் - இடம்புரி.) இடம்புரிச்சங்கு ஆயிரஞ்சூழ்ந்தது வலம்புரியென நூல்கள் கூறும்; என்பது, சாதாரண சங்கத்தினும் வலம்புரிச்சங்குக்கு ஆயிரமடங்கு அதிகமாகவுள்ள சிறப்பைத் தெரிவிப்பதாம். வெற்றிச்சங்கு, மங்கலச்சங்கு, கொடைச்சங்கு என்ற மூவகையுள், இங்குக் கூறியன - வெற்றி குறிப்பன. யமதூதர்கள் பயங்கரமான பெரிய வடிவங்கொண்டு வந்து உயிரைத் தவருது கொண்டே விடுவராதலால் அவர்களை "மாதூதர்" என விசேடித்தபடி. அவர்கள் பல

பிராணிகளைச் சிரமமில்லாமல் எளிதிற் கொண்டுபோதற்குப் போர் கருவியாகுதலால், 'கால்னமாதூதர் மனங்களிக்கப் பொருது' எனப் பட்டது. வசையுமன்று என்ற உம்மையை ஒழியிசைப்பொருள தாக்கி, புகழாகுமென்றும் கருத்துக்கொள்க. (70)

11. முந்தூர் வெம்பணிக் கொடியோன் மூதூரி னடந்துழவர் முன்றிறோறு, நந்தாரும் புனலுட்டின் றிறம்வேண்டு நாடொன்று நல்கானுகில், ஐந்தூர் வேண்டவையியெனி லைந்திலம்வேண்டவை மறுத்தா லடுபோர் வேண்டு, சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின் மருப் பொசித்த செங்கண்மாலே.

(இ - ள்.) சிந்தூரம் - சிந்தூரமென்னும் ஒருவகைச் செம்பொடி யாலாகிய, திலகம் - திலகத்தை அணிந்த, நுதல் - நெற்றியை யுடைய, சிந்துத்தின் - (குவலயாபீடமென்னும்) யானையினது, மருப்பு - சிந்தத்தை, ஒசித்த - ஒடித்த, செம் கண் மாலே - சிவந்த திருக்கண்களையுடைய கண்ணனே! —முந்து ஊர் - விரைவாக ஊர்ந்துசெல்கின்ற, வெம்பணி - கொடிய பாம்பின் வடிவத்தை யெழுதிய, கொடியோன் - துவசத்தையுடைய்வனுனை துரியோ தனனது, முது ஊரில் - பழமையான நகரமாகிய அஸ்தினபுரியில், நடந்து - (நீ) சென்று,—உழவர் முன்றில் தோறும் - உழுது பயிர் செய்பவர்களது வீடுகளின் முன்னிடங்களிலெல்லாம், நந்து ஊரும் சங்குகள் தவழப்பெற்ற, புனல் - நீர்வளப்பத்தையுடைய, நாட்டின் - குருநாட்டினது திறம் - பாகத்தை, வேண்டு - (அவனை) விரும்பிக் கேள்; நாடு ஒன்றும் நல்கான் ஆகில் - (அவன்) அந்நாட்டில் நமக் குரிய ஒருபங்கு முழுவதையுங் கொடுக்கச் சம்மதியானுனல், ஐந்து ஊர் வேண்டு - (எங்கள் ஐந்துபேர்க்குமாக) ஐந்து ஊரை விரும்பிக் கேள்; அவை இல் எனில் - அந்த ஐந்து ஊரையும் கொடுப்பதில்லை யென்றால், ஐந்து இலம் வேண்டு - ஐந்து வீடுகளை விரும்பிக்கேள்; அவை மறுத்தால் - அவ்வைந்து வீடுகளையும் (கொடேனென்று) மறுப்பானுனல், அடு போர் வேண்டு - கொல்லுதற்கு உரிய யுத்தத்தை விரும்பிவருக; (எ - று.)

இராச்சியத்தைக் கொடுக்கச் சம்மதியானுனல், எங்களை வருக்கும் தலைக்கு ஓர் ஊராக ஐந்து ஊரையாவது கேள்; அதுவும் இல்லையென்றால், தலைக்கு ஒரு வீடாக ஐந்து வீட்டையாவது கேள்; இங்ஙனம் எங்களுக்காக நீதானே நேரிற்சென்று தாழ்ந்து யான் கூறியபடி இடங்கேட்கவும், அவன் ஐந்துவீடுதானும் கொடுத்திடே னென்றால், அப்பொழுது, நாம் போர் செய்யக்கடவோமாக முடிவு கூறிவருவாய் என்பதாம். "ஆண்டு பதின்மூன்றுஞ் சென்றன வென்று உரிமை, வேண்டிவிடுக விறல் வேந்தீர்—வேண்டினும், பார்காட்டித்தந்தானேல் தந்தானும் தாரானேற், போர்காட்டிற் றன்றே பொர" என்றபடி அவன் அரசுகொடேனென்று மறுப்பதே போர் செய்யுங்குறிப்பை விளக்குவதாயிருக்கவும், 'அவை மறுத் தால் அடுபோர் வேண்டு' என்றது, முன்பு 'வனவாச அஜ்ஞாதவா சங்களின்பின் அரசு கொடுப்பேன்' என்று வாக்குத்தத்தஞ்செய்

தவன் இப்பொழுது அவ்வுறுதிமொழியை நிறைவேற்றுமற் பொய்த்தது போல, இப்பொழுது 'போர் செய்வேன்' என்கிறவன் பின்பு அதனையும் நிறைவேற்றுமற் பொய்த்துப் போகாதபடி அதனையேனும் தவறுமல் நடத்துமாறு உறுதிசெய்து வருவாய் என்றபடி.

நடந்து வேண்டு என இயையும். ஊர்பணி, அடுபோர் - வினைத்தொகைகள். முந்தூர் கொடியென இயைத்து, சிறப்புப்பொருந்திய துவசம் அல்லது முந்திச் செல்லுகிற துவசம் என்றுங் கொள்ளலாம். பணிக்கொடியோன் - பாம்புபோலக் கொடுமையுடையவனென்றுமாம். கொடியோன் என்பதை, நல்கான் என்பதற்கு எழுவாயாகவுங் கொள்ளலாம். உழுவர் - மருத நிலமாக்கள். முதுமை + ஊர் = மூதூர்: பண்புப்பெயர்; ஈறு போய் ஆதிநீண்டது. இல் + முன் = முன்றில்; முன்பின்னுகத்தொக்க ஆரும்வேற்றுமைத்தொகை; இது இலக்கணப்போலி யெனப்படும்.

பகைவர் அஞ்சத்தக்க பேராற்றலுடையவனே யென்பார், 'இந்துரத்தின். மருப்பொசித்த செங்கண்மாலே' என்று விளித்தார். சிந்துரத்தின் மருப்பொசித்த கதை:—வில்விழாவென்கிற வியாஜம் வைத்துக் கம்சனால் வரவழைக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பலராமர்கள் கம்சனரண்மனையை நோக்கிச் செல்லுகையில் அவனது அரண்மனைவாயில் வழியில் தம்மைக்கொல்லும்படி அவனாலேவி நிறுத்தப்பட்ட குவலயாபீடமென்னும் பட்டத்து யானை கோபித்துவர, அந்த யாதவ வீரர் அதனையெதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை யெடுப்பதுபோல எளிதிற்பறித்து அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அடித்து அந்த மதயானையை உயிர் தொலைத்துவிட்டு உள்ளே போயினரென்பதாம்.

செங்கண்மால் - செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய திருமால் [புண்டரீகாக்ஷன் என்றபடி.] அடியார்களை அருளுடன் நோக்குநோக்குக் கண்கள் சிவந்தனபோலும்; இதுவே கொடியவர் திறத்துக் கோபத்தாற் சிவந்ததுமாம். இங்கு 'செங்கண்மாலே' என்றது, உனது கண்ணோட்டத்தினால் நாங்கள் சமாதானத்தில் இராச்சியம் பெறக்கூடுமென்று குறிப்பித்தபடி. மாலே, ஏகாரம் - விளிக்குறி. மால் - பெருமை. அடியார்கள் பக்கல் அன்பு, இருமகளிடத்துக் காதல், மாயை, கருநிறம் இவற்றையுடையவன். (71)

12.—அது கேட்டு வீமன் வெறுத்துக் கூறுதல்.

மூத்தோன்மற் றிவையுரைப்ப விளையோன் வெஞ்சின மனத்தின்
மூளமூள, நாத்தோமி லுரைபதறக்கதுமெனவுற்றெழுந் திறைஞ்சி
ஞாலமெல்லாம், பூத்தோனே பூந்தவிசிற் பூவைபுணர் மணிமார்பா
புன்மை யாவுந், தீர்த்தோனே யூனமிலான் மானமிலா துரைப்பதற்
கென்செய்வ தென்ரூன்.

(இ - ள்.) மூத்தோன் - (பாண்டவருள்) மூத்தவனான தருமன், இவை உரைப்ப - இவ்வார்த்தைகளைக் கூற,—மற்று - பின்பு,—

இளையோன்-(அவனுக்கு) அடுத்த தம்பியான வீமன்,—வெம் சினம் மனத்தில் மூளமூள - கொடிய கோபம் மனத்திலே அதிகமாக மேன் மேல் உண்டாகிவளர, நா தோம் இல் உரை பதற - நாக்கிலிருந்து வருகிற குற்றமற்ற சொற்கள் குளற, கதும்என எழுந்து இறைஞ்சி உற்று - விரைவாக எழுந்து (கண்ணபிராணை) வணங்கி நின்று, (அக்கண்ணனோக்கி),—'ஞாலம் எல்லாம் பூத்தோனே - உலகங்க ளெல்லாம் நாபித்தாமரைமலரினின்று உண்டாகப்பெற்றவனே! பூ தவிசில் பூவை புணர் மணிமார்பா - (எல்லாமலருள் ஞஞ் சிறந்த) செந்தாமரைமலரான்கிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற கிளிகொஞ்சு வது போன்ற இன்சொற்களையுடையவளான திருமகள் வீற்றிருக்கப் பெற்ற (கௌத்துபமென்னும்) தெய்வ விரத்தினத்தையு மணிந்த திருமார்பையுடையவனே! புன்மையாவும் தீர்த்தோனே - (அன்பர் களது) குறைகளையெல்லாம் நீக்கியருளியவனே! ஊனம் இலான் - குற்றமில்லாதவனான இத்தருமபுத்திரன், மானம் இலாது உரைப் பதற்கு - மானமில்லாமல் (இங்ஙனம்) பேசுவதற்கு, என்செய்வது - (யாம்) செய்வது யாது?' என்றான்-என்று சொன்னான்; (எ - று.)— மற்று - அசையுமாம்.

மூத்தோன், மூ - வினைப்பகுதி; மூத்தல் - பிராயம் முதிர்தல். இளையோன் என்ற சொல்லில், போர்க்கு இளைக்காதவன் என்ற பொருளும் தொனிக்கும். மூளமூள - அடுக்கு, மிகுதிப்பொருளது. தோம் - தோஷம் என்னும் வடமொழியின் சிதைவு என்பர். உரை பதறுதற்குக் காரணம் கோபாவேசம். கதுமென-விரைவுக்குறிப்பு; இடைச்சொல். முதலடியில் முரண்தொடையும், நான்காமடியில் பிராசமும் காண்க.

"பங்கிக்கமலத்தடஞ்சூழரங்கர் படைப்பழிப்புச் சிந்தித்திடுவது மில்லை கண்டீர் அத்திசைமுகனோடு, உந்திக் கமலம் விரிந்தால் விரியும் உகக்கடையில், முந்திக்குவியி லுடனேகுவியு மிம்மூ தண்டமே' என்றபடி, திருமாலின் உந்திக்கமலமலர் மலர்ந்தமாத்தி ரத்தில் படைத்தற்கடவுளான பிரமனுடன் அண்டங்களும் அதனி லிருந்து உண்டாகின்றன வென்பது நூற்கொள்கை யாதலால், 'ஞாலமெல்லாம் பூத்தோனே' என்றான். இனையாகிய நாபித் தாமரையின் வினையாகிய பூத்தலை, முதலாகிய கடவுளின்மேல் ஏற்றிச் சொன்னது உபசார வழக்கு. பூவை - கிளி; அதுபோன்ற இன்சொலுடையவளுக்கு உவமையாகுபெயர்; இனி, பூவை-நாகண வாய்ப்பறவையுமாம்; அதுவும் இன்சொல்லில் உவமம். திருமால் திருமகளை வலத்திருமார்பிலும், கௌஸ்துபமணியை இடத்திருமார் பிலும் கொண்டுள்ளான். இனி, மணி மார்பு-அழகிய மார்பு என்று மாம்; இரத்தின ஆரமணிந்த மார்புமாம். புணர் மார்பு-முக்காலமும் கருதும் விணைத்தொகை.

புன்மை-சிறுமை. வீமனைக் கழுவேற்றுதல், திரௌபதியைத் துகிலுரிதல், துர்வாசமுனிசாபம் முதலிய பல சங்கட காலங்களில் கண்ணன் தங்களைப் பாதுகாத்தருளியமை பற்றி, 'புன்மையாவும் தீர்த்தோனே' என்று அப்பெருமானை விளித்தானுமாம். கொல்

லாமை அருள் முதலிய குணங்களெல்லாம் நிறைந்து குற்றமொன்றும் இல்லாததனால் 'ஊனமிலான்' என்றும், க்ஷத்திரிய தருமமாகிய மானத்தைச் சிறிதும் பாராட்டாது சாந்த குணத்தையே மேற் கொண்டதனால் 'மானமிலாது' என்றும் கூறினன். "எல்லாம் வெகுண்டார்முன் தோன்றுக் கெடும்" ஆதலால், அதிக கோபா வேசங்கொண்ட வீமன் இங்ஙனம் தமையனை அலட்சியஞ்செய்து கூறினனென்க. (72)

13.—இதுவும் அடுத்தகவியும் தருமனை நோக்கி வீமன் கூறிய நிஷ்டுர வார்த்தை.

விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின் முறையிடு நாள் வெகுளே லென்று, மரபினுக்கு நமக்குமுல குள்ளளவுந் தீராத வசையே கண்டாய், எரிதழற் கானகமகன்று மின்னமும் வெம்பகை முடிக்க விலையாதின்றுய், அரவுயர்த்தோன் கொடுமையினு முரசுயர்த் தோ யுனதருளுக் கஞ்சினேனே.

இதுமுதல் நான்கு கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) விரி குழல் - (துச்சாதனனுற் பிடித்திழுத்துக் குலைக் கப்பட்டு) விரிந்த கூந்தலையுடைய, பைந்தொடி - பசுமையான தொடி யென்னுங் கைவளையலையுடையவளாகிய திரௌபதி, வேந்து அவை யில் - இராஜ சபையிலே, நாணி - வெட்கங்கொண்டு, முறை இடு நாள்-கூவியரற்றிய காலத்திலே, வெகுளேல் என்று - (தம்பிமார்க ளாகிய எங்களைத் தனித்தனி) 'நீ கோபியாதே' என்று கூறி, நமக் கும் மரபினுக்கும் - நமக்கும் (நமது) குலத்துக்கும், உலகு உள்ளள வும் - உலகமுள்ளவரையிலும், தீராத வசையே கண்டாய் - நீங்காத பழிப்பையே உண்டாக்கினுய்; எரி தழல் கானகம் அகன்றும் - எரி கின்ற கெருப்பையுடைய வனத்தில் வாசஞ் செய்து கழிந்த பின்பும், இன்னமும் - அஜ்ஞாதவாசமும் தீர்ந்த பின்பும், வெம் பகை முடிக்க- கொடிய பகைவர்களான துரியோதனுதியர்களைக் கொல்லுதற்கு, இலையா கின்றுய் - பின்னிடைகிறுய்; முரசு உயர்த்தோய் - முரசக் கொடியை உயர நாட்டியவனை தருமனே! அரவு உயர்த்தோன் கொடுமையினும் - பாம்புக் கொடியை உயர நாட்டியவனை துரியோ தனனது இரக்கமில்லாமைக்கு அஞ்சுதலினும் மிகுதியாக, உனது அருளுக்கு அஞ்சினேன் - உனது கருணைக்கு (யான்) பயப்படு கிறேன்; (எ - று.)

அரவுயர்த்தோனது கொடுமையை உடனே தனது ஆற்றலால் அடக்குவது எளிதாயிருக்க, அங்ஙனஞ் செய்யாமைக்குக் காரணம் முரசுயர்த்தோனது அருளே யாதலால், அக்கொடுமையினும் இவ் வருளுக்குத் தான் மிக அஞ்சியதாக வீமன் கூறினன். இங்குத் தருமனது அருளினும் துரியோதனனது கொடுமையே மேலான தென்கிற பொருள்தோன்றுதலால், அகமலர்ச்சியணி தொனிக் கின்ற தென்னலாம்; ஒன்றன குணங்குற்றங்களால் மற்றொன்றற்கு அவை உளவாதலைச் சொல்லுதல், அவ்வணியின் இலக்கணம்.

இங்குத் தருமனது அருளின் குற்றத்தினால், துரியோதனனது கொடுமைக்குக் குணம் சொல்லப்பட்டவாறு காண்க.

பசும் பொன்னாலாகிய தொடியென்பார், பைந்தொடி யென்றார். பைந்தொடி - இங்கு பண்புத்தொகையன்மொழி. வேந்து + அவை = வேத்தவை; ஆரும் வேற்றுமைத்தொகையில் மென்றொடர். வன் றொடராயிற்று. வேந்து - உயர்திணைப் பொருள்தரும் அஃறிணைச் சொல். உள்ளளவு - உள்ளவளவு என்பதன் தொகுத்தல். ஆதாரமாகிய உலகம் அழிய அதன் மீது வழங்கும் பழியும் அழியுமாதலால், 'உலகுள்ளளவும் தீராத வசை' எனப்பட்டது. கண்டாய் - செய்தாயென்னும் பொருளது. தழற் கானகம்-நெருப்புப்போல வெவ்விய காடுமாம். பகை - பகைவர்க்குப் பண்பாகுபெயர். அரவு, முரசு - அவற்றின் வடிவமெழுதிய கொடிகட்கு ஆகுபெயர். 'கானகமகன்றும்' என்றதன்பின் 'இன்னமும்' என வேண்டாது கூறியதில், அரியதான அஜ்ஞாதவாசம் அடக்கிக் கொள்ளப்பட்டது. இன்னமும்-உலூகன் தூதுசென்று வந்ததனால் துரியோதனன் கருத்தைத் தெரிந்துகொண்டபின்பும் என்றவாறுமாம. இளையா னின்றாய் என்று இரண்டு சொல்லாகக்கொண்டு, இளைத்து நின்றாயென்றலுமொன்று. அஞ்சினேன் = அஞ்சுகிறேன்; இயல்பினால் நிகழ்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி. (73)

14. கானுள வுனைவிடுத்த கண்ணிலா வருளினிதன் காதன்மைந்தன், தானுளுந்தரணியெல்லா மொருகுடைக்கீழ் நீயாளத்தருவனின்றே, மேனுணும் முரிமையறக் கவர்ந்தபெருந் துணைவனுனை வெருதவண்ணம், வானுளவானவர்கோன் றன்பதமற் றவன் றனக்கே வழங்குவேனே.

(இ - ள்.) உனை - உன்னை, கான் ஆள - வனத்தையடைந்து வாழும்படி, விடுத்த-ஏவியனுப்பிய, கண் இலா அருள் இவி தன் காதல்மைந்தன் - பிறவிக்குருடனும் கருணையில்லாதவனுமாகிய திருதராட்டிரனது அன்புக்கு உரிய மகனான துரியோதனன், தான் ஆளும் - தான் (இப்பொழுது தனியே) அரசாண்டு வருகிற, தரணி எல்லாம் - இராச்சியம் முழுவதையும், ஒரு குடைக்கீழ் நீ ஆள - ஒற்றைவெண்கொற்றக்குடை நிழலிலே நீ அரசாளும்படி, இனறே தருவன்-இப்பொழுதே (உனக்குக்) கொடுப்பேன்; (அதுவுமல்லாமல்), மேல் நாள் நம் உரிமை அற கவர்ந்த பெருந் துணைவன் - முன்னாளில் நமக்கு உரிய அரசாட்சிச் செல்வ முழுவதையும் (உன்னிடத்தினின்றும்) பறித்துக்கொண்ட பெரிய தம்பியான துரியோதனன், உனை வெருத வண்ணம் - (தனது இராச்சியத்தை நீ உன்னுடையதாக்கி ஆளுவதற்காக) உன்னை வெறுக்க வேண்டாதபடி, வான் ஆள - (நிலவுலகத்தினும் மேலான) வீரசுவர்க்க லோகத்தையடையுமாறு, வானவர் கோன் தன்பதம் - தேவர்கட்கு அரசனான இந்திரனது உலகமாகிய அமராவதி நகரத்தை, அவன் தனக்கே வழங்குவேன் - அத்துரியோதனனுக்கே கொடுப்பேன்; (எ - று.)

மிகவிரைவிலே போரில் தவருமல் துரியோதனனைக் கொன்று அவனது அரசாட்சிச் செல்வ முழுவதையும் உனக்குக் கொடுத்திடு வேனென்பதாம். மண்ணுலகத்தை யிழந்த துன்பம் விண்ணுலகத் தையடைந்த இன்பத்தால் நீங்கும்படி என ஒரு சமத்காரந்தோன்ற, 'உனை வெருதவண்ணம் வானுள' எனப்பட்டது. 'வெருதவண்ணம்' என்றதனால், தனக்கு வீரசுவர்க்கம் கிடைத்ததற்குக் காரணமாகிய உன்னைப்பற்றி மகிழும் வண்ணம் என்றதாகவும் கொள்ளலாம். கொடியவனை துரியோதனனைக் கொல்வேன் என்ற பொருளை 'வானுள வானவர்கோன் தன்பதம் மற்று அவன் தனக்கே வழங்குவேன்' என வேறுவாய்பாட்டினாற் கூறியது, பிறிதின்நவிற்சி யணி. துரியோதனனது இராச்சியத்தை வாங்கி உனக்குக்கொடுத்து, இந்திர லோகத்தை அவனுக்குக் கொடுப்பே னென்பதில், மாற்று நிலையணியென்னும் பரிவர்த்தநாலங்காரம் தோன்றுதலும் காண்க; அதன் வகை மூன்றனுள், சிறியதை வாங்கிக்கொண்டு பெரியதைக் கொடுப்பதாகக் கூறியது இது.

கண் இலா-கண்ணேட்டமில்லாதவன் எனினுமாம். கண் இலா அருளிலி - தயைதாக்ஷிண்ய மில்லாதவன். "கண்ணென்னும் கண் ணேட்டமில்லாத கண்" "கண்ணேட்டமில்லவர் கண்ணிலர்" என்ப வாதலால் கண்ணேட்டமில்லாமையை கண்ணில்லாமை யெனத் தகும். கண்ணில்லாமையால் அது சென்றவழி நிகழ்வதாகிய கண் ணேட்டமும் இலனாயினனென்றவாறு.

இலி - இ, பெயர்விகுதி: 'வில்லி' என்பதிற் போல. தரணி - (பொருள்களைத்) தரிப்பது பற்றி பூமியைக் குறிக்கும். அரசாட்சியை 'குடை' என்றும், 'சக்கரம்' என்றும், 'கோல்' என்றும் கூறுதல் மரபு. ஒரு குடை - இரண்டாவதில்லாமல் ஒன்றேயான அரசாட்சி; தனியரசாட்சி; ஏகாதிபத்தியம்; ஒப்பற்ற ஆட்சியுமாம். இன்றே என்ற ஏகாரம் - தேற்றத்தோடு விரைவையுங் காட்டும். மேல்நாள்-சூது பொருத நாளில், உரிமை அற - உரிய செல்வம் நம்மை விட்டு நீங்க என்றுமாம். உரிமை - உரிய பொருளுக்குப் பண்பாகுபெயர். தருமனது தம்பியராகிய வீமன் முதலியோரினும் துரியோதனன் மூத்தவனதலால் அவன் 'பெருந்துணைவன்' எனப்பட்டனன்; அன்றி, 'பெருந்துணைவன்' என்பது இகழ்ச்சியுமாம். மிக்கவலி யுடையா னென்பது பற்றியுமாம். வான் - ஆகாயத்திலுள்ள உலகத் துக்கு இடவாகுபெயர். கோன், ன் - சாரியை. (74)

15.—இதுவும், மேற்கவியும் - வீமன் கண்ணனை நோக்கிக் கூறியவை.

போர்முடித்தானமர்பொருது புலர்புறுசொற்பாஞ்சாலி பூந்தண் கூந்தற், கார்முடித்தா னிகலோர்முன் கழறியவஞ்சினை முடித்தான் கடவுட்கங்கை, நீர்முடித்தா னிரவொழித்த நீயறியவசையின்றி நிலை நின்றேங்கும், பேர்முடித்தா னிப்படியே யார் முடித்தா ரிவனுடனே பிறப்பதேதான்.

(இ - ள்.) கடவுள் - தெய்வத்தன்மையுடைய, கங்கை - கங்கா நதியினது, நீர் - சலத்தை, முடித்தான் - சடையில் தரித்த சிவபிரானது, இரவு - இரத்தல் தொழிலை, ஒழித்த - நீக்கியருளின, நீ—, அறிய - உணர, போர் முடித்தான் - யுத்தத்தை நிறைவேற்றினன்; அமர் பொருது - யுத்தத்தைச் செய்து, புலம்பு உறு சொல் பாஞ்சாலி பூ தண் கூந்தல் கார் முடித்தான் - அழுதல் மிக்க சொற்களையுடைய திரௌபதியினது அழகிய குளிர்ந்த மேகம்போற் கரிய கூந்தலை முடிக்கச்செய்தான்; இனையோர் முன் கழறிய வஞ்சினம் முடித்தான் - தம்பிமார்கள் முன்னே (சபையிலே) உறுதியாகக் கூறின சபதங்களை முடியச் செய்தான்; வசை இன்றி நிலைநின்று ஓங்கும் பேர் முடித்தான்-பழிப்பில்லாமல் என்றும் அழியாது சிறந்து நிலைநிற்கிற கீர்த்தியை முழுவதும் பெற்றான்; இப்படியே யார் முடித்தார் - இங்ஙனம் இவன்போல (முடிக்கவேண்டுவன எல்லாவற்றையும்) முடித்தவர் யார்? நான் இவனுடனே பிறப்பதே - (சுத்த வீரனுகிய) யான் (அங்ஙனம் இல்லாதவனுகிய) இவனுடன் தம்பியாகப் பிறத்தல் தகுதியோ? [அன்றென்றபடி]; (எ - று.)—ஈற்றே காரம் - விளிவகையால் மிக்க இரக்கத்தைக் காட்டும்.

இப்பாட்டில், 'முடித்தான்' என வந்தன பலவும் எதிர்மறையிலக்கணையால், ஒன்றையும் முடிக்கவில்லை யென்பதை விளக்கும்; இது - இகழ்ச்சி பற்றிய பிறகுறிப்பின் பாற்படும். புலம்பு - முதனிலைத் தொழிற்பெயர். உறுசொல்-உரிச்சொற்றொடர். பாஞ்சாலி - பாஞ்சாலதேசத்தரசன் மகள்; தத்திதாந்தநாமம். பூ - பூக்களை முடித்தற்கு உரிய என்றுமாம். கூந்தற்கார்-முன்பின்னைத் தொக்க உவமத்தொகை. கங்காநதிக்குத் தெய்வத்தன்மை - தன்னில் ஒருகால் மூழ்கியவரது அருவினையனைத்தையும் அழித்து உயர்பதமளித்தலும், "சதுர்முகன கையிற் சதுர்ப்புயனதாளிற் சங்கரன்சடையினில் தங்கு" தலும். நீர் - நீரெமன்னும் வடமொழியின்திரிபென்பர். இரவு - இரத்தல்; தொழிற்பெயர்; இர - பகுதி.

பரமசிவன் ஒருகாலத்தில் தன்னைப்போலவே பிரமனும் ஐந்து சிரமுடையனுயிருப்பது பலரும் பார்த்து மயங்குதற்கிடமாயிருக்கின்ற தெனக்கருதி, அவனது சிரத்தைக் கொய்துவிட, அக்கபாலம் அப்படியே அவன் கையில் ஒட்டிக்கொள்ளுதலும், இதற்கு என் செய்வதென்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் 'இப்பாவந்தொலையப் பிச்சை யெடுக்கவேண்டும்; என்னைக்குக் கபாலம் நிறையுமோ, அன்றைக்கே இது கையைவிட்டு அகலும்' என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பல தலங்களிலுஞ் சென்று பிச்சையேற்றுக்கொண்டு வருந்தித் திரிந்தும் அக்கபாலம் நிறைந்து நீங்காதாக, ஒருநாள் ஸ்ரீ மகாவிஷ்ணுவை அடைந்து ஏற்றபோது அவர் அக்ஷயமென்று பிச்சையிட, உடனே அது நிறைந்து கையைவிட்டு அகன்றது என்பது 'இரவொழித்த' என்றதன் வரலாறு.

உலகத்தில் நடக்கும் தொழில்கள் எல்லாவற்றையும் காண்பவனுய் நின்ற கடவுளையே சாட்சியாக்கி, 'யேறிய' என்றது. "வசையொழிய வாழ்வாரே வாழ்வாரிசையொழிய, வாழ்வாரே வாழாதவர்"

என்றபடி சிறிதும் நிந்தனைக்கிடமில்லாததே புகழெனச் சிறப்பித்துக் கூறப்படுவதாதலால், "வசையின்றி நிலைநின்றிருங்கும் பேர்" என்றது. இனி, போர்முடித்தான் - யுத்தத்தை இல்லையாக்கினான்; கூந்தல் கார் முடித்தான் - கூந்தலாகிய மேகத்தைப் பாழாக்கினான்; கங்கைநீர் முடித்தான் - கங்கைநீரையொடுக்கினான்; பேர்முடித்தான் - கீர்த்தியை ஒழித்தான்; யார் முடித்தார் - யாவர் அழித்தார் எனப் பொருள் கொள்ளினும் அமையும். தான் முடியாவிடினும் முடிக்க வல்லவனாய் முடிக்கத் தொடங்குகிற வீமனையும் இவன் முடிக்க வொட்டாமற் செய்தற்கு, இவனுக்குத் தம்பியாகப் பிறந்த அவனது உடற்பிறப்பே காரணமாதலால், அதனை 'இவனுடனே பிறப்பதே தான்' என வீமன் வெறுத்தான். (75)

16. அணிந்துவருஞ் சமரிலெதிர்ந் தரவுயர்த்தோனுடனரச ருடல மெல்லாந், துணிந்திரண்டு படப்பொருது தொல்லியுல கரசாளத் துணிவதல்லால், தணிந்தறமுங் கிளையுறவுங் கொண்டாடித் தானின்னந் தனித்தூதேவிப், பணிந்திரந்து புவிபெற்றுண்டிருப்பதற்கே துணிகின்றன் பட்டபாடே.

(இ - ள்.) அணிந்து வரும் - (இருதிறத்துச் சேனைகளும்) ஒழுங்காக வகுக்கப்பட்டு நெருங்கி வருகிற, சமரில் - போர்க்களத்திலே, அரவு உயர்த்தோனுடன் எதிர்ந்து - பாம்புக்கொடியனான துரியோதனனுடன் எதிர்த்து, அரசர் உடலம் எல்லாம் துணிந்து இரண்டு பட - (துரியோதனனும் அவனுக்குத் துணையாக வருபவர்களுமான) அரசர்களது உடம்புகளெல்லாம் துணி பட்டு இரண்டாகும்படி, பொருது - போர்செய்து (பகை முடித்து), தொல்லை உலகு - (நமது) பழைய உரிமையாகிய இராச்சியத்தை, அரசு ஆள - அரசாட்சி செய்ய, துணிவது அல்லால் - நிச்சயிப்பதேயல்லாமல், — தான் - இத் தருமன்தான், தணிந்து - சாந்தமாய், அறமும் கிளை உறவும் கொண்டாடி - தருமத்தையும் சுற்றத்தாரது உறவுமுறைமையையும் முக்கியமாகப் பாராட்டி, இன்னம் தனி தூது ஏவி - (உலூகனைத் தூதனுப்பிய) பின்பும் ஒரு தூதனைச் செலுத்தி, பணிந்து இரந்து - (பகைவனை) வணங்கி யாசித்து, புவி பெற்று - இராச்சியத்தை (அவன் கொடுக்கச் சிறிது) பெற்று, உண்டு இருப்பதற்கே - புசித்து உயிர் வாழ்ந்திருப்பதற்கே, துணிகின்றன் - நிச்சயிக்கிறன்; பட்ட பாடே - (எல்லா வருத்தங்களினும்) மிக்க வருத்தமாகும் இது! (எ - று.) — ஈற்று ஏகாரம் - தேற்றத்தோடு இரக்கம்.

போர்பொருது பகையையழித்து வென்று அரசுபெற்றுப் புகழோடு வாழ்தல் எளிதாயிருக்க, தாழ்ந்து இரந்து அரசுபெற்று மானமின்றி உயிர் வாழக் கருதுதல் மிக்க பழிப்புக்கு இடமாகுமென்பதாம். அணிந்து வரும் - நாளைக்குச் சமீபித்துவருகிற என்றுமாம். உடலம், அம் - சாரியை. 'தொல்லியுலகு' என்றது, பழமையான உலக முழுவதையும் என்றும் பொருள்படும். கிளை - கிளைபோன்ற உறவினர்க்கு உவமையாகுபெயர். (76)

17. அதற்குத் தருமன் சமாதானஞ் சொல்லுதல்.

பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமாரனீ மலர்க்கை பணித்து நோக்கிக், குருகுலத்தோர் போரேறே குற்றமது பார்க்குங்காற் சுற்ற மில்லீ, யொருகுலத்திற் பிறந்தார்களுடன்வாழும் வாழ்வினைப்போ லுறுதியுண்டோ, விருவருக்கும் வசையன்றே விருநிலங்காரணமாக வெதிர்ப்ப தென்றான்.

(இ - ள்.) பரிவுடன் - வருத்தத்துடனே, இவை கூறும் - இவ் வார்த்தைகளைச் சொல்லுகிற, பவன குமாரனீ - வாயுபுத்திரனு வீமனீ, (தருமன்),—மலர் கை பணித்து-தாமரைமலர்போன்ற தனது கையால் அமர்த்தி அடக்கி, நோக்கி - (அவனைப்) பார்த்து,—'குரு குலத்தோர் போர் ஏறே-குருவென்னும் அரசனது குலத்திற் பிறந்த அரசர்களுள் போரிற்சிறந்த ஆண்சிங்கம் போன்றவனே! குற்றமது பார்க்கும் கால் சுற்றம் இல்லீ-குற்றத்தையே ஆராய்ந்தால்(எவர்க்கும்) உறவினராவார் இல்லீ; ஒருகுலத்தில் பிறந்தார்கள் உடன் வாழும் வாழ்வினை போல் உறுதி உண்டோ-ஒருகுடும்பத்திலே பிறந்தவர்கள் தமக்குள் மாறுபாடின்றி ஒத்துவாழும் இல்வாழ்க்கையைப்போல நன்மை தருவது (வேறு) உண்டோ? [இல்லீயன்றே]; இருநிலம் காரணம் ஆக எதிர்ப்பது - பெரிய இராச்சியங் காரணமாக எதிர்த் துப்போர் செய்வது, இருவருக்கும் வசை அன்றே-இருதிறத்தார்க்கும் பழிப்பாகாதோ?' என்றான் - என்று சொன்னான்; (எ-று.)—மற்று - அசை; இந்த அவசியமில்லாத பதத்தால், 'மற்று இவை' என்ப தற்கு - இன்னும் இவைபோன்றவற்றை யென்று பொருள் கொள்ள லாம்.

சினங்கொண்ட வீமனீ மேன்மைப்படுத்தி அவனைத் தன் கருத் துக்கு உட்படுத்துமாறு தருமன், 'குருகுலத்தோர்போரேறே' என்று விளித்தான். பவனகுமாரன் என்னும் ஆரும்வேற்றுமைத்தொகை-வடநூல்முடிபு. பவனன் என்ற வடசொல்லுக்கு-சஞ்சரிப்பவனென்பது காரணப்பொருள். குருகுலத்தோர் ஏறு - விலங்குகளுட் சிறப்புடைய தாகிற சிங்கம்போலக் குருகுலத்தாருட் சிறந்தவனென்க; இனி, கௌரவரெனப்படுகிற துரியோதனாதியராகிய யானைகளை யொழிப் பதற்குச் சிங்கம் போன்றவனென்றுமாம். ஏறு போல்பவனீ ஏறு என்றது, உபசாரவழக்கு. ஏறு - சில விலங்குகளின் ஆண்மைப் பெயர். 'போரேறு' என்றது, பல பராக்கிரமங்களை விளக்கக் கூறியது. சிறந்த வீரனுக்குச் சிங்கம் - நடை வலிமை நோக்குத் தைரிய காம்பீரியங்களால் உவமையாம். இன்னமலரென்று குறியாது 'மலர்' என்று மாத்திரம் கூறினால், அது - "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்றபடி, எல்லா மலர்களுள்ளுஞ் சிறந்த தாமரையைக் குறிக்கும். கைக்குத் தாமரைமலர் உவமை-செம்மை மென்மை அழகுகளில். குற்றமது என்றவிடத்து, 'அது' என்பது - பகுதிப் பொருள் விகுதி. கால்-காலமென்பதன் விகாரம். அன்றே - தேற்றம். பரிவுடன்-(தமையனுரிடத்து)அன்புடனே அல்லது இரக்கத்துடனே யென்றுங் கொள்ளலாம்.

"குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை" என்பது ஔவையார் அமுத மொழி. உலகத்திற் குற்றமில்லாதவர் அரிய ராதலால், ஒவ்வொரு வரிடத்தும் குற்றத்தையே நோக்கினால் சுற்றம் இல்லையாகும்; ஆதலால், உறவினரிடத்து உள்ள பிழைகளை யெல்லாம் பொறுப்பது கடமை யென்றபடி. (77)

18.—இதுவும் அது.

உரிமையுடன் நம்பியரன்றுணர்வறியா மையினவைக்கணுரைத்த மாற்றம், பரிபவமோகேட்டோர்க்குப் பரிபவமென்பது பிறராற் பட்டா லன்றே, கருதிலதுமற்றெவர்க்கு மொவ்வாதோ கண்மலரிற் கை படாதோ, பொருதொழிலுங் கடைநிலத்திற் கிடந்ததேயென மொழிந் தான் புகழேபூண்பான்.

(இ - ள்.) 'தம்பியர் - (நமது) தம்பிமார்கள், உரிமையுடன் - சுதந்திரத்தினாலும், உணர்வு அறியாமையின் - தேர்ந்த அறிவு இல்லாமையாலும், அன்று - அக்காலத்தில், அவைக்கண் - சபை யிலே, உரைத்த - சொன்ன, மாற்றம் - வார்த்தை, கேட்டோர்க்கு - (அதனைக்) கேட்ட நமக்கு, பரிபவமோ - அவமானத்தைத் தரு வதோ? (அன்று என்றபடி); பரிபவம் என்பது பிறரால் பட்டால் அன்றே - (ஒருவர்க்கு) அவமானத்தைத் தருவதென்பது ஒரு குலத்திற் பிறந்தவரல்லாதவரால் நேர்ந்தாலன்றே? கருதில் - ஆலோசிக்குமிடத்து, அது - அவ்விஷயம் [பிறராற் பட்டால் மர்த் திரமே அவமானம், தம்மவராற் பட்டால் அவமானமன்றுஎன்பது], மற்று எவர்க்கும்ஒவ்வாதோ - (உலகத்தில்) எல்லார்க்கும் உடன் பாடாகாதோ? (யாவர்க்கும் சம்மதமே யென்றபடி); கண் மலரில் கைபடாதோ - (ஒருவனது) தாமரைமலர் போன்ற கண்ணில் (அவனது) கை படுதலில்லையோ? பொருதொழிலும் கடை நிலத்தில் கிடந்ததே - போர் செய்யுந் தொழிலும் (அரசர்க்கு உரிய உபாயங் களுள்) இறுதியிடத்தில் இருக்கவேயிருக்கிறது' என - என்றும், புகழே பூண்பான் - கீர்த்தியையே ஆபரணமாக அணிபவனான தருமன், மொழிந்தான் - (வீமனை நோக்கிக்) கூறினான்; (எ - று.)

கேட்டோர்க்கு - தன்மையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி. 'கண்மலரில்கைபடாதோ' என்றது, தமது அவயவங்களுள் ஒன்றில் மற்றொன்று அஜாக்கிரத்தையினாற் பட்டு அதற்கு வருத்தத்தை உண்டாக்கினால் அதற்காக அவ்வருத்தும் உறுப்பைக் கோபித்துக் களைபவரில்லாமை போல, ஒரு குடும்பத்தவருள் ஒருவர் மற்றொரு வற்குச் சோர்வினால் தீங்கிழைத்தால் அதற்காக அவரை அழிப்பது தகுதியன்று என்பதை உணர்த்தி நின்றது. இங்ஙனம் உபமான வாக்கியத்தால் உபமேயத்தைப் புலப்பட வைத்தது, பிறிதுமொழிதலணியாம். "இன்னுசெயினும் விடுதற் கரியாரைத், துன்னுத் துறத்தல் தகுவதோ—துன்னருஞ்சீர், விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ, கண்குத்திற் றென்றுதங் கை" என்னும் நாலடியார்ப்பாட்டை இங்கே அறிக. 'பொருதொழிலுங் கடை நிலத்திற் கிடந்ததே' என்றது எல்லா உபாயங்களுள்ளும் தண்டோ

பாயம் இறுதியிற் செய்யத்தக்கதாய்க் கடைசியில் வைக்கப்பட்டுக் கீழ்மையுடையதா மென்றும், சமாதானத்தால் இராச்சியம் பெரு விட்டால் முடிவில் போர் இருக்கவேயிருக்கிறதென்றும் கூறிய வாரும். 'தமையன் தகப்பனே டொத்தவன்' என்ற நியாயத்தால், தன்பிள்ளைகள் செய்த குற்றத்தைத் தந்தை பொறுத்துக் குண மாகப் பாவிப்பதுபோலத் தன்தம்பியர் செய்யுங் குற்றத்தைத் தமையன் பொறுத்துக் குணமாகக் கொள்ளவேண்டும் என்ற கருத் தாற் கூறியது, முதலிரண்டடி; பஞ்சபாண்டவரில் பிரதானனை தருமபுத்திரனுக்குத் துரியோதனதியர் தம்பியராதல் உணர்க.

வீமன் கருத்தின்படி தருமன் புகழை விரும்பாதவனல்லன், போரினாற் புகழ்பெறுதலேயொழித்துப் பொறுமையாற்புகழ்பெறுங் கருத்தினன் என்பார், 'புகழேபூண்பான்' என்றார். உணர்வு அறி யாமையின் - அறியவேண்டுவன அறியாமையால் என்க; இன் - ஐந்தனுருபு, ஏது- கிடந்ததே, ஏ - தேற்றம்; புகழே என்ற ஏகாரம் பிரிநிலையோடு, உயர்வுசிறப்பு. (78)

19.—இதுவும் அடுத்த கவியும்-வீமன் தருமனை நோக்கிச் சொல்வன.

சூடுகின்ற துழாய்முடியோன் சுரருடனே முனிவர்களுஞ் சுருதிநான்குந், தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடுபெறத் தூதுசெல்ல வேண்டா, வாடுகின்ற மடப்பாவைதன் வரமுமென்வரமும்வழுவா வண்ணங், கோடுகின்ற மொழியவன்பா லெனைத்தூது விடுகவினிக் கொற்ற வேந்தே.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) கொற்றம் வேந்தே - வெற்றியையுடைய அரசனே! —சூடுகின்ற துழாய் முடியோன்-தரிக்கின்ற திருத்துழாய் மாலையை யுடைய திருமுடியையுடையவனை கண்ணபிரான், சுரருடனே முனி வர்களும் சுருதி நான்கும் தேடுகின்ற பதம் சிவப்ப - தேவர்களும் முனிவர்களும் நான்கு வேதங்களும் (இன்னமும் உண்மைகாணுமல்) தேடப்பெற்ற தனது திருவடிகள் (நடத்தலாற்) செந்நிறமடையும் படி, திரு நாடு பெற - செல்வம் மிக்க இராச்சியத்தை (நாம்) பெறு தற்காக, தூது செல்ல வேண்டா - தூதுபோக வேண்டுவதில்லை; வாடுகின்ற மடம் பாவைதன் வரமும் - வருந்துகிற இளம் பெண் ணை திரௌபதியினது சபதமும், என் வரமும் - எனது சபதமும், வழுவா வண்ணம் - தவருதபடி, கோடுகின்ற மொழியவன்பால் - நீதிதவறிச் சொல்மாறுபடுகின்றவனை துரியோதனனிடத்து, இனி எனை தூது விடுக - இப்பொழுது என்னைத் தூதனுப்புவாயாக;

கண்ணன் தூதுசென்றால் ஒருகால் சந்திசேர்ந்து முன்செய்த சபதங்கள் தவறிவிடக்கூடுமென்று, வீமன், அவை தவருமல் நிறைவேறும்படி தன்னைத் தூதனுப்புமாறு வேண்டுகிறான்; தன்னைத் தூதனுப்பினால் தூது செல்லும்பொழுதே துரியோத னாதியர் நூற்றுவரையும் ஒழித்துப் பிரதிஜ்ஞைகளை நிறைவேற்றி விடலாமென்ற கருத்து, மூன்றுமடியால் விளங்கும்; அன்றியும்,

தான் தூதுசென்றால் சமாதானமில்லாமல் போரையே செய்யும்படி முடிவு செய்துவரலாமென்பதுமாம்.

ஸுரர் - பாற்கடல் கடைந்தகாலத்து அதனினின்று தோன்றியதொரு வாருணியென்னுஞ் சிறந்த சுரையைப் பானஞ்செய்தவரென்பது பற்றிய காரணப்பெயர்; சுரை - மது. சுருதி - எழுதாக்கிளவியாய்க் குருசிஷ்யக் கிரமத்தில் கர்ணபரம்பரையிலே கேள்வியில் வழங்குவதென்று பொருள்படுங் காரணப்பெயர். பரமாத்மாவின் ஸ்வரூபத்தை நாடிச்சொல்லிக்கொண்டே சென்ற வேதம் அதன் முடிவு தனக்கு எட்டாமையால் மீண்டதென்பது, அவ்வேதம் சொல்வதனாலேயே தெரிகிறது; ஆனதனால், "ஆரேயறிவா ரதனத்துலகு முண்டுமிழ்ந்த, பேராழியான்தன் பெருமையை" என்றபடி எம்பெருமானது தன்மை தேவர் முனிவர்யாவர்க்கும் அறிதற்கு அரியதாதலாலும், "சுரருடனே முனிவர்களும் சுருதிநான்கும் தேடுகின்ற பதம்" எனப்பட்டது.

வேண்டா - வேண்டுமென்பதன் எதிர்மறை; 'வேண்டாம் என்பதும் பாடம். பாவை - சித்திரப் பிரதிமைபோல அழகியவள்; மனத்திற்குத் திருப்தி யுண்டாகுமளவும் கலைத்துக் கலைத்து மிகச் சீர்திருத்தமாக எழுதக் கூடுமாதலால், சித்திரப்பாவை மிக அழகியதாம்; இனி, கண்மணிப் பாவைபோல அருமையானவ ளென்றுமாம்; பாவை போல்பவளைப் பாவையென்றது உவமையாகுபெயர். மடப்பாவை - மடமை பாவை என்றுவது, மடம் பாவை என்றுவது பிரிக்க; மடமை - இளமை; மகளிர்க்கு உரிய குணங்களிலொன்றான பேதைமையுமாம். வரம் - விருப்பமுமாம். கோடுகின்ற மொழியவன் - நீதிதவறிய சொற்களை யுடையவன், சொன்னசொல் மாறுபட்டவன். அவன் சொன்னசொல் தவறியமைக்குத் தானே தூதுசெல்லுதல் தகுதி யென்பது, நானகாமடியின் கருத்து. என்னைத் தூதனுப்பினால் வெற்றி தவருதென்பான், 'என்னைத் தூதுவிடுக இனிக் கொற்ற வேந்தே' என்றான். (79)

20. மலைகண்டதெனவென்கைம்மறத்தண்டின்வலிகண்டு மகவான்மைந்தன், சிலைகண்டுமிருவர்பொருந் திறல்கண்டு மெமக்காகத் திருமாலின்ற, நிலைகண்டுமிவள்விரித்த குழல்கண்டு மிமைப்பொழுதி னேரார்தம்மைக், கொலைகண்டுமகிழாம லவன்குடைக்கீ ழுயிர்வாழக் குறிக்கின்றுயே.

(இ - ள்.) மலை கண்டது என - மலையைப் பார்த்தாற்போல, என் கை மறம் தண்டின் வலி கண்டும் - எனது கையிலுள்ள கொடுமையுடைய கதாயுதத்தினது வலிமையைப் பார்த்திருந்தும், மகவான் மைந்தன் சிலை கண்டும் - இந்திரனது குமாரனான அருச்சுனனது காண்டீப வில்லின் தொழிலைப் பார்த்திருந்தும், இருவர் பொரும் திறல் கண்டும் - மற்றை யிரண்டு தம்பியராகிய நகுல சகதேவர்கள் போர்செய்யும் வல்லமையைப் பார்த்திருந்தும், எமக்கு ஆக திருமால் நின்ற நிலை கண்டும் - நமக்கு உதவியாக ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சமான கிருஷ்ணமூர்த்தி உடன்பட்டு நின்ற உறுதிநிலையைப் பார்த்

திருந்தும், இவள் விரித்த குழல் கண்டும் - இத்திரௌபதி விரித்துள்ள கூந்தலைப் பார்த்திருந்தும், இமைப் பொழுதில் நேரார் தம்மை கொலைகண்டு மகிழாமல் - ஒரு கொடிப் பொழுதினுள்ளே பகைவர்களை (நாங்கள்) கொலை செய்தலைப் பார்த்து உவப்படையாமல், அவன் குடைக்கீழ் உயிர் வாழ குறிக்கின்றீயே - அத்துரியோதனது ஆளுகையின் கீழ் (அடங்கியிருந்து அரசுபெற்று) உயிரோடு கூடிவாழ எண்ணுகின்றீயே! (எ - று.)—ஏகாரம் - அவ் வெண்ணத்தின் இழிவை நன்கு விளக்கும்.

'இவள் விரித்த குழல் கண்டும்' என்றதனால், துரியோதனனை யரைக் கொல்லுதற்குக் காரணமும், மற்றையவற்றால் அவர்களைக் கொல்லுதற்கு ஏற்ற ஆற்றலும் கூறியவாறும். இங்கு 'உயிர்வாழக் குறிக்கின்றீயே' என்றதனால், இங்ஙனம் மானங்கெட்டு வாழ்தலினும் இறத்தலே தகுதி யென்பது போதரும். எமக்கு ஆக - எமக்கு (வெற்றி) உண்டாக என்றலுமாம்.

வீமன் கையிலுள்ள கதாயுதம் பகைவர்களைத் தவருது கொல்லும் இயல்பினதாய்ச் சத்ருகாதினி பென்று பெயர் பெறும்; அதனது அவ்வகையான சிறப்புத் தோன்ற, 'மறத்தண்டு' என்றான். வீமனுக்கு இக்கதை, அசுரத்தச்சனை மயனால் அளிக்கப்பட்டது. அருச்சுனனுக்குக் காண்டீவ வில், காண்டவ தகன காலத்திலே அக்கினி பகவான் கொடுத்தது. மகவான் என்ற சொல்லுக்கு-யாகங்களை யுடையவனென்று காரணப்பொருள்; மகம் - யாகம்; வான் - ஆண்பாற் பெயர்விகுதி. நூறு அசுவமேதயாகங்களைச் செய்து தேவராசபதவி பெறுதலால், இந்திரனுக்கு இப்பெயர்: யாகத்திற் கொண்டாடப்படும் தேவர்கள் பலர்க்கும் தலைவனுதல் பற்றியுமாம். இருவர்-தொகைக்குறிப்பு: இரட்டைய என்றவாறு மாம். இமைப்பொழுது - இயற்கையில் ஒருகால் கண்ணிமைகளை மூடித்திறத்தற்கு வேண்டும் பொழுது. நேரார் என்பதற்கு-உடன் பட்டு இணங்கி வாழாதவரென்று பொருள்; எனவே, பகைவராம்; எதிர்மறைப் பலர்பால்வினையாலணையும்பெயர். உம்மைகள் - உயர்வுசிறப்பு. (80)

21.—கண்ணன், வீமனைச் சமாதானப் படுத்துதல்.

வெம்புயவீமனும் வெகுண்டு மீண்டுமிவை யெடுத்துரைப்ப மேகமேனிப், பைம்பொனெடுந் தனித்திகிரிப் பரந்தாமன் கருணையுடன் பரிந்துநோக்கி, யம்புவியின் முன்பிறந்தோ ரர்சுநெறிமுறையுரைத்தா லதுகேளாமற், றம்பியருமறுப்பரோ தலைவவினிக்கடுங் கோபந் தணிகவென்றான்.

(இ - ள்.) வெம்புயம் வீமனும் - (பகைவர்க்குப்) பயங்கரமான தோள்களையுடைய வீமசேனனும், வெகுண்டு - கோபங்கொண்டு, இவை மீண்டும் எடுத்து உரைப்ப - இவ்வார்த்தைகளை மறுபடியும் எடுத்துச் சொல்ல,—(அப்பொழுது),—மேகம் மேனி - மேகம்போற் கரிய திருமேனியையும், பைம்பொன் நெடுந் தனிதிகிரி-பசும் பொன் மயமான பெரிய ஒப்பற்ற சக்கராயுதத்தையுமுடைய, பரந்தாமன் -

(எல்லாவொளிகளினுஞ்) சிறந்த ஒளியையுடையவனை கண்ண பிரான், கருணையுடன் - அருளுடனே, பரிந்துநோக்கி - (வீமசேனனை) அன்பாகப் பார்த்து,—'தலைவ - சிறந்த வீரனே! அம் புவியில் - அழகிய நிலவுலகத்தில், முன் பிறந்தோர் - முன்னே பிறந்தவர் [மூத்தவர், தமையனார் என்றபடி], அரசு நெறி முறை உரைத்தால் - இராசநீதியின் முறைமையைக் கூறினால், அது கேளாமல் - அவ் வார்த்தையைக் கேட்டு அங்கீகரியாமல், தம்பியரும் மறுப்பரோ - தம்பிமார்களும் மறுப்பார்களோ? [அல்லரென்றபடி]; (ஆதலால்), இனி கடுங்கோபம் தணிக - இனி (நீ) கடுமையான கோபம் ஆறுவ தாக,' என்றான் - என்று கூறியருளினான்; (எ - று.)

துரியோதனதியர்களை அழிக்கவேண்டு மென்பது போலவே, பாண்டவருள் ஒருவரோடொருவர் மாறுபடக்கூடாதென்பதும் தமது திருவுள்ளமாதலால் கண்ணன் இங்ஙனம் ஏற்றபடி நீதி போதித்து வீமனது கோபத்தை மிகாது தணிப்பவனானான்.

வீமனும் என்ற உம்மை கதைத்தொடர்ச்சி பற்றிவந்த இறந்தது தழுவிய எச்சம். மீண்டும் என்ற உம்மையும் இறந்தது தழுவிய எச்சமே. கீழ்ப் பன்னிரண்டாங் கவிமுதல் ஐந்து கவிகளில் ஒருகால் வீமன் சில கூறியுள்ளதனை நோக்கி 'மீண்டும் இவை யெடுத்துரைப்ப' என்றனர். பரந்தாமன் என்ற சொல்லுக்கு-(எல்லாப் பதவிகளிலுஞ்) சிறந்த முத்தித் தானத்தையுடையவ னென்றும் பொருள் கொள்ளலாம்; தாமம் - ஒளியும், இடமுமாம். தலைவ (நீ) கோபந்தணிக - குணப்பெயர் குணியின் முடிபை யேற்றது. 'தலைவ' என்றது - தன் வழிப் படுத்துதற்காகத் துதியாக கூறியது. தம்பியரும், உம்மை - சிறப்பும்மை. திருமாலின் சக்கராயுதம் சுதரிசனமென்னும் பெயரினது. (81)

22 —இதுமுதல் நான்கு கவிகள் - ஒருதொடர்: அருச்சுனன் வார்த்தை.

மைக்காலமுகிலூர்தி வானவர்கோன் றிருமதலை வணங்கி நின்று, முக்காலங்களுமுணரு முகுந்தனுக்கு முதல்வனுக்கு மொழிவான் மன்னே, அக்காலம்பொறுத்தவெலா மமையாமலின்னமிருந் தறமே சொன்னால், எக்காலம்பகைமுடித்துத் திரௌபதியுங் குழன்முடிக்க விருக்கின்றாளே.

(இ - ள்.) (இங்ஙனம் வீமனது கோபத்தைக் கண்ணபிரான் தணித்த பின்பு), மை - கரிய, காலம் - கார்காலத்து மழை பொழிகின்ற, முகில் - மேகத்தை, ஊர்தி - வாகனமாகவுடைய, வானவர் கோன் - தேவர்கட்கு அரசனான இந்திரனது, திரு மதலை - சிறந்த குமாரனாகிய அருச்சுனன்,—வணங்கி நின்று - நமஸ்கரித்து எழுந்து நின்று,—முக்காலங்களும் உணரும் முகுந்தனுக்கும் - மூன்று காலத்துச் செய்திகளையும் அறிகிற கண்ணபிரானுக்கும், முதல்வனுக்கும் - மூத்த தமையனான தருமனுக்கும், மொழிவான் - (சில் வார்த்தை) கூறுவான்; (அவை யாவையெனின்:)—'ஆ காலம் பொறுத்த எலாம் அமையாமல் - (முன்புசூதாடிய) அந்தக்காலத்திற்

(பகைவர்பிழைகளைப்) பொறுத்த செய்கைகளெல்லாம் போதாமல், இன்னம் இருந்து அறமே சொன்னல் - இப்பொழுதும்(போர் முயற்சியின்றிப்) பொறுத்து இருந்து (அப்பொறுமையாகிய) தருமத்தையே போதித்துக்கொண்டிருந்தால், எ காலம் - எப் பொழுது, பகை முடித்து - (நாம்) பகைவர்களைக் கொன்று, (அதன் பிறகு), திரௌபதியும் குழல் முடிக்க இருக்கின்றாள் - திரௌபதியும் (தனது சபதத்தை நிறைவேற்றித் தனது விரித்த) கூந்தலை யெடுத்து முடித்து அலங்கரிக்க இருக்கின்றாள்! (எ - று.)—இரண் டாமடியின் ஈற்றில், மன், ஓ - அசைகள்.

தாங்கள் செய்த சபதங்களுக்கெல்லாம் திரௌபதியினது பரி பவமே காரணமாதலால், அவள் பிரதிஜ்ஞையையே பிரதானமாக எடுத்துக் கூறினன்.

ஊர்தி - ஏறி நடத்தப்படுவது என வாகனத்துக்குக் காரணப் பெயர்; ஊர்தல்-ஏறிச் செலுத்தல்: இ - செயப்படுபொருள்விகுதி, த் - எழுத்துப்பேறு. மேகவாகன னென்று இந்திரனுக்கு ஒருபெயர். காலமுகில் - காலமென்னும் பொதுப்பெயர், இங்கே சிறப்பாய்க் கார்காலத்தைக் குறிக்கும். இனி, மைக் கால முகில் - அஞ்சனம் போலக் கரிய மேக மென்றுமாம். மைக்காலமுகில் - நீர்கொண்ட மேக மென்றபடி. கடவுள் ஸர்வஜ்ஞ ஞதலால், 'மூக்காலங்களு முணரும்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது, இங்கு 'மூக் காலம்' என்றது-மூக்காலவரலாற்றை யுணர்த்தியதனல், காலவாகு பெயர். முகுந்தன் - முத்தியுலக இன்பத்தையும், இவ்வுலக இன் பத்தையும் (தன்னடியார்க்குத்) தருபவன்; மு - முக்தி, கு - பூமி, த - கொடுப்பவன், 'பொறுத்த' என்பதைப் பெயரெச்சமாகவும், பல வின்பால் வினையாலணையும்பெயராகவுங் கொள்ளலாம். 'முடித்து' என்னும் செயவெனெச்சம் பிறகருத்தாவின் வினைகொண்டு முடி தற்கு ஏலாதாதலால், அதனை, அவ்வினையையுங்கொள்வதற்கு ஏற்ற செயவெனெச்சமாக 'முடிக்க' எனத் திரித்துக் கொள்க. துரியோ தனன் செய்த குற்றம் பலவாதல்பற்றி, அவற்றைப்பொறுத்தலும் பலவாதலால், 'பொறுத்தவெலாம்' எனப் பன்மையாகக் கூறப் பட்டது. (82)

83. தேவராயினும் பழையதெயித்திய ராயினுமற்றுஞ் செப்பு கின்றேர், யாவராயினு மெதிர்ந்தோ ருயிருணவென் றிருப்பதுவேயென் கைவாளி, மூவராயவர்களுக்கு முதல்வனுகியமூர்த்தி முகிழ்ப்பூக, மீவராலுகளும் வயற்குருநா டென்னிவ னவன்பால் வேண்டுமாறே.

(இ - ள்.) மூவர் ஆயவர்களுக்கும் முதல்வன் ஆகிய மூர்த்தி - திரிமூர்த்திகளுக்கும் காரணனுன சிறந்தவடிவமுடைய பெரி யோனே! தேவர் ஆயினும் - தேவர்களானுலும், பழைய தெயித் தியர் ஆயினும் - பழமையான அசுரர்களானுலும், மற்றும் செப்பு கின்றேர் யாவர் ஆயினும் - இன்னும் சொல்லப்படுகிறவர் எவரா னுலும், எதிர்ந்தோர் - (போரில்) எதிரிட்டவர்களது, உயிர் - உயிரை, உண என்றே - உண்ணும்பொருட்டாகவே, என்கை வாளி - எனது

கையிலுள்ள அம்பு, இருப்பது—; (அப்படியிருக்க), இவன் - இத் தருமன், முகில் தோய் பூகம் மீ வராலு கலும் வயல் குரு நாடு - மேகங்களை அளாவ உயர்ந்த பாக்குமரங்களின்மீது வராலு மீன்கள் குதிக்கப் பெற்ற (நீர்வளச்சிறப்பையுடைய) கழனிகளையுடைய குரு நாட்டை, அவன் பால் வேண்டும் ஆறு - அத்துரியோதனனிடம் இரக்க விரும்பும் விதம், என் - யாது காரணத்தால்? (எ - று.)

அசுரர் தேவர்களினும் மூத்தவராதலால், "பழையதெயித் தியர்" என்றது; இதுபற்றி, அசுரர்க்கு 'பூர்வதேவர்' என்று ஒரு பெயர்; இக்காரணத்தால் கீழ் நிவாதகவசர் காலகேயர் வதைச்சருக் கத்தில் அவர்களை 'புரோசநம்' என்றதுங் காண்க. தைத்தியர் - (காசியபமுனிவரது மனைவிமார்களுள்) திதியென்பவளது புத்திரர்; தத்திதாந்தநாமம்; அது, தெயித்தியர் என்ற போலி விகாரம் பெற்றது. இரண்டாமடியின் முதலில் ஏவராயினும் என்றும் பாடம். உயிருண - உயிரை உடம்பினின்று கவர்ந்து கொள்ள என்றபடி; 'உண்டற்குரிய வல்லாப்பொருளை, உண்டனபோலக் கூறலு மரபே" என்று தொல்காப்பியத்துச் சொல்லப்பட்ட மரபு வழுவமைதியால் உண்ணுதலும் உண்ணப்படாததும் - உண்பதும் உண்ணப்படுவதுமாக உரைக்கப்பட்டன. உணவு என்று எனப் பிரித்து, உயிரைத் தனக்கு இரையென்று கருதியிருப்பதென்றலு மாம்.

திருப்பாற்கடலில் எழுந்தருளியுள்ள திருமாலின் வியூகமூர்த்தி களாகிய வாஸுதேவன், ஸங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன் என்ற நால்வருள், பிரதானமூர்த்தியான வாசுதேவன், பிரம விஷ்ணு ருத்திர ரூபிகளாய்ப் படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்களைச் செய்யும் மற்றை மூவர்க்குங் காரணனாதலால், அங்ஙிலையைக்கருதி, 'மூவராயவர்களுக்கும் முதல்வனாகிய மூர்த்தி' என்றார்; இனி, "முதலாவார்மூவரே அம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர்வண் ணன்", "தேவராய்த்தேவர்க்குந் தெரியாத வொளியுருவாய், மூவராய் மூவர்க்குள் முதல்வனாய் நின்றாய் நீ" என்றவற்றை அடியொற்றி 'மூவராயவர்களுக்குண் முதல்வனாகிய' எனப் பாடங்கொண்டு திரிமூர் த்திகளுள்ளும் மற்றையிருமூர்த்திகளுக்குக் காரணமாகிய மூர்த்தியே என்றும் உரைக்கலாம். "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனுந், தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்" என்றார் பெரியாரும். மூவராய் அவர்களுக்கும் முதல்வனாகிய எனப் பிரிதலும் உரைக்கலாம். மூவர் என்ற தொகைக்குறிப்பின் மேல், ஆயவர்கள் - பகுதிப்பொருள்விகுதி. மூர்த்தி - இயல்பாகிய அண்மைவிளி.

முகில்தோய் பூகம் மீ வராலுகளும் வயல் - பாக்குமரங்களின் உயர்ச்சிச் செழுமையையும், மீன்களின் துள்ளற்கொழுமையையும் விளக்கியவாறு. பாக்குமரத்திற்கும் மேகத்திற்கும் வரால்மீனுக்கும் சம்பந்தமில்லாதிருக்கவும், சம்பந்தத்தைக் கற்பித்துக்கூறியது - தொடர்புயர்வுநவிற்சியணி; இதனால், நாட்டின் வளம் தெனிக்கும்.

உணவென்றிருப்பதுவே - உணவே என்றிருப்பது என ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. (83)

24. தீண்டாதகற்புடைய செழுந்திருவைத் துகிலுரியச் செய லொன்றின்றி, நீண்டானேகரியானே நிமலாவென் றரற்றினளாய் நின்றுசோர, மாண்டார்போலதுகண்டு மன்னவையில்யாமிருந்த மாசுதீர, வேண்டாவோவேண்டுவது மேம்படுநல் லறமேயோ வேந்தர்வேந்தே.

(இ - ள்.) வேந்தர் வேந்தே - அரசர்களுக் கரசனே!—தீண் டாத - (அயற்புருஷரால்) தீதாடுதற்குந் தகாத, கற்பு உடைய - பதிவிரதா தருமத்தையுடைய, செழுந் திருவை - அழகிய இலக்குமி போன்ற திரௌபதியை, துகில் உரிய-(துரியோதனன் தம்பி) ஆடை யைக் களைகையில், (அவள்), செயல் ஒன்று இன்றி - (அதற்குப் பரிகாரமாகச்) செய்யத்தக்கது ஒரு காரியமுமில்லாமல், நீண்டானே கரியானே நிமலா என்று அரற்றினள் ஆய் - (முன்னே திரிவிக்கிர மனுய்) நீண்டவனே! கரியதிருநிறமுடைய கண்ணனே! குற்றமற்ற மூர்த்தியே! என்று கூவி(க் கதறிக் கண்ணனையே) பிரார்த்தித்த வளாய், நின்று சோர - தளர்வடைந்து நிற்க, அது கண்டும் - அந் நிலையைப் பார்த்திருந்தும், யாம் - நாம் ஐவரும், மன் அவையில் - அவ்விராசசபையிலே, மாண்டார்போல் இருந்த - (யாதொன்றுஞ் செய்யாமல்) இறந்தவர்போலத் தொழிலற்றிருந்த, மாசு - குற்றம், தீர வேண்டாவோ - நீங்க வேண்டுவதில்லையோ? வேண்டுவது மேம் படு நல் அறமேயோ - செய்யவேண்டுவது சிறந்த நல்ல தருமமாகிய பொறுமை மாத்திரமோ? (எ - று.)

அவளது பதிவிரதா தருமத்தினது தெருப்போடொத்த தூய் மையை விளக்குதற்கு, 'தீண்டாத கற்பு' என்றார்; இனி, அவளைத் துகிலுரிந்தது தீண்டக்கூடாமல் விலக்காயிருந்த காலத்திலாதலால், 'தீண்டாத திரு' என்றதாகவுங்கொள்ளலாம். கற்பு - கணவனையே தெய்வமாகக்கொண்டு அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் நடத்தை; பாதிவிரத்தியம். கணவனிற் சிறந்த தெய்வமில்லையென்றும் அவனை இன்னபடி வழிபடவேண்டுமென்று தாய்தந்தையரும், அந்தணரி டத்தும் பெரியோரிடத்தும் உறவினரிடத்தும் தேவரிடத்தும் நடக்க வேண்டுவது இன்னபடி யென்று கணவனும் கற்பித்தலால் ஒழுகும் ஒழுக்கமாதலின் கற்பு என்பது காரணப்பெயரென்பர். இனி,கல்லின் தன்மைபோல நிலைகுலையாத உறுதியுடையதென்றுமாம். திரௌ பதி, பேர் கூறின மாத்திரத்தில் பெரும்பாவங்களையொழிக்க வல்ல பஞ்சகன்னிகைகளுள் ஒருத்தியாவள்; (அவராவர் - அகலியை, திரௌபதி, சீதை, தாரை, மண்டோதரி என இவர். முன்னைய பிறப்பின் வரத்தாலும், சூர்ப்பதேவியின் கட்டளையாலும், ஐவர்க்கு மனைவியானதால் திரௌபதியின் கற்பு நிலைமைக்குச் சிறிதுங் குறை பாடில்லையென அறிக. திரு - திரௌபதிக்கு உவமையாகுபெயர். நல்வினையுடையார்க் கெல்லாம் பொதுவாகின்ற திருமகள்போல, இவளை மனைவியாகப் பெறுதற்கேற்ற பூர்வசன்ம சுகிருதமுடைய பாண்டவரைவர்க்கும் இவள் பொதுப்பட மனைவியாதலால், இவளைத்

திருமகளோடு உவமித்தது. திருமகளுவமை - அழகுக்கும் செல்வ நிறைவிற்குமாம். செழுந்திரு என விசேடித்தது, அவள் போல இவள் இடையில் விட்டு நீங்காளாதலால்.

துகிலுரிதல் - வஸ்திராபஹரணம்: "அருகணுகி மடவரலை யஞ்சாமல் துகிலுரிவா னடர்ந்தபோதில், இருகைகூறுமலர் குவிய எம்பெருமானிணையடிக்கே யிதயம்வைத்தாள்", 'ஆருகி யிருதடங் கண் அஞ்சன வெம்புனல் சோரவளகஞ்சோர, வேருண துகில் தகைந்த கைசோர மெய்சோர வேரூர் சொல்லுங், கூருமற் கோவிந்தா கோவிந்தா வென்றரற்றிக் குளிர்ந்து நாவில், ஊருக வமிழ்தூறவுடல்புளகித்து உள்ளமெலா முருகினளே," "அருமறை சொல்லிய நாமமாயிரமு முரைத்தழைக்க" எனக் கீழ்ச் சூதுபோர்ச் சருக்கத்து வந்ததை இங்கே உணர்க. மாண்டார், மாள்-பகுதி; மாட்சிமைப்பட்டார் என்ற பொருளில், மாண் - பகுதி. வேண்டுவது மேம்படுநல்லறமேயோ என்பதற்கு - இராச்சியத்தையிரப்பது பெருமைபெறத் தக்க சிறந்த இராசதருமந்தானே? என்றும் உரைக்கலாம். உயிர் நீங்கிய உடலை 'மாண்டார்' என உயர்திணை யாற் கூறினது, மரபுவழுவமைதி. (84)

25. பொன்னருந்திகிரியினன் போனலும் பொறைவேந்தன் புகன்றவெல்லாஞ், சொன்னலுமவன்கேளான் விதிவலியாற் கெடு மதிகண் டோன்றுதன்றே, யெந்நாளுமுவர்நிலத்தி னென்முளாவித் திடினும்விளை வெய்திடாது, பன்னகந்தனக்கமிர்தங் கொடுத்தாலும் விடமொழியப் பயன்கொடாதே.

(இ - ள்.) பொன் ஆரும் திகிரியினன் - பொன் மயமாகப் பொருந்திய சக்கராயுதத்தை யுடையவனுன கண்ணபிரான், போனலும் - தூதுசென்றருளினலும், பொறை வேந்தன் புகன்ற எல்லாம் - பொறுமைக் குணத்தையுடைய யுதிட்டிரராசன் கூறிய சமாதான வார்த்தைகளை யெல்லாம், சொன்னலும் - (கண்ணன்) சொல்லியருளினலும், அவன் கேளான் - அத்துரியோதனன் கேட்டு அதன்படி நடக்கமாட்டான், (ஏனெனில்),—விதிவலியால் கெடு மதி கண் டோன்றுது அன்றே - போகூழின் வலியினல் அழிதற்குக் காரணமான அறிவுக்கு (நீதி) கட்புலப்படாதாம்; எ நாளும் உவர் நிலத்தின் என் முளாவித்திடினும் விளைவு எய்திடாது - எப்பொழுதும் களர் நிலத்தில் எந்த விதையை விதைத்திட்டாலும் (அது) விளைதலை யடையமாட்டாது: பன்னகந் தனக்கு அமிர்தம் கொடுத்தாலும் விடம் ஒழிய பயன் கொடாதே - பாம்புக்குப் பாலை யூட்டினலும் அது விஷத்தைத் தவிர வேறு நல்ல பயனைத் தராதன்றே!

மூன்று நான்காம் அடிகளில் உபமானங்கள் - எவ்வளவு நல்ல உபதேசத்தை எத்தனைக் காலம் செய்தாலும் அது தீயோர் மனத்திற் சென்று பதிந்து பலியாதென்ற கருத்தையும், தீயோர்க்கு நல்லன உபதேசித்தால் அவர் அதற்கு எதிராகத் தீங்குகளையே புரிவரென்ற கருத்தையும் விளக்க வந்தன. இங்கே 'உவர்நிலம்' என்றது, விதைத்த விதையையெல்லாம் முளைக்க வொட்டாமற்

செய்யும் ஊஷரபூமியை. அது ஒருவாற்றலும் பயன்படாத அறிவிலார்க்கு உவமையாதலில், "பயவாக்களரனீயர் கல்லாதவர்" எனத் திருக்குறளிலுங் காண்க. நெல் முளை எனப் பதம் பிரித்து உரைத்தலில், பொருட் சிறப்பின்மை உணர்க. தீமையடைவிக்க வேண்டிய முன்னைய பிறப்பின் கருமம் வந்து உற்றபோது எந்த நியாயமும் மனத்திற்கு இணங்காதாதலால், 'விதிவலியாற் கெடுமதி கண் தோன்றுதன்றே' எனப்பட்டது; "பேதைப்படுக்கு மிழவூழறிவு" என்றார் திருவள்ளுவனாரும்.

எங்ஙனும் என்ற உம்மை - முற்றுப்பொருளது: மற்ற உம்மைகள் - உயர்வுசிறப்பு. பன்னகம் - பங்ஙகம் என்பதன் விகாரம்; பல்நாகம் எனப் பதம்பிரித்து, விஷப்பற்களையுடைய பாம்பு எனினுமாம்: 'பைங்ஙாகம்' என்ற பாடத்துக்கு - படத்தையுடைய பாம்பென்க. பொன் ஆரும் - திருமகள் பொருந்தியிருக்கப்பெற்ற என்று உரைத்து, திகிரியினனுக்கு அடைமொழியாக்கினும் அமையும். அமிர்தம் - மரணத்தைத் தவிர்ப்பது. (85)

26.—இக்கவியிற் பின்னிரண்டடிகளும், அடுத்த மூன்று கவிகளும் - நகுலன் வார்த்தை.

பார்த்தனிவை புகன்றிறைவன் பணித்தருள விருந்ததற்பின்
பரிவினேடுந், தீர்த்தனிருபதமிறைஞ்சித் தருமனையுங் கைதொழுது
சினங்கொள்வேலான், நீத்தநெடுங்கடலெழுபா ரடகலவர் பெறுவரெனு
நிகழ்ச்சி பொய்யோ, கோத்தருமந்தனிலாண்மை கூறுதோ கூறுகநீ
கொற்ற வேந்தே.

இதுமுதல் நான்கு கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) பார்த்தன் - அருச்சுனன், இவை புகன்று - இவ்வார்த்தைகளைச் சொல்லி, இறைவன் பணித்தருள - (யாவர்க்கும்) தலைவனுகிய கண்ணபிரான் (கோபந்தணிவாயென்று) அடக்கிக்கூறியருள, இருந்ததன் பின் - (பேச்சை முடித்து) இருந்தபின்பு,—சினம் கொள்வேலான் - கோபத்தைக்கொண்ட வேலாயுதத்தையுடையவனை நகுலன்,—பரிவினேடும்-அன்புடனே, தீர்த்தன் இருபதம் இறைஞ்சி - பரிசுத்தமூர்த்தியான கண்ணபிரானது இரண்டு திருவடிகளையும் வணங்கி, தருமனையும் கைதொழுது - யுதிட்டிரனையும் கைகூப்பித் தொழுது, (யுதிட்டிரனை நோக்கி),—கொற்றம் வேந்தே - வெற்றியையுடைய அரசனே! 'நீத்தம் நெடுங் கடல் எழு பார் - வெள்ளமயமான பெரிய கடலினாற் சூழப்பட்ட ஏழு தீவுகளாகவுள்ள பூமி முழுவதையும், அடல் ஐவர் பெறுவர் - வலிமையையுடைய பஞ்சபாண்டவர்கள் (துரியோதனனியரினின்று) பெறுவார்கள்,' எனும் நிகழ்ச்சி - என்று (உலகத்தார்) சொல்லுஞ் சொல், பொய்யோ-பொய்யாகுமோ? கோ தருமந்தனில் ஆண்மை கூறுதோ-இராசதருமத்தில் (பராக்கிரமம் முதலிய) ஆண்மகனுக்கு உரிய தன்மை சொல்லப்பட வில்லையோ? [பொறுமைதான் சொல்லப்பட்டுள்ளதோ?] நீ கூறுக - நீ சொல்வாயாக; (எ - று.)

கீழ் வீமன்வார்த்தை முடிந்தபின்பு கண்ணன் "அம்புவியில் முன் பிறந்தோ ரரசுநெறி முறையுரைத்தா லதுகேளாமல், தம்பிய ரும் மறுப்பரோ தலைவ விளிக்கடுங் கோபந்தணிக" என்றுகூறி அவனைச் சாந்தப்படுத்தியதற்கும், மேல் நகுலன் வார்த்தை முடிந்த பின்பு நன்றெனக் கையமைத்தருளுவதற்கும் ஏற்ப, இங்கு 'இறை வன் பணித்தருள' என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளப்பட் டது. தாமே வெற்றி பெறுதல் நிச்சயமென்பதை விளக்குதற்கு 'அடலேவர்' என்றும், 'நிகழ்ச்சி பொய்யோ' என்றும் கூறினன்: அடுத்த செய்யுளின் ஈற்றடியிலும் இக்கருத்துப்பட வுரைத்தல் காண்க. இங்கே 'நிகழ்ச்சி' என்றது, 'பொறுத்தவர் பூமியாள்வார்' என உலகத்து வழங்குவதையு மாகலாம். அரசர்கள் பராக்கிரமத் தைக் காட்டுவது இராச தருமமன்றே? என்பது இறுதியடியின் கருத்து.

பார்த்தன்-பிருதையின் மகன்; தத்திதாந்தநாமம், (பிருதை - குந்தி.) இது, அருச்சுனனுக்குச் சிறப்பாகவழங்கும் காரணவிடுகுறி; தாய்க்கு இளைய மகனிடத்தில் அன்பு மிகுதியென்ற பொதுநியாயம் இதற்குக் காரணமாகலாம். இறைவன்-தலைமையுணர்த்தும் இறை மையென்னும் பண்பினடியாகப் பிறந்த பெயர்: இனி, அந்தரியாமி யாய் எல்லாப் பொருளிலுந் தங்குகிறவன் என்றும் பொருள் கொள் ளலாம்; இறுத்தல் - தங்குதல். இருந்ததற்பின் என்பதற்கும், இறைஞ்சி தொழுது வேலான் என்பவற்றிற்கும் - மேல் முப்பதாங் கவியில் 'உரைத்ததற்பின்' என வருவது, முடிக்குஞ்சொல். தீர்த் தன் - திருமாலுக்குப் பெயராதலால், "தீர்த்த னுலகளந்த சேவடி" எனத் திருவாய்மொழியிலுங் காண்க. உடையானது சினத்தை ஆயுதத்தின் மேல் ஏற்றி, 'சினங்கொள்வேல் என்றார்; உபசார வழக்கு: இனி 'சினங்கொள்' என்பது - வேலானுக்கு அடைமொழி யாகலுமாம்.

நீத்தம் - நீந்தப்படுவது என வெள்ளத்துக்குக் காரணக்குறி: நீந்து - பகுதி, அம் - செயப்படுபொருள் விகுதி, வலித்தல்-விகாரம். எழுபார் - ஜம்பூ, பிலட்சம், குசம், கிரௌஞ்சம், சாகம், சால்மலி, புஷ் கரம் என்னும் ஏழு தீவுகளாக வுள்ளவை. ஏழுதீவுகளும் ஏழுகடல் களுள் தனித்தனி ஒவ்வொன்றுற் சூழப்பட்டுள்ளனவென்பது, புராணக்கொள்கை. ஏழுகடல்கள்-உவர்நீர், கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், பால், நன்னீர் என இவற்றின் மயமானவை. (86)

27. கேவலந்தீர் வலியபகை கிடக்கமுதற் கிளர்மழைக்குக் கிரியொன்றேந்து, கோவலன் போயுரைத்தாலுங் குருநாடுமரசுமவன் கொடுக்கமாட்டான், நாவலம்பூதலத்தரசர் நாடிரந்தோமென நம்மை நகையாவண்ணங், காவலன்றன் படைவலியுமெனது தடம்புயவலியுங் காணலாமே.

(இ - ள்.) கேவலம் தீர் - சிறுமை யில்லாத [பெரிய என்ற படி], வலிய பகை - உறுதியான பகைமை, கிடக்க - (நமக்கும் அவர்க் கும் வெகுகாலமாக) நிலைத்திருப்பதனால்,—முதல் கிளர் மழைக்கு

கிரி ஒன்று ஏந்து கோவலன் போய் உரைத்தாலும் - முன்னெரு காலத்திலே மிகுதியாகப் பெய்த மழையைத் தடுப்பதற்கு (க் கோவர்த்தனமென்னும்) மலையொன்றை (க் குடையாக) எடுத்தருளிய கண்ணபிரான் தூதுபோய்ச் சொன்னாலும், அவன் - அத்துரியோதனன், குருநாடும் அரசும் கொடுக்க மாட்டான் - குருநாட்டின் பாகத்தையும் (அதற்கு உரிய) அரசாட்சியையும் (நமக்குக்) கொடுக்கமாட்டான்; (ஆதலால்),—அம் நாவல் பூதலத்து அரசர் - அழகிய ஜம்பூத்துவீபத்திலுள்ள அரசர்களெல்லோரும், நாடு இரண்டாம என நம்மை நகையாவண்ணம் - இராச்சியத்தை (ப் பகைவனிடம்) யாசித்தோமென்று (நம்மை இகழ்ந்து) சிரித்துப் பரிகாசஞ்செய்யாதபடி, காவலன் தன் படைவலியும் - அரசனான துரியோதனனது சேனைபலத்தையும், எனது தட புயம் வலியும் - (தம்பியாகிய) என்னுடைய பெரிய தோள்களின் வலிமையையும், காணல் ஆமே - (விரைவில் எது சிறந்ததென்று பிரதியட்சமாகப்) பார்த்திடலாமே; (எ - று.)

துரியோதனனை வேரோடு அழித்துவிடுதல் என்னெருவனுலேயே செய்யக்கூடிய சிறிய தொழிலாயிருக்க, வலியற்றவர்போல எளிமை தோன்ற வீணுகச் சமாதானம் பேசுதல் சிறிதுந் தகுதியன்றென்று கூறினனென்க. நகுலன் இவ்வகைப் பெருந்திறலுடையனுதலை, "நகுலன் பரியேறினுலொன்று மூன்று, புவனங்களேழும் புடைபோய்—இகலும், அவனுடைய வில்லு மதிரதரு மெல்லாம், இவனுடைய முன்னில்லா ரீங்கு" என்று (பாரதவெண்பாவிற்) கண்ணன் கூறியதனுலும் உணர்க. 'எமது தடம்புய வலியும்' என்ற பாடத்திற்கு - (வீமன் முதலிய) எங்களுடைய பெரியதோள் வலிமையு மென்க.

அடைக்கலமடைந்தவர்களை ஆதரிக்கிற கண்ணபிரானது உயர்வு தோன்ற, 'முதற் இளஞ்மழைக்குக் கிரியொன்றேந்து கோவலன்' என்றுன். முதல் - இளமையிலே என்றபடி. 'முகில்இளர் மழைக்கு' என்றும்பாடமுண்டு. மழைக்குக் கிரியேந்திய கதை:—திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாரும் கூடி மழையின பொருட்டாக இந்திரனை ஆராதித்தற்கென்று வழக்கப்படி சமைத்த சோற்றைக் கண்ணபிரான் ஒருகால் அவனுக்கு இடாதபடி விலக்கிக் கோவர்த்தனமலைக்கு இடச் சொல்லித் தானே ஒரு தேவதாரூபங்கொண்டு அமுதுசெய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களை யேவிக் கண்ணன் விரும்பி மேய்க்கிற கன்றுகட்கும் பசுக்கட்கும், கண்ணனுக்கு இஷ்டரான இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்கு தரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது, கண்ணன் கோவர்த்தனமென்னும் மலையை எடுத்துக் குடையாகப்பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையும் இடையூறு சிறிதுமின்றிக் காத்தருளின னென்பதாம்.

'தீர்வரிய' எனப் பாடமோதி, தீர்வு அரியபகை - நீங்குதலில்லாத விரோதம், கேவலம் - மிகுதியான, முதல் - இளமைதொடங்கி,

கிடக்க - (நமக்குள்) இருத்தலால் என உரைப்பாருமுளர். "தீராக் கோபம் போராய்முடியும்" என்பது நீதியாதலால், பலநாளாயுள்ள பகைமை சமாதானமாய் முடியாது என்றான். நாவலம்பூதலம், அம்-சாரியை யெனினுமாம். இந்தத்துவீபத்தின் மத்தியிலுள்ள மகா மேருமலையின் தென்புறத்தி லிருக்கின்றதொரு மிகப்பெரிய நாவல் மரத்தைப் பற்றித்தான் ஜம்பூத்வீப மென்கிற பெயர் இதற்கு உண்டாயிற்று; ஜம்பூ - நாவல். கோவலன் - கோபாலன் என்னும் வடசொல்லின் விகாரம்: பசுக்களைக் காப்பவனென்றும், உயிர்களைக் காப்பவனென்றும், பூமியைக் காப்பவனென்றும் பொருள்படும். இனி, தமிழ்மொழியாகவே, கோவலன் எனப்பிரித்து, பசுக்களைக் காத்தலில் வல்லவன் எனப் பொருள்கொள்ளினுமாம். காவலன் - எனப் பிரிந்து காத்தற்றொழிலையுடையவ னென்றும் பொருள்படும். நாவலந்தீவைக் கூறியது -மற்றைத் தீவுகட்கும் உபலக்ஷண மென்ற லும் ஒன்று. அருகிலுள்ளவராதலின், இத்தீவினரசரை மாத்திரம் எடுத்துக் கூறினன். உம்மைகள் ஐந்தனுள், முதலது சிறப்பு, மற்றவை - எண்ணுப்பொருளன. (87)

28. அன்னநடை யரம்பைதனை யவுணர்கவர்ந்திட விமை யோரரசுக்காக, முன்னமவருடன் பொருதுசிறை மீட்டானங் குலத்து முதல்வனன்றே, மன்னவையில் யாங்காண மடவரலைத்துகிலுரிந்த வலியோன்றன்பால், இன்னமிரந்தவன் குடைக்கீ ழிருந்தக் கானம்மை யுலகென் சொலாதே.

(இ - ள்.) நம் குலத்து முதல்வன் - நாம்பிறந்த குலத்தில் தோன்றிய பழைய அரசனுகிய புரூரவனென்பவன், முன்னம் - ஆதி காலத்திலே, அன்னம் நடை அரம்பைதனை - அன்னப்பறவையின் நடைபோன்ற நடையையுடைய (ஊர்வசி யென்னும்) தேவமகளை, அவுணர் கவர்ந்திட - அசுரர்கள் (பலாத்காரமாக) எடுத்துச்செல்ல, இமையோர் அரசுக்கு ஆக - தேவர்களுக்கு அரசனன இந்திரன் பொருட்டாக, அவருடன் பொருது - அவ்வசுரரோடு போர்செய்து, சிறை மீட்டான் அன்றே - (அவளை அவ்வசுரரது) காவலில் நின்றும் விடுவித்தானன்றே? (அவ்வாறிருக்க), மடவரலை - (நம் ஐவர்க்கும் பத்தினியான) இளமைப்பருவத்தின் வருகையையுடைய திரௌ பதியை, மன் அவையில் - இராச சபையிலே, யாம் காண - (கொழுந ராகிய) நரமெல்லோரும் பார்க்க, துகில் உரிந்த - (துச்சாதனனுல்) வஸ்திராபஹரணஞ் செய்த, வலியோன்தன்பால் - நெஞ்சுறுதியுள்ள துரியோதனனிடத்து, இன்னம் - இன்னமும், இரந்து - (இராச்சி யத்தை) யாசித்து, அவன் குடை கீழ் இருந்தக்கால் - அவனது அரசாட்சியின்கீழே வாழ்ந்திருந்தால், உலகு நம்மை என்சொலாது - உலகத்தவர் நம்மை யாதுதான் சொல்லமாட்டார்கள்? [பெரும்பழி கூறுவ ரென்றபடி]; (எ-று.)

சந்திரனது மைந்தனுகிய புதன் இளையினிடத்துப் பெற்ற புத்திரனுகிய புரூரவனென்பவன், நிலவுலகத்தில் ஒரு பூஞ்சோலையில் வந்து விளையாடிக்கொண்டிருந்த தேவலோகத்து மாதர்களுள்

ஊர்வசியை அசுரர்கள் கவர்ந்து செல்கையில், அவள் முறையிட்டதைக் கேட்டு, இந்திரனுக்கு வருகிற மானக்கேட்டை ஒழிக்கக் கருதி, உடனே தேரேறிச் சென்று பொருது அசுரர்களை வென்று அவளை மீட்டுவந்து, பின்பு இந்திரன் தூதனுப்பியதனால் அவளை மணஞ் செய்துகொண்டு, அவளிடத்தில் ஆயுவென்னுங் குமாரனைப் பெற்றனென்பது கீழ்க்குருகுலச்சருக்கத்துக் கதை. இங்ஙனம் தனக்கு யாதொரு சம்பந்தமுமில்லாத தேவதாசியை அத்தேவர்க்குப் பகைவரான அசுரர் பங்கப்படுத்த முயல்வதைப்பார்த்து மனம் பொறாமல் இந்திரனுக்கு உபகாரமாக அக்கொடியவரை வென்று அவளை அவர்களினின்றுமீட்டு அவளது துன்பத்தைத் தீர்த்தருளிய பெருங்கண்ணேட்டமுடைய புரூரவ சக்கரவர்த்தியினது மரபிற் பிறந்த நாம், அக்கினிசாட்சியாகப் பலருமறிய விரும்பி மணம்புரிந்த மனைவியைப் பங்காளிகள் பலருமறியச் சபையிலே பிடித்திழுத்துத் துகிலுரிந்து பங்கப்படுத்தியதைப் பார்த்தும் சிறிதும் மானமின்றி அவர்களை யழித்து அவளது துன்பத்தைத் தீர்க்கச் சிறிதும் முயலாமல் அவர்கள் கீழேயிருந்து இரந்து இராச்சியம்பெற்று ஆண்டு உண்டு வயிறுவளர்த்து வாழத்துணிவது தகுதியோ? எனத் தருமனது அளவுகடந்த பொறுமையை இகழ்ந்து கூறியவாறு.

நடை - தொழிற்பெயர்; ஐ - விகுதி: நட என்னும் பகுதியீறு தொகுத்தல் விகாரம். அரம்பை-ரம்பா; இந்த ஒருதேவமாதின் சிறப்புப்பெயர் எல்லாத் தேவமகளிர்க்கும் பொதுப்பெயராக வழங்கி,பின்பு இங்கே சிறப்பாய் ஊர்வசியைக் குறித்தது. இமையோர் - கண்ணிமையாதவர்; எதிர்மறைவினையாலணையும் பெயர்; எதிர்மறை ஆகாரம் புணர்ந்துகெட்டது. விகுதியீற்றயலாகாரம் ஓகாரமாயிற்று: இனி, இமையில் (மூடாமையாகிய) விசேஷ முடையவர் என உடன்பாடாகப் பொருளுரைப்பினும் அமையும். இமையோரரசு - தேவராசன். முதல்வன - ஆதிபுருஷன். மடவரல்-ஆரும்வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை: இங்கே மடமை - பெண்மைக் குணங்களுள் ஒன்றாய், அது-நாணம் அச்சம் பயிர்ப்பு முதலிய மற்றைக் குணங்களுக்கும் உபலக்ஷணமுமாகலாம். வலியோன்-அன்பின்றித் தீமைசெய்ய அஞ்சாத கன்னெஞ்சுடையா னென்றபடி. 'உலகு' என்னும் பால்பகா அஃறிணைப் பெயர் - பொருளால் உயிர்திணைப் பன்மை குறிப்பினும், சொல்லிலக்கணப்படி, 'சொலாது' என்னும் அஃறிணையொருமைமுற்றைக் கொண்டது. (88)

29. கானெறிபோய்க் கரந்துறைந்து கடவநாள்கழித்ததற்பின் கானநீங்கி, யீனமிலா வகைவந்தார் நந்துணைவரெனச் சிறிது மிரங்கானுகின், மானகரும் வளநாடு முரிமையுந்தன்மொழிப்படியே வழங்கானுகிற், றானறியாதவன் பிறர்போய்க் கற்பித்தா லறிவனோ தரணி வேந்தே.

(இ - ள்.) தரணி வேந்தே - நிலவுலகத்தை ஆளும் அரசனே!—(தரியோதனன்),—'நம் துணைவர் - நமது உடன்பிறந்தவர் [பாண்டவர்], கான் நெறி போய் - (பன்னிரண்டு வருஷகாலம்) காட்டுவழியிற்

சென்று வசித்தும், கரந்து உறைந்து - (ஒருவருஷ காலம்) மறைந்து வசித்தும், கடவநாள் கழித்து - (வனவாச அஜ்ஞாத வாசங்களிற் கழிக்கக்) கடமைப்பட்டனவான நாட்களை [பதின்மூன்று வருஷங்களை]ப் போக்கி, அதன்பின் - அதன் பின்பு, கானம் நீங்கி - காட்டில்வசித்தலை விட்டு, ஈனம் இலா வகை - யாதொரு குறைவு மில்லாதபடி, வந்தார் - மீண்டுவந்தார்கள்,' என - என்று, சிறிதும் இரங்கான் ஆகின் - (இயற்கையில் தானுகச்) சிறிதும் மன மிரங்கானுனல்,— மா நகரும் - பெரிய இந்திரப்பிரஸ்த நகரத்தையும், வளம் நாடும் - எல்லா வளங்களையுமுடைய குருநாட்டின் பாகத்தை யும், உரிமையும் - (அதன்) அரசாட்சி உரிமையையும், தன மொழி படியே - தான் முன்பு சொன்ன வார்த்தையின்படியே, வழங்கான் ஆகின் - கொடானுனல்,—தான் அறியாதவன் பிறர் போய் கற்பித் தால் அறிவனே - தானுக உணராதவன் வேறொருவர் பேரய்ச் சொன்னல் அறிந்து அதன்படி நடப்பனே? [மாட்டானென்றபடி];

'மற்றறத்திறத்தார் தம் கடமையைக் குற்றமில்லாது நடத்தி னர்; நாமும் நம்முடைய சொல்லைத் தவறுதுநடத்தவேண்டும்' என்று நினைத்துச் செய்பவனுனல், இதுவரையிற் செய்திரானு? இனி ஒருவர் போய்ச் சொல்வதனல் செய்யப்போகிறனு? என்பது கருத்து. இத்தன்மையானவனிடத்து இனித் தூதுசெல்வதனற் பயனில்லை யெனபது, குறிப்பெச்சம். இரங்காதவனின், வழங்காத வனின் என்ற எதிர்கால வினையெச்சங்களுக்கு இரங்காதலால் வழங் காதலால் என்று தேற்றமாகவே கருத்து; இங்ஙனம் வடமொழி யிலும உண்டு. இரங்காதவனையினும் அவனை ஒருவாறு ஒப்புக் கொள்ளலாம்; சொன்னசொல் தவறுகிறவனிடத்து நியாய மேதென்பார், 'மொழிப்படியே வழங்காதனின்' என்றார்.

கேட்பவர்க்கு எளிதாகத் தோன்றுதற்குத் தேவமானத்தாற் கணக்கிட்டுப் பன்னிரண்டுநா ளென்றும் ஒருநா ளென்றும் கூறி யனுப்பினர்க ளாதலால், அதனை அநுசரித்து இங்கும் நகுலன், 'கடவநாள்' என்றன். மனிதர்க்கு ஒருவருஷம், தேவர்க்கு ஒரு நாளாம். கடவ - கடமையென்னும் பண்பினடியாப்பிறந்த பலவின் பால் வினையாலணையும்பெயர். இரட்டுறமொழிதலால் ஈனமிலா வகை என்பதற்கு - முன்பு ஏற்பட்ட நிபந்தனைக்குக் குறைவில்லா மலும், க்ஷேமமாகவும் என்க. 'தானறியாதவன் பிறர்போய்க்கற்பித் தால் அறிவனே' என்ற பொதுப்பொருளால், துரியோதனன் கண்ணன சொன்னலும் இராச்சியங் கொடானென்ற சிறப்புப் பொருளைப் பெறவைத்தது, பிறிதுமொழிதலணியின் பாற்படும். 'இரங்காதனுகி' என்று பாடங்கொண்டு, இரங்காதவனுய் வழங்கா னுனல்' - 'தூது அனுப்பினலும் வழங்கான' என்று வருவித்துப் பொருள்கூறின், இச்செய்யுள் வேற்றுப்பொருள் வைப்பணியாம். இரண்டாமடியிலுள்ள 'ஆகின்' என்பதற்கு, ஆய் எனப்பொருள் கொள்ளவும் இடமுண்டு. "இடம்படமெய்ஞ்ஞானங்கற்பினுமென்று, மடங்கற்தாரென்று மடங்கார் - தடங்கண்ணுய், உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினுங், கைப்பரு பேய்ச்சுரையின் காய்' என்ற நாலடியார்ப்பாட்டை இங்கே அறிக. (89)

30:—கண்ணன் கட்டளையிட் சகாதேவன் கூறத்தொடங்குதல்.

நகுலனிவை யுரைத்ததற்பி னன்றெனக்கை யமைத்தருளி நகுலன்சொல்லும், இகல்விசயன்றன் மொழியுந்திறல்வீமனியம்பியதும் யாவுங்கேட்டோம், புகலரியவுணர்வுடையோய் புகழுடையோய் திறலுடையோய் புகனீயென்ன, முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு மனமுருக மொழிகின்றனே.

(இ - ள்.) நகுலன் இவை உரைத்ததன் பின் - நகுலன் இவ்வார்த்தைகளைச் சொன்னதன் பின்பு,—(கண்ணபிரான்),—நன்று என - 'இதுநன்றுயுள்ளது' என்றுகருதி, கை அமைத்தருளி - (போதுமென்று) கையமர்த்திக் குறிப்புக்காட்டி அடக்கியருளி,—(சகாதேவனைப்பார்த்து),—'நகுலன் சொல்லும் - நகுலனது வார்த்தையையும், இகல் விசயன்தன் மொழியும் - பராக்கிரமத்தையுடைய அருச்சுனனது வார்த்தையையும், திறல் வீமன் இயம்பியதும் - வலிமையையுடைய வீமசேனன் கூறியதையும், யாவும் - (முன்னும் பின்னும் தருமன் கூறியதையும்) எல்லாம், கேட்டோம்—; புகல் அரிய உணர்வு உடையோய்-(எவராலும் சிறப்பித்துச்)சொல்லுதற்கு முடியாத மெய்யறிவை யுடையவனே! திறல் உடையோய் - வல்லமையை யுடையவனே! புகழ் உடையோய் - கீர்த்தியை யுடையவனே! நீ புகல் - நீ (உனது கருத்தைக்) கூறு; என்ன - என்று சொல்ல,—(உடனே சகாதேவன்),—முகில் அனைய திருமேனி முகுந்தனுக்கு - மேகத்தையொத்துக் கரிய அழகிய வடிவழகுடைய கண்ணபிரானுக்கு, மனம் உருக மொழிகின்றன் - திருவுள்ளங்கரையும்படி (உத்தரம்) கூறுகின்றன்; (எ - று.)—அதனை - அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

திறல் - சொல்வன்மையுமாம். நகுலன் முதலாகக் கூறியது, எதிர்நிரனிறையின் பாற்படும். விஜயன் - அருச்சுனன்; விசேஷ ஜயமுடையவனென்றும், தன்னைச் சயிப்பவரெவரு மில்லாதவனென்றும் பொருள்படும் காரணப்பெயர். முன்னையபொருளில் வி - விசேஷமும், பின்னைய பொருளில் வி - எதிர்மறையுங் குறிப்பன. விசயன், பார்த்தன், பற்குனன், கிரீடி, சுவேதவாகனன், பாகசாஸனி, கிருஷ்ணன், சவ்வியசாசி, தனஞ்சயன், (பீபற்சு, நரன், ஜிஷ்ணு) என்பன அருச்சுனனது மறுபெயர்களாம். பாண்டவர் ஐவருள் சகாதேவன் தத்துவஞானியும் நிஷ்பக்ஷபாதியுமாதலால், கண்ணன் அவனை 'புகலரிய உணர்வுடையோய் புகழுடையோய் திறலுடையோய்' என உயர்த்தி விளித்தான். அதனால், எல்லாம்வல்ல கடவுளான கண்ணபிரானும் நன்கு மதிக்குஞ் சிறப்புடையவன் சகாதேவனென்க. புகல் என வந்த சொல் இரண்டனுள், முதலது முதனிலைத்தொழிற்பெயர்: புகலுதல் என்று பொருள்; இங்கு, நான்காம் வேற்றுமைத்தொகை. பின்னது - ஏவல். யாவும், யா - அஃறிணைப் பன்மை விகுப்பெயர்; உம்மை-முற்று. முகுந்தனுக்கும் என உயர்வு சிறப்பும்மை படவும் பதம் பிரிக்கலாம்.

31.—சகதேவன் வார்த்தை.

சிந்தித்தபடி நீயுஞ்சென்றாலென் ஞெழிந்தாலென் செறிந்த நூறு, மைந்தர்க்குண்முதல்வனிலம் வழங்காம லிருந்தாலென் வழங்கி ஞலென், கொந்துற்றகுழலிவளு முடித்தாலென் விரித்தாலென் குறித்த செய்கை, யந்தத்தின்முடியுஞ் வகை யடியேற்குத் தெரியுமோ வாதிமூர்த்தி.

(இ - ள்.) ஆதிமூர்த்தி - (எல்லாப் பொருள்களுக்கும்) முதன்மை யான கடவுளே! சிந்தித்தபடி-(இப்பொழுது தருமபுத்திரன்) ஆலோ சித்தபடி, நீயும் சென்றால் என் - நீ தூதுபோனலு மென்ன? ஒழிந் தால் என் - அப்படிப் போகாமலிருந்தாலு மென்ன? செறிந்த நூறு மைந்தர்க்குள் முதல்வன் - நெருங்கின உறவாகவுள்ள நூறு குமாரர் களுள் முதல்வனுகிய துரியோதனன், நிலம் வழங்காமல் இருந்தால் என் - இராச்சியத்தை (எங்களுக்குக்) கொடுக்காம லிருந்தா லென்ன? வழங்கினுல் என் - கொடுத்தால் என்ன? இவளும் - இந்தத் திரௌ பதியும், கொந்து உற்ற குழல் - பூங்கொத்துக்கள் பொருந்தின கூந் தலை, முடித்தால் என் - எடுத்து முடித்து அலங்கரித்தால் என்ன? விரித்தால் என் - (அங்ஙனம் முடிக்காமல்) விரித்தபடியே யிருந்தால் என்ன? குறித்த செய்கை - (நீ) நினைத்த காரியம், அந்தத்தில் முடி யும் வகை - கடைசியில் முடியும் விதம், அடியேற்கு தெரியுமோ - அடி யேனுக்குத் தெரியுமோ? [தெரியாது என்றபடி]; (எ - று.)—எது எப்படி நடந்தாலும் எல்லாம் உனது சங்கற்பத்தின்படியே முடியு மென்பது கருத்து.

நீயும் என்ற உம்மை - உயர்வுசிறப்போடு எதிரது தழுவிய எச்சம்; கீழ் உலூகன் தூது சென்றதை நோக்கி, இறந்தது தழுவிய எச்சமுமாம். 'இவளும்' என்ற உம்மை, இறந்தது தழுவிய எச்சத் தோடு இழிவுசிறப்பு. கொந்துற்ற குழல் என்பதற்கு - திருத்தமில் லாமல் சிக்குப்பட்டு அடர்ந்திருக்கிற கூந்தலென்றுமாம். கொந்து - கொத்து என்பதன் மெலித்தல். நூறு மைந்தர் - தொகைக்குறிப்பு, மைந்தர் - திருதராட்டிரனது புத்திரர். மைந்தர் - வீரரென்றுமாம், செறிந்த - தம்மில் ஒருவரோடொருவர் ஒற்றுமைப்பட்ட என்றுங் கொள்ளலாம். அடியேற்கு - உனது அடியவனுகிய எனக்கு. ஓ - எதிர்மறை. 'அந்தத்தில் முடியும்வகை அடியேற்குத் தெரியுமோ' என்றது அவையடக்கமாகக் கூறியது; இங்ஙனங் கொள்ளாவிடின், ஆடுத்த கவியில் "ஒருவருக்குந் தெரியாதிங் குன்மாயையானறிவே னுண்மையாக" என்றதனேடு மாறுகொளக்கூடுமாதலால். அந்தம், ஆதிமூர்த்தி - வடசொற்கள். மூர்த்தி - அண்மைவிளி. (91)

32.—இதுவும் அது.

முருகவிழ்க்கும்பசுந்துளப முடியோனே யன்றலகை முகிலப் பாலுண்டு, மருதிடைச்சென்றுயர்சகடம் விழுவுதைத்துப் பொது வர்பெண் வளர்ந்தமாலே, ஒருவருக்குந்தெரியாதிங் குன்மாயை யானறிவே னுண்மையாகத், திருவுளத்துக்கருத்தெதுவோ வது வெனக்குங் கருத்தென்றான் றெய்வமன்னன்-

(இ - ள்.) 'முருகு - நறுமணத்தை, அவிழ்க்கும் - வெளிப்பரப்பு கின்ற, பசுந் துளபம் - பசுநிறமான திருத்துழாய் மாலையை யணிந்த, முடியோனே - திருமுடியை யுடையவனே!—அன்று - (குழந்தையா யிருந்த) அந்தக் காலத்தில், அலகை முலை பால் உண்டு - (பூதனை யென்னும்) பேய்மகளது முலையின் பாலைப் பருகியருளியும், மருது இடை சென்று - இரட்டை மருத மரத்தின் நடுவிலே (தவழ்ந்து) சென்றும், உயர் சகடம் விழ உதைத்து - உயர்ந்த சகடாசுரனை (இறந்து) கீழ்விழும்படி காலாலுதைத்தும், பொதுவர்மனை வளர்ந்த - இடையர்களது மாளிகையிலே வளர்ந்தருளிய, மாலே - திருமாலே!—உன் மாயை - உனது மாயை, இங்கு ஒருவருக்கும் தெரியாது - இவ் விடத்தில் ஒருத்தருக்குந் தெரியாது; உண்மை ஆக யான் அறி வேன் - (அதனை) உள்ளபடி யான் அறிவேன்; (ஆதலால்), திரு உளத்து கருத்து எதுவோ அது எனக்கும் கருத்து - (உனது) மனத்தில் நிகழ்கிற எண்ணம் யாதோ அதுவே எனது எண்ணமு மாம்', என்றான் - என்று சொன்னான்; (யாவனெனில்),—தெய்வம் அன்னான் - (முக்காலத்துச் செய்திகளையும் அறிதலில்) கடவுளை யொத்தவனான சகதேவன்; (எ - று.)

தத்துவஞான முடைமை தோன்ற, சகதேவன் தானே கண் ணனை நோக்கித் தன்னைப்பற்றி, 'ஒருவருக்குந் தெரியாது உன் மாயை, யான் அறிவேன் உண்மையாக' என்றான். முருகு அவிழ்க்கும் - தேனை உள்ளிருந்து சொரியு மென்றுமாம். துளபம் - திருமா லுக்கு உரியது; விஷ்ணுவின் அவதாரங்களிலெல்லாம் இது உரிய தென்க; அன்றியும், அவதாரங்களில் திருமால் அணிந்துகொள்ளும் மாலைகளெல்லாம் துளசியின் அம்சமாகுமென்பதையும் உணர்க. உயர்சகடம் - வினைத்தொகை; பண்புத்தொகையன்று; உயர்ந்த, உயர்கிற, உயரும் எனக் காலம்தோன்ற நிற்றலால். மால் - பெருமை: அல்லது, மாயை; அல்லது, அடியவர்களிடத்து மிகுந்தவிருப்பம்: அதனையுடையவனுக்குப் பண்பாகுபெயர்.

காடும் காடுசார்ந்த இடமுமாகிய முல்லை நிலமானது காடும் காடு சார்ந்த இடமுமாகிய மருதநிலத்துக்கும், மலையும் மலைசார்ந்த இடமு மாகிய குறிஞ்சி நிலத்துக்கும் இடையிலுள்ளதனால், அங்கடுநிலமான முல்லை நிலத்தில் வாழ்கிற சாதியர்க்கு இடையரென்று பெயர்; இடையர், பொதுவர் என்பவை ஒருபொருளன.

அலகை முலைப்பாலுண்ட கதை :—கிருஷ்ணனைப் பெற்ற தாயான தேவகியினது உடனபிறந்தவனதலால் அக்கண்ணபிரா னுக்கு மாமனாகிய கம்சன், தன்னைக் கொல்லப் பிறந்த தேவகீ புத் திரன் ஒளித்து வளர்கிறான் அறிந்து, அக்குழந்தையை நாடியுணர்ந்து கொல்லுதற்பொருட்டுப் பல அசுரர்களை யேவ, அவர்களில் ஒருத்தி யான பூதனையென்னும் ராக்ஷஸி, நல்ல பெண்ணுருவத்தோடு இர விலே திருவாய்ப்பாடிக்கு வந்து, அங்குத் தூங்கிக் கொண்டிருந்த கண்ணனாகிய குழந்தையை எடுத்துத் தனது நஞ்சுதோய்ந்த முலை யைக் கொடுத்துக் கொல்ல முயல, பகவானான குழந்தை அவ்வரக்கி

யின் தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்புரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தனன் என்பதாம்.

மருதிடைச்சென்ற கதை:—கண்ணன் குழந்தையா யிருக்குங் காலத்தில் துன்பப்படுத்துகின்ற பல திருவிளையாடல்களைச் செய்யக் கண்டு கோபித்து நந்தகோபன் மனைவியான யசோதை, ஒருநாள் கிருஷ்ணனைத் திருவயிற்றிற் கயிற்றினாற் கட்டி ஒருரலிலே பிணித்து விட, கண்ணன் அவ்வுரலை யிழுத்துக்கொண்டு தவழ்ந்து, அங்கிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவிலே எழுந்தருளியபொழுது, அவ்வுரல் குறுக்காய்நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவிலே, முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன் மணிக்கிரீவன் என்னுங் குபேர புத்திரர் இருவரும் சாபந்தீர்ந்து சென்றனர் என்பதாம். அந்தக் குபேர புத்திரர்கள் முன்பு ஒரு காலத்தில் பல தெய்வமகளிருடனே ஆடையில்லாமல் ஜலக்கிரீடை செய்துகொண்டிருக்கையில், நாரத மகாமுனிவர் அங்கு எழுந்தருள, மங்கையரனைவரும் நாணங்கொண்டு ஆடையெடுத்து உடுத்து நீங்க. இந்தமைந்தர்மாத்திரம் மதுபான மயக்கத்தால் வஸ்திர மில்லாமலே யிருக்க, நாரதர் கண்டு கோபங்கொண்டு 'மரங்கள்போ லிருக்கிற நீங்கள் மரங்களாவீர்' என்று சபித்து, உடனே அவர்கள் வேண்டிக்கொண்டதற்கு இரங்கி, 'நெடுங்காலஞ் சென்றபின்பு திருமால் உங்களை யடையுஞ் சமயத்தில் இவ்வடிவமொழிந்து முன்னைய் வடிவம் பெற்று மீள்வீர்' என்று சாபவிடை கூறிப்போயினரென்று அறிக.

சகடமுதைத்த கதை:—நந்தகோப கிருகத்தில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டிலிற் பள்ளிகொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணன், ஒருநாள் அச்சகடத்திலே கம்சனால் ஏவப்பட்ட அசுரனொருவன் வந்து ஆவேசித்துத் தன்மேலே விழுந்து தன்னைக் கொல்ல முயன்றதை அறிந்து, பாலுக்கு அழுகிற பாவனையிலே தனது சிறிய திருவடிகளை மேலே தூக்கியருள, அவ்வடிகளால் உதைபட்ட மாத்திரத்தில், அச்சகடு திருப்பப்பட்டுக் கீழேவிழுந்து அசுரனுட்பட அழிந்ததென்பது. (92)

33 —கண்ணன் 'யுத்தம் நேராதிருப்பதற்கு உபாயம்யாது?' என்ன, சகதேவன் விடைகூறத் தொடங்குதல்

இவ்வண்ணஞ்சாதேவ னியம்புதலு நகைத்தருளி யிகலோர் சொன்ன, அவ்வண்ணம்புகலாமல்விரகுரைத்தா னிவனென்ன வவனோடாங்கோர், பைவண்ணமணிக்கூடந் தனிலெய்திப் பாரதப் போர் பயிலாவண்ணம், உய்வண்ணஞ்சொல்லுகநீ யுபாயமெனத் தொழுதுரைப்பா னுரங்கொள்வேலான்.

(இ - ள்.) இவ்வண்ணம் - இந்தப்படி, சகதேவன் - சகதேவன், இயம்புதலும் - சொன்னவுடனே, (கண்ணபிரான்), நகைத்தருளி -

புன்சிரிப்புக் கொண்டருளி, 'இகலோர் சொன்ன அ வண்ணம் புக லாமல் - வலிமையையுடைய மற்றைப் பாண்டவர்கள் கூறின அந் தப்படி கூறுமல், இவன் - இச்சகதேவன், விரகு உரைத்தான் - தந் திரமாகச் சொன்னன்,' என்ன - என்று கருதி, அவனோடு - அச்ச தேவனுடனே, ஆங்கு - அவ்விடத்தில் [அல்லது அப்பொழுது], ஓர் பை வண்ணம மணி கூடந்தனில் எய்தி-பசுமை நிறமுள்ள மரகத ரத்தினங்களால் அமைக்கப்பட்டதொரு மண்டபத்தினுள்ளே (மற்ற வர்களைவிட்டுச்) சென்று,—(சகதேவனை நோக்கி,)—'பாரதம் போர் பயிலாவண்ணம் - பாரத யுத்தம் நடவாதபடியும், உய்வண்ணம் - (எல்லாரும்) அழியாது பிழைத்து வாழும்படியும், நீ—, உபாயம் சொல்லுக - (தக்கதோர்) உபாயத்தைச் சொல்வாயாக', என-என்று சொல்ல, உரம்கொள் வேலான - வலிமையைக்கொண்ட வேலா யுதத்தை யுடையவனை சகதேவன், தொழுது - (கண்ணனை) வணங்கி, உரைப்பான்-கூறுபவனனன்; (எ-று.)—அதனை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

கண்ணனுக்கு நகைப்பு, தனது திருவுள்ளக்கருத்தை உள்ள படியறிந்து கூறிய சகதேவனது திறத்தைக் கண்டு வியந்ததனு லானது. தனது கருத்தை வெளியிடாதிருக்கவேண்டி இங்ஙனம் கண்ணன் சகதேவனைத் தனியே விளவுமாறு ஏகாந்தமாக அழைத் துச் சென்றனனென்க. விரகு உரைத்தான்-(நமது) மாயையை எடுத் துக் கூறினன் என்றுமாம். பாரதப்போர் - பாரத வம்சத்தாருள் நிகழும் போர். (93)

வேறு.

34.—சகதேவன் கூறும் உத்தரம்.

நீபா ரதவமரில் யாவரையு நீருக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றுர்கொல் வல்லாரே.

இதுவும் அடுத்த கவியும் - ஒரு தொடர்.

(இ - ள்.) 'புயல் வண்ணு - மேகம்போலக் கரிய திருநிறமுடைய வனே! கோபாலா - பசுக்களைக் காக்கும் இடைச்சாதியில் வளர்ந் தவனே! போர் ஏறே - போரில் ஆண்சிங்கம் போன்றவனே! கோவிந்தா - கோவிந்தனென்னும் திருநாமமுடையவனே!—நீ—, பாரதம் அமரில் - பாரத யுத்தத்தில், யாவரையும் நீறு ஆக்கி - எல்லாரையும் அழியச் செய்து, பூ பாரம் தீர்க்க - பூமிதேவியின் சுமை மிகுதியை யொழிக்க, புரிந்தாய் - விரும்பியருளினாய்; (ஆதலால்) மா பாரதம் - (உன் கருத்துப்படி நிகழும்) பெரிய பாரதப் போரை, நீ அன்றி - (அதனை நடத்தும்) நீயே யல்லாமல், அகற்ற வல்லார் - ஒழிக்கவல்லவர், மற்று ஆர்கொல்-வேறு யாரோ? [எவரு மில்லை யென்றபடி]; (எ - று.)

'நீயன்றி மாபாரத மகற்ற மற்றார்கொல் வல்லார்' என்றது,பாரத யுத்தத்தை நடத்தி முடித்திடுமாறு சங்கற்பித்துக் கொண்டுள்ள நீயே அது நிகழவொட்டாது தடுப்பதற்கும் வல்லமை யுடையாய் என்பதைக் குறிக்கும். கோவிந்தனென்ற திருநாமம், கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துப் பசுக்களைப் பாதுகாத்தருளிய காலத்திற் கண்ணனுக்கு உண்டானது; இதற்கு - பசுக்களைக்காப்பவ னென்று பொருள். இப்பெயர் - உயிர்களைக் காப்பவனென்றும், பூமியைக் காப்பவனென்றும்பொருள்படும். அகற்ற-அகல என்பதன் பிறவினை. கொல் - அசை. பூபாரம் தீர்த்தல் - பூமியில் நிறைந்த துஷ்ட அசுரர்களையும் கெட்ட அரசர்களையும் ஒழித்து இதனால் பூமிக்கு சேர்ந்த பாரத்தைப் போக்குதல்.

இது முதல் இருபத்திரண்டு கவிகள் காய்ச்சீர்களும், மாச்சீர் களும் விளச்சீர்களுமாக நான்கு சீர்களும் விரவிவந்த அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள்; சீர்கள் அளவொத்து வராமை யாலும், தாழப்பட்ட ஓசை யுடைமையாலும், காற்சீர் நானகடித்தரவு கொச்சகமெனினுமாம். (94)

35.—இதுவும் அது.

பாராளக் கன்னனிகற் பார்த்தனீமுன் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமற் காக்கலா மாபா ரதமென்றான்.

(இ - ள்.) கன்னன் பார் ஆள - கர்ணன் பூமியை அரசாட்சி செய்யும்படி, இகல் பார்த்தனீ முன்கொன்று - (அவனிடத்துப்) பகைமையையுடைய அருச்சுனனீ முன்னே கொலைசெய்து, அணங் கின் கார் ஆர் குழல் களைந்து - சிறந்த மகளான திரௌபதி யினது கருநிறம் பொருந்திய கூந்தலை அரிந்துவிட்டு, காலில் தளை பூட்டி கை பிடித்து நின்னையும் யான் நேர் ஆக கட்டுவன் எல் - கால் களிலே விலங்கையிட்டுக் கைகளையும் பிடித்து உன்னையும் நான் தகுதியாகக் கட்டிவைப்பேனுனல், மா பாரதம் வாராமல் காக்கலாம் - பெரிய பாரதப்போர் நடந்திடாதபடி தடுத்திடலாம்,' என்றான் - என்று சொன்னான், (சகதேவன்); (எ - று.)

இங்ஙனம் சகதேவன் தம்மவரென்றும் பிறரென்றும் வேறுபாடு காட்டாது நடுவுநிலைமையாகத் தனது உள்ளக்கிடையைச் சிறிதும் ஒளியாமல் வெளியிட்டன னென்க. தருமன் எங்ஙனமாயினும் அரசாள வேண்டுமென்றதும், அருச்சுனன கர்ணனைக் கொல்வே னென்ற சபதமும், விரித்த கூந்தலை முடிக்குமாறு திரௌபதி கூறிய பிரதிஜ்ஞையும், கண்ணனது சங்கல்பமுமே பாரதயுத்தம் நடப்ப தற்கு மூலமாதலால், இங்ஙனம் கூறப்பட்டது. வீமசேனனது பெரிய பிரதிஜ்ஞைகள், திரௌபதியின் பிரதிஜ்ஞையை நிறைவேற்றுதற்கு அங்கமாய் முடிதலால், அப்பிரதானமாக்கி அதில் அடக்கப்பட்டன. நகுல சகதேவர்களது சபதங்கள் பிரதானமல்லவென்று கீக்கப்

பட்டன. இங்குக் கூறிய இக்காரியங்களெல்லாம் செய்து முடிக்கக் கூடாதனவாதலால், பாரதப் போர் வாராமற்காத்தலும் முடியா தெனக் குறிப்பித்தபடி.

அணங்கு - தேவமகளும், திருமகளும், மோகினி யென்னும் பெண் தெய்வமுமாம்; இங்கே திரௌபதிக்கு உவமவாகுபெயர். கன்னன் கர்ண குண்டலங்களோடு பிறந்தமை பற்றியது; காதின் வழியே பிறந்ததனால் வந்த பெயரென்றுங் கூறுவர்; கர்ணம்-காது. பாண்டவர்கள் தாயான குந்திதேவி கன்னிகையா யிருந்தபொழுது தனக்குத் துருவாசமுனிவ ருபதேசித்த மந்திரத்தைப் பரீட்சித்தறி யும் பொருட்டுச் சூரியனை நினைத்து அம்மந்திரத்தை உச்சரிக்க, உடனே அத்தேவன் வந்து அவளுக்கு அநுக்கிரகித்ததனால், அவ ளிடம் பிறந்த புத்திரன் இவன்; இவனைப் பிறந்தபொழுதே குந்தி பழிக்கு அஞ்சி மிதக்கும் மரப்பெட்டியொன்றில் வைத்துப் பூட்டிக் கங்கையாற்றில் விட்டிட, அதனைத் திருதராட்டிரனது தேர்ப்பாக னன அதிரதனென்பவன் கண்டு எடுத்துத் திறந்து பார்த்துக் கொண்டுபோய்த் தன் மனைவியான ராதையும் தானுமாக வசுசேன னென்று பெயரிட்டு வளர்த்தான்; இவனுக்குக் கர்ணனென்ற பெயர் ஆகாசவாணி யிட்டது. இவன் துரியோதனனுக்குப் பிராணசினேகி தனாகி அவனருளால் அங்கதேசத்திற்கு அரசனுமினன். கார் ஆர் குழல் - மேகத்தை யொத்த கூந்தலுமாம்; ஆர் - உவமவுருபு. ஏல் - என்னில்; மரூஉ. ("குற்றமே காக்க பொருளாக," "அரும்பண்பி னுற்றீமைகாக்க," "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" என்ற விடங்களிற்போல) இங்கே, காத்தல் தடுத்தற் பொருளதாயிற்று. நின்னையும், உம்-இறந்தது தழுவிய எச்சத்தோடு உயர்வுசிறப்பு. 'கன்னன் பாராள' என்றது-துரியோதனனது தீச்செயல்க ளெல்லா வற்றிற்கும் அவனே பெரிய உதவியாய் நிற்பதனாலும், பாண்டவ துரியோதனரிடையர் அனேவரிலும் மூத்தவனதலாலும், துரியோதன னுக்கு மிக நண்பனும் பாண்டவர்க்கு மிகபபகைவனு மாதலாலும், ஈகைக் குணமுடைய அரசனுதலாலுமென்க. 'காலில் தளைபூட்டி' என்பதற்கு திரௌபதியின் காலிலே விலங்கைப் பூட்டி யென்று உரைப்பாருமுளர்; அதற்கு இங்கே இயைபின்று. (95)

36.—கண்ணன் சகதேவனது திறத்தைப் பரீக்ஷித்தல்.

முன்னநீ கூறியவை யெல்லா முடித்தாலும
என்னைநீ கட்டுமா றெவ்வா றெனமாயன்
உன்னைநீ தானு முணராதா யுன்வடிவந்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யானென்றான்.

(இ - ள்.) (இங்ஙனங்கூறிய சகதேவனைநோக்கி),—மாயன் - விசித்திர சக்தியை யுடையவனான கண்ணன்,—'நீ முன்னம் கூறி யவை எல்லாம் முடித்தாலும் - நீ முன்னே சொன்ன காரியங்களை யெல்லாம் நிறைவேற்றினாலும், நீ என்னை கட்டும் ஆறு எ ஆறு - (இறுதியிற்சொன்னபடி) நீ என்னைக்கட்டும் வகை எப்படி?' என - என்று வினவ,—(அதற்குச் சகதேவன்),—'உன்னை நீதானும் உண

ராதாய் உனது (அருளுடைமை முதலிய) குணங்களின் பெருமையை நீயும் அறியமாட்டாதவனே! உன் வடிவந் தன்னை நீ காட்ட-உனது திவ்வியசொரூபத்தை நீ (என்னுடைய) அறிவிற்கு விஷயமாக்கியிருப்பதால், யான் தரிக்திடுவன்-நான் (உன்னைக்) கட்டிவிடுவேன்,' என்றான் - என்று (கண்ணனைநோக்கிக்) கூறினன்; (எ - று.)

முன்னங்கூறியவை - கர்ணனை அரசாள்வித்தல், அருச்சுனனைக் கொல்லுதல், திரௌபதியின் குழலைக் களைதல். சகாதேவன் கடவுளின் கருணையால் தத்துவஞான மடைந்துள்ளதனால் அக்கடவுளின் அடியார்க்கெளியனந்தன்மையைக் கருதி இங்ஙனங் கூறினனென்க. முடித்தாலும் என்ற உயர்வு சிறப்பும்மை, முடித்தலின் அருமை தோன்ற நின்றது. 'உன்னை நீதானு முணராதாய்' என்றதனால், எம்பெருமானது எவராலும் அளவிடப்படாத அநந்தசக்தி விளக்கப்பட்டது; ஆதலால், இது எம்பெருமானுக்கு ஒருகுறைவு கூறியதாகாது; "தனக்குந் தன்தன்மை யறிவரியான" என்றார் திருவாய் மொழியிலும். தன் தன்மை யுணராதவனென்றால் எம்பெருமானது முற்றுணர்வுக்குக் குறைவு வாராதோ? என்னில்,—ஒவ்வொரு பொருளின் தன்மையையும் உள்ளபடி அறிவதே முற்றுணர்வுக்கு இலக்கணமாவதாதலால், அநந்தசக்தியை அவ்வாறே அளவிட முடியாதென்றே உணர்வதனால், குறைவு வாராதென்க. நீதானும்-ஸர்வஜ்ஞனை நீயும் என்றபடி; நீதானும் என்ற உம்மையால் மற்றவர் அறியமாட்டாமை நன்கு விளங்கும். காட்ட - காரணப்பொருட்டாய் வந்த செயவெனெச்சம். (96)

37.—இதுவும் அது.

மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்று
ஆயவடிவு பதினை ருயிரங் கொண்டான்
தூயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகுந்
தாயவடி யிணைக டன்கருத்தி னற்பிணித்தான்.

(இ - ள்.) மாயவனும் - விசித்திரசக்தியுடையவனை கண்ணனும், அன்பன் மனம் அறிவான் - (தன்னிடத்து) மிக்க பக்தியுடையவனை சகாதேவனது கருத்துநிலையை அறிதற்பொருட்டு,—கட்டுக என்று - (என்னை நீ) கட்டுவாயாக என்று சொல்லி, ஆய வடிவு பதினை ஆயிரம் கொண்டான் - பொருந்திய பதினைராயிரம் திருவுருவங்களை (ஒருங்கே) எடுத்துக்கொண்டான்; (அப்பொழுது),—தூயவனும் - பரிசுத்தனை சகாதேவனும், மூலம் ஆம் தோற்றம் உணர்ந்து-(அவ்வடிவங்கட்கெல்லாம்) முதன்மையான திருவுருவத்தை (இன்னதென்று தனது தத்துவஞானத்தால்) அறிந்து, எ உலகும் தாய அடி இணைகள - எல்லாவுலகங்களையும் அளவிட்ட (அவ்வெம்பெருமானது) உபய பாதங்களை, தன் கருத்தினால் பிணித்தான் - தனது மனமாகிய கயிற்றினால் கட்டினன்; (எ - று.)

சகாதேவன் கடவுளின் அருளால் உண்மையறிவை யடைந்துள்ளானதலால், பகவானது சொரூபத்தைத் தனது கருத்தால்

உறுதியாகத் தியானித்தான் என்பதாம். பதினாயிரம் கோபஸ்திரீகளோடும் பதினாயிரம் இராஜ கன்னிகைகளோடும் தனித்தனி சேர்தற்கு இவ்வவதாரத்தில் திருமாலுக்குப் பதினாயிரம் வடிவும் அமைந்ததாதலால் 'ஆயவடிவு பதினாயிரம்' எனார். (''பத்துடையடியவர்க் கெளியவன்'' என வைஷ்ணவத்திலும், ''பத்திவலீயுட்படுவோன்'' எனச் சைவத்திலும் அடியார்கள் அருளிச்செய்தபடி) கடவுள் அன்புக்கு வசப்பட்டவராதலால், கருத்தினுற் பிணிக்கலாம் படியாயிற்று. 'பிணித்தான்' என்ற வினையினால், கருத்தைக் கயிறுகக் கொள்க; இஃது ஏகதேசவுருவகத்தின்பாற்படும்.

ஆய-ஒன்றையொன்று ஒத்ததாகிய என்பாரு முளர். ஆய = ஆகிய. மாயவனும், தூயவனும் என்ற உம்மைகள் எச்சப்பொருளன. அன்பன் - பக்தன். அறிவான் - சோதித்தற்கு; வானீற்று எதிர்காலவினையெச்சம். 'மூலமாந்தோற்றம்' என்றது - அக்கடவுளின் நிஜவடிவத்தை. தோற்றம் - தோன்றுதலுடையது; தொழிலாகுபெயரென்றுவது, அம் - கருத்தாப்பொருள்விகுதி யென்றுவது கொள்க. தாய = தாவிய.

உலகந் தாய கதை:—மகாபலி யென்னும் அசுரராசன் தன் வல்லமையால் இந்திரன் முதலிய யாவரையுஞ் சயித்து மூவுலகங்களையும் தன் வசப்படுத்தி அரசாண்டு செருக்குக் கொண்டிருந்த பொழுது, அரசிழந்த தேவர்கள் திருமாலைச் சரணமடைந்து வேண்ட, அவன், குள்ளவடிவமான வாமனவதாரமெடுத்துக் காசியப முனிவர்க்கு அதிதிதேவியினிடம் தோன்றிய பிராமணப்பிரமசாரியாகி, வேள்வியியற்றி யாவர்க்கும் வேண்டிய தானத்தையுங் கொடுத்துவந்த அந்தப்பலியினிடஞ்சென்று, தவஞ்செய்தற்குத் தன் காலடியால் மூவடி மண்வேண்டி, அதுகொடுத்தற்கு இசைந்து அவன் தத்தஞ் செய்த நீரைக் கையில் ஏற்று, உடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தை அளாவிவளர்ந்து ஓரடியால் மண்ணீயும் ஓரடியால் விண்ணீயும் அளந்து, மற்றோரடியால் அவனீயும் பாதாளத்தில் அழுத்தி அடக்கினன் என்பதாம். ஒரு பாதத்தால் மண்ணுலகத்தை அளந்ததிலே அதன்கீழுள்ள உலகங்களேழும் அடங்குதலாலும், மற்றோரடியால் விண்ணுலகத்தை யளந்ததிலே புவர்லோகம் முதலிய மேலுலகங்களாறும் அடங்குதலாலும், 'எவ்வுலகுந் தாய அடியிணைகள்' எனப்பட்டன. (97)

38.—கண்ணன் சகதேவனுக்குப் பிரதியக்ஷமாகக் காட்சிகொடுத்தல்.

நீதேவ னென்றறிந்து நெஞ்சாற் றணைக்கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கத் தானேயாய் முன்னின்றுன்
பூதேவருங் கனகப் பூங்கா நிழல்வைகு
மாதேவருந் தேடிக் காணு மலரடியோன்.

(இ - ள்.) பூதேவரும் - பூமியில் வசிக்குந் தேவர்களாகிற அந்தணர்களும், கனகம் பூ கா நிழல் வைகும் மா தேவரும்-பொன்மயமான அழகிய கற்பகச்சோலையின் நிழலிலே வசிக்கிற சிறந்த தேவர்களும்,

தேடி காணு - தேடியும் பார்க்கமுடியாத, மலர் அடியோன் - தாமரை மலர்போன்ற திருவடிகளையுடையவனை கண்ணபிரான்,—நீ தேவன் என்று அறிந்து நெஞ்சால் தனை கட்டும் சாதேவன் கண்களிக்க- 'நீயே கடவுளாவாய்' என்று (தனது சொரூபத்தை) உணர்ந்து மனத் தினிலே தன்னைக் கட்டின சகதேவன் கண்ணுற்கண்டு களிக்கும்படி, தானே ஆய் முன் நின்றான் மற்றை யுருவங்களை யெல்லாம் மறைத்து (அவற்றிற்குக் காரணமானதும் சகதேவனுற் கருதப்பட்டதுமான) தனது நிஜரூபமேயாய் அவனெதிரில் (காட்சிகொடுத்து) நின்றருளினான்; (எ - று.)

"பத்துடை யடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்" என்ற இரண்டு தன்மைகளும் இச்செய்யுளால் நன்கு விளக்கப்பட்டன. தேவன் என்ற சொல்லுக்கு விளங்குபவ னென்றும், வானுலகத்தவ னென்றும் பொருள். கனகப்பூங்கா - பொன்மயமான பூக்களையுடைய சோலை யென்றுமாம். தேவர்கள் விண்ணுலகத்திற் பஞ்சதருக்களின் நிழலில் வசித்தல், "இன்றளிக்கற்பக நறுந்தே னிடை துளிக்கு நிழலிருக்கை" எனக் கம்பராமாயணத்திற் கூறிய தனாலும் விளங்கும்; அது பற்றியே, 'காநிழல் வைகும் மாதேவர்' என்றது. பொன்னுலகத்திலுள்ள எல்லாப் பொருளும் பொன்மயமா னவை யாதலால், 'கனகப்பூங்கா' எனப்பட்டது. காக்கப்பட்டது கா என்று செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்ட காரணப்பெயர். பூதேவர் - பூமியில் தேவர் போலச் சிறப்புப்பெற்று விளங்குபவர். "நிலத்தேவர்" என்றார் ஆழ்வாரும். இங்கே, 'பூதேவரும் மாதேவ ரும் தேடிக்காணாத அடி' என்றது - அன்புநிலையிற் குறைவுபட் டார்க்கு அகப்படாத தன்மையை. கடவுளையறிதற்கு இடமும் சாதி யும் குலமும் முதலியன காரணமல்ல, மனத்தூய்மையே காரணம் என்பது இதில் விளங்கும். மலரடி - உவமத்தொகை. தினைத்தொ கையாய், (திரிவிக்கிரமாவதார காலத்தில் உலகமெங்கும்) பரந்த திருவடி யெனினுமாம். திருமாலின் அம்சாவதாரமான கண்ணபிரான் சகதேவனது பக்தியை உணர்ந்திருந்தும் இவ்வாறு பரீட்சித்தது- அதனைத் தான் அனுபவித்துக் களிக்கவும், இச்சகதேவனுக்கு ஓர் சிறப்பை வெளிப்படுத்தவும் எனக. (98)

39.—கண்ணன் 'என் காலைவிடுக' என்று சொல்ல, சகதேவன் வரம் வேண்டுதல்.

அன்பாலின் றெண்ணை யறிந்தே பிணித்தமைநன்று
என்பா தந்தன்னை யினிவிடுக வென்றுரைப்ப
வன்பார தப்போரில் வந்தடைந்தே மைவரையும்
நின்பார்வை யாற்காக்க வேண்டு நெடுமாலே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) (கண்ணன் சகதேவனை நோக்கி),—'அன்பால் இன்று என்னை அறிந்து பிணித்தமை நன்று - பக்தியினால் இப்பொழுது எனது சொரூபத்தை (நீ) உணர்ந்து கட்டியது நன்றாகவுள்ளது,

இனி என் பாதந்தன்னை விடுக - இனி எனது கால்களை விட்டிடுவாயாக, என்று உரைப்ப - என்று சொல்ல,—(அதற்குச் சகதேவன் கண்ணனைநோக்கி), — நெடுமாலே - பெருமைக்குணமுடையவனை கண்ணனே!—வந்து அடைந்தேம் ஐவரையும் - (உன்னை) வந்து சேர்ந்துள்ளவர்களான எங்கள் ஐந்துபேரையும், வல் பாரதம் போரில்- (இனி நிகழும்) கொடிய பாரத யுத்தத்திலே, நின்பார்வையால் காக்க வேண்டும் - உனது திருவருள் நோக்கத்தாற் பாதுகாத்தருளவேண்டும்; (எ - று.)—'என்று' என, அடுத்த கவியோடு இயையும்.

அடைந்தேம் ஐவர் - தன்மையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி; வழாநிலையாயின், 'ஐவேம்' என நிற்கும்; இதில், உம்மை - இனைத்தென்றறி பொருளில் வந்த முற்றும்மை. பார்வை - நோக்கம்: கடாட்சம்; தொழிற்பெயர்: வை-விகுதி. நெடுமால் - மகாவிஷ்ணு; நீண்ட திருமாலுமாம். (99)

40.—கண்ணன் சகதேவனுக்கு வரமளித்து, நடந்ததை இரகசியமாக வைக்கும்படி நியமித்தல்.

என்றென் றிறைஞ்சி யிருதாம ரைத்தாளி
லொன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி
யின்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
யொன்றும் பிறரறிய வோதா தொழிகென்றான்.

(இ - ள்.) என்று என்று-என்று பலதரஞ்சொல்லி, இறைஞ்சி-நமஸ்கரித்து, இரு தாமரை தாளில் - (கண்ணனது) தாமரைமலர் போன்ற இரண்டு திருவடிகளிலே, ஒன்றும் - பொருந்திய [சரண மடைந்த], கதிர் முடியாற்கு - ஒளியுள்ள கிரீடத்தை யுடையவனை சகதேவனுக்கு, (கண்ணன்), ஓம் என்று உரைத்தருளி - 'அப்படியேயாகுக' என்று உடன்பாடாகக் கூறியருளி,—'இன்று இங்கு இருவேமும் இப்போது உரைத்த மொழி ஒன்றும்-இன்றைத்தினம் இவ்விடத்தில் நாமிரண்டுபேரும் இப்போது (தனியே) பேசிக்கொண்ட வார்த்தைகளுள் ஒன்றையும், பிறர் அறிய ஓதாது ஒழிக - எவரும் அறியச் சொல்லாமல் விடுவாயாக,' என்றான் - என்று கூறினான்;

என்று என்று-அடுக்கு, பன்மைப்பொருளது; இது, சகதேவனது அன்பு மிகுதியை விளக்கும். ஓம் - அங்கீகாரப் பொருளை யுணர்த்தும் வடமொழி யிடைச்சொல்; (வடமொழி மகா காவியத்தினுரையில் மல்லிநாதசூரி உரைத்தவாறும் காண்க.) இருவேம் - இரண்டு என்னும் எண்ணிடையாய் பிறந்த தன்மைப் பன்மைப் பெயர்; (முன்னிலை - இருவீர், படர்க்கை - இருவர்.) 'ஓதா தொழிக' என்றது, அவதாரத்தின் மெய்ப்பாட்டால். ஓதா தொழிக-ஒருசொல்தன்மையது; 'ஒழி' - துணிவுப் பொருளுணர்த்தும். (100)

41.—சகதேவன் திரௌபதியை நோக்கித் தனது அபிப்பிராயங் கூறுதல்.

ஆண்டிருந்த வவைநீங்கி யறிவுடையோ ரிருவோரும்
பாண்டவர்கண் முன்னெய்தப் பழுதில்புகழ்ப் பாஞ்சாலி

நீண்டகருங் குழல்சோர நின்றாளை முகநோக்கி
யீண்டவரி லிளையோனுஞ் சந்துமிக வினிதென்றான்.

(இ - ள்.) அறிவு உடையோர் இருவோரும் - பேரறிவுடைய வர்களான (கண்ணன் சகதேவன் என்ற) இரண்டுபேரும்,—(பின்பு), ஆண்டு இருந்த அவை நீங்கி - அங்குத் தனியே சென்றிருந்த மண்டபத்தினின்று நீங்கி, பாண்டவர்கள் முன் எய்தி - மற்றைய பாண்டவர்கட்கு முன்னே வந்து சேர,—(அப்பொழுது), அவரில் இளையோனும் - அப்பாண்டவர்களுள் இளையவனை சகதேவனும்,— நீண்ட கருங் குழல் சோர நின்றாள் பழுது இல் புகழ் பாஞ்சாலி முகம் நோக்கி - நீட்சிபெற்ற கருநிறமுள்ள கூந்தல் விரிந்து தொங்க நின்ற வளாகிய குற்றமில்லாத கீர்த்தியையுடைய திரௌபதியின் முகத் தைப் பார்த்து, ஈண்டு சந்து மிக இனிது என்றான் - 'இப்பொழுது சந்தி [சமாதானம்] மிக நல்லது' என்று கூறினான்; (எ - று.)

'எய்தி' என்னுஞ் செய்தெனெச்சத்தை 'எய்த' எனச் செயவெ னெச்சமாகத் திரித்து, 'என்றான்' என்பதனோடு முடிக்க. பாஞ்சாலி நின்றாளை - நின்றாள் பாஞ்சாலியை, உருபுபிரித்துக்கூட்டல். சந்து - தூதுமாம். துரியோதனனிடம் தூது போய்வரவேண்டு மென்பதே கண்ணன் திருவுள்ளக் கருத்தென்று தெரிந்தவனாதலின், அதற்கு இணங்கிச் சகதேவன் தானும் 'சந்து மிகவினிது' என்று கூறின னென்க. இருவர் இருவோர் என ரகரவீற்று ஆய்ல் அகரம் ஓகார மாயிற்று. பாஞ்சாலி - பாஞ்சாலதேசத்தரசனது [துருபதனது] மகள் என்று பொருள்படும்; தத்திதாந்தநாமம். பழுதில் புகழ் - கலங்காத கற்பினாலாகியது; இவள் பஞ்சகன்னிகைகளுள் ஒருத்தி யாதலின், இவளுக்கு 'பழுதில்புகழ்' என்ற அடைமொழி கொடுக் கப்பட்டது. மற்றை நால்வர்-அகல்யை, சீதை, தாரை, மண்டோதரி. ஆண்டு, ஈண்டு - சுட்டு நீண்டது. நின்றாளை முகம் நோக்கி - நின்றாளை முகத்தைப் பார்த்து; இரண்டு செயப்படுபொருள்வந்த செய்வினை; உருபுமயக்கமாக, நின்றவளது முகத்தைப் பார்த்து என்றும் கொள்ளலாம். (101)

42.—கண்ணனும் அவ்வாறே கூறக் கேட்டுத் திரௌபதி வருந்துதல்.

தருமனுக்குங் கருத்திதுவே தமருடன்போர் புரியாமல்
இருநிலத்தி லுடன்வாழ்த லெனக்குநினை வென்றுரைத்தான்
வரிமலர்க்கண் புனல்சோர மலர்மறந்த குழல்சோர
விரைமலர்ச்செஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தழுதாண் மின்னனையாள்.

(இ - ள்.) 'தருமனுக்கும் கருத்து இதுவே - யுதிட்டிரனுக்கும் இதுவே கருத்தாகும்; தமருடன் போர் புரியாமல் - நெருங்கின உறவினர்களாகிய துரியோதனாதியர்களுடனே போர்செய்யாமல், இருநிலத்தில் உடன் வாழ்தல் - பெரிய பூலோகத்திலே சமாதான மாக ஒற்றுமைப்பட்டு ஒருங்கு கூடி வாழ்வதே, எனக்கும் நினைவு - எனக்கும் கருத்தாம்;' என்று உரைத்தான்-என்று (கண்ணபிரான்) கூறியருளினனாக; (உடனே),—மின் அனையாள் - மின்னற் கொடியை

யொத்தவளான திரௌபதி,—வரிமலர் கண்புனல்சோர - (உத்தம விலக்கணமாக அமைந்த சிவந்த) இரேகைகளையுடைய பூப்போன்ற (தனது) கண்களினின்று நீர் சொரியவும், மலர் மறந்த குழல் சோர - (பலகாலமாகப்) பூமுடித்தலை மறந்துள்ள தன்கூந்தல் கீழேபுரளவும், விரை மலர் செம் சே அடிக்கீழ் வீழ்ந்து அழுதாள் - வாசனையையுடைய தாமரைமலர்போன்ற மிகச் சிவந்த (கண்ணபிரானது) திருவடிகளில் விழுந்து புலம்பினள்; (எ - று)—புலம்பும் வகையை, அடுத்த மூன்று பாடல்களிற் காண்க.

ஐம்பொறிகளையும் உரியபுலன்களிற் செலுத்தி ஒற்றுமைப்பட்டு நிற்கும் மனம்போலப் பஞ்சபாண்டவர்களையும் உரியதொழில்களிற் பிரவேசிக்கும்படி செய்விக்கிற கண்ணபிரானும் போரை விரும்பாமல் சமாதானத்தையே நாடிக் கூறியதனால், திரௌபதி 'இனித் தன் சபதம் நிறைவேறுமாறு இல்லை'என்று கருதித் தனதுகருத்து முற்றுப்பெறுமாறு வேண்டி அக்கண்ணபிரானது திருவடிகளிலே விழுந்து புலம்புவாளாயின ளென்க. கீழ்க் கவியை நோக்கி, 'இது' என்றது - சந்தியாயிற்று. முன்னிரண்டடியைச் சகாதேவனது வார்த்தையாகக் கொண்டால், கீழ்க்கவியிற்கூறியதன் விவரமான அநுவாதமென்க. இருநிலத்தில் - அத்தினபுரி, இந்திரப்பிரத்தம் என்னும் இரண்டு இராச்சிய பாகங்களிலென்றுமாம். தருமனுக்கும், உம் - அரசாட்சிக்கு உரிய மூத்தமகனான தருமபுத்திரனுக்கும் என உயர்வுசிறப்பும், எதிரது தழுவிய எச்சப்பொருளு முடையது. எனக்கும், உம் - இறந்தது தழுவிய எச்சம். பதின்மூன்று வருடமாக விரிந்த கூந்தலாதலின், 'மலர் மறந்த குழல்' எனப்பட்டது. வரிக்கண் என இயையும்; வரி மலர் என எடுத்து, வண்டுகள் மொய்க்கும் மலரெனினுமாம். வரிமலர் - தாமரை யென்றேனும், கருங்குவளை யென்றேனும் கொள்க. செம் சே - மிகுதியுணர்த்த வந்த ஒரு சொல்லடுக்கு. சே - செம்மையெனனும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு இடைநின்ற மகரமும் கெட்டது. சேவடி, வ் - உடம்படுமெய்; பண்புப்பெயரின் இடைமகரம் வகரமாகத்திரிந்த தாகவுங் கொள்ளலாம். திருவடிகள் சிவந்திருத்தல், உத்தமவிலக்கணம். செம்-அழகிய, சே - சிவந்த எனினுமாம். அடிக்கீழ், கீழ் - ஏழனுருபு. மின் உவமை மென்மைக்கும், ஒளிக்கும். (102)

43.—இதுமுதல் மூன்றுகவிகள்–ஒருதொடர்: திரௌபதி புலம்புதல்.

சாலக்கனகன்றனிமைந்தனீனமுனிந்த
காலத்தவனறைந்தகற்றூணிடைவந்தாய்
மூலப்பேரிட்டழைத்தமும்மதமால்யானைக்கு
நீலக்கிரிபோன்முன்னின்றநெடுமாலே.

(இ - ள்.) கனகன் - பொன்னிறமாகிய உடம்பையுடையவனான இரணியன், தனிமைந்தனீன - ஒப்பற்ற (தனது) புத்திரனான பிரகலாதனை, சால முனிந்த காலத்து - மிகவுங்கோபித்த காலத்தில், அவன் அறைந்த கல் தூணிடை - அவ்விரணியன் கையால்தாக்கின

கற்கம்பத்தினிடத்தில், வந்தாய் - (நரசிங்க மூர்த்தியாகத்) திருவவதரித்தவனே!—மூலம் பேர் இட்டு அழைத்த - ஆதிமூலமேயென்ற பெயரைச் சொல்லிக் கூப்பிட்ட, மும்மதம் மால் யானைக்கு - மூன்று மதங்களையுடைய பெரியதொரு யானையைக் காத்தற்கு, நீலம் கிரி போல் முன நின்ற - நீலமலையொன்று நின்றதுபோல எதிரில் எழுந்தருளி நின்ற, நெடு மாலே - பெருமைக்குணமுடைய திருமாலே!

தன்பெயரைச் சொல்லாமல் நாராயண நாமத்தையே சொல்லி வந்த பிரகலாதனை இரணியன் பலவகையாகக் கொல்லக்கருதி, அவையொன்றும் முடியாமல் இறுதியில் 'நீ சொன்னவிடத்தில் நாராயணன் இல்லாவிட்டால், நானே உன்னைக் கோபத்தீரக் கொன்று குருதி பருகுவேன்' என்ற சமயத்தில், அவன் காட்டின தூணினின்று புறப்பட்டதனால், 'சால முனிந்தகாலத்து' என்றது. இருத்திரிமமான செய்கையொன்றும் முன்பே செய்து அமைத்து வைத்தற்கு உரியதல்லாத தென நன்கு விளக்குதற்கு, 'கற்றூணிடை வந்தாய்' எனப்பட்டது.

யானைக்கு முன் நின்ற கதை:— இந்திரத்யும்நனென்னும் அரசன் மிக்க விஷ்ணுபக்தியுடையவனாய் ஒருநாள் விஷ்ணுபூசை செய்கையில் அகஸ்திய மகாமுனிவர் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவன் தன் கருத்து முழுவதையும் திருமாலைப் பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால், அவ்வரவின் வருகையையறிந்திடானாய் அவனுக்கு உபசாரமொன்றுஞ் செய்யாதிருக்க, அம்முனிவன் தன்னை அரசன் அலக்ஷ்யஞ் செய்தானென்று மாறுகக் கருதிக் கோபித்து, 'நீ யானை போலச் செருக்குற்றிருந்ததனால் யானையாகக் கடவை' என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒருகாட்டில் யானையாகத் தோன்றினனாயினும், முன் செய்த விஷ்ணுபக்தியின் மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந் தாமரைமலர்களைக் கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசித்துவருகையில் ஒருநாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அருச்சனைக்காகப் பூப்பறிப்பதற்குப்போய் இறங்கியபொழுது அங்கே (முன்பு நீர் நிலையில் நின்று தவஞ்செய்து கொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப்பற்றியிழுத்து அதனாற் கோபங்கொண்ட அவனது சாபத்தால்) பெரிய முதலையாய்க் கிடந்த ஹூஹூ என்னுங் கந்தருவன் அவ்யானையின் காலைக் கௌவிக் கொள்ள, அதனை விடுவித்துக் கொள்ள முடியாமல் கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அங்கு எழுந்தருளித் தனது சக்கராயுதத்தைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன்வாயினின்றும் விடுவித்து இறுதியில் அதற்கு முத்தியை அருள் செய்தனனென்பதாம்.

சகலவிதத்தாலுங் காப்பாற்றவேண்டிய தந்தையால் மைந்தனுக்கும், ஒருவிலங்காலே மற்றொருவிலங்குக்கும் நேர்ந்த துன்பத்தைப் பொறுமல் அரைகுலையத் தலைகுலைய ஆங்காங்கு விரைந்து வந்து உதவின மகாகுணத்திலே ஈடுபட்டு இவ்வாறு கூறி

அழைத்தது, இங்ஙனம் வருந்தும் தன் குறையையும் தீர்த்தருள வேண்டு மென்ற குறிப்பு.

மூலப் பேர் - மூலமாகிய பேர் எனப் பொதுப்பெயரும் சிறப்புப் பெயருமாகத் தொடர்ந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக விரிக்க. நீலக்கிரி - நிறத்துக்கும், அழகுக்கும், சலியாத திண்மைக் கும், அளவிடப்படாத பெருமைக்கும் உவமை. முன் - இடமுன். மும்மதம் - கன்னமிரண்டு, குறியொன்று இவற்றிற் சொரிவது. கநகம் - ஸ்வர்ணம்; ஹிரண்யன் என்ற பெயர் பொன்னிறமானவ னென்பதுபற்றிய தாதலால், அதன் பரியாயநாமமாக 'கனகன்' என்றார். (103)

44. கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
யற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே.

(இ - ள்.) கொற்றம் - வெற்றியையுடைய, தனி - ஒப்பில்லாத, திகிரி - சக்கரத்தையுடைய, கோவிந்தா - கண்ணபிரானே!—கண் இலான் பெற்று எடுத்தோன் - குருடனன திருதராட்டிரன் பெற்று வளர்த்த துச்சாதனன், கற்றை குழல் பிடித்து - தொகுதியான (எனது) கூந்தலைப் பிடித்து இழுத்து (வந்து), துகில் பற்றி உரிய - (எனது) ஆடையைப் பிடித்து அவிழ்க்கையில், பாண்டவரும் பார்த்து இருந்தார் - (என் கொழுநரான) இப்பாண்டவர் ஐவரும் பார்த்துக்கொண்டு (யாதொரு பரிகாரமுஞ் செய்யாமற் சபையிற் சும்மா) இருந்தார்கள்; அற்றைக்கும்-அக்காலத்திலும், என் மானம் நீ அன்றி வேறு ஆர் காத்தார் - எனது மானத்தை நீ யல்லாமல் வேறே யார்தாம் காத்தவர்? [எவருமில்லை யென்றபடி]. (எ - று.)

பிறர்க்கு உதவியதைக் கீழ்ச் செய்யுளாற் கூறி, தனக்கு முன்பு உதவியதை இச் செய்யுளாற் கூறுகிறாள். 'ஆபத்து நேர்ந்த காலத்தில் மகளிர்க்குத் தம்தம் கணவர் குறைநீக்குவார்கள்; எனக்கோ கணவர் ஒருவர்க்கு ஐவராயிருந்தும், ஆபத்துக்காலத்தில் உதவுமாறு இல்லை, என்பது முன்னமே நடந்த வரலாற்றால் விளங்கு வதால், இப்பொழுது நீ காப்பாற்றினு லுண்டு; இல்லாவிட்டால் இல்லை; எனது சாபத்தையும் சபதத்தையும் நிறைவேறச் செய்து எனது மானத்தைக் காக்கவேண்டுவது உனது பாரமே' என்று குறை வேண்டினளென்பதாம். பாண்டவரும், உம்மை - உயர்வு சிறப்பு; அப்பாண்டவர்கள் மானத்தைக் காக்கவேண்டிய உரிமையும் புயவலிமையும் உடையாரென்ற பொருளைத் தரும். அற்றை-அன்று என்னும் மென்றொடர் வன்றொடராய் ஐகாரச்சாரியை பெற்றது. அற்றைக்கும், உம்மை - எதிரது தழுவியது. (104)

45. மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்று தமக்கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தால்
அன்று விரித்த வருங்கூந்தல் வல்விரையேன்
என்று முடிப்பதினி யெம்பெருமா னென்றழுதாள்.

(இ - ள்.) 'எம்பெருமான் - எமது தலைவனே!—மன்றில் - சபையிலே, அழைத்து - (துச்சாதனனால்) வருவித்து, எனக்கு—, மாசு அளித்த - (மானபங்கமாகிய) குற்றத்தை(ச்செய்து) தந்த, மன்னவன்பால் - துரியோதனராசனிடத்தில், சென்று - (இரந்து) போய், திறல் வீரர் - வலிமையையுடைய வீரர்களாகிய பாண்டவர்கள், தமக்கு ஐந்து ஊர் பெற்று - தங்கட்கு ஐந்து ஊர்களைப்பெற்று, இருந்தால் - வாழ்ந்திருந்தால்,—வல் வினையேன - கொடிய தீவினையையுடையவளாகிய யான், அன்று விரித்த அருங் கூந்தலை - (துகிலுரிந்த) அக்காலத்து விரித்திட்ட அருமையாகிய கூந்தலை, இனி என்று முடிப்பது - இனிமேல் எப்பொழுது முடித்திடுவது,' என்று - என்று சொல்லி, அழுதாள் - புலம்பினாள்; (எ - று.)

அருங் கூந்தல்-இத்தன்மையதாய் அழகிய தாக மீண்டுவளர்ந்த தொகுதியான கூந்தல் பிறர்க்கு இல்லை யென்றபடி; அல்லது, எல்லா அழகுகளினும் மயிர் முடியழகுசிறந்ததாக முதலில் எடுத்துக் கூறப்படுதலின், அதுபற்றி, 'அருங்கூந்தல்' என்றதாகவும் கொள்ளலாம். வெகுகாலமாகத்தான் பலவகைத் துன்பங்களை அனுபவித்ததற்குக் காரணமான தனது கொடிய வலிய ஊழ்வினையைத் தானே வெறுத்துக்கொண்டாள். பெருமான் - பெருமையையுடையவன்; ஈற்று 'மை' போன பெரு என்னும் பண்படி - பகுதி, மான்-ஆண்பாற் பெயர்விகுதி; ஆன் - விகுதியென்றுல், பண்புப்பெயர் ஈற்றைகாரம் மாத்திரங் கெட்டதென்க. இச்சொல், இங்கே, இயல்பாகிய அண்மை விளி. என்று என்ற வினை - இனி முடித்தலில்லையென எதிர்மறையோடு இரக்கத்தையும் உணர்த்தும். (105)

46.—சாத்தகி 'சமாதானங் கூடாது' என்றல்.

தண்டிருந்த திவள்கரத்திற் றனுவிருந்த தவன்கரத்தில்
வண்டிருந்த பூங்குழன்மேன் மாசிருந்த தெனவிருந்தாள்
கண்டிருந்தீ ரெல்லீரும் கருதலர்பா லூர்வேண்டி
யுண்டிருந்து வாழ்வதற்கே யுரைக்கின்றீ ருரையீரே.

(இ-ள்.) (திரௌபதியைச் சபையில் இழுத்துவந்து துகிலுரிந்த காலத்தில்), இவன் கரத்தில்-இந்த வீமசேனனது கையிலே, தண்டு இருந்தது (சத்துருகாதினியென்னுஞ் சிறந்த) கதாயுதம் இருந்தது; அவன் கரத்தில் - அந்த அருச்சுனனது கையிலே, தனு இருந்தது - (காண்டீவமென்னுஞ் சிறந்த) வில் இருந்தது; (அங்ஙனமிருந்தும்), வண்டு இருந்த பூங்குழல் - வண்டுகள் இடைவிடாது மொய்த்திருத்தற்கு இடமான பூக்களை முடித்த கூந்தலை யுடையவளான திரௌபதி, மேல் மாசு இருந்தது என - தன் மேலே (மானபங்கமாகிய) பழிப்பு நிலைத்து நின்றதென்று (யாவரும்) சொல்லும்படி, இருந்தாள் - (அவமானமடைந்து) இருந்தாள்; (அந்நிலையை), எல்லீரும் - நீங்களெல்லோரும், கண்டு இருந்தீர் - (கண்ணெதிரிற்) பார்த்துக் கொண்டு (அப்பொழுது சும்மா) இருந்துவிட்டீர்கள்; (இப்பொழுதும்), கருதலர்பால் ஊர் வேண்டி உண்டு இருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் - மதியாத பகைவர்களிடத்தில் ஒவ்வொரு ஊரை

யாசித்துப் பெற்று (அதனால் வருவதை)ப் புசித்து உயிரோடிருந்து வாழ்வதற்கே வழி சொல்லுகிறீர்கள்; உரையீர்-(இனி அவ்வவமானம் நீங்கும் விதத்தைச்) சொல்லுங்கள்; (எ - று.)

இது சாத்தகிவார்த்தையென்பது, மேல் 48-ஆங்கவியில் "சாத்தகிகின் றிவையுரைப்ப" என வருவதனால் விளங்கும்.

நண்பர் பக்கலிலும் யாதோரியைபுமில்லாத பிறர் பக்கலிலுமே ஏதாயினு மொன்றை இரந்துவாழ்தல் மிக்க இளிவரவுக்கு இடமாயிருக்க, பகைவர் பக்கல் இரந்துவாழக் கருதுவது என்ன பேதைமை! என்றபடி. போரையே கருதாது சமாதானத்தையே கருதிக்கூறிய தருமன் சகதேவன் கண்ணன் இவர்களையும், தம் கருத்துச் சமாதானத்தின் மேலன்றிப் போரின்மேலாக வேறுபட்டிருப்பினும் இவர்கள் வார்த்தையைக் கடக்கமாட்டாத வீமன் முதலிய மூவரையும் பார்த்து, சுத்த வீரனை சாத்தகி, இவர்கட்கும் திரௌபதிக்கும் பகைவரால் நேர்ந்த அவமானங்களைக் கருதி மனம்பொறாது, தக்க சமயத்தில் நல்ல ஆலோசனையைச் சொல்லாதிருப்பது தகுதியன்றென்று பதைத்துக் கூறின னென்க.

உரைக்கின்றீர் என்பதை - உரைக்கின்றவர்களே என விளியாகவுங் கொள்ளலாம்; கண்டிருந்தீர் என்பதைப் பெயராகக் கொண்டு, கண்டிருந்த நீவிரெல்லீரும் என்றலுமாம். தண்டிருந்தது, தனுவிருந்தது என்றவை - அவையிருந்தும் பயனற்றவையாயின என்பதோடு அவர்கள் பகைமுடிக்க வல்லவராயினும் தருமன் பொறுமைக்கு அஞ்சி அடங்கியிருந்தார்களென்பதையும் தெரிவித்தன. இரண்டாமடிக்கு - கூந்தல்மேற் பழிப்புள்ள தென்னும்படி அது விரிக்கப்பட்டிருந்த திரௌபதியை என்றும், திரௌபதி (மிக்க வீரர்களான கணவர்கள் பார்த்துச் சும்மா இருக்கத் தான் பகைவர்களைக் கற்புவலிமையால் அழிப்பது) தன்மேற்பழிப்புக்கிடமாமென்று கருதி அஞ்சி யிருந்தாளென்றும் உரைப்பாருமுளர். இனி, முதலிரண்டடிக்கு வீமன் கையிற் கதையிருந்தும் அருச்சுனன் கையில் வில் இருந்தும் புகழ் தாராது அவர்களிடம் பழிப்பிருத்தற்குக் காரணமாயிற்று என்னும்படி திரௌபதி துன்பமடைந்து இருந்தாளென்றலும் ஒருரையாம். மான அவமானங்களை நினையாது வயிறு வளர்த்தலே பெரியதென நினைக்கின்றீரென்பான், 'உண்டிருந்து வாழ்வதற்கே' என்றான். உரையீர் - அங்ஙனஞ் சொல்லாதீர் எனினுமாம்; இச்சொல் - உடன்பாடு எதிர்மறை இரண்டுக்கும் பொது.

இவன் - அண்மைச்சுட்டு: அவன் - சேய்மைச்சுட்டு; சபையில் வீற்றிருக்கையில் சாத்தகிக்கு மிக அருகில் வீமனும், சிறிதுதூரத்தில் அருச்சுனனும் வீற்றிருந்ததனால், இங்ஙனம் சுட்டினது. பூங்குழல் - வேற்றுமைத்தொகையன்மொழி; இதனை அடையடுத்த நினையாகுபெயரெனக் கொள்ளினும் இழுக்காது. இப்பாட்டில் முன்னிரண்டடிகள் - படர்க்கையாகவும், பின்னிரண்டடிகள் - முன்னிலையாகவுங் கூறப்பட்டது. அலட்சியத்தைக் காட்டிய இடவழுவமைதியின்பாற்படும். கருதலர் - நன்குமதியாது எண்ணுதலில்லாதவர்; காரணக்குறி. எல்லீர் - முன்னிலைப்பன்மைக் குறிபு வினையாலணை

யும் பெயர், (இதன் தன்மை - எல்லோர்மென்றும், படர்க்கை - எல்லாரென்றும் வரும்) 'கண்டிருந்தீ ரெல்லீரும்' என்றது, பாண்டவரையரையும். (106)

47.—இதுவும் அது.

சண்டமுகி லுருமனைய சராசந்தன் றனக்கஞ்சி
வண்டுவரை யரணுக வடமதுரை கைவிட்ட
திண்டிறன்மா தவன்மதியோ திகழ்தருமன் றன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்தும் பார்போய்வேண் டுவதென்றான்.

(இ - ள்.) சண்டம் - உக்கிரமான, முகில் உரும் - மேகத்தில் தோன்றுகிற இடியை, அனைய - ஒத்த, சராசந்தன் தனக்கு-ஜராசந்தனுக்கு, அஞ்சி - பயந்து, வள் துவரை அரண் ஆக - அழகிய துவாரகாபுரியையே காப்பிடமாகக்கொண்டு, வடமதுரை கைவிட்ட - வடக்கிலுள்ள (தனது) மதுராபுரியை முழுவதும் விட்டு நீங்கின, திண் திறல் மாதவன் - மிகுந்த வலிமையையுடைய கண்ணனது, மதியோ - அறிவின் காரியமோ? திகழ் தருமன் தன் மதியோ - விளங்குகின்ற யுதிட்டிரனது அறிவின் காரியமோ? பண்டு அவர் கருத்து அறிந்தும் - முன்னமே அத்துரியோதனனியது எண்ணத்தை (உலூகன் முதலியோரால்) தெரிந்திருந்தும், பார்போய் வேண்டுவது - (மறுபடி) சென்று இராச்சியத்தை யாசிப்பது, என்றான்-என்று கூறினன் (சாத்தகி); (எ - று.)

இவ்விரண்டு கவிகளும் சாத்தகிவார்த்தை யென்பது, வருங் கவியில் "சாத்தகியின் நிலையுரைப்ப" என்பதனால் விளங்கும். முதலிரண்டடிகளால், பகைவர்க்குப் பயந்தோடுகிறவனென்று கண்ணனது பராக்கிரமத்தை இகழ்ந்து கூறியபடி. 'திண் திறல்' என்ற மிகுந்த வலிமை குறிக்கிற ஒரு பொருட்பன்மொழியும், இங்கு இகழ்ச்சிபற்றி வந்ததுபோலும்; அல்லது, பலமிருந்தும் தைரியமில்லை யென்றதை உணர்த்தியதுமாம். புத்திசாலியான சாத்தகி இங்ஙனம் பெரியோரை இகழ்ந்தது, இதனாலேனும் அவர்க்கு வீராவேசமுண்டாகி அவர்கள் போருக்கு எழுந்து பகையை யொழிக்க வேண்டுமென்ற நல்ல கருத்தினா லென்க.

முதலிரண்டடிகளிற் கூறிய விவரம்:—மகததேசத்து அரசனும் தேவர்களுக்குப் பகைவனுமாகிய பிருகத்திரத னென்பவன் மைந்தனில்லாக் குறையால் வனத்திற்சென்று சண்டகௌசிகமாமுனிவனை வணங்கி வரம்வேண்ட, அவன் தனது வாசஸ்தானமாக இருக்கும் மாமரத்தின் கனியொன்றைக்கொடுக்க, அதனை அவன் காசிதேசத்தரசன் பெண்களாகிய தன் மனைவிமார் இருவர்க்கும் பகிர்ந்து கொடுத்தான்; அதனால் அவ்விருவரிடத்தும் பாதிபாதியாகக் குழந்தை பிறந்தது; அவற்றை அவன் ஊர்ப்புறத்தில் எறிந்துவிடும்படி கட்டளையிட, அங்ஙன மெறியப்பட்ட அப்பகுதிகளை அந்தக் கிராம தேவதையாகிய ஜரையென்பவள் இரவில் ஊர்வலம் வருகையில் கண்டு எடுத்துப் பொருத்தி உயிர்ப்பித்து, தன்னாற் பொருத்தப்பட்ட காரணத்தால் ஜராசந்தனென்று பெயரிட்டு வளர்க்கும்படி

அக்குழந்தையைத் தந்தையிடங் கொடுத்துப் போயினள்; அங்ஙனம் வளர்ந்து அந்நாட்டில் கிரிவிரசமென்னும் நகரத்தில் அரசாண்டு பற்பல அரசர்களைப் போரிற் கொன்றுவென்று செருக்குக்கொண்டிருந்த அவன், அஸ்தி பிராஸ்தி என்னுந்தனது இரண்டு பெண்களைக் கண்ணனது மாமனை கம்சனுக்கு மணஞ் செய்வித்திருந்தான்: பின்பு அச்சராசந்தன் கண்ணன் கம்சனைக் கொன்றது காரணமாக வெகுகோபங்கொண்டு கிருஷ்ணனை வம்சத்தோடு கொல்ல வேண்டுமென்று அநேகம் பெருஞ்சேனையோடு எதிர்த்து வந்து மதுராபுரியை வளைத்துப் பெரும் போர் செய்து பலராமகிருஷ்ணர்களாலும் யாதவசேனையாலுந் தானுந் தன் சேனையும் வெல்லப்பட்டு ஓடிப்போனன்; இங்ஙனம் பதினெட்டுமுறை மீண்டும் வருவது பொருவது தோற்பது ஓடுவதாய்ப் பங்கப்பட்டபின் கோபாவேசங்கொண்டு பலமான பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு வந்தான்; இப்படியிருக்கையில், யவனதேசாதிபதியான காலயவனன், பலபராக்கிரமங்களாற் செருக்குக் கொண்டு, நாரத முனிவரால் கிருஷ்ண பலராமர்களேயே தான் எதிர்த்தற்கு ஏற்ற பலவான்களாக அறிந்து, சேனையைச் சித்தஞ் செய்துகொண்டு போரின் பொருட்டு மதுரைக்கு வந்தான்; அத்தருணத்தில் கண்ணன், யாதவசேனைக்கு நாசமுண்டாகக் கூடுமென்று நினைத்து, சமுத்திரராசனைப் பன்னிரண்டு யோசனை தூரம் இடம் விடும்படி கேட்டு, அந்நடுக்கடலில், பகைவர் உட்புகவொண்ணுதபடி மிகவுங் கர்ப்புடைத்தான துவாரகா நகரத்தை நிருமித்து, மதுரையிலிருந்த சனங்களையெல்லாம் அந்நகரத்திற் கொண்டு சேர்த்து, காலயவனன் வருகையில், கண்ணன் தான் தனியே ஓராயுதமு மில்லாமல் மதுரையினின்று வெளியே புறப்பட்டு ஓடினன் என்பது வரலாறு. தான் அவதாரவிசேஷத்தில் அடைந்திருக்கும் மனிதத் தன்மையை அனுசரித்துக் காலத்துக்கு ஏற்ற கோலமாய்க் கண்ணன் இங்ஙனஞ் செய்தது, ஜராசந்தன வீமனால் பின்பு மரணமடைய வேண்டிய ஊழ்வினையினுண்மையை நோக்கி யாயினும், இராசதருமத்தைப் பார்க்குமிடத்துப் பகைக்குப் பயந்து பங்கப்பட்டதாகவே முடிதலால், இவ்வாறு சாத்தகி கூறினது.

சராசந்தனுக்கு இடியுவமை - அச்சந் தருதற்கும், தவருது அழித்தற்கு மென்க. "மணிநீரு மண்ணு மலையு மணிநிழற், காடு முடைய தரண்" என்ற நான்கு வகை யரண்களுள் முதலாகக் கூறப்பட்ட நீரரண்கடலால் நன்கு அமைந்திருக்கின்ற சிறப்புத் தோன்ற, 'துவரையரணை' என்றார். மதுரா என்னும் வடசொல், ஆவீறு ஐயாயிற்று; மதுவென்னும் அரசனால் முதலில் சிர்திருத்தி யாளப்பட்டதனாலும் கண்ணனுக்கு இனிதா யிருத்தலாலும், மதுரையென்று பெயர். பாண்டிய நாட்டிலுள்ள தென் மதுரையினின்று பிரித்தற்கு, 'வடமதுரை' எனப் பிறிதினியைபு நீக்கிய விசேஷணங் கொடுத்துக் கூறவேண்டிற்று. கைவிட்ட என்பதில், கை - விடுதல் விணையைச் சிறப்பித்து நின்ற தமிழுபசர்க்கம். மாதவன் என்னும் வடமொழித் திருநாமத்துக்கு - திருமகளது கொழுநனென்று பொருள்; ஆறும்வேற்றுமைத்தொகை: மா - இலக்குமி, தவன் - கணவன். திகழ் என்ற விணைத்தொகை யடைமொழியையும் இங்கே

இகழ்ச்சி குறிப்பதாகவே கொள்ளுதல் தகுதி. மதியினைக் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது. பண்டு என்றது - அரக்கு மாளிகையில் வைத்து எரிக்க நினைத்தது, வீமனைக்கழுவேற்றியது முதலிய அனைத்தையும் உட்படுத்தும். பண்டும், உம்மை - மாற்றப்பட்டது. (107)

48.— கண்ணன் திரௌபதியைநோக்கி ஒன்றுகூறத் தொடங்குதல்.

சாத்தகிநின் றிவையுரைப்பச் சடைக்குழலா ளழுதரற்றக்
கோத்தருமன் முதலாய குலவேந்த ரைவரையும்
பார்த்தருளி யருள்பொழியும் பங்கயக்க ணெடுமாலும்
ஏத்தரிய பெருங்கற்பி னிளையாளுக் கிவை யுரைப்பான்.

(இ - ள்.) சாத்தகி - கண்ணன் தம்பி, நின்று - (உறுதியோடு) நின்று, இவை உரைப்ப - இவ்வார்த்தைகளைச் சொல்லவும்,—சடைகுழலாள் - (பின்னி முடிக்கப்படாமல்) சடையாகத்திரித்துவிடப்பட்ட கூந்தலையுடையவளான திரௌபதி, அழுது அரற்ற - புலம்பிக் கதறவும்,—(கேட்டு),—அருள்பொழியும் - கருணையைச் சொரிகின்ற, பங்கயம் கண் - தாமரைமலர்போலுங் கண்களையுடைய, நெடுமாலும் - பெருமைக்குணமுள்ள கண்ணனும், கோ தருமன் முதல் ஆய குலம் வேந்தர் ஐவரையும் பார்த்தருளி - தலைவனை யுதிட்டிரனை முதலாகவுடைய சிறந்தகுலத்திற் பிறந்த அரசர்களைந்துபேரையும் [பஞ்ச பாண்டவரையும்] கருணையோடுநோக்கி, ஏத்து அரிய பெருங் கறபின் - (எவராலும்) துதித்தற்கு அருமையான சிறந்த பதிவிரதா தருமத்தையுடைய, இளையாளுக்கு - திருமகள்போன்றவளான திரௌபதிக்கு, இவை உரைப்பான் - இவ்வார்த்தைகளைச் சொல்பவனனைன்; (எ - று.)—அவற்றை, அடுத்த கவியிற் காண்க.

யதுகுலத்தரசர்களில் வசுதேவனுக்கு உடன்பிறந்தமுறையாகின்றவனும் சினியென்பவனது மகனுமான சாத்தியகனது குமாரனுகிய சாத்தியகி, பிராயத்திற் கண்ணனினும் இளையனுதலால் கண்ணனுக்குத் தம்பிமுறை யாவன். இலக்குமணன் இராமனிடத்துப்போல இவன் கண்ணனிடம் மிக்க அன்புகொண்டு அவன் கருத்துக்குச் சிறிதும் மாறுபடாது நடப்பவன். அன்றியும், இவன் அருச்சுனனிடம் வில்வித்தையைக் கற்றறிந்த மாணுக்கனுதலால், ஆசிரியனுகிய அருச்சுனனிடத்தும் அது காரணமாக மற்றைப் பாண்டவரிடத்தும் நீதிமுறைவழுவாமல் அன்போடு ஒழுகுபவன். இவனுக்கு யுயுதானனென்றும், சைனேயனென்றும் இரு பெயர்களுண்டு.

கோத்தருமன் - தருமக்கோ. வெனமாற்றி, தருமராசனென்னலாம். அருள்பொழியுங்கண் - கருணைமிகுதி கண்ணில் விளங்கும் என்றபடி. திருப்பாற்கடல் கடைந்த காலத்து அதனினின்று முன்னர் மூதேவியும் பின்னர் ஸ்ரீதேவியும் பிறந்தனராதலால், இவர் கட்கு முறையே, மூத்தாள் இளையாள் என்றும், தமக்கை தங்கை

என்றும், முன்னவள் பின்னவள் என்றும் பெயர்கள் வழங்கும். இங்கே 'இளையாள்' என்றது - பாஞ்சாலிக்கு உவமையாகுபெயர். பங்கயக்கண்ணமால் - புண்டரீகாட்சன். (108)

49.—இதுமுதல் மூன்றுகவிகள் - கண்ணன் திரௌபதியைத் தேற்றுதல்.

தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டதற்பின்
நல்லாயுன் பைங்கூந்த னானே முடிக்கின்றேன்
எல்லாருங் காணவினீ விரிப்ப தெண்ணரிய
புல்லார்த மந்தப்புர மாதர் பூங்குழலே.

(இ - ள்.) நல்லாய் - நற்குண நற்செய்கைகளையும் அழகையும் உடையவளே! தொல் ஆண்மை பாண்டவர்க்கு தூதுபோய் மீண்ட தன் பின் - பழமையான [இயற்கையாகவுள்ள] பராக்கிரமத்தை யுடைய பாண்டவர்கட்காக (நான் துரியோதனனிடம்) தூதுசென்று திரும்பிவந்தபின்பு, உன் பைங்கூந்தல் நானே முடிக்கின்றேன் - உனது கருமையான கூந்தலை நானே முடித்திடுகிறேன்; எல்லாரும் காண - அனைவரும் பார்க்கும்படி, இனி விரிப்பது - இனிமேல் விரிக்கப்படுவது,—எண் அரிய - கணக்கிடமுடியாத [அளவிறந்த], புல்லார்தம் - பகைவர்களான துரியோதனாதியருடைய, அந்தப்புரம் மாதர் - அந்தப்புரத்திலுள்ள மனைவியரான மகளிரது, பூங்குழலே - மலர்களையணிந்த கூந்தல்களே; (எ-று.)

தருமபுத்திரனது கருத்தின்படி நான் பாண்டவதூதனாய்ச் சென்று வந்தவுடனே விரைவில் துரியோதனாதியரைக் கொல்வித்து உன் சபதத்தைத் தவறாமல் நிறைவேற்றுவேனென்று திரௌபதிக்கு அபயமளித்தனனென்க. "அந்தகன்சிறுவ னரசர் தமரசற் கிளையவ னணியிழையைச் சென்று எந்தமக்குரிமை செய்யெனத் தரியா தெம்பெருமானருளென்னச், சந்தமல்குழலாளலக்க ணூற்று வர்தம்பெண்டிருமெய்தி நூலிழப்ப, இந்திரன் சிறுவன்றேர் முன்னின்ருன்," என்ற ஆழ்வாரருளிச்செயல் இங்கு நோக்கத்தக்கது. தருமபுத்திரனது மிகபொறுமையை விளக்கத்தான் தூது போகக் கருதியதே யன்றி, கிருஷ்ணனுடைய மனப்பூர்வமான எண்ணம் போரை நடத்துவதிலேயே யென்பது, முன்னிரண்டடிகளில் வெளியாம். பின்னிரண்டடிகளிற்கூறியது, கொழுநர் இறந்தபின்பு மனைவியர் புரண்டு விழுந்து புலம்புகையிற் கூந்தலை விரித்தலை. 'அந்தப்புரமாதர்' என்றது, உள்ளிருந்த உன்னை அவன் சபையில் இழுத்து வந்ததற்குப் பிரதியாக அந்தப்புரத்திலுள்ள 'மகளிர் வெளிப்பட்டுப் போர்க்களத்தில் வந்து துன்புறுவர்' என்றற்கு; 'எல்லாருங் காண' என்றதும், இப்படிப்பட்ட கருத்தை விளக்கும். குழல் - சாதியொருமையாதலால், 'விரிப்பது' என்ற ஒன்றன்பாற் சொல்லைக் கொண்டது. உனது கூந்தலொன்றை விரித்ததற்கு எதிராக, அவர்களது கூந்தல் நூறு விரிக்கப்படும் என்றவாறு: இச்செய்யுளில் மாற்றுநிலையணி தோன்றுமாறு காண்க.

நீலம் பசுமை கருமை இங்கிறங்களை வேறுபாடு கருதாது அபேத மாகக் கூறுதல் கவிமரபாதலால், 'பைங்கூந்தல்' எனப்பட்டது. இனி பசுமை - குளிர்ச்சியுமாம். 'பச்சைஜலம்' என்பதிற்போல. முடிப்பேன் என எதிர்காலமாகக் கூறவேண்டுமிடத்து, முடிக்கின்றேன் என நிகழ் காலத்தாற் கூறியது, விரைவும் தெளிவும் பற்றிய காலவழுவமைதி. புல்லார் - (தம்மைச்) சேராதவர்; எனவே, பகைவராம்; புல் என்ற வினைப்பகுதியடியாப் பிறந்த எதிர்மறைப் பலர்பால் வினையாலணையும் பெயர். இனி, புன்மையென்னும் பண்பினடியாப் பிறந்த குறிப்புப் பெயரெனக்கொண்டு, அற்பரான கௌரவரென்றுமாம். எண்ணரிய - நினைத்தற்குங் கூடாத இழிகுணமுடைய எனினுமாம். அந்தப் புரம் - அரண்மனையில் ராஜஸ்திரீகள் வசிக்குங் காப்புடைய உள்ளிடம். (109)

50. மைக்குழலாய் கேளாய் மருவார் முடற்புலத்துப்
புக்குழலா குங்கொழுவாம் போர்வா ளபிமன்னுத்
தொக்குழலும் வெங்கோன்மைத் தொல்வேந்தர் தங்குலமும்
இக்குழலுஞ் சேர முடியா திரானென்றான்.

(இ - ள்.) மை குழலாய் - கருநிறத்தையுடைய கூந்தலையுடை யவளே! கேளாய் - (யான்சொல்வதைக்) கேள; மருவார் - பகைவர் களது, உடல் - உடம்பாகிய, புலத்து - விளைநிலத்திலே, புக்கு - நன்றாகப்பிரவேசித்து, உழல் ஆகும் - உழுதற்கு உரிய, கொழு ஆம் - இருப்புக்கொழுவாகிய, போர்வாள் - போரிற்சிறந்த வாளா யுதத்தையுடைய, அபிமன்னு - அபிமந்யுவானவன்,—தொக்கு உழலும் - ஒன்றுகக் கூடிச் சஞ்சரிக்கின்ற, வெங் கோன்மை தொல் வேந்தர்தம் குலமும் - கொடுங்கோன்மையையுடைய பழமையான அரசர்களது கூட்டத்தையும், இ குழலும் - இந்த உனது கூந்தலை யும், சேர - ஒருசேர, முடியாது இரான் - முடிக்காமலிருக்கமாட்டான், என்றான் - என்று (கண்ணன்) கூறியருளினான்; (எ - று.)

வேந்தர்குலத்தை அழியச்செய்து உனது கூந்தலையும் முடிக்கச் செய்வ னென்பதாம். முடியாது - இரட்டுறமொழிதலாக ஒருங்கே இரண்டு பொருள்பட்டது, சிலேடையணி. முடித்தல்-கெடுத்தலும், கட்டுதலுமாம். மைக்குழல் - உவமைத்தொகையாய், அஞ்சனம் போன்ற அல்லது மேகம்போன்ற கூந்தலென்றுமாம். மருவார் - சேரார்தவர்; மருவுதல் - சேர்தல். புலம் - கழனி. கொழு - காறு. உடற்புலத்து உழலாகுங் கொழுவாம் வாள் - உருவகம். ஆம் - உவமவுருபென்னலுமாம். "வாளுழவன்" என்றார் கம்பரும். அபி மன்னு - கண்ணனுடன்பிறந்தவளான சுபத்திரையினிடம் அருச் சுனனுக்குப் பிறந்த புத்திரன்: இளமையிலேயே வில்வித்தையில் ஒப்புயர்வின்றி மிகச் சிறந்தவன்; ஆனதுபற்றியே, மற்றையோர் விட்டாலும் பகைவர்களை இவன் விடானென இங்குக் கூறியது.(110)

51. பெண்ணீர்மை குன்றுப் பெருந்திருவின் செங்கமலக்
கண்ணீர் துடைத்திரு தன்கண்ணிற் கருணையெனுந்

தெண்ணீ ரினுற்பொருந்தத் தேற்றினன் சாற்றுகின்ற
மண்ணீ ரனலனிலம் வான்வடிவா மாமாயன்.

(இ - ள்.) சாற்றுகின்ற-(நூல்களில்) எடுத்துக் கூறப்படுகின்ற, மண்-பூமியும், நீர்-ஜலமும், அனல் - அக்கினியும், அனிலம் - வாயுவும், வான்-ஆகாயமும் ஆகிய பஞ்சபூதங்களின், வடிவு ஆம்-சொரூபமாகிய, மா மாயன் - மிக்க மாயையையுடையவனான கண்ணபிரான்,—தன் இரு கண்ணின் கருணை எனும் தெள் நீரினால் - தனது இரண்டு கண்களினின்று சொரிகின்ற அருளாகிய தெளிவான நீரினாலே, பெண் நீர்மை குன்று பெருந் திருவின் செங்கமலம் கண் நீர் துடைத்து - பெண்மைக்கு உரிய குணங்களொன்றும் குறையாத சிறந்த இலக்குமிபோன்ற திரௌபதியினது செந்தாமரை மலர் போலுங் கண்களின் நீரைப்போக்கி, பொருந்த தேற்றினன் - தக்கபடி [மனம் வருந்தாதிருக்குமாறு] (அவளைச்) சமாதானப் படுத்தியருளினன்; (எ - று.)

தனது கடாட்சத்தில் தோன்றுங் கருணைத்தெண்ணீரினால் அத்திரௌபதியினது சோகக்கண்ணீரை அகற்றினனென்க. தம்மைச் சேர்ந்தவர் துன்பமடையக் கண்டபோது அன்புடையாரது கண்களினின்று அகத்தே நிகழ்கிற அன்பு புறத்தேதோன்றும்படி கண்ணீர் தளும்புமாதலின், 'கண்ணிற் கருணையெனுந்தெண்ணீர்' எனப்பட்டது. கருணையெனுந் தெள்நீர்-அருளென்கிற தெளிவான குணமென்றும் உரைப்பர்.

நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என மகடூஉக்குணம் நான்காம்; அவற்றுள், நாணமாவது - செய்யத்தகாதவற்றில் உள்ளமொடுங்குதல். மடமாவது - எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாதுபோலிருத்தல்: கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமை யெனவும்படும். அச்சமாவது - புதியதைக் கண்டவிடத்து அஞ்சுதல். பயிர்ப்பாவது-தன்கணவனல்லாத ஆடவரது ஆலிங்கனமுதலியன தன்மேற்பட்டால் அருவருத்தல். மற்றைய பெண்குணங்களையாவும் இந்நான்கில் அடக்கப்படும். கண்ணீர் - இங்கே, சோகபாஷ்பம். உற்பத்திக்கிரமத்தில், ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து நிலமும் பிறந்தனவென வேதம் ஓதுதலால், அக்காரிய காரணமுறைபடியே 'மண்ணீரனலனிலம் வான்' என அடுக்கினார்; இனி, லயகாலத்தில், நிலம் நீரிலும் நீர் நெருப்பிலும், நெருப்பு காற்றிலும், காற்று வானத்திலும் ஒடுங்குமென்பது நூல்வழக்காதலால், அம்முறைப்படி வைத்தாரெனினுமாம். ஈற்றடி, எம்பெருமான் எல்லாப் பொருள்களின் சொரூபமுமானவனென்பதை விளக்கும்; "ஸர்வம் விஷ்ணுமயம்ஜகத்," "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச், சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனு மயனானாய்" என்றார் ஆழ்வாரும். (111)

52.—ஆலோசனைச் சபையில் வரத்தகாதவர்கள்.

துன்று பிணியோர் துறந்தோ ரடங்காதோர்
கன்று சினமனத்தோர் கல்லாதவ ரிவ்வோர்

ஒன்று முறைமை யுணரா தவர்மகளிர்
என்று மிவர்மந்தணத்தி னெய்தப் பெருதாரே.

இதுவும், அடுத்தகவியும்-குளகம்: இக்கவி-தருமன் வார்த்தை.

(இ - ள்.) துன்று பிணியோர் - மிக்க நோயை யுடையவர்களும், துறந்தோர்-(பற்றுக்களை முற்றத்) துறந்தவர்களும், அடங்காதோர்-வணக்கமில்லாதவர்களும், கன்று சினம் மனத்தோர் - தபிக்கிற [மிக்க] கோபத்தையுடைய மனத்தையுடையவர்களும், கல்லாதவர்-படியாதவர்களும், இளையோர் - சிறுபிள்ளைகளும், முறைமை ஒன்றும் உணராதவர் - நீதியைச் சிறிதும் அறியாதவர்களும், மகளிர் - மாதர்களும், இவர் - என்கிற இவர்கள்,—என்றும் - எப்பொழுதும், மந்தணத்தின்-ஆலோசனை செய்யுமிடத்தில், எய்த பெறுதாரே - வருதற்குத் தகுதியில்லாதவரேயாவர்; (எ - று.)—'என்னக்கழறி' என அடுத்த கவியோடு தொடரும். ஈற்று ஏகாரம் - தேற்றம்.

தன்கருத்தின்படி கண்ணன் நடப்பதைத் திரௌபதி இடையில் வந்து தடுத்து மனத்தை மாற்றுவதுபற்றி வெறுப்புக் கொண்ட தருமபுத்திரன், மகளிர் ஆலோசனையிடத்துவருதலைத் தடுக்கவேண்டி, அவ்விஷயத்தில் அவர்க்கு இனமாய் நிற்பவரையும் உடன்கூறினனென்க. மிக்க நோயாளிகள் முதலிய இவர்கள், ஆய்ந்து செய்வன தவிர்வன அறிந்து பேசிமுடித்து ஒழுகாராதலால், மந்திராலோசனைச் சபையில் வரவுந் தகாதவராவர். உலகப் பற்றுக்களைத் துறந்தவர்கள், மிகக்கூரிய நுண்ணறிவுடையாராயினும், இம்மையில் ஒருவர்க்கு நேரும் இலாபநஷ்டங்களை ஊன்றிக் கருதிப் பெறவும் ஒழிக்கவுஞ் செய்யும் முயற்சிகளில், கடவுட்சிந்தனையிலழுந்துந் தமது மனத்தைச் சிறிதுஞ் செல்லவிடாராதலால், அவர்களும் விலக்கப்பட்டனர். "பேதைமையென்பது மாதர்க்கு அணிகலம்," "நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" என்றபடி மகளிர் இயற்கையிலும் செயற்கையிலும் மாறுத பேதைமையுடையராதலால், அவர்கள் வருதலுந் தகாது. "மூடன் ஊமையன் குருடன் செவிடன கிளி கிழவன் ஸ்திரீ நோயாளிகள் மிலேச்சன் அங்க ஹீனன் இவர்கள் தாங்கள் ஆலோசிக்கிற இடத்திலிருந்தால் தூரத்திலிடவேண்டியது" என்ற மநுதர்ம சாஸ்திரமும், கம்பராமாயணத்து யுத்தகாண்டத்தில் மந்திரப்படலத்திலே 'புனைகுழன்மகளிரோ டிளைஞர்ப் போக்கினன், நினைவுறுகாரிய நிகழ்த்து நெஞ்சினன்' என்றதும் இங்கு அறியற்பாலன. 'ஆப்தனையிருந்தாலும் மூர்க்கனை ஆலோசனையினின்று விலக்கவேண்டும்' என்றது காமந்தகமென்னும் இராசநீதிநூல். பிறவும் இங்ஙனமே கண்டு கொள்க.

ஒன்றும் முறைமை என எடுத்து, பொருத்தமான நீதி முறைமை யெனினுமாம். மந்தணம் - ஆலோசனையைக் குறிக்கிற இச்சொல் இலக்கணையால், அது செய்தற்கு உரிய இடத்துக்கு வந்தது. தனது கருத்துக்கு மாறுபாடாகக் கூறிய வீமன் முதலிய

மூவரையும், 'அடங்காதோர், கன்று சினமனத்தோர், இளையோர்' என்ற சொற்களாற் சிறிது இகழ்ந்ததாகவுங் கொள்ளலாம். எய்த என்ற செயவெனெச்சத்தி னீற்றில், இழிவுசிறப்புப்பொருளுள்ள எச்சவும்மை, விகாரத்தால் தொக்கது. இதனால் அவர்கள் வரவுந் தகாதவர், ஆலோசனை சொல்லவுந் தகாதவ ரென்றவாறு. (112)

53.—தருமபுத்திரன் வேண்டுகோளினால் கண்ணன் தூதுசெல்லத் தேரேறுதல்.

என்னக் கழறி யிருந்தோருரை தவிர்த்து
நின்னைப் பவரில்லாய் நீயேகென வுரைப்ப
மன்னர்க்கு மன்னவன்பான் மாயோனுந் தூதாகிப்
பொன்னுற்ற நேமிப் பொருபரித்தேர் மேற்கொண்டான்.

(இ - ள்.) (யுதிட்டிரன்),—என்ன கழறி-என்று உறுத்திக்கூறி, இருந்தோர் உரை தவிர்த்து - (மற்றும் அங்கு) இருந்த (வீமன் அருச்சுனன் நகுலன் சாத்தகி) என்பவரது பேச்சுக்களையும் அடக்கி, (கண்ணனை நோக்கி),—'நின் ஒப்பவர் இல்லாய் - உன்னை யொப்பவர் (எவரையும்) பெறாதவனே! நீ ஏகு-நீ தூது செல்வாய்', என உரைப்ப - என்று சொல்ல, மாயோனும் - கண்ணபிரானும், மன்னர்க்கு மன்னவன்பால் - அரசர்கட்கு அரசனான துரியோதனனிடத்து, (செல்லுதற்கு உரிய), தூது ஆகி - தூதுவனாய், பொன் உற்ற நேமிபொரு பரி தேர் மேற்கொண்டான் - பொன்னினாலமைந்த சக்கரங்களையுடையதும் போர்செய்தற்கு உரிய குதிரைகளைப் பூட்டியதுமாகிய (தனது) இரதத்தின்மீது ஏறியருளினான்; (எ - று.)

கழறி, தவிர்த்து, உரைப்ப என்ற வினைகளுக்கு இடத்திற்கு ஏற்பத் தருமனென்னத் தோன்ற எழுவாய் வருவித்து முடிக்க. ஒப்பவரில்லாமை கூறவே, உயர்பவரில்லாமை தானே விளங்கும்; "தனக்குவமையில்லாதான்" என்பது திருக்குறள்; "தன்னைப்பாரில்லப்பன்" "ஒத்தாரை மிக்காரை யிலையாய மாமாயா" என்றார் ஆழ்வாரும். நின் ஒப்பவரில்லாய் - உனக்கு நீயே சமானமானவ னென்றபடி; 'ராஜராஜன்' என்று துரியோதனனுக்கு ஒரு பெயர். நேமித்தேர், பரித்தேர் எனத் தனித்தனி இயையும். (113)

54.—இதுவும், மேற்கவியும் - குளகம்: கண்ணன் சென்று அத்தினபுரியைக் காணுதலைக் கூறும்.

சங்கு மணிமுரசுஞ் சல்லரியுந் தாரைகளும்
எங்கு முழங்க வெழில்வெண் குடைநிழற்றப்
பொங்கு கவரி புடையிரட்ட வெண்ணிலா
வங்க மொருநான்கு மவனிபருந் தற்சூழ.

(இ - ள்.) (கண்ணன் தேர்மேலேறிப் புறப்படுகையில்), சங்கும் - சங்குகளும், அணி முரசும் - அழகிய பேரிகைகளும், சல்லரியும் - சல்லரியென்னும் வாத்திய விசேஷங்களும், தாரைகளும் - தார்ை

யென்னும் ஊது கருவிகளும், எங்கும் முழங்க - எல்லாவிடங்களிலும் மிக ஒலிக்கவும், எழில் வெள்குடை - அழகிய வெண்கொற்றக் குடை, நிழற்ற - நிழலிடச் செய்யவும், பொங்கு கவரி - விளங்குகின்ற சாமரங்கள், புடை இரட்ட-பக்கங்களில் வீசவும், எண் இலா - கணக்கில்லாத, அங்கம் ஒரு நான்கும் - (ரதகஜதுரகபதாதி யென்னுஞ்) சதுரங்க சேனைகளும், அவனிபரும் - அரசர்கள் பலரும், தன்சூழ - தன்னைச்சுற்றிலும் வரவும், (எ - று.)—'சென்றருளி, கண்டான்' என மேற்கவியோடு தொடரும்.

"முரசொலியுஞ் சங்கொலியு மூரித்தேர்த்தானை, திரைசெய் கருங்கடல்போற் செல்ல' என்றார் பெருந்தேவனாரும். முழங்க, நிழற்ற, இரட்ட, சூழ இந்நான்கு செயவெனெச்சங்களும்-உம்மைகள் தொகுக்கு நின்றதனால், வினைச்செவ்வெண். கவரி - சமரீ என்பதன் திரிபு; இப்பெண்மானின் பெயர் அதன் வால்மயிரினாற் செய்யப்பட்ட இராசசின்னத்துக்கு இருமடியாகுபெயர். தாரை - சிறுசின்ன மெனப்படும். (114)

55. கல்வரையும் பாலைக் கடுஞ்சுரமுங் கான்யாறும்
நல்வரையு நீர்நாடு நாளிரண்டிற் சென்றருளித்
தொல்வரைய கோபுரமு நீண்மதிலுஞ் சூழ்ந்திலங்கு
மல்வரைய தோளான் வளமாநகர் கண்டான்.

(இ - ள்.) {கண்ணன்),—கல் வரையும் - கற்களடர்ந்த மலைகளையும் [குறிஞ்சி நிலத்தையும்,] பாலை கடுஞ் சுரமும் - பாலை நிலமாகிய கொடிய வெப்பங்கொண்ட இடத்தையும், கான் யாறும் - காட்டாறுகளையும் [முல்லை நிலத்தையும்], நல் வரையும் நீர் நாடும் - நன்மையைத் தம்மிடத்தே கொண்ட நீர்வளமுள்ள நாடுகளையும் [மருத நிலத்தையும்], நாள் இரண்டில் சென்று அருளி - இரண்டுநாளிற் போய்க் கடந்தருளி,—(மூன்றும் நாளில்),—தொல்வரைய கோபுரமும் - பழமையான நிலைகளையுடைய கோபுரங்களாலும், நீள் மதிலும் - உயர்ந்த மதில்களாலும், சூழ்ந்து - சூழப்பட்டு, இலங்கும் - விளங்குகின்ற, மல் வரைய தோளான வளம் மா நகர் - மற்போர்த் தொழிலுக்கு வரம்பாகவுள்ள புயங்களையுடையவனை துரியோதனனது சிறப்புக்களையுடைய பெரிய அத்தினபுரியை, கண்டான் - பார்த்தான்; (எ - று.)

உபப்பிலாவியத்துக்கும் அத்தினபுரிக்கும் இடையிலுள்ள வழி இரண்டு நாளைப்பிரயாணத்துக்குமேல் உள்ளதென்று தெரிகிறது. ஐவகைநிலங்களுள், கடலும் கடல்சார்ந்த இடமுமாகிய நெய்தனிலம் உபப்பிலாவியத்துக்கும் அத்தினபுரிக்கும் இடையில் இல்லையாதலால், கூறாது விடப்பட்டது. இப்பாட்டில், 'சென்றருளி,' 'கண்டான்' என்ற வினைகளுக்கு, கீழ் 53 - ஆங்கவியில் வந்த 'மாயோன்' என்பதே எழுவாய். மல்வரையதோளான் என்ற தொடர்க்குக் கண்ணபிரானென்று பொருள்கொண்டால், இதுவே எழுவாயாம்.

கல்வரையும் என்பதற்குக் கற்களீக்கொண்டுள்ள என்று பொருள் கூறி, பர்லீக்கடுஞ்சுரத்துக்கு அடைமொழியாக்கி, நல்வரையும் - அழகிய மலீகளீயும் என்று உரைப்பாரு முளர். 'நல்வரையநீர் நாடு' என்ற பாடத்துக்கு, அழகிய எல்லீயையுடைய நீர்வளமுள்ள நாடென்க. காணிலந்தாயாத கடவுளர்க்கெல்லாம் தலீவனுன ஆதி மூர்த்தி இங்ஙனம் கல்வரை முதலியவற்றைக் கடத்தற்குக் காரணம், காரணமின்றியெழுந்த கருணீயே யாதலால் 'சென்றருளி' என்றார். மூன்றுமடியில், வரை - உயர்ந்த இடம். வரைய என்பதற்கு - மலீ போன்ற என்று உரைத்தால், 'தொல்வரைய என்பதை மதிலுக்கும் அடைமொழியாக்கலாம். தொன்மை - பலநாளாக அழிவுபடாமை. ()

வேறு.

56.—இக்கவியும், மேலீக்கவியும் - அந்நகரத்தை யடுத்துள்ள சோலீகளின் தன்மையைக் கூறும்.

மேவு செந்துகிர்த் திரளுமா மரகத விதழுங்
கோவை வெண்கதிர்த் தரளமு நிரைநிரை குயிற்றித்
தாவும் வெம்பரித் தேரினுன் றனக்கெதிர் சமைத்த
காவ ணங்களிற் றேன்றின பச்சிளங் கமுகம்.

(இ - ள்.) பசு இளங் கமுகம் - (அவ்வத்திருபுரத்தைச்சூழ்ந்த சோலீகளிலுள்ள) பசுநிறமுள்ள இளமையான பாக்குமரங்கள்,— மேவு செம் துகிர்த்திரளும் - (யாவராலும்) விரும்பப்படுகின்ற [மிக அழகிய] செந்நிறமான பவழங்களின் தொகுதிகளீயும், மா மரகதம் விதழும் - சிறந்த மரகத மென்னும் பச்சையிரத்தினங்களின் வகைகளீயும், கோவை வெள்கதிர் தரளமும் - வடமாக அமைந்த வெண்மையான ஒளியையுடைய முத்துக்களீயும், நிரை நிரை குயிற்றி-வரிசை வரிசையாகப் பதித்து, தாவும் வெம் பரி தேரினுன் தனக்கு எதிர் சமைத்த - தாவிப்பாய்கின்ற விரைவையுடைய குதிரைகளீப் பூட்டிய தேரின்மீது வருகிற கண்ணபிரானுக்கு எதிரிலே (அலங்கார்மாக) அமைத்து வைக்கப்பட்ட, கரவணங்களின் - பந்தல்கள்போல, தோன்றின - விளங்கிக் காணப்பட்டன; (எ - று.)

நகரவருணீன முதலியன - பெருங்காப்பிய விலக்கணங்களின் உறுப்பாம்.

உவமையணி. பாக்குமரத்திலுள்ள பழுத்த குலீகளுக்குப் பவழத்திரளும், பச்சைக் குலீகள் பசிய இலீகள் முதலியவற்றிற்கு மரகதவிதழும், விரிந்து தொங்கும் வெள்ளியபாலீகளுக்கு முத்துக் கோவையும் உவமையாம். இடைவிடாது மேலடர்ந்து இரவியின் கதிர்கள் நடுவில் நுழைய இடங்கொடாது நிழல்செய்தலால், பாக்கு மரச்சோலீகள் பந்தல்போன்றன. செயற்கைப் பந்தலில் இரத்தினங்களீ அமைத்தல், செல்வமிக்கோர்க்கு உரியதாம். சிறந்த அரசர் தமது இடத்துக்கு வருகையில் அவர்க்குப் பிற அரசர் உபசாரஞ்செய்யும் முறைப்படி கண்ணன் வருகையில் துரியோத

னன் அவனுக்கு உபசாரமாக அமைத்துவைத்த பந்தல் போன்றன கமுகம் என வருணித்தவாறு. மேவு - பொருந்திய என்றுமாம். குயிற்றுதல் - அமையச்செய்தல். நிரை நிரை - அடுக்கு, பன்மை பற்றியது. தாவும் வெம்பரித் தேரினன் தனக்கெதிர் என்பதற்கு - சூரியனுக்கு எதிராகவென்று உரைப்பாரு முளர். அடுத்தகவி களில் "உம்பர்நாயகன் வரவு கண்டு" என்றும், "திருவின் கணவ னுக்கெதிர் காட்டும்" என்றும், "நடந்தநாயகன்" என்றும் வருவன வற்றோடு இயையாவாதலால், அவ்வுரை சிறவாதாம். கமுகம் - க்ரமுக மென்பதன் திரிபு.

இதுமுதல் நாற்பத்துநான்கு கவிகள் பெரும்பாலும் முதல் சீரும் ஐந்தாஞ் சீரும் மாச்சீர்களும், மற்றைமூன்றும் விளச்சீர்களு மாகிய நெடிலடிநான்கு கொண்ட கலிநிலைத்துறைகள்; விருத்தக் கவித்துறை யெனவும், காப்பியக்கலித்துறையெனவும் படுபவை இவையே. (116)

57. வம்புலாமகில்சந்தனம்வருக்கைமாகந்தஞ்
சம்பகந்தமாலம்பலதிசைதொறுந்தயங்க
உம்பர்நாயகன்வரவுகண்டுளங்களிகூர்ந்து
தும்பிபாடினதோகைநின்றுடினசோலை.

(இ - ள்.) சோலை - (அங்ஙகரத்தையடுத்த) சோலைகளிலே, வம்பு உலாம்-வாசனை வீசுகின்ற, அகில் - அகில்மரங்களும், சந்தனம் - சந் தனமரங்களும், வருக்கை - பலாமரங்களும், மாகந்தம் - தேமாமரங்க ளும், சம்பகம் - சண்பக மரங்களும், தமாலம் - பச்சிலைமரங்களும், பல திசைதொறும் - பலதிக்குக்களிலும், தயங்க-அசைந்து விளங்கா நிற்க, உம்பர் நாயகன் வரவு கண்டு உளம் களிகூர்ந்து - தேவாதி தேவனுன கண்ணபிரானது வருகையைப் பார்த்து மனம் களிப்பு மிகுந்து, தும்பிபாடின - வண்டுகள் பாடினவாக, தோகைநின்று ஆடின-மயில்கள் நிலைநின்று கூத்தாடின; (எ - று.)

உயர்திணையும் அஃறிணையுமாகிய் எல்லாப்பிராணிகளின் மனத் திலும் எம்பெருமான் எழுந்தருளியுள்ளவனுதலால், அவன்வருகை யைக் கண்டு வண்டுகளும் மயில்களும் மகிழ்ச்சிகூர்வனவாயின. இனி, மூன்றுமடியை ஏதுத்தற்குறிப்பேற்றமாக்கி, சோலையின் இயற்கையைக் கற்பனைமுகத்தாற் கூறியதாகவுங் கொள்ளலாம். 'வம்பு உலாம்' என்பதைச் சந்தனம் முதலியவற்றிற்குங் கூட்டுக. அகில்-சந்தனம்போல நறுமணமுடையதொரு மரவிசேடம்; சம்ப கம்-வண்டுஞ மலர்மரங்களில் ஒன்று. பலதிசை-பத்துத்திக்குக்கள். முதல் இரண்டடிகளில், வண்டுகள் பாட மயில்கள் ஆடுவதைக் கண்டுங் கேட்டுஞ சிரக்கம்பஞ்செய்து ஆநந்திக்குஞ் சனங்களாக மரங்களைக் கற்பித்த தென்னலாம். உம்பரென்னும் மேலிடத்தின் பெயர், அங்குள்ள தேவர்க்கு இடவாகுபெயர். உம்பரென்பதில், உக ரச்சுட்டு மேலிடத்தை யுணர்த்திற்று; இதன் எதிர்மொழி - இம்பர்; இவ்விடம். தோகை-சினையாகுபெயர். (117)

58.—இதுமுதற் பதினெருகவிகளில் அத்தினபுரியின் அமைதி வருணிக்கப்படுகிறது. இது - அந்நகரத்து நீர்நிலைகளின் வருணனை.

அணிகொளத்தினபுரியெனுமணங்குசெந்திருவின்
கணவனுக்கெதிர்காட்டுநீராசனங்கடுப்ப
மணமிகுத்தசெந்தாமரைமலருடன்சிறந்த
புணரியிற்பெரும்புனலையுங்கொள்வனபொய்கை.

(இ - ள்.) அணிகொள் - அழகைக்கொண்ட, அத்தினபுரி எனும் அணங்கு - அஸ்தினாபுரியென்னும் பெண், செம் திருவின் கணவனுக்கு-சிவந்த நிறமுடைய திருமகளது கொழுநனை கிருஷ்ணமூர்த்திக்கு, எதிர் காட்டும்-எதிரிலே காண்பிக்கிற, நீராசனம் - மங்களவாலத்தியை, கடுப்ப-ஒடுக்கும்படி,—பொய்கை-(அந்நகரத்திலுள்ள)தடாகங்கள்,—மணம் மிகுத்த செம் தாமரை மலருடன்-வாசனையை மிகுவிக்கிற செந்தாமரை மலர்களுடனே, சிறந்த புணரியின் பெரும் புனலையும் கொள்வன - சிறந்த கடல்களைபோல மிக்க நீரையும் (தம் மிடத்தே) கொண்டுள்ளன; (எ-று.)

'கொள்வன' என்பதைப் பெயராகக்கொண்டு, பொய்கைக்கு அடைமொழியாக்கிவிட்டு, 'சிறந்த' என்பதை முற்றுருக்கியுரைப்பினும் அமையும். ஒரு பெரிய பாத்திரத்தில் மஞ்சள் நீரைவார்த்து அதன் நடுவில் திருவிளக்கேற்றிவைத்து மங்களகரமாகப் பெண்கள் விசேஷ காலங்களில் ஒருவர்க்கு ஆலத்தி யெடுத்தல், மரபு. அங்ஙனம், பொய்கை-ஆலத்தி தட்டையும், பொய்கையில் மிக்க நீர் - அவ்வாலத்திநீரையும், அந்நீரிடையிற் பூத்த செந்தாமரை மலர்-அவ்வாலத்தி நீர் நடுவில் ஏற்றிய தீபத்தையும், இப்படிப்பட்ட பொய்கையையுடைய அத்தினபுரி-கண்ணன்வருகையில் அவ்வாலத்தியையேந்தும் ஒரு மங்கையையும் போலுமென வருணிக்கப் பட்டவாறு; தற்குறிப் பேற்றவணி. 'புரி' என்பது வடமொழியிற் பெண்பாற் சொல்லாதலால், அதனை மகளாகக் கூறியது மிகப்பொருந்தும். பெண்ணுக்கு ஏற்ப அணிகொள் என்பதற்கு - ஆபரணங்களைத்தரித்த வென்றும் உரைக்கலாம்.

சந்திர குலத்தில் ஹஸ்தியென்று ஓரரசன்; அவனுற் சீர்திருத்தப்பட்டமை பற்றியும், யானைச் சேனைகளை மிகுதியாகவுடைமை பற்றியும், 'ஹஸ்தினாபுரி' என்று பெயர்; அது 'அத்தினபுரி' என விகாரப்பட்டது. நீராஜநம் - கண்ணைச்சில கழித்தற்கு எடுக்கப் படுவது. கடுப்ப - தற்குறிப்பேற்ற வுருபு. புணரி - (நதிகளோடு) புணர்வதெனக் காரணப்பெயர்; புணர்தல் - சேர்தல்; ஆறுகளாகிய பெண்களுக்குச் சேருமிடமாகிய கடலைக் கணவனைக் கூறுதல், கவி மரபு; இதனை 'நதிபதி' என்னுங் கடலின் வடமொழிப் பெயராலும் அறிக. புணரியிற் பெரும் புனல் - கடலினும் மிக்க நீர் என்றல், சற்றே-உயர்வுநவிற்சியணியாம். (118)

59.—அந்நகரத்து அகழியின் வருணனை.

நடந்தநாயகன்கோலமாய்வேலைசூழ்ஞாலம்
இடந்தநாளிடையதுவழியாகவந்தெழுந்து
படர்ந்தபாதலகங்கையப்படர்மதில்சூழ்ந்து
கிடந்ததாமெனச்சிறந்ததுதாழ்புனற்கிடங்கு.

(இ - ள்.) நடந்த - (அத்தினாபுரிக்கு இப்பொழுது பாண்டவ தூதனாக எளிதில்) எழுந்தருளிய, நாயகன்-(யாவர்க்கும்) தலைவனான கண்ணன், கோலம் ஆய் - (முன்பு) வராகாவதாரமூர்த்தியாய், வேலை சூழ் ஞாலம் - கடல் சூழ்ந்த பூமியை, இடந்த நாளிடை - (கோட்டால்) குத்தியெடுத்துவந்த காலத்திலே, அதுவழி ஆக - அக்கோடு குத்திப் பிளந்த பூமியின் துளையின்வழியாக, வந்து எழுந்து படர்ந்த - புறப்பட்டுமேலெழுந்து (பூமியின்மீது) பரவிய, பாதல கங்கை - பாதாள கங்கா நதியானது, படர் அமதில் சூழ்ந்து கிடந்தது ஆம் - பரந்த அந்த மதிலை வளைந்திருந்ததாம், என - என்று சொல்லுமபடி, தாழ் புனல் கிடங்கு - ஆழ்ந்த நீரையுடைய அவ்வகழி, சிறந்தது - சிறப்புப்பெற்றது; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. அவ்வகழி மிகவும் ஆழ்ந்து தெளிவாகவும் இனிதாகவுமுள்ள நீரை யுடைமையின், பாதலகங்கையை ஒப்புமை எடுத்துக் காட்டினார். (மேலுலகத்திலுள்ள கங்கைக்குப் போகவதி யென்று பெயர்; அதனை, "ஓதப்புனற்பொன்னிநன்னீ ரரங்க ருலகளந்த பாதத்துநீர் விண்படிபில மூன்றிலும் பால்புரைவெண், சீதத்தரங்க மந்தாகினியாகிச் செழுங் கங்கையாய், மேதக்க போகவதி யாகி நாளும் விழுகின்றதே" என்ற திருவரங்கத்துமாலையினாலும் அறிக.) திருமாலின் அவதாரமாகிய வராகமூர்த்தி பூமியைக் கோடு கொண்டு குத்தியெடுத்தபோது பூமியிலே உண்டான துளையின் வழி யாய்ப் பாதாளகங்கை பூமிக்கு எழுந்துவந்து இந்நகரத்து மதிலைச் சூழ்ந்தாற் போன்றது, ஆழ்ந்த அகழியில் நிறைந்துள்ள தெள்ளிய இனிய நன்னீரென்பது கருத்து. (119)

60.—அந்நகரத்து மதில்களின் வருணனை.

அடிநிலத்திலேபடிவனவிடிமுகிலணத்து
முடிநிலத்தினுக்குடுபதத்தினுமுடிவில்லை
நெடியசக்கரப்பொருப்பையுநிகரிலாவிதற்கோர்
படிவகுத்ததாமெனும்படிபரந்ததுபுரிசை.

(இ - ள்.) இடி முகில் அணைத்தும் - இடியிடிக்கின்ற மேகங்க ளெல்லாம், அடி நிலத்திலே படிவன - (அந்நகரத்து மதிலின்) அடிப் புறத்திலே வந்து படிவனவாம்; முடி நிலத்தினுக்கு - (அம்மதிலின்) சிகரத்தினிடத்துக்கு, உடு பதத்தினும்-நக்ஷத்திர மண்டலத்திலும், முடிவு இல்லை - முடிதலில்லையாம்; (இங்ஙனம் மேக மண்டலத்தை யும், நக்ஷத்திர லோகத்தையும் மிகக் கடந்து), நெடிய சக்கரப் பொருப் பையும் நிகர் இலா இதற்கு ஓர் படி வகுத்தது ஆம் எனும்படி - (எல்லா மலைகளினும்) உயர்ந்த சக்கரவாள மலையையும் ஒப்பில்லாத

இம்மதிலுக்கு ஒருவாறு உவமையாக அமைக்கப்பட்டதாமென்று சொல்லும்படி, புரிசை - மதில், பரந்தது - பரவியுள்ளது; (எ-று.)

முன்னிரண்டடிகளில் தொடர்புயர்வுநவிற்சியணியும், பின்னிரண்டடிகளில் தற்குறிப்பேற்றவணியுமாக வேறுபாடுதோன்ற விரவிவந்த சேர்வையணி. சக்கரவாளமலை - பூமியைச் சூழ்ந்த கடலைச் சுற்றிலும் கோட்டை மதில்போல வகுத்திருப்பதாரு மலை; சக்கரம்போல வட்டமாக இருத்தலால், சக்கரவாளமென்று பெயர். (120)

61.—அந்நகரத்துக் கொடிச்சீலைகளின் வருணனை.

பகலினுங்கடும்பரிதிதன்கதிர்பரப்பாமல்
இகலியெங்கணுமெறிந்துகால்பொருதலினேத்திப்
புகலுகின்றமந்தாகினித்தரங்கமேபோல
அகல்விசும்பிடைமிடைவனநெடுங்கொடியாடை.

(இ - ள்.) நெடு - நீண்ட, கொடி ஆடை - கொடிகளின் சீலைகள், —கடும்பரிதி பகலினும் தன் கதிர் பரப்பாமல் - வெப்பத்தையுடைய சூரியன் மத்தியான காலத்திலும் தனது கிரணங்களை வீசாதிருக்கும் படி, இகலி எங்கணும் கால் எறிந்து பொருதலின் - (அவனோடு) பகைத்து எல்லா விடங்களிலும் காற்று வீசி மோதுதலினால்,— ஏத்தி புகலுகின்ற மந்தாகினி தரங்கமே போல - (யாவராலும்) புகழ்ந்து கூறப்படுகின்ற தேவகங்கா நதியினது அலைகள் போலவே, அகல் விசும்பிடை மிடைவன - இடம் பரந்த ஆகாயத்தில் நெருங்குவன; (எ - று.)

ஆகாயத்தில் மிக வுயரத்தில் நெருங்கி அசைந்து சூரிய கிரணங்களையும் உட்புகவொண்ணாதபடி மறைத்து விளங்குகிற வெண்மையான கொடிச் சீலைகள் வெண்ணிறமான ஆகாசகங்காநதியின் அசைகின்ற குளிர்ந்த அலைகளை யொக்குமென்பதாம்: உவமையணி. காற்றிலே கொடிச் சீலைகள் அசைவதைச் சூரியனிடத்துப் பகையாற் பகலினும் கதிர் பரப்பாமல் மறைப்பதாகக் குறித்தது, தற்குறிப்பேற்றவணி. விசும்பிடை மிடைவன நெடுங் கொடியாடை - பிராசமென்னுஞ் சொல்லணி. ஒவ்வொரு நிழலும் அவ்வப்பொருளின் அடியில் தங்குதற்கு உரிய காலமான நடுப்பகலிலும் நிழல் செய்யும்படி மிகப்பல கொடிகள் நெருங்கி நீண்டு உள்ளன வென்க.

பகலினும், உம் - அப்போது நிழல் தருதலின் அருமையை விளக்குதலால், உயர்வுசிறப்பு; இதனை எச்சவும்மையாக்குதல் சிறப்பின்றும். ஆகாச கங்கைக்கு மந்தாகினி யென்றுபெயர். கொடியாடை - த்வஜபடம். "கங்கை யென்ற வாசகத்தாலே கடுவினை களைந்திடுகிற்கும்", "எழுமையும் கூடி மீண்டியபாவ மிறைப்பொழு தளவினி லெல்லாங், கழுவிடும் பெருமைக்கங்கை" என்ற பெரியார் பாசுரங்களாலும், ஏத்திப்புகலப்படும் மந்தாகினியின் மகிமையை அறிக. அணியணியாக வீசியடித்தலால், கொடிநிரைக்கு அலை வரிசை உவமையாம். (121)

62.—அந்நகரத்து மாடமாளிகைகளின் வருணனை.

புயங்கபூமியோபுரந்தரற்கமைத்தபொன்னுலகோ
தயங்குசெல்வநீடளகையோநிகரென்னுந்தரத்த
இயங்குகார்முகில்வரையினின்றெழுவனபோல
வயங்குகாரகினறும்புகையுயிர்ப்பனமாடம்.

(இ - ள்.) வரையினின்று எழுவன - மலைகளினின்று மேலெழுவனவான, இயங்கு கார் முகில் - (எப்பொழுதுஞ்) சஞ்சரிக்குந் தன்மையுள்ள கரிய நீர்கொண்டமேகங்களோ, போல - ஒக்கும்படி, வயங்கு கார் அகில் நறும்புகை உயிர்ப்பன - விளங்குகின்ற கருமையான அகிற்கட்டைகளின் சுகந்தமுள்ள புகையை மேலெழுப்பப் பெற்ற வையான, மாடம் - (அந்நகரத்து) உபரிகை வீடுகள்,—'புயங்க பூமியோ - நாகலோகமோ? புரந்தரற்கு அமைத்த பொன் உலகோ - இந்திரனுக்காகப் படைக்கப்பட்ட சுவர்ணமயமான சுவர்க்கலோகமோ? தயங்கு செல்வம் நீடு அளகையோ - (எல்லாவற்றினுஞ்) சிறந்து விளங்குகிற செல்வப் பொருள்மிக்க (குபேரனது) அளகாபுரியோ? நிகர் - (இவ்வீடுகளுக்கு) ஒப்பு,' எனும் - என்று கருதத் தக்க, தரத்த - தன்மையையுடையன; (எ - று.)

முன்னிரண்டடி - ஐயநிலையுவமையணியும், பின்னிரண்டடி - உவமையணியுமாம். புயங்கம் - மார்பினுல் ஊர்ந்து செல்வது எனப் பாம்புக்குக் காரணப்பெயர். பாதாளலோகத்திலுள்ள நாக ஜாதியாரது இராசதானியான போகவதியென்னும் நகரம், அழகு செல்வம் ஆகியவற்றில் மிகச்சிறந்ததாம். தேவலோகத்திலுள்ள இந்திரனது இராசதானிக்கு அமராவதியென்பது பெயர். செல்வம்-நவநிதிகள். தரம் - தகுதி. தரத்த - பலவின்பாற் குறிப்புவினை முற்று. மலை - மாடத்துக்கும், காளமேகம் - புகைக்கும் உவமை. கார்ப்புகையென்றும் இயைக்கலாம். 'காழகில்' என்ற பாடத்துக்கு வைரம் பற்றிய அகிலென்க. 'தரத்தது' என்ற பாடத்துக்கு மாடங்கள் இங்ஙனம் உள்ளனவாதலால், நகரம் புயங்கபூமி முதலியவற்றுள் எதனையொக்குமோவென்று ஐயமுறத்தக்கதென்க. அகிற் புகை - இடத்துக்கும் கூந்தலுக்கும் ஆடையாபரணங்கட்கும் நறுமண மூட்டுதற்கும இடுவது. (122)

63.—அந்நகரத்து இராச வீதிகளின் இயல்பு.

மன்னர்வேழமுஞ்சேனையுமெதிரெதிர்மயங்கப்
பின்னுமுன்னுமெம்மருங்கினும்பெயரிடம்பெருமற்
றுன்னிநின்றவரேகுமினேகுமினென்னும்
என்னுமோசையேயுள்ளனவீதிகளெல்லாம்.

(இ - ள்.) வீதிகள் எல்லாம் - (அந்நகரத்து) நெடுந்தெருக்கள் தோறும்,—மன்னர் - அரசர்களது, வேழமும் - யானைகளும், சேனையும் - மற்றைச் சேனைகளும், எதிர் எதிர் மயங்க-(ஒன்றோடொன்று) எதிரெதிரில் நெருங்கிக்கலத்தலால், பின்னும் முன்னும் எம்மருங்கினும் பெயர் இடம் பெருமல் - பின்பக்கத்திலும் முன்பக்கத்திலும்

மற்றும் எல்லாப் பக்கங்களிலும் இடம்விட்டுப் புடைபெயர்தற்கு உரிய இடத்தைப் பெருமையால், துன்னி நின்றவர் ஏகுமின் ஏகுமின் என்னும் ஓசையே - நெருங்கி நின்றவர்கள் 'போங்கள் போங்கள்' என்று (பிறரைநோக்கிப்) பலகாற்சொல்லுகிற ஒலிகளே, உள்ளன-நிறைந்துள்ளன; (எ-று.)

மிக்க நெருக்கத்தால் மன்னவர்களின் நாற்படைகளும் போக்கிட மில்லாமல் ஒன்றோடொன்று நிலைதடுமாறு மென்க. "தோகையர் குழாமுமைந்தர் சும்மையுந் துவன்றியெங்கும், ஏகுமினேகு மென்றி டையிடை நிற்றலல்லாற், போகிலமீளகில்லா பொன்னகர் வீதியெல் லாம்" என்ற கம்பராமாயணம் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. மன்னர் வேழம் என்பதற்கு - அரசர்கள் ஏறும் யானைகளென்று உரைத்து, சேனை - நால்வகைப்படை யென்றுங் கொள்ளலாம். அடுக்குகள் - விரைவும், பன்மையுங் குறிக்கும். ஒரே அடியில், 'பின்னும் முன்னும்' என மாறுபட்ட சொற்கள் வந்தது - தொடைமுரண். (123)

64.—இது-அந்நகரத்துக் கடைத்தெருவின் வருணனை.

வரையெலாம்பலவனமெலாங்கடலெலாம்வகுத்த
தரையெலாம்படுபொருளெலாந்தனித்தனிகுவித்த
நிரையெலாங்கவராவணநீர்மையைப்புலவோர்
உரையெலாந்தொடுத்துரைப்பினுமுவமைவேறுளதோ.

(இ - ள்.) வரை எலாம்-எல்லாமலைகளிலும், பல வனம் எலாம் - பலவகைப்பட்ட எல்லாக்காடுகளிலும், கடல் எலாம் - எல்லாக் கடல் களிலும், வகுத்த தரை எலாம் - (அக்கடல்) சூழ்ந்த எல்லாநாடுகளி லும், படு-உண்டாகிற, பொருள் எலாம் - எல்லாப்பொருள்களையும், தனித்தனி குவித்த - வெவ்வேறுகக் குவித்துவைத்துள்ள, நிரை எலாம் - வரிசைகளையெல்லாம், கவர் - (தன்னிடத்திலே) கொண் டுள்ள, ஆவணம் - கடைவீதியினது, நீர்மையை - தன்மையை, புலவோர்-புலவர்கள், உரை எலாம் தொடுத்து உரைப்பினும்-(தங்கள்) சொற்களையெல்லாம் பூனைந்து வருணித்துச் சொல்லத் தொடங்கி னாலும், உவமை வேறு உளதோ - (அக்கடைத்தெருவிற்கு எடுத்துச் சொல்லத்தக்க) உபமானப்பொருள் வேறு (உலகத்தில்) உள்ளதோ? [இல்லையென்றபடி]; (எ-று.)

எனவே, அதற்கு அதுவே உவமையா மென்றவாறு. அதிச யோக்தி முதலிய பூனைந்துரைவகையாற் கற்பித்துக்கூறினுற் கூற லாமே யன்றி, பொருளொப்புமை யெடுத்துச்சொல்லக்கிடையாதென் பதாம். மலைபடு பொருள்கள் - மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம் முதலியன. காடுபடு பொருள்கள் - இருல், தேன், அரக்கு, மயிற்பீலி, காவி முதலியன. கடல்படுபொருள்கள் - உப்பு, முத்து, பவளம், சங்கு, ஓக்கோலை முதலியன. நாடுபடு பொருள்கள் - செந் நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர் முதலியன. பல என்பதைப் பிறவற்றிற்கும் கூட்டலாம். இனி, பலவனம் என வட சொற்றொடராக எடுத்து, பயன்களைத்தரும் வனமென்றுங் கொள்ள லாம். தரை - (பொருள்களைத்) தரிப்பது. ஆவணம், உவமை - ஆப

ரணம், உபமா என்னும் வடசொற்களின் திரிபுகள். புலவர் - புல வோர் என ரகரவீற்றயல் அகரம் ஓவாயிற்று. (124)

65.—இது - அந்நகரத்துச் சதுரங்கசேனைகளின் தன்மை.

விரவுகான்மலரினும்பலவீரரின்விதங்கள்
பரவைவெண்மணலினும்பலபுரவியின்பந்தி
இரவில்வானமீனினும்பலயாஞையினீட்டம்
நிரைகொள்கார்த்துளியினும்பலதேரணிநிலையே.

(இ - ள்.) (அந்நகரத்தில்), வீரரின் விதங்கள் - வீரர்களது பகுப்புக்கள், கான் விரவு மலரினும் பல - காட்டிற்பொருந்திய பூக் களின் தொகையினும் மிகப்பலவாம்: புரவியின் பந்தி - குதிரை களின் வரிசைகள், பரவை வெள் மணலினும் பல - கடலின் வெள்ளிய மணல்களின் தொகையினும் மிகப்பலவாம்; யாஞையின் ஈட்டம் - யாஞைகளின் கூட்டங்கள், இரவில் வானம் மீனினும் பல - இராத்திரி காலத்தில் ஆகாயத்தில் (விளங்குகிற) நட்சத்திரங்களின் தொகை யினும் மிகப்பலவாம்; தேர் அணி நிலையே - இரதங்களின் அழகிய வரிசைகள், நிரை கொள் கார் துளியினும் பல - கூட்டத்தைக் கொண்ட மேகங்களின் மழைநீர்த்துளிகளினும் மிகப்பலவாம்;(எ-று.)

எனவே, நால்வகைப்படையும் அங்கு வரம்பிகந்தன என்பதாம். ரதகஜதுரகபதாதி என்பவற்றை எதிர்நிரனிறைபடக் கூறினர். முதல்வாக்கியத்தில் வீரரின்விதங்கள் என்றதில், காலாள்வீரர் மாத்திரமே யன்றி, யாஞை தேர் குதிரைகளில் ஏறும் வீரரும் அடங் குவர். ஆகாயத்தில் மின்னுதல்பற்றி, நட்சத்திரங்களுக்கு வான மீனெனப்பெயர்; மின்னுதல் - விளங்குதல், பள்பளத்தல். மின்னு வது, மீன்; விஞைமுதற்பொருள்விகுதி புணர்ந்து கெட்டுப் பகுதி முதல் நீண்ட காரணப்பெயர். இனி, கரியதாய் அளவின்றிப் பரந்த வானமாகிய கடலிற்சஞ்சரிக்கும் மீன்கள்போல விளங்குவன என்ற காரணமுங் கூறலாம். (125)

66.—இது-அந்நகரத்து மாளிகைகளைப் பற்றியது.

ஆசிலாமறையந்தணராலயமொருபான்
மாசிலாமுடிமன்னவர்மாளிகையொருபாற்
காசிலாமதியமைச்சர்தங்கடிமனையொருபாற்
பேசிலாவளவணிகர்தம்பேரிடமொருபால்.

(இ - ள்.) (அந்நகரத்து இராசவீதியிலே), ஒரு பால் - ஒரு பக்கத்தில், ஆசு இலா மறை அந்தணர் ஆலயம் - குற்றமில்லாத வேதங்களையுணர்ந்த பிராமணர்களது கிருகங்களும்,—ஒரு பால் - ஒருபக்கத்தில், மாசு இலா முடிமன்னவர் மாளிகை - குற்றமில்லாத கிரீடத்தையுடைய அரசகுலத்தாரது கிருகங்களும்,—ஒரு பால் - ஒரு பக்கத்தில், காசு இலா மதி அமைச்சர்தம் கடிமனை - குற்றமில்லாத அறிவையுடைய மந்திரிகளது சிறப்பையுடைய கிருகங்களும்;— ஒரு பால்-ஒருபக்கத்தில், பேசு இலா வளம் வணிகர் தம்பேர் இடம் -

(வருணித்துச்) சொல்லுதற்கு அரிய செல்வத்தையுடைய வைசியர் களது பெரிய இருகங்களும், (உள்ளன); (எ - று.)

வினை வருவிக்க. வீடு என்னும் ஒரு பொருளைத்தரும் ஆலயம், மாளிகை, மனை, இடம் என்ற நான்கு சொற்கள், இக்கவியில் வந்தது - பொருட்பின்வருநிலையணி. 'ஆசிலா' முதலிய அடைமொழிகளை அந்தணர் முதலியோர்க்குக் கூட்டாமல், ஆலயம் முதலியவற்றோடு இயைப்பினும் அமையும். பிராமணர் பூதேவராதலால், அவரது வீடு தேவகிருகத்துக்குரிய 'ஆலயம்' என்ற பெயராற் கூறப்பட்டது, அமைச்சர் அரசரது அருகிலிருந்து அறிவு கூறுபவரென்று பொருள் படும்; 'உழையிருந்தார்,' 'உழையர்' என்பன இப்பொருள்கொண்ட வையே. கடி - சிறப்பு, விளக்கம், காவல், மணம் முதலிய பலபொருள் களைக் குறிக்கும் உரிச்சொல். இப்பாட்டில், அடிதோறும் 'ஒருபால்' என இறுதியில் ஒன்றி வந்தது - இயைபுத்தொடை; சொற்பொருட் பின்வருநிலையணி. (126)

67.—இது - அந்நகரத்துப் பலவகையொலிகளைக் கூறுகின்றது.

மங்கலந்திகழ்மனையெலாம்வலம்புரியோசை
திங்கடோய்நெடுந்தலமெலாஞ்செழுஞ்சிலம்போசை
அங்கண்மாநகரனைத்துமும்முரசதிரோசை
எங்கணுங்கடவுளரிடந்தொறுமுழவோசை.

(இ - ள்.) மங்கலம் திகழ் மனை எலாம் - சுபகாரியங்கள் விளங்கப் பெற்ற வீடுகள்தோறும், வலம்புரி ஓசை - வலம்புரிச்சங்குகளின் ஒலிகளும்,—திங்கள் தோய் நெடுந் தலம் எலாம் - சந்திரனையளாவிய உயர்ந்த உபரிகையிடங்களிலெல்லாம், செழுஞ் சிலம்பு ஓசை - (மாதர் கள் காலிலணியும்) அழகிய சிலம்பென்னும் அணியின் ஒலிகளும்,— அம் கண் மாநகர் அனைத்தும் - அழகிய இடத்தையுடைய பெரிய அந்நகரம் முழுவதிலும், மும்முரசு அதிர் ஓசை - மூன்றுவகை முரச வாத்தியங்கள் ஒலிக்கிற ஒலிகளும்,—எங்கணும் கடவுளர் இடந் தொறும் - எவ்விடத்துமுள்ள தேவாலயங்களிலெல்லாம், முழ ஓசை- மத்தளங்களின் ஒலிகளும், (உள்ளன); (எ - று.)

இதற்கும் முடிக்குஞ்சொல் வருவிக்க. ஒவ்வோரிடத்தையும் வருணித்துக் கூறும்போது ஆங்காங்குப் பலவகை யோசைகள் உள் ளன வெனக்கூறுதல், கவிமரபு. இப்பாட்டில், ஒவ்வொரு அடியிலும் இறுதியில் ஓசையென வந்தது - அணியிலக்கணத்தில் சொற் பொருட்பின்வருநிலையும், யாப்பிலக்கணத்தில் இயைபுத்தொடையு மாம். மங்கலந்திகழ் என்பதற்கு - சாமரம் தீபம் முதலிய மங்கலப் பொருள்கள் விளங்கப்பெற்ற என்றுங் கொள்ளலாம். மும்முரசு - வெற்றிமுரசு, மங்கலமுரசு, கொடைமுரசு என்பன. கடவுளர் - (இவ் வுலக சம்பந்தத்தைக்) கடத்தலையுடையவர். முழ - முழா என்னுங் குறியதன் கீழ் ஆ, குறுகிற்று. மேல்மாடத்துக்கு 'சந்திரசாலை' என்று வடமொழியில் ஒருபெயர் உள்ளதுபற்றி, 'திங்கள்தோய் நெடுந்தலம்' என்றன ரென்னலாம். (127)

68.—துரியோதனனது அரண்மனையின் வருணனை.

முன்றிலின்கணின்றிடம்பெறுவரசர்மாமுடிகள்
ஒன்றொடொன்றறைந்தெற்றிமேலொளிர்பொறிசிதறிச்
சென்றுசென்றுறுதிசைதொறுந்திகழ்ந்ததுசெம்பொற்
குன்றெனும்படிகுருகுலநாயகன்கோயில்.

(இ - ள்.) முன்றிலின்கண் நின்று-வெளிமுற்றத்திலே நெருங்கி நின்று, இடம் பெறு - (உள்ளேசெல்லுதற்கும் அங்குவிசாலமாக நிற்றற்கும்) இடத்தைப்பெறுத, அரசர் - (புறநாட்டு) மன்னர்களது, மா முடிகள் - சிறந்த கிரீடங்கள், ஒன்றொடு ஒன்று அறைந்து எற்றி-ஒன்றோடொன்று பட்டுத்தாக்கியதனால், ஒளிர் பொறி மேல் சிதறி-விளங்குகின்ற பொற்பொடிகள் ஆகாயத்திலே சிதறி, (அதனால்), சென்று சென்று உறு திசைதொறும் - (அப்பொறிகள்) போய்ப் போய்ப்பொருந்துகிற திக்குகளிலெல்லாம், செம்பொன் குன்று எனும்படி - சிவந்த பொன்மயமான மேருமலை யென்னும்படி, குரு குலம் நாயகன் கோயில் - குருவம்சத்துப் பிறந்த தலைவனை துரி யோதனனது அரண்மனை, திகழ்ந்தது - விளங்கிற்று; (எ - று.)

மலைபோல மிகப்பெரியதான துரியோதனனது அரண்மனையின் வாயிலினின்று அரசர்கள் கிரீடங்களின் பொற்பொடிகள் சிதறி மேலெழுந்து பல திசைகளிற் பரவுதலால், அவ்வரண்மனைபொன்மலை யென்னும்படி இருந்தது என்பதாம். ஒளிர்பொறிசிதறி என்ப தற்கு - விளங்குகிற அனற்பொறிவீசுதற்கு ஒப்பான ஒளியை வீசு தலால் என்றலுமொன்று. இச்செய்யுள் - அரசர்களின் மிகுதியை விளக்கவந்த அதிசயோக்தி. மூன்றும் அடி - முற்றுமோனை. இடம் பெறுமைக்குக் காரணம் - அரசர்கள் அளவிறந்தவராதல்; அன்றி, அரண்மனையின் இடநெருக்கமன்று. கோயில் - ராஜகிருகம். (128)

69.—கண்ணன் அந்நகரத்துத் தென்புறத்துச் சோலையில் தங்குதல்.

என்றிசைக்குநல்லொளிநிமிரெழின்மணிமகுடக்
குன்றிசைக்கும்வண்கோபுரநீணகர்குறுகித்
தென்றிசைக்குளிர்செண்பகமலர்தொறுஞ்சிறைத்தேன்
நின்றிசைக்கும்வண்சோலைவாயமர்ந்தனனெடுமால்.

(இ - ள்.) என்று இசைக்கும் - என்று இவ்விதமாகச்சொல் லத்தக்க,—நல் ஒளி நிமிர்-சிறந்த ஒளிமிகுந்த, எழில் மணிமகுடம் - அழகிய இரத்தினங்களிழைப்பதித்த சிகரங்களையுடைய,குன்று இசைக் கும் - மலைகளையொத்த, வள்கோபுரம் - அழகிய கோபுரங்களையுடைய, நீள் நகர் - பெரிய அவ்வத்தினாபுரியை, நெடுமால் - பெருமைக்குண முடையவனான கண்ணபிரான்,—குறுகி - சமீபித்து, தென் திசை - (அந்நகரத்தின்) தெற்குப்பக்கத்தில்,—குளிர் செண்பகம் மலர் தொறும் சிறை தேன் நின்று இசைக்கும் வள் சோலைவாய்-குளிர்ந்த சண்பகப்பூக்களிலெல்லாம் இறகுகளையுடைய வண்டுகள் தங்கி

ஒலிக்கப்பெற்ற அழகியதொரு சோலையில், அமர்ந்தனன் - எழுந் தருளியிருந்தான்; (எ - று.) என்று இசைக்கும் நகர் என இயையும்.

இரண்டாமடியில், இசைக்கும் - உவமவுருபு. வண்டுணுமல ரார்கிய சண்பகத்தில் வண்டுகள் நின்று இசைக்கிறதாகக் கூறுதல் எங்ஙனம், பொருந்துமெனின், — வண்டுகள் சண்பகமலரிலுள்ள தேனைக் குடித்தால் இறந்துபடுமென்பதே யன்றி, மற்றைமலர்களிற் போலச் சாதாரணமாக அதனிடத்திலும் மொய்த்துச்சேர்வது அசம்பாவிதமன் றென்று, இங்ஙனம் வருமிடங்களி லெல்லாம் சமாதானங் கூறப்படும்; அன்றியும், மிகஉஷ்ணகரமான சண்பகமும் அந்நகரத்தின் வளத்தால் வண்டுமொய்க்கும்படி குளிர்ந்துள்ள தென்றுங் கூறலாம்; 'குளிர் செண்பகம்' என அடைமொழி கொடுத் துக் கூறியது, இதற்கு ஒக்கும். அல்லது, மிக்க மதுபானமயக்கத் தைத் தகாதவிடத்திற்சென்று சேர்தற்குங் காரண மென்னலாம். இனி, நின்று என்பதற்கு - செண்பகமலரிற் சேராது தடைப்பட்டு நின்று என்று உரைப்பினும் அமையும். செண்பகம் - சம்பகமென் பதன் திரிபு. கோபுரத்துக்கு மகுடம்-கலசத்தோடுகூடிய மேலிடம். சோலையில் அமர்ந்தது, நெடுந்தூரம் வந்த இளைப்பு ஆறுதற் பொருட் டென்க; துரியோதனனது நோக்கத்தை நோக்குதற்குமாம். மூன்றுமடியில், தென்று இசை எனப்பதம்பிரித்து, தென்றற் காற்றுப் பொருந்துதலையுடைய என உரைப்பாருமுளர். இசைசெய்யு ளில் ஒவ்வோரடியிலும் முதலெழுத்து மாத்திரம் வேறுபட்டிருக்க, இரண்டு முதலிய சில எழுத்துக்கள் ஒன்றிநின்று பொருள் வேறு பட்டு வந்தது - திரிபு என்ற சொல்லணியாம். (129)

70.—கண்ணபிரான் சோலையில் தங்கியதைத் தூதுவர் துரியோதனனுக்கு அறிவித்தல்.

அன்றுதூதுகொண்டிலங்கைதீவிளைத்தவரைவர்க்
கின்றுதூதுவந்தெயிற்புறத்திறுத்தனரென்னத்
துன்றுதூதுவண்டினமுரறொடையலான்றனக்குச்
சென்றுதூதுவரியம்பினர்சேவடிவணங்கி.

(இ - ள்.) (அப்பொழுது), தூதுவர் - தூதர்கள்,—சென்று - (அரண்மனையிலுள்ள துரியோதனனிடம்) போய், சே அடி வணங்கி- (அவனது) சிவந்த பாதங்களைத் தொழுது, துன்று தூது வண்டு இனம் முரல் தொடையலான் தனக்கு - நெருங்கின தூதாகவிடப் பட்ட வண்டுகளின்கூட்டங்கள் ஒலிக்கப்பெற்ற (நஞ்சாவட்டைப்) பூமாலையையுடையவனான அத்துரியோதனனுக்கு,—'அன்று தூது கொண்டு இலங்கை தீ வினைத்தவர் - முன்பு [ஸ்ரீராமாவதாரஞ்செய்த அக்காலத்தில்] தூதனுகிய அநுமானால் (இராவணனது) லங்காபுரி யில் நெருப்புப்பற்றவைத்தருளியவரான இருமால், இன்று ஐவர்க்கு தூதுவந்து- இப்பொழுது பஞ்சபாண்டவர்களின்பொருட்டுத் (தாமே) தூதாகிவந்து, எயில் புறத்து இறுத்தனர் - (உனது நகரத்து) மதி லின் வெளியில் தங்கியுள்ளார்,' என்ன-என்று, இயம்பினர்-சொன் னார்கள்; (எ - று.)

தமது தூதுவனைக்கொண்டு இலங்கையை அழித்தவர் தாமே இப்பொழுது உனது நகரத்திற்குத் தூதாகவந்ததனால் உனது நகரத்திற்கு என்ன தீங்கு நேருமோ எனபது குறிப்பு. இராமதூதனுய்ச் சீதையைத்தேடிக் காணச்சென்ற அநுமான் அசோகவனத்தை அழித்தபின் இராவணனது ஏவலாளரால் வாலில் தீமூட்டப்பட்டு அதைக்கொண்டு இலங்காபுரியை எரித்தமை, மிகப்பிரசித்தம். இராமன், கிருஷ்ணன் என்ற இருவரும் திருமாலின் அவதாரமே யாதலால், 'இலங்கைதீவினைத்தவர் தூதுவந்து இறுத்தனர்' என அபேதமாகக் கூறப்பட்டது. 'அன்று தூதுகொண்டு இலங்கை தீவினைத்தவர் இன்று ஐவர்க்குத் தூதுவந்து எயிற்புறத்து இறுத்தனர்' என்ற தொடரால், திருமாலுக்கு இராமாவதாரத்தினும் கிருஷ்ணவதாரத்தில் மிக்குள்ள சௌலப்பியமும், அடியார்களிடத்து வாற்சலியமும் நன்கு விளங்கும். 'முன்னேர் தூது வானரத்தின் வாயின் மொழிந் தரக்கன், மன்னூர்தன்னை வாளியினன் மாள முனிந்தவனை, பின்னேர்தூ தாதிமன்னர்க்காகிப் பெருநிலத்தார், இன்னூர் தூதனென நின்றான்'' என்ற ஆழ்வாருளிச்செயலை நினைத்துச் செய்யப்பட்டது இச்செய்யு ளென்னலாம்.

விளைத்தவர், இறுத்தனர் - ஒருவரைக்கூறும் உயர்வுப்பன்மை. வண்டுகள், தமது காதலைத் தெரிவித்தற்பொருட்டு மகளிரால் தூது விடப்பட்டவை; ''சங்கங்கேய் செங்கைநல்லார்விடுத்தன சுரும்பின் சாலங், கொங்கெங்கே யெங்கேயென்று தனிக்கனிருடையுந்தாரான்'' எனக் கீழ் நிவாதகவசர் காலகேயர் வதைச்சருக்கத்தில் அருச்சுனனைக்கூறியதுங் காண்க. இனி, தூது வண்டு - தூதுவிடுதற்கு உரிய வண்டுமாம். தூதுவிடப்படுதற்குரிய இளி, மேகம், நாரை, அன்னம் முதலியவற்றுள் வண்டும் ஒன்றுதலால், 'தூதுவண்டு' எனப்பட்டது. துன்று வண்டு, முரல்தொடையல் - வினைத்தொகைகள். தூது என்ற சொல் ஒரே பொருளிற் பலமுறை வந்தது - சொற்பொருட்பின் வருநிலையணியாம். (130)

71.—துரியோதனனது கட்டளையால் நகரத்தை அலங்கரித்தல்.

தொல்லைநாயகன்வந்தனனென்றலுஞ்சுரும்பார்
மல்லன்மாலையானேவலான்மாநகர்மாக்கள்
எல்லைநீண்மதில்வட்டம்யோசனையெழுநூருஞ்
செல்வமாநகர்த்தெருவினையொப்பனைசெய்தார்.

(இ - ள்.) தொல்லை நாயகன் வந்தனன் என்றலும் - '(யாவர்க்கும்) ஆதிநாயகனுன கண்ணபிரான் எழுந்தருளினன்' என்று (தூதர்கள்) செய்தி கூறியவுடனே,—சுரும்பு ஆர்மல்லல் மாலையான் ஏவலால்-வண்டுகள் நிறைந்த அழகுள்ள பூமாலையையுடையவனன துரியோதனன் கட்டளையிட்டதனால்,—மா நகர் மாக்கள் - பெரிய அஸ்தினபுரியிலுள்ள சனங்கள்,—நீள்வட்டம் மதில் எல்லை ஏழு நூறு யோசனை ஆம் - நீண்டவளவாகச் சூழ்ந்துள்ள மதிலின் அளவு எழுநூறுயோசனை தூரமாகப்பெற்ற, செல்வம் மாநகர் -

செல்வங்களையுடைய பெரிய அவ்வத்தினபுரியின், தெருவினை - வீதிகளை, ஒப்பனை செய்தார் - அலங்காரம் செய்தார்கள்; (எ - று.)

கண்ணன் தனக்குப் படைத்துணையாகப்பலசேனைகளைக் கூட்டியனுப்பியருளிய உபகாரத்தைக்கருதியும், அரசர்க்குள் ஒருவர்க் கொருவர் செய்யவேண்டும் மரியாதைக்கிரமம் பற்றியும், துரியோதனன் இங்ஙனம் கண்ணனைக் கௌரவித்து உபசரிக்கக் கருதிக் கட்டளையிட்டான். 'தொல்லைநாயகன் வந்தனன் என்றலும்' என்றது - தொடர்ச்சியை விளக்கவந்த அநுவாதம்; கூறியது கூறலன்று; (அநுவாதம்-முன்பு சொன்னதை மீண்டும் ஒரு பயனை நோக்கிச் சொல்லுதல்; இது குற்றமன்று. கூறியது கூறல் - முன்பு சொன்னதை ஒருகாரணமுமின்றி மீண்டுஞ் சொல்லுதல்; இது - குற்றமாம்.) மல்லல் - வளப்பமுணர்த்தும் உரிச்சொல்; "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம். யோசனை, காதம் என்பன - ஒருபொருளன; அது - ஏழரைநாழிகை வழி; (நாற்காதத்தை யோசனையென்பது - ஐந்நூல் வழக்கு.) மற்றைத்தேவர்கட்குப் போல எம்பெருமானுக்கு நாயகத்தன்மை நடுவில் ஏறிட்டுக் கொண்டதன்று என்பார், 'தொல்லைநாயகன்' என்றார். (131)

72.—துரியோதனன் கண்ணனை யெதிர்கொள்ளச்செல்ல, சகுனி தடுத்தல்.

மின்னுமாமுகிற்பல்லியவிதங்கண்முன்முழங்க
மன்னர்மன்னவனெழுந்தனன்மாலெதிர்கொள்வான்
என்னைநீயவற்கெதிர்செல்வதென்றுதன்மருகன்
றன்னைவன்பொடுதகைந்தனன்கொடுமைகூர்சகுனி.

(இ - ள்.) மின்னும்-மின்னுகிற, மா முகில் - பெரிய மேகங்களின் முழக்கம்போல, பல் இயம் விதங்கள்-அநேகமான வாத்தியங்களின் வகைகள், முன்முழங்க - (தனக்கு) முன்னிடத்திலே மிகவொலிக்க,—மன்னர் மன்னவன் - அரசர்க்கரசனை துரியோதனன்,—மால் எதிர்கொள்வான் - கண்ணனை எதிர்கொண்டு உபசரித்தற் பொருட்டு, எழுந்தனன் - புறப்பட்டான்; (அப்பொழுது),—கொடுமை கூர் சகுனி - கொடுந்தன்மை மிக்க சகுனியானவன்,—அவற்கு நீ எதிர்செல்வது என்னை என்று - 'அவனுக்கு நீ எதிர்கொண்டு போவது என்ன காரியம்?' என்று கூறி, தன் மருகன் தன்னை - தனது மருமகனாகிய துரியோதனனை, வன்பொடு தகைந்தனன் - (எதிர் செல்ல வொட்டாது) வலியத் தடுத்துவிட்டான்; (எ - று.)

கொட்டுவன ஊதுவன முதலிய பலவகையும் அடங்க 'பல்லிய விதங்கள்' என்றார். மால் எதிர்கொள்வான்-உயர்திணையில் இரண்டனுருபு தொக்கது. முகில் - உவமத்தொகை. சகுனி - காந்தார தேசத்தரசன்; சுபலனென்னும் அரசனது புத்திரன்; திருதராட்டிரனது மனைவியாகிய காந்தாரியுடன்பிறந்தவன்; ஆதலால், துரியோதனதுதியர்க்கு மாமன்: சூதாடுதலில் மிக வல்லவன். இம்மை மறுமைகளில் எண்ணிறந்த நன்மைகளைத் தருதற்கு ஏற்ற கண்ணனை யெதிர்கொள்ளுதலைத் தடுத்த தீவினையுடைமை பற்றி, 'கொடுமை

கூர் சகுனி' என அவனைக் கவி வெறுத்துக் கூறினர். என்னை - எவனென்னும் வினாப்பெயர் இடைகுறைந்து 'என்' என நின்று ஐகாரச்சாரியை பெற்றது. (132)

73.—துரியோதனன் கண்ணனுக்கு இடமமைத்துச் சபையில் வீற்றிருத்தல்.

சீர்வலம்புரிதிகிரிசேர்செங்கையான்றனக்குக்
கார்வலம்புரிகோயிலுங்காட்சியுமமைத்துப்
போர்வலம்புரிநிருபருமிளைஞரும்போற்றத்
தார்வலம்புரியவனிருந்தனன்பொலந்தவிசின்.

(இ - ள்.) (சகுனி கூறியபடியே எதிர்கொள்ளுதலை யொழிந்த பின்பு),—வலம்புரி தாரவன் - நந்தியாவட்டமலர்மாலையையுடையவனாகிய துரியோதனன்,—சீர் வலம்புரி திகிரி சேர் செம் கையான் தனக்கு - சிறப்பையுடைய (பாஞ்சஜந்யமென்னும்) வலம்புரிச்சங்கமும் (சுதரிசனமென்னும்) சக்கரமும் பொருந்திய சிவந்த திருக்கைகளையுடையவனான கண்ணபிரானுக்கு, கார் வலம் புரி கோயிலும் காட்சியும் அமைத்து - மேகங்கள் சூழ்ந்து செல்லுதற்கு உரிய [மேகமண்டலம் வரையில் உயர்ந்த] ஒரு சிறந்த இருப்பிடத்தையும் (அதிற் பல) அலங்காரங்களையும் சித்தஞ் செய்து வைத்து,—போர் வலம்புரி நிருபரும் இளைஞரும் போற்ற - போரில் (தம் தமது) வெற்றியை விரும்புகின்ற (பல) அரசர்களும் தன் தம்பிமார்களும் (தன்னைப்) புகழ்ந்து வணங்க, பொலம் தவிசின் இருந்தனன் - பொன்மயமான சிங்காதனத்தில் வீற்றிருந்தான்; (எ - று.)

எம்பெருமானுக்கென்று அமைத்த இருப்பிடமாதலின், அதனை 'கோயில்' என்றது மிகப்பொருந்தும். காட்சி - காணுதற்கு உரிய அலங்காரத்திற்கு ஆகுபெயர். 'போர்வலம்புரி' என்ற அடைமொழியை இளைஞர்க்கும் கூட்டுக. ஈற்றடியில், வலம்புரி - நஞ்சாவட்டை. தார் வலம்புரியவன் - வலம்புரித்தாரவன் என விகுதி பிரித்துக் கூட்டுக. பொன் + தவிசு = பொலந்தவிசு; இப்புணர்ச்சி "பொன்னென்கிளவி யீறுகெட முறையின், முன்னர்த் தோன்றும் லகார மகாரம், செய்யுண்மருங்கிற் றொடரியலான" என்ற தொல் காப்பிய விதியா லமைந்தது; பிற்காலத்தார் நிகண்டுகளில் 'பொலம்' என ஒரு சொற் கொண்டுள்ளதனால், பொலம் கழல் என்று பிரித்து மகரவீற்றுப் புணர்ச்சியின்பாற் படுத்துதலுமுண்டு.

மேகத்திற்கும் கோயிலுக்கும் சம்பந்தமில்லாதிருக்கவும் சம்பந்தத்தைக் கற்பித்துக் கூறியதனால், 'கார்வலம்புரி கோயில்' என்றது-தொடர்புயர்வுநவிற்சியணி. இச்செய்யுளில் ஒவ்வோரடியிலும் முதலெழுத்துத் தவிர இரண்டு முதலிய சில எழுத்துக்கள் ஒன்றி நின்று பொருள் வேறுபட வந்தது திரிபு என்ற சொல்லணியாம். ()

74.—வீடுமன் முதலியோர் கண்ணனை எதிர்கொள்ளுதல்.

தொல்பகீரதிமைந்தனுந்துரோணனுஞ்சுதனும்
வில்விதூரனுங்கிருபனுமுதலியவேந்தர்

மல்குமூவிருபத்துநூருயிரமகிபர்
செல்வநாயகற்கியோசனையிரண்டெதிர்சென்ருர்.

(இ - ள்.) தொல் பகீரதி மைந்தனும் - பழமையாகிய கங்காபுத் திரனை பீஷ்மனும், துரோணனும்—, சுதனும் - (அவனது) மகனை அசுவத்தாமனும், வில் விதூரனும் - வில்வித்தையில் வல்ல விதுர னும், இருபனும்—, முதலிய - முதலான, வேந்தர்-அரசர்களும், மல்கு மூவிருபத்து நூருயிரம் மகிபர் - (மற்றும்) நெருங்கிய அறுபது லட்சம் அரசர்களும், செல்வம் நாயகற்கு - எல்லாச் செல்வங்களோயு முடைய தலைவனை கண்ணபிரானுக்கு, யோசனை இரண்டு எதிர் சென்ருர் - இரண்டுயோசனை தூரம் எதிர்கொண்டு போனுர்கள்;

அக்காலத்தில் வாழ்ந்துள்ள குருகுலத்து அரசர்களுள் வீடுமன் பெரியவனுதலின், 'தொல் பகீரதிமைந்தன்' எனப்பட்டான். இனி தொன்மையைப் பகீரதிக்கு அடைமொழியாக்கி, (திரிவிக்கிரமாவ தாரகாலம் தொடங்கித்) தொன்றுதொட்டுள்ள கங்கையென்றுங் கொள்ளலாம். பகீரதி - பாகீரதியென்னும் தத்திதாந்தநாமத்தின் குறுக்கல்; (சூரியகுலத்தரசனுகிய) பகீரதனுற் கொணரப்பட்ட தென்று பொருள்பெறும். ('சகரர்தம்பொருட் டருந்தவம் பெரும் பகல் தள்ளிப், பகிரதன் கொணர்ந்திடுதலாற் பகிரதியாகி" என்ருர் கம்பரும்.)

துரோணர் - துரோணகும்பத்தினின்று தோன்றியவர்; பரத்து வாச முனிவரது குமாரர்; கிருபாசாரியருடன் பிறந்தவளான கிருபி யின் கணவர்; அசுவத்தாமனது தந்தை; சகல சாஸ்திரங்களையும் தம் பிதாவினிடங் கற்றுப் படைத்தொழிலைப் பரசுராமரிடத்து ஏழு நாளிற் பயின்றவர்; துரியோதனுதியர்க்கும் பாண்டவர்க்கும் அஸ்திர சஸ்திரங்களைக் கற்பித்த ஆசிரியர். விதூரன் - விதுரனென்பதன் நீட்டல். 'வெற்றி விதுரன்கை வில்லிருக்க மேதினியின், மற்றவனை வெற்றிகொள்ளு மாறுண்டோ" என்னும்படி விதுரன் வில்வித்தை யிற் சிறந்தவனுதலால், 'வில்விதூரன்' என்ருர். கிருபர் - கௌதம முனிவரது பௌத்திரர்; சரத்வான் என்ற முனிவரது குமாரர்; துரோணர் மனைவியான கிருபிக்கு உடன்பிறந்தவர்; துரியோதனு தியர்க்கும் பாண்டவர்க்கும் முதல் வில்லாசிரியர்; நாணற் காட்டிற் பிறந்த இவரை, அங்கு வேட்டையாடவந்த சந்தனுமகாராசன்கண்டு கிருபையினுல் எடுத்து வளர்த்தமைபற்றி, இவர்க்கு இப்பெயர் வந்தது.

முதலிரண்டடியிற் கூறியவருள், வீடுமனும் விதுரனும் ஒழிந்த மூவரும் அந்தணராயினும், அவர்களை 'வேந்தர்' என்றது, அவர்கள் வீடுமன் திருதராட்டிரன் விதுரன் என்பவரது கருத்தின்படி அரசர்க்கு உரிய குடை கொடி முதலிய இராஜ சின்னங்களைப்பெற்று வாழ்ந்ததனுல்; (கீழ், வாரணவதச் சருக்கத்தில் "முனி நீ யையா விதற்குமுன்ன மின்றுமுதலா, வினி யிவ்வுலகுக்கரசா யெம்மி லொருவனுகிக், குனிவில்வலியா லமருங்கோடியென்று கொடுத்தான், பனிவெண்குடையு நிருபர்க்குரிய வரிசை பலவும்" என்றது கொண்டு

உணர்க.) இனி, தொல்காப்பியத்து மரபியலில் "அந்தணாளர்க்கு அரசுவரைவின்றே" என்ற சிறப்புவிதிபற்றி வேந்தரென்றதாகவும் கொள்ளலாம்.

மூவிருபத்து நூறுயிரம் மகிபர்-பண்புத்தொகைப் பன்மொழித் தொடர். மஹீபர்-பூமியைக் காப்பவர்; மஹீ-பூமி. இக்கவியில் 'அறு பது லட்சம் அரசர்', இரண்டுயோசனை தூரம், கீழ் 71-ஆங் கவியில் 'எழுநூறு யோசனை' என்பவற்றை அவ்வத்தொகையையே குறியா மல் மிகுதியை விளக்கும் அதிசயோக்தி யெனக் கருதுக. இம்மை மறுமை வீடு என்னும் மூன்று இடங்களிலும் யாவரும்பெறும் ஐசுவரியங்களெல்லாம் எம்பெருமானுடையவை யாதலால், 'செல்வ நாயகன்' என்றார்; 'செல்விநாயகன்' என்ற பாடத்துக்கு - செல்வத் துக்குத்தலைவியான திருமகளது கொழுநனென்க. நாயகற்கியோசனை - குற்றியலுகரம் யகரம் வர இகரமானதென்றுவது, யகரமுதல் வட மொழி இகரத்தை முன்பெற்றதென்றுவது கொள்க. (134)

75.—கண்ணன் விதுரனது மாளிகையினுட் செல்லுதல்.

வந்துவந்திருமருங்கினுமன்னவர்வணங்கப்
பைந்துழாய்முடிப்பரமனுங்கண்மலர்பரப்பி
அந்தமாநகர்புகுந்தபினரசனிற்புகாமற்
புந்திகூரருள்விதுரன்வாழ்வளமனைபுகுந்தான்.

(இ - ள்.) (இங்ஙனம்), மன்னவர் - அரசர்கள், இருமருங்கினும் - இரண்டு பக்கங்களிலும், வந்து வந்து - (எதிர்கொண்டு) மிகுதியாக வந்து, வணங்க-(கண்ணபிரானை) நமஸ்கரிக்க,—பைந் துழாய் முடி பரமனும் - பசிய திருத்துழாய்மாலையைச்சூடிய திருமுடியையுடைய (யாவரினுஞ்) சிறந்தவனான அக்கண்ணனும்,—கண் மலர் பரப்பி - (தனது) தாமரை மலர்போலுந் திருக் கண்களால் (அவர்களைக்) குளிரப் பார்த்தருளி,—அந்த மாநகர் புகுந்த பின்-அந்தப் பெரிய அத்தினாபுரியினுட் சென்ற பின்பு,—அரசன் இல் புகாமல் - துரியோதனராசனது அரண்மனைக்குச் சென்று சேராமல், புந்தி கூர் அருள் விதுரன் வாழ் வளம் மனை புகுந்தான்-தத்துவ ஞானத்தையும் மிக்க அருளையுமுடைய விதுரன் வசிக்கின்ற எல்லா வளங்களையுமுடைய திருமாளிகையினுட் சென்றான்; (எ - று.)

விதுரன் பரம பாகவதனாதலாலும், பாண்டவர்பக்கல் மிக்க பிரியமுடையவனாதலாலும், கண்ணன் அவன் மனைக்கே சென்றனன். கண்ணனது பஞ்ச பிராணன்களை யொத்த பஞ்ச பாண்டவர்களுக்குத் துரியோதனன் பகைவனாதலால், அவனரண்மனைக்குச் செல்ல வில்லை. "வெற்றி விதுரன் கைவில்லிருக்க மேதினியில், மற்றவனை வெற்றிகொள்ளுமாறுண்டோ" என்று தருமபுத்திரன் கொண்ட சங்கைக்குப் பரிகாரமாக, கண்ணன் யாவரினும் வில்வித்தையிற் சிறந்த விதுரன் எதிர்ப் பக்கத்தில் வந்து போர்செய்து பாண்டவர் களை வெற்றியடைய வொட்டாமற் செய்யாதிருத்தற்கு ஓர் உபாயத்தை உத்தேசித்தும், விதுரன் வீட்டிற் புகுந்தனனென்க. இங்ஙனம் புகுந்தது, துரியோதனனுக்கு விதுரனிடத்தில் வெகுளி

யையும், விதுரனுக்குத் துரியோதனனிடத்தில் வெறுப்பையும் உண்டாக்குவதை மேலே காண்க.

மூதலடி - முற்றுமோனை. வந்துவந்து - அடுக்கு, மிகுதிப் பொருளது. பரமன் - தனக்குமிக்காரை யில்லாதவனென்றும், சிறந்த இலக்குமியையுடையவனென்றும் பொருள்படும். கண்மலர் = மலர்க் கண்; முன்பின்னகத் தொக்க உவமைத்தொகை. கண்ணன் உட் புகுதற்கேற்ற பாக்கியத்தைப் பெற்றதனால், 'வாழ்வளமனை' எனப் பட்டது. (135)

76.—கண்ணன் விதுரன் மாளிகையிலே சிங்காதனத்தில் வீற்றிருத்தல்.

வேந்தர்யாரையும்விடைகொடுத்தகன்றபின்விமலன்
வாய்ந்தமாளிகைநடுவணேர்மண்டபங்குறுகி
ஆய்ந்துவல்லவர்நவமணியழுத்தியவரியே
றேந்துமாசனமிடப்பொலிந்ததன்மிசையிருந்தான்.

(இ - ள்.) வேந்தர் யாரையும் - (எதிர்கொண்ட) அரசரெல்லாரையும், விடை கொடுத்து - (இனசொற் சொல்லிச்) செலவு கொடுத்தனுப்பிவிட்டு,—அகன்றபின் - (அவர்கள்) நீங்கினபின்பு,—விமலன் - குற்றமற்ற பரிசுத்த மூர்த்தியான கண்ணன்,—வாய்ந்த மாளிகை நடுவண் - பொருந்திய (விதுரனது) இருகத்தின் நடுவிலுள்ள, ஓர் மண்டபம் - ஒரு மண்டபத்தை, குறுகி - அடைந்து,—ஆய்ந்து வல்லவர் நவ மணி அழுத்திய - (சிற்ப நூல்களை) ஆராய்ந்து வல்லவர்களால் நவரத்தினங்களையும் பதித்துச் செய்யப்பட்ட, அரி ஏறு ஏந்தும் ஆசனம் - ஆண்சிங்கம் தாங்குவது போலமைந்த ஆசனமொன்றை, இட - (விதுரன் கொண்டுவந்து) சமர்ப்பிக்க, அதன் மிசை பொலிந்து இருந்தான் - அத்திவ்விய சிங்காதனத்தின்மீது விளக்கமாக எழுந்தருளியிருந்தான்; (எ - று.) (136)

77.—விதுரன் கண்ணபிரானை வணங்கி உஜ்ஜீவித்தல்.

இருந்துவந்தருளிறைவனையிறைஞ்சினனிறைஞ்சிப்
பெருந்துவந்தனைப்பிறப்பையுமிறப்பையும்பிரித்தான்
மருந்துவந்தனையமரருக்கருளியமாயோன்
விருந்துவந்தனனென்றுளமுருகியவிதுரன்.

(இ - ள்.) 'வந்தனை அமரருக்கு-(தன்னை) வணங்குதலைச் செய்த தேவர்கட்கு, மருந்து - (திருப்பாற்கடலினின்று உண்டான) அமிருதத்தை, அருளிய - பகிர்ந்துகொடுத்தருளிய, மாயோன் - ஆச்சரியசக்தியுள்ளவனான திருமால், விருந்துவந்தனன் - (எனதுகுடிசைக்கு) விருந்தினனாக எழுந்தருளினான்,' என்று - என்று கருதி, உளம் உருகிய - (மிக்களிப்பால்) மனங்கரைந்த, விதுரன்—,—இருந்து உவந்தருள் இறைவனை - (சிங்காதனத்தில்) வீற்றிருந்து திருவுள்ளமுகந்தருளுகிற கண்ணபிரானை, இறைஞ்சினன்-வணங்கினான்; இறைஞ்சி - (அங்ஙனம்) வணங்கி, (அம்மாத்திரத்தால்),

பெருந்துவந்தனை பிறப்பையும் இறப்பையும் பிரித்தான் - பெரிய இருவகை வினைகளையும் (அவற்றின்காரியமான) ஜனனத்தையும் மரணத்தையும் ஒழித்தவனனை; (எ - று.)

என்றது, இனிப்பிறப்பின்றி முத்திபெறும்படி எல்லாக்கரு மங்களையும் எம்பிரானருளால் ஒழித்தானென்பதாம். 'பிறப்பையும் இறப்பையும் பிரித்தான்' என்றது, அவற்றிற்குக்காரணமான கரும மொழிந்ததை; இது - உபசாரவழக்கு. இம்மையிலே கரும மொழிந்து நின்றவன், ஜீவன்முக்தனெனப்படுவன். துவந்துவம் என்றது துவந்தன் என விகாரப்பட்டது; இரண்டாக இருப்ப தெனப் பொருள்படும் இச்சொல் இங்கு அங்ஙனமுள்ள புண்ணிய பாவங்களை யுணர்த்திற்று. இருவினைகளைத் துவந்தனென உயர் திணையாண்பாலாற் கூறியது, செறலினாலாகிய திணைவழுவமைதி யாலும், இச்சொல் வடமொழியில் ஒருமையாயிருப்பதானாலுமென அறிக. நல்வினையும் பிறப்பிற்குக் காரணமாதலால், இங்கு இருவினை யையும் அடக்கி, 'துவந்தனை' என்றார். அவை - சஞ்சிதம், ஆகா மியம், பிராரப்தம் என்று மூன்றுவகைப்படும்; பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் ஈட்டப்பட்டுள்ள வினைகள் - சஞ்சி தம்; அவற்றுள் இறந்த உடம்புகளால் அனுபவித்தன ஒழியப் பிறந்த வுடம்பால் அனுபவிக்கக்கடவனவாய் நின்றவை-பிராரப்தம்: ஆகாமியம் - இனி அநுபவிக்கக்கடவனவாய் எஞ்சி நின்றவை; அவற்றுள், இச்செய்யுளால் சஞ்சிதமும் ஆகாமியமும் ஒழிந்தமை கூறினார். இனி, துவந்தனை என்பதற்கு - அலிவுக்கு இடமான என்றும், (காரணகாரியத் தொடர்ச்சியாய் ஒன்றோடொன்று கூடி) இணைபட்ட என்றும் உரைக்கலாம்.

தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடைந்த காலத் தில், திருமால் தான் இரண்டுவடிவங்கொண்டு அவர்கள் பக்கல் நின்று இழுத்துக் கடைந்ததும், கடைகையில் தந்வந்திரியென்னும் வடிவத்தோடு அமிருதகலசத்தைக் கையிலேந்தி அக்கடலினின்று எழுந்ததும், மோகினிவடிவங்கொண்டு அசுரர்களை வஞ்சித்து அமுதத்தைக்கைக்கொண்டு தேவர்கட்கு அமரராம்படி பிரசாதித் ததும் ஆகிய எல்லாம் அடங்க, 'மருந்துவந்தனை யமரருக்கு அருளிய மாயோன்' என்றார். துருவாசமுனி சாபத்தாற் செல்வங்களை யெல்லாம் இழந்த தேவர்கள் திருமாலைச் சரணமடைந்து நமஸ் கரித்துப் பிரார்த்தித்ததுபற்றி, 'வந்தனையமரருக்கு' என்றது. இச் செய்யுளில் திரிபு என்னுஞ் சொல்லணி காண்க. (137)

78.—இதுவும் அது.

கோடுகொண்டகைக்குரிசிலையலர்ந்தகோகனதக்
காடுகண்டெனக்கண்டுதன்கண்ணிணைகளியாத்
தோடுகொண்டதார்விதுரனிப்பிறப்பையுந்தொலைத்தான்
வீடுகண்டவர்க்கியம்பவும்வேண்டுமோவேண்டா.

(இ - ள்.) தேடு கொண்ட தார் விதுரன் - பூவிதழ்களைக் கொண்ட மாலையையுடைய விதுரன்,—கோடு கொண்ட கை குரி

சிலை-சங்கத்தை யேந்திய திருக்கையையுடைய கண்ணபிராணை,—அலர்ந்த கோகனதம் காடு கண்டு என - மலர்ந்த தாமரைமலர்க் காட்டைக் கண்டாற்போல, கண்டு - தரிசித்து, தன் கண் இணை களியா - தனது கண்களிரண்டும் களிப்படைந்து, இ பிறப்பையும் தொலைத்தான் - இந்தச் சன்மத்துக்கருமத்தையும் நீக்கினான்; வீடு கண்டவர்க்கு - முத்தியின் சொரூபத்தை யறிந்தவர்களுக்கு, இயம்பவும் வேண்டுமோ - (ஒருவர்) சொல்லவும் வேண்டுமோ? வேண்டா-வேண்டுவதில்லை; (எ - று.)

எம்பெருமானது தன்மையை யுணர்ந்தவர்கள் முத்தியின் தன்மையை யுணர்ந்தவர்களே யாவராதலின், அங்ஙனமே பரமபாகவதனான விதுரன் கண்ணனைப் பரம்பொருளாக உணர்ந்து தரிசித்துத் தனது இருவினைகளும் தொலைந்து ஜீவன்முக்தனுயினனென்க. பிராரப்தம் ஒழிந்தமை இப்பாட்டினுற் கூறப்பட்டது. நான்காமடி - கவிக்கூற்று. இவ்வடியிற் கூறிய பொதுப்பொருள் முதல் மூன்றடிகளிற் கூறிய சிறப்புப்பொருளை விளக்குதலால், வேற்றுப்பொருள்வைப்பணி. குரிசில்-ஆண்பாற் சிறப்புப்பெயர். திருமாலின் முகம் வாய் கண் கை உந்தி பாதம் முதலிய உறுப்புக்களெல்லாம் செந்தாமரைபோல்வன வாதலின், 'கோகனதக்காடு கண்டெனக்கண்டு' என்றார். கோகநதம் என்னும் சொல்லுக்கு - சக்கரவாகமென்னும் பறவைகள் தம்மில் மகிழ்ந்து வாழப்பெறுவதென்றுவது, கோகமென்னும் நதியில் முதலில் உற்பத்தியான தென்றுவது, பொருள்கொள்க. காடு-தொகுதி யென்றபடி. வீடு - (இவ்வுலகப்பற்றை) விட்டு அடைவது; முக்தியென்னும் வட சொல்லின் பொருளது. கண்ணனைத் தாமரைக்காடென்றற்கு ஏற்ப, விதுரனது கண்ணிணையை வண்டின மென்க. இரண்டாமடியில் ஒவ்வொரு சீரின் முதலெழுத்தும் ஒன்றிவந்தது, முற்று மோனை யெனப்படும். (138)

79.—விதுரன் கண்ணபிராணைத் தரிசித்துப் பரவசனுதல்.

உள்ளினனுணர்ந்துள்ளமுமுருகினனெழுந்து
துள்ளினன்விழுந்திணையடிசூடினன்றுயரைத்
தள்ளினன்மலர்த்தடக்கையாற்றத்துவவமுதை
யள்ளினனெனக்கண்களாலருந்தினனளியோன்.

(இ - ள்.) அளியோன்-(கண்ணனது) அருளைப் பெற்றவனுகிய விதுரன்,—உள்ளினன்-(கண்ணனைத்) தியானித்தான்; உணர்ந்து-(அங்ஙனம் பகவானது சொரூபத்தை) நினைத்து அறிந்து, உள்ளமும் உருகினன் - மனமுங்கரைந்தான்; (அங்ஙனம் மனங்கரைதற்குக் காரணமான மிக்கக்களிப்பால்), எழுந்து துள்ளினன் - (ஆசனத்தபரவசனுய்) எழுந்து குதித்தான்; விழுந்து - (கீழே) விழுந்து, இணை அடி சூடினன்-(கண்ணனது) உபயபாதத்தை(த் தலையின்மேல்) அணிந்து கொண்டான்; துயரை தள்ளினன் - பிறவித்துன்பங்களையெல்லாம் ஒழித்தான்: மலர் தட கையால் தத்துவம் அமுதை அள்ளினன் என - தாமரைமலர்போன்ற பெரிய தன்கைகளால் மெய்ப்பொரு

ளாகிய அமிருதத்தை அள்ளியெடுத்தவன் போல, கண்களால் அருந்தினன் - (தனது) கண்களால் (கண்ணனது வடிவழகை) உண்டான்; (எ-று.)

உள்ளீனன் என்பதற்கு - (கண்ணன் எழுந்தருளப்பெற்ற தனது பாக்கியவிசேஷத்தை) நினைத்தானென்றும், தத்துவ அழுதை அள்ளினனென என்பதற்கு-(நித்திய இன்பமாகிய) அமிருதத்தை அள்ளியெடுத்து உண்டவன்போல வென்றும், அளியோன என்பதற்கு-(தான்) கருணையுடையவனென்றும் உரைப்பாரு முளர். உள்ளமும் உருகினன் என்ற உம்மையை ஆக்கவும்மையாக்கி, உடம்பும் நீராயுருகி வியர்த்தா னென்க. சூடுதலென்ற வினைக்கு ஏற்ப, இணையடியை மலரென்க. கண்களால் அருந்துதல் - ஆசைதீர நன்றாக முழுவதும் தரிசித்துத் திருப்தி பெறுதல்; "பருகுவான் போல நோக்கி" என்பதும் காண்க. இங்கு வாயின் புலத்தைக் கண்ணின் மேல் ஏற்றியது, உபசார வழக்கு. (139)

80.—விதுரன் கண்ணபிரானுக்கு முகமன் கூறுதல்.

முன்னமேதுயின்றருளியமுதுபயோததியோ
பன்னகாதிபப்பாயலோபச்சையாலிலையோ
சொன்னநால்வகைச்சுருதியோகருதிநீயெய்தற்
கென்னமாதவஞ்செய்ததிச்சிறுகுடிலென்றான்.

(இ - ள்.) 'முன்னமே துயின்றருளிய முது பயோததியோ - அநாதி காலமாக (நீ) யோக நித்திரை செய்தருளப்பெற்ற பழமையாகிய திருப்பாற்கடல் தானே? பன்னக அதிபன் பாயலோ-சர்ப்பங்களுக்குத் தலைவனை ஆதிசேஷனுகிய திருப்பள்ளிமெத்தைதானே? பச்சை ஆல் இலையோ - பசுகிறமுள்ள ஆலிலை தானே? சொன்ன நால்வகை சுருதியோ - (மேன்மையாகச்) சொல்லப்பட்ட நான்கு வகையான வேதந்தானே? இ சிறு குடில் - இந்தச் சிறிய குடிசை, நீ கருதி எய்தற்கு என்ன மா தவம் செய்தது - நீ (ஒரு பொருளாகத் திருவுள்ளத்தில்) நினைத்து எழுந்தருளுதற்கு என்ன பெரிய தவத்தைச் செய்ததோ?' என்றான் - என்று (விதுரன் கண்ணனை நோக்கிப்) புகழ்ந்து கூறினன்; (எ - று.)

பிரமன் முதலான சகலதேவர்களும் உட்பட யாவும் அழிந்து போகின்ற யுகாந்த காலத்தில் ஏகார்ணவமான மகாபிரளயத்திலே ஸ்ரீமகாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தம் திருவயிற்றில் அடக்கி வைத்துக்கொண்டு சிறு குழந்தை வடிவமாய் ஆதிசேஷாம்சமான தோர் ஆலிலையின்மீது பள்ளிகொண்டு தமது மாயாஸ்வரூபமான யோக நித்திரையைக் கைக்கொண்டு திருக்கண் வளர்ந்தருளுவர். வேதங்களில் பகவானது சொரூபம் வருணிக்கப்படுதல்பற்றி, அது அவனுக்கு இருப்பிடமாம். மிக்கதவஞ் செய்திருந்தாலன்றி நீ யெழுந்தருளும் பாக்கியத்தைப் பெறலாகா தாதலால், 'என்ன மாதவஞ் செய்தது' எனப்பட்டது. கண்ணன் எழுந்தருளப்பெற்ற இது, கண்ணனது வாசஸ்தானமான பொருள்களுள் யாதாயினு மொன்றன் அம்சமாக இருக்குமோவென ஐயமுற்றார்; ஐயவுவமையணி.

இச்சிறு குடில் என்ன மாதவஞ் செய்தது-செய்யாததைச் செய்தது போலக் கூறிய மரபுவழுவமைதி. இது, உலகநவிற்சியணி. விநயத்தால் தன்னை மிகத் தாழ்த்தி, தனது சம்பந்தமான மாளிகையை 'இச்சிறு குடில்' என்றான். பயோததி முதலியனவல்லாததும், மாதவம் செய்யாததுமாகிய எனது இச்சிறு குடிசையில் நீ எழுந்தருளியது, உனது இயற்கைக் கருணையேயென முகமன் கூறியபடி.

'முன்னமே துயின்றருளிய' என்ற அடைமொழியை, பன்னகாதிபப் பாயல், பச்சையாலிலை என்பவற்றிற்குங் கூட்டலாம். பயஸ்+உததி=பய உததி; இவ்வடசொற்றொடர், தமிழில் பயோததியென விகாரப்பட்டு வழங்கிற்று. பயம்-பால், உததி - கடல்: சுருதி - எழுதாக்கிளவியாய்த் தொன்றுதொட்டுக் கேள்வியால் வருவதெனக் காரணக்குறி. (140)

81.—விதுரன் கண்ணனுக்கு விருந்து சமைப்பித்தல்.

மும்மையாகியபுவனங்கண்முழுதையுமருந்தும்
எம்மையாளுடை நாயகன்விருந்தினுக்கிசைந்தான்
அம்மவென்றனனூறுநூருயிரமடையர்
தம்மைநோக்கினனவர்களும்விரைவுடன்சமைத்தார்.

(இ - ள்) 'மும்மை ஆகிய புவனங்கள் முழுதையும் - மூன்று வகையான [சுவர்க்க மத்திய பாதாளமென்னும்] உலகங்களெல்லாவற்றையும், அருந்தும் - (பிரளய காலத்தில்) உட்கொண்டருளிய, எம்மை ஆள் உடை நாயகன் - நம்மையெல்லாம் அடிமையாகவுடைய தலைவனுகிய திருமால், விருந்தினுக்கு இசைந்தான் - (எளிய எனது குடிசையில்) விருந்துண்ண உடன்பட்டான்; அம்ம-(இது) ஆச்சரியம்'! என்றனன்-என்று கருதி, ஆறு நூருயிரம் மடையர் தம்மை நோக்கினன - ஆறு லட்சஞ சமையற்காரரை (க் குறிப்பாக)ப் பார்த்தான்; அவர்களும் - அச்சமையலாளரும், விரைவுடன் சமைத்தார்-துரிதமாகச் சமையல் செய்தார்கள்; (எ - று.)

உலகங்கள் ஏழும் பதினான்குமாயிருக்க,மூன்று என்றதுஎன்னையெனின்,—மேல், கீழ், நடு என்கிற நோக்கத்தாலென்க; (அன்றி, கிருதகம், அகிருதகம், கிருதகாகிருதகம் என மூவகைப்பட்ட உலகமென்றுமாம். கிருதகம் - செய்யப்பட்டது; பூமி, பாதாளம் முதலாயின. அகிருதகம் - செய்யப்படாதது: தபோலோக, சத்தியலோகங்கள். கிருதகாகிருதகம் - செய்யப்பட்டதும், செய்யப்படாததுமாயிருப்பது: சுவர்க்கலோகம் முதலியன. பிரமனது தினப்பிரளயத்தில் அழிவது கிருதகமென்றும், அங்ஙனம் அழியாமலிருப்பது அகிருதகமென்றும், பாதியழிந்தும் பாதியழியாமலுமிருப்பது கிருதகாகிருதகமென்றும் உணர்க.) திருமால் மூன்று உலகங்களையும் உண்பது, யாவும் அழியுங் கற்பாந்த காலத்தில். மும்மை-மூன்று என்ற மாத்திரமாய் நின்றது. முழுது-முழுமையென்னும் பகுதியினடியாகப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். இச்சொல் பன்மைப் பொருளை யுணர்த்தி, ஒருமை விகுதியை ஏற்றுவரும். விருந்து - இங்கே, புதிதாய் வந்தவனுக்கு இடும் உணவுக்கு இருமடியாகு

பெயர். அம்ம-வியப்பிடைச்சொல். 'ஆறு நூறுயிரம் மடையர்' என்றது, கவிகளுக்கு இயற்கையான அதிசயோக்தி: மிகப்பல என்றபடி. மடை - சமைத்தல்; தொழிற்பெயர்; மடு - பகுதி; ஐ - விகுதி; அதனையுடையவர், மடையர்; (இச்சொல் அறிவிலாதவர் எனப் பொருள்படுமிடத்தில், மடைமை யென்னும் பண்பினடியாப் பிறந்தாம்.) புவனங்கள் முழுவதையும் என்றதில், திரிலோகத்திலுமுள்ள சராசரங்களான எல்லாவுயிர்களும் அடங்கும். அரசர் வெளிப்படையாகவன்றிக் கண் முகம் முதலிய உறுப்புக்களின் குறிப்பாற்கூறும் இயல்பினரும், அவர்களிடத்துப் பயில்பவர் அக்குறிப்பையுணரும் நுண்ணறிவுடையவருமாயிருப்பாராதலால், 'மடையர் தம்மை நோக்கினன் அவர்களும் விரைவுடன் சமைத்தார்' என்றார். (141)

82.—இதுவும் அது.

வந்தகொற்றவேல்வரிசிலையவர்க்கும்வாளவர்க்குங்
கந்தடரிப்பனகரிக்கும்வெங்கவனவாம்பரிக்கும்
ஐந்துபத்துநூறுயிரமரசர்க்குமெவர்க்கும்
இந்திரற்குமெய்தாவமுதெனும்படியியற்ற.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) வந்த - (கண்ணனுடன்) வந்த, கொற்றம் வேல் வரி சிலையவர்க்கும் - வெற்றியைத்தரும் வேலாயுதத்தையும் கட்டமைந்த வில்லியுமுடைய வீரர்களுக்கும், வாளவர்க்கும் - வாளாயுதத்தை யுடைய வீரர்களுக்கும், கந்து அடர்ப்பன கரிக்கும் - கட்டுத்தறியை முறிப்பனவாகிய மதயானைகளுக்கும், வெம் கவனம் வாம்பரிக்கும் - விரைந்த நடையையுடைய தாவிப்பாயும் குதிரைகளுக்கும், ஐந்து பத்து நூறு ஆயிரம் அரசர்க்கும் - ஐம்பது லட்சம் அரசர்களுக்கும், எவர்க்கும் - மற்றும் எல்லோர்க்கும், இந்திரற்கும் எய்தா அமுது எனும்படி இயற்ற - தேவேந்திரனுக்குங் கிடைக்காத தேவாமிருதமென்னும்படி (உணவுகளைச்) சித்தஞ்செய்ய; (எ - று.)— 'அருந்தி' என மேற்கவியோடு தொடரும்.

முதலடியிற் கூறியவர் - வேல்வீரரும் வில்வீரரும் வாள்வீரரும். கந்து - ஸ்கந்தம், கவனம் - கமனம்; வடசொற்றிரிபுகள். கரத்தையுடையது, கரி; கரம் - கை, இங்கே துதிக்கை; எவர்க்கும் என்றது, பரிசனங்களை உட்படுத்தி. (142)

83.—கண்ணனும் அவனுடன் வந்தோரும் விருந்துண்டு மகிழ்ந்திருத்தல்.

அமைத்தவாசநன்னீர்கொடுமஞ்சனமாடிச்
சமைத்தபல்கறியடிசிறம்விருப்பிலுலருந்தி
உமைக்குநாயகனிரவொழித்தருளினுதவ
இமைப்பிலாரமுதருந்தியவியல்பெனவிருந்தார்.

(இ - ள்.) உமைக்கு நாயகன் இரவு ஒழித்து அருளினன் - உமாதேவிக்குக்கணவனாகிய சிவபிரானது யாசகத்தொழிலைப் போக்கிக்

கருணைசெய்த கண்ணபிரான்,—அமைத்த வாசம் நல் நீர் கொடு மஞ் சனம் ஆடி - (விதுரனது பரிவாரங்களாற்) சித்தஞ்செய்யப்பட்ட பரி மளமுடைய நல்ல நீர்த்தத்தால் ஸ்நானஞ்செய்து, சமைத்த பல் கறி அடிசில் தம்விருப்பினால் அருந்தி - சமைக்கப்பட்ட பலவகைக்கறியமு தோடுகூடிய நல்லுணவைத் தமது விருப்பத்தோடு அமுதுசெய் தருளி, உதவ - (பிறர்க்கெல்லாங்) கொடுக்க,—(அவர்கள் உண்டு), இமைப்பு இலார் அமுது அருந்திய இயல்பு என இருந்தார் - கண் ணிமைத்தலில்லாத தேவர்கள் அமிருதத்தையுண்ட தன்மைபோலத் திருப்தியடைந்திருந்தார்கள்; (எ - று.)

மஞ்சனம்-மஜ்ஜநம் என்பதன் திரிபு; நீரோடுதலென்று பொருள். அடிசில் - அடு எனனும் பகுதியின்மேல் சில் விகுதி பெற்ற தொழிற் பெயரென்றும், இது ஆகுபெயராய்ச் சமைக்கப்பட்ட உணவை உணர்த்துமென்றுங் கூறுவர். 'ஒழித்தருளினான்' என்றதற்கு ஏற்ப, தன் என ஒருமையாகக்கூறுது, 'தம்' எனப் பன்மையாகக் கூறினது-ஒருமைப்பன்மை மயக்கம். விருப்பு - விரும்பு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். பார்வதீதேவி ஐந்து பிராயமானவுடனே சிவபிரானை மணஞ்செய்தற்குத் தவஞ் செய்ய விரும்பியவளாய்த் தன்கருத்தைப் பெற்றோர்க்குத் தெரிவிக்க அவர்களால் ("அன்னாகே ளெம்மினீங்கி யருந்தவமாற்றற் கொத்த, இன்னதோர் பருவ மன்று லியாண்டுமோரைந்தே சென்ற, நின்னுடல் பொருதாலீண்டிங் கிலை மையைத் தவிர்தி" என்றுங்கூறிமுதலில்) மறுக்கப்பட்டதனால், அவ ளுக்கு உமையென்று ஒருபெயர்; உ, மா என்பதற்கு - அம்மா வேண்டா எள்று பொருள்; இரவு-தொழிற்பெயர்; இர - பகுதி, வு-விகுதி; அவர்கள் உண்ட உணவு தேவாமிருதம் போன்ற தென்பது, சற்றடியினால் விளங்கும்.

உமைக்குநாயக னிரவொழித்த கதை:—ஒருகாலத்திலே பரம சிவன் தன்னைப்போலவே பிரமனும் ஐந்துதலையுடையனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குதற்கு இடமாயிருக்கிறதென்று கருதி, அவனது சிரமொன்றைக் கிள்ளி யெடுத்துவிட அக்கபாலம் அப் படியே சிவன்கையில் ஒட்டிக்கொள்ளுதலும், அவன் 'இதற்கு என் செய்வது?' என்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் 'இப் பாவந் தொலையப் பிச்சை யெடுக்கவேண்டும்: எனைறைக்குக் கபாலம் நிறையுமோ அன்றைக்கே இது கையை விட்டு அகலும்' என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பலதலங்களிலுஞ் சென்று பிச்சை யேற்றுக் கொண்டே வருந்தித் திரிந்தும் அக்கபாலம் நீங்கா தாக, பின்பு ஒருநாள் பதரிகாச்சிரமத்தை யடைந்து அங்கு எழுந்தருளி யுள்ள நாராயணமூர்த்தியை வணங்கி இரந்தபோது, அப்பெருமான் 'அக்ஷயம்' என்று பிக்ஷையிட, உடனே, அது நிறைந்து கையைவிட்டு அகன்றது என்பதாம். (143)

84.—யாவரும் தாம்பூலம் முதலியவற்றைத் தரித்தபின்பு கண்ணன் சிங்காதனத்தில் வீற்றிருத்தல்.

வாசநீரும்வண்சுண்ணமுமுறைமுறைவழங்கப்
பூசுறுத்தொழிற்பூசினர்சூடினர்புனைந்தார்

வீசுசாமரமிரட்டவெண்மதிக்குடைநிழற்றக்
கேசவன்மணிக்கேசரித்தவிசிடைக்கிளர்ந்தான்.

(இ - ள்.) (இங்ஙனம் யாவரும் புசித்தபின்பு),—வாசம் நீரும் - நறுமணத்தையுடைய பனிநீர் கலவைச்சந்தனக்குழம்பு முதலியவற்றையும், வள் சுண்ணமும் - அழகியவாசனைப் பொடிகளையும், முறை முறை வழங்க - ஒன்றன்பின் ஒன்றுக் (விதுரன்) கொடுக்க,—(அவற்றை), பூசுறும் தொழில் பூசினர் - பூசவேண்டிய வகைப்படியே (மார்பு தோள முதலிய இடங்களிற்) பூசிக்கொண்டார்கள்; சூடினர் புனைந்தார் - (விதுரனற் கொடுக்கப்பட்ட புஷ்பசரம் மாலை முதலியவற்றைத் தலையிற்) சூடிக்கொண்டார்கள் (உடம்பில்) தரித்துக் கொண்டார்கள்; (அப்பொழுது),—கேசவன் - கண்ணபிரான்,—வீசு சாமரம் இரட்ட - வீசுதற்கு உரிய சாமரங்களை வீசவும், வெள் மதி குடை நிழற்ற - வெண்மையான பூரண சந்திரன்போன்ற வெண் கொற்றக் குடை நிழலைச்செய்யவும்,—மணி கேசரி தவிசு இடை - இரத்தினங்களைப் பதித்துள்ள சிங்காதனத்தினிடத்திலே, இளர்ந்தான் - விளக்கமாக வீற்றிருந்தருளினன்; (எ - று.)

வாசநீர் - பனிநீர்; இதைக் கூறியது, கலவைச் சந்தனக்குழம்பு முதலியவற்றிற்கும் உபலக்ஷணம். 'பூசுறுத்துழி' என்ற பாடத்திற்கு, பூசுதற்கென்று வரையறுக்கப்பட்ட இடங்களி லென்க. சாமரம் - சமரமென்னும் மானின் வால்மயிரினாற் செய்யப்பட்டது. குடைக்குப் பூர்ணசந்திரன் - வட்டவடிவிலும், வெண்ணிறத்திலும், ஒளியிலும், குளிர்ச்சி செய்தலிலும் உவமை. மதி - (யாவராலும்) மதிக்கப்படுவதெனக் காரணப்பெயர். கேசவனென்னும் வடமொழித் திருநாமத்துக்கு - பிரமனையும் உருத்திரனையும் தன் அங்கத்திற்கொண்டவனென்றும், (க - பிரமன். ச - சிவன்), அழகிய தலைமயிர்களையுடையவனென்றும், கேசியென்னும் அசுரனைக் கொன்றவனென்றும் பொருள்கள் கூறப்படும். கேசரி - பிடரிமயிர்களையுடையதென்று பொருள்; ஆண்சிங்கம்: கேசரம்-பிடரிமயிர். (144)

85.—சூரியாஸ்தமன வருணனை.

ஞானகஞ்சுகவிதுரன்வாழ்மனியினுயகனும்
போனகம்பரிவுடனுகர்ந்திருந்தவப்பொழுதிற்
ருனுமேருவுக்கப்புறத்தவ்வமுதருந்தப்
பானுவும்பெருங்குடதிசைப்பரவையிற்படிந்தான்.

(இ - ள்.) ஞானம் - தத்துவஞானமாகிய, கஞ்சுகம் - கவசத்தைத் தரித்த, விதுரன்—, வாழ் - வாசஞ்செய்கின்ற, மனியின் - திருமாளிகையிலே, நாயகனும் - (எல்லாவுயிர்க்கும்) தலைவனான கண்ணபிரானும்,—போனகம் - உணவை, பரிவுடன் - (விதுரன் பக்கல்) அன்புடனே, நுகர்ந்து - அமுது செய்து, இருந்த - வீற்றிருந்த, அ பொழுதில் - அத்தசமயத்திலே,—பானுவும் - சூரியனும்,—தானும்—, மேருவுக்கு அப்புறத்து அ அமுது அருந்த - மகாமேருகிரிக்கு அந்தப்புறத்திலே (சென்று) அப்படிப்பட்ட தேவாமிருதத்தை

உண்ணுதற்கு, பெருங் குட திசை பரவையில் படிந்தான் - பெரிய மேற்குத் திக்குக் கடலில் நீராடினன்; (எ - று.)

ஒருவன் ஒருதொழிலைச் செய்ததைப்பார்த்த மாத்திரத்தில் தானும் அத்தொழிலைச் செய்யவேண்டுமென்ற கருத்து உண்டாதலாகிய உலகவியல்பு, இங்கே சூரியனிடத்து ஏற்றிக் கூறப்பட்டது. சூரியன் முதலிய கிரக நக்ஷத்திர தாரகைகளெல்லாம் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமிப்பனவற்றைக் கீழ்க்கடலில் உதித்து மேல்கடலில் அஸ்தமிப்பனவாகத் தோற்றமாத்திரத்தைக்கொண்டு வருணித்தல், கவிமரபு. சூரியன் கடலில் மூழ்குதற்குக் காரணமாகாத தானும் மேருவுக்கு அப்புறத்து அவ்வமுதருந்துங்கருத்தை ஏதுவாகக் கற்பித்துக் கூறியதனால், ஏதுத்தற்குறிப்பேற்றவணி: உண்ணும்பொழுது நீராடியுண்டல் மரபாதலின், 'அமுதருந்தப் பரவையிற்படிந்தான்' என்றார். 'மேருவுக்கு அப்புறம்' என்றது, மேருவின்வடபுறத்தை. 'அமுதருந்த' என்றது, அமுதருந்துதல் அமரரான தேவர்க்கெல்லாம் இயல்பாதலால். கவசம் உடம்பைப் பாதுகாத்தல்போல ஞானம் உயிரை நற்கதியிற் செலுத்திப் பாதுகாத்தல் பற்றி, 'ஞானகஞ்சுகம்' எனப்பட்டது.

இச்செய்யுளிலுள்ள உம்மைகள் மூன்றனுள், முன்னது-பின்னையவற்றைநோக்கி எதிரதுதழுவிய எச்சமும், மற்றையிரண்டு உம்மைகள் - முன்னியதைநோக்கி இறந்ததுதழுவிய எச்சமுமாம். பாநு என்னும் சொல்லுக்கு - விளங்குபவனென்றும், விளக்குபவனென்றும் பொருள். குடக்கு + திசை = குடதிசை; திசைப்பெயர் முன் திசைப்பெயர்வர நிலைமொழிஈற்றுயிர் மெய்யும் ககரவொற்றும் நீங்கின. (145)

86.—செவ்வானத் தோற்றத்தின் வருணனை.

கருதியந்தணர்யாவருந்தங்கடன்கழிப்பச்
சுருதியென்னும்வெஞ்சாபமேலம்புகைதொடுத்துப்
பரிதிதன்பெரும்பகைவர்மேல்விடுத்தலிற்பரந்த
குருதியாமெனநிவந்தெழச்சிவந்ததுகுடபால்.

(இ - ள்.) அந்தணர் யாவரும் - பிரமணர்களெல்லாரும், தம் கடன் கழிப்ப கருதி - (மாலைக்காலத்தில்) தாம்கழிக்கவேண்டிய கடமைகளைக் கழிக்க எண்ணி, சுருதி என்னும் வெம் சாபம்மேல் - வேத மந்திரமாகிய கொடிய வில்லின்மேலே, அம்பு கை தொடுத்து - (அர்க்கிய) நீராகிய பாணத்தைக் கையால் வைத்து, பரிதி தன் பெரும் பகைவர்மேல் விடுத்தலின்-சூரியனது பெரிய பகைவர்களான (மந்தேதகரென்னும்) அசுரர்களின்மேலே பிரயோகித்தலால், பரந்த - [எங்கும்) பரவிய, குருதி ஆம் என - இரத்தமாகும் (இது) என்னும் படி, நிவந்து எழ - (செவ்வானம்) மிக்குத்தோன்றுதலால்,—குடபால் - மேற்குத் திசை, சிவந்தது - செந்நிறமடைந்தது; (எ-று.)

மந்தேதகாருணமென்னுந் துவீபத்தில் வாழும் மந்தேதகரென்னும் அசுரர்கள் உக்கிரமான தவத்தைச்செய்து பிரமனிடத்து வரம்

பெற்று அதனைற் செருக்கி எப்பொழுதுஞ் சூரியனை வலஞ்சுத்து எதிர்த்துப் போகவொட்டாது தடுத்துப் போர்செய்கின்றன என்றும், அந்தணர்கள் சந்தியாகாலங்களில் மந்திர பூர்வமாகக் கையிலெடுத்து விடும் அர்க்கிய தீர்த்தங்கள் வச்சிராயுதம் போலாகி அவர்கள்மேல் விழுந்து அவர்களை அப்பால்தள்ளிச் சூரியனது சஞ்சாரத்துக்குத் தடையில்லாதபடி செய்கின்றனவென்றும் வேதம் கூறும். மாலைப் பொழுதிற் செவ்வானம்பரந்ததை இங்ஙனம் அடிபட்ட அரக்கரது இரத்தம் பட்டுச்சிவந்ததாக உத்பிரேக்ஷித்தார்; ஏதுத்தற்குறிப் பேற்றவணி. இரண்டாமடியிலுள்ள உருவகம் இதற்கு அங்கமாய் நின்றது. அம்பு என்ற ஒருசொல்லே இங்கு இருபொருள்பட்டு நீராகிய அம்பு எனப்பட்டது; ச்லிஷ்டரூபக மெனப்படும் சிலேடை பொருந்தின உருவகமென்க. அம்பு என்னுஞ்சொல் - பாணத்தைக் குறிக்கும்போது தென்மொழியும், நீரைக் குறிக்கும்போது வட மொழியுமாம். அம்புசெலுத்துதற்கு வில் இன்றியமையாத கருவி யாயிருத்தல்போல, இந்நீரைச்செலுத்துதற்கு வேதமந்திரம் இன்றி யமையாமையின், இதனை 'வில்' என்றது. சுருதி - இங்கு, காயத்திரி மந்திரம். இவ்வரக்கர்கள் என்றும் அழியாதவராதலாலும், எப் பொழுதுஞ் சூரியனையே எதிர்ப்பவராதலாலும், 'பரிதிதன பெரும் பகைவர்' எனப்பட்டனர். (146)

87.—மாலைப்பொழுதிற் கடலோரத்தில் விளங்குகிற பவழக்கொடிகளின் வருணனை.

தரங்கவாரித்திப்புறத்தெதிர்மலைந்தவெஞ்சமரி
லுரங்கொள்கூர்நெடும்படைகளாலுடன்றமந்தேகர்
துரங்கமேழுடைக்கடவுளை நிரைநிரைதுணித்த
கரங்கள்போன்றனகரைதொறும்வளர்துகிர்க்காடு.

(இ - ள்.) கரைதொறும்-கடற்கரையி லெங்கும், வளர்-வளர்ந்து தோன்றுகிற, துகிர் காடு - பவழக்கொடிகளின் கூட்டங்கள்,—தரங்கம் வாரிதி புறத்து - அலைகளையுடைய கடலின் மேலிடத்தில், எதிர் மலைந்த வெஞ் சமரில்-எதிர்த்துப் போர்செய்த கொடிய யுத்தத்தில், உடன்ற - பெருங்கோபங்கொண்ட, மந்தேகர் - மந்தேகரென்னும் அரக்கர், உரம்கொள் கூர் நெடும் படைகளால்-வலிமையைக்கொண்ட கூர்மையாகிய பெரிய (தமது) ஆயுதங்களால், துரங்கம் ஏழ் உடை கடவுளை - ஏழு குதிரையையுடைய சூரியனை, நிரை நிரை துணித்த - வரிசை வரிசையாகத் துண்டு செய்த, கரங்கள் - கிரணங்களாகிய கைகளை, போன்றன-ஒத்தன; (எ - று.)

கரங்கள் - ச்லிஷ்டரூபகம். கரம் என்பது இவ்விருபொருளு முடையதாதலை "கரமென்ப கிரணஞ் செங்கை கழுதைதனஞ் சிறுத்தி லும் பேர்" என்னும் நிகண்டினாலும் அறிக. தரங்கவாரிதி, வாரிதி-நீர் தங்குமிடமெனக் கடலுக்குக் காரணக்குறி; வாரி-நீர். உடன்ற, உடல் - வினைப்பகுதி. துரங்கம் - துரிதமாகச் செல்வது; காரணப் பெயர். கடலில் வளர்ந்த பவழக்கொடிகளை, அக்கடலின்மீது வானத் திற்பொருத மந்தேகரால் ஆயுதங்கொண்டு துணித்துத் தள்ளப்

பட்ட சூரியனது கைகள்போலுமெனக் குறித்தார்; தன்மைத்தற்குறிப் பேற்றவணி. (147)

88.—அவ்வந்திமாலையிற் குவிந்த தாமரைமலர்களின் வருணனை.

நீதியிற்புகல்பகலெலாநீரரமகளிர்
மீதுறைத்தெழும்வெவ்வெயில்படாவகைவிரித்துப்
போதுபுக்கதென்றினம்படச்சுருக்கியபூம்பட்
டாதபத்திரம்போன்றனதாமரையடவி.

(இ - ள்.) தாமரை அடவி - (மாலைக்காலத்தில் குவிந்த) தாமரை மலர்த் தொகுதிகள்,—நீதியின் புகல் பகல் எலாம் - முறைமையாகச் சொல்லப்படுகிற பகற்பொழுது முழுவதிலும், உறைத்து எழும் வெம் வெயில் - உக்கிரமாக எழுகிற உஷ்ணமாகிய சூரியஒளி, நீர் அரமகளிர்மீது - நீரில்வாழும் தெய்வமகளிர்மேல், படாவகை - பட வொண்ணுதபடி, விரித்து - பரப்பப்பட்டிருந்து,—போது புக்கது என்று - அப்பகற்பொழுது ஒடுங்கிவிட்டதென்ற காரணத்தால், இனம்பட சுருக்கிய - வரிசையாக மடக்கப்பட்ட, பூ பட்டு ஆதபத்திரம் - அழகிய பட்டுக்குடைகளை, போன்றன - ஒத்தன; (எ - று.)

நீரின்மீது பகல்முழுவதும் மலர்ந்திருந்து அப்பகல்கழிகையில் குவிந்த தாமரைமலர்களை, நீர் தன்னிடத்தில் வாழும் தேவமாதர் மீது சூரியகிரணம் பட்டு உறைக்காதபடி பகல்முழுவதும் மேலே விரித்துப் பிடித்து அப்பகல் கழிகையில் மூடிவிட்ட குடைகளைப் போன்றனவென்று வருணித்தார்; இதுவும், தன்மைத்தற்குறிப்பேற்ற வணி. வெண்தாமரை மலர்களை வெண்பட்டுக் குடைகளாகவும், செந் தாமரைமலர்களைச் செம்பட்டுக் குடைகளாகவும் கொள்க. ஆதபத்ரம் - வெயிலினின்று காப்பதென்று பொருள்; ஆதபம் - வெயில்: நன்றாகத்தபிப்பது. வெம்மையுடையது, வெயில் எனக் காரணக்குறி. நீரமகளிர் - ஜல தேவதாஸ்திரீகள். அரமகளிர் - அமரமகளிர் என்பதன் மரூஉ; அரம்பைமகளிர் என்பதன் விகாரமுமாம். நீதியின் விரித்து என இயைத்து, தருமமாக மலர்த்திப்பிடித்து என்றுமாம். (148)

89.—இது – அந்திக்காலத்தில் அந்நகரம் இருந்த காட்சி.

கலந்துமங்கலமுழவுவெண்சங்கொடுகறங்க
மிலைந்தபூங்குழல்வனிதையர்மெய்விளக்கெடுப்பக்
கலந்ததாமரைத்தடமெலாங்குவிந்ததுகண்டு
மலர்ந்ததாமரைவாவிபோன்றதுநகர்வட்டம்.

(இ - ள்.) (மாலைப்பொழுதில்), மங்கலம்முழவு - மங்கலகரமான பேரிகைகள், வெள் சங்கொடு - வெண்ணிறமான மங்கலச்சங்குகளுடனே, கலந்து - கூடி, கறங்க - ஒலிக்கவும், மிலைந்த பூ குழல் வனிதையர் - சூடின மலர்களையுடைய கூந்தலையுடைய மகளிர், மெய் விளக்கு எடுப்ப - உண்மையான தீபங்களை யேந்தவும், நகர் வட்டம்-

அவ்வத்தினபுரியின் பரந்த இடமானது,—கலந்த தாமரைதடம் எலாம் குவிந்ததுகண்டு மலர்ந்த தாமரை வாவிபோன்றது - பொருந்தின தாமரைமலர்களையுடைய தடாகங்களெல்லாம் (அப் பொழுது அத்தாமரைமலர்) குவியப்பெற்றதைப் பார்த்துத் தான் மலர்ந்ததொரு தாமரைத் தடாகத்தை யொத்தது; (எ - று.)

நகர்வட்டமாகிய தாமரை வாவிக்கு-பலவகை வாத்திய கோஷத் தைப் பலவகைப் பறவை யொலியாகவும், சங்கங்களை நீர்வாழுயிர் களாகவும், மகளிரை நீரமாதர் அல்லது நீர்விளையாடும் பெண்களாக வும், திருவிளக்குக்களைத் தாமரைமலர்களாகவுங் கொள்க. இயற்கை யான தாமரைத்தடாகம் சூரியாஸ்தமனத்திற் பூவொடுங்கினதைப் பார்த்து அப்பொழுது தான் பூப்பூத்ததொரு செயற்கைத்தாமரைத் தடாகத்தைப் போன்றது. விளக்கொளியும் ஒலியும் அமைந்த நகரம் என வருணித்ததனால், இது-ஏதுத்தற்குறிப்பேற்றவுவமையணி. முத லடியிற் கூறினது, அந்தியில் வாத்தியம்முழங்கப்படுதலை. மங்கல மென்பதைச் சங்கோடுங் கூட்டுக. மிலைந்த பூங்குழல், கலந்த தாம ரைத் தடம், மலர்ந்த தாமரை வாவி இவை - வடமொழிநடை; பூ மிலைந்தகுழலென்றும், தாமரைகலந்ததடமென்றும், தாமரை மலர்ந்த வாவியென்றுங் கருத்து. மூன்றுமடியில், தடமெலாங் கலந்ததாமரை குவிந்தது கண்டு என்றும் இயைக்கலாம். விளக்கு-(பொருளகளை) விளங்கச் செய்வது; கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்துகெட்ட காரணக்குறியென்றுவது முதனிலைதிரிந்த தொழி லாகுபெயரென்றுவது கொள்க. "தணிமலர்த் திருமகள் தயங்கு மாளிகை, இணரொளி பரப்பிஇன்றிருள் துரப்பன, திணிசுடர் நெய் யுடைத்தீவிளக்கமோ, மணிவிளக்கல்லனமகளிர்மேனியே" எனக் கம்பர் கூறியபடி மகளிர் மேனியாகியவிளக்கும் இரத்தினவிளக்கும் உண்மையால், அவற்றை யொழித்து, நெய்யுடைத்தீ விளக்கமென் றற்கு, 'மெய் விளக்கு' என்றார்; இனி, வனிதையர் மெய்விளக் கெடுப்ப என்பதற்கு - மகளிர் தமது பளபளக்கும் உடம்பாகிய விளக்கை வெளிக்காட்ட என்றும், மகளிர் தமது உடம்பையும் விளக்கையும் காட்டுதலும் ஏந்துதலுஞ் செய்ய என்றும் உரைப்பாரு முளர். நகர்வட்டம் - வட்டவடிவமான நகரமென்றுமாம். (149)

90.—இதுவும், அடுத்தகவியும் - குளகம்; விதுரன் கண்ணனை வணங்கி எழுந்தருளிய காரணத்தை வினவுதல்.

உரகபுங்கவன்மணிமுடியொப்பனதீபம்
இருமருங்கினுமாயிரமாயிரமேந்த
அரிசுமந்தபேராசனத்தழகுடனிருந்த
புரவலன்றனைப்புண்ணியவிதுரனும்போற்றி.

(இ - ள்.) உரக புங்கவன் - பாம்புகட்குத் தலைவனாகிய ஆதிசே ஷனது, மணி முடி - மாணிக்கத்தையுடைய சிரங்களை, ஒப்பன - ஒத்துவிளங்குவனவாகிய, தீபம்-திருவிளக்குக்களை, இருமருங்கினும்-இரண்டுபக்கத்திலும், ஆயிரம் ஆயிரம் ஏந்த - பல ஆயிரக்கணக் காக (ப் பரிவாரங்கள்) எடுத்து நிற்க, அரி சுமந்த பேர் ஆசனத்து -

சிங்கத்தாலினதாகச் சித்திரித்துச் செய்யப்பட்ட பெரியபீடத்திலே, அழகுடன் இருந்த-பொலிவோடு எழுந்தருளியிருந்த, புரவலன்தனை - காத்தற்றொழிலில் வல்லவனை கண்ணபிரானை, புண்ணியம் விதுர னும் - நல்வினைகளையுடைய விதுரராசனும், போற்றி - வணங்கி, (எ - று.)—'என்றான்' என அடுத்த கவியோடு தொடரும்.

புங்கவம் என்பதற்கு ஆண்பசு [எருது] என்று பொருள்; காளை, சிங்கம், யானை, புலி முதலிய சொற்கள்-உயர்திணையில் வரும் பொழுது சிறப்புப் பொருளைக் குறிப்பன வாகுதலால், தலைவனென் கிற பொருளில் புங்கவனென்றது. உரகம் - (காலில்லாமையால்) மார்பினால் (நகர்ந்து) செல்வது; உரம்-மார்பு. அகல் முதலியவற்றில் எரியும் தீச்சுவாலை ஆதிசேஷனுடைய சிரசிலுள்ள மாணிக்கங்களை யொத்திருக்கு மென்க; உவமையணி. மணிமுடி என்பதை - முடி மணி என் மாறுதல் பொருந்தும். 'ஆயிரமாயிரசேந்த' என்றும் பாடம். பரமபாகவதனுதலாலும், கண்ணபிரான் தன்வீட்டுக்கு எழுந்தருளும் பாக்கியமுடைமையாலும், 'புண்ணிய விதுரன்' என்றார். (150)

91. பொங்கராவணைபொலிவறப்போந்தபின்பொதுவர்
தங்கள்பாடியில்வளர்ந்துமாமருதிடைத்தவழ்ந்து
கங்கைமாநதிகால்வழிகருணையங்கடலே
யிங்குநீதனிநடந்தவாறுரைத்தருளென்றான்.

(இ - ள்.) '(பாற்கடலிலே),—பொங்கு - சீறுந்தன்மையுள்ள, அரா - ஆதிசேஷனுகிய, அணை - திருப்பள்ளிமெத்தை, பொலிவு அற - (நீ இவ்வுலகத்தில் எழுந்தருளிவிட்டமையால்) விளக்கத்தை யொழியும்படி, போந்த பின்-(அங்குநின்று இங்குத்) திருவவதரித்த பின்பு, பொதுவர் தங்கள் பாடியில் வளர்ந்து - இடையர்களது சேரி யான கோகுலத்திலே வளர்ந்தருளி, மா மருதிடை தவழ்ந்து-பெரிய இரட்டை மருதமரத்தின் நடுவிலே தவழ்ந்து சென்றவனாய், கங்கை மாநதி கால் வழி-சிறந்த கங்காநதி திருவடியினின்று பெருகப்பெற்ற, கருணை அம் கடலே - அழகிய கிருபா சமுத்திரமே! நீ இங்கு தனி நடந்த ஆறு உரைத்தருள்-நீ இவ்விடத்தில் [இப்பொழுது] தனியே எழுந்தருளின காரணத்தைக் கூறியருள்வாய்,' என்றான் - என்று கூறினனை, (விதுரன்); (எ - று.)

"பாற்கடலில் தங்குகின்ற திருமாலாகிய இந்நாராயணமூர்த்தி, ஆதிசேஷனுகிய பாயலைவிட்டு மதுரைக்கு வந்தானன்றே!" என்று கூறியுள்ளபடி பாற்கடலிற் பாம்பணையிற் பள்ளிகொள்ளும் பரமனே திருவவதரித்ததனால் 'பொங்கராவணை பொலிவறப்போந்தபின்' என்றார்: இவ்வாறு கூறுவது, கடவுளின் அம்சமுழுவதும் அப் பாற்கடலி லில்லாமையா லென்க.

முதல் மூன்று அடிகள் - விதுரன் கண்ணபிரானைப் போற்றிய படி. போந்த - இதில் பகுதியாகிய போ என்பதைப் புகு என்பதன் மரூஉ என்பர். பொதுவர் தங்கள் பாடி - திருவாய்ப்பாடி. திருமால் உலகமளந்த காலத்தில் மேலே சத்தியலோகத்திற்சென்ற அப்பிரா

னது திருவடியைப் பிரமன் தன் கைக்கமண்டலதீர்த்தத்தாற் கழுவி விளக்க, அந்த ஸ்ரீபாததீர்த்தமாகப் பெருகிய நீரே கங்காநதி யென்பது. கருணையங்கடலென்றதற்கு ஏற்ப, 'கங்கைமாநதி கால்வழி' என்பது ஒரு சமத்காரம்; கால் - வாய்க்கால். (151)

92.—கண்ணன் தான் தூதுவந்தமை கூறுதல்.

தோட்டுவந்துசெந்தேனுகர்சுரும்புசூழ்தொடையாய்
காட்டுவந்துமுன்றிரிந்துதங்கடவநாள்கழித்து
நாட்டுவந்தபேரைவர்க்குநற்குருநாடு
கேட்டுவந்தனமென்றனன்விதுரனுங்கேட்டான்.

(இ - ள்.) (அதுகேட்ட கண்ணபிரான்),—(விதுரனை நோக்கி), 'தோடு வந்து செம்தேன் நுகர் சுரும்பு சூழ் தொடையாய் - பூவிதழ்களில் வந்து சிவந்ததேனைப்பருகுகிற வண்டுகள் சுற்றிலும் மொய்க்கப்பெற்ற மாலையையுடையவனே!—முன் காடு உவந்து திரிந்து - முன்னே காடுகளில் மகிழ்ச்சி கொண்டு சஞ்சரித்து, தம் கடவ நாள் கழித்து - (முன்பு அஜ்ஞாதவாசத்தில்) தங்கள் கழிக்கக் கடமைப்பட்டனவான நாள்களையும் கழித்து, நாடு வந்த - (இப்பொழுது) மச்சதேசத்து உபப்பிலாவியத்தில் (வெளிப்பட்டு) வந்துள்ள, பேர் ஐவர்க்கு - ஐந்துபேருக்கு [பஞ்சபாண்டவர்க்கு], நல் குருநாடு கேட்டு - சிறந்த குருநாட்டிற் பாகங்கேட்டற்கு, வந்தனம்-வந்தோம்,' என்றனன் - என்று கூறியருளினன்;—விதுரனும்—, கேட்டான் - (அதனை அன்போடு) கேட்டான்; (எ - று.)

'விதுரனுங்கேட்டான்,' என வேண்டாது கூறினது, அவன் பாண்டவரிடத்தில் மிக்க அன்புகொண்டுள்ளவனுதலால் கண்ணன் கூறியதைப் பேராவலோடு கேட்டுக்கொண்டாடினனென்பதைக் குறிப்பிக்கும். முதலடியில் உவந்த எனப் பிரித்து-மகிழ்ந்து என்றும், இரண்டாமடியில் வந்து எனப் பிரித்து - சென்று என்றும் உரைத்தலுமாம். பேரைவர் - பெருமையையுடைய ஐவரென்றுமாம். கேட்டு - கேட்க என்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு. (152)

93.—விதுரன், சமாதானத்தில் துரியோதனன் அரசுகொடான் என்றல்.

முழக்கினுலுயர்முரசுயர்த்தவன்றனக்குரிமை
வழக்கினுலறிந்தடலரவுயர்த்தகோன்வழங்கான்
தழக்கினுலிருதிசையினுமுரசெழச்சமரில்
உழக்கினுலலதுணர்வனெவென்றவனுரைத்தான்.

(இ - ள்.) (அங்ஙனம் கண்ணபிரான் கூறியதற்கு, உடனே),—அவன் - அவ்விதுரன்,—'அடல் அரவு உயர்த்த கோன் - கொடுமையையுடைய பாம்புக்கொடியை உயர எடுத்த அரசனுகிய துரியோதனன், முழக்கினுல் உயர் முரசு உயர்த்தவன்தனக்கு - ஆரவாரத்தால் மிக்க முரசின்வடிவை யெழுதிய கொடியை உயரவெடுத்தவனுகிய யுதிட்டிரனுக்கு, உரிமை - உரிய இராச்சியபாகத்தை, வழக்கினுல் அறிந்து - நீதிப்படி உணர்ந்து, வழங்கான் - கொடுக்கமாட்

டான்; நால் இரு திசையினும் - எட்டுத்திக்குக்களிலும், முரசு - பேரி கைகள், தழக்கின் - ஆரவாரத்துடனே, எழு - மிக்குத் தோன்ற, சமரில் - போரில், உழக்கினுல் அலது - கலக்கினுலல்லாமல், உணர் வனே - (அவன்) அறிவானே? (அறியான்),' என்று உரைத்தான் - என்று (துரியோதனன் தன்மையை) எடுத்துக் கூறினன்; (எ - று.)

துரியோதனன் முறைப்படி கடவாதவனென்பது அவனது கொடியிலேயே விளங்கு மென்பான், அத்துரியோதனனை 'அடல வுயர்த்தகோன்' என்றான். இவ்வாறு விசேஷ்யத்தை ஒருகருத்துப் படச்சொல்வது, கருத்துடையடைகொளியணியாம். உழக்கினுல்— 'உழ' என்பதன் பிறவினையான உழக்கு - பகுதி: உரிமை - உரிய பொருளுக்குப் பண்பாகுபெயர். நாலிருதிசை - பண்புத்தொகை; நான்கு பெருந்திக்குக்களும், நான்கு மூலைத் திக்குக்களும். வழக்கு - மூத்தவனுக்கு அரசு உரியது என்பதும், 'பன்னிரண்டுவருஷம் வன வாசமும் ஒருவருஷம் அஜ்ஞாதவாசமுஞ் செய்துவந்தால் உரியபா கத்தைக் கொடுப்பேன்' என்று கூறிய சொல் தவறுமல் முன் கொடுத்ததை மீண்டும் கொடுத்தல்வேண்டு மென்பதும் என்க.(153)

94.—கண்ணன் 'அரசுகொடாவிடின் பாண்டவர் போரினுற் பெறுவர்' என்றல்.

வாகைவாவியிலுகண்டெழவளரிளங்கமுகின்
பாகைவாயளிமுரன்றெழும்பழனநாடுடையான்
நாகைவாழ்வவர்க்களித்திலனெனிலெதிர்நடந்து
மூகைவாயுகமுடிப்பர்வெம்போரெனமொழிந்தான்.

(இ - ள்.) (அதுகேட்டுக் கண்ணபிரான்), 'வாகை-வாகைமீன்கள், வாவியில் - நீர்நிலைகளிலே, உகண்டு எழ - துள்ளியெழும்புதலினுல், வளர் இளங்கமுகின் பாகைவாய் - (அருகில்) வளர்ந்துள்ள இளமை யான பாக்கு மரங்களின் பாகைகளிலுள்ள, அளி-வண்டுகள், முரன்று எழும் - ஒலித்து எழப்பெற்ற, பழனம் நாடு - கழனிகளுடைய குரு நாட்டை, உடையான் - (தனதாக) உடையவனுகிய துரியோதனன், நாகை - நாகைக்கு, வாழ்வு - செல்வவாழ்க்கையை [இராச்சியபாகத் தை], அவர்க்கு - அப்பாண்டவர்கட்கு, அளித்திலன் எனில்-கொடா னுனல்,—(அந்தப்பாண்டவர்கள்), எதிர்நடந்து - எதிர்த்து வந்து, மூகை வாய்உக - (அத்துரியோதனனியர்களது) மூகைகள் வாய்வழியே சிந்தும்படி, வெம் போர் - கொடிய யுத்தத்தில், முடிப்பர் - (அவர்களை) அழித்திடுவார்கள்,' என - என்று, மொழிந்தான் - கூறியருளி னன்; (எ - று.)

முன்னிரண்டடி, மருதநில வருணனை. கமுகம்பாகையில் வண்டு ஒலித்து எழுதற்கு வாவியின் வாகை குதித்தெழுதல் காரணமாத லால், எழ என்னுஞ் செயவெனெச்சம் - இறந்தகாலம். நாகை - எதிர்காலங் குறிப்பதோரிடைச்சொல்: இனி விரைவில் என்றபடி. 'அவர்க்கு' என்றதிலுள்ள அகரம் - சுட்டெழுத்து; அன்றி, பிரித் தியைக் கர்ட்டுவதுமாம். மூகை - ஒருவகை நிணம். (154)

95.—கண்ணன் 'அரசுகொடாமை உலகவியல்பே' என்றல்.

விரைந்துபாய்பரிமன்னவரிதம்படமெலிவுற்
றிரந்துவேண்டினுங்கிளைஞருக்கொருபொருளீயார்
பரந்தபோரினிலெதிர்த்தவர்படப்படப்பகழி
துரந்தபோதவர்க்குதவுவர்சொன்னவையெல்லாம்.

(இ - ள்.) விரைந்து பாய் பரி மன்னவர் - துரிதப்பட்டுப் பாய்ந்து செல்லுகிற குதிரைகளையுடைய அரசர்கள்,—மெலிவுஉற்று இதம்பட இரந்து வேண்டினும் - (உறவினர்) தளர்ச்சியடைந்து இனிமைபொருந்த (த் தம்மை) யாசித்துப் பிரார்த்தித்துக்கேட்டாலும், கிளைஞருக்கு-அவ்வுறவினர்க்கு, ஒரு பொருள் ஈயார் - சிறிது பொருளையுங் கொடுக்கமாட்டார்கள்; அவர் - அவ்வுறவினர்களே, எதிர்த்து - (தம்மை) எதிரிட்டு, பரந்த போரினில் - மிக்க யுத்தத்திலே, பட பட - (தம்மீது) மேன்மேற் படும்படி, பகழி - அம்புகளை, துரந்தபோது - பிரயோகித்தபொழுது, அவர்க்கு - அவர்களுக்கு, சொன்னவை எல்லாம் - (அவர்கள்) சொன்ன பொருள்களை யெல்லாம், உதவுவர் - கொடுத்திடுவார்கள்; (எ - று.)—இதுவும், அடுத்த கவியும் - ஒரு தொடர்.

இது - உலகத்திற் பெரும்பான்மையான இயற்கையை மன்னவர் மேல் ஏற்றிக்கூறியது. உறவினர்கள் இரந்துகேட்டால் கொடுப்பதில்லை; அவர்கள் தங்கட்கு அம்புகளால் இரணங்கொடுத்தால் கேட்டவை கொடுப்பார்கள் என்ற இக்கருத்தில் மாற்றுநிலையணி காண்க. "பெற்றூர் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில், உற்றூ ருகந்தாரென வேண்டார்—மற்றூர், இரணங் கொடுத்தாலிடுவ ரிடாரே, சரணங் கொடுத்தாலுந் தாம்" என்ற செய்யுளும் இக்கருத்துக் கொண்டதே. படப்பட-அடுக்கு, இடைவிடாமைப் பொருளது. எதிர்த்தவர் படப்பட - எதிர்த்தவர்கள் மிகுதியாக அழியும்படி யென்றுமாம். இனி, எதிர்த்தவர் துரந்தபோது என இயைத்து உரைத்தலுமாம். (155)

96.—கண்ணபிரான் கண்வளர்தல்.

என்றுபாரினிலியற்கையும்விதுரனுக்கியம்பி
வென்றுபோர்கெழுநேமியான்விடைகொடுத்தருளிக்
குன்றுபோற்புயக்காவலர்கொடுந்துடிகறங்க
மன்றணைமலர்ப்பாயலின்மீதுகண்வளர்ந்தான்.

(இ - ள்.) என்று பாரினில் இயற்கையும் விதுரனுக்கு இயம்பி-என்று இவ்வாறு உலகத்திலுள்ள இயல்பையும் விதுரனுக்குக் கூறி,—போர் வென்று கெழு நேமியான் - வெற்றிகொண்டு விளங்குகிற சக்கராயுதத்தை யுடையவனை கண்ணபிரான்,—விடைகொடுத்து அருளி - (அவ்விதுரனுக்குச்) செலவு கொடுத்தனுப்பிவிட்டு,—குன்று போல் புயம் காவலர் கொடுந்துடி கறங்க - மலைகள் போன்ற தோள்களையுடைய காவலாளர்கள் கொடிய(ஒலியையுடைய) துடியென்னும் வாத்தியத்தை ஒலிக்க, மன்றல் நாள் மலர் பாயலின்

மீது கண்வளர்ந்தான் - பரிமளத்தையுடைய அன்று மலர்ந்த மலர் களைக்கொண்டு பரப்பப்பட்ட படுக்கையின் மேற் பள்ளிகொண்டருளினன்; (எ - று.)

உம்-எச்சம். மூன்றுமடியிற் கூறியது, இரவில் துயில்கொள்ள வேண்டிய பொழுது வந்ததைக் குறித்தற்கு அடையாளமாக வாத்தியம் வாசிக்கப்படுதலை. முற்காலத்தில் அரண்மனைகளில் அவ்வக்காலங்கள் வந்தமையை அரசர்கள் அறியுமாறு வாத்திய முழக்கத்தால் அறிவித்தல், மரபு. கொடுந்துடி - கடுரமான [மிக்க] தொனியையுடைய துடி யென்க; இனி, கண்ணபிரானிருக்குமிடத்தில் ஒலிப்பதால், பாண்டவதூதனுக வந்த அப்பிரானிடத்தும் பகைமைகொண்டுள்ள துரியோதனாதியர்க்குக் கொடிய துடி யென்றலும் ஒன்று; ஒலியின் தன்மையை வாத்தியத்தின் மேலேற்றிக் கூறிய உபசாரவழக்கு: இனி, வகீர்ந்த துடி யென்பாரு முளர். மன்றல் - வாசனை. நாள் மலர் - புதிய மலர். மலர்ப்பாயல் - புஷ்ப சயனம்; இது, விதுரன் கண்ணபிரானுக்காக அமைத்ததென்க. கண் வளர்தல் - ஒரு சொல். (156)

97.—இனி - இராத்திரிகால வருணனை.

குளிருமாமதிமுகத்தொளிர்குமுதவாய்மலர்த்திக்
தளவவாணகைபரப்பிவண்சததளமலர்க்கை
அளவிலேகுவித்தளியொடுமகன்றிலாமையினுற்
களிகொடோள்விலக்கணிகையைப்போன்றதக்கங்குல்.

(இ - ள்.) குளிரும் மா மதி முகத்து ஒளிர் குமுதம் வாய் மலர்த்தி-குளிர்ச்சியாகவுள்ள பெரிய பூர்ணசந்திரன் போன்ற தனது முகத்திலே விளங்குகிற செவ்வாம்பல் மலர்போன்ற வாயைத் திறந்து [குளிர்ந்த பெரிய சந்திரமண்டலத்தினின்றிலே விளங்குகிற ஆம்பலரும்புகளின் நுனியை மலரச்செய்து], தளவம் வாள் நகை பரப்பி - மூல்லையரும்பு போன்ற பிரகாசமான பற்களி னொளியைப் புன்சிரிப்பினுற் பரவச்செய்து [மூல்லை மலர்களின் ஒள்ளிய விளக்கத்தை வெளித்தோற்றி], வள் சத தளம் மலர் கை அளவிலே குவித்து அளியொடும் அகன்றிலாமையினுல் - அழகிய தாமரை மலர்போன்ற (தன்) கையை(ப் பொருள்வந்த) அளவிலே குவியச் செய்து (வெளித்தோற்றத்துக்கு) அன்போடு நீங்காமையால்[அழகிய தாமரை மலரினிடத்தை (வண்டுகள் வந்து சேர்ந்த) அளவிலே குவியச்செய்து அவ்வண்டுகளோடும் நீங்காமையால்], அகங்குல் - அவ்விராத்திரி, களி கொள் விலோ தோள் கணிகையை-(பொருள் கொடுப்பவர் பலருந் தழுவிக்) களிப்புக் கொள்ளுதற்கிடமான தோள்களையுடைய வேசையை, போன்றது - ஒத்தது; (எ - று.)

இப்பாட்டு - சிலேடையுவமையணி. இதில், முதல் மூன்றடி - விலாமகளுக்கும், இரவுக்கும் சிலேடையாக ஒரு பொருள் பட்டது. அளி - அன்பும் வண்டு மாதலை "வண்டின் பெயரு மதுவுங்கொடையும் அன்புங் கூறும் அளியென் இளவி" என்ற நிவாசத்தாலும் அறிக. அளி - அன்பைக் குறிக்கையில் தமிழும், வண்டைக்குறிக்

கையில் ஸம்ஸ்கிருதமுமாம். தனது முகமண்டலத்திலுள்ள அதரத்தி னழகை வெளிக்காட்டி மினுக்குதலும், வாய் மலரைத்திறந்து பல்லி னழகு தோன்றப் புன்சிரிப்புச் செய்தலும், சமயம் பார்த்துக் கை நீட்டிப் பணம்பறித்தலும், மனத்திற் சிறிதும் அன்பில்லாதிருந்தும் பொருள்காரணமாக வெளியில் அன்பை மிகுதியாகக் காட்டுதலும் ஆகிய வேசையரியல்புகளும், சந்திரனுதித்த மாத்திரத்தில் ஆம்பல் மலர்தலும், முல்லை மலர்விளங்குதலும், தன்னில் மொய்த்த வண் டோடு தாமரை குவிதலும் ஆகிய இரவின் இயல்புகளும் இதில் விளங்கும். வேசைக்கு ஆகும்பொழுது, அளியாடும் அகன்றி லாமையினால் என்பதற்கு - அன்பினுடன் பரவாமையால் என உரைப்பினும் பொருந்தும். வடமொழியிற் பெண்பாற்சொல்லும் பலர்க்கும் பொதுவுமாகிய இரவைப் பொதுமகளாகவருணித்தல்மிகப் பொருந்துமாறு காண்க. குமுதம், தளவம் - அவற்றின் மலர் களுக்கு முதலாகுபெயர். வாள் என்பது - ஒளியையுணர்த்தும் பொழுது, உரிச்சொல்லாம்; 'வாளொளியாகும்' என்பது தொல் காப்பியம். சததளம் என்பதற்கு - நூறு [மிகப்பல] இதழ்களை யுடைய தென்றும், கணிகா என்பதற்கு - (செல்வத்தையே எப் பொழுதும் விரும்பி) எண்ணுபவளென்றும் காரணப்பொருள். விலைக் கணிகை - தனது இன்பத்தைப் பொருளுக்கு விற்றலையுடைய கணிகை. வேசைக்கு ஆம்பொழுது, சததள மலர்க்கை அளவிலே குவித்து என்பதற்கு - வருபவர் அளவிற்கேற்பத் தனது கையைக் கூப்பி யுபசரித்து என்றலுமொன்று. சததளம் - நூறுகிய இதழையுடையதெனப் பண்புத்தொகையன்மொழி. (157)

98.—இருள் நீங்கிக் கீழ்வானம் வெளுக்கச் சூரியகிரணங்கள் வெளித் தோன்றுதல்.

அகன்றவாரிருட்கடல்பொருதொருபுடையண்டம்
பிளந்ததாமெனக்கரும்படாம்பீறியதென்ன
வகன்றவேழ்கடல்வற்றமேல்வடவையின்முகத்தீக்
கிளர்ந்ததாமெனக்கிளர்ந்தனவிரவியின்கிரணம்.

இ - ள்.) அகன்ற - (எங்கும்) பரவி நிறைந்த, ஆர் இருள் - போக்குதற்கு அரிய இருட்கூட்டமாகிய, கடல்-கடல் வெள்ளத்தை, பொருது - பொறுக்கமாட்டாமல், அண்டம் - இவ்வண்டகோளம், ஒரு புடை - ஒரு பக்கத்தில் [கீழ்த்திசையில் என்றபடி], பிளந்தது ஆம் என - பிளந்தது போலுமென்று சொல்லவும், —கரும் படாம் பீறியது என்ன - கருநிறமுடையதொரு பெருஞ்சீலை (ஒரு பக்கத் தில்) இழிந்தது போலுமென்று சொல்லவும், —வகன்ற ஏழ் கடல் வற்ற - (உலகத்தைச்) சூழ்ந்துள்ள ஏழ் கடல்களும் வற்றும்படி, வடவையின் முகம் தீ - படபாமுகாக்கினி, மேல் கிளர்ந்தது ஆம் என - மேலே எழுந்ததுபோலு மென்று சொல்லவும், இரவியின் கிரணம் - சூரியனது கிரணங்கள், கிளர்ந்தன - வெளி விளங்கின;

பின்மாலைவேளையில் கன்னியிருள் மிக்கிருக்கையில் திடுக் கென்று கீழ்வானம் வெள்ளென்னச் செஞ்சுடர் ஞாயிற்றின் கிரணங்

களிற் சில முன்னர்த் தோன்றுதலே இங்ஙனம் வருணித்தார்; தற் குறிப்பேற்றவணி. முன்னிரண்டடிகள் - இருள்நீங்கக் கீழ்வானம் வெளுத்ததையும், பின்னிரண்டடிகள் சூரியனுதிப்பதற்கு முன்னமே சூரியகிரணங்களிற் சில தோன்றுவதையும் கூறியன. படாம் - பட மென்பதன் திரிபு. வடவை - பெண்குதிரை. கடலினிடையிலே ஒரு பெண் குதிரையின் முகத்தில் நெருப்பு உள்ளதென்றும், அது மழை முதலியவற்றால் வருகிற நீரினுற் கடல் பொங்காதபடி அந்நீரை உறிஞ்சுவதென்றும், யுகாந்தகாலத்தில் அது அங்குநின்று எழுந்து உலகங்களை யெரித்து ஒழிப்பதென்றும் நூற்கொள்கை. அண்டம்- உலக வருண்டை. ஆர் இருள் - நிறைந்த இருளுமாம். சூரிய னுடைய பலகிரணங்கள் வெளித்தோன்றுமாதலால், 'இளர்ந்தன' எனப் பன்மையாற் கூறினர். 'இரவியின் கிரணம் இளர்ந்தன' என்பதற்கு அருணோதயமாயிற்று எனக் கருத்து. (158)

99.—சூரியோதய வருணனை.

இகலும்வாளரவுயர்த்தவனிருந்ததொல்பதியில்
அகிலநாயகனெருதனிநடந்தவாறறிந்து
மகரவாரிதியகன்றுமாமருங்குறவணைந்த
திகிரிபோலவந்தெழுந்தனனிரவிகீழ்த்திசையில்.

(இ - ள்.) இகலும் - பகைக்கும் தன்மையுள்ள, வாள் அரவு உயர்த்தவன் - கொடிய பாம்புக்கொடியை உயரவெடுத்தவனுமிய துரியோதனன், இருந்த - அரசுவீற்றிருக்கப்பெற்ற, தொல் பதியில்- பழமையான அத்தினபுரியிலே, அகிலம் நாயகன் - எல்லாப்பொருள் கட்கும் தலைவனுமிய திருமால், ஒரு தனி நடந்த ஆறு-ஒரு துணையு மில்லாமல் தனியனாய்ச்சென்று சேர்ந்த விதத்தை, அறிந்து—, மகரம் வாரிதி அகன்று மா மருங்கு உற அணைந்த - சுறுமீனகளை யுடைய கடலினின்று நீங்கி (அக்கண்ணபிரானது) சிறந்த பக்கத்தில் வந்து சேர்தற்குச் சமீபித்த, திகிரி போல - (அக்கடவுளது சுதரிசன மென்னுஞ்) சக்கராயுதம்போல, இரவி-சூரியன், கீழ் திசையில் வந்து எழுந்தனன் - கிழக்குத்திக்கில் வந்து உதித்தான்; (எ - று.)

சூரியன் உதிப்பதற்குச் சிறிது முன்னமே அவனது கிரணங் களிற் சில வெளித்தோன்றுவதை முற்செய்யுளாற் கூறி, இச்செய் யுளாற் சூரியனே உதயமாயினமையைக் கூறுகிறார். திருமாலினது சக்கரத்தின் அம்சமான சூரியனுக்கு அச்சக்கரத்தை உவமைகூறி வருணித்தல், மிகப்பொருந்தும்; "செஞ்சுடரோன், திருமால் திருக் கைத் திருச்சக்கர மொக்கும்" என்றார் ஆழ்வாரும். அன்றியும், எங்கும் உபமேயத்தினும் உபமானம் சிறந்திருக்க வேண்டுமென்கிற அலங்கார நூலார் கொள்கையின்படி, இங்கு, கோடி சூரிய பிரகாச மான திகிரி இரவிக்கு உவமையாதற்கு ஏற்குமாறு காண்க. ("சென் னலங்கையிற்கொண்ட தென்னீயே நேமியாக வந்நீலமேனியாய், னின்னமும் பொரத்தேடு மாக்கவத்தினின்றுமென்றுகொண் டெண் ணியே கொலோ, தன்னெடுந்தனிச்சயிலமும் பொலந் தபனியத்தடஞ் சயிலமாகவே, மின்னெடுஞ் செழுங்கதிர் பரப்பினன் வெய்யவெழு

பரித்தேர் விபாகரன்" என மேல் வீட்டும பருவத்தில் சூரியோதய வருணனை, கூறுவதையும் அறிக.) எம்பெருமானுக்குப் பகையாகும வரை உடனே அழித்தற்குச் சமயத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிற சக்கரம், அத்திருமால் கிருஷ்ணவதாரத்தில் பகைவனை துரியோதனனது ஊர்க்குத் தனியே சென்றதை அறிந்து முன் ஜாக்கிரதையாக ஓடிவந்து அவனருகிற் சேர இருந்தாற்போன்றது, சூரிய மண்டலம் எனக் குறித்தார்; இதுவும்-தற்குறிப்பேற்றவணியே.

ஒருதனி - தன்னந்தனியென்பதுபோலத் தனிமைச் சிறப்பை யுணர்த்தும் ஒருபொருட்பன்மொழி. தமையன் தம்பிமாராயினும் புத்திர பவுத்திராதியராயினும், பாண்டவராயினும் உடனில்லாம லென்றபடி; கீழ் 75 - ஆங் கவியிலும் இங்ஙனமே கொள்க. சுறு மீன் கடலில் மாத்திரமே வாழுதல் பற்றி, 'மகரவாரிதி' என்பது கடலுக்கு அடைமொழி. இதனை 'மகாலயம்' என்னுங் கடலின் வடமொழிப் பெயராலும் அறிக. மாமருங்கு என்பதில், வலப்பக்க மென்ற கருத்தும் அடங்கும். திருமால் திருப்பாற்கடலில் பஞ்சாயுதங்களும் புடைசூழ்ந்து காப்பப் பள்ளிகொள்ளுதலால், அப் பாற் கடலை விட்டு இங்குத் திருவவதரித்தபோது சக்கரமும் வேண்டிய சமயத்தில் உதவுமாறு அக்கடலைவிட்டு அகன்றுவந்த தென்னுங் கருத்துப்பட 'மகரவாரிதியகன்று' என்றார். (159)

வேறு.

100.—இதுமுதல் நான்கு கவிகள்-அன்றைக்குத் துரியோதனன் கொலுமண்டபத்தில் அரசு வீற்றிருத்தற் சிறப்புக் கூறப்படுகின்றது.

சோதிவானநதிமைந்தனும் பழையசுருதியாலுயர்துரோணனும்
ஆதியாகவுயிரினும்வியப்புறவடுத்தமன்னவரநேகரும்
நீதியாறுவகையைந்து பத்தொடாறு பத்தொராயிரவர்நிருபரும்
நீதிலாததிறலக்குரோணிபதிஞென்றுபெற்றமிகுசேனையும்.

இதுமுதல் ஐந்துகவிகள் - குளகம்.

(இ - ள்.) சோதி - ஒளியையுடைய, வானம் நதி மைந்தனும் - ஆகாயத்திலுள்ள கங்காநதியினது குமாரனை விடுமனும், பழைய சுருதியால் உயர் - அநாதியான வேதங்களோ யறிதலாற் சிறந்த, துரோணனும்—, ஆதி ஆக - முதலாக, உயிரினும் வியப்புஉற - (துரியோதனனுக்குத் தன்) உயிரினும் (சிறந்தவரென்று) அதிசயிக்கும்படி, அடுத்த - நெருங்கியுள்ள, மன்னவர் அநேகரும் - அரசர்கள் பலரும், நீதி - முறைமையையுடைய, ஆறுவகை ஐந்து பத்தொடு அறுபத்தொராயிரவர் நிருபரும் - மூன்றுலட்சத்து அறுபத்தோராயிரம் அரசர்களும், நீதி இலாத இறல் - குற்றமில்லாத வலிமையையுடைய, அக்குரோணி பதினென்று பெற்ற மிகு சேனையும் - பதினொரு அக்ஷௌஹிணி யென்னுந் தொகையைப் பெற்ற மிகுந்த சேனைகளும், (எ-று.)—'வந்து சூழ்' என மேற்கவியோடு தொடரும்.

சோதி - க்ஷத்திரிய தேஜசு; "உறங்குமாயினு மன்னவன் தன் ஞெளி, கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" எனக் கூறியபடி, தாம் உறங்குகையிலும் உலகத்தைக் காக்கின்ற அரசது தெய்வத் தன்மையோடுகூடிய ஒளி யென்க; இனி, புகழ் என்றுங் கொள்ள லாம். வேதம் - பிறநூல்கள் போல ஒருவராற் செய்யப்படாமல் கடவுளால் வெளியிடப்படுதல்மாத்திரமாய்க் கடவுளைப்போலவே நித்தியமாய் என்றும் ஒருபடிப்பட இருத்தலால் 'பழையசுருதி' எனப்பட்டது. உயிரினும் வியப்புற - ஒவ்வொருபிராணிக்கும் தன்தன் உயிரினிடத்தில் எவ்வளவு அன்பு இருக்குமோ அதனினும் அதிகமாகத் துரியோதனனுக்கும் இவ்வரசர்களுக்கும் ஒருவர்க் கொருவர் அன்பு உள்ள தென்க. ஆறுவகையைந்துபத்தெடாடு பத்தெதாராயிரவர்—ஐந்து பத்து - ஐந்தாகிய பத்து என ஐம்பது; ஆறுவகை யைந்து பத்து-ஆறினாற் பெருக்கப்பட்ட ஐம்பது என முந்நூறு. முந்நூருயிரவரும், அறுபத்தெதாராயிரவரும் எனத் தனித்தனி - இயைக்கவே, மூன்று நூருயிரத்து அறுபத்தெதாரு ஆயிர மென்னுந் தொகையை யுடையராயிற்று. இனி, நீதியாறு வகை - அறுவகை முறைமைகளையுடைய, ஐந்துபத்தெடாடு அறுபத் தெதாராயிரவர் - ஐம்பது ஆயிரத்தோடு அறுபத்தெதாரு ஆயிரங் கூடிய லட்சத்துப் பதினோராயிரம் பேர் என்று உரைப்பாரு முளர். மூன்றுமடியின் கருத்து-மிகப்பலரென்பது. ஆறுவகை நீதி - ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிற்றல், பொருதல் என்னும் அரசரு தொழி லென்றேனும்; அறங்கிலையறம், மறங்கிலையறம்; அற நிலைப்பொருள், மறநிலைப் பொருள்; அறநிலையின்பம், மறநிலை யின்பம் என்னும் அரசிய லாறென்றேனும்; அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஆறு அங்கமென்றேனும் கொள்க. நிறலுக்குத் நீது-தோல்வி. அநேகர் - ஒன்றல்லாதவர்; எனவே, பலர்; ந + ஏக எனப் பிரித்து புணரும். அக்குரோணி-அக்ஷௌஹிணி என்னும் வடசொல்லின் சிதைவு; அது-தேர் இருபத்தோராயிரத் தெண்ணூற்றெழுபது, யானை - இருபத்தோராயிரத் தெண்ணூற் றெழுபது, குதிரை - அறுபத்தையாயிரத் தறுநூற்றுப்பத்து, காலாள் - லக்ஷத்தொன்பதினாயிரத்து முந்நூற்றைம்பது; ஆக இரண்டு லக்ஷத்துப்பதினெண்ணாயிரத் தெழுநூறு கொண்டது.

இதுமுதல் நாற்பத்தொருகவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களும், இரண்டு நான்கு ஆறுஞ் சீர்கள் விளங்காய்ச்சீர்களும், ஏழாவது விளச்சீருமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீர் ஆசிரியவிருத்தங்கள். (160)

101. தொக்கவெண்கவரி யாலவட்டநிரைசொட்டை வாள் பரிசைதுகிலுடன், கைக்களாசியிவைகொண்டுலாவிவரு கன்னிமங்கை யர்களினவரு, மிக்கவேதியர்கள் வல்லபல்கலை விதத்திலுள்ளவர்கள் யாவருந், தக்கதம்பியரும் வந்துசூழவுயர் தரணிமேனிருபர் தம்பிரான்.

(இ - ள்.) தொக்க - (கற்றையாக) அடர்ந்துள்ள, வெள் கவரி - வெண்ணிறமான சாமரங்களும், ஆலவட்டம் நிரை - ஆலவட்டங்

களின் வரிசைகளும், சொட்டை - வகீர தடிகளும், வாள் - வாளாயுதங்களும், பரிசை - கேடகங்களும், துகிலுடன் - விருதுக்கொடிச் சீலைகளும், கை களாசி - கையிற் கொள்ளுதற்கு உரிய படிக்கங்களும், இவை - (என்னும்) இவற்றை, கொண்டு - கைகளில் எடுத்துக்கொண்டு, உலாவி வரு - ஒழுங்காக நடந்து வருகிற, கன்னிமங்கையர்கள் அனைவரும் - மணம்பெறுத இளம் பெண்கள் பலரும், மிக்க வேதியர்கள் - மிகுந்த வேதமவல்ல அந்தணர்களும், வல்ல பல்கலை விதத்தில் உள்ளவர்கள் - தாம்தாம் வல்ல அநேகவகையான சாஸ்திரங்களின் பகுப்புக்களில் தங்கியுள்ளவர்களும், யாவரும் - மற்றும் எல்லோரும், தக்க தம்பியரும் - (தனக்குத்) தகுந்த தம்பிமார்களும், வந்து சூழ - வந்து தன்னைச் சுற்றிலுமிருக்க, உயர் தரணி மேல் நிருபர்தம் பிரான் - சிறந்தபூமியிலுள்ள அரசர்களுக்கெல்லாந் தலைவனன துரியோதனன்,—(எ - று.)—'வாசவன்கொலென வைகினன்' என 103-ஆம் கவியோடு இயையும்.

ஆலவட்டம் - கால்செய்வட்ட மென்பர்; வட்டவடிவமான ஒரு வகைபெருவிசிறி. பரிசை - தன்மேற்பிரயோகிக்கப்படும் ஆயுதங்களைத் தடுத்தற்குப் பிடிக்கும் ஒருகருவி. மங்களகரமாகச் சில வஸ்திரத்தைச் சுருக்கிப் பிடிக்கும் மரபும் உண்டு. களாசி - தாம்பூலம் முதலியவை ஏந்தும் ஒரு வகைப் பாத்திரம். கைக்களாசி-சிறுகளாசியுமாம். தம்பிமார்களும் தமையன் போலவே கொடுமையிற் சிறந்த வராதலால், 'தக்க தம்பியர்' என்றது. (161)

102. நிரைகதிர்க்கனக நீள்சுவர்ப்பவளவுத்திரத்திடைநிரைத்த வொண், பருமணிக்கிரணபற்பராக வயிரத் துலாமிசபரப்பிவெண், டரளவர்க்க வயிடூரியப்புதிய கோமளப் பலகை தைத்துமா, மரகதத்தி னெருகோடி தூணிரை யமைத்தமண்டப மருங்கரோ.

(இ - ள்.) நிரை - தொகுதியான, கதிர் - ஒளியையுடைய, கனகம் - பொன்னினாற்செய்யப்பட்ட, நீள் சுவர் - நீண்ட சுவர்களின் மேல், பவளம் உத்திரத்து இடை - பவழத்தாற்செய்யப்பட்ட உத்திரங்களுக்கு இடையிடையிலே, நிரைத்த - ஒழுங்காக அமைக்கப்பட்ட, ஒள் பரு மணி கிரணம் பற்பராகம் வயிரம் துலாம் - ஒளியுள்ள பருத்த மாணிக்கங்களாலும் ஒளியையுடைய பதுமராக மென்னும் இரத்தினங்களாலும் வயிரக்கற்களாலும் அமைந்த வரிச்சல்களை, மிசை பரப்பி - மேலே பரப்பவைத்து, வெள் தரளம் வர்க்கம் - வெண்மையான முத்துக்களின் திரள்களாலும், வயிடூரியம் - வைடூரிய மென்னும் இரத்தினங்களாலும் செய்யப்பட்ட, புதிய கோமளம் பலகை - புதுமையான அழகிய பலகைகளை, தைத்து - பதித்து, மா மரகதத்தின - சிறந்த மரகத ரத்தினத்தாலாகிய, ஒரு கோடி தூண் - ஒருகோடி தூண்களை, நிரை அமைத்த - வரிசையாக நிறுத்தப்பட்டுள்ள, மண்டபம் மருங்கு-சபா மண்டபத்தினிடத்திலே,—(எ - று.)—'வைகினன்' என அடுத்தகவியோடு இயையும். அரோ - சற்றசை.

இங்ஙனம் பொன்னாலும் நவரத்தினங்களாலுமே அமைந்துள்ளது மண்டபமெனச் செல்வச் சிறப்பை வருணித்ததனால்.

வீறுகோளணி. துலாம்-இங்கு, உத்திரத்தின் உறுப்பு. நிரைத்த - அளவொத்து அமைந்த என்றபடி, வைடூர்யமென்னும் வடமொழி, முதற்போலிபெற்றது. பத்மராகம் - (செந்) தாமரை மலர்போலச் செந்நிறமுடையது. துலாம் - கைத்துண்டுமாம். (162)

103. முட்டநித்தில நிரைத்தபந்தரி னகைத்தசீரரிமுகத்தகால், வட்டமெத்தைகொடமைத்தபீடமிசை வாசவன்கொலெனவைகினன், பட்டவர்த்தனருமகுடவர்த்தனரும்வந்துசேவடிபணிந்தபின், இட்ட பொற்றவிசின்முறைமையாலினிதிருக்கவென்றவரை யேவியே.

(இ - ள்.) முட்ட - மிகநெருங்கும்படி, நித்திலம் நிரைத்த - முத்துக்களை ஒழுங்காகக் கோத்து அமைக்கப்பட்ட, பந்தரின் - பந்தலின் கீழ்,—நகைத்த சீர் அரி முகத்த கால் - சிரிக்கின்ற தன்மையையுடைய சிங்கத்தின் முகவடிவமாகச் சித்திரிக்கப்பட்ட கால்களையுடையதும், வட்டம் மெத்தை கொடு அமைத்த-வட்டவடிவமான மெத்தையைக்கொண்டு மேல் அமைத்து வைக்கப்பட்டதுமான, பீடம் மிசை-சிங்காதனத்தின்மீது, வாசவனகொல் என - தேவேந்திரனேவென்று (பார்ப்பவர்) கருதும்படி, வைகினன் - (வந்து) வீற்றிருந்து,—பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனரும் வந்து சே அடி பணிந்த பின்-பட்டந் தரித்த அரசர்களும் மகுடந் தரித்த அரசர்களும் வந்து சிவந்த (தனது) பாதங்களை நமஸ்கரித்தபின்பு, இட்ட பொன் தவிசில் இனிது இருக்க என்று - அங்கு இடப்பட்டுள்ள பொன்மயமான ஆசனங்களில் இனிமையாக இருப்பீர்களாக வென்று, அவரை-அவ்வரசர்களை, முறைமையால் - (அவரவர்க்குரிய) முறைமைப்படி, ஏவி - கட்டளையிட்டு,—(எ - று.)—'கண்பரப்பி' என மேற்கவியோடு தொடரும்.

பந்தர் - பந்தல்; இறுதிப்போலி. மெத்தை - மெத்தென்றிருப்பது. வாஸவன் - அஷ்டவசுக்களுக்குத் தலைவன்; அல்லது, எல்லாஐசுவரியமு முடையவன். பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் - அரசர்களின் பகுப்புக்கள். ஒருகோடி கிராமம் ஆள்பவன் - மகுடவர்த்தனனென்றும், அவனுக்கு மேற்பட்டவன் - பட்டவர்த்தனனென்றுங் கூறுவர். கொல் - ஐயம். (163)

104.—கண்ணனை எதிர்கொள்ளக்கூடாதென்று துரியோதனன் அரசர்க்குக் கட்டளையிடுதல்.

காவன்மன்னவர்முகங்கடோறுமிருகண்பரப்பியமர்கருதுவோ
ரேவலின்கண்வருதாதனுமிடையனின்றுநம்மவையிலெய்தினுல்
ஓவலின்றியெதிர் சென்று கண்டுதொழுதுறவுகூரினியுங்களுர்
தீவலஞ்செயவடர்ப்பனென்று நனிசீறினுன் முறைமைமாறினுன்.

(இ - ள்.) முறைமை மாறினுன் - நீதிதவறினவனான துரியோதனன்,—காவல் மன்னவர் முகங்கள்தோறும் இரு கண் பரப்பி - (இராச்சியத்தை) ஆளுதற்றொழிலையுடைய அரசர்களதுமுகங்களிலெல்லாம் தனது இரண்டு கண்களைப்பரவச்செய்து (அவர்களை நன்றாகப்பார்த்து), 'அமர் கருதுவோர் ஏவலின்கண் வருதாதன் ஆம்

இடையன் - (இராச்சியத்தைப் பெறும் பொருட்டு) போரைச் செய்யக் கருதுகின்ற பாண்டவர்களது கட்டளையினால் வருகின்ற தூதனுகிய இடையர் சாதியனை கண்ணன், இன்று - இன்றைக்கு, நம் அவையில் - நமது இந்தசபையில், எய்தினால் - வந்தால், ஓவல் இன்றி எதிர் சென்று கண்டு தொழுது உறவு கூரில் - (நீங்கள் யாராயினும்) ஒழிதலில்லாமல் (அவனை) எதிர்கொண்டுபோய்ப் பார்த்து வணங்கி உறவு கொண்டாடுவீராஞல், இனி உங்கள் ஊர் நீ வலம் செய அடர்ப்பன் - அதன்பின் உங்களுடைய ஊர்களை நெருப்புச் சூழும்படி கொளுத்தி விடுவேன்', என்று—, நனி சீறினன் - மிகக் கோபமாகக் கூறினன்; (எ - று.)

இராச தருமம் சிறிதுமில்லாத கொடுங்கோல் மன்னனுதலின், இங்ஙனங் கூறினன் என்பார், 'சீறினன் முறைமை மாறினன்' என்றார். 'உறவுகூரில்' என்ற பாடத்துக்கு - உறவுமுறைமைக் குரிய உபசாரவார்த்தைகளைச் சொன்னுல் என்றபடி. ஓவல் இன்றி - சும்மா இராமல்; ஓவு-பகுதி; இதனை ஒருவு என்பதன் மரூஉ என்பர். இடையர் மனையில் வளர்ந்தது மாத்திரத்தைக்கொண்டு, இடைய னென இகழ்ந்தான். இங்ஙனம், பாண்டவர்மேலுள்ள கோபம், அவர் தூதனை கண்ணபிரான் மேலுஞ் சென்றது. (164)

105.—கண்ணபிரான் துரியோதனனது சபையில் எழுந்தருளுதல்.

இந்தவண்ணமுரைசெய்தமன்னருமிராசராசனுமிருக்கவே
தந்தவண்ணனுடன்வந்த வண்ணலொளிதங்குகண்டுயிலுணர்ந்தபின்
கந்தவண்ணமலர்கொண்டு கைதொழுதுகாலையிற் பல கடன்கழித்
திந்தவண்ணமுனிருந்த பேரவையிலேயினனிசைகொள்வேயினன்.

(இ - ள்.) இந்த வண்ணம் - இவ்வாறு, உரை செய்து - கூறி, இராசராசனும் - துரியோதனனும், மன்னரும் - (மற்றை) அரசர்கள் பலரும், இருக்கவே - (சபையில்) வீற்றிருக்கையிலே,—இசை கொள் வேயினன் - சப்த சுரங்களையுமுடைய புல்லாங்குழலை (இளமையில் பசு மேய்க்கையில்) ஊதினவனுகிய, தந்தவண்ண னுடன் வந்த அண்ணல் - யானைத்தந்தம் போல வெளுப்பான திரு மேனி நிறத்தையுடைய பலராமனுடன்பிறந்த பெருமைக்குண முடைய கண்ணன், ஒளி தங்கு கண்துயில் உணர்ந்தபின் - (விதுரன் மனையில்) சூரியன் சந்திரனென்னும் இருசுடரின் வடிவமாகப் பொருந் திய தனதுகண்கள் உறங்குதலொழிந்து எழுந்த பின்பு, கந்தம் வண்ணம் மலர்கொண்டு கை தொழுது காலையில் பல கடன் கழித்து- பரிமளத்தையும் அழகையுமுடைய பூக்களைக் கையிலேந்திச் (சூரிய பகவானை) கைகூப்பி வணங்கி (இங்ஙனம்) உதயகாலத்திற் செய் தற்கு உரிய பல கடமைகளையுஞ் செய்துமுடித்து, இந்த வண்ணம் முன் இருந்தபோர் அவையில் ஏயினன்-இப்படி முன்னமே (துரியோத னுதியர்) கூடியிருந்த பெரிய சபையில் எழுந்தருளினன்; (எ - று.)

அண்ணல் - ஆண்பாற் சிறப்புப்பெயர்; பண்பாகுபெயரென்றுங் கூறுவர். பலராமன் வெண்மையான திருமேனி நிறமுடையனுதலின்,

'தந்த வண்ணன்' எனப்பட்டான். திருமாலுக்குச் சூரியன் வலத்திருக்கண்ணும் சந்திரன் இடத்திருக்கண்ணுமாதலின், 'ஒளி தங்குகண்' என்றார். பலகடன் - சந்தியாவந்தனம் முதலிய நித்திய வைதிகச் சடங்குகள். வேய் - மூங்கிலினுலாகிய குழலுக்குக் கருவியாகுபெயர். இசைப்பது, இசை. இசைத்தல் - பாடுதல். வந்த - பிறந்த; கூடவந்த வென்றன்று. (165)

106.—வீடுமன் முதலியோர் எதிர்கொண்டு சென்று வணங்க, கண்ணபிரான் சபையிற் சென்று ஆசனத்தில் இருத்தல்.

துன்னுகங்கைமகனுந் துரோணனெடு சுதனுநீதிபுனைவிதுரனும்
மன்னர்மன்னனை யொழிந்தமன்னவரும் வந்துசேவடிவணங்கினர்
கன்னனுந்தலைகவிழ்ந்திருந்தனனமுன்றுளஞ்சதுனிகருகினன்
முன்னநின்றவர்களிட்டபீடமிசை மொய்துழாய்முகிலுமெய்தினன்.

(இ - ள்.) (அப்பொழுது),—துன்னு - (அங்கே) பொருந்தியிருந்த, கங்கைமகனும் - வீடுமனும், துரோணனெடு சுதனும் - துரோணாசாரியனும் அவன் மகனை அசுவத்தாமனும், நீதி புனை விதுரனும் - நியாயத்தையே (தனக்கு ஆபரணமாகக்) கொண்ட விதுரனும், மன்னர் மன்னனை ஒழிந்த மன்னவரும் - துரியோதனனை யொழிந்த மற்றையரசர்களெல்லோரும், வந்து சே அடி வணங்கினர் - அருகில் வந்து சிவந்த (கண்ணனது) திருவடிகளை வணங்கினர்கள்; கன்னனும்-கர்ணனெனில், தலை கவிழ்ந்து இருந்தனன்-(ஒன்றுந் தோன்றாது) தலையிறங்கி உட்கார்ந்திருந்தான்; சகுனி - சகுனியோ, அழனறு உளம் கருகினன் - (தமது ஏற்பாட்டின்படியன்றி எல்லோரும் கண்ணனைக் கௌரவித்ததைப்பார்த்துப் பொருது)மனம்கொதித்து வெதும்பினன்; (அங்ஙனமிருக்க),—மொய் துழாய் முகிலும் - நெருங்கின திருத்துழாய் மாலையையுடைய காள மேகம் போன்ற கண்ணனும், முன்னம் நின்றவர்கள் இட்டபீடம் மிசை எய்தினன் - முன்னிடத்துநின்றவர்கள் கொண்டுவந்து சமர்ப்பித்த ஆசனத்தின்மீது எழுந்தருளியிருந்தான்; (எ - று.)

இப்பாட்டில் விதுரனுக்குக்கொடுத்த அடைமொழியைக் கவனிக்க. துரியோதனனது கருத்துக்கு மாறுபாடாக எழுந்து உபசரிக்கவும், தன் மனச்சாட்சிக்கு மாறுபாடாக எழுந்துஉபசரியாதிருக்கவும் மாட்டாது, கன்னன் தலை கவிழ்ந்திருந்தான்; அன்றிக்கே, தனது உயிர்த்தோழனது கட்டளை சிறிதும் பயனபடாததை நோக்கி நாணித்தலைகவிழ்ந்தானென்றுங்கொள்க. கண்ணனைக் கண்டமாத்திரத்தில் யாவரும் தம் வசமின்றிப் பரவசப்பட்டு எழுந்து விட்டதனால், துரியோதனனது கட்டளை சிறிதுஞ்செல்லாது பறந்தது. விரைசகாலம் சமீபித்ததனால் ஊழ்வினைபற்றித் துரியோதனன் முதலிய சிலர் மனம் கெழிழவில்லை. நின்றவர்கள் என்ற பன்மை - ஒருவர் முன் ஒருவராய்ப் பலர் விரைந்து ஓடிவந்து அன்போடு பீடமிடலுற்றன ரென்பதை விளக்கும். துரியோதனனது அன்னிய மக்களுக்கெல்லாம் சகுனி மூலமாதலால், அவன் அழன்று உளம் கருகினன். சகுனி உளங்கருகினன்-சினவினை முதல் கொண்டது.

107.— துரியோதனன், கண்ணன் தனது அரண்மனையி லிறங்காமைக்குக் காரணம் வினவுதல்.

முன்னகங்குடை கவித்தகாளமுகின் முன்னிருந்தபின் முகங் கொடா, தென்னகந்தனையொழித்து நென்னலிடை யிந்தமா நகரி லெய்தியும், பொன்னகங்கொள் புயவிதுரனில்லிடைபுகுந்த தென்கொ லிதுபுகலெனப், பன்னகந்தனையுயர்த்த கோவுமுரைபகரமாலுமெதிர் பகருவான்.

(இ - ள்.) முன் - முன்னே [இளமையில் இந்திரன் பெருமழை பொழிவித்தபொழுதில் என்றபடி], நகம் - கோவர்த்தனமலையை, குடை கவித்த - குடையாக எடுத்துப்பிடித்த, காள முகில் - கரிய மேகத்தையொத்த கண்ணபிரான், முன் இருந்தபின் - முன்னே வீற்றிருந்தபின்பு, பன்னகந்தனை உயர்த்த கோவும்-பாம்புக்கொடியை உயர எடுத்த துரியோதனராசனும், முகம் கொடாது - லட்சியஞ் செய்யாமல், 'நென்னலிடை - நேற்றைப்பொழுதிலே, இந்த மா நகரில் எய்தியும் - இந்தப் பெரியபட்டணத்தில் (நீ) வந்து சேர்ந்தும், என் அகந்தனை ஒழித்து - எனது வீட்டிற்கு வருதலை நீக்கி, பொன் அகம் கொள் புயம் விதுரன் இல்லிடை-பொன்னுபரணங்களைத் தன்னிடத்தே கொண்ட தோள்களையுடைய விதுரனது வீட்டில், புகுந்தது - (நீ) நுழைந்தது, என்கொல்-என்னகாரணத்தால்? இது புகல் - இதற்கு விடைசொல்,' எனு - என்று, உரை பகர - வார்த்தை சொல்ல,— மாலும் - கண்ணபிரானும், எதிர் பகருவான் - மறுமொழி கூறுபவனனன்; (எ - று.) அதனை, மேலிரண்டு கவிகளிற் காண்க.

'கவிழ்த்த' என்ற பாடத்துக்கு-பசுக்களும் கன்றுகளும் எட்டிப் புல்மேயலாம்படி தலைகீழாக எடுத்துப்பிடித்த என்க; "மதுசூதன னெடுத்து மறித்தமலை" "காம்பாகக் கொடுத்துக் கவிழ்த்த மலை" என்றார் பெரியாழ்வாரும். என் அகம் என்றதில் துரியோதனனது அகங்காரமமகாரங்கள் நன்கு விளங்கும். பொன் - கருவியாகுபெயர். இனி, பொன்நகம் கொள் புயம்-பொன் மலையையொத்த தோளென்றும், பொன் அகம் கொள் இல் - திருமகள் இடமாகக்கொண்ட வீடென்றும், பொன் நகம் கொள் இல் - மேருமலையை யொத்த மாளிகை யென்றும் உரைக்க இடமுண்டு. முகங்கொடாது ஒழித்து என இயைப்பினும் அமையும். 'என் அகந்தனை யொழித்து' என முதலில் துரியோதனன் வாக்கில் மேல் முடிவுக்கு ஏற்ப, அமங்கலமான வார்த்தை வந்ததும் காண்க. (167)

108.—கண்ணபிரான் தான் துரியோதனனரண்மனையில் எழுந்தருளாமைக்குக் காரணங் கூறுதல்.

என்னினின்னிலொருபேதமில்லை யிதுவென்னினின்னிலது வென்னினும், மின்னின்மின்னிலகுவிறனெடும்படைவிதுரன் வந்தெதிர் விளம்பினனுன், உன்னிலின்னமுளதொன்றுபஞ்சவருரைக்க வந்தவொருதூதன் யான், நின்னிலின்னடிசிலுண்டு நின்னுடன் வெறுக்கவெண்ணுவது நீதியோ.

இது முதல் மூன்று கவிகள்-ஒருதொடர்.

இதுவும், மேற்கவியும் கண்ணன் வார்த்தை.

(இ - ள்.) என் இல் நின் இல் ஒருபேதம் இல்லை - என் வீடென்றும் உன்வீடென்றும் ஒருபேதம் (எனக்குக்) கிடையாது; இது என் இல்-இந்த உன்வீடு என்வீடு; அது நின் இல்-(துவாரகையிலுள்ள) அந்த என்வீடு உன்வீடு; என்னினும் - என்றிருந்தாலும், மின்னின் மின் இலகு விறல் நெடு படை விதுரன் வந்து எதிர் விளம்பினன் - மின்னலைக் காட்டிலும் (மிகுதியாக) ஒளி விளங்கப்பெற்ற வெற்றியைத்தரும் பெரிய ஆயுதத்தையுடைய விதுரன் எதிர்கொண்டு வந்து பேசினன்; (உன்வீட்டுக்குவராமல் அவன் வீட்டுக்குப் போனதற்கு இது ஒருகாரணம்); உன்னில் - ஆலோசிக்குமிடத்து, இன்னம் உளது ஒன்று - இன்னமும் ஒருகாரண முண்டு:—பஞ்சவர் உரைக்கவந்த ஒரு தூதன்யான் - பாண்டவர்கள் சொல்லியனுப்பவந்த ஒரு தூதனுவேன் நான்; (அப்படிப்பட்டவன்), நின் இல் இன் அடிசில் உண்டு நின்னுடன் வெறுக்க எண்ணுவது நீதியோ-உனது வீட்டில் இனிமையான உணவை உட்கொண்டு பின்பு உன்னோடு வெறுக்கப் போகக் கருதுவது நியாயமோ? (நியாயமன்று என்பது ஒரு காரணம்); (எ - று.)

என்னில் நின்னில் ஒருபேதமில்லை என்பதற்கு - எனக்கும் உனக்கும் ஒரு வித்தியாசமில்லையென்றும் உரைக்கலாம். இந்த உன்வீடு எனது அன்பரான பாண்டவருடையது, உன்னுடையதன்று; மேலுலகத்திலுள்ள வீர சுவர்க்கமே உன்னுடையது என்ற கருத்து, 'இது என் இல் நின் இல் அது' என்பதில் தொனிக்குமாறு காண்க. 'முன்னிலகு' என்ற பாடத்துக்கு-முன்புவிளங்குகிற என்க. விதுரனுக்கு 'மின்னின் மின்னிலகு விறனெடும் படை' என்ற அடைமொழி கொடுத்ததனால், அவன்படையை ஞாபகத்துக் கொண்டன்றே யான் அங்குப் புகுந்தது என்ற கருத்து ஒலிவகையால் தோன்றும். விதுரன்வந்து எதிர் விளம்பியமை முன்னேகூறப்படாவிடினும், இங்குக் கூறப்பட்டது. அதனால், அங்குச்சொல்லாதது - 'உரைத்தும்' என்னும் உத்தியாம்: இங்ஙனமே காவியங்களில் கூறவேண்டியபொருளை எங்கேனும் ஓரிடத்துக்கூறி, மற்றையவிடங்களிற் கூறாது விடுதலைப் பலவிடத்திலுங் காணலாம். 'உண்டவீட்டுக்கு இரண்டகம் நினைக்கலாகாது' என்பது நான்காமடிக்கு ஏற்ற பழமொழி. ஒன்று - ஆகுபெயர். (168)

109.—நரகிற் செல்லுதற்கு உரியவர்.

அரவமல்கிய பதாகையாய் மதியமைச்சரா யரசழிப்பினுங்
குரவர் நல்லுரை மறுக்கினும் பிறர்புரிந்த நன்றியதுகொல்லினும்
ஒருவர்வாழ் மனையிலுண்டு பின்னுமவருடனழன்றுபொர வுன்னினும்
இரவியுள்ளளவு மதியமுள்ளளவு மிவர்களே நரகிலெய்துவார்.

(இ - ள்.) அரவம் மல்கிய பதாகையாய் - பாம்பின் வடிவம் பொருந்தின பெருங்கொடியையுடையவனே!—மதி அமைச்சர் ஆய் அரசு அழிப்பினும்-நல்லறிவுடைய [அல்லது அரசனுக்கு அறிவுறுத்

தற்குரிய] மந்திரிகளாயிருந்து அரசாட்சியை (வேண்டுமென்று) கெடுத்தாலும், குரவர் நல்உரை மறுக்கினும் - பெரியோர்களது நல்ல உபதேசமொழிகளை (க்கேட்டு ஒழுகாது) விலகி நடந்தாலும், பிறர் புரிந்த நன்றியது கொல்லினும் - அயலார் செய்த உபகாரத்தை மறந்தாலும், ஒருவர் வாழ்மனையில் உண்டு பின்னும் அவருடன் அழன்று பொர உன்னினும்-ஒருவர் வசிக்கின்ற வீட்டிலே அவருணவைப் புசித்துப் பின்பு அவருடன் கோபித்துப் போர்செய்யக் கருதினாலும், இவர்களை - இந்த நான்கு அக்கிரமத்தொழில்களைச் செய்பவர்களை, இரவி உள் அளவும் மதியம் உள் அளவும் நரகில் எய்துவார் - சூரியனுள்ள வரையிலும் சந்திரனுள்ள வரையிலும் நரகலோகத்திற் சேர்ந்து துன்பங்களை அனுபவிப்பார்கள்; (எ - று.)

துரியோதனன்வீட்டில் தான் இறங்காமைக்கு ஏற்ற காரணங் கூறுதற்கு, 'ஒருவர்வாழ்மனையிலுண்டு பின்னுமவருடனழன்று பொரவுன்னின்' என்றதுமாத்திரமே போதுமாயினும், மற்ற மூன்று கொடுவினைகளையும் முன்னே இனமாக உடனெடுத்துக்கூறியது - நீயும் சகுனிமுதலிய உன்னைச் சேர்ந்தவர்களுமே இப்படிப்பட்ட பெரும்பாவங்களைச் செய்து பயில்பவர்; நான் அப்படிப்பட்டவனல்லன் என அவனுக்கு உரைக்கும்படி சுட்டிக்காட்டுதற்பொருட்டென்க. குரவர் - தந்தை, (தாய்), தமையன், வம்சகுரு, உபாத்தியாயன், அரசன் என இவர். நல்உரை - இம்மைமறுமைகளுக்கு நன்மையை விளைக்கும் வார்த்தை. மறுக்கத்தக்க தீய உரையை அவர் கூறுரென்றற்கு, 'நல்லுரை' எனப்பட்டது. பிறர்புரிந்த நன்றியது கொல்லினும் - ஒருவர் ஒருவர்க்குசெய்யும் உபகாரத்தைக் கெடுத்தாலும், என்று பொருள் கொள்ளலாம். "எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பது இதற்கு மேற்கோளாம். உன் அமைச்சர்கள் உனக்கு இதங்கூறுது உனது அரசை யழிப்பவரென்றும், நீ பீஷ்மர் துரோணர் கிருபர் விதுரர் முதலிய பெரியோரது உறுதிமொழிகளைக் கேளாது மறுப்பவனென்றும், சித்திரசேனன் கட்டினது முதலானகாலத்தில் பாண்டவர் செய்த உபகாரத்தை நீ மறப்பவனென்றும், பீஷ்மர்முதலியவர் உன் கட்டளைப்படி நடப்பது உனது வார்த்தை சரியென்கிறகாரணத்தாலன்று, சோற்றுக்கடன் கழிக்கவேண்டுமென்கிற கருத்தினாலேயே யென்றும் குறிப்பாக உணர்த்தினபடியாம். இரவியுள்ளளவும் மதியமுள்ளளவும் - உலகமழியுமளவும். ஆழ்வயிற்றடக்கி என்றும் மீட்டுமிழ்கலாத எரிவாய் வெம்மைகூர் நரகில் அழுந்துவர் என்க. மற்றைத் தீவினைசெய்தவர் நரகமடைந்தாலும், அவர்களுக்கு மீளுதற்கு உரிய எல்லையொன்று உண்டு; இவர்களுக்கோ அது இல்லை; நரகலோக மழிந்தால் உண்டு என்பது, 'இவர்களே நரகிலெய்துவார்' என்ற பிரிநிலை ஏகாரத்தால் விளங்கும். (169)

110.—'நீ வந்த காரியம் யாது?' என்று கண்ணனைத் துரியோதனன் வினவுதல்.

சீதநாண்மலர்மடந்தைகேள்வனிவை செப்பவுந் தெரியவொப்பிலா, நாதநாயகன் முகத்தில் வைத்தவிரு நயனஞுகிமிக நகை

செயாத், தூதனுகிவரு தன்மைசொல்லுகென மன்னர் மன்னனிது சொன்னபின், வேதநாறுமல ருந்திவண்டுளப விரைசெய் தாரவனு முரைசெய்வான்.

(இ - ள்.) சீதம் - குளிர்ச்சியான, நாள் - புதிய, மலர் - தாம ரைப்பூவில் வாழ்கின்ற, மடந்தை - சிறந்தமகளான இலக்குமிக்கு, கேள்வன் - கணவனுன கண்ணபிரான், இவை - இவ்வார்த்தைகளை, தெரிய செப்பவும் - விளக்கமாகச் சொன்னவளவிலே,—மன்னர் மன்னன் - துரியோதனன், ஒப்பு இலா நாத நாயகன் முகத்தில் வைத்த இரு நயனன் ஆகி - (தனக்கு) உவமை பெருத தலைமைத்தேவர் களுக்குந் தலைவனுகிய அக்கண்ணனது முகத்திற்செலுத்தின இரண்டுகண்களையுமுடையவனுய், மிகநகை செயா - (இகழ்ச்சிதான்ற) மிகுதியாகச் சிரித்தல்செய்து, தூதன் ஆகி வரு தன்மை சொல்லுக என - 'நீ தூதனுய்வந்த தன்மையைச் சொல்வாயாக' என்று, இது சொன்ன பின் - இவ்வார்த்தையைச் சொன்னபின்பு, வேதம் நாறும் மலர் உந்தி வள் துளபம் விரைசெய் தாரவனும் - வேதங்கள் பரி மளிக்கிற திருநாபித்தாமரை மலரையும் அழகிய திருத்துழாயினு லாகிய வாசனையைச் செய்கின்ற மாலையையும் உடைய கண்ண பிரான், உரைசெய்வான் - சொல்லுபவனுனன்; (எ - று.)—அதனை, மேலிரண்டு கவிகளிற் காண்க.

திருமாலின் உந்திக்கமல மலரில் எப்பொழுதும் பிரமன் வேதத் தைஒதிக்கொண்டிருத்தலால், 'வேதநாறு மலருந்தி' என்றார். வேதம் நாறும் - வேதம் ஒலிக்கும். ஒரு புலன் மற்றொரு புலனுக உபசரிக் கப்பட்டது: இனி 'வேதனுறும்' என்ற பாடத்துக்கு, வேதன் - பிரமன், நாறும் - தோன்றுமென்க. நாறு என்னும் பகுதி இவ்விரு பொருளு முடையதாதலை, நாற்றம், காற்று என்ற சொற்களிற் காண்க. மடந்தை - இங்கே பருவப்பெயராகாமல் பெண்ணென்ற மாத்திரமாய் நின்றது; அப்பருவத்திற்கு வயதெல்லை - பதினென்கு முதல் பத்தெட்டாவது அளவுமாம். கேண்மையையுடையவன, கேள் வன்; கேண்மை - நண்பும், உறவும், அன்பும். நாதநாயகன் - நாதர் நாயகன் எனப்பிரித்துப் புணர்க்க; "சிலவிகாரமா முயர்திணை". வேதம் என்ற வடசொல்லுக்கு - (நன்மை தீமைகளைத்) தெரிவிப்ப தென்று பொருள்; அறிவித்தலென்னும் பொருளுள்ள 'வித்' என்ற வினையடியினின்று பிறந்தது. (170)

111.—இதுவும், அடுத்தகவியும் - பாண்டவர்க்கு நாடுகொடுக்கும்படி கண்ணபிரான் துரியோதனனுக்குக் கூறுதல்.

சூதினுலரசிழந்துநின்றுணவர் சொன்னசொல்லும்வழுவாதுபோய்
ஏதிலார்களெனநொந்து தண்ணிழலிலாதகானினிடையெய்தியுந்
தீதிலாவகை குறித்தநாள்பல கழித்துவந்தனர் செகத்தினிற்
கோதிலாதகுருகுலமகீபவவருரிமைநண்பொடுகொடுத்தியே.

(இ - ள்.) செகத்தினில் - நிலவுலகத்திலே, கோது இலாத - குற்றமில்லாத, குரு குலம் - குரு அரசனது மரபிலே பிறந்த, மகிப - அரசனே!—நின் துணைவர் - உனது உடன் பிறந்தவரான பாண்டவர்கள், சூதினால் - சூதாட்டத்தால், அரசு இழந்து - இராச்சியத்தைக் கைவிட்டு, சொன்ன சொல்லும் வழுவாது - (அப்பொழுது நீங்கள்) சொன்ன வார்த்தையையுந் தவறாமல், ஏதிலார்கள் என - யாதொரு சம்பந்தமுமில்லாத அயலார் போல, போய் - புறப்பட்டுச் சென்று, நொந்து - வருந்தி, தண் நிழல் இலாத கானினிடை எய்தியும் - குளிர்ந்த நிழலில்லாத காட்டில் சேர்ந்தும், நீது இலாவகை - குற்றமில்லாதபடி, குறித்த பல நாள் - முன்னே குறிப்பிட்ட அநேக நாட்களை, கழித்து வந்தனர் - தொலைத்து வந்தார்கள்; (ஆதலால் இப்பொழுது நீ), அவர் உரிமை - அவர்களுக்கு உரிய இராச்சிய பாகத்தை, நண்பொடு - சிநேகத்துடனே, கொடுத்தி - கொடுப்பாய்;

துணைவர் - பிராதாக்கள். நீதிலாவகை என்றதில், அஜ்ஞாதவாசம் அடக்கப்பட்டது; அதில் யாவர்யினும் இவரை இன்னரென்று காண்பாராயின், அது மீண்டும் வனவாசம் முதலியன செய்தற்கேற்ற நீதாம். 'ஆண்டு பல' என்னுது 'நாள் பல' என்றதற்குக் காரணம், முன் கூறப்பட்டது. குருகுலத்துக்குக்கோ இன்மை - உடன்பிறந்தவர்களோடு பகையாடாமை முதலியன.(171)

112. சொல்லவாவுரகதுவசநின்னுரியதுணைவர்தங்களையழைத்துநீ, வல்லவாறுசிலநாடளித்தவர்கடம்முடன் கெழுமிவாழ்தியேல், நல்லவாய்மை நிலையுடையையென் றரசர்நாடொறும்புகழ்வர் நண்பு கொண், டல்லவாமெனமறுத்தியேலறமு மாண்மையும் புகழுமல் லவே.

(இ - ள்.) சொல் - புகழ்ச்சொல்லை, அவாவு - விரும்புந்தன்மையுள்ள, உரக துவச - பாம்புக் கொடியோனே!—நீ—, நின் உரிய துணைவர் தங்களை அழைத்து - உனது அன்புக்கு உரிய உடன் பிறந்தவர்களான பாண்டவர்களை வரவழைத்து, வல்ல ஆறு சில நாடு அளித்து-கூடினபடி சில நாடுகளை (அவர்களுக்கு) க்கொடுத்து, அவர்கள் தம்முடன் கெழுமி - அவர்களோடு கலந்து ஒருமித்து, வாழ்தியேல் - வாழ்வாயானால், (உன்னை), நல்ல வாய்மை நிலை உடையை என்று - சிறந்த சத்திய வுறுதியை யுடையாயென்று சொல்லி, அரசர் நண்புகொண்டு நாள்தொறும் புகழ்வர்-எல்லாவரசரும்(உன்னிடத்து) அன்புவைத்துத் தினந்தோறுந் துதிப்பார்கள்; அல்ல ஆம் என மறுத்தி ஏல் - (இங்ஙனம் அழைத்தல் கொடுத்தல் கெழுமுதல் வாழ்தல் முதலியன) தகுதியல்லாதனவாகுமென்று கருதி (அரசு கொடாது)மறுப்பாயானால்,(அங்ஙனம் மறுத்தல்), அறமும் ஆண்மையும் புகழும் அல்ல - தருமமும் ஆண்மைக்குணமும் புகழும் ஆகா; (ஏ - று.)

அல்லவெனப் பன்மைவினைமுற்றுக் கொடுத்தது - ஒருமைப் பன்மை மயக்கம். அல்லவாமென என்பதில், ஆம்-அசையென்றுங்

கொள்ளலாம். வல்லவாறு - நீதிக்கு உரியபடி; அல்லது, உனக்கு விருப்பமானபடியென்றவாறு. நண்பு கொண்டு என்பதை, வாழ்தியென்பதனோடுங் கூட்டலாம். உரிய-அரசுக்கு உரிய சுதந்திரமுள்ள எனலுமாம். முன் வாக்கியத்தில் அறமும் புகழும் ஆண்மையுமாம் என்பதும், பின் வாக்கியத்தில் - புகழார் என்பதும் எதிர்மறைவகையால் தாமே ஏற்படும். (172)

113.—இதுவும், அடுத்தகவியும் - துரியோதனன் வார்த்தை: 'பாண்டவர்க்குப் பாகங்கொடேன்' என்று கூறுதல்.

என்றுகேசவனியம்பவங்கெதிரிராசராசனுமியம்புவான்
அன்றுசூதுபொருதுரிமையராவையுமிழந்துபோயினர்களாவரும்
இன்றுநீவிரகின்மீளவுங்கவரவெண்ணினுனவரிலெளியனே
சென்றுகானிலவரின்னமுந்திரிவதுறுதியென்றுநனிசீறியே.

(இ - ள்.) என்று—, கேசவன் - கண்ணன், இயம்ப-சொல்ல, அங்கு எதிர் - அவ்வசர்த்தைக்கு எதிராக, இராசராசனும் - துரியோதனனும், இயம்புவான் - சொல்லுபவனாய்,—'ஐவரும் - பஞ்சபாண்டவர்கள், அன்று - அக்காலத்தில், சூதுபொருது - சூதாட்டமாடி, (அதில் தோற்று), உரிமையாவையும் இழந்துபோயினர்கள் - (தங்களுக்கு) உரிய பொருள்களையெல்லாம் கைவிட்டுச் சென்றார்கள்: இன்று - இப்பொழுது, நீ—, விரகின் - தந்திரமாக, மீளவும் - மறுபடி, கவர - (அப்பொருள்களை என்னிடத்தினின்று) பறிக்க, எண்ணின் - நினைத்தால், நான் அவரில் எளியனே - நான் அவர்களைக் காட்டிலும் (வலிமை முதலியவற்றிற்) குறைந்தவனே? அவர் - அப்பாண்டவர், இன்னமும் - இனிமேலும், கானில் சென்று - காட்டிற் போய், திரிவது - அலைய வேண்டுவதே, உறுதி - (அவர்களுக்கு) நன்மை தருவதாம்', என்று - என்று சொல்லி, நனி சீறி - மிகக் கோபித்து,—(எ - று.)—'கழற' என மேல் 115 - ஆங் கவியோடு குளகமாகத் தொடரும்.

அங்கு - அப்பொழுது என்றும், அவ்விடத்தில் என்றும், அவரில் எளியனே - அவர்கள்போல எளிதிற் கவர்ந்துகொள்ளத் தக்கவனே? என்றும் உரைப்பாரும், நனி சீறி என்று இயம்புவான் என இயைத்து முடிப்பாரும் உளர். இரண்டாம் அடியில் நன்று எனப் பிரித்தல் மோனைத் தொடைக்குப் பொருந்தாது. (173)

114. நீவெறுக்கிலெ னிருந்த மன்னவர் திகைக்கிலென் பல நினைக்கிலென், போய்நகைக்கி லெனுரைத்தவுண்மைமொழிபொய்த்த தென்றமரர்புகலிலென், வேய்மலர்த் தொடையகிலவரென்னுடன் மிகைத்துவெஞ்சமர்விளைக்கிலென், ஈயிருக்குமிடமெனினு மிப்புவியில் யானவர்க்கரசினிக் கொடேன்.

(இ - ள்.) நீ வெறுக்கில் என்-நீ (என்னை) வெறுத்தாலென்ன? இருந்த மன்னவர் திகைக்கில் என் - இங்கிருந்த அரசர்கள் (இது என்னவென்று) பிரமித்தாலென்ன? பல நினைக்கில் என் - (நீயும்

இவர்களும்) அநேக எண்ணங்களை எண்ணினாலென்ன? போய் நகைக்கில் என் - (மறைவில்) சென்று சிரித்தாலென்ன? உரைத்த உண்மை மொழி பொய்த்தது என்று அமரர் புகலில் என் - (நான் முன்) சொன்ன வார்த்தை சத்தியந் தவறிற்றென்று தேவர்கள் சொன்னாலென்ன? வேய் மலர் தொடையல் - அணிந்த பூமாலையையுடைய, ஐவர் - பஞ்சபாண்டவர், என்னுடன்—, வெம் சமர்-கொடிய போரை, மிகைத்து விளக்கில் - அதிகமாகச் செய்தால், என் - என்ன? ஈ இருக்கும் இடம் எனினும் - ஈ தங்குதற்குவேண்டிய அளவு இடமாயினும், இ புவியில் அரசு அவர்க்கு இனி யான் கொடேன - இந்தப் பூமியில் அரசாள அவர்களுக்கு இனி நான் கொடுக்கமாட்டேன்; (எ - று.)

என் என்ற வினா, 'அதனால் எனக்கு வருவதொரு தீங்குமில்லை' என்ற எதிர்மறைப் பொருள்பட நின்றது. நான்காமடியில் ஈ யெனப் பதம் பிரித்தல் பொருந்தாது. (174)

115.—கண்ணன் மீண்டும் துரியோதனனை வேண்டுதல்.

கார்வழங்குரு மெனச்சினத்தினெடு கண்ணிலான்மதலைகழறவும்
பார்வழங்க நினைவில்லையே லவனிபாதியாயினும் வழங்குவாய்
தார்வழங்குதடமார்பவென்னவதுதானு மன்னவன் மறுக்கவைந்
தூர்வழங்கு கெனவுற்றிரந்தனனிவ்வுலகெலா முதவு முந்தியான்.

(இ - ள்.) (என்று), கண் இலான் மதலை-திருதராட்டிர குமாரன் [துரியோதனன்], சினத்தினெடு - கோபத்துடனே, கார் வழங்கு உரும் என - மேகந்தருகிற இடியைப்போல, கழறவும் - (உறுதியாகச்) சொன்ன வளவில்,—இ உலகு எலாம் உதவும் உந்தியான் - இந்த உலகங்களையும் இவ்வுலகத்து உயிர்களெல்லாவற்றையும் படைத்தருளுந் திருநாபியையுடைய் கண்ணபிரான், (துரியோதனனை நோக்கி), 'தார் வழங்கு தடமார்ப - மாலையுலாவப் பெற்ற பரந்த மார்பையுடையவனே! பார் வழங்க நினைவு இல்லை ஏல் - இராச்சிய பாகம் முழுவதையுங் கொடுக்கக் கருத்தில்லையானால், அவனி பாதி ஆயினும் வழங்குவாய் - அவ்விராச்சிய பாகத்திற் பாதியையாயினுங் கொடுத்திடுவாய்,' என்ன - என்று சொல்ல, அதுதானும் - அவ் வார்த்தையையும், மன்னவன் - துரியோதனன், மறுக்க - (கொடேனென்று) தடுத்துவிட,—(பிறகு கண்ணன்), 'ஐந்து ஊர் வழங்குக என-ஐந்து ஊரையாயினுங் கொடுப்பாய்'என்று, உற்று இரந்தனன்-பொருந்தி [உடன்பட்டு வணக்கமாக] யாசித்தருளினான்; (எ - று.)

"ஒருநாலு முகத்தவனே டுலகீன்ற யென்பதுன், திருநாபி மலர்ந்த தல்லால் திருவுளத்தி லுணராயால்" என்பது சித்தாந்த மாதலால், 'உலகெலா முதவு முந்தியான்' என்றார். மார்பு பரந்திருத்தல் - உத்தம விலக்கணம். இங்ஙனம் லோபியைச் சென்று யாசிக்க இணங்குதல் அருமைபற்றி, 'உற்று இரந்தனன்' என்றார். உலகங்களையெல்லாந் தனதாகவுடையவன், முன்னே கொடையாளியான மாவலிபக்கல் மூவடி வேண்டியதுபோலவுமன்றி, இப்பொழுது

மகா லோபியான துர்க்குணமுடைய துரியோதனனிடம் அன்பர்க் காக இவ்வாறு இரந்தான் எனப் பரத்துவமும் சௌலப்பியமும் தோன்றுமாறு காண்க. கார் - துரியோதனனுக்கும், உரும் - கடுஞ் சொல்லுக்கும் உவமை. (175)

116.—துரியோதனன் அதனையும் மறுத்தல்.

மாடளிக்குல நெருங்குபைந்துளவ மாலையாய்மகர வேலைசூழ்
நாடளித்திடவு மைந்துபேருடைய நகரளித்திடவும்வேண்டுமோ
காடளிக்கவதனிடை திரிந்துறை கரந்துபோயினர்கள் காணவோர்
வீடளிக்கினும் வெறுப்பரோ விதனீவிடுகவென்றெதிர்விளம்பினான்.

(இ - ள்.) (அதற்குத் துரியோதனன்), 'மாடு - பக்கங்களிலே, அளி குலம் - வண்டுகளின் கூட்டம், நெருங்கு - இடைவிடாது மொய்க்கப்பெற்ற, பைந்துளவம் - பசுமிறமான திருத்துழாயினை லாகிய, மாலையாய் - மாலையையுடைய கண்ணனே!—மகரம் வேலை சூழ் நாடு அளித்திடவும் - சுறுமீன்களையுடைய கடல் சூழ்ந்த நாடு முழுவதையும் கொடுக்கவும், பேர் உடைய ஐந்து நகர் அளித்திட வும்-பெயரையுடைய ஐந்து ஊர்களைக் கொடுக்கவும், (அவர்களுக்கு), வேண்டுமோ—? காடு அளிக்க - (நாம் முன்பு) காட்டை இடமாகக் கொடுக்க, அதனிடை திரிந்து - அதில் அலைந்து, உறை கரந்து போயினர்கள் - அவ் வகைக்குமிடத்தினின்றும் உருமறைந்து ஓடிப் போனவர்கள், காண - (மீண்டும் தம்மதாகப்) பார்க்கும்படி, ஓர் வீடு அளிக்கினும் - ஒரு வீட்டைக் கொடுத்தாலும், வெறுப்பரோ - (அதனை வேண்டாமென்று) வெறுத்திடுவார்களோ? [மாட்டார்க ளென்றபடி]. இதனீ விடுக - (என்பக்கல் சிறிதேனும் இடம்பெறும்) இக்கருத்தை (இனி நீ) ஒழிக', என்று எதிர் விளம்பினான் - என்று மறுமொழி கூறினான்: (எ-று.)

'எதிர்' என்ற சொல்லில், விரோதமான மொழியென்ற கருத்தும் இரட்டுறமொழிதலாற் பெறப்படும்; கீழ் 107-ஆங் கவியில் 'எதிர் பகருவான்' என்றதிலும் இங்ஙனம் காண்க. ஐந்துபேரு டைய - பஞ்சபாண்டவர்களது என்று உரைப்பாரு முளர். உறையு மிடம், உறை. (176)

117.—இதுவும், மேற்கவியும் ஒரு தொடர்: கண்ணன் துரியோதனனுக்கு அறிவு கூறுதல்.

தந்தைகாதலுறு தன்மைகண்டிளைய தாய்பயந்தவிருதம்பியர்க்
கிந்தவாழ்வு மரசுங்கொடுத்தவனு நின்குலத் தொருவ னிங்குளான்
முந்தமாநிலமனைத்தினுக்குமுயர் முறைமையா லுரியவரசருக்
கைந்துமாநகரு நீ கொடாதொழியினென்ன தாகுமுனதரசியல்.

(இ - ள்.) தந்தை - தனது பிதா, காதல் உறு - ஆசைமிகுந்த, தன்மை - தன்மையை, கண்டு - பார்த்து, இளைய தாய் பயந்த இரு தம்பியர்க்கு - தனது சிறிய (மாற்றாந்) தாய்பெற்ற புதல்வரான தனது

தம்பிமார் இருவருக்கு, இந்த வாழ்வும் அரசும் - இந்தக் குருநாட்டர சாட்சியையும் அதற்கு உரிய செல்வத்தையும், கொடுத்தவனும் - கொடுத்த அரசனும், நின்குலத்து ஒருவன் இங்கு உளான்-உனது குலத்திற் பிறந்த ஒருத்தன் இவ்விடத்திலே (இப்பொழுது) இருக் கிறான்; (அங்ஙனமிருக்க), உயர் முறைமையால் - (உன்னினும் பிரா யத்தில்) மூத்ததன்மையால், மா நிலம் ஆனைத்தினுக்கும் முந்த உரிய - பெரிய பூமி முழுவதுக்கும் பழைமையாகப் பாத்தியதையை யுடைய, அரசருக்கு - யுதிட்டிரன் முதலியோர்க்கு, நீ—, ஐந்து மா நகரும் கொடாது ஒழியின்-ஐந்து பெரிய ஊர்களையாயினுங் கொ டாமல் விடுவாயானால், உனது அரசு இயல் - உனது அரசாட்சியின் இயல்பு, என்னது ஆகும் - என்ன நீதியுடையதாம்? [நீதி சிறிது மில்லாத தென்றபடி]; (எ - று.)

தந்தை - சந்தனு, இளைய தாய் - பரிமளகந்தி. இருதம்பியர் - சித்திராங்கதனும், விசித்திரவீரியனும். கொடுத்தவன் - வீடுமன். முதல் மனைவியான கங்கை வீடுமனைப் பெற்றுச் சந்தனுவைவிட்டு நீங்கினபின், சந்தனு, செம்படவன் வளர்த்த மகளாகிய பரிமளகந்தி யென்பவளைக் கண்டு காமுற்று மணம்பேச, அவள் தந்தை 'மனுநீதி முறைப்படி மூத்த மனைவியின் குமாரன் அரசாள, என் மகளுக்குப் பிறக்கும்பிள்ளை அரசின்றிக் கீழ்மைப்பட்டு நிற்பானாதலால், நான் உனக்கு மகளைக் கொடேன்' என்றுசொல்ல, அதனை யறிந்த பீஷ்மன், தந்தைக்கு மணஞ் செய்வித்தற்பொருட்டு, தான் மணஞ் செய்து கொள்வதில்லையென்றும், இராச்சியத்தைத் தன் தம்பிக்கே கொடுப்பேனென்றும் தேவர்கள் முன்னிலையில் பயங்கரமான சபதஞ் செய்து, அம்மகளைத் தந்தைக்கு மணஞ் செய்வித்து, பின்பு அவ ளுக்குப் பிறந்த சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்பவர்க்கே முன்னியவாக்குப்படி அரசாட்சியைக் கொடுத்தானென வரலாறு அறிக. 'கங்கைதன் வயிற்றிற்றோன்றித் தாதைதன் காதல் தீர்ப் பான், எங்களுக்கரசும் வாழ்வு மிரு நிலமுழுதுந் தந்து" என மேற் கன்னபருவத்தில் துரியோதனன் கூறுமாறுங் காண்க. (177)

118. ஒருகுலத்தினி லிரண்டு மன்னவ ருடன்பிறந்துரிமை யெய்தினுல், இருகுலத்தவரு மொக்கவாழ்வுறுதலெக்குலத்தினு மியற் கையே, பொருகுலக்களிறுவளர்திசைக்கண்மிகு புகழ்பரப்பி யெழு புவிபெறுங், குருகுலத்தவரியற்கை நன்றென மொழிந்தனன் கரிய கோவலன்.

(இ - ள்.) ஒரு குலத்தினில்-ஒரே மரபில், இரண்டு மன்னவர் - இரண்டு அரசர், உடன் பிறந்து - ஒக்கத்தோன்றி, உரிமை எய்தினுல் - அரசாட்சியுரிமையையடைந்தால், இரு குலத்தவரும் - இரண்டு திறத்தாரும், ஒக்க வாழ்வு உறுதல் - ஒருங்கிசைக வாழ்வை யடைதல், எ குலத்தினும் - எல்லாக் குலங்களிலும், இயற்கையே - (நிகழும்) இயல்பேயாம்; பொரு-போர் செய்யுந் தன்மையுள்ள, குலம்-சிறந்த, களிறு - யானைகள் [திக்கஜங்கள்], வளர் - வளர்ந்து நிற்கப் பெற்ற, திசைக்கண் - எட்டுத் திக்குக்களிலும், மிகுபுகழ் பரப்பி - மிகுந்த கீர்த்தியைப் பரவச்செய்து, எழு புவி பெறும் - ஏழு தீவ

களாகவுள்ள பூமி முழுவதையும் (தம்மதாகப்) பெற்ற, குருகுலத்தவர் - குருவம்சத்திற் பிறந்த அரசரது, இயற்கை - சுபாவம், நன்றுமிக நன்றுகவுள்ளது! என - என்று, மொழிந்தனன் - கூறினன்; (யாவனெனில்), கரிய கோவலன் - கருநிறமுடைய கண்ணபிரான்;

நன்று - சிறிதும் நன்றன்று என்றபடி; பிறகுறிப்பு; எதிர்மறையிலக்கணை. திசைக்களிறு - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் எனஎட்டு. அவை - கிழக்குமுதலிய திக்குக்களில் முறையே கீழிருந்து பூமியைத் தாங்குவன; இவற்றின் பெண் யானைகள்-அப்பிரமு, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரவர்ணி, சுப்ரதந்தீ, அங்கனை, அஞ்சனாவதி எனப்படும். (178)

119.—துரியோதனன் கோபத்துடன் மறுத்துக் கூறுதல்.

பேரராவணை துறந்தமாயனிவைபேச வன்பிலெடுபின்னையுஞ்
சீரராவினை யுயர்த்தகோவும் விழிதீயெனும்படி செயிர்த்துளே
போரராநிருபன்மணிநெடுஞ்சுடிகையாயிரங்கொடுபொறுத்தபார்
வீரரானவரதல்லவோ வுரிமைவேண்டுமோ வெனவிளம்பினன்.

(இ - ள்.) பேர் - பெரிய, அரா - ஆதிசேஷனுடைய, அணை - சயனத்தை, துறந்த - விட்டு இங்கு வந்து அவதரித்த, மாயன் - கண்ணன், இவைபேச - இவ்வார்த்தைகளைச் சொல்ல,—சீர் அரவினை உயர்த்த கோவும் - சிறந்த பாம்புக்கொடியை உயர எடுத்த துரியோதன ராசனும், வன்பிலெடு - கொடுமையுடனே, விழி தீ எனும்படி உளே செயிர்த்து - கண்கள் நெருப்பென்னும்படி மிகச்சிவக்குமாறு மனத்திலே கோபித்து, 'போர் அரா நிருபன் - போர் செய்யவல்ல பாம்புகளுக்குத் தலைவனுடைய ஆதிசேஷன், மணி நெடு ஆயிரம் சுடிகை கொடு - மாணிக்கத்தையுடைய நீண்ட ஆயிரந்தலைகளால், பொறுத்த - சுமக்கப்பெற்ற, பார் - பூமி, வீரர் ஆனவரது அல்லவோ - வீரர்களுடைய பொருளன்றோ? உரிமை வேண்டுமோ-(அதனை அடைவதற்குப்) பாத்தியதை தகுதியோ?' என - என்று, பின்னையும் விளம்பினன் - மறுபடியும் கூறினன்; (எ - று.)

நீ சொல்லுகிறபடி பாண்டவர்கள் உரியவராயினும், நாங்கள் வீரர்களாதலால் நாங்களே ஆளத்தக்கவ ரென்பதாம். பேரரா - பாம்புகளுட் பெரிய பாம்பு; தலைமை நாகம். வன்பிலெடு பேச என்றும் இயைக்கலாம். அன்பிலெடு எனப்பிரித்து, பாண்டவர் பக்கல் அன்புடனே சொல்ல என்றுமாம். கண்கள் மிகச்சிவத்தல்-பெருங்கோபக்குறி. மனிதரைக் காப்பவனென்னும் பொருளை யுணர்த்தும் நிருபனென்ற பெயர் - இங்கே காரணங்கருதாமல், அரசனென்ற மாத்திரமாய் நின்றது. சுடிகை - உச்சிக் கொண்டை.

120.—கண்ணன் இறுதியாகத் துரியோதனனைப் போர் வேண்டுதல்.

பொய்வளர்ந்த மொழிமன்னன்மற்றிவை புகன்ற பின்பு புயவலியினுல்
ஐவர்தங்களரசுங்கொள்ளாமலடலாண்மைகொண்டேதிரள்தியேன்

மெய்விளங்கவருகுருநிலத்தினிடை வந்துவெஞ்சமர்விளைக்கவே
கைவழங்குகென நின்றதூணிடையறைந்துரைக்குமிவைகாவலன்.

(இ - ள்.) பொய் வளர்ந்த மொழி மன்னன் - பொய் மிகுந்த சொற்களையுடைய துரியோதனராசன், மற்று இவை புகன்ற பின்பு - இன்னும் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொன்னபின்பு, (கண்ணன்), 'புயவலியினால் - தோள்களின் வலிமையினாலே, ஐவர் தங்கள் அரசும் கொடாமல் - பஞ்சபாண்டவர்களது அரசாட்சியை (அவர்களுக்கு)க் கொடுத்திடாமல், அடல் ஆண்மைகொண்டு - பல பராக்கிரமங்களால், எதிர் அடர்த்தியேல்-(நீ) எதிரிற் போர் செய்வாயானால்,—மெய் விளங்க வரு குருநிலத்தினிடை வந்து வெம் சமர் விளைக்க - உண்மை விளங்கப்பெற்ற குருக்ஷேத்திரத்திலே வந்து கொடிய போரைச் செய்வதற்கு, கை வழங்குக - கைதட்டிக் கொடுப்பாயாக,' என - என்றுசொல்ல,—காவலன் - துரியோதனராசன், (மிகக்கோபித்து), நின்ற தூணிடை அறைந்து - எதிரில் நின்ற தூணின் மீது கையால்மோதி, இவை உரைக்கும் - இவ்வார்த்தைகளைச் சொல்பவனானால்; (எ - று.)—அவற்றை, மேல் நான்குகவிகளிற் காண்க.

முன் சூதாட்டம் முடிந்தகாலத்திற் சொன்ன வார்த்தையின்படி இப்பொழுது அரசுகொடாமல் பொய்வளர்ந்த மொழிமன்னனானதனால், அவன் வார்த்தையை இப்பொழுது கண்ணன் நம்பாமல், அவனைக் கையால் தன்கையை அடித்துச் சபதஞ்செய்து தரும்படி கேட்டருளினன். 'அடர்த்தியே' என்ற பாடத்துக்கு - 'போர்செய்வாயே' என்று பொருள்; ஏகாரம் - இகழ்ச்சி விளக்கும். அவரவர் பராக்கிரமம் உள்ளது உள்ளபடி அங்கு வெளிப்படலாமென்ற கருத்தால் 'மெய்விளங்கவரு' என்ற அடைமொழியைக் குருநிலத்துக்குக் கொடுத்தது தென்னலாம். (180)

121.—இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்; துரியோதனன் பலவாறு பழித்துரைத்தல்.

புன்பிறப்புடைய பொதுவர்தங்களொடு புறவிலாவிரைபுரந்திடும்
உன்பிறப்பு முரலோடு கோவியருனப்பிணித்தது மறந்துநீ
மன்பிறப்பிலுயர் குருகுலத்தவர்தம்வாய்மைதானுமொருமாசிலா
வென்பிறப்பு முணராமலோ சபையிலிந்தவாசகமியம்பினாய்.

(இ - ள்.) புல் பிறப்பு உடைய - இழிவான உற்பத்தியையுடைய, பொதுவர் தங்களொடு - இடையர்களுடனே, புறவில் - முல்லை நிலமாகிய காட்டிலே, ஆன் நிரை - பசுக்கூட்டங்களை, புரந்திடும் - மேய்த்திடுகின்ற, உன் - உன்னுடைய, பிறப்பும் - பிறப்பின் இழிவையும், கோவியர் - இடைப்பெண்கள், உனை - உன்னை, உரலோடு - உரலுடனே, பிணித்ததும் - கட்டிவைத்ததையும், நீ மறந்து—, —மன் பிறப்பில் உயர் - இராசகுலங்களிலே சிறந்த, குருகுலத்தவர்தம் - குருகுலத்திற் பிறந்த அரசர்களது, வாய்மை தானும் - சத்தியத்தையும், ஒரு மாசு இலா என் பிறப்பும் - ஒரு குற்றமு

மில்லாத னைது பிறப்பின் பெருமையையும்,—உணராமலோ—, சபையில்—, இந்த வாசகம் இயம்பினாய் - (நீ) இவ்வார்த்தைகளைச் சொன்னாய்; (எ-று.)

மறவாமலும் அறிந்தும் இருப்பாயாயின் இங்ஙனங் கூறுயென்ப தாம். கோவியரென்ற சொல்லில்-கோபஸ்திரீக ளென்ற பொருள் மாத்திரமேயன்றி, கோபமுடையவ ரென்ற பொருளுந் தோன்றுமாறு ஆறிக; "மாறுகொண்டேயொருகோபிபற்றி, யடிக்கும் பொழுதில்" என்றார் திருவரங்கத்துமாலையிலும். (181)

122. ஏவிலங்குசிலையைவர்வந்தணுகின்யானயர்ந்தெளிதிருப் பனே, கோவிலங்குபொரவஞ்சுமோகரட குஞ்சரங்கள்பகைகொண்ட கான், மேவிலங்குமுன்மலைத்தல்கையறைய வேண்டுமென்றது நின் மேன்மையோ, நாவிலங்குமெனவெண்ணியோ மிகவுநன்றுநன்றரசர் ஞாயமே.

(இ - ள்.) ஏ - அம்புகள், இலங்கு - விளங்கப்பெற்ற, சிலை - வில்லையுடைய, ஐவர் - பஞ்சபாண்டவர், வந்து அணுகின் - (போருக்கு) வந்து நெருங்கினால், யான் அயர்ந்து எளிது இருப் பனே - நான் சோர்வடைந்து எளிமையாக இருந்திடுவேனே? கரட குஞ்சரங்கள் பகை கொண்ட கால் - மதயானைகள் விரோதித்து எதிர்த்தகாலத்து, கோவிலங்கு - இராச மிருகமாகிய சிங்கம், பொர அஞ்சுமோ - (அவற்றுடன்) போர்செய்தற்குப் பயப் படுமோ? 'அங்கு மலைத்தல் மேவில் - அவ்விடத்துப் போர்செய் வதை உடன்பட்டால், முன் கை அறையவேண்டும் - முன்னே கையடித்துத் தரவேண்டும்', என்றது - என்று (நீ) கூறினது, நின் மேன்மையோ - உனது செருக்கினாலோ? நா விலங்கும் என எண்ணியோ-(எனது) சொல் தவறு மென்று கருதியோ? அரசர் ஞாயம் மிகவும் நன்று நன்று - அரசர்களது நீதி மிக அழகிது! அழகிது!! (எ - று.)

அரசனாகிய என்னை அரசனாகிய நீ இங்ஙனம் மதித்தது சிறிதுந் தகாதென்றவாறு. மிருகேந்திரனை சிங்கமொன்று மதயானைகள் பலவற்றிற்குப் பயப்படாமல் அவற்றை எளிதில் அழித்தல்போல, ராஜராஜனை நான் செருக்குக்கொண்ட பாண்டவரைவர்க்கு அஞ் சாமல் அவர்களை அழித்திடுவே னென்பதாம். முன்னிரண்டடி எடுத்துக்காட்டுவமை: முதலடி - உபமேயமும், இரண்டாமடி - உபமானமுமாம். ஏ + இலங்கு = ஏவிலங்கு; தனிமொழி யாகிய பெயர்ச்சொல் ஏகாரத்தினின்முன் வகரவுடம்படுமெய் தோன்றிற்று. குஞ்சரம்-காட்டுப்புதர்களிற் சஞ்சரிப்பதென்று பொருள்; குஞ்சம் - புதர். நா - சொல்லுக்குக் கருவியாகுபெயர். நன்று நன்று - அடுக்கு, இகழ்ச்சி பற்றினது; மிகவும் நன்று நன்று - எதிர்மறையிலக்கணை. ஞாயம் - ந்யாயமென்பதன் திரிபு. (182)

123. அளிவருங் குழல்பிடித்து மன்னவையிலேவருக்குமுரி யானோநான், எளிவருந்துகிலுரிந்தபோ தருகிருந்துகண்டவர்களல்ல

வோ, துளிவரும்புனல் பரிந்தருந்தியிடுசோறுதின்றுயிர் சுமந்துதோள், இளிவரும்படியிருந்த பாவியருமின்று மானநிலையுணர்வரோ.

(இ - ள்.) ஐவருக்கும் உரியாகீ - பாண்டவரைந்து பேருக்கும் உரிய மனைவியான திரௌபதியை, மன் அவையில் - இராச சபையிலே, (துச்சாதனனால்), அளிவரும் குழல்பிடித்து-வண்டுகள்மொய்க்கப்பெற்ற கூந்தலைப பிடித்து இழுத்து வந்து, நான்—, எளி வரும் துகில் உரிந்தபோது-அவமானமுண்டாதற்குக் காரணமான வஸ்திராபஹரணத்தைச் செய்த காலத்தில், அருகு இருந்து கண்டவர்கள் அல்லவோ - (யாதொன்றுஞ செய்யமுடியாமல்) பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தவர்களன்றோ; துளிவரும் புனல் பரிந்து அருந்தி - (காட்டில்) சிறுதுளிகளாக வருகின்ற [கிடைத்தற்கரிய] நீரை வருத்தப்பட்டு (அல்லது விரும்பி)க் குடித்து, இடு சோறு தின்று - (யாவராயினும்) இட்ட சோற்றைத் தாம் உண்டு, உயிர் சுமந்து - அரிதின் உயிரைத்தாங்கி, தோள இளி வரும்படி இருந்த - புயங்கள் இழிவடையும்படி பிழைத்திருந்த, பாவியரும் - பாவிகளான அப்பாண்டவர்களும், இன்று - இப்பொழுது, மானம் நிலை உணர்வரோ - மானத்தின் நிலைமையை அறிவார்களோ? [அறியார் என்றபடி]; (எ - று.)

அருந்துகில் எளிவு உரிந்தபோது எனப்பிரித்து இயைத்து, பிறரால் களைதற்கு அருமையான ஆடையை யான் எளிதில் கவர்வித்தபொழுது என்று உரைப்பாருமுளர். துரியோதனனது அக்கிரமத்துக்குத் துச்சாதனன் கைபோல அபேதமாகத் துணை நின்றனனதலால், 'நான் அளிவருங்குழல் பிடித்துத் துகிலுரிந்தபோது' என்றது. துளிவரும்புனல் பரிந்தருந்தி என்றது, கடுங்காட்டில் வேண்டியபொழுது நீர் கிடைத்தலரிதாதலின்; அதனைக் கீழ் நச்சுப்பொய்கைச் சருக்கத்து வரலாற்றாலுமறிக. இடுசோறு என்றது வனவாசகாலத்தில் சூரியன் கொடுத்த அக்ஷயபாண்டத்தாலும், அஜ்ஞாதவாசத்தில் விராடராசனாலுங் கிடைத்த உணவை. 'உண்டு' என்பதற்குப் பதிலாக 'தின்று' என விசே மாற்றிக் கூறியது, இகழ்ச்சி விளக்கும். இளிவரும், இளிவா - பகுதி; அது - இழி வா என்ற இரண்டு பகுதிகள் ஒருசொல் தன்மைப்பட்டுப் போலிப்பெற்று நின்றது. இராச்சிய முழுவதையும் இரண்டற ஆளும் பாக்கியசாலிகளான எங்கள்போலன்றி, பாண்டவர்கள் இருந்த இராச்சியத்தையும் இழந்து அலைந்து வருந்துதற்கேற்ற தீவினையுடையரென்பான், பாவியரென்றான். (183)

124. அன்னையானவரு மிருவராமுதலளித்த தந்தையர்களாம்,பின்னையாசைகொடு குருகுலத்துரிமைபெறுவரா மொரு பிறப்பிலோர், மின்னையாமிவர்களாவரும் பரிவினெடுதனித்தனி விரும்புவார், என்னை யாமவரொடொருகுலத் தரசனென்பதம்மவிவை யென்கொலாம்.

(இ - ள்.) (இப்பாண்டவர்க்கு), அன்னை ஆனவரும் இருவர் ஆம்-தாயானவர்களும் இரண்டுபேராம்; முதல் அளித்த தந்தையர்

கள் ஐவர் ஆம் - பிரதானமாய் இவர்களோப்பெற்ற பிதாக்கள் ஐந்து பேராம்; (இங்ஙனமிருக்க), பின்னை - பின்பு, ஆசைகொடு - விருப்பங் கொண்டு, குருகுலத்து உரிமை பெறுவர் ஆம் - குருகுலத்துக்குரிய பாத்தியதையை அடைந்தவராவார்களாம்: இவர்கள் ஐவரும் - இப் பாண்டவர் ஐந்துபேரும், ஒரு பிறப்பில் - ஒரு சன்மத்திலே, ஓர் மின்னை - ஒரு பெண்ணை, பரிவினொடு - அன்புடனே, தனித் தனி விரும்புவார் ஆம் - (மணஞ்செய்துகொண்டு) தனித்தனி காதலிப் பாராம்; அவரொடு ஒரு குலத்து அரசன் என்பது - அவர்களோடு ஒப்ப ஒரு குலத்திற் பிறந்த அரசனென்று சொல்வது, என்னை ஆம்- (தாய்தந்தை குலத்துரிமை மணஞ்செய்தல் முதலிய எவற்றிலும் ஒரு குற்றமுமில்லாத) என்னையாம்; அம்ம - ஆச்சரியம்! இவை என் கொல் ஆம்-இவைகள் என்ன அநீதியாம்! (எ - று.)

இதில், ஆம் எனப் பலவிடத்தும் வந்த சொல் - அலட்சியந் தோனற நிற்கும்; "கைத்தோடுஞ் சிறைகற்போயை, வைத்தோ னின்னுயிர்வாழ்வானும், பொய்த்தோர்வில்லிகள் போவாராம், இத் தோடொப்பதி யாதுண்டே" எனக் கம்பராமாயணத்திற் போல.

அன்னையர் இருவர் - குந்தியும், மாத்திரியும். தந்தையர் ஐவர் - யமன், வாயு, இந்திரன், அசுவினி தேவரிருவர் என்பவர். மின்-பெண் ணுக்கு உவமையாகுபெயர். பேருக்குத் தந்தையான பாண்டு அப் பிரதானனென்று, 'முதலளித்த தந்தையர்' என்றான். வளர்த்தவன் பாண்டுவாயினும், பெற்றவர் வேறுபல ரென்க. மூத்தவன் இளைய வன் என்னும் முறைமையைப் பார்த்தல் முதலியன ஒருகுலத்திற் பிறந்தவர்களுக்கன்றே? இவர்கட்கும் குருகுலத்துக்கும் என்ன சம் பந்தமென முதலுக்கே சுழிவைக்கத் தொடங்கி, தன்னை அவர்க்கு உடன்பிறந்தவனென்பதும் அகௌரவமென வெறுக்கிறான். (184)

125.—கண்ணன் அவ்விடத்தினின்று புறப்பட்டு விதுரன் மாளிகையை யடைதல்.

ஞாலமுற்றுமுடையவன் மொழிந்திட நகைத்துவண்டுவரை நாதனுஞ், சாலமுற்றுமினியவர்கருத்தென நிணைந்து பேரவைதணந்து போய்க், கோலமுற்றசிலை விதுரன்வாழ்வுபெறு கோயில் சென்று நனிகுறுகினன், சீலமற்றவர் சினந்தபோது மொருதீதிலாதவர் செயிர்ப்பரோ.

(இ - ள்.) ஞாலம் முற்றும் உடையவன் - நிலவுலகமுழுவதையுந் தனதாகவுடைய துரியோதனன், மொழிந்திட-(இவ்வாறு) சொல்ல, —வள் துவரை நாதனும் - அழகிய துவாரகாபுரிக்குத் தலைவனான கண்ணபிரானும்,—நகைத்து - (அவனது பேதைமைச் செருக்கை நோக்கிச்) சிரித்து, இனி அவர்கருத்து சால முற்றும் என நிணைந்து- இனிமேல் அப்பாண்டவர்களது எண்ணம் முடிவுபெறுமென்று எண்ணி, பேர் அவை தணந்துபோய் - பெரிய அச்சபையைநீங்கிப் புறப்பட்டு, கோலம் உற்ற சிலை விதுரன் வாழ்வுபெறு கோயில் - அழகுமிகுந்த வில்லையுடைய விதுரன் வாழ்தலைப்பெற்ற திருமாளி

கையை, சென்று நனி குறுகினன் - போய்த் தகுதியாக அடைந்தான்; சிலம் அற்றவர் சினந்தபோதும் - நல்லொழுக்கமில்லாதவர்கள் கோபங்கொண்ட காலத்திலும், ஒரு தீது இலாதவர் - சிறிதுந் துர்க்குணமில்லாத பெரியோர்கள், செயிர்ப்பரோ-(எதிரில்) கோபிப்பார்களோ? (எ - று.)

துர்க்குணமுடைய துரியோதனன் இங்ஙனங் கோபங்கொண்டதற்குச் சற்குணநிதியான கண்ணன் எதிராகச் சிறிதுஞ் சீறினனில்லை யென்ற சிறப்புப்பொருளை, நான்காமடியிற் கூறிய பொதுப் பொருளால் விளங்கவைத்ததனால், வேற்றுப்பொருள்வைப்பணி. (185)

126.—கண்ணனுக்கு விருந்திட்டதுபற்றி விதுரனைத் துரியோதனன் சினந்து கூறுதல்.

கரிந்துமாலைசருகாகவும் புதியகமலவாண்முகம்வெயர்க்கவுந்
இருந்துகண்ணிணை சிவக்கவுங் கொடியசெய்யவாயிதழ் துடிக்கவும்
மிருந்தபேரவையினெடிதுயிர்த்திடு மிராசராசனவனுக்கிவன்[வான்.
விருந்துசெய்தவுறவென்கொலென்றரசரெதிர் விதுரனை விளம்பு

(இ - ள்.) மாலை - (தான் தரித்த) பூமாலைகள், கரிந்து சருகு ஆகவும் - கருகி உலர்ந்து போகவும்,—புதிய கமலம் வாள் முகம் - அன்றலர்ந்த செந்தாமரை மலர்போன்ற ஒளியையுடைய தனது முகம், வெயர்க்கவும் - வேர்வையடையவும்,—திருந்து கண் இணை சிவக்கவும் - அழகாகவுள்ள இரண்டு கண்களும் செந்நிறமடையவும்,—கொடிய செய்ய வாய் இதழ் துடிக்கவும் - கொடுஞ் சொற்களைச் சொல்லுந் தன்மையுள்ள சிவந்த தன் வாயின் உதடுகள் துடிக்கவும்,—இருந்த பேர் அவையில் நெடிது உயிர்த்திடும் - வீற்றிருந்த பெரியசபையிலே (அளவிறந்த கோபத்தாற) பெருமூச்சு விடுகிற, இராசராசன் - துரியோதனன்,—(கண்ணன் சென்ற பின்பு),—அவனுக்கு இவன் விருந்துசெய்த உறவு என்கொல் என்று - 'அகண்ணனுக்கு இவ்விதுரன் விருந்துபசாரஞ் செய்தற்கு உரிய சம்பந்தம் யாதோ?' என்று சொல்லி, அரசர் எதிர் - (அங்கிருந்த) அரசர்களது முன்னிலையில், விதுரனை விளம்புவான் - விதுரனை (நிந்தித்து)ப் பேசுபவனானன்; (எ - று.)

இக்கவியிற் கூறிய செயல் பலவும் - தீராப் பெருங்கோபத்தின் காரியம். சொல்லின் கொடுமையை வாயின்மேலேற்றிக் கூறினர். இவனுக்கும் அவனுக்கும் நெருங்கின உறவில்லை யெனபான், 'என்கொல்' என்றனன். (186)

127.—இதுவும், மேற்கவியும் - துரியோதனன் விதுரனைப் பழித்துக் கூறுதல்.

வன்பினுலவனி வெளவவென்றுகொலென்மனையிலுண்டியைமறுத்தவன், தன்பதாகினியொடினிதருந்தும்வகை தன்னிலின்னமுதியற்றினன், என்பிதாவொடுபிறந்து மின்றளவுமென்கையோதனமருந்தியும், அன்புதானுடைய னல்லனென்பகை தனக்கு முற்ற பகை யல்லனே.

(இ - ள்.) (இவ்விதுரன்), வன்பிஞல் அவனி வெளவ என்று கொல் - பலாத்காரமாக (எனது) இராச்சியத்தைப் (பாண்டவர்) பறித்துக்கொள்ளவேண்டுமென்று கருதியோ? என் மனையில் உண்டியை மறுத்தவன் தன் பதாகினியோடு இனிது அருந்தும் வகை தன் இல் இன் அமுது இயற்றினன் - எனது வீட்டில் உணவு கொள்ளுதலே யொழித்த கண்ணன் தனது சேனையுடனே இனிமை யாக உண்ணும்படி தனது வீட்டில் (அவனுக்கு) இனிய நல்லு ணவை அமைப்பித்தான்; (இவன்), என் பிதாவொடு பிறந்தும் - எனது தந்தையுடனே ஜனித்தும், இன்று அளவும் என் கை ஓதனம் அருந்தியும் - இன்றைத்தினம் வரையிலும் எனது கையால் அளிக் கப்பட்ட அன்னத்தைப் புசித்தும், அன்புதான் உடையன் அல்லன் - (என்னிடத்து) அன்புடையவனல்லன்; (ஆதலால்), என் பகை தனக்கும் உற்ற பகை அல்லனே - எனக்கு நேரிற பகைவனுக வுள்ளவனினும் (மறைந்து உட்பகைவனுகவுள்ள இவன்) மிகுந்த பகையாளியல்லனே? (எ - று.)

"பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட்டெவ்வோ, ரெழுபது கோடியுறும்" என்ற நீதியைக் கருதி, அகப்பகையான இவன் புறப்பகையினுங் கொடியனென்றான். இனி, 'என்பகை தனக்கும் உற்றபகையல்லனே' என்பதற்கு - எனக்குப் பகைவனுகவந்த கண்ணனே தனக்கும் பொருந்திய பகைவனுக (என் மனிதனை இவ்விதுரன்) பாவிக்கவேண்டுவது கடமையன்றே? என்ற கருத் துப்பட உரைப்பாருமுளர். வெளவ - அகரவீற்று வியங்கோள். உண்டி - உண்ணப்படுவது. பதாகினீ என்னும் வடசொல்லுக்கு - கொடியையுடையதென்று பொருள்; பதாகா - கொடி. யுதிட்டிரன் முதலிய ஐவர்க்குப் பாண்டு சொந்தத் தந்தையல்லனெனக் கீழ்க் கூறினனுதலால், விதுரனே அவர்கள தந்தையோடு பிறவாமல் தன் தந்தையோடு மாத்திரம் பிறந்தவனுகப் பேசினன். கையோதனம் என்றது, சுதந்திரத்தை நன்கு விளக்க. (187)

128. முதல்விழைந் தொருவனுட னியைந்த பொருள்பற்றி யின்புற முயங்கினும், அதிகமென்றபொரு ளொருவன்வேறுதரின வனையே யொழியவறிவரோ, பொதுமடந்தையர் தமக்கு மண்ணிலிது புதுமையல்ல வவர்புதல்வனும், விதுரனின்றவனெடுறவுகொண்ட தொர் வியப்பையென் சொலிவெறுப்பதே.

இ - ள்.) (தாசிகள்), இயைந்த பொருள் பற்றி - (ஒருவன்) மன மிசைந்து கொடுத்த செல்வத்தைக் கைப்பற்றிக்கொண்டு, ஒருவ னுடன் - அவ்வொரு புருஷனுடனே, முதல் விழைந்து இன்பு உற முயங்கினும் - (அப்பொருள் காரணமாக) முதலில் விரும்பி இன்பம் மிகக் கூடியிருந்தாலும், (பின்பு), வேறு ஒருவன் அதிகம் என்ற பொருள் தரின் - வேறொரு புருஷன் அதனினும் மிகுதியான செல் வத்தைக் கொடுத்தால், அவனையே ஒழிய அறிவரோ - அவ்விரண்டா மவனைத் தவிர (முன்னவனை ஒரு பொருளாக) மதிப்பார்களோ? [மதியார்]; பொது மடந்தையர் தமக்கு மண்ணில் இது புதுமை

அல்ல - (ஒருவனுக்கு உரியவரல்லாமல் பொருள் கொடுப்பவரெல் லோர்க்கும்) பொதுப்பட்ட விலேமகளிர்க்கு உலகத்தில் இவ் வியல் புகள் புதிதானவையல்ல [தொன்று தொட்டுள்ளவை]; (ஆதலால்), அவர் புதல்வன் ஆம் விதுரன் - அப்படிப்பட்டவர்களுள் ஒருதாசி யினது புத்திரனுகிய விதுரன், இன்று - இப்பொழுது, அவனெடு - (புதிதாய் வந்த) கண்ணனுடனே, உறவு கொண்டது - (பழையவ னுன என்னிடம் அன்பைவிட்டு) நண்பு பாராட்டினதாகிய, ஓர் வியப்பை - ஒரு அதிசயத்தை, என் சொலி வெறுப்பதே - என்ன சொற்சொல்லி வெறுக்கவேண்டுவது? (எ - று.)—இது, அல்ல - ஒருமைப்பன்மை மயக்கம்.

வெறுக்கக் காரணமில்லை; தாயின் குணம் மகனைத் தொடர்ந் தது எனப் பழித்தான். பாண்டவர்க்கு இராச்சியம் வந்தால் தனக்கு அதிக செல்வாக்கு இருக்குமென்று இங்ஙனஞ் செய்தான்போலு மெனக் கருதினன். (188)

129.—இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்: விதுரன் தக்க மறுமொழி கூறி வில்லை முறித்துப் போகடுதல்.

இன்னவாறிவனுரைத்த போதவனெழுந்திருந்துவசையென்னை நீ, சொன்னவாய்குருதிசோரவாள்கொடு துணித்துநின் முடிதுணிப்பன் யான், மன்னவாகுருகுலத்திலேயொருவன் மைந்தனுருயிரை வௌவினுன், என்னவானவர் நகைப்பரே யெனையுரைத்த நாவுடனிருத்தியோ.

(இ - ள்.) இன்ன ஆறு - இந்தப்படி, இவன் - துரியோதனன், உரைத்த போது - சொன்னபொழுது, அவன் - விதுரன், எழுந் திருந்து-(வருத்தத்தோடு) எழுந்துநின்று, நீ என்னை வசைசொன்ன வாய் - நீ என்னைப் பழிமொழி கூறின வாயில், குருதி சோர - இரத் தம் பெருகும்படி, யான்—, வாள்கொடு துணித்து - (அதனை என்) வாளாயுதத்தால் துணை செய்து, நின் முடி துணிப்பன் - உனது தலை யையும் வெட்டிடவல்லேன்; மன்னவா - அரசனே! குருகுலத்திலே ஒருவன் மைந்தன் ஆர் உயிரை வௌவினுன் என்ன - (சிறந்த) குரு வம்சத்திலே ஒருத்தன் புதல்வனது அருமையான உயிரைக் கவர்ந் தானென்று, வானவர் நகைப்பரே-(இவ்வுலகத்தாரேயன்றித்) தேவர் கள் (பரிகசித்துச்) சிரிப்பார்களே;[அதற்கே ஆலோசிக்கிறேனென்ற படி]; எனை உரைத்த நாவுடன் இருத்தியோ - (இல்லாவிடின்)என்னை (நிந்தித்து)க் கூறின நாக்கோடு (இன்னும் நீ) வாழ்ந்திருப்பாயோ? (எ - று.)—'எழுந்திருந்து' என்பது மேல் 131 - ஆங் கவியோடு இயையும்.

'மன்னவாழ்குருகுலம்' என்ற பாடத்துக்கு-(தொன்றுதொட்டு) நிலேபெற வாழுங் குருமரபென்க. உயிரைவௌவுதல் - உடம்பி னின்று ஒழித்தல். இவ்வுலகத்தில் பலர் துரியோதனனேடொப்ப நீதியறியாதவராதலால், அவரையொழித்து, வானவரையே கூறி னர். மன்னவா என்றது அரசச் செல்வச் செருக்கினலன்றே நீ இவ் வாறு குணமினதென உணர்த்தற்கு. (189)

180. ஈண்டவர்க்குதவியாயதூதெனவிசைப்பவற்குலகமெங்
கணும்,நீண்டவற் குதவியாயினேனென நினைத்துநீயெனையடர்த்தியே,
மாண்டவர்க்குதவியாய பேரறமுமிசையுமாண்மையும் வளர்த்திடும்,
பாண்டவர்க்குதவியாகிலென்னை முடிமன்னரானவர் பழிப்பரோ.

(இ - ள்.) ஈண்டு - இவ்விடத்தில், அவர்க்கு - அப்பாண்டவர்களுக்கு, உதவி ஆய - துணையான, தூது என - தூதனென்று, இசைப்பவற்கு - சொல்லப்பட்டவனுகிய, உலகம் எங்கணும் நீண்டவற்கு - எல்லாவுலகங்களிலும் (திரிவிக்கிரமனுய்) நீண்டு வளர்ந்த கண்ணபிரானுக்கு, உதவி ஆயினேன் - விருந்து உதவுதல் செய்பவனேன், என - என்று, நினைத்து,— நீ—, எனை - என்னை, அடர்த்தியே - (நிந்தனை சொல்லி) வருத்துகிறுயே; (இங்ஙனமன்றி), மாண்டவர்க்கு - (அறிவு குணம் செயல்களில்) மாட்சிமைப்பட்டவர்களான, உதவி ஆய பேர் அறமும் இசையும் ஆண்மையும் வளர்த்திடும் பாண்டவர்க்கு - (இம்மைமறுமைகளில்) உதவுவதான சிறந்த தருமத்தையும் கீர்த்தியையும் பராக்கிரமத்தையும் அபிவிருத்திசெய்யுந் தன்மையுள்ள அப்பாண்டவர்களுக்கே, உதவி ஆகில் - (யான் வெளிப்படையாகப் போரில்) துணைவனுனல், முடிமன்னர் ஆனவர் என்னை பழிப்பரோ - கிரீடாதிபதிகளான அரசர்கள் என்னை நிந்திப்பார்களோ? [நிந்தியார் என்றபடி]; (எ - று.)

"பாண்டவதூதனுக்கு உதவினதற்கு, நீ இப்பொழுது என்னைப் பழித்திட்டாயே; அப்பாண்டவர்க்கே உதவினலும் குற்றமுண்டோ?" என்றுன். இரண்டும் குற்றமாகாமைக்கு, 'இவன், பரிசுத்தரான பாண்டவர்க்குத் தூதன்: துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யுந் திருமால்: அவர்கள், எவ்வாற்றுனுஞ் சிறந்தவர்' என ஏற்ற அடைமொழி கொடுத்து விளக்கினன். இசைப்பவற்கு, நீண்டவற்கு என்பனவும், மாண்டவர்க்கு, பாண்டவர்க்கு என்பனவும் ஒருபொருட் பலபெயர்கள். உலகமெங்கணும் நீண்டவற்கு என்றது, உன்னைவிட எத்தனையோ மடங்கு பலபராக்கிரமங்களிற் சிறந்தவனும் யோகியனும் திரிலோகாதிபதியுமாகிய அசுரராசனை மாவலி, தேவர்களது அரசைக் கவர்ந்து ஒரு கணப்பொழுதில் எம்பெருமானற் பட்டபாட்டைக் கருதுவாயெனக் குறிப்பித்தபடியாம்; இனி, இத்தொடரில், பகவானது ஸர்வாந்தர்யாமித்துவம், ஜகச்சரீரத்துவம், சௌலப்பியம் முதலிய திருக்கலியாண குணங்கள் விளங்குமாறுங் காண்க. மாண்டவர்க்கு உதவியாய என்பதற்கு - நல்லோர்களுக்குச் சகாயரான என்றும், மாண்டவர்க்கு எனப் பிரித்து - சிறந்த தவத்தைச் செய்யும் முனிவர்களுக்கு உதவுபவரான என்றும் பொருள் கொள்ளலாம். இனி, இந்த அடைமொழியை அறம் முதலியவற்றிற்குச் சேர்ப்பினும் அமையும். (190)

181. சொல்லிரண்டு புகலேனினிச் சமரினின்றுவெங்கணை
தொடேனெனை, வில்லிரண்டினு முயர்ந்தவில்லதனை வேறிரண்டு
படவெட்டினன், மல்லிரண்டினையு மிருவராகிமுன் மலைந்தகாளமுகில்

வந்துதன், னில்லிரண்டுதினம் வைகுதற்குலகிலெண்ணிலாத தவ மெய்தினன்.

(இ - ள்.) 'சொல் இரண்டு புகலேன்-(யான்) இரண்டு வார்த்தை சொல்லமாட்டேன்; இனி சமரில் நின்று வெம் கணை தொடேன் - இனிமேல் போரில் (எவர்பக்கத்தும்) நின்று கொடிய அம்பைத் தொடுக்கமாட்டேன்,' எனு - என்று சொல்லி, வில் இரண்டினும் உயர்ந்த வில்லதனை-(உலகத்திற் பிரசித்தமான சிவதநுசு விஷ்ணு தநுசு என்ற) இரண்டு விறகளுட் சிறந்த (விஷ்ணுவினதாகிய தனது) வில்லை, வேறு இரண்டுபட வெட்டினன் - தனித்தனி இரண்டுதுண்டாம்படி வெட்டியெறிந்துவிட்டான்; (யாவனெனில்), —மல் இரண்டினையும் - (சாணூரன் முஷ்டிகன் என்னும்) இரண்டு மல்லர்களையும், இருவர் ஆகி - (தானும் பலராமனுமாக) இரண்டு பேராயிருந்து, முன் மலைந்த - முன்னே [இளம்பிராயத்தில்] போர் செய்து அழித்த, காளம் முகில் - கரியமேகம்போன்ற ஸ்ரீ கிருஷ்ண பகவான், தன் இல் - தனது மாளிகையிலே, வந்து இரண்டுதினம் வைகுதற்கு - எழுந்தருளி இரண்டு நாள் தங்கியருளுதற்கு, உலகில்- இவ்வுலகத்திலே, எண் இலாத தவம் எய்தினன் - அளவில்லாத தவப்பேற்றைப் பெற்றவனன விதுரன்; (எ - று.)

வில் இரண்டு இன்னவையென்பது, அடுத்த கவியில் "அச்சு தன் சந்தவில்லுமரன் வில்லும்" என்றதனாலும் அறியப்படும். இவ் விரண்டு விற்களின் வரலாற்றையுஞ் சிறப்பையும் "ஒருகால்வரு கதி ராமென வொளிகால்வன வுலையா, வருகார்தவழ் வடமேருவின் வலிசால்வன வையம், அருகாவினை புரிவானுள னவனுலைமைவன தாம், இருகார்முக முளையாவையு மேலாதன மேனுள்", "ஒன்றினை யுமையாள்கேள்வ னுவந்தனன் மற்றையொன்றை, நின்றுலகளந்த நேமி நெடியமால் நெறியிற் கொண்டான்" எனக் கம்பராமாய ணத்துப் பரசுராமப் படலத்துக் கூறியதனாலும் உணர்க. இனி, வில் இரண்டினும் உயர்ந்த வில்லதனை என்பதற்கு - தனது விற்க ளிரண்டுட் சிறந்ததாரு வில்லையென்றும், பிரசித்தமான சிவவில், விஷ்ணு வில் என்ற இரண்டினுஞ் சிறந்த தனதுவில்லை யென்றும் பொருள்படுமாயினும், மேல்-141-ஆங் கவியில் "இருசிலையுண்டென் றிந்த விருநிலத்தியம்பும் வில்லின், ஒருசிலை முறித்த சிற்றம்" எனக் கண்ணன் கூறியருளுதலை நோக்கி, அவற்றை யொழித்து, பொருத் தமான பொருள் கொள்ளப்பட்டது. சிவன்வில் திருமால்வில் என்ற அவ்விரண்டனுள், பலமுறை முறிந்துபோன சிவன்வில்லி னும் என்றும் முறியாத திருமால்வில் சிறந்ததாதல் அறிக; அதனை "ஆனம்முடையுமையண்ணலை யங்நாளுறுசிலைதான், ஊனம்முளது", "செருமலைகின்ற போழ்தில் திரிபுரமெரித்த தேவன், வரிசிலை யிற்றது" "ஊன்வில்லிறுத்த மொய்ம்பு" "வேதியா விறுவதே யன்றி வெண்மதிப், பாதியான் பிடித்தவில் பற்றப்போதுமோ" என்ற கம்பர்வாக்குக் கொண்டும் தெளிக. "வெற்றி, காட்டிய கரிய மாலும் கார்முகந்தன்னைப் பாரில், ஈட்டிய தவத்தின் மிக்க இரிசிகற் கீந்துபோனன்", "இரிசிகனெந்தைக்கே வெந்தையுமெனக்குத்

தந்த, வரிசிலையிதுநீ கொய்தின்வாங்குஇ" எனக் கம்பராமாயணத்துக் கூறியபடி பரம்பரையாக இராமபிரானிடம் வந்துசேர்ந்த திருமால்வில், பின்பு வழிமுறையாக விதுரனளவும் வந்து சேர்ந்திட்டது போலும்.

கம்ச சபையிற் கிருஷ்ணபலராமர் செல்லுகையில், தம்மைக் கொல்லும்படி அவனாலேவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர்வந்து எதிர்த்து உக்கிரமாகப் பெரும்போர் செய்ய, அவர்களையெல்லாம் இந்தயாதவவீரரிருவரும் மற்போரினாலேயே கொன்றுவென்றிட்டனரென்பது கதை. ஆவேசாவதாரமான பலராமனினும் அம்சாவதாரமான கண்ணன் பிரதானனுதலால், அவனையே இங்குத் தலைமையாக எடுத்துக் கூறியது.

சொல் இரண்டு புகலேன் என்றது, சுருக்கமாகவன்றிப் பலவார்த்தை கூறேனென்றும், இன்று சொன்ன சொல் என்றுந் தவறேனென்றுங் கருத்துப்படும். பின் இரண்டடிகள்-பரமபாகவதரான விதுரரது பாக்கிய விசேஷத்தை விளக்கின. மிகுந்தவனு செய்திருந்தாலொழிய இங்ஙனங் கண்ணன் அருள்செய்யப் பெரும் பேறு கிடைக்காதாதலால், 'எண்ணிலாததவ மெய்தினன்' என்றார். இனி, 'வில்லிரண்டனினுயர்ந்தவில்' எனப்பாடங்கொண்டு, பிரசித்தமான இரண்டு விற்களைப்போலச் சிறந்த வில்லென்று உரைத்தல், அடுத்த கவியில் "அச்சுதன் சந்தவில்லு மரன்வில்லு மொப்பதொரு தாமவில்" என்பதனோடும், பாரதவெண்பாவில் "கண்ணுதலான் றன் சிலைக்குங் காகுத்தன்றன் சிலைக்கு, மெண்ணுங் கானேராமெழிற் சிலை" என்றதனோடும், இயையும். மேல் 141-ஆங் கவியில் "வில்லின்" என்பதற்கு - இதறகேற்ப, விற்கள் போலவெனக் கொள்ளலாம். (191)

132.—விதுரன் சபையைவிட்டுச் சென்றபிறகு அங்குள்ள அரசர் வருந்துதல்.

அந்தவில்லினைமுறித்தவில்லிதனதாலயம்புகுதவச்சுதன்
சந்தவில்லுமரன்வில்லு மொப்பதொரு தாமவில்லினை முறிப்பதே
முந்தவில்லியரிலெண்ணும்வில்லுடையவிசயன் வந்தமரின்முடுகினுல்
எந்தவில்லியெதிர்நிற்கும்வில்லியினியென்றுகாவலரிரங்கினர்.

(இ - ள்.) அந்த வில்லினை முறித்த - (அங்ஙனம்) அவ்வில்லை முறித்துப் போகட்ட, வில்லி - வில்வித்தையில்வல்ல விதுரன், தனது ஆலயம் புகுத - தன்னுடைய திருமாளிகையைச் சென்றடைய,—காவலர் - (அச்சபையிலுள்ள) அரசர்கள் பலரும், 'அச்சுதன் சந்தம் வில்லும் - திருமாலினது அழகிய வில்லையும், அரன் வில்லும் - சிவபிரானது வில்லையும், ஒப்பது - ஒத்திருப்பதாகிய, ஒரு தாமம் வில்லினை - ஒளியையுடையதொரு வில்லை, முறிப்பதை - (இவன்) முறித்ததறிந்துவிடுவதா? வில்லியரில் முந்த எண்ணும் - வில்வீரர்களுள் முதன்மையாக (யாவராலும்) மதிக்கப்படுகின்ற, வில்உடைய விசயன் - (சிறந்த காண்டீவமென்னும்) தனுசையுடைய

அருச்சுனன், அமரின் வந்து முடுகினுல் - போரில் வந்து பராக்கிர மித்தால், இனி எதிர் நிற்கும் வில்லி எந்த வில்லி - (அவனுக்கு) இனிமேல் எதிரில் நிற்கும் வில் வீரன் எந்த வில்லாளி? (எவரு மில்லை யென்றபடி)', என்று', இரங்கினர்-மனமிரங்கினர்கள்; (எ-று.)

ஏகாரம் - துரியோதனனது அநர்த்தத்துக்குக் காரணத்தை நோக்கின கழிவிரக்கம். எனவே, அருச்சுனனைத் தகுதியாக எதிர்க்க வல்லவன் இப்பக்கத்தில் விதுரனே யென்பதாம். பகவான் எழுந் தருளப்பெற்றதனால், ஆலயமென்றது; "மார்வமென்பதோர் கோயி லமைத்து" என்றாற்போல. அச்சுதன் - அச்யுதன், (தன்னைச் சரணமடைந்தவர்களை) நழுவவிடாதவனென்றும், அழிவில்லாதவ னென்றும் பொருள். தலைமைநோக்கி, அச்சுதன் சந்தவில்லை முதலிற் கூறினது. முன்கவியில் "வில்லிரண்டினுமுயர்ந்த வில்" என்றதனோடு இக்கவியில், "அச்சுதன் சந்தவில்லு மரனவில்லு மொப்பது" என்றது மாறுகொளக்கூற லாகாது; முன்னது - கவிக் கூற்றும், பின்னது - அங்குள்ள அரசர் கூற்று மாதலால்; இனி அக்குற்றத்திற்குச் சிறிதும் இடமின்றி, 'ஒப்பதரு' எனப் பாடங் கொள்ளினும் அமையும். புகுத, து - சாரியை. அரன் - (உகாந்த காலத்தில் உலகமனைத்தையும்) அழிக்குங் கடவுள்; (தன்னையடைந்த வர்களது துன்பங்களை) ஒழிப்பவனென்றும் பொருள் கூறுவர். (192)

133.—வீடுமன் துரியோதனனைக் கண்டித்தல்.

காரணத்தும்விடு தாரையன்னபல கணைகளேவியமர்கருதும் வில், வீரணப்பழுதுரைத்தநீ பகையையெங்ஙனே தனிகொல் வெல்லு வாய், பாரணத்துமினியைவராளும்வகை பண்ணுவித்தனையழிந்த துன், பேரணத்துமெனவுள்ளழிந்து சிலபேசினனுயர் பிதாமகன்.

(இ - ள்.) (பின்பு), உயர் பிதாமகன் - (கௌரவ பாண்டவர்க் குச்) சிறந்த (பெரிய பாட்டனான) வீடுமன்,—உள் அழிந்து - (நடந்த செய்தியை நோக்கி) மனஞ் சிதைந்து,—'கார் அனைத்தும் விடு தாரை அன்ன - மேகங்களெல்லாம் பெய்கின்ற மழைநீர்த்துளிகளை யொத்த, பல கணைகள் - அநேகபாணங்களை, ஏவி-செலுத்தி, அமர் கருதும் - போர்செய்தலையே விரும்புகிற, வில்வீரனை - வில்லில் வல்ல வீரனான விதுரனை, பழுது உரைத்த - நிந்தனைபேசிய, நீ—, பகையை - பகைவர்களை, எங்ஙனே - எவ்வாறு, வெல்லுவாய் - சயித்திடுவாய்? தனிகொல் - தனியாகவோ? இனி—, பார் அனைத் தும் - பூமிமுழுவதையும், ஐவர் ஆளும் வகை - பாண்டவர்களே அரசாளும்படி, பண்ணுவித்தனை - (நீயே) செய்வித்துவிட்டாய்; உன் பேர் அனைத்தும் அழிந்தது - உனது புகழ் முழுவதும் அழிந்து விட்டது,' என - என்று, சில பேசினன் - சில வார்த்தைகளைக் கூறினன்; (எ - று.)

பிதாமகன் - தந்தைக்குத்தந்தை. இக்கவியால், வீடுமன் துரோணன் கிருபன் அசுவத்தாமன் கர்ணன் முதலிய எல்லா வீர ரினும் விதுரன் சிறந்தவனென்பதுவிளங்கும்; மேல் கன்னபருவத்தும்,

வீடுமன் துரோணன் என்பவர்க்குமுன் விதுரனைக் கூறுமாறு காண்க. முன்னே அழிந்த புகழ்போக மற்றதும் இப்பொழுது அழிந்து விட்டதென்ன, 'உன் பேரனைத்து மழிந்தது' என்றார். (193)

134.—இதுவும் அடுத்தகவியும் - துரியோதனன் வீடுமனை நோக்கி விதுரனைப்பற்றி அலட்சியமாகக் கூறியவை.

பிதாமகன்பரிவுடன் முனிந்துசிலபேச நாசமுறுபேரனும், விதார மொய்ம்பனும் விதுரனல்லது வில்வல்லவீரர் பிறரில்லையோ, வுதாரசீல னுயரங்கர்கோன்வரிவிலொன்றுமே யமையு முற்றெழும், பதாதியோ டமரிலவரும்படமலைந்திடப் பரணிபாடவே.

இதுமுதல் நான்குகவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) பிதாமகன் - வீடுமன், பரிவுடன் - வருத்தத்துடனே [அல்லது அன்புடனே], முனிந்து-கோபித்து, சில பேச - சிலவார்த் தைகளைச் சொல்ல, நாசம் உறு பேரன் ஆம் - அழிவெய்யடைதற் குரிய பௌத்திரனுகிய, விதாரம் மொய்ம்பனும் - போரில்வல்ல துரியோதனனும், (கூறுவான்);—விதுரன் அல்லது வில் வல்ல வீரர் பிறர் இல்லையோ - விதுரனேயன்றி வில் வித்தையில் திறமை யுள்ள வீரர் மற்றவர் எவருமில்லையோ? உதார சீலன-(லோபஞ்சிறிது மில்லாத) தானத்தையே ஒழுக்கமாகக் கொண்டவனுகிய, உயர் அங்கர்கோன் - சிறந்த அங்கதேசத்திலுள்ளார்க்குத் தலைவனுன கர்ணனது, வரிவில் ஒன்றுமே - கட்டமைந்த வில்லொன்று தானே, அமரில் - போரில், ஐவரும் - பாண்டவர் ஐந்துபேரும், உற்று எழும் பதாதியோடு - மிக்கு எழுகின்ற சேனைகளுடனே, பட - அழியவும், பரணி பாட - (புலவர்கள்) பரணியென்னும் பிரபந்தத்தைப் பாட்டப் பெறவும், மலைந்திட-போர்செய்தற்கு, அமையும்-போதும்; (எ-று.)— 'விதாரமொய்ம்பனும்' என்றது, மேல் 136-ஆங் கவியில் 'என்றுகூற' என்பதனோடு இயையும்.

பரணி - தொண்ணூற்றுறு பிரபந்தவகையுள் ஒன்று; அது போர்முகத்து ஆயிரங்களிற்றியானையைக்கொன்ற வீரனைத் தலைமக னைக்கொண்டு கடவுள்வாழ்த்தும் வாயில்கடைதிறப்பும் பாலை நிலமும் காளிகோயிலும் பேய்களோடுகாளியும் காளியோடுபேய்களும் சொல்லத் தான்சொல்லக்கருதிய தலைவன்சீர்த்தி விளங்கலும் அவன் வழியாகப் புறப்பொருள்தோன்ற வெம்போர் வழங்க விரும் பலும் என்னும் இவற்றையெல்லாம் இருசீரடி முச்சீரடியொழித்து மற்றைய அடியாக ஈரடிப்பஃறுழிசையாற் பாடுவது. கலிங்கத்துப் பரணி முதலியன காண்க.

பாட்டன் பெயரைப் பௌத்திரனுக்கு இடுவது பெரும்பாலும் உலகமரபாதலால், அம்மகன்மகனுக்கு, 'பேரன்' என்பது காரணப் பெயர். நாசமுறு பேரன் - எதிர்கால வினைத்தொகை: அழியும் பெயரையுடையானென்றுமாம். மேற்கவியில் 'பேர்' என்றதற்கும் இவ்வாறே. சிவபிரானது நெற்றிக்கண்ணின் நெருப்புக்கு இரையாய்

எரிபட்ட மன்மதனது அங்கம் (உடல்) விழுந்த இடமாதலால், அங்க தேசமென்று பெயர்; "வாரணத்துரிவையான் மதனனைச் சினவுநர், ஸீரமற்றங்கமிங்குகுதலாலிவணெலாம், ஆரணத்துறையுளா யங்க நாடு" என்ற கம்பராமாயணத்தாலும் அறிக. பதாதி - காலாட் படை; மற்றைச் சேனைகட்கு உபலட்சணம்; 'எடுத்தமொழி யினஞ் செப்பலு முரித்தே'. முற்று எழும் என எடுத்து - முழுவதும் எழும் என்றுமாம். துரியோதனனை 'நாசமுறுபேரன்' என்றதனால், - பாண்டவர் 'நாசமறுபேரர்' எனத்தொனிக்கும். கர்ணனது வில்லுக்குக் காலபிருஷ்டமென்றும், விஜயமென்றும் பெயர். "மேகவாகனன் பாற்பெற்ற வெயிலவனியமத்தங்கி, யாகியமுனிவற் கீந்தவரும் பெருஞ்சாபம் பெற்றேன்" என மேற் கன்னபருவத்திற் கூறுவதனாலும் இதன் மகிமையை உணர்க. (194)

185. நீயிருக்கநெடுவிற்கை யாசிரியனவனிருக்க நிகரற்றவன், சேயிருக்கவிறன் மன்னரிப்படி திரண்டிருக்க வெதிர்சென்று நீள், வேயிருக்குமிதழிடையனுக்கு நல்விருந்துசெய்தவன் வெறுக்கிலென், போயிருக்கிலென் முறிக்கிலென்சிலைமலைந்து நம்மொடெவர்போர் செய்வார்.

(இ - ள்.) நீ இருக்க - (நமது பக்கத்தில் விடுமனுகிய) நீ இருக்க, —நெடுவில் கை ஆசிரியன் அவன் இருக்க - நீண்ட வில்லேந்திய கையையுடைய ஆசாரியனுகிய அத்துரோணன் இருக்க,-அவன்சேய் நிகர் அற்று இருக்க - அவனது குமாரனை அசுவத்தாமன் ஒப்பில் லாமல் இருக்க,—விறல் மன்னர் இப்படி திரண்டு இருக்க - வெற்றி யையுடைய அரசர்கள் பலர் இவ்வாறு கூடியிருக்க, நீள் வேய் இருக்கும் இதழ் இடையனுக்கு எதிர் சென்று நல்விருந்து செய் தவன் வெறுக்கில் என் - நீண்ட புல்லாங்குழல் பொருந்தின அதரத் தையுடைய இடைச்சாதியனை கிருஷ்ணனுக்கு எதிர்கொண்டு போய்ச் சிறந்த விருந்துபசாரஞ் செய்த விதுரனொருவன் வெறுத் தால் என்ன? போய் இருக்கில் என் - (தனியே) போய் இருந்தால் என்ன? சிலை முறிக்கில் என் - வில்லை முறித்துப் போகட்டுவிட்டால் என்ன? நம்மொடு மலைந்து எவர் போர் செய்வார் - நம்மோடு எதிர்த் துப் போர்செய்ய வல்லவர் யாவருளர்? [எவருமில்லை யென்றபடி];

விதுரன் - கோபித்துப் போனதனால் நமது துணைவலிக்கு யாதொரு குறைவுமில்லை யெனத் துரியோதனன் செருக்கிக்கூறிய வாறு: கிருபாசாரியன் பிராயத்தில் முதிர்ந்தவனுய் மூப்படைந்தமை பற்றி, அவனை அப்பிரதானமாகக் கூறுதுவிட்டது; இக்கருத்து, மேற் வாரணவதச் சருக்கத்தில் "பரிவுடனிவன் படைபயிற்றப் பின்னருங், குருபதி வேறொரு குருவைத் தேடினு, னிருளற மதிநில வெறித்ததாயினும், பரிதியை நயக்குமிப்பரவை ஞாலமே" என்றது கொண்டும் விளங்கும். இனி, 'ஆசிரியரவர்' எனப் பாடங்கொண்டு, கிருபனையும் அடக்குதலும் ஒன்று. சிவபிரானருளாற் பிறந்த சிறப் புப்பற்றி, அசுவத்தாமனை 'நிகரற்று' என விசேடித்தது. நிகரற்ற வன் சேய் என எடுத்து - நிகரற்ற துரோணனது சேய் என்றும்,

நிகரற்ற சிவனதுசேய் என்றும் நிகரற்றவனை சேய் என்றும் உரைப்பினும் பொருந்தும். செம்மையென்ற பண்புப்பெயர், ஈறு போய் ஆதி நீண்டு முனநின்ற மெய் திரிந்து சேய எனநின்றது; இது முதலிற் பண்பாகுபெயராய், செந்நிறமுடைய முருகக் கடவுளை உணர்த்தி, பின் உவமவாகுபெயராய், அவனைப்போன்ற பலபராக் கிரமங்களையுடைய மைந்தனைக்குறித்ததனால், இருமடியாகுபெயர். ()

136.—இதுவும் அடுத்த கவியும் - கர்ணன் கூறிய செருக்குமொழி.

என்றுகூறவிறலங்கர்பூபதியும்யானிருக்கவிகல்விசயனைச்
சென்றுசீறியுயிர் கொள்ளவல்லவர்கள்யாவ ரென்றுநனிசெப்புவீர்
கன்றினுல்விளவெறிந்த கள்வனிவனின்றுதேர்நனிகடாவினும் [யே.
அன்றுபோரினிடை காணலாகுமெனதாடல் வெஞ்சிலையி னுண்மை

(இ - ள்.) என்று கூற - என்று (இவ்வாறு துரியோதனன்) சொல்ல, விறல் அங்கர் பூபதியும் - சிறப்பையுடைய அங்கதேசத்தார்க்குத் தலைவனான கர்ணனும், 'யான் இருக்க - நான் இருக்கையில், இகல் விசயனை சென்று சீறி உயிர் கொள்ள வல்லவர்கள் யாவர் என்று நனி செப்புவீர் - வலிமையுள்ள அருச்சுனனைப் (போரில் எதிர்த்துப்) போய்க் கோபித்து அவனுயிரைக் கவர வல்லவர் யாரென்று நன்றாகச் சொல்லுகிறீர்; கன்றினுல் விள எறிந்த கள்வன் இவன் - கன்றைக்கொண்டு விளாமரத்தை வீசியடித்த மாயையையுடைய இக்கண்ணன், நின்று தேர் நனி கடாவினும்-(முன்னே) நின்று தேரை நன்றாகச் செலுத்தினாலும், எனது ஆடல் வெம் சிலையின் ஆண்மை - என்னுடைய வெற்றியைத் தரவல்ல வில்லின் திறமையை, அன்று போரினிடை காணல் ஆகும் - அப்பொழுது யுத்தகளத்தில் (யாவர்க்கும் பிரதியக்ஷமாகப்) பார்த்தல் கூடும்; (எ - று.) வருங்கவியில் 'என்று இவை உரை செய்தான்' என்பதனோடு முடியும்.

பூபதி - பூமிக்குத்தலைவன்; முன்னே 'அங்கர்' என வந்ததனால், இது இங்குக் காரணங்கருதாது, அரசனென்ற மாத்திரமாய் நின்றது. கம்ஸனால் ஏவப்பட்ட கபித்தாசுரன், விளாமரத்தின் வடிவமாய், கண்ணன் தன் மீழ்வரும்பொழுது மேல் விழுந்து கொல்வதாக எண்ணி வந்துநிற்க, அதனை யறிந்த கிருஷ்ணபகவான், அவ்வாறே தன்னை முட்டிக்கொல்லும் பொருட்டுக் கன்றினுருவங் கொண்டுவந்த வத்ஸாசுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச்சுழற்றி விளாமரத்தின்மேல் எறிய, இருவரும் இறந்து தமது அசுர வடிவத்துடனே விழுந்தனர் என்பது கதை. கன்று - பசுவின் இளமைப்பெயர்: 'யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையு, மானுடைத்துங் கன்றெனற்குரிய" என்பது தொல்காப்பியம். இரண்டாமடிக்கு அருச்சுனனைக் கொல்லவல்லவர் நானேயன்றி வேறெவருமில்லை யென்றபடி. (196)

137. அம்பரத்தவருடன்று சீறினுமொரம்பிலேயழிவர்திண் ணம்யான், வெம்பணிப்பகழியேவிலாவியுடன் மீளுவானமரில் விச யனே, விம்பரிற்புகல விருதளத்தினுமெனக்கு நேரொருவரில்லை யென், றும்பர்கற்பகமு நாணவண்மையிலுயர்ந்தவீரனிவை யுரை செய்தான்.

(இ - ள்.) அம்பரத்தவர் - (பூமியிலுள்ள மனிதர்கள் மாத்திரமே யன்றி) ஆகாயத்திலுள்ள தேவர்களும், உடன்று சீறினும் - (என் னுடன்) பகைத்துக் கோபித்தாலும், ஓர் அம்பிலே அழிவர் - (என் னுடைய) ஒரு பாணத்தினாலே அழிவடைவார்கள்; திண்ணம்-(இது) நிச்சயம்; யான்—, அமரில் - யுத்தத்தில், வெம் பணி பகழி ஏவில் - கொடிய நாகாஸ்திரத்தைப் பிரயோகித்தால், விசயன் - அருச்சுனன், ஆவியுடன் மீளுவானே - உயிருடன் திரும்பிச்செல்வானே? [செல் லான், இறந்தே ஒழிவனென்றபடி]; இம்பரில் - இவ்வுலகத்திலே, எனக்கு நேர் புகல - எனக்கு உவமை யெடுத்துச்சொல்ல, இரு தளத் தினும் ஒருவர் இல்லை - இருநிறத்துச் சேனையிலும் ஒருத்தரும் இல்லை,' என்று இவை - என்று இவ்வார்த்தைகளை, உம்பர் கற்பக மும் நாண வண்மையில் உயர்ந்த வீரன் - தேவர்களது கல்பக விருட் சங்களும் (இவன் கொடைக்கு உவமையாகாமல்) வெட்கமடையும்படி தானகுணத்திலே சிறந்த வீரனை கர்ணன், உரை செய்தான் - சொன்னான்; (எ - று.)

செருக்குடையனாதலால், இங்ஙனம் தற்புகழ்ச்சியும் பரநிந்தையும் செய்தான். காண்டவ தகன காலத்தில் அவ்வனத்தினின்று ஓடுகிற பிராணிகளை அருச்சுனன் அம்பெய்துகொன்று அத்தழலிலே வீழ்த்திவருகிறபொழுது, தக்ஷகனென்னும் நாகராசனது மனைவி தன குழந்தையாகிய அசுவசேனன் என்னும் சிறுநாகத்தைத் தன்வாயினுள் மறைத்துவைத்துக்கொண்டு ஆகாய மார்க்கத்தில் எழும்ப, அதுகண்டு பார்த்தன் தன்பாணத்தால் அந்த நாக கன்னிகையின் தலையைத் துணித்துவிட, அதன்வாயிலிருந்த நாக குமாரன் வால்மாத்திரம் அறுப்புண்டு பிழைத்தெழுந்து, தன் தாயைக்கொன்ற அவன் மீது கறுக்கொண்டு, அவனுக்குப் பகைவன் யாரென்று விசாரித்து, அஸ்திர வடிவமாகிக் கன்னனையடைந்த னென்பது, 'பணிபபகழி' எனபதன் வரலாறு. இதனை அருச்சுன னைக் கொல்லவொட்டாதபடி கண்ணன் தந்திரமாகத் தடுத்துவிடும் தன்மையை மேல் கனனபருவத்திற் காண்க. இருதளம் - பாண்டவ சேனையும், கௌரவ சேனையும். கல்பகம் - (நினைத்தமாத்திரத்தில் வேண்டியபொருள்களைக்) கல்பிப்பது என்று பொருள்; கல்பித்தல் - உண்டாகச்செய்தல். (197)

138.—வீடுமன் கர்ணனைக் கண்டித்துக் கூறுதல்.

திசையனைத்தினும் வந்தானவரை யிரவிவந்ததொரு திசை யின்வாய், நிசையெனப்பொருதுவானவர்க் கரசளித்துவந்த விறனீர் ம்மையான், விசையனுக்குநிகர் நீகொலோ கடவுள் வெண்மதிக்குநிகர்

வெள்ளியோ, அசைவில்விற்றெழிலும் வல்லியோவென வொரசை விலாதவனறைந்தனன்.

(இ - ள்.) (அதுகேட்டுக் கோபித்து), ஓர் அசைவு இலாதவன் - (எக்காரியத்திலும்) சிறிதுசோர்வுமில்லாத வீடுமன்,—(கன்னனை நோக்கி), 'திசை அனைத்தினும் - எல்லாத் திக்குக்களிலும், வளைந்த - சூழ்ந்து கொண்ட, தானவரை - அசுரர்களை, இரவி வந்தது ஒரு திசையின் வாய் நிசை என - சூரியன் வந்தடைதாருதிக்கிலே (அவனைக் கண்டமாத்திரத்தில் அழிகின்ற) இருள்போலாம்படி, பொருது - போர் செய்து அழித்து, வானவர்க்கு அரசு அளித்து வந்த - (தேவ லோகத்துச்சென்று அங்குள்ள) தேவர்களுக்கு அரசாட்சிச்சிறப் பைக் கொடுத்துவந்த, விறல் நீர்மையான் - வெற்றித்தன்மை யுடை யவனை, விசையனுக்கு - அருச்சுனனுக்கு, நிகர் - ஒப்பானவன், நீ கொல் ஓ - நீதானே? கடவுள் வெள் மதிக்கு நிகர் வெள்ளியோ - தெய்வத்தன்மையமைந்த வெண்ணிறமுள்ள பூர்ண சந்திரனுக்கு ஒப்பாகுபவன் சுக்கிரன்தானே? அசைவு இல் வில்தொழிலும் வல் லியோ - (அவ்வருச்சுனனை நோக்குமிடத்து நீ) தளர்ச்சியில்லாத வில் வித்தையும் பயின்றவனுவாயோ?' என - என்று, அறைந்த னன் - கூறினன்; (எ - று.)

அருச்சுனன் அருந்தவமியற்றிப் பரமசிவனிடத்துப் பாசுபதம் முதலிய அஸ்திரசஸ்திரங்கள் பலவற்றைப் பெற்றபின்பு, ஆங்கு வந்து அழைத்துப்போன தன்தந்தையான இந்திரனுடனே தேவ லோகஞ்சேர்ந்து, அங்கு இந்திரன்முதலிய தேவர்கள் வேண்டிக் கொண்டதனால், அவர்க்குப்பகைவராய்ப் பலநாளாகப் பெருந்துன பமியற்றிவந்த கடலிடையிலுள்ள தேதாயமாபுரவாசிகளான நிவாத கவசர் என்னும் அசுரர் மூன்றுகோடி பேரையும், அந்தரத்துள்ள இரணியபுரவாசிகளான காலகேயர் என்ற அசுரர் அறுபதினுயிர வரையும் போர்செய்து அழித்து ஒழித்தானென்பது, கீழ் நிவாத கவசர் காலகேயர் வதைச்சருக்கத்து வரலாறு.

தாகவசென்பதற்கு - (காசியபமுனிவரது மனைவிமார்களுள் தநு என்பவளது மக்களென்று பொருள். ஒளியில் சந்திரனதுபெரு மைக்கும் சுக்கிரனது சிறுமைக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டோ, அவ்வளவு வேறுபாடுண்டு,பலபராக்கிரமங்களில் அருச்சுனனது பெரு மைக்கும் கர்ணனது சிறுமைக்கும் என்பதாம். மூன்றுமடி எடுத்துக் காட்டுவமையணி. நிசையென - உவமையுருபு. சூரியன் உதித்தமாத் திரத்தில் இருள் இருந்த இடம் தெரியாமல் ஒழிவதுபோல, அருச்சு னன் எதிர்த்தமாத்திரத்தில் அசுரர்கள் அனைவரும் இருந்த இடம் தெரியாமல் ஒழிந்தனரென்க. நிவாதகவசர்கள் இருந்தது கீழ்கடலி லாதலால், 'இரவிவந்தடைதாரு திசையின் வாய்' என்பதற்கு சூரியன் உதித்தற்கு இடமான கிழக்குத்திக்கிலே என்றும் பொருள் கொள்ள லாம். பொருது - அழித்து, காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது. மதிக்குத் தெய்வத்தன்மை - சிவபிரான் திருமுடியிலுறைதலும், திரு மால் திருவுள்ளத்தினின்று உதித்தலும், தேவர்க்கெல்லாம் தனது அமிருத கிரணமளித்தலும், ஓஷதிகளெல்லாவற்றுக்கும் தலைவனுத

லும் முதலியன. வெண்மை - இனம் விலக்குதற்கு வந்ததல்லாத இயற்கையடைமொழி. வெண்ணிறமுடைமைபற்றி, வெள்ளியென்று பெயர். அளித்து உவந்த என்றும் பிரித்து உரைக்கலாம். விசையன்- இடைப்போலி; கொல்-அசை. (198)

139.—கர்ணன் வீடுமனோக்கி நிஷ்டூரமாகச் சில கூறுதல்.

அவன்மொழிந்தமொழிதன்செவிப்படலு மருகிருந்தமுதருந்துநீ, யிவனுடன்சிலர்பகைக்கின் மற்றவர்தமிசையுமாண்மையுமியம்புவாய், புவனமொன்றுபடவரினுமென்றனெடு பொருவராயி னெதிர்பொர விடாய், சிவனுமென்கணையையஞ்சுமென்று நனிசீறினு னிரவிசிறுவ னே.

(இ - ள்.) அவன் மொழிந்த மொழி - (இங்ஙனம்) அவ்வீடுமன் சொன்ன வார்த்தை, தன் செவி படலும் - தனதுகாதில் நுழைந்த வளவிலே [அதனைக் கேட்டமாத்திரத்தில் என்றபடி],—இரவி சிறு வன் - சூரியபுத்திரனை கர்ணன,—(அவ்வீடுமனை நோக்கி), 'அருகு இருந்து அமுது அருந்தும்நீ-(எப்பொழுதும் இத்துரியோதனனது) சமீபத்திலேயிருந்து (அவனது)அன்னத்தையுண்ணுகிற நீ, (எப்போ தும்), இவனுடன சிலர் பகைக்கில் - இத்துரியோதனனுடன் வேறு யாரேனும் சிலர் பகைமைகொண்டால், (அப்பொழுது), மற்று அவர் தம் இசையும் ஆண்மையும் இயம்புவாய் - எதிரிகளான அவர்களது கீர்த்தியையும் பராக்கிரமத்தையுமே எடுத்துக்கூறும் இயல்புடை யாய்; புவனம் ஒன்றுபட வரினும் - எல்லாவுலகத்தாரும் ஒருமிக்கத் திரண்டு வந்தாலும், என்தனெடு பொருவர் ஆயின் - என்னுடனே போர் செய்யவல்லவராஞல், எதிர் பொர விடாய் - எதிர்த்துப் போர் செய்ய விடுவாய்; சிவனும் என்கணையை அஞ்சும் - சிவபிரானும் எனது அம்புக்கு அஞ்சுவான்,' என்று - என்று சொல்லி, நனி சீறினன் - மிகுதியாகக் கோபித்தான்; (எ - று.)

சிவன் என்ற சொல்லுக்கு-(யாவர்க்கும்) மங்களத்தைச் செய்பவ னென்று பொருள்; சிவன-சுபம். உம் - உயர்வுசிறப்பு; அது - அப் பிரானது வெகுண்டு உலகமழிக்கும் ஆற்றலையும், முன் அருச்சுனன் வில் நாணற்றுத் திகைக்கும்படி எதிர்த்துப் போர்செய்த திறமை யையும் குறிக்கும். இவன் இங்ஙனங் கூறினது பேதைமை யென் பார், 'சிறுவன்' என்றார். சிவனும் என்கணையை அஞ்சும் - "அச்சக் கிளவிக்கு ஐந்து மிரண்டும், எச்சமிலவே பொருள் வயினான' என்ப தனால், இரண்டாம் வேற்றுமை விரியாகக் கூறினன். (199)

140.—யாவரும் தம்தம் இருப்பிடங்கட்குச் செல்லுதல்.

இரவிமைந்தனெடுகங்கைமைந்தனெதிர் வாய்மையொன்றையு மிசைத்திலன், பொரவறிந்திடுதுமன்றுவெஞ்சமரிலென்றெழுந்து தனி போயினன், அரவவெங்கொடியுயர்த்தகோவுமிகலரசருக்கு விடைநல்கி னான், விரவுபைந்துளபமாலையான்விதுரன்மனையிலுற்றது விளம்பு வாம்.

(இ - ள்.) (பின்பு), கங்கை மைந்தன் - வீடுமன், இரவி மைந்தனொடு - கர்ணனுடனே, எதிர் வாய்மை ஒன்றையும் - பிரதியான வார்த்தையொன்றையும், இசைத்திலன் - கூறுதலனுய், 'அன்று - (போர் நடக்கும்) அக்காலத்தில், வெம் சமரில் - கொடிய போர்க்களத்தில், பொர - போர் செய்கையில், அறிந்திடுதும் - (இவனது ஆண்மையை நேரில்) அறிவோம்,' என்று - என்று கருதி, எழுந்து தனி போயினன் - (அச்சபையைவிட்டு) எழுந்து தனியே சென்றனன்; அரவம் வெம் கொடி உயர்த்த கோவும் - பாம்பின்வடிவமெழுதிய கொடிய துவசத்தை உயர எடுத்த துரியோதனராஜனும், இகல் அரசருக்கு - வலிமையையுடைய அரசர்களுக்கெல்லாம், விடை நல்கினன் - (சபையின்று) செலவு கொடுத்து அனுப்பினன்; (இதுநிற்க), விரவு பைதுளபம் மாலையான் - பொருந்தின பசிய திருத்துழாய் மாலையையுடைய கண்ணபிரானது, விதுரன் மனையில் உற்றது - விதுரனது மாளிகையில் நடந்த செய்தியை, விளம்புவாம் - (இனிக்) கூறுவோம்; (எ-று.)

—அதனை மேற்காண்க.

கான்காமடி - கவிக்கூற்று. விளம்புவாம் - கவிகளுக்கு உரிய இயற்கைத் தன்மைப்பன்மை. என்று - என்று சொல்லி. வாய்மை - வாயின் தன்மை; வாய் - சொல்லுக்குக் கருவியாகுபெயர். இசைத்திலன் - முற்றெச்சம். உற்றது - விகுதியாலணையும் பெயர். (200)

வேறு.

141.—விதுரன் வில்லை முறித்த காரணத்தைக் கண்ணன் வினவுதல்.

பொருசிலைமுறித்தவீரன்கோயிலிற்புகுந்துநேமிக்
குரிசிலைவணங்கியாங்கணிருப்பவக்குரிசிஞேக்கி
இருசிலையுண்டென்றிந்தவிருநிலத்தியம்பும்வில்லின்
ஒருசிலைமுறித்தசிற்றமென் கொலோவுரைசெயென்றான்.

(இ - ள்.) (இதுநிற்க), பொரு சிலை முறித்த வீரன் - போர் செய்தற்கு உரியவில்லை முறித்துப்போகட்ட சுத்தவீரனை விதுரன், கோயிலில்புகுந்து - (தனது) சிறந்த மாளிகையிலே சென்று, நேமி குரிசிலை வணங்கி - (அங்குத் தனக்குமுன் சென்றிருந்த) சக்கரபாணியான கண்ணபிராணை நமஸ்கரித்து, ஆங்கண் இருப்ப-அவ்விடத்தில் இருக்கையில்,—அ குரிசில் - அந்தக்கண்ணபிரான், நோக்கி - (விதுரனைப்) பார்த்து, 'இருசிலை உண்டு என்று இந்த இரு நிலத்து இயம்பும் வில்லின் ஒரு சிலை முறித்த சிற்றம் - இரண்டு சிறந்த விற்கள் உள்ளனவென்று இந்தப்பெரிய பூலோகத்திற் (பிரசித்தமாகச்) சொல்லப்படுகிற விற்களுள் ஒன்றுகிய உனது வில்லை (நீ) முறித்துப்போகட்ட கோபம், என்கொலோ - யாது காரணம்பற்றியதோ? உரைசெய்-சொல்,' என்றான், என்று கேட்டருளினன்; (எ-று.)

விதுரன் வில்முறித்தசெய்தியைக் கண்ணன் தனது ஞானத்திருக்கண்ணினாலும் ஜனவதர்தியினாலும் அறிந்தனனென்க.

சிற்றம் - தொழிற்பெயர்; சிறு - பகுதி, அம் விகுதி, ற் - விரித்தல் விகாரம். ஆங்கண் - அக்கண் என்பதன் மெலித்தலும் நீட்டலும். 'இருப்பவங்குரிசில்' எனவும் பாடம்.

இதுமுதல் ஐம்பதுகவிகள்-முதற்சிரும் நான்காஞ்சிரும் விளச் சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (201)

142.—இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்: விதுரன் சொல்லும் உத்தரம்.

ஆவதுகருதாஞகிலமைச்சர்சொற்கேளாஞகில்
வீவதுகுறியாஞகில்விளைவதுமுணராஞகில்
நாவதுகாவாஞகிலவனுக்காநடந்துபோரிற்
சாவதுபழுதென்றன்றேசகத்துளோர்சாற்றுகின்றார்.

(இ - ள்.) '(ஒருவன்), ஆவது கருதான் ஆகில் - (தனக்கும் பிறர்க்கும்) நன்மையாகுங் காரியத்தை ஆலோசியாஞலும், அமைச்சர் சொல் கேளான் ஆகில் - மந்திரிகளது வார்த்தையைக் கேட்டுநடவாஞலும், வீவது குறியான் ஆகில் - (தான்) அழிவதைச் சிந்தியாஞலும், விளைவதும் உணரான் ஆகில் - (இம்மை மறுமைகளில் தனக்கு இனி) விளையும் பயன்களை அறியாஞலும், நாவது காவான் ஆகில்-(தனது) நாக்கை(த் தீச்சொற சொல்லாமல்) அடக்கிவையாஞலும், அவனுக்கு ஆ நடந்து - அவனுக்கு உதவியாகச் சென்று, போரில் சாவது - யுத்தத்தில் இறப்பது, பழுது - குற்றமாகும்' என்று அன்றே சகத்து உளோர் சாற்றுகின்றார் - என்றே உலகத்திலுள்ள பெரியோர்கள் எல்லோரும் சொல்லுகிறார்களன்றே? (எ-று.)

ஆவதுகருதாமை முதலாக இங்குக்கூறிய துர்க்குணங்களையுடைய துரியோதனனுக்கு உதவியாகச்சென்று போரில் இறத்தல் பழிபாவங்களைத் தருவதாதலால், அதனை ஒழித்தேன் என்பதாம், 'ஆகில்' எனப் பலவிடத்தும், வந்தவை - விணைச்செவ்வெண். இவை- 'பழுது' என்பதைக் கொண்டுமுடியும். "யாகாவாராயினு நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்ற திருக்குறளினாலும், மொழியடக்கம் - மற்றை மெய்யடக்க மனவடக்கங்களினும் முக்கியமாதலை அறிக. ஆவது, வீவது, விளைவது - எதிர்கால விணையாலணையும் பெயர்கள். நாவது, அது - அசை. சாவது - எதிர்காலத் தொழிற்பெயர். இனி, நாவது - நாவினிடத்ததான சொல் எனக் குறிப்புவிணையாலணையும்பெயருமாம். அன்றே - தேற்றம். (202)

148. செல்வம்வந்துற்றகாலத்தெய்வமுஞ்சிறிதுபேணார்
சொல்வனவறிந்துசொல்லார்சுற்றமுந்துணையுநோக்கார்
வெல்வதேநினைவதல்லால்வெம்பகைவலிதென்றெண்ணார்
வல்விணைவிளைவுமோரார்மண்ணின்மேல்வாழுமாந்தர்.

(இ - ள்.) மண்ணின்மேல் வாழும் மாந்தர் - பூமியில் வாழ்ந் திருக்கும் மனிதர் சிலர்,—செல்வம் வந்து உற்றகாலை - (தமக்குப்) பொருள் வந்து சேர்ந்த காலத்து, தெய்வமும் சிறிது பேணுர்- (அது தன்பக்கல் வருதற்குக் காரணமாகத் திருவருள்புரிந்த) கடவுளையும் சிறிதும் விரும்பிக்கொண்டாடார்; சொல்வன அறிந்து சொல்லார் - (தாம்) சொல்லும்வார்த்தைகளை (ஆராய்ந்து) உணர்ந்து சொல்ல மாட்டார்கள்; சுற்றமும் துணையும் நோக்கார் - உறவினரென்றும் நண்பரென்றும் தாட்சிணியம் பார்க்கமாட்டார்கள்; வெல்வதே கினவது அல்லால் வெம் பகை வலிது என்று எண்ணுர் - (தாம்) சயித்திடுவோம் என்பதையே கருதுவதல்லாமல் கொடிய பகை வருக்கம் (தம்மினும்) வலிமையுடையதென்று மதிக்கமாட்டார்கள்; வல் வினை விளைவும் ஓரார் - (எல்லாவற்றினும்) வலிமையுடைய ஊழ் வினையின் பயனையும் ஆராயமாட்டார்கள்; (எ - று.)—இது என்ன பேதைமை? என்றபடி.

அற்பகுணமுடையவனன துரியோதனன் தனக்குச் செல்வ மிருத்தலால் இங்குக் குறித்த துர்க்குணங்களையெல்லாம் மிகக் கொண்டுள்ளானென்றற்கு, பொதுவாக இதுகூறினர். பேணப்படு வன யாவற்றுள்ளும் தலைமை கருதி, தெய்வத்தை உயர்வுசிறப் பும்மை கொடுத்து முதலிற் கூறினர். "ஊழிற்பெருவலி யாவுள மற்றிருன்று, சூழினுந் தான்முந்துறும்" என்றபடி எவ்வாற்றலுங் கடக்கவொண்ணுத உறுதியுடைமைபற்றி, 'வல்வினை' எனப்பட்டது. வினைவும், உம்-இறந்ததுதழுவிய எச்சமும், உயர்வுசிறப்பும். சிறிதும் என்பதனிறுதியில், இழிவுசிறப்பும்மை - தொகுத்தல் விகாரப் பட்டது. வெல்வதே, ஏ - பிரிநிலையோடு தேற்றம். (203)

144. நினைக்கவுந்தொழவுமெட்டாநீயெழுந்தருளப்பெற்றுந்
தனக்கிதுதகுதியென்றுதமருடன்வாழவெண்ணுன்
மனக்கடுங்கனலினன் றன்மனத்தினுலுரைத்தபுன்சொல்
எனக்கிசையாமல்யானுமிருஞ்சிலையிறுத்ததென்றன்.

(இ - ள்.) '(யாவராலும்), நினைக்கவும்-(மனத்தினுற்) சிந்தித்துப் பார்த்தற்கும், தொழவும் - (மொழி மெய்களால்) வணங்குதற்கும், எட்டா - எட்டாத, நீ—, எழுந்தருள பெற்றும் - (தனது அரண் மனைக்குக் கருணையோடு) வந்துசேரப்பெற்றிருந்தும், இது தனக்கு தகுதி என்று - நீ அருளிச்செய்த சொல் தனக்குத் தக்கதென்று உட்கொண்டு, தமருடன் வாழ எண்ணுன் - ஞாதிகளான பாண்ட வர்களோடு ஒத்துவாழ்தற்கு நினையாதவனும், மனம் கடும் கனலி னன் - மனத்திற் கொடிய கோபாக்கினியையுடையவனுமாகிய துரியோதனன், தன் மனத்தினுல் உரைத்த - தனது மனக்கருத் தோடு பொருந்தி (உன்னையும் என்னையும்) நிந்தித்துக்கூறின, புல் சொல் - இழிவான வார்த்தை, எனக்கு இசையாமல் - எனக்குப் பொருந்தாமையால், யானும் இருஞ் சிலை இறுத்தது-நானும் பெரிய வில்லை முறித்திட்டது,' என்றன் - என்று (கண்ணனை நோக்கி விதுரன்) கூறினன்; (எ - று.)

"இனமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லி யினமென்னு, மேமப் புணையைச் சுடும்" என்ற நீதிப்படி துரியோதனனது மனத்திற் பொருந்தின கோபாக்கினி இனி அவனைக்கெடுப்பதேயன்றி அவனுக்கு உறுதிமொழி கூறும் நல்லினமான என்னை அகற்றுதலுஞ் செய்தது என்பார் 'மனக்கடுங்கனலினுன்' என்றும், தான் அறியாமல் தவறிச் சொன்னதன்று, வேண்டுமென்று அடத்தோடு சொன்னது என் பார் 'தன்மனத்தினுலுரைத்த' என்றுங் கூறினர். கோபத்தைக் கடுங்கனல் என உருவகப்படுத்தின விதப்பு - உலகத்து நெருப்புச் சுடுவது தான் சேர்ந்த விடத்தையே, இங்நெருப்புச் சேராதவிடத் தையுஞ் சுடுமென்னும் வேற்றுமைதோன்ற நின்றது. இறுத்தது - தொழிற்பெயர், வினைமுற்றாய் நின்றது; இதனை, வடநூலார் பாவேப் பிரயோக மென்பர். (204)

145.—இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்: கண்ணன் விதுரனை நோக்கிக் கூறுவன.

மாயனுமகிழ்ந்துநோக்கிமாசுணமுயர்த்தமன்னன்
போயருஞ்சேனையோடுபோர்க்களங்குறுகும்போது
நீயவனருகுநில்லாதொழியினுன்னேயமைந்தர்
தாயமுஞ்செல்வமுற்றுந்தரணியும்பெறுவரன்றே.

(இ - ள்.) (அதுகேட்டு), மாயனும் - கண்ணனும்,—மகிழ்ந்து - திருவுள்ளமுகந்தருளி, நோக்கி - (விதுரனைப்) பார்த்து, மாசுணம் உயர்த்த மன்னன் - பாம்புக்கொடியை உயரவெடுத்த துரியோதன ராசன், போய் - புறப்பட்டுச் சென்று, அருஞ்சேனையோடு - (பிறரால் வெல்லுதற்கு) அருமையான சேனையுடனே, போர் களம் குறுகும் போது - யுத்தகளத்தை அடையும் பொழுதில், நீ அவன் அருகு நில்லாது ஒழியின் - நீ யொருத்தன் அவனது பக்கத்தில் நிற்காமல் நீங்கினால், உன்னேயம் மைந்தர் - உனது அன்புக்கு உரிய குமாரரான பாண்டவர், அன்றே - அப்பொழுதே, தாயமும்-இராச்சியபாகத்தை யும், செல்வம் முற்றும் - மற்றும் பொருளெல்லாவற்றையும், தரணி யும் - பூமி முழுவதையும், பெறுவர் - அடைவார்கள்; (எ - று.)— அன்றே - தேற்றமுமாம். இப்பாட்டில், 'நோக்கி' என்பது மேல் 147-ஆங் கவியில் 'என்றருளி' என்பதோடு குளகமாகத்தொடரும்.

விரைவில் தனது திருவுள்ளக்கருத்து நிறைவேறு மென்று கண்ணன் மகிழ்ந்து கூறினனென்க. நீ எதிர்ப்பக்கத்தி லிருந்தால் பாண்டவர்க்குப் பகைவெல்லுதலரிதெனக் கண்ணன் விதுரனுக்கு மூகமன் கூறினன். (205)

146. ஏற்றியநறுநெய்வீசியிந்தனமடுக்கினலுங்
காற்றுவந்துருதபோதுகடுங்கனல்கதுவவற்றே
நீற்றணிநிமலனன்னநின்கைவில்லிற்றதாயிற்
சீற்றவேலரசன்சேனைதென்புலம்படர்கைதிண்ணம்.

(இ - ள்.) நறு நெய் வீசி - நல்லமணமுள்ள நெய்யை மிகுதி யாகச் சொரிந்து, இந்தனம் - விறகுகளை, ஏற்றிய - நீப்பற்றவைத்

தற்கு, அடுக்கினுலும் - (ஒன்றன்மேலொன்று) பொருந்தவைத்தாலும், காற்று வந்து உருதபோது - (ஏற்ற) காற்று (சமயத்துக்கு) வந்து உதவிசெய்யாத பொழுது, கடுங்கனல் கதுவ வற்சீரு-மிகுந்த நெருப்புப் பற்றவல்லதோ? [அன்றென்றபடி]; சீறு அணி நிமலன் அன்ன நின் கை வில் இற்றது ஆயின் - விஜயனைத் தரித்த குற்றமற்ற சிவபிரானை யொத்த உனது கையிலுள்ள வில் முறிந்ததானுல், சீற்றம் வேல் அரசன் சேனை தென்புலம் படர்கை-கோபத்தையுடைய வேலாயுதத்தையுடைய துரியோதனராசனது சைனியம் யமலோகத்துக்குச் செல்லுதல் [அழிதல்], திண்ணம்-நிச்சயம்;(எ - று.)

பலதுணைக்கருவிகள் அமைந்திருந்தாலும் கனலின் வளர்ச்சிக்குக் காற்றின் உதவி அவசியமாதல்போல, பல்வகை வலிமைகள் அமைந்திருந்தாலும் துரியோதனனது வெற்றிக்கு ஏற்ற சாதனமான உனது உதவி இல்லாமையால் அவன் வெல்லற்பாலனல்லன் என்பதாம். கூற்றுவனது இடம் தெனதிசையி லுள்ளதாதலின் 'தென்புலம்' என்றும், போரிற் புறங்காட்டாது பகைவராலிறந்து வீரசுவர்க்கம் பெறுபவரும் யமதரிசனம் பெற்றே செல்ல வேண்டுதலின் 'தெனபுலம்படர்கை' என்றும் கூறினர். திண்ணம்-திண்மை திட்பம் என்பனபோல, பண்புப்பெயர்; அம - விகுதி. படர்கை - கை விகுதி பெற்ற தொழிற்பெயர். இந்தாம் - வடசொல். பகையைத் தவருது அழிக்கும் ஆற்றலுக்கு, அழித்தற்கடவுளான உருத்திரமூர்த்தியை உவமைகூறினர். முன்னிரண்டடி-பிறிதுமொழிதலலங்காரம்.

ஏற்றிய - செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம்; இனி, இறந்தகாலப் பெயரெச்சமாக்கி மிகுதியான எனப் பொருள் கொண்டு, நெய்யோடு சேர்ப்பினும் அமையும். வற்று-வல் என்னும் பண்படியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று; று - விகுதி. நிமலன்-ஆணவம் மாயை கன்மமென்னும் மும்மல மற்றவன். இருவரும் பரமபாகவதராதலால், விதுரனைச் சிவனெடு ஒப்பிட்டதென்றுங் கூறுவர். (206)

147. பன்னியபுரையில்கேள்விப்பயனுகர்மனத்தாய்நின்னை
மன்னவன்மொழிந்தவெல்லாம்பொறுத்தியென்றருளிமாயோன்
அந்நகர்தன்னில்வண்மையருளழகாண்மைபேசுங்
கன்னனைப்பயந்தகாதற்கன்னிதன்கோயில்புக்கான்.

(இ - ள்.) 'பன்னிய - சிறப்பித்துச்சொல்லப்பட்ட, புரை இல் - குற்றமில்லாத, கேள்வி - நூற்கேள்விகளின், பயன் - பிரயோசனமான தத்துவப் பொருளை, நுகர் - (எப்பொழுதும் சிந்தித்து) அனுபவிக்கிற, மனத்தாய் - மனத்தையுடைய விதுரனே! நின்னை மன்னவன் மொழிந்த எல்லாம்-உன்னைத் துரியோதனராசன் கூறியவற்றையெல்லாம், பொறுத்தி - பொறுத்துக் கொள்வாய்,' என்று அருளிஎன்றுசொல்லியருளி, மாயோன் - கண்ணன், அந்நகர்தனில்-அந்தஹஸ்தினபுரியிலே, வண்மை அருள் அழகு ஆண்மைபேசும் கன்னனை பயந்த காதல் கன்னிதன் கோயில்புக்கான் - உதாரகுணம் கருணை

சௌந்தரியம் பராக்கிரமம் என்பவற்றிற் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற கர்ணனை இளமையிற்பெற்ற அன்பையுடைய குந்திதேவியினது வாசஸ்தானத்தை அடைந்தருளினன்; (எ - று.)

இச்சருக்கத்தில், கண்ணனது மாயையின் காரியமான பல அற்புதச் செய்கைகளை நோக்கி வியந்து, பலவிடத்து அவனை 'மாயோன்' எனக் குறிக்கிறார்; விதுரனைத் துரியோதனனினின்று பிரித்த அற்புதத்தைக் குறித்துக் கீழ் 145-ஆங் கவியில் 'மாயன்' எனக்கூறி, இனிக் குந்திமூலமாகக் கர்ணனைத் துரியோதனனினின்றுபிரிக்கத்தொடங்கிய அற்புதத்தைக் குறித்து இங்கு 'மாயோன்' என்றார். கன்னிகையாயிருந்தகாலத்துக் குந்தி கர்ணனைப் பெற்றமை விளங்க, இங்கு 'கன்னி' எனப்பட்டாள். 'காதற்கன்னி' என்றது - அப்பொழுது சூரியனைவிரும்பினதனாலும், தன் மக்களிடத்து இயல்பாக அன்புடையளாதலாலும், கண்ணனிடத்து விசுவாசமுடையவளாதலாலுமென்க. இனி, 'வண்மையருளழகாண்மை பேசும்' என்பதற்கு - தனது ஈகை முதலிய குணங்களைத் தானேபுகழ்ந்து கூறும் இயல்புடைய என்றும், 'கன்னனைப்பயந்த' என்பதற்கு - (தனது சிறந்த குமாரனை அருச்சுனனுக்கு நெடுங்காலமாகப் பெரும்பகையாய்ச் சிறந்த வில் வல்லமையையும் தவறுத கொடிய கறுவுள்ள நாகாஸ்திரத்தையும் உடைமைபற்றிக்) கர்ணனை அஞ்சின என்றும் உரைக்கலாம். கேள்விக்குக் குற்றம் ஐயம் திரிபு அறியாமைகள். இங்கே, கேள்வி - அனுபவமுடைய கல்லாசிரியர் பக்கலில் உறுதிமொழிகளை உபதேசிக்கக் கேட்டல். கீழ் ஆரணிய பருவத்தின் முதலில் "அன்னையைச் சுபலன் பாவை யருகுற விருத்தி" என்றதனால், காந்தாரி வீட்டை யடுத்துக் குந்தி இருந்தனளென அறிக. (207)

148 —குந்தி தனது மாளிகைக்கு எழுந்தருளிய கண்ணனை விருப்பத்தோடு காணுதல்.

மண்டலமதியமன்னமாசறுமுகத்தினுளும்
திண்டிறன்மருகல் றன்னைச்சென்றெதிர்கொண்டுகண்டு
வெண்டிரைமகரவேலைவிரிபுனன்முகந்துதோன்றுங்
கொண்டலைமகிழ்ந்துகாணுங்குளிர்பசுந்தோகைபோன்றாள்.

(இ - ள்.) (அப்பொழுது), மண்டலம் மதியம் அன்ன - சந்திரமண்டலத்தைப்போன்ற, மாசு அறு முகத்தினுளும் - களங்கமில்லாத முகமண்டலத்தையுடைய குந்தி தேவியும், திண் திறல் மருகன்தனனை - மிக்க வலிமையையுடைய தனது மருமகனை கண்ணனை, சென்று எதிர்கொண்டு கண்டு - எதிர்கொண்டுபோய்ப் பார்த்து, வெள் திரை மகரம் வேலை விரிபுனல் முகந்து தோன்றும் கொண்டலை மகிழ்ந்து காணும் குளிர் பசு தோகை போன்றாள் - வெண்மையான அலைகளையும சுறுமீன்களையுமுடைய கடலின் மிகுந்த நீரை மொண்டுகொண்டு மேலெழுகின்ற காளமேகத்தைச் சந்தோஷித்துப் பார்க்கின்ற அதனுற்குளிர்ந்த பசுமைநிறமுள்ள மயிலை யொத்தாள்; (எ - று.)

உவமையணி. நீர்கொண்டமேகம் - நீலநிறமுள்ள கண்ணனுக்கும், மேகத்தைக்கண்டு தாபமொழிந்து மனமகிழும் மயில்-கண்ணனைத் தரிசித்துத் துயரந்தணிந்து மனமகிழ்ந்த குந்திக்கும் உவமை. நிறம்பற்றித் திருமாற்கு மேகமும், சாயல்பற்றிப் பெண்ணுக்கு மயிலும் உவமையாம். மண்டலமதியம்-கலைகள் நிறைந்து வட்டவடிவமாய் பூர்ணமாகவேயுள்ள சந்திரன். இனி, மண்தலம் மதியம் எனப் பிரித்து - நிலவுலகத்தில் வந்ததொரு சந்திரனென்று இல்பொருளுவமையாக்கி உரைப்பாரு முளர். பல நாளாகப் புத்திரரைப்பிரிந்து செல்வத்தையிழந்து சோகமுற்று வாடியிருந்த குந்தியின் முகம் கண்ணன்வந்தானென்ற மாத்திரத்தில் மிகத் தெளிவையடைந்ததென்பார், இங்கு 'மாசறுமுகத்தினுள்' என்றார்; இதில் நெற்றியில் திலகமற்றிருந்த தன்மையும் தோன்றும். குந்திக்கு உடன் பிறந்த முறையாகிய வசுதேவரது குமாரனுதலால், கண்ணன் மருகனவன். (208)

149.—குந்தி மகிழ்ந்து கண்ணனை வந்த காரியம் வினவுதல்.

யானுறையில்லின்வந்ததென்னமாதவமென்றேத்திக்
கானுறைமைந்தர்தம்மைக்கண்டனள்போன்றுளாகித்
தேனுறைதுளவினுன்றன்செய்யமாமுகத்தைநோக்கி
வானுறைபுரிசைமூதூர்வந்ததென்னருடியென்றுள்.

(இ - ள்.) 'யான் உறை இல்லின் வந்தது - நான் வசிக்கிற இவ்வீட்டில் (நீ) வந்துசேர்ந்தது, என்ன மா தவம் - (யான்செய்துள்ள) எந்தப்பெருந்தவத்தின்பயனே?' என்று ஏத்தி - என்று (கண்ணனை நோக்கிக்) கூறித் துதித்து, (குந்திதேவி), கான் உறை மைந்தர் தம்மை கண்டனள் போன்றுள் ஆகி - (கண்ணனைப் பார்த்தமாத்திரத்தில்) வனவாசஞ்செய்த தன் புத்திரரைப் பார்த்தவள்போல மகிழ்ந்தவளாய், தேன் உறை துளவினுன்தன் செய்ய மாமுகத்தை நோக்கி - தேன்பொருந்திய திருத்துழாய் மாலையையுடைய கண்ணனது சிவந்த அழகிய திருமுகத்தைப் பார்த்து, வான் உறை புரிசை மூதூர் வந்தது என் அருடி என்றுள் - ஆகாயத்தை யளாவிப் பொருந்திய மதில்களையுடைய பழமையான இவ்வூர்க்கு (நீ) வந்தது என்ன காரணம்? சொல்லியருள்வாய்' என்று கூறினள்; (எ - று.)

இரண்டாமடியால், தன்மக்களிடத்து எவ்வளவு அன்போ அவ்வளவு அன்பு குந்திக்குக் கண்ணனிடமென்பது விளங்கும். அனறியும், அவயவியான கண்ணனை நோக்கின மாத்திரத்தில், அவயவமான பாண்டவரைப்பார்த்தாற்போன்றவளானுன்; ''மாலோனுயிர்போல்வான்''என்றிறே பாண்டவரைக் கூறுமாறு. தன் உறை துளவு - வண்டுகள் மொய்க்கும் துளசி யெனறும், வான் உறை புரிசை-மேகந்தங்கும் மதிலென்றும் உரைக்கலாம். அருடி - ஏவலொருமைமுற்று; அருள் - பகுதி, இ - விகுதி, த்-எழுத்துப்பேறு. தகரம் டகரமானவிடத்து ளகரம்கெட்டது சந்தி; இதில், ட் -

எழுத்துப்பேறு என்றும், து - சாரியை, உகரம்கெட்ட தென்றுங் கூறுவர். (209)

150.—கண்ணன் குந்திக்கு நடந்த வரலாறு கூறுதல்.

நின்பெரும்புதல்வர்சொல்லநெடும்புனலுடுவேண்டி
வன்புடையரசர்கோமான்மனக்கருத்தறியவந்தேன்
றென்புலவேந்தன்வெஃகச்செருத்தொழில்புரிவனென்றான்
என்பலசொல்லினுமெதிர்க்கவேயியைந்ததென்றான்.

(இ - ள்.) (அதுகேட்டுக் கண்ணன் குந்தியை நோக்கி), 'நின் பெரும்புதல்வர் சொல்ல-உனது சிறந்த புத்திரர்கள் சொல்லியனுப்ப, நெடும்புனல் நாடு வேண்டி - மிக்க நீர்வளமுள்ள குருநாட்டின் பாகத்தைப் பெற விரும்பி, வன்பு உடை அரசர் கோமான் மனம் கருத்து அறிய - வலிமையுடைய ராஜராஜனை துரியோதனனது உள்ளத்தின் எண்ணத்தை அறியும் பொருட்டு, வந்தேன் - (யான் இங்கு) வந்தேன்; (அதற்கு அவன்), தென் புலம் வேந்தன் வெஃக - தெற்குத் திக்குக்குத் தலைவனை யமன் (உயிர்களை) விரும்பும்படி, செரு தொழில் புரிவன் என்றான் - போர்த்தொழிலைச் செய்வேனென்று சொன்னான்; பல சொல்லின் என் - பல வார்த்தைகளைச் சொன்னதனால் என்ன பயன்? [ஒன்றுமில்லை யென்றபடி]; நாளை எதிர்க்கவே இயைந்தது - இனி விரைவில் (இருதிறத்தாரும்) எதிர்த்துப் போர்செய்யவே நேர்ந்தது,' என்றான் - என்று கூறியருளினான்; (எ - று.)

வன்பு -. சிறிதும் கருணையில்லாமல் அநீதியிற் செல்லுங் கல் நெஞ்சின் தன்மையையுங் குறிக்கும். வன்புடை யரசர் - துச்சாதனன கர்ணன் சகுனி திரிகர்த்தன் முதலியோராய், அவர்கட் கெல்லாந் தலைவனென்றுமாம். அஷ்டதிக்குப் பாலகருள் தெற்குத் திக்குத் தலைவன்; கூற்றுவன். சாமம் முதலிய முதல்மூன்று உபாயங்களைக் குறித்துப் பலவார்த்தைகளைக் கூறி ஒன்றும் பயன்படாமற் போனமையும், 'என்பல சொல்லின' என்றதிற் பெறப்படும். (210)

151.—அது கேட்டுக் குந்தி வருந்துதல்.

என்றலுங்குந்திசாலவிரங்கினெதிர்ந்தபோரில்
வென்றிடுவார்கள்யாரோவிதியினுலமர்க்களத்தில்
பொன்றிடுவார்கள்யாரோவென்றுளம்புலர்ந்துநொந்தாள்
அன்றவடன்னேத்தேற்றியாழியாளுரைக்கலுற்றான்.

(இ - ள்.) என்றலும் - என்று (கண்ணன்) அருளிச்செய்த வளவிலே, குந்தி—, சால இரங்கினள் - மிகவும் இரக்கமுற்றவளாய், 'எதிர்த்த போரில் - இனிச் சமீபிக்க இருக்கின்ற யுத்தத்தில், வென்றிடுவார்கள் யாரோ-சயித்திடுபவர் யாரோ? விதியினுல் - ஊழ்வினையால், அமர் களத்தில்-யுத்தகளத்திலே, பொன்றிடுவார்கள் யாரோ - அழிந்திடுபவர்கள் யாரோ? என்று-என்று சொல்லி, உளம் புலர்ந்து-மனம்வாடி, நொந்தாள் - வருந்தினள்; அன்று - அப்பொழுது,

ஆழியான்-சக்கராயுதத்தையுடைய கண்ணன், அவள் தன்னை தேற்றி-அந்தக் குந்தி தவியைச் சமாதானப்படுத்தி, உரைக்கல் உற்றான் - (சிலவார்த்தை) கூறத் தொடங்கினான்; (எ - று.)—அவற்றை, மேல் ஏழு கவிகளிற் காண்க.

விதியினால் என்பதை மத்திமதீபமாக வென்றிடுவார்கள் என்ப தனோடும் கூட்டுக. ஆகூழால் வெற்றியும், போகூழால் அழிவும் சேர்ந்திடும். விதி, ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி என்பன - ஒருபொருட்சொற்கள். அஃதாவது - இருவினைப்பயன் செய்தவனையே அடைவதற்கு ஏதுவாகிய நியமம். ஆழியான் - திருப்பாற்கடலிற் பள்ளிகொண்டவனுமாம். (211)

152.—இதுமுதல் ஏழுகவிகள் - ஒருதொடர்: கண்ணன் கர்ணனது பிறப்பு முதலியவற்றைக் குந்திக்குக் கூறுவன.

தன்மைநானுரைப்பக்கேணின்றந்ததன்மனையினீயுங்
கன்னியாயிருந்துவாழுங்காலையோர்முனிவன்வந்து
சொன்னமந்திரமோரைந்தினொன்றினுற்சூரன்றன்னை
முன்னினையவனுமன்றுவந்துநின்முன்புநின்றான்.

(இ - ள்.) தன்மை நான் உரைப்ப கேள் - (முன்பு நடந்ததொரு உண்மையான செய்தியின்) தன்மையை நான்சொல்ல (நீ இப்பொழுது) கேட்பாய்: நின் தந்தைதன் மனையில்-உன்னுடைய பிதாவான குந்தி போஜராஜனது அரண்மனையிலே, நீயும் கன்னி ஆய் இருந்து வாழும் காலை - நீயும் மணமில்லாத இளமகளாயிருந்து வாழுகிற காலத்தில், ஓர் முனிவன்-ஒப்பற்ற (துருவாச) முனிவன், வந்து சொன்ன—,மந்திரம் ஓர் ஐந்தின் ஐந்து மந்திரங்களுள், ஒன்றினால் - ஒரு மந்திரத்தினால், சூரன் தன்னை-சூரியனை, முன்னினை - (நீ) நினைத்தாய்; அவனும் - அச்சூரியனும், அன்று - அபபொழுது, நின்முன்பு-உன்னெதிரில், வந்துநின்றான்—; (எ - று.)

சாபத்தாலும் கோபத்தாலும் பேர்படைத்த பயங்கரனான துர்வாச முனிவன் ஒருகாலத்தில் குந்திபோஜராஜனது அரண்மனைக்கு எழுந்தருள, அங்கு அவ்வரசன் அம்முனிவற்கு எல்லாப் பணிவிடைகளும் இயற்றும்படி நுண்ணறிவுடைய கன்னிகையான குந்தியை நியமிக்க, அவளும் அங்ஙனமே தவறாமல் ஒரு வருஷகாலம் உபசரித்துவர, அம்முனிவன் அங்கு நின்று செல்கையில் மிக மனமுவந்து குந்திக்குச் சில மந்திரமுபதேசித்து அதனால் தேவர்களை வரவழைக்கவும் அவரருளால் புத்திரபாக்கியத்தைப் பெறவு மாகுமென்று கூறிப்போக, பெண்களுக்கு இயற்கையான பேதைமையையுடைய குந்தி அதனைப் பரீக்ஷித்துப் பார்க்க விரும்பித் தனியே மேல்மாடத்துச் சென்று ஏகாந்தமாக இருந்து ஒரு மந்திரத்தைச் சொல்லிச் சூரியனைத் தியானிக்க, உடனே சூரியன் உக்கிரமான விடுவத்தைவிட்டுச் சாந்தவடிவத்தோடு அருகில் வந்துசேர்ந்தான். மந்திரம் - மறை பொருள். (212)

153. கதிரவனருளினுலோர்கணத்திடைக்காதல்கூர
மதலையங்கொருவன்றன்னீப்பயந்தபின்வடுவென்றஞ்சி
மிதவையம்பேழைதன்னிற்பொதிந்துநீவிடவப்போதந்
நதியுமம்மகவைக்கங்கைநதியிடைப்படுத்ததன்றே.

(இ - ள்.) கதிரவன் - ஆயிரங்கிரணங்களையுடைய சூரியன், அருளினுல் - கருணையினுல், ஓர் கணத்திடை - ஒருகணப்பொழுதிலே, காதல்கூர - இன்பமடைய, (அதனுல்), அங்கு - அப்பொழுது [அவ்விடத்தில்], மதலை ஒருவன் தன்னை - ஒருபுத்திரனை, பயந்தபின் - (நீ) பெற்றபின்பு, வடு என்று அஞ்சி - (இது உனக்கும் உன்மரபுக்கும்) பழிப்பாமென்று பயந்து, நீ—, மிதவை அம் பேழைதன்னில் பொதிந்து - நீரில் மிதக்கும் தன்மையதாகிய ஒரு மரப்பெட்டியிலே (அக்குழந்தையை) அடக்கஞ்செய்து, விட - (அப்பெட்டியை யமுனை நதியிலே) செலுத்திவிட, அப்போது—, அ நதியும் - அவ்யமுனையாறும், அ மகவை கங்கை நதியிடை படுத்தது - அக்குழந்தையை (ப் பெட்டியுடனே) கங்காநதியிற் கொண்டுபோய்ச் சேர்த்தது; (எ-று.) —அன்றே - தேற்றம்; ஈற்றசையுமாம்.

தேவர்களது அநுக்கிரகத்தா லுளதாங்கருப்பம் காலதாமதமின்றி உடனே பிறந்திடு மென்பது மரபு. பேழைதன்னில் அம் மகவை அப்போது பொதிந்து கங்கைநதியிடை விட (அப்பேழையை) அன்றே [அன்றைய தினமே] அந்நதியும் படுத்தது [கொண்டுவந்தது] என்று அவ்வியத்தும் உரைக்கலாம். மிதவை, ஐ - கருத்தாப் பொருள்விகுதி. பேழை - பேடிகா என்னும் வடமொழியின் சிதைவென்பர். (213)

154. காதனின்புதல்வன்றன்னைக்கண்ணிலாவரசன்பொற்றேர்ச்
சூதன்வந்தெடுத்துக்கொண்டுசுதனென வளர்த்தகாலை
ஆதபனிவனேயாருங்கன்னனென்றழைக்கவென்ருன்
தாதையும்விசும்பிற்சொன்னநாமமேதக்கதென்ருன்.

(இ - ள்.) காதல் மின் புதல்வன் தன்னை - அன்புக்கு உரிய உனது புத்திரனை, கண் இலா அரசன் பொன் தேர் சூதன் - திருதராட்டிர ராசனது பொன்மயமான இரதத்தைச் செலுத்தும் பாகனான அதிரதனென்பவன், வந்து எடுத்துக்கொண்டு - அக்கங்கையாற்றுக்கு வந்து எடுத்துக்கொண்டு சென்று, சுதன் என வளர்த்தகாலை - தன்புத்திரனைப்போலவித்து வளர்த்த காலத்தில், ஆதபன் - சூரியன், இவனை யாரும் கன்னன் என்று அழைக்க - 'இப்புதல்வனை எல்லோரும் கர்ணனென்று அழைப்பாராக,' என்ருன் - என்று (அசரீரி வாணியாகச்) சொன்னன்; தாதையும் - (வளர்க்கிற) தந்தையான அதிரதனும், விசும்பின் சொன்ன நாமமே தக்கது என்ருன் - ஆகாயத்திற்சொல்லப்பட்ட பெயரே தகுதியுடையது என்று கூறினன்; (எ - று.)

இப்புத்திரன் பிறந்தபொழுதே கர்ணகுண்டலங்களோடு கூடியிருந்தமைபற்றி கர்ணனென்ற பெயர் இவனுக்குத் தகும். குழ

தையினிடம் மனப்பூர்வமாக அன்பில்லாதவளல்லள் என்பது தோன்ற, 'காதல்நின்புதல்வன்' என்றார். (214)

155. பண்புடைக்குமரன்கற்றபடைத்தொழில்பலவுங்கண்டு
நண்புடையுரிமையெல்லாநல்கிமாமுடியுஞ்சூட்டி
வண்பணியுயர்த்தகோமான்வாழ்வவற்களித்தான்மற்றைத்
திண்பரித்தேர்வல்லோரிலவனேயார்செயிக்கவல்லார்.

(இ - ள்.) பண்பு உடை - (இத்தன்மையான) சிறப்பையுடைய, குமரன் - (உனது) குமாரனான கர்ணன், கற்ற - (பரசுராமரிடத்துக்) கற்றறிந்த, படை தொழில் பலவும் - ஆயுத வித்தைக ளெல்லாவற்றையும், கண்டு - பார்த்து, வள் பணி உயர்த்த கோமான் - அழகிய பாம்புக்கொடியை உயர எடுத்த துரியோதனராசன், அவற்கு - அக்கர்ணனுக்கு, நண்பு - சினேகத்தால், உடை உரிமை எல்லாம் - தன்னுடைய உரிய அரசாட்சிச் செல்வங்கள் பலவற்றையும், நல்கி - கொடுத்து, மா முடியும் சூட்டி - பெரியகிரீடத்தையுந் தரிப்பித்து, வாழ்வு அளித்தான் - (அங்கதேசத்து இராச்சியாதிபத்தியத்தின்) வாழ்வைக் கொடுத்திட்டான்; அவனே - அக்கன்னனே, மற்றை திண் பரி தேர் வல்லோரில் - வலியகுதிரைகளூர்ப்பூட்டிய தேரையுடைய மற்றைவீரர்களில், யார் செயிக்க வல்லார் - எவர் வெல்ல வல்லவர்; (எ - று.)

கர்ணனது படைத்தொழில் பலவற்றைத் துரியோதனன் கண்டது - பாண்டவரும் துரியோதனாதியரும் கிருபாசாரியர் துரோணாசாரியர்களிடத்து வில்வித்தை முதலியவற்றைக் கற்றுப் பயின்று முடிந்தபின், பீஷ்மர் விதுரர் முதலிய பலரது முன்னிலையில் தம் தமது அஸ்திரசஸ்திரப்பயிற்சியைக் காட்டுகையில், கர்ணனும் இடையில் எழுந்துவந்து தனது திறமையைக் காண்பித்தபொழுதி லென்க. "அன்று சூதன் மதலை தனை யங்கராசனுக்கிறை, மின் தயங்கு முடிகவித்து வேந்தெலாம் வியக்கவே," "தானிருந்த வரி முகஞ்செய் தாள்சுமந்த தவிசினேமே, லூனிருந்த படையினோ டுடனிருத்தி வண்டுசூழ், தேனிருந்த மாலைவாகு சிகரமீது தெண்டிரைக், கானிருந்த மண்டலங் கருத்தினு லிருத்தினான்" என்றார் மேற் ஆதி பருவத்தில். ஜயிக்க என்பது மோனைத்தொடை நோக்கி, செயிக்க வெனத்திரிந்தது. (215)

156. அந்தநின்மைந்தன்றானேயருஞ்சிலைவிசயனோடு
வந்தெதிர்மலையநின்றானுறவுமற்றரியமாட்டான்
சிந்தையினையந்தீரவிதனைநீதெளியச்சொல்லிக்
கொந்தவிழலங்கலானைக்கூட்டுகவிரைவினம்மா.

(இ - ள்.) அந்த நின் மைந்தன் தானே - அப்படிப்பட்ட உனது புத்திரனான கர்ணனே, அருஞ் சிலை விசயனோடு - அருமையான வில் வித்தைவல்ல அருச்சுனனுடனே, வந்து எதிர் மலைய நின்றான் - வந்து எதிர்த்துப் போர்செய்ய நிற்கிறான்; உறவு மற்று அரிய மாட்டான் - (அருச்சுனன் தனக்குத் தம்பி யென்ற) பந்துத்துவ

முறைமையை (அவனும்) அறிகின்றிலனில்லை; (ஆதலால், அவனுக்கு), இதனை - இவ்வுறவுமுறைமையை, சிந்தையின் ஐயம் தீர - மனத்திற் சந்தேகம் நீங்கும்படி, தெளிய நீ சொல்லி - நம்புதலோடு அறியும்படி நீ (சென்று) கூறி, கொந்து அவிழ் அலங்கலானை - பூங்கொத்துக்கள் விரியப்பெற்ற மாலையையுடைய அக்கர்ணனை, விரைவின் கூட்டுக - சீக்கிரத்தில் (பாண்டவர்களோடு) கூடும்படி செய்வாயாக; (எ - று.)—அம்மா என்பதை - ஈற்றசையென்றுவது, கேட்பித்தற் பொருளதாகிய அம்மவென்னும் முன்னிலை யிடைச்சொல் நீட்டப் பெற்ற தென்றுவது, மரியாதைபற்றிய அம்மையென்பதன் ஈறு திரிந்த விளியென்றுவது கொள்க.

உறவு - தொழிற்பெயர்; உறுதல், தொடர்ச்சி: உறு - பகுதி, அ - சாரியை, உ - விகுதி. மற்று - வினைமாற்று: மலையகின்றான், உறவறியமாட்டான் என வேறுபட்ட வினைகளின் இடையே வந்ததனால். முன்னே கர்ணன் அருச்சுனன் விஷயமாக "மூனைந்தபோரின் முடிதுணிக் துன்முகசரோருகத்திறற், சினந்தணிந் தரங்கபூசை செய்வன்" என்று வீரவாதமும், கர்ணன் விஷயமாக அருச்சுனன், "பகலவன்றன் மதலையுயிர் பகைப்புலத்துக் கவர்வன்" என்று சபதம் செய்துள்ளமை முதலியன பற்றி 'மலைய கின்றான்' என்றது. தனக்கும் இவனுக்குமுள்ள உறவை அறிந்தால் இங்ஙனஞ் செய்யான் என்பது தோன்ற 'உறவுமற்றறிய மாட்டான்' என்றார். 'சிந்தை யினையந்தீர' என்றது, இதற்குமுன் பல மகளிர் தாம்தாம் கர்ணனுக்குத் தாயென்று சொல்லி அவனிடம் மிகுந்த பொருள்பெற விரும்பி வந்து வீண்போயின ராதலால். கொந்து - எதுகை நோக்கிய மெலித்தல். (216)

157. தம்பியரைந்துபேருந்தனித்தனியேவல்செய்ய
வம்பவிழலங்கலோடுமாமணி மகுடஞ்சூட்டி
அம்புவிமுழுதுநீயேயாளலாம்வருகவென்றால்
உம்பர்காவலனையகையானுன்னுரைமறுத்தானுகில்.

(இ - ள்.) 'தம்பியர் ஐந்து பேரும் - (பஞ்சபாண்டவராகிய) தம்பிமார் ஐவரும், தனி தனி ஏவல் செய்ய - வெவ்வேறுகப் பணிவிடை புரிய, வம்பு அவிழ் அலங்கலோடு - நறுமணம்வீசும் மலர்மாலையுடனே, மா மணி மகுடம் சூட்டி - பெரிய இரத்தினகிரீடத்தைத் தரித்து, அம் புவி முழுதும் - அழகிய பூலோக முழுவதையும், நீயே ஆளலாம் - நீயே தனிப்பட அரசாளலாம்; (ஆகையால்), வருக - (பாண்டவர்பக்கல்) வந்துசேர்ந்திடுவாயாக,' என்றால் - (என்று சொல்லி (ஆசைகாட்டி) அழைத்தால், (அப்பொழுது) உம்பர்கா அனைய கையான் - (தானத்தில்) தேவர்களது கற்பகச் சோலையை யொத்த கையையுடைய கர்ணன், உன் உரை மறுத்தான் ஆகில் - உனது வார்த்தைக்கு இசையாமல் தடுத்திடுவானானால்,—(எ-று.)—"விசயன்மேல் மறுகலை தொடுக்காவண்ணம் வரம் வேண்டுக" என மேற்கவியோடு குளகமாகத் தொடரும்.

கர்ணன் மிகக் கொடையாளியாதலால், அவனுக்குக் கற்பக விருக்ஷங்களை உவமை கூறினார். (217)

158. எரியமுதருத்தக்கானமெரித்தநாளகன்றுபோன
அரவிசையங்கர்கோமானுசுகமாகக்கொண்டான்
வரிசிலைவிசயன்றன்மேன்மறுகணைதொடுக்காவண்ணம்
ஒருவரம்வேண்டுகென்றுணற்றவர்க்குறுதிசூழ்வான்.

(இ - ள்.) எரி - அக்கினிதேவன், அமுது அருந்த - உணவாக உண்ணும்படி, கானம் - காண்டவவனத்தை, எரித்த நாள் - தகித்த காலத்தில், அகன்று போன - (அங்கிருந்து) நீங்கிச்சென்ற, அரவிசை - (தக்ஷகுமாரனை அசுவசேனனென்னுஞ் சிறு) பாம்பை, அங்கர்கோமான் - அங்கதேட்டார்க்குத் தலைவனை கர்ணன், ஆசுகம் ஆக கொண்டான் - அஸ்திரமாகக் கொண்டுள்ளான்; (ஆதலால் அவன்), வரி சிலை விசயன் தன்மேல் - கட்டமைந்த வில்லையுடைய அருச்சுனன் மேலே, மறு கணை தொடுக்காவண்ணம் - அந்த அஸ்திரத்தை இரண்டாமுறை பிரயோகியாதபடி, ஒரு வரம் வேண்டுக - ஒருவரத்தை (நீ கர்ணனை)க் கேட்டுப் பெறுவாயாக, என்றுன் - என்று (குந்திக்கு உபாயம்) கூறினன்: (யாவனெனில்),—உற்றவர்க்கு உறுதி சூழ்வான் - (தன்னை) அடைந்தவர்க்கு நன்மையையே ஆலோசிப்பவனுகிய கண்ணபிரான்; (எ - று.)

கிருஷ்ணனும் அருச்சுனனும் ஒருநாள் பூம்பந்தேறிட்டு விளையாடிக் கொண்டிருக்கையில், அக்கினிபகவான், மிகப்பசித்து அந்தணவடிவத்தோடு வந்து, இந்திரனது காவற்காடாய் யாவர்க்கும் அழிக்கவொண்ணுதபடி நிலவுலகத்திலிருக்கின்ற காண்டவவனமென்னும் பூந்தோப்பை அதிலுள்ள சராசரங்களுடனே எனக்கு விருந்திடவேண்டுமென்று வேண்ட, கிருஷ்ணர்ச்சுனர்கள், அங்கே புக்கு ஒதுங்கியிருக்கின்ற அசுரர் முதலிய துஷ்டர்களை அழித்தருள வேண்டுமென்னும் நோக்கத்தால் 'நீ இதனைப்புசி' என்று இசைந்து அளிக்க, உடனே நெருப்புப்பற்றி எரித்ததென்பது கதை. ஆசுகம் - விரைவிற்செல்வதென்று பொருள்; அப்பொழுது அக்கினி பகவானால் அருச்சுனனுக்குக் காண்டீவமென்னும் வில்முதலியன கொடுக்கப்பட்டமையும், அக்கினி எரிப்பதற்கு அருச்சுனன் அப்பொழுது தனது வில் வல்லமைகொண்டு மிக உதவிசெய்து நின்றமையும் தோன்ற 'வரிசிலை விசயன்' என்றார். (218)

159.—இதுவும் மேற்கவியும் – ஒருதொடர்; அதுகேட்ட குந்தி வருந்திக் கூறுதல்.

மன்றலந்தெரியல்வெய்யோன்மதலையென்மைந்தனென்ப
தன்றெனக்குரைத்தாயாயினவனுடனணுகவொட்டேன்
சென்றுயிரொழிக்குமாறுசெருவிசையிசைத்துப்பின்னை
யின்றெனக்குரைத்தாயையாவென்னினைந்தென்செய்தாயே.

(இ - ள்.) மன்றல் அம் தெரியல் வெய்யோன் மதலை - பரிமளமுள்ள அழகிய பூமாலையையுடைய சூரியனது குமாரனுக வழங்கப்படுகிற கர்ணன், என் மைந்தன் என்பது - எனதுபுத்திரனென்கிறசெய்தியை, அன்று எனக்கு உரைத்தாய் ஆயின் - முன்னமே எனக்குச் சொல்லியிருந்தாயானால், அவனுடன் அணுக ஒட்டேன் - அத்

துரியோதனனுடனே (இக்கர்ணனைச்) சேரச் செய்யாதிருப்பேன்; சென்று உயிர் ஒழிக்கும் ஆறு செருவினை விளைத்து - (போர்க்களத்திற்) போய் உயிரைமாய்த்துக் கொள்ளும்படி போரை மூட்டிவிட்டு, பின்னை - அதன்பின்பு, இன்று - இப்பொழுது, எனக்கு—, உரைத்தாய் - (நீ இந்தச் செய்தியைக்) கூறினாய்; ஐயா - ஐயனே! என் நினைந்து என் செய்தாய் - என்ன எண்ணமெண்ணி என்ன காரியஞ் செய்தாய்? (எ - று.) இது தகுதியன்று என்றபடி.

தெரியல் - விளங்குதல்; விளங்கும் மாலைக்குத் தொழிலாகு பெயர். அவனுடன் நணுக என்றும் பதம் பிரிக்கலாம். ஐயா என்று மருகனைக் கூறினது, அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி. சுற்று ஏகாரம இரக்கம். (219)

160. கான்பட்டகனலிற்பாயுங்கடுங்கணைவிலக்கினேனேல்
வான்பட்டபுரவித்தேரோன்மகன்படுமகவான்மைந்தன்
தான்பட்டுமடியுஞ்சென்றுதடாதினியிருந்தேனெனில்
யான்பட்டகொடுமைநன்றென்றென்பட்டாளிரங்கிவீழ்ந்தாள்.

(இ - ள்.) கான் - காண்டவவனத்திலே, பட்ட - பற்றின, கனலின் - அக்கினியினின்றும், பாயும் - (வெளிப்பட்டுச்) செல்லலுற்ற, கடுங்கணை - கொடிய நாகாஸ்திரத்தை, விலக்கினேன் ஏல் - (மறுபடி அருச்சுனன்மேற் பிரயோகிக்காதபடி கர்ணனைத்) தடுத்தேனெனில், வான்பட்ட புரவி தேரோன் மகன் படும் - ஆகாயத்திற் செல்லுகின்ற குதிரையைப் பூட்டிய தேரையுடைய சூரியனது குமாரனை கர்ணன் இறப்பான்; இனி சென்று தடாது இருந்தேன் ஆகில் - இப்பொழுது போய் (அந்த அஸ்திரத்தை)த் தடுக்காமலிருந்தேனெனில், மகவான் மைந்தன் தான பட்டு மடியும் - இந்திரகுமாரனை அருச்சுனன் தான் அந்த அஸ்திரம்பட்டு இறப்பான்; [இங்ஙனம் இருவகையிலும் எனக்குத் தீதாய் முடிகிறது]; (ஆதலால்), யான் பட்ட கொடுமை - நான் அடைந்த கொடிய கிலேமை, நன்று - நன்றுள்ளது! என்று - என்று சொல்லி, (குந்திதேவி), என்பட்டாள் - என்ன பாடுபட்டாள்? (எனின்), இரங்கி வீழ்ந்தாள் - புலம்பிக்கொண்டு கீழே விழுந்திட்டாள்; (எ - று.)

கான்பட்ட கனலின்பாயும் என்பதற்கு - காட்டுத்தீப்போல உக்கிரமாகப் பாய்கிற என்றும் உரைக்கலாம். என்பட்டாள் என்பது, மிகுந்த துன்பமடைந்தாள் என்பதை விளக்கும். நன்று-தீது என்ற படி: பிறகுறிப்பு. (220)

161.—இதுவும், அடுத்தகவியும் - கண்ணன் சிலகூறிக் குந்தியைத் தேற்றுதல்.

தேக்குந்தியகிலுஞ்சாந்துஞ்சிந்துநீர்நதிசூழ்செல்வக்
கோக்குந்தியரசன்பாவைகுலைந்தழுங்கொடுமைகண்டு
மீக்குந்தியுறிகடோறும்வெண்ணெயுந்தயிருமுண்ட
வாக்குந்திமலரோன்பின்னுமனத்தளர்வகற்றினானே.

(இ - ள்.) தேக்கு - தேக்குமரங்களோ, உந்தி - தள்ளி, அகிலும் - அகிற் கட்டைகளோயும், சாந்தும் - சந்தனமரங்களோயும், சிந்தும் - அடித்துக்கொண்டு வருகின்ற, நீர் - நீர்வளமுள்ள, நதி - ஆற்றினால், சூழ் - சூழப்பட்ட, செல்வம் கோ - பொருளோயும் சிறப்பையுமுடைய, குந்தி - குந்திதேசத்து, அரசன் - அரசனுடைய, பாவை - பெண்ணான குந்திதேவி, குலைந்து - மனங்கலங்கி, அழும் - புலம்புகிற, கொடுமை - கொடிய நிலைமையை, கண்டு - பார்த்து,—மீ குந்தி - (உயரமான ஏணி உரல் முதலியவற்றின்) மேல் ஏறி உட்கார்ந்து, உறிகள்தோறும் வெண்ணெயும் தயிரும் உண்ட - (இடையர்களது) உறிகளிலெல்லாம் முள்ள வெண்ணெயையும் தயிரையும் அமுது செய்தருளிய, வாக்கு - திருவாய்மலரையும், உந்தி மலசோன் - திருநாபித் தாமரை மலரையுமுடைய கண்ணன், பின்னும் மனம் தளர்வு அகற்றினன் - மீண்டும் (அவளது) மனத்தளர்ச்சியை நீக்கியருளினான்;

கீழ் 151-ம் கவியில் அவளது துன்பத்தைத் தேற்றினமை ஒரு கால் கூறப்பட்டதனால், இங்கு 'பின்னும்' என்றார். தேக்கு முதலியன - மலைபடு பொருள்கள். மலையிலிருந்து உற்பத்தியாகும் நதியாதலால், குறிஞ்சிப் பொருள்களோ அங்குநின்று கொழித்துக் கொண்டு வருவதாயிற்று. குந்தி - யதுகுலத்துச் சூரசேனது மகள்; இவளைத் தந்தை தனது நண்பனும் புத்திரனுமாகிற குந்திபோச தேசத்தரசனான குந்தியென்பவனுக்குத் தத்துக் கொடுத்திருந்ததனால், 'குந்தியரசன்பாவை' எனறார். இவளுக்கு, இது பற்றியே, குந்தி யென்று பெயர்; பிருதை யென்பது, இவளது இயற்பெயர். உறி - உறப்படுவதென்னும் பொருளில், இ எனனுஞ் செயப்படுபொருள்விகுதிபெற்ற பெயரென்பர். வாக் - வடசொல். வாக்குமலர், உந்தி மலர் என இரண்டுக்கும் மலர் என்பதைக் கூட்டுக. (221)

162. பைவருந்தலைகளோந்துபடைத்தபன்னகமேபோல
வைவரும்படுதனன்றேவங்கர்கோன்படுதனன்றே
உய்வருஞ்சமரிலாவியொருவர்போயொருவருய்யார்
தைவருந்துயரமாறிநடப்பதேகருமமென்றான்.

(இ - ள்.) (மனத்தளர்வகற்றின கண்ணன் அக்குந்தியை நோக்கி),—'பை வரும் - படத்தோடு பொருந்தின, ஐந்து தலைகள் - ஐந்து தலைகளோ, படைத்த - பெற்ற, பன்னகமே போல - பாம்புபோல, ஐவரும் - பாண்டவர் ஐந்துபேரும், படுதல் - இறத்தல், நன்றே - நல்லதோ? அங்கர் கோன் - அங்கநாட்டார்க்கு அரசனுகிய கர்ணனெருவன், படுதல் - இறத்தல், நன்றே - நல்லதோ? உய்வு அருஞ் சமரில் ஆவி ஒருவர்போய் ஒருவர் உய்யார் - தப்பிப் பிழைத்தலரிதாகப் பெற்ற யுத்தத்தில் (பஞ்சபாண்டவருள்) ஒருவர் இறக்க (மற்றை நால்வரில்) ஒருவரும் பிழைத்திரார்; (ஆதலால்), தைவரும் துயரம் மாறி நடப்பதே-(நீ) மனந்தளர்கிற துன்பம் நீங்கி(க் கர்ணன் பக்கல்) செல்வதே, கருமம் - (செய்தற்குரிய) தொழிலாம்,' என்றான்-என்று கூறினான்; (எ - று.)

கர்ணன் சமாதானத்தில் பாண்டவரோடு கூடாவிடின், உன் மக்கள் அறுவருள் கர்ணனுவது அர்ச்சுனனுவது இறத்தல் திண்ணம்; அவ்விருவருள் அருச்சுனன் இறப்பானுயின் அது, மற்றை ஈரல்வர் பாண்டவரும் அழிதற்குக் காரணமாய் முடியும்; ஆதலால் அதனினும் கர்ணனிருவன் இறப்பதே மேல்; ஆகையால் அவனைப் பாண்டவரோடு கூட்டுதற்கும், கூட்டமுடியாவிடின் நாகாஸ்திரத்தை இரண்டாமுறை செலுத்தாதபடி வரங்கேட்டற்குமாகச் செல்வதே தகுதியானதொழிலெனக் கண்ணன் உறுதி கூறினன். தகைக ளைந்து படைத்த பன்னகம் - ஐந்தலைநாகம். உய்வு அருஞ்சமர் - நேராதபடி தப்புவித்தற்குக் கூடாத போர் என்றுமாம். துயரம் ஆறி என்றும் பிரிக்கலாம். ஓகாரங்கள் - வினவகையால், முன்னது நன்றன் றென்றும், பின்னது நன்றே யென்றும் உணர்த்தும்.(222)

163.—இதுவும், அடுத்தகவியும் — சூரியாஸ்தமன வருணனை.

காளமாமுகிலின்மேனிகரியநாயகனுந்தேற்றி
மீளமாதவத்தின்மிக்கவிதுரன்வாழ்மனையினெய்த
வாளமால்வரையில்வெய்யோன்குறுகினன்வருணன்றிக்கில்
நீளமால்யானைநெற்றிநிறத்தசெந்திலகம்போன்றே.

(இ - ள்.) காளம் மா முகிலின் - கரியபெரிய மேகம்போல,மேனி கரிய - திருமேனிநிறம் கறுத்துள்ள, நாயகனும்-கண்ணபிரானும்,—தேற்றி - (இங்ஙனம் குந்தியைச்) சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு, —மா தவத்தின் மிக்க விதுரன் வாழ் மனையின் - சிறந்ததவத்தில் மிகுந்த விதுரன் வசிக்கிற திருமாளிகையிலே, மீள எய்த - மறுபடியும் போய்ச்சேர,—வெய்யோன் - சூரியன், நீளம் மால் யானை நெற்றி செம் நிறத்த திலகம் போன்று-நீட்சியையுடைய பெரியதொரு யானையினது நெற்றியில் அமைந்த சிவந்த நிறத்தையுடைய (சிந்தூரத்) திலகத்தையொத்து, வருணன் திக்கில் - வருணனதிக்கிலுள்ள மேற்குத்திக்கிலே, வாளம் மரல் வரையில் - பெரிய சக்கரவாளகிரியில், குறுகினன் - போய்ச்சேர்ந்தான் [அஸ்தமித்தானென்றபடி]; (எ - று.)

உலமையணி. மேற்குத்திக்கில் அஸ்தகிரியை யடைந்தானென் பதைச் சக்கரவாளகிரியில் ஒரு பகுதியை அடைந்தானெனக் கூறியது. வாள எனப் பதம்பிரித்து, வாள் என்பதன்மேற் பிறந்த குறிப்புப்பெயரெச்சமாக் கொண்டு, ஒளியையுடைய என்றுமாம். அஷ்டதிக்குப்பாலகருள், மேற்குத்திக்குக்குத் தலைவன், வருணன். கண்ணன் விதுரன்மனையிற் சேர்கையில், சூரியன் வாள மால்வரையிற் குறுகினன் என உடனிகழ்ச்சிப்பொருளைத் தருதலால், எய்த வென்னுஞ் செயவெனெச்சம் - நிகழ்காலத்தது. (223)

164. நாற்றிசையுலகுதன்னினுன்மறையுணர்ந்தோர்தாமும்
போற்றிசைமாலையென்னும் பொற்புடையணங்குவைக
மாற்றிசைவிலாதசெம்பொன்மண்டபந்தன்னிலாதி
மேற்றிசைக்கடவுளிட்டவெயின்மணிப்பீடம்போன்ருன்.

(இ - ள்.) நால் திசை-நான்கு திக்குக்களுக்கும் உட்பட்ட, உலகு தன்னில் - உலகத்திலுள்ள, நால் மறை உணர்ந்தோர் தாமும்-நான்கு வேதங்களையறிந்த அந்தணர்களெல்லோரும், போற்று இசை - துதி மொழியைக் கூறப்பெற்ற, மாலை என்னும் - சந்தியென்கிற, பொற்பு உடை அணங்கு - அழகையுடைய சிறந்த தெய்வப்பெண், வைக - வீற்றிருக்கும்படி, மாற்று இசைவு இலாத செம் பொன் மண்டபம் தன்னில் - உரைமாற்றுக் கூறுதற்குமுடியாத [மிகவும்மாற்றுயர்ந்த] சிவந்தபொன்னிழைத்தொரு மண்டபத்திலே, ஆதிமேல் இசை கடவுள் - பழமையான மேற்குத்திக்குக்குத் தலைவனை வருண தேவன், இட்ட - போகட்ட, வெயில் மணி பீடம் - வெவ்விய ஒளியை யுடைய இரத்தினமய ஆசனவட்டத்தை, போன்ருன்-(அப்பொழுது சூரியன்) ஒத்தான்; (எ - று.)

உவமையணி. சந்தியாகாலங்களில் அந்தணர் யாவரும் வேதமந் திரங்களைச்சொல்லி நமஸ்காரம் முதலியன செய்து வைதிகச்சடங்கு புரிதலால், 'நான்மறையுணர்ந்தோர் தாமும் போற்றிசை மாலை' என் றது. ஸந்த்யா என்பது - வடமொழியிற் பெண்பாற்சொல்லாதலால், அதனை 'அணங்கு' என்றது மிகவற்கும். மண்டபம் - அந்திச்செவ்வா னத்துக்கும், அதிலிட்ட பலகாற் பீடம் - ஆயிரங்கதிரவிக்கும் உவமை. பொற்பு - அழகுணர்த்தும் உரிச்சொல். இனி, இது - பொன் பு எனப் பகுதியும் விகுதியுமாகப் பிரிந்து, பொன்னின் தன்மை யென்றும் பொருள்படும். இப்பாட்டில், 'ஆதி' என்பதற்கு - (தேவருள்) முதல்வனை சூரியனென்று உரைத்து, அதனை 'போன் ருன்' என்பதற்கு எழுவாயர்க்குவாரு முளர். (224)

165.—இது - அவ்வந்திப்பொழுதில் இயல்பாகத் தாமரை குவிதலையும், செவ்வல்லி மலர்தலையும் வருணிப்பது.

கொண்டமென்சிறைவண்டென்னுங்கொழுநருக்கிடங்கொடாமன்
முண்டகக்குலத்துமாதர்முகங்குவிந்தூடிநிற்பக்
கண்டெதிர்நின்றகாதற்கயிரவக்கணிகைமாதர்
வண்டுறைநின்றுதங்கள்வாய்மலர்ந்தழைக்கலுற்றார்.

(இ - ள்.) மெல் சிறை வண்டு என்னும் - மென்மையான இறகு களையுடைய வண்டுகளாகிய, கொண்ட கொழுநருக்கு - (தம்மை உரி மைப் பொருளாகப்) பெற்ற கணவருக்கு, இடம் கொடாமல் - (தம்பக் கல் வந்துசேர இணங்கி) இடம்தராமல், முண்டகம் குலத்து மாதர் - தாமரைகளாகிய குடிப்பெண்கள், ஊடி - ஊடல்கொண்டு, முகம் குவிந்து நிற்ப - முகம்வாடி நிற்க,—கண்டு - (அச்செய்தியைப்) பார்த்து, (இதுவே தமக்கு நல்லசமயமென்று அறிந்து), எதிர்நின்ற கயிரவம் காதல் கணிகை மாதர் - எதிரில் நின்ற செவ்வல்லிகளாகிய ஆசைகாட்டும் வேசைமகளிர், வள் துறை நின்று - அழகிய இறங்கு துறைகளிலே நின்று, தங்கள் வாய் மலர்ந்து அழைக்கல் உற்றார் - தங்கள் (பூவாகிய) வாயைத் திறந்து (வண்டுகளாகிய அப்புருஷரை) அழைக்கத்தொடங்கினர்கள்; (எ - று.)

கருத்து-வெளிப்படை. உருவகவணி. வண்டுக்கு 'மென்சிறை' என்ற அடைமொழி கொடுத்ததற்கு ஏற்ப, கொழுநரை அழகிய மேனியையுடையவரெனக் கருதுக. துறை - நீர்க்கரையும் வாயில் முன்னிடமுமாம். குல ஸ்திரீகள் கணவரோடு சிறிதுபிணங்கின சமயம் பார்த்து அவ்வாடவரை விலைமாதர் தாம்இழுத்து வசப் படுத்துதல் உலகவியல்பு. ஊடல்-கணவன் மனைவியருள் விளையாட்டு வகையாலுண்டாகுஞ் சிறு கலகம். (225)

166.—இதுவும், மேற்கவியும் - சந்திரோதய வருணனை.

கானெலாமலர்ந்தமுல்லைக்ககனமீதெழுந்ததென்ன
வானெலாம்வயங்குதாரைநிரைநிரைமலர்ந்துதோன்ற
வேனிலான்விழவின்வைத்தவெள்ளிவெண்கும்பமென்னத்
தூநிலாமதியம்வந்துகுணதிசைத்தோன்றிற்றம்மா.

(இ - ள்.) கான் எலாம் மலர்ந்த முல்லை - காடுகளிலெல்லாம் மலர்ந்த முல்லைமலர்கள், ககனம் மீது எழுந்தது என்ன - ஆகாயத் தின்மேல் எழுந்து தோன்றினால் அதுபோல, வான் எலாம் வயங்கு தாரை - ஆகாயமுழுவதிலும் விளங்குகின்ற நட்சத்திரங்கள், நிரை நிரை மலர்ந்து தோன்ற-வரிசை வரிசையாக விளங்கி (வெண்ணிற மாக)க் காணப்பட,—வேனிலான் விழவின் வைத்த வெள்ளி வெள் கும்பம் என்ன - வசந்தகாலத்துக்கு உரிய மன்மதனது உத்ஸவ காலத்தில்(மங்களகரமாக)வைக்கப்பட்ட வெள்ளியினாலாகிய வெண் ணிறமான பூர்ணகும்பம்போல, தூ நிலா மதியம் வந்து குணதிசை தோன்றிற்று - சுத்தமான நிலாவையுடைய பூர்ணசந்திர மண்டலம் வந்து கிழக்குத்திக்கில் உதித்தது; (எ-று.)—அம்மா - ஈற்றசை.

முன்னிரண்டடியில் - நட்சத்திரப்பிரகாசமும், பின்னிரண்டடி யில் சந்திரோதயமுங் காண்க. வேனில்-இங்கே சித்திரையும் வைகாசி யுமாகிய இளவேனிற் பருவம். அக்காலத்தில் மன்மதனுக்குப் போர்த்தொழிலில் ஊக்கமிகுதி உண்டாதல்பற்றி, அவனுக்கு 'வேனி லான்' என்று பெயர். வேனிலான் விழவுக்குரியகாலம்-இரவு. கும்பம்-குடம்: உவமையணி. (226)

167. தூவியனிலவுதோன்றத்துணைவரைப்பிரிந்தோர்கண்கள்
காவியுமாம்பலும்பைங்கருவிளமலரும்போன்ற
மேவியமகளிர்கண்கண்மீனெறிபரவையேழுந்
தாவியலுழையுங்காதற்சகோரமும்போன்றமாதோ.

(இ - ள்.) தூ இயல் நிலவு தோன்ற - சுத்தமான தன்மையை யுடைய சந்திரகாந்தி விளங்குகையில், துணைவரை பிரிந்தோர் கண்கள் - கணவரைப் பிரிந்த மனைவியரது கண்கள், (இராமுழுவதும் தூங்குவதின்றி மூடாமலிருத்தலால்), காவியும் ஆம்பலும் பை கருவிளமலரும் போன்ற - நீலோற்பல மலர்களையும் ஆம்பல்மலர் களையும் குளிர்ந்த கருவிளமலர்களையும் ஒத்தன; மேவிய மகளிர் கண்கள் - (கணவரைக்) கூடியுள்ள மனைவியரது கண்கள், (நிலா வைக் கண்டு மிகக்களித்தலால்) மீன் எறி பரவை ஏழும் - மீன்களை

வீசுகிற ஏழு கடல்களையும், காவு இயல் உழையும் - காவிப்பாயும் தன்மையையுடைய மான்களையும், காதல் சகோரமும் - - (நிலாவில்) விருப்பத்தையுடைய சகோர பட்சிகளையும், போன்ற-ஒத்தன; (எ-று.) —மாது, ஓ - சுற்றசை.

இச்செய்யுள், நிலாத்தோற்றத்தில் விரகிகளுக்குத் துன்பமும், மற்றையோர்க்கு இன்பமும் உண்டாதலைக் கூறியது. 'துணைவரைப் பிரிந்தோர்' என்ற சொல்லில் நாயகியரைப்பிரிந்த நாயகரும் அடங்கு வராயினும், பின்வாக்கியத்தில் 'மேவியமகளிர்' என வந்ததை நோக்கி, தலைவரைப்பிரிந்த தலைவியரென்று உரைக்கப்பட்டது. சகோரம் - நிலவை உணவாகக்கொள்வதொரு பறவை விசேஷம்; தூ வியல் நிலவு எனப்பிரித்து, வியல் - பரந்த என்றுமாம்; ''வியலென்கிளவி யகலப்பொருட்டே,' என்பர் தொல்காப்பியனார்; அது - உரிச்சொல். உழையென்றது, சந்திரனிடத்துள்ள மானை யாகலாம். (227)

168.—இது – கவிக்கூற்று.

அரவியலல்குலாருமகிழ்நருமன்புகூர
விரவியவமளியெய்திவீதிமாநகரியெங்கும்
பரவையினிமிர்ந்தவோதையமர்ந்தபின் பரித்தேர்வேந்தன்
இரவிடைச்சூழ்ந்தவண்ணமின்னதென்றியம்புகின்றாம்.

(இ - ள்.) அரவு இயல் அல்குலாரும் - பாம்பின் படம்போன்ற அல்குலையுடைய மகளிர்களும், மகிழ்நரும் - கணவர்களும், அன்பு கூர - அன்பு மிக, விரவிய அமளி எய்தி-பொருந்தினசயனத்தை யடைந்து, வீதி மா நகரி எங்கும் - நெடுந்தெருக்களையுடைய பெரிய அப்பட்டணமுழுவதிலும், பரவையின் நிமிர்ந்த ஓதை - கடலொலி போல மிகுந்துள்ளதாகிய ஓசை, அமர்ந்த பின - அடங்கியபின்பு, —இரவு இடை - நடுராத்திரியிலே, பரித்தேர் வேந்தன் - குதிரைகளைப் பூட்டும் தேரையுடையதுரியோதனராசன், சூழ்ந்தவண்ணம்- ஆலோசித்த விதத்தை, இன்னது என்று இயம்புகின்றாம் - இத்தன்மைய தென்று கூறத்தொடங்குகிறோம்; (எ - று.)

மகிழ்நர் - மகிழ்ச்சியுள்ளவர்; ந் - பெயரிடைநிலை. எய்தி - எய்த வெனச் செயவெனெச்சமாத் திரிக்க. கள்ளிரவில் ஜனங்கள் ஒலி யடங்குதல், இயல்பு. (228)

169.—துரியோதனன் முதலியோர் இரவிற்செய்த சதியாலோசனை.

[துரியோதனன் முதலியோர் ஆலோசனைசெய்யச் சபாமண்டபமடைதல்.]

தந்தையுந்தம்பிமாருங்கன்னனுஞ்சகுனிதானும்
சிந்தையிற்றெளிந்தகல்விச்செழுமதியமைச்சர்தாமு
முந்திரவுயர்த்தகோமானேவலான்முழுதுமெண்ணி
மந்திரமிருப்பான்வந்தோர்மண்டபங்குறுகினாரே.

(இ - ள்.) தந்தையும் - பிதாவான திருதராட்டிரனும், தம்பி மாரும் - தம்பியரான (துச்சாதனன் முதலிய) தொண்ணூற்றொன் பதின்மரும், கன்னனும்—, சகுனி தானும்—, சிந்தையில் தெளிந்த கல்வி செழு மதி அமைச்சர் தாமும் - மனத்திலே ஐயந்திரிபற அறிந்த கல்வியையும் சிறந்த நுண்ணறிவையுமுடைய மந்திரி களும்,—முந்து அரவு உயர்த்த கோமான் ஏவலால் - சிறந்தபாம்புக் கொடியை உயரவெடுத்த துரியோதனராசனது கட்டளையினால், முழுதும் எண்ணி மந்திரம் இருப்பான் - நன்றாக ஆராய்ந்து ஆலோசனை செய்திருக்கும்பொருட்டு, ஓர் மண்டபம் வந்து குறுகினர் - ஒரு மண்டபத்தை வந்து அடைந்தார்கள்; (எ - று.)

ஏவலால் வந்து குறுகினர் என இயையும், இருப்பான் - பானிற்று எதிர்கால வினையெச்சம். கல்வியாலும் செழுமதியாலும் தாம் தெளிந்த பொருள்களைத் துரியோதனனிடத்து அச்சத்தால் வெளிக் கூறுது நிற்பரென்பது தோன்ற, 'சிந்தையிற் றெளிந்த கல்விச் செழுமதி யமைச்சர்' என்றார். முந்து உயர்த்த என இயைத்து, முன்னிடத்திலே உயர எடுத்த என்றும் உரைப்பர். (229)

170.—துரியோதனன் மற்றையோரை வினவுதல்.

தீதறுமதிவல்லோரைச்செழுமதிகுடையானைக்கிப்
பாதவவனத்திற்போன பாண்டவர்தம்மைமீண்டு
மேதகவழைத்துநாடுவேண்டுமினென்றுமூட்டும்
யாதவன்றனித்துவந்தானென்செய்வதியம்புமென்றான்.

(இ - ள்.) செழு மதி குடையான் - கலைநிறைந்த பூர்ணசந்திரன் போன்ற வெண்கொற்றக் குடையையுடைய துரியோதனன், —தீது அறு மதி வல்லோரைநோக்கி - குற்றமற்ற அறிவில்வல்ல தந்தை முதலியோரைப் பார்த்து, 'பாதவம் வனத்தில்போன - மரங்களையுடையகாட்டிற்குச்சென்ற, பாண்டவர் தம்மை-பாண்டவர்களை, மேதக அழைத்து - மேன்மையாகக்கூப்பிட்டு, நாடு மீண்டும்வேண்டுமின் என்று - (உங்கள்நாட்டை) மறுபடி விரும்பிக்கேளுங்களென்று சொல்லி, மூட்டும் - கலகத்தையுண்டாக்குகிற, யாதவன் - யதுகுலத்தவனாகிய கண்ணன், தனித்து வந்தான் - தனியனாக இங்கு வந்துள்ளான்; என் செய்வது - (நாம் இப்பொழுது) என்னசெய்யத் தக்கது? இயம்பும் - சொல்லுங்கள்', என்றான் - என்று கூறினன்;

பாதபம் - வடசொல்; காலால் நீரைக்குடிப்பதென்று பொருள்; பாதம் - அடி: "நின்று, தளரா வளர்தெங்கு தாளுண்டுநீரைத், தலையாலே தான் தருதலால்" என்பதுங் காண்க. மேதக-மேன்மையென்னும் பண்பினடி. (230)

171.—திருதராட்டிரன் 'கண்ணனைக் கொல்லவேண்டும்' என்று கூறுதல்.

பொரும்படைமைந்தன்கூறத்தந்தையும்பொருந்தச்சொல்வான்
இரும்புலிவலியிற்பட்டால்விடுவரோவெயினராளர்

வரம்பில்வெஞ்சேனையோடும்வகீர்ந்தினிமாயன்றன்னைக்
கரும்பொழுதகலுமுன்னே கொல்வதேகருமமென்றான்.

(இ - ள்.) பொரும் படை மைந்தன் கூற - போர்செய்தற்குரிய சேனையையுடைய குமாரனான துரியோதனன் இவ்வாறுசொல்ல,—தந்தையும் - பிதாவான திருதராட்டிரனும்,—பொருந்த சொல்வான் - (தன்மகன் மனத்துக்கு) இசையும்படி கூறுபவனாய், 'இரு புலி வலியில் பட்டால் - பெரிய புலியொன்று (தானகவந்து) வலியிலே அகப்பட்டுக்கொண்டால், எயினர் ஆனைர் - வேடர்களானவர்கள், விடுவரோ - (அதனைக்கொல்லாமற்) புறத்துச் செல்லவிட்டிடுவார் களோ? [விடாரன்றே?]; (ஆதலால்), இனி - இப்பொழுது, கரும் பொழுது அகலும் முன்னே - (இருளாற) கரிய இவ்விராப்பொழுது கழியுமுன்னமே, மாயன் தன்னை - கண்ணனை, வரம்பு இல் வெம் சேனையோடும் வகீர்ந்து - எல்லையில்லாத கொடிய சேனையுடனே (சென்று) சூழ்ந்து, கொல்வதே-கொன்றுவிடுவதே, கருமம்-செய்யத் தக்க தொழில்,' என்றான் - என்று கூறினன்; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி. படை - ஆயுதமுமாம். இரும்புலி என்றது-வலியிற்சிக்குவிக்கவொண்ணுத புலியென்றபடி. இருளின் கருமை, பொழுதின்மேல் ஏற்றப்பட்டது. பகலிற் கொல்லமுடியாது என்பான் 'கரும்பொழு தகலுமுன்னே' என்றும், தனியே கொல்ல முடியாதென்பான் 'வரம்பில் வெஞ்சேனையோடும் வகீர்ந்து' என்றுங் கூறினன். (231)

172.—இதுமுதல் மூன்று கவிகள், அதனை விகர்ணன் தடுத்ததைக் கூறுவன.

கண்ணிலானுரைத்தமாற்றங்கேட்டலுங்காவலோரின்
மண்ணிலாரிதற்குமுன்புதூதரைவகீர்ந்துகொன்றார்
எண்ணிலாவிந்தவெண்ணமெவ்வுழிக்கற்றதென்று
வெண்ணிலாமுறுவல்செய்துவிகன்னனும்விளம்பலுற்றான்.

(இ - ள்.) கண் இலான் உரைத்த மாற்றம் - ஊனக்கண்ணேடு ஞானக்கண்ணு மில்லாத திருதராட்டிரன் (இவ்வாறு) சொன்ன வார்த்தையை, கேட்டலும் - கேட்டவளவிலே, விகன்னனும் - விகர்ணனென்னுந் துரியோதனன் தம்பியும்,—'மண்ணில் - உலகத் தில், காவலோரில் - அரசர்களுள், இதற்குமுன்பு—, தூதரை வகீர்ந்து கொன்றார் - தூதுவந்தவரைச் சூழ்ந்து கொலை செய்தவர், ஆர் - யார்? [எவருமிலரே யென்றபடி]; எண் இலா இந்த எண்ணம் - ஆலோசனையில்லாத இந்த நினைப்பு, எ உழி கற்றது - எந்த இடத்தினின்று அறிந்துகொண்டது?' என்று—, வெள்நிலா முறுவல் செய்து விளம்பல் உற்றான்-வெண்ணிறமான சந்திரகாந்தி போல வெள்ளிய புன்சிரிப்பைச் செய்து கூறத்தொடங்கினன்; (எ - று.)—அதனை, மேலிரண்டு கவிகளிற் காண்க.

விகன்னன் - விகர்ணன்; வடசொற்றிரிபு; இவன்-துரியோதன னது இறுதித்தம்பி; இராவணன் தம்பியருள் விபீஷணன்போல,

நீதிகளை நன்கு உணர்ந்து நியாயவழியையே பேசுகிற நற்குணமுடையவன்: கீழ்ச் சூதுபோர் நடந்தகாலத்தில் துரியோதனனேவலால் துச்சாதனன் திரௌபதியை முடிபிடித்திழுத்துவந்த பொழுதும் இவன் நீதியெடுத்துக்கூறினன்: இதுபற்றியே, மேல் யுத்தத்தில் வீமன் இவனை விதியாற் கொல்லவேண்டிய போதும் மிக இரங்கு மாறு காண்க. இங்கே, நகைப்பு - தந்தையது பேதைமை நோக்கியுண்டானது. 'எண்ணிலாவிந்தவெண்ணமெவ்வழிக் கேற்றது' என்றும் பாடம். எண்ணிலா - நினைக்கத்தகாத என்றபடி. (232)

173.—கொல்லத்தகாதவர்.

மூத்தவரிளையோர்வேதமுனிவரர்பிணியின்மிக்கோர்
தோத்திரமொழிவோர்மாதர்தூதரென்றிவரைக்கொல்லிற்
பார்த்திவர்தமக்குவேறுபாவமற்றிதனினில்லை
பூத்தெரிதொடையாய்பின்னுநரகினும்புகுவரென்றான்.

(இ - ள்.) 'பூ தெரி தொடையாய் - மலர்களாலமைந்த விளங்கு கின்ற மாலையை யுடையவனே!—மூத்தவர் - முதியவர்களும், இளையோர் - இளம்பிராய முள்ளவர்களும், வேதம் முனிவரர் - வேதங்களை யறிந்த பிராமணச் சிரேஷ்டர்களும், பிணியில் மிக்கோர் - நோயில் மிகுந்தவர்களும், தோத்திரம் மொழிவோர் - ஸ்துதிபாடகர்களும், மாதர் - மகளிரும், தூதர் - தூதர்களும், என்ற இவரை - என்று சொல்லப்பட்ட இவர்களை, கொல்லின் - கொன்றால், பார்த்திவர் தமக்கு - அரசர்களுக்கு, இதனின் - இதுபோல(க் கொடிய), வேறு பாவம்—, இல்லை—; பின்னும் - மேலும், நரகினும் புகுவர் - (இவர்களைக்கொன்றவர்) நரகத்திலுஞ் சேர்வார்கள்,' என்றான் - என்று (விகர்ணன்) கூறினன்; (எ - று.)—மற்று - அசை.

"இரவல ரிளையவ ரேதத்துநாவலர், விரவியதூதுவர் விருத்தர் வேதியர், ஆரிவையர் வெஞ்சம ரஞ்சுவோர் பெருங், குரவரென் றிவர்களைக் கோறல் பாவமே" என்றார் கீழ் நிரைமீட்சிச் சருக்கத்தும். இராமதூதனை அநுமானைக் கொல்லத்துணிந்த இராவணனுக்கு விபீஷணன் "மாதரைக் கொலைசெய்தார்க ளுளரெனவரினும் வந்த, தூதரைக் கொன்றுளார்களியாவரே தொல்லை நல்லோர்" என்பது முதலாக நீதிகூறியவாறுங் காண்க. அறிவினாலும் வயதினாலும் ஒழுக்கத்தாலும் முதிர்ந்தவர்களாகிய ஞானவிருத்தர் வயோவிருத்தர் சிலவிருத்தர் என்னும் மூவகைப்பெரியோரும் அடங்குதற்கு, பொதுப்பட 'மூத்தவர்' எனப்பட்டது. தோத்திரமொழிவோர் அரசரை எப்பொழுதும் அருகிலிருந்து புகழ்ந்து பாடும் ஒரு சாதியார்; இனி, ஒருவரைத் துதித்துக் கீழ்ப்படிபவருமாம். 'பாவமற்றிதனினில்லை'—இது எந்தப் பிராயச்சித்தத்தாலும் நீராமல் மறுமையில் அனுபவித்தே நீரத்தக்க பாவமாகும் என்பதை விளக்கும் பொருட்டு, 'பின்னு நரகினும் புகுவர்' என்றான். தூதரைக்கொல்லலாகாதென்றற்கு இனமாகப் பிறரையும் எடுத்துக்கூறினன். 'பூத்தெரிதொடையாய்' என்ற விளியைத் திருதராட்டிரனை நோக்கியதென்றுவது, துரி

யோதனனே நோக்கியதென்றுவது கொள்க. இது - பூத்து எரி எனப் பிரிந்து, அமங்கலப் பொருள் தருமாறுங் காண்க. (233)

174. பழியுடைப்பகைஞரேனுந்தன் பெரும்பதியில்வந்தால்
அழிவுறக்கோறல்பாவமாண்மையுமன்றுமென்பார்
கழிகடற்சேனைசூழக்கங்குலின்வளைந்திட்டாலும்
எழிலுடைக்கொண்டல்வண்ணனகப்படானெவர்க்குமென்றான். [றன்.

(இ - ள்.) (இன்னும் அவ்விகர்ணன்), 'பழி உடை பகைஞர்' ஏனும் - (தன்னைப்) பழித்தலையுடைய பகைவர்களாயிருப்பினும், தன் பெரு பதியில் வந்தால்-(அவர்கள்) தனது பெரிய ஊருக்கு வந்தால், அழிவு உற கோறல் - (அவர்களை) அழிவையடையும்படி கொல்லுதல், பாவம் - தீவினையாம்; (அது), ஆண்மையும் அன்று ஆம் - ஆண்தன்மைக்கு உரியதும் ஆகாது; என்பார்-என்று (அறிவுடைய பெரியோர்கள்) கூறுவார்கள்; கழி கடல் சேனை சூழ - மிகுந்த கடல் போற் பெரிய சேனைகள் வந்து சுற்றிலும் நிற்க, கங்குலின் வளைந்திட்டாலும் - இராத்திரிகாலத்தில் சென்று சூழ்ந்திட்டாலும், எழில் உடைகொண்டல் வண்ணன் - அழகையுடைய மேகம் போன்ற நிற முடையவனை கண்ணன், எவர்க்கும் அகப்படான் - எப்படிப் பட்ட வலிமையுடையோர்க்கும் (கொல்லக்) கிடைக்கமாட்டான்', என்றான்—; (எ - று.)

பழிஉடை - எல்லாராலும் பழிக்கப்படுதலையுடைய என்றும் பொருள் கொள்ளலாம். கழிகடல், கழி - மிகுதியுணர்த்தும் உரிச் சொல்; ஆனதுபற்றியே, வருமொழிமுதல்வலி இயல்பாயிற்று; [நன்-மெய்-36.] கீழ்த்திருதராட்டிரன் 'மாயன் தன்னைக்கரும்பொழுதகலு முன்னே கொல்வது' எனக் கரியோனைக் காரிருளிலேயே கொல்ல வேண்டுமென்பது படக் கூறியதனை மறுத்து, இவன் 'கங்குலின் வளைந்திட்டாலு மெழிலுடைக் கொண்டல் வண்ணனகப்படான்' என்றதனால், கறுத்தவனைக் கரிய இருளிற் கண்டுபிடிப்பது கஷ்ட மென்பதுபடக் கூறி, கண்ணனது வெல்லுதற்கரிய மாயை நிலையை வெளியிட்டவாறு. பகைஞர், ஞ-பெயரிடைநிலை. (234)

175.—இதுவும், அடுத்தகவியும் – துச்சாதனன் வார்த்தை.

வெம்புயவலியான்மாதைவிரிதுகிலுரிந்தவீரன்
தம்பியைமுனிந்துசீறித்தமையனேநோக்கிச்சொல்வான்
வம்பவிழலங்கன்மார்பமந்தணமுரைக்கலுற்றால்
இம்பர்மற்றியாதுசொல்லவிகர்ணரையழைத்ததென்றான்.

(இ - ள்.) (இங்ஙனம் விகர்ணன் சொல்லக் கேட்டவளவில்),—வெம் புயம் வலியால் மாதை விரி துகில் உரிந்த வீரன் - கொடிய தோள்களின் வலிமையால் அழகிய திரௌபதியினது பெரிய ஆடையை அவிழ்க்கலுற்ற துச்சாதனன்,—தம்பியை முனிந்து சீறி - தம்பியாகிய அவ்விகர்ணனை மிகக்கோபித்து, தமையனே நீகேள் சொல்வான்-தமையனை துரியோதனனைப்பார்த்துச் சொல்பவனாய்,

'வம்பு அவிழ் அலங்கல் மார்ப - வாசனை வீசுகிற பூமாலையை யணிந்த மார்பையுடையவனே! மந்திரணம் உரைக்கல் உற்றால் - இரகசியமான ஆலோசனை சொல்லத் தொடங்கினால், இம்பர் - (அதற்குரிய) இவ்விடத்தில், யாது சொல்ல - எந்த ஆலோசனையைச் சொல்லும்பொருட்டு, இளைஞரை அழைத்தது - சிறியோர்களைக் கூப்பிட்டது', என்றான் - என்று சொன்னான்; (எ - று.)—மற்று - அசை.

இப்பாட்டின் முதலடி - இவனது தோள்வலிமை, போர் முதலிய ஆற்றல்தொழில்களுக்கு அமைந்ததன்று; ஒரு பெண்ணைத் துகிலுரியும் இழிதொழிலுக்கே அமைந்ததுபோலும் எனக்கவி இகழ்ந்தவாறு. இங்கே வீரனென்றது, இகழ்ச்சி. விரிதுகில் - எதிர்கால வினைத்தொகையாக, (கண்ணன் திருவருளால்) விரிவதாகுஞ்சேலை யென்றும் பொருள்படும். இதனால், அந்த அற்பச் செய்கையையும் இவன்செய்து முடிக்கமாட்டாத இழிதகைமை தோன்றும். முனிந்து சீறி - ஒருபொருட்பன்மொழி. (235)

176. அதிரதர்முதலாவுள்ளவவனிபர்வலீந்துநிற்ப
எதிர்முகிறவழுங்கோயிலெரியினெயெங்குமூட்டி
விதுரனுமவனுஞ்சேரவெந்திடமலீவதல்லான்
மதிபிறிதில்லையின்னேவல்விரைந்தெழுமினென்றான்.

(இ - ள்.) (இன்னும் அத்துச்சாதனன்), 'அதிரதர் முதல்ஆ உள்ள அவனிபர் எதிர் வலீந்து நிற்ப - அதிரதர் முதலாக இருக்கிற அரசர்கள் (பலர் நம்முடன்) எதிரிலே வலீந்துகொண்டு நிற்க, முகில் தவழும் கோயில் எங்கும் எரியினை மூட்டி - மேகங்கள் தவழப் பெற்ற (மிகவுயர்ந்த விதுரனது) சிறந்த வீட்டிலே எல்லாப் பக்கத்தும் நெருப்பைப்பற்றவைத்து, விதுரனும் அவனும் சேர வெந்திட மலீவது அல்லால் - விதுரனும் அக்கண்ணனும் ஒருசேர வெந்திறக்கும்படி அழிப்பதல்லாமல், பிறிது மதி இல்லை - வேறு ஆலோசனை யில்லை; (ஆதலால்), இன்னே - இப்பொழுதே, வல்விரைந்து - மிகத்துரிதப்பட்டு, எழுமின் - புறப்படுங்கள்,' என்றான் - என்று கூறினான்; (எ - று.)

தேர்வீரர் - அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் என நால்வகைப்படுவர். அதிரதர் - முழுத்தேரரசர்; அவராவார் தாம் ஒரு தேரில் ஏறிநின்று தம் தேர் குதிரை சாரதிகளுக்கு அழிவுவராமற் காத்துப்பலவாயிரந் தேர்வீரரோடு வேறுதுணையில்லாமலே போர் செய்து வெல்லும் வல்லமையுடையார். அவரிற் சிறிதுதாழ்ந்தவர் - மகாரதர்: இவர், பதினாயிரந் தேர்வீரரோடு வேறுதுணையில்லாமலே போர்செய்து வெல்லும் வல்லமையுடையார். சமரதர் - ஒரு தேர்வீரனோடு தானும் ஒருவனாய் எதிர்க்கவல்லவர். அவ்வாறு எதிர்த்துப் போர்செய்யுமளவில் தமது தேர் முதலியவற்றை இழந்துபோம்படியானவர், அர்த்தரதர்; இவர்கள் இருவர் சேர்ந்தால் ஒரு சமரதனுக்கு ஒப்பாவார். இந்நால்வகையாருள்ளும் அதிரதர் சிறந்தவராதலால், அவர்களையே தலைமையாகக் கூறினது. முகில்

எதிர்தவழும் என இயைத்து மேகங்கள் நேரில்வந்து தவழப்பெற்ற என்றுங்கொள்ளலாம்; இவர்களோ எரிகிறவீட்டில் நின்று வெளியில் ஓடிச் செல்லாதபடி பொருது அடித்துத் தள்ளவேண்டுமென்பான், 'மலைவது' என்றான். வல் விரைந்து - நள்ளிரவு கழிந்திடுதற்கு முன்னே; ஒருபொருட்பன்மொழி. வல் - விரைவுணர்த்து மிடைச் சொல். இதனால், கண்ணனொருவனைக் கொல்லவேண்டுமென்ற திருதராட்டிரனினும், விதுரன்மீதுள்ள கோபத்தாலும், இருவரும் ஒருமனையில் வசித்தலாலும், அவனையும் உடன் கொல்லவேண்டு மென்ற துச்சாதனனது மிக்ககொடுமை நன்கு விளங்கும். (236)

177.—கர்ணன் தற்புகழ்ச்சியாகக் கூறுதல்.

செங்கதிரெழுந்துசீறிற்செறியிருணிற்பதுண்டோ
இங்கிவனிருந்தவில்லிலெரியிடவேண்டுமோதான்
வெங்கணையொன்றினாலேவிளிந்திடவென்றுமீள்வேன்
கங்குலினெழுமினென்றுகன்னனுங்கனன்றுசொன்னான்.

(இ - ள்.) (அது கேட்டு), கன்னனும்—, 'செங்கதிர்எழுந்து சீறின் - சிவந்தகிரணங்களையுடைய சூரியன் உதித்து அழிக்கத் தொடங்கினால், செறி இருள்நிற்பது உண்டோ - நெருங்கின இருள் அழியாமல்நிற்பது (எங்கேனும்) உளதோ? [இல்லை யென்றபடி]; இங்கு இவன் இருந்த இல்லில் எரி இடவேண்டுமோ தான் ? (இக் கண்ணனைக்கொல்வதற்காக) இவ்வூரில் இவன் வந்துதங்கி யிருக்கிற வீட்டில் நெருப்புப் பற்றவைக்க வேண்டுமோ? [வேண்டுவதில்லை]; வெம் கணை ஒன்றினாலே விளிந்திட வென்று மீள்வேன் - கொடிய ஒருபாணத்தாலே (நான் அவனை) இறக்கும்படி சயித்துத் திரும்பு வேன்; கங்குலின் எழுமின் - இவ்விரவிலேயே (போர்க்குப்) புறப்படுங் ஙள்,' என்று—, கனன்று சொன்னான் - கோபித்துக் கூறினான்;

கன்னன் எப்பொழுதும் தனது பல பராக்கிரமங்களை மிக்கன வாகத் தானே மதித்தவனாதலால், இங்ஙனங் கூறினான். செங்கதிர் என்பது வெண்கதிராகிய சந்திரனைப் பிரித்தலால், செம் - இனம் விலக்க வந்த அடைமொழி. முதலடியிற்சொன்ன உபமானம் - யான் போர்க்கு எழுந்து கோபித்துச்சென்றால் கண்ணன் இறவாதிருப் பானோ? என்ற உபமேயத்தை உணர்த்தலால், பிறிதுமொழிதலாம்: சூரியபுத்திரனான தனக்குச் சூரியனையும், கருநிறமுடைய கண்ண னுக்கு இருளையும் ஏற்குமாறு உவமை கூறினான். (237)

178.—இதுவும் அடுத்த கவியும் – சகுனி 'கண்ணனைப் படுகுழி பாய்ச்சிக் கொல்லவேண்டும்' என்றல்.

பதிப்பெயர்ந்தேகினாலைப்பகைவரைக்கூடுமாயின்
விதிப்பயனென்ன நம்மைவெஞ்சமர்வெல்லவொட்டான்
மதிப்பதென்வேறுகள்ளமாயனைமகனையிற்கோலிச்
சதிப்பதேகருமமென்றுசௌபலன்பின்னுஞ்சொல்வான்.

(இ - ள்.) (அதுகேட்டு), சௌபலன் - (காந்தாரநாட்டரசனை) சுபலனென்பவனது புத்திரனுகிய சகுனி,—'(இக்கண்ணன்), பதி பெயர்ந்து ஏகி - இவ்வூரைவிட்டு நீங்கிச்சென்று, நாளை - நாளைக்கு, பகைவரை கூடும் ஆயின் - பகைவர்களான பாண்டவர்களைச் சேர்ந் திடுவானுனல், விதிபயன் என்ன - (முற்பிறப்பிற்செய்த கொடிய) ஊழ்வினைப் பயன்போல, நம்மை வெம் சமர் வெல்ல ஒட்டான் - நம் மைக் கொடியபோரிற் சயிக்க விடமாட்டான்; (ஆதலால்), வேறு மதிப்பது என் - வேறே ஆலோசிக்கவேண்டுவது என்ன? கள்ளம் மாயனை - வஞ்சனையையுடைய கண்ணனை, மனையில் கோலி - (நம் முடைய) வீட்டிலே (வரவழைத்து) வஞ்சித்துகொண்டு, சதிப்பதே - வஞ்சனையாக வெல்வதே, கருமம் - செய்தொழிலாம்,' என்று-என்று சொல்லி, பின்னும் சொல்வான்-மறுபடியுங் கூறுவான்; (எ - று.)

விதிப்பயன் தவருததுபோல, இவன் நம்மை வெற்றியடைவி யாமை தவருதென்பான், 'விதிப்பயனென்ன நம்மைவெஞ்சமர் வெல்ல வொட்டான்' என்ருன். கள்ளம் - தொழிற்பெயர்; கள் - பகுதி, அம் - விகுதி: இது - வேறுவிகுதிபெற்று, களவு எனவும் வரும்; இதன் எதிர்மறை - கள்ளாமை. கோலுதல் - அகப்படச் செய்தலும், சூழ்தலுமாம். 'மனையிற் கோலிச்சதிப்பது' என்ப தற்கு, விதுரன வீட்டிலேயே வஞ்சித்து கொல்லுவதென உரைப் பினுமாம். (238)

178. கொல்லுவதியற்கையன்றுகுழிபறித்தரக்கரோடு
மல்லரையிருத்திமேலோராசனம்வகுத்துநாளை
எல்லிடையழைத்துவீழ்த்தியிகலுடன்விலங்குபூட்டித்
தொல்லருஞ்சிறையில்வைத்தறுதருக்குரிமையென்ருன்.

(இ - ள்.) 'கொல்லுவது - (தூதரைக்) கொல்லுதல், இயற்கை அன்று - (நல்லரசர்க்குத்) தக்கதன்று; குழி பறித்து-பெரும்பள்ளந் தோண்டி, அரக்கரோடு மல்லரை இருத்தி - இராக்கதர்களையும் மற் போர் வீரரையும் (அதனுள்ளே மறைவாக) இருக்கவைத்து, மேல் - மேலே, ஓர் ஆசனம் வகுத்து - ஒரு ஆசனத்தை அமைத்து, நாளை எல்லிடை அழைத்து - நாளைப்பகலிலே வரவழைத்து, வீழ்த்தி-(அக்குழியிலே) விழும்படிசெய்து, இகலுடன்-வலிமையோடு, விலங்கு பூட்டி - விலங்கைப்பூட்டி, தொல் அருஞ் சிறையில் வைத்தல் - பழமையான பொறுத்தற்கரிய சிறைச்சாலையிலே வைத்திடுதலே, தூதருக்கு உரிமை - தூதர்களுக்குச் செய்தற்குரிய தண்டனை,' என்ருன் - என்று சொன்னுன், (சகுனி); (எ-று.)

இயற்கை - தொழிற்பெயர்; இயலுதலென்க: இயல் - பகுதி, கை - விகுதி. நிலத்திற் குழிந்துள்ளது, குழி. (239)

180.—இதுமுதல் மூன்றுகவிகள் – ஒருதொடர்: துரியோதனன் படுகுழியமைத்ததைக் கூறும்.

மாதுலனுரைத்தமாற்றமருகனுமிசைந்துகங்குற்
போதிடையனேகமல்லர்வருகெனப்புகன்றுதானும்

நீதியினிருந்துதாழநிலவறைசமைத்தபின்னர்
ஆதிநூருயிரம்போரரக்கரையதனுள்வைத்தான்.

(இ - ள்.) மாதுலன் - மாமனான சகுனி, உரைத்த - சொன்ன, மாற்றம் - வார்த்தையை, மருகனும்-மருமகனான துரியோதனனும், இசைந்து - உடன்பட்டு [அங்கீகரித்து], கங்குல் போது இடை - அந்த நடுராத்திரிப்பொழுதில்தானே, அனேக மல்லர் வருக என புகன்று - பல மற்போர்வீரர்கள் வருவாராக வென்று கூறி, (வர வழைத்து), தானும்—, நீதியின் இருந்து - (அவ்வாலோசனைக்குரிய) முறைமையிலே இருந்துகொண்டு, நில அறை தாழ சமைத்த பின்னர் - நிலவறையை ஆழமாக உண்டாக்கினபின்பு, ஆதிநூறு ஆயிரம் போர் அரக்கரை - பழமையான போரில்வல்ல இராக்கதர்கள் லட்சம் பேரை, அதனுள் வைத்தான் - அந்நிலவறையினுள்ளே இருத்தினன்; (எ - று.)

மாதாவினுடன்பிறந்தவன், மாதுலன். நிலவறை - பூமிக்குள் வெட்டப்படும் பள்ளம். 'நூருயிரம் போரக்கர்' என்றும் பாடம். நீதியின் தாழ இருந்து - நியாயத்தினின்று கீழ்ப்பட இருந்து [வழுவி] என்றும் உரைக்கலாம். (240)

181. மல்லர்பப்பரவர்தம்மைமற்றதினிரட்டிவைத்தான்
வில்லுடைவீரர்தம்மைவேறதினிரட்டிவைத்தான்
பல்படைவல்லோர்தம்மைப்பதின்மடங்கதனில்வைத்தான்
அல்லிலோர்கடிகைதன்னிலறிவனீயழைக்கவென்றே.

(இ - ள்.) அறிவனீ அழைக்க என்று - நுண்ணறிவுடைய கண்ணனே (மறுநாள்) அழைக்கவேண்டுமென்று கூறி, (அங்ஙனம் வருகையிற் பிடித்திடுதற்கு), அல்லில் ஓர் கடிகைதன்னில் - அவ் விராத்திரியில் ஒரு நாழிகைப்பொழுதினுள்ளே, மல்லர் பப்பரவர் தம்மை-மல்லர்களையும் பப்பரர்களையும், அதின் இரட்டி வைத்தான் - அவ்விராக்கதர்தொகையினும் இரண்டு மடங்காக [இரண்டுலட்சம் பேரை] (அந்நிலவறையினுள்) இருக்கச்செய்தான்; வில் உடை வீரர் தம்மை - வில்லையேந்திய வீரர்களை, வேறு - தனியே, அதின் இரட்டி வைத்தான் - அத்தொகையினும் இரண்டுமடங்காக [நாலுலட்சம் பேரை] வைத்திட்டான்; பல் படை வல்லோர்தம்மை - பல ஆயுதங் களிலும் வல்ல சூரர்களை, அதனில் பதின்மடங்கு வைத்தான் - அத் தொகையினும் பத்துமடங்காக [நாற்பது லட்சம்பேரை] அங்கு இருத்தினன்; (எ-று.)

பப்பரவர் - பப்பரநாட்டிலுள்ளவர்; இவர் - மிலேச்சசாதிவகை யினுட்பட்டவர். மல்லர்பப்பரவர்தம்மை - மற்போர் வல்லவராகிய பப்பரவரை யென்றுமாம். இரட்டுதலையுடையது - இரட்டி: இரட்டு தல் - இரண்டாதல்; இ - கருத்தாப்பொருள்விகுதி. கடிகை-கடிகா என்னும் வடமொழியின் திரிபு; அது, இருபத்துநான்கு நிமிஷம் கொண்ட நேரம். 'அழிக்க' என்றும் பாடம். மற்று-அசை; பின்பு என்றுமாம். (241)

182. பெரும்பிலவறையையேயின்பிளப்பினுளிரைத்துமூடி
அரும்பெறன்மணிகளாலோராசனமதன்மேலாக்கிச்
சுரும்பிமிர்மாலைதூக்கித்தொழிலுடைவிதானமேற்றி
வரம்பிலாவென்றிவேலான்மாறிலாவண்ணஞ்செய்தான்.

(இ - ள்.) வரம்பு இலா வென்றி வேலான் - எல்லையில்லாத வெற்றியைத் தருகின்ற வேலாயுதத்தையுடைய துரியோதனன், (தன் வேலியாட்களைக்கொண்டு), பெரும் பிலம் அறையை - பெரிய பள்ளமான அந்நிலவறையை, வேயின் பிளப்பினுல் நிரைத்து மூடி - மூங்கில்களின் பிளப்புக்களினுல் மேலே வரிசையாய்ப் பரப்பிமூடி, அதன்மேல் - அம்மூடியதன் மேல், அரும் பெறல் மணிகளால் ஓர் ஆசனம் ஆக்கி - அருமையான பெறுதலையுடைய இரத்தினங்களால் ஒரு பீடத்தைச் சித்தஞ்செய்து, சுரும்பு இமிர் மாலை தூக்கி தொழில் உடை விதானம் ஏற்றி - வண்டுகள் மொய்த்து ஒலிக்கப்பெற்ற பூமாலைகளைத் தொங்கவிடப்பெற்று(ப் பலவகை விசித்திர) வேலைப்பாட்டையுடைய மேற்கட்டியை (அவ்வாசனத்திற்குமேல்) உயரத்தில் அமைத்து, மாறு இலா வண்ணம் செய்தான்-வேறுபாடுதோன்றுதபடி (எல்லாவற்றையும்) அமைத்துவைத்தான்; (எ - று.)

'அரும்பெறல்மணி' என்றது-வடமொழிநடை; இதனை "அருங்கேடன்," "சென்றுசேர்கல்லாப்புள்ள புள்ளி, லென்றாழ்வியன்குளம்" என்பன போலக் கொள்க. இனி, பெறலருமணி என மாற்றி இயைத்து, பெறுதற்கு அருமையான மணியெனினு மமையும். பிளப்பு - பிளக்கப்பட்ட பொருளுக்குத் தொழிலாகுபெயர்; பு-விகுதி. தூக்கி - வினையெச்சம்; உடை என்னுங் குறிப்புப் பெயரெச்சத்தைக் கொண்டது. விதானம் - வடசொல். மாறிலா வண்ணம் - (நிலவறையின்மேல் அமைத்துவைத்தது) தோன்றுதபடி. (242)

183.—இதுமுதல் மூன்று கவிகள் - சூரியோதய வருணனை.

அடியவர்மனத்திலுள்ளவாரிருட்கங்குறீர்க்கும்
நெடியவனிருக்கவென்றுநிலவறைவிரகிற்செய்த
கடியவனியற்கையஞ்சிக்கங்குலுங்கடிதிற்போகப்
படியவர்துயிலும்போகப்பரிதியுமுதயஞ்செய்தான்.

(இ - ள்.) 'அடியவர் மனத்தில் உள்ள - (தனது) தொண்டர்களது உள்ளத்திலுள்ள, ஆர் இருள் கங்குல் - (மற்றையோர்க்குப் போக்குதற்கு) அரிய (அஜ்ஞான) அந்தகாரமாகிய இரவை, தீர்க்கும் - அழித்தருளுகிற, நெடியவன் - பெருமைக்குணமுடைய கண்ணபிரான், இருக்க - வீற்றிருக்க வேண்டும்,' என்று - என்று கருதி, விரகின் - வஞ்சனையாக, நிலம் அறை செய்த - நிலவறையைச் செய்துமுடித்த, கடியவன் - கொடுந்தன்மையுடைய துரியோதனன்து, இயற்கை - துஷ்டசுபாவத்துக்கு, அஞ்சி - பயந்து, கங்குலும் - இராத்திரியும், கடிதின் போக - விரைவாகக்கழிய, பரிதியும் - சூரியனும், படியவர் துயிலும் போக - நிலவுலகத்திலுள்ளாரது நித்திரையும் ஒழியும்படி, உதயம் செய்தான்-உதித்தலைச்செய்தான்; (எ - று.)

ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இரவு இயல்பாகக் கழிந்ததைத் துரியோதனனது கொடுமைக்கு அஞ்சி விரைவிற்போனதாக உத்பிரேக்ஷித்தார். ஆரிருள் - முச்சுடர்க்குந்தீராத இருளென்றபடி. இருள்தீர்க்கும் நெடியவன் இருக்கவென்று நிலவறை விரகின் கங்குலிற்செய்த என்றுமாம். (243)

184. சிரந்தருசுடிகைநாகத்திரண்மணிபலவுஞ்சிந்தி
நிரந்தரமருவிவீழுநிறந்திகழ்தயக்குன்றிற்
பரந்தெழுமருக்கன்சூழ்ந்தபடரிருட்கங்குல்கண்டு
புரந்தரன்கோயிலிட்டபொங்கொளித்தீபம்போன்றான்.

(இ - ள்.) சிரம் தரும் சுடிகை - தலையிற்பொருந்திய உச்சிக் கொண்டையையுடைய, நாகம் - பாம்புகளின், திரள்மணி பலவும் - தொகுதியான பல மாணிக்கங்களும், சிந்தி - சிதறப்பெற்று, நிரந்தரம் அருவி வீழும் - இடைவிடாமல் சிந்தூர அருவி விழப்பெற்ற, நிறம் திகழ் - (அதனால்) செங்நிறம் விளங்குகிற, உதயம் குன்றில் - உதயகிரியிலே, பரந்து எழும்-பரவிய வடிவமாய் உதித்த, அருக்கன்-சூரியன்,—சூழ்ந்த படர் இருள் கங்குல் கண்டு - சுற்றிலும் பரவிய மிகுந்த இருளைப் பார்த்து, புரந்தரன் - இந்திரன், கோயில் - தன் அரண்மனையில்வைத்த, பொங்குஒளிதீபம் - மிகுந்த ஒளியையுடைய திருவிளக்கை, போன்றான் - ஒத்தான்; (எ - று.)

தற்குறிப்பேற்றவுவமையணி. இந்திரன் கிழக்குத்திக்குப் பாலகனதலால், கீழ்த்திசையிலுதித்த சூரியனை அவன கோயிலிலிட்ட தீப மென்றார். அக்கினிவடிவமான தீபத்தினொளியினும் சூரிய னொளிக்கு உள்ள மிகுதி விளங்க, 'பொங்கொளி' என உபமானத்துக்கு அடைமொழி கொடுத்தது. சிந்தாமணியுரையில் நச்சினார்க் கினியர், 'உதயகிரியிற் சிந்தூர அருவி வீழ்ந்த சிந்தூராகாரத்திற் பிறந்து பதினாறுசதுர்யுகஞ் சிவப்பேறின முழுமாணிக்கம் இருளைக் கெடுத்தலின், இருள்பருகுமருமணி யென்றார்' என உரைத்தது கொண்டு, இங்கே, அருவி - சிந்தூர அருவியெனப்பட்டது. இனி நீரருவியுமாம். பரந்து - விரைந்து என்றுமாம். அற்தம் - இடையீடு; அது இன்மை, நிரந்தரம். (244)

185. தொடர்ந்தொளிருதயராகத்தோடுறநெருங்கிமேன்மேல்
அடர்ந்தரிபரந்துகாமனுகமவேதம்பாடத்
தடங்கயன்மலிந்துலாவத்தாமரைமுகமுங்காதன்
மடந்தையர்முகமுஞ்சேரமணம்பெறமலர்ந்தமாதோ.

(இ - ள்.) தொடர்ந்து ஒளிர் - (இடைவிடாது) தொடர்ச்சி பெற்று விளங்குகிற, உதயம் ராகத்தோடு - சூரியோதயகாலத்துக்கு உரிய பண்ணுடனே, உற - பொருந்த, நெருங்கி - சமீபித்து, மேல் மேல் அடர்ந்து - மேலே மேலே நெருங்கி, அரி - வண்டுகள், பரந்து-விரைவாகப்பரவி, கா மன் ஆகமம் வேதம்-சோலைகளிற் பொருந்தின மரங்களின் பகுப்புக்களிலே, பாட - இசைபாடவும், தட கயல் - பெரிய கயல் மீன்கள், மலிந்து உலாவ - மேலே தாக்கிச் சஞ்சரிக்

கவும், [தடகயல்-பெரிய கயல்மீன்கள்போற் பிறழுந்தன்மையனவான கண்கள், தொடர்ந்து ஒளிர் உதயம் ராகம் தோடு உற நெருங்கி - நெடுந்தூரம் விடாது சென்றுவிளங்குகின்ற உதயகாலத்துச் சூரியனையொத்த செந்நிறத்தையுடைய (இரத்தினங்களாலாகிய) தோடென்னுங் காதணியை அளாவும்படி சமீபித்து, மேல்மேல் அடர்ந்து - (அக்காதுகளின்) மேலே மேலே நெருங்கி, அரி பரந்து - சிவந்த இரேகைகள் பரவப்பெற்று, காமன் ஆகமம் வேதம் பாட - மன்மதனது சாஸ்திரங்களையும் வேதத்தையும் வெளிக்கூறுமாறு, மலர்ந்து உலாவ - (பக்கங்களிற்) சென்று சஞ்சரிக்கவும்], தாமரை முகமும் - தாமரைமலர்களின் மேலிடங்களும், காதல் மடந்தையர் முகமும் - அன்புள்ள மகளிரது முகங்களும், சேர - ஒரு சேர, மணம் பெற - நறுமணத்தைப்பெறும்படி, மலர்ந்த - மலர்ந்தன; (எ - று.)

இப்பாட்டு - சூரியோதயகாலத்தில் தாமரை மலர்தலும், பெண்கள் கண்விழித்து முகமலர்தலும் ஆகிய இரண்டுதன்மைகள் நிகழ்தலே ஒன்றேடொன்று உபமான உபமேயத்தன்மைபடச் சிலேடை வகையோடு வருணித்தது; சிலேடைஉவமையணி. தாமரைமேற் செல்லுகையில், ஆகமம் - மரம். அகமம் - வடசொல், நடத்தலில் லர்தலென்று பொருள். வேதம் - பேதம் என்பதன் விகாரம்; காமன் ஆகமவேதம்பாட என்றது - இரவில் தாமரைகுவிந்திருத்தலால் அங்குநின்று மற்றை விருட்சவருக்கங்களிற் சென்று சேர்ந்தவண்டுகள் பகலில் தாமரைமலர்தலே அங்கு நின்று நோக்கி மகிழ்ச்சியாற் பாட்டுப்பாட என்றபடி. தடம் கயல் எனப்பிரித்து, தடாகத்திற் கயல்களென்றுமாம். உதயம் ராகம் தோடு உற எனப்பிரித்து, உதயகாலத்துக்குரிய செந்நிறத்தையுடைய பூவிதழ்களிலே பொருந்த என்றும் உரைப்பர். இனி, முகத்தின்மேற்செல்லுகையில், கண்கள் சிறியனவல்லாமல் பெரியனவாகப்பரவிநீண்டிருத்தலே, கவிகள், கண்கள் காதுகளை அளாவியுள்ளன என்று வருணித்தல் மரபு. பெண்களுக்குக் கண்களிற் சில சிவந்த ரேகைகள் பரவியிருத்தல் உத்தம விலக்கணம். பெண்கள் கண்கள் காமனுகம வேதம் பாட என்றது, இங்கிதப் பார்வைகளால் [குறிப்பு நோக்கத்தால்] ஆடவர்களை அழைத்தல் பேசுதல் மகிழ்வித்தல் முதலியன செய்வதை. கயல் - கண்களுக்கு உவமையாகுபெயர். உத்தமசாதிப்பெண்களது முகம் பரிமளமுடைத்தாயிருக்குமென்பது நூல் மரபாதலால், 'மணம்பெற' எனப்பட்டது. இனி, மணம்பெற என்பதற்கு - மங்களகரமாக என்று உரைத்தலுமொன்று. மலர்ந்து உலாவுதல் - பிறழ்ந்து பலவாறு நோக்குதல். (249)

186.—அரசர் யாவரும் துரியோதன னரண்மனைசேர்தலும், கண்ணன் எழுந்து காலைக்கடன் முடித்தலும்.

இருந்துயிலுணர்ந்துவேந்தர்யாவருமிரவிற்சற்றும்
வருந்துயிலிலாதகண்ணுன்வாழ்பெருங்கோயில்புக்கார்
பெருந்துயிலநந்தபோகம்பேரணைதுறந்தமாலும்
அருந்துயிலெழுந்துகாலை யுஞ்சுடன்முறையிற்செய்தான்,

(இ - ள்.) (இங்ஙனம் சூரியன் உதித்தபின்பு), வேந்தர் யாவரும்-அரசர்களெல்லோரும், இருந்துயில்உணர்ந்து - பெரிய தூக்கம் தெளிந்து எழுந்து, இரவில் வரும் துயில் சற்றும் இலாத கண்ணன் வாழ்பெருங்கோயில் புக்கார் - இராத்திரி முழுவதும் இயல்பாகவருந் தன்மையதான தூக்கம்சிறிதும் பெறுத கண்களையுடைய துரியோதனன் வாழ்கிற பெரிய அரண்மனையை வந்து அடைந்தார்கள்; அருந்தம்போகம் பேர் அணிபெருந் துயில்துறந்த மாலும்-ஆதிசேஷனது உடம்பாகிய பெரிய சயனத்திலே நெடுங்காலம் யோக நித்திரை செய்தலிவிட்டு (இங்கு) அவதரித்த திருமாலாகிய கண்ணனும், அருந் துயில் எழுந்து - (பிறர்க்கு) அருமையான அறி துயில் நீங்கி எழுந் திருந்து, காலை அருங் கடன் முறையின் செய்தான் - உதயகாலத்திற் செய்தற்குரிய அரிய (ஸ்நாநம், ஸந்தியாவந்தநம் முதலிய) கடமை யான அநுஷ்டானங்களை முறைமைதவருமற் செய்துமுடித்தருளி னான்; (எ - று.)

துரியோதனனை 'இரவில்சற்றும் வருந்துயிலிலாதகண்ணன்' என்றது, அவன் அவ்விராமுழுவதிலும் பெரிய சதியாலோசனையில் இருந்தனனாதலால். அருந்தனென்னும் வடசொல்லுக்கு,—(பிரளய காலத்திலும்) அழிதலில்லாதவனென்று பொருள்; ந + அந்த + அன் என்று பிரிக்க; அந்தம் - இறுதி. பாம்பினுடலுக்குப் போகமென்று வடமொழியிற்பெயர்; இதனை யுடைமைபற்றி, பாம்பு-போகியென்று ஒருபெயர்பெறும். அருந்தம் போகம் பேர் அணை என்பதற்கு எல்லை யில்லாத பேராநந்தத்தை யனுபவித்தற்குரிய சிறந்த திருப்பள்ளி மெத்தை யென்றும் உரைக்கலாம். (246)

187.—தூதுவர் வந்து அழைக்க, கண்ணன் துரியோதன னரண்மனை சேர்தல்.

மாதவனிருந்தகோயில்வந்தடிவணங்கிமன்னன்
றூதுவராழியங்கைத்தோன்றலேதுளபமாலே
யாதவகுலத்தோரேறேயெழுந்தருள்கென்றுனின்றெம்
மேதகுமரசனென்றுமுகுந்தனும்விரைந்துசென்றான்.

(இ - ள்.) (அப்பொழுது), மன்னன் தூதுவர் - துரியோதனனது தூதர்கள், மாதவன் இருந்த கோயில்வந்து - திருமகள்கொழுநனான கண்ணன் எழுந்தருளியுள்ள (விதுரனது) மாளிகைக்கு வந்து, அடி வணங்கி - (கண்ணனது) திருவடிகளை நமஸ்கரித்து, (அவனை நோக்கி), 'ஆழி அம் கை தோன்றலே - சக்கராயுதத்தையேந்திய அழகிய திருக்கையையுடைய அரசனே! துளபம் மாலே - திருத்துழாய்மாலையையுடைய கண்ணபிரானே! யாதவகுலத்தோர் ஏறே - யதுவினது சம்பந்தமான குலத்து அரசர்கட்குச் சிங்கம்போலச் சிறந்தவனே!—இன்று - இப்பொழுது, எம் மேதகும் அரசன் - எங்களது மேன்மையுள்ள அரசனான துரியோதனன், எழுந்தருள்க என்றான் - (நீ தன்னிடம்) வந்தருளவேண்டுமென்று கூறினான்', என்றார் - என்று சொன்னார்கள்; முகுந்தனும் - திருமாலாகிய கண்ணனும், விரைந்து சென்றான் - துரிதமாகப் புறப்பட்டுப் போயருளினான்;

ஆழியங்கை, கையுந் திருவாழியுஞ் சேர்ந்த சேர்த்தியாலாகிய அழகு; கைக்குத் திருவாழி ஆபரணம்போல அழகுகொடுத்து நிற்ப தென்க. தோன்றல் - யாவரினுஞ் சிறந்து விளங்குபவனுக்குத் தொழிலாகுபெயர்; இது - ஆண்பாற் சிறப்புப்பெயர். (247)

188.—துரியோதனன் சபையில் வீற்றிருத்தற் சிறப்பு.

கந்தடுகளிற்றுவேந்தன்கண்ணிலாவரசுங்கங்கை
மைந்தனுமுதலாவுள்ளமன்னருமதிவல்லோருந்
தந்திரவகையுமேவினியிளைஞருந்தன்னைச்சூழ
விந்திரனிருக்கையன்னகோயிலூடினிதிருந்தான்.

(இ - ள்.) (அங்ஙனம் தூதரால் அழைக்கப்பட்டுக் கண்ணன் செல்லுகையில்), கந்து அடு களிறு வேந்தன் - கட்டுத்தறியை முறிக்கின்ற மதயானைச் சேனையையுடைய துரியோதனராசன்,—கண் இலர் அரசும் - திருதராட்டிரனும், கங்கை மைந்தனும் - வீடுமனும், முதல் ஆ உள்ள - முதலாகவுள்ள, மன்னரும் - அரசர்களும், மதி வல்லோரும் - அறிவில்வல்ல அமைச்சர்களும், தந்திரம் வகையும் - சேனையின் பகுப்புக்களும், ஏனை இளைஞரும் - மற்றுந் தம்பிமார்களும், தன்னைச் சூழ - தன்னைச்சுற்றிலுமிருக்க, இந்திரன் இருக்கை அன்ன கோயிலூடு - தேவேந்திரனது இருப்பிடத்தை யொத்த தனது சபா மண்டபத்தின் மத்தியிலே, இனிது இருந்தான் - (கண்ணுக்கு) இனிமையாக வீற்றிருந்தான்; (எ - று.)

இருக்கை - இருப்பிடத்துக்குத் தொழிலாகுபெயர்; கைந் தொழிற்பெயர்விகுதி. தந்திரம் - வடசொல். (248)

189 —கண்ணனை மாத்திரம் உள்ளேவிடுமாறு துரியோதனன் ஏவலாளருக்குக் கட்டளையிடுதல்.

நாமவேலரசரோடுநால்வகைச்சேனையோடு
மாமுகில்வண்ணன்வந்தானென்றனர்வரவுகண்டோர்
வீமலர்த்தொடையினுமவேத்திரத்தவரைநோக்கித்
தாமரைத்தடங்கண்மாயன்றன்னையேவிடுமினென்றான்.

(இ - ள்.) (அப்பொழுது), வரவு கண்டோர்- (கண்ணபிரானது) வருகையைப் பார்த்தவர்கள், 'நாம வேல் அரசரோடும்-(பகைவர்க்கு) அச்சத்தைத்தருகிற வேலாயுதத்தையுடைய பல அரசர்களுடனும், நால்வகை சேனையோடும் - சதுரங்க சைனியத்துடனும், மா முகில் வண்ணன் - கரியமேகம்போன்ற திருநிறமுடைய கண்ணன், வந்தான்—', என்றனர்-என்று (துரியோதனனுக்குக் கூறினர்கள்); (அதுகேட்டு), வீ மலர் தொடையினுனும் - வண்டுகள் மொய்க்கப் பெற்ற பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையையுடைய துரியோதனனும், வேத்திரத்தவரை நோக்கி - (கையிற்) பிரம்பேந்தியுள்ள காவலாளரைப் பார்த்து, தாமரை தட கண் மாயன் தன்னையே விடுமின் என்றான் - 'தாமரைமலர்போன்ற பெரிய கண்களையுடைய

கண்ணனொருவனே மாத்திரமே உள்ளே வரவிடுங்கள்' என்று கட்டளையிட்டான்; (எ - று.)

ஏ - பிரிநிலை; மற்றையரசர்களையுஞ் சேனையையும் விலக்கிற்று. பறவைப்பொதுப்பெயராகிய வி என்னும் வடசொல் - இங்கே சிறப்பாய் வண்டை உணர்த்தி, வி என நீண்டுநின்றது. வேத்ரம்- வடசொல்; பிரப்பங்கோல். (249)

190.—உட்சென்ற கண்ணபிரானுக்குத் துரியோதனன் பொய்யாசனமளித்தல்.

தன்பெருஞ்சேனைநிற்கத்தண்டுழாயலங்கலானும்
இன்புறநகைத்துவேந்தரிருந்தபேரவையினெய்த
மின்புணர்துவசநாகவிடநிகர்மனத்தினனும்
அன்பொடுதிகிரியானையதன்மிசையிருக்கவென்றான்.

(இ - ள்.) (அத்துரியோதனன் கட்டளையை வாயில்காவலாளர் கூறியதனால்), தன் பெருஞ்சேனை நிற்க - தனது பெரியசேனை (உள்ளேசெல்லாது வெளியிலேயே) நிற்க, தண் துழாய் அலங்கலானும் - குளிர்ந்ததிருத்துழாய் மாலையையுடைய கண்ணனும், இன்பு உற நகைத்து - (கண்டவர்க்கு) மகிழ்ச்சி யுண்டாம்படி புன்சிரிப்புச் செய்து, வேந்தர் இருந்த பேர் அவையின் எய்த - (துரியோதனன் முதலிய) அரசர்கள் வீற்றிருந்த பெரிய சபையினுள்ளே செல்ல, (அப்போது), மின் புணர் துவசம் நாகம்விடம் நிகர் மனத்தினனும் - ஒளிபொருந்திய கொடியில் பாம்பையும் அப்பாம்பின் விஷத்தை யொத்த [மிகக்கொடிய] கருத்தையுமுடைய துரியோதனனும், திகிரியானை - சக்கராயுதத்துக்குரிய கண்ணனே, அன்பொடு-அன்புடனே, அதன்மிசை இருக்க என்றான் - 'அந்த ஆசனத்தின்மேல் வீற்றிருப்பாயாக' என்று சொன்னான்; (எ-று.)

மாயவனாகிய தன்னை வஞ்சிக்க நினைத்த பேதைமையை நோக்கிக் கண்ணன் நகைத்தான். விஷம் தவறாமற் கொல்லுங்கொடுமைக்கு உவமை. அதன்மிசை - இரவில் வெகுசிரமப்பட்டு அமைத்த பீடத்தின்மேல். அன்பொடு - அன்புடையான்போலக் காட்டி. வேண்டு மாயின் மிகப் பலரையும் அழிக்கக்கூடிய ஆற்றலிவளக்க 'திகிரியான்' என்றார். (250)

வேறு.

191.—இதுமுதல் 22 கவிகள்-கண்ணன் விசுவரூபங் கொள்ளுதலும், அதனால் மற்றையோர்படும் பாடுகளும் கூறும்.

இறைவனெழிற்கதிர்மணிகளுழுத்தியதவிசினிருத்தலுமே
நிறுநெறெனக்கொடுநிலவறையிற்புகுநெடியவனப்பொழுதே
மறலியெனத்தகுநிருபனியற்றியவிரகமனத்துணரா
முறுகுசினத்துடனடியதலத்துறமுடிகனகத்துறவே,

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) (துரியோதனன் சுட்டிக்காட்டியவண்ணம்), இறைவன் - கண்ணபிரான், எழில் கதிர் மணிகள் அழுத்திய தவிசின் இருத்தலுமே - அழகையும் ஒளியையுமுடைய இரத்தினங்களைப் பதிக்கப்பெற்ற அவ்வாசனத்தில் வீற்றிருந்தவளவில், நெறுநெறென - (அங்கிலவறையைமூடிய மூங்கிற் பிளப்புக்கள்) நெறுநெறு என்று ஒலிபடமுறிய, நிலவறையில் கொடு புக - (அவ்வாசனம் உள்ளிறங்கித் தன்னை) நிலவறையிற் கொண்டுசெல்ல,—நெடியவன்-பெருமையுடைய கண்ணன்,—அப்பொழுதே—, மறலி என தகு கிருபன் இயற்றிய விரகை மனத்து உணரா-(கொடுமையில்) யமனென்று சொல்லத்தக்க துரியோதனராசன் செய்த வஞ்சனையைத் திருவுள்ளத்திலறிந்து, முறுகு சினத்துடன்-மூண்டெழுந்த கோபத்துடனே, அடி அதலத்து உற - (தனது) திருவடி பாதாளத்தில் செல்லவும், முடி ககனத்து உற - (தனது) திருமுடி வானத்திற் செல்லவும், (எ - று.)—'நிமிர்ந்தனன்' என அடுத்த கவியோடு தொடரும்.

நெறு நெறென - ஒலிக்குறிப்பு; சப்தாநுகரணம். துரியோதனனது வஞ்சனையினின்று மாயவன் தப்புதற்கு அவன் சூழ்ச்சியை முன்னமே அறிய வேண்டுவதில்லை யென்பார், 'அப்பொழுதே உணரா' என்றார். மறல் - கொடுமை: அதனை யுடையவன் மறலி; இ - பெயர்விகுதி: இனி, இப்பெயர்க்கு - மறுக்கப்படாதவனென்றும் பொருளுரைக்கப்படும். கொடு நிலவறையில் என எடுத்து, கொடுமையான நிலவறையிலே யென்றும் உரைக்கலாம். 'நெடியவன்' என்றது - திரிவிக்கிரமாவதார கதையைச் சுட்டும்; மேல், 'அடிய தலத்துற முடிககனத்துற' என்பதற்கு ஏற்ப வென்க.

இதுமுதல் முப்பதுகவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று விளங்காய்ச்சீரும், மற்றையைந்தும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (251)

192. அஞ்சினமஞ்சின மென்றுவிரைந்துயரண்டர்பணிந்திடவுந்
துஞ்சினமின்றெனவன்பணியின்கிளர்துன்பமுழந்திடவும்
வஞ்சமனங்கொடுவஞ்சகனின்றிடுவஞ்சனைநன்றிதெனை
நெஞ்சில்வெகுண்டுலகொன்றுபடும்படிநின்றுநிமிர்ந்தனனே.

(இ - ள்.) (கண்ணன்), வஞ்சகன் வஞ்சம் மனம் கொடு இன்று இடு வஞ்சனை இது நன்றுஎனு-('பாண்டவரை இராச்சியம்) வஞ்சித்தவனுகிய துரியோதனன் வஞ்சனையான எண்ணத்தைக்கொண்டு இப்பொழுது செய்த வஞ்சிப்பு நன்றுயிருந்தது' என்றுகருதி, நெஞ்சில்வெகுண்டு - மனத்திற் கோபங்கொண்டு,—(தனது வடிவத்தின் பெருமையை நோக்கி), உயர் அண்டர் அஞ்சினம் அஞ்சினம் என்று விரைந்து பணிந்திடவும் - மேலிடத்திலுள்ள தேவர்கள் பயந்தோம் பயந்தோமென்று கூறி நமஸ்கரிக்கவும், வல்பணியின் கிளர் இன்று துஞ்சினம் என துன்பம் உழந்திடவும் - (கீழுலகிலிருந்து பூமியைத் தாங்கும்) வலிய பாம்புவருக்கங்கள் (அப்பெருவடிவத்தின் பாரமிகு

தியை நோக்கி) இப்பொழுது (சுமக்கலாற்றாது சிதைந்து) இறந்தோ மென்று கருதித் துன்பத்தை மிகுதியாக அடையவும், உலகு ஒன்று படும்படி நின்று நிமிர்ந்தனன்-எல்லாவுலகங்களிலும் பொருந்தும்படி உயர்ந்து நின்றருளினன்; (எ-று.)—என்றது, விசுவரூபங்கொண்டா னென்றதாம்.

அடுக்கு, மிகுதிவிளக்குவது. உயர் அண்டர் - எல்லாப்பிறப்புக் களுள்ளுஞ் சிறந்த தேவருமாம். துஞ்சுதல் - தூங்குதல்; இறத் தலைத் துஞ்சுதலென்பது, மங்கலவழக்கு. கீழ்ப்பாட்டில், 'அடி அதலத்துற முடி ககனத்துற' என்றதற்கேற்ப, முறைப்படுத்தாது, இப்பாட்டின் முதலிரண்டடிகளை மாறுபட நிறுத்தியது, எதிர்நிரனி றைப்பொருள்கோள். அண்டர் - அண்ட கோளத்தின் மேலிடத் துள்ளவர். வஞ்சகர் என்ற வடசொல், சுறு திரிந்தது. இன்று துஞ்சினம் - விரைவுந் தெளிவும் பற்றிய காலவழுவமைதி; வழா நிலையாயின், இன்று துஞ்சுகின்றனம் என நிற்கும். (252)

193. மல்லரரக்கர்குலத்தொடுபப்பரர்வாளினர்வேலினர்போர்
வில்லினரிப்படிதுற்றநிலத்தறைமேவியவீரரெலாந்
தொல்லையிடிக்கயர்வுற்றுயிரிற்றுறுசுடிகையராவெனவே
கல்லெனவுட்கினர்தத்தமுடற்பலகால்கொடுதைத்திடவே.

(இ - ள்.) (அப்பொழுது),—மல்லர் - மற்போர்வீரர்களும், அரக் கர் குலத்தொடு - இராக்கதர் கூட்டமும், பப்பரர் - பப்பரநாட்டு வீரர்களும், வாளினர் - வாள்வீரர்களும், வேலினர் - வேல்வீரர்களும், போர் வில்லினர் - போர் செய்தலில் வல்ல வில் வீரர்களும், (ஆக), இப்படி - இவ்வாறு, துற்ற - நெருங்கியுள்ள, நிலத்து அறைமேவிய வீரர் எலாம் - நிலவறையினுட் பொருந்தியிருந்த வீரர்களெல் லோரும், தத்தம் உடல் பல கால் கொடு உதைத்திட - தங்கள் தங் கள் உடம்பைக் (கண்ணன் தனது) அநேகங் கால்களைக்கொண்டு உதைத்திடுதலால், தொல்லை இடிக்கு அயர்வுற்று உயிர் இற்று உறு சுடிகை அரா என - பழமையான [முதிர்ந்த] பேரிடிக்குச் சோர் வடைந்து உயிரொழிந்து கழிகின்ற உச்சிக்கொண்டையையுடைய பாம்புகள்போல, கல் என உட்கினர் - கல்லென்ற ஒலிபட அஞ்சினர் கள்; (எ - று.)

இடியோசைக்குப்பாம்புகள் அஞ்சியொடுங்கியழியுமென்று நூற் றுணிபு; "விரிதிற நாகம் விடருளதேனும், உருமின்கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்" என்ற நாலடியாரிலுங் காண்க; நிலத்தின் கீழ்ப்பிலத்தில் தங்குதல்பற்றி மல்லர் முதலியோர்க்கு நாகங்களும், இவரையஞ்சுவித்து அழித்தல் பற்றித் திருமால் திருவடிகளுக்கு இடியும் உவமையாதற்கு மிக ஏற்கும். கல்லென என்றது, அப் பொழுது அவர்கள் அச்சத்தால் நடுங்கி வாய்குளறிப் பேரிரைச் சலிட்டதை. பல கால் - விசுவரூபத்திற்கொண்டவை. துற்ற - இறந்தகாலப் பெயரெச்சம்; துறு - பகுதி; இரட்டித்துக்காலங் காட் டிற்று. தொல்லை யிடி - துன்பந்தரும் இடியுமாம். (253)

194. அற்புதபங்கயநற்பதமுந்தலினக்குழியின்புடையே, சற்ப தலந்தொறுமற்றுவிழுந்தனதத்தநெடுந்தலைபோய், முற்பவனன் பொர முக்குவடுந்துணிபட்டுமுடங்கியபொன், வெற்பெனநின்றனர் வெற்றுட லங்கொடுவிற்படைகொண்டவரே.

(இ - ள்.) அ குழியின் புடையே - அப்பிலவறையின் உள்ளி டத்திலே, வில் படை கொண்டவர் - வில்லாகிய ஆயுதத்தை யேந்தி நின்ற வீரர்கள், அற்புத பங்கயம் நல் பதம் உந்தலின் - ஆச்சரியகர மான தாமரைமலர் போன்ற அழகிய (கண்ணனது) திருவடிகள் உதைத்தலால், தத்தம் நெடுந்தலை அற்று போய் சற்ப தலம் தொறும் விழுந்தன - தங்கள் தங்களது பெரியதலைகள் அறுபட் டுப் போய் நாகங்கள் வசிக்கிற இடமாகிய அப்பாதாளலோகம் முழு வதிலும் விழுந்திட்டனவாக,—வெறு உடலம் கொடு - (தலையில் லாத) [உயிரற்ற] வெற்றுடம்புகளை மாத்திரங்கொண்டு, முன்பவனன் பொர முக் குவடும் துணிபட்டு முடங்கிய பொன் வெற்பு என நின்றனர் - முன்னே வாயுதேவன் மோதுதலால் மூன்று சிகரங்கள் அறுபட்டு அழகொழிந்த மேருமலை போல நின்றார்கள்; (எ - று.)

மூன்றுமடியிற் குறித்த வரலாறு:—முன்னொருகாலத்தில் வாயு தேவனுக்கும் ஆதிசேஷனுக்கும் தமக்குள் யார் பலசாலியென்று விவாத முண்டாக, அதனைப் பரீட்சித்தறியும் பொருட்டு, வாயு தேவன் மேருமலையின் சிகரத்தைப் பெயர்த்துத்தள்ளுவதென்றும் ஆதிசேஷன் அது பெயரவொட்டாமற் காத்துக் கொள்ளுவ தென்றும் ஏற்பாடு உண்டாக்கி, அங்ஙனமே இருவரும் தேவர்முதலி யோரது முன்னிலையில் தத்தம் வலிமையைக் காட்டத் தொடங்கிய பொழுது, ஆதிசேஷன் தனது ஆயிரம் படங்களாலும் மேருமலை யின் ஆயிரஞ் சிகரங்களையும் கவித்துக்கொண்டு பெயரவொட்டாமல் வெகுநேரங்காக்க, பின்னர் வாயுதேவன் தன்வலிமையால் அம்மலைச் சிகரங்களில் மூன்றைப்பெயர்த்துக் கொண்டுபோய்த் தென் திசை யில் தள்ளிவிட்டானென்பது.

பிறவிப்பிணிக்கு மருந்தாகலின், 'நற்பதம்' என்றார்; "வாலறிவ னற்றாள்" என்றார் திருவள்ளுவனாரும். வெறுமை + உடல் = வெற்று டல்; பண்புத் திரிபு. பெருவடிவத்துக்கு மலையும், அதன் தலைக்குச் சிகரமும், அதனைப் போக்கிய எம்பிரான் திருவடிக்கு வாயுதேவனும் உவமை. (254)

195. மேல்வலியுற்றெதிர்வீசியெழிற்கருமேகநிறத்திருமால், கால் விசையிற்படமோதுதலிற்பொருகாமர்புயத்துணைபோய், நீலநிறக்கவின் வாசவன்வச்சிரநீள்படையிற்சிறகீர், மால்வரையொத்தனர்வாகை பெறக்கதிர்வாள்களெடுத்தவரே.

(இ - ள்.) வாகை பெற கதிர் வாள்கள் எடுத்தவர் - (கண்ண னைச் சிறைபிடித்து) வெற்றியைப் பெறும்பொருட்டு ஒளியை யுடைய [அல்லது கூர் நுனியுள்ள] வாளாயுதங்களை யேந்திநின்ற வீரர்கள்,—எழில் கருமேகம் நிறம் திருமால் - அழகிய காளமேகம்

போன்ற திருமேனி நிறத்தையுடைய கண்ணபிரான், மேல் - தங்கள் மீது, வலி உற்று - மிகவலிமை கொண்டு, எதிர் விசி - எதிராகவீசி, கால் - திருவடிகளால், விசையின்பட - உக்கிரமாகப்படும்படி, மோது தலின் - தாக்குதலினால், பொரு காமர் புயம் தூண போய் - போர் செய்தற்கு உரிய அழகிய (தமது) தோள்களிரண்டும் அற்று, நீலம் நிறம் கவின் வாசவன் நீள் வச்சிரம் படையின் சிறகு ஈர் மால் வரை ஒத்தனர் - நீலநிறத்தையும் அழகையுமுடைய இந்திரனால் பெரிய தனது வச்சிராயுதத்தைக்கொண்டு இறகறுக்கப்பட்ட பெரிய மலை களைப் போன்றனர்; (எ - று.)

இந்திரன் வச்சிராயுதத்தால் மலைகளின் சிறகறுத்த வரலாறு:— முன்னொரு காலத்தில் மலைகளெல்லாம் பறவைகள்போல இறகுடை யனவாயிருந்து அவற்றால் உலகமெங்கும் பறந்துதிரிந்து பலவிடங் களின்மேல் உட்கார்ந்து அவ்விடங்களையெல்லாம் பிராணிகளுடனே அழித்துவர, அதனை முனிவர் முதலியோராலறிந்த தேவேந்திரன், சினந்துசென்று தனது வச்சிராயுதத்தால் அவற்றின் இறகுகளை அறுத்துத்தள்ளிவிட்டா னென்பதாம்.

இந்திரன் நீலநிறமுள்ளவனுதலை "வில்லாலொளிர் மேகமெனப் பொலிவான்" என்ற கம்பராமாயணத்தாலும் அறிக. வாகையென் னும் மரத்தின் பெயர், அதன் மலரினுலாகிய மாலைக்கு இருமடியாகு பெயர். வாகை - காட்டுவாகையென்னும் மரம்: வாகைப் பூமாலை பகைவரை வென்றோர் சூடுவதாதலை, "வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம், வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கா, தெதிரூன்றல் காஞ்சி யெயில் காத்தல் நொச்சி, யதுவளைத்தலாகு முழிஞை யதிரப், பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர், செருவென்றது வாகையாம்' என்பதனாலும் அறிக. மலைகள்-பெரு வடிவுகொண்ட வீரர்க்கும், அம்மலைச் சிறகுகள் அவர்களது கைக ளுக்கும், கருநிறமுடைய இந்திரன் - கருநிறமுடைய கண்ணனுக்கும், தவருது பகைவரை யழிக்கும் இந்திரனது வச்சிராயுதம் அப்படிப் பட்ட எம்பிரான் திருவடிக்கும் உவமை. ஈர்வரை-வினைத்தொகை.

198. வெயில்விடுபைத்தலையமளிமிசைத்துயில்விபுதர்களுக்கரியோன்
பயிலவுதைத்தலினவர்களுரத்திடைபதமலர்பட்டுருவா
மயில்கடவிக்கடவுளர்பகையைக்கதிர்மகுடமுருக்கியவேள்
அயில்கொடுகுத்தியநெடுவரையொத்தனரயில்களெடுத்தவரே.

(இ - ள்.) அயில்கள் எடுத்தவர் - வேலாயுதங்களை யேந்தி நின்ற வீரர்கள்,—வெயில் விடு பை தலை அமளிமிசை துயில்விபுதர் களுக்கு அரியோன் பயில உதைத்தலின்-(மாணிக்கத்தால்) ஒளியை வீசுகிற படத்தையுடைய தலைகளையுடைய (ஆதிசேஷனுடைய) சயன த்தின்மேல் யோக நித்திரை செய்தருள்பவனும் தேவர்கட்கு (அறி தற்கு) அருமையானவனுமாகிய கண்ணபிரான் உறுத்தும்படி உதைத்திடுதலால்,—அவர்கள் உரத்திடை பதம் மலர் பட்டு உருவா -தந்தமது மார்பினிடையிலே (அப்பிரானது) தாமரைமலர் போலுந் திருவடிபட்டு ஊடுருவித்துளைக்கப் பெற்று, (அதனால்), மயில் கடவி

கடவுளர் பகையை கதிர்மகுடம் முருக்கிய வேள் அயில் கொடுகுத்திய நெடுவரை ஒத்தனர்-மயில்வாகனத்தை யேறிச்சென்று தேவர்களது பகைவர்களாகிய (சூரபதுமன் முதலிய பல) அசுரர்களை ஒளி பொருந்திய கிரீடத்தையுடைய தலைகளை யழித்திட்ட சுப்பிரமணிய மூர்த்தியால் வேலாயுதத்தைக்கொண்டு துளைக்கப்பட்ட பெரிய (கிரௌஞ்ச) மலையை ஒத்தார்கள்; (எ - று.)

சிவபிரானது இளைய குமாரனுய்த் தேவர் வேண்டுகோளால் அசுரர்களை யொழித்தற்குத் தேவசேனாதிபதியாம் பொருட்டு அவதரித்த முருகக்கடவுள், சூரபதுமனைப் பொருது அழித்தற்குச் செல்லும் வழியிடையே, கிரௌஞ்சனென்னும் அசுரன் பெரிய மலைவடிவங் கொண்டு அவனை நலிவதாக எதிர்வந்து நிற்க, அதன்மேல் அப்பெருமான் தனது தெய்வத்தன்மையுள்ள வேற்படையை யேவி அதனைத் துளைத்து அழித்திட்டன னென்பது பின்னிரண்டடிகளிற்குறித்த கதை; பரசுராமனும் சுப்பிரமணியனும் பரமசிவனிடம் வில்முதலிய ஆயுதப் பயிற்சியைச் செய்து முடித்த பின்பு, இவர்களுள் உயர்வு தாழ்வு அறியும் பொருட்டுச் சிவபிரான் உமாதேவியின் முன்னிலையிலே இவர்களுக்குக் கிரௌஞ்ச மலையைச் சுட்டிக்காட்டி 'இதனைத் துளைத்திடும்' என்று நியமிக்க, பரசுராமன் அம்பெய்து அதனைத் துளையிட்டுக்காட்ட, முருகக்கடவுள் வேலாயுதத்தை விசியெறிந்து அம்மலையைப் பிளந்திட்டனனென்றும் கதை கூறப்படும்.

துயில் அரியோன் என இயையும். விபுதர் - விசேஷபுத்திமான்கள்: இதுபற்றி, தேவர்க்குத் தமிழில் 'புலவர்' என்று ஒரு பெயர். மகுடம் - சிரசுக்குத் தானியாகுபெய்சென்றுவது, கதிர்மகுடம் - வேற்றுமைத்தொகை யன்மொழியென்றுவது கொள்க. முருக்கிய - முருங்கிய என்பதன் பிறவினை; முருங்குதல் - அழிதல். வேலென்னும் ஆண்பாற் சிறப்புப் பெயர்க்கு - விரும்பப்படும் அழகுடையவனென்று காரணப்பொருள் கூறலாம்; செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டதென்க. அச்சொல் - முன்னேவந்த அடைமொழியால், காமவேளை விலக்கி நின்றது. (256)

197. மின்சுடிகைப்புயகங்கள்வெருக்கொளும்வெங்கருடக்கொடியோன்,வன்பதபற்பநகங்கொடெடுத்துயர்வண்கனகத்திடலான், முன்புவனத்திடைவந்துகவிக்கிறைமொய்ம்புணரப்புகல்போ, தென்புமலைக்குறுபண்பையடுத்தனரெஞ்சியபப்பரரே.

(இ - ள்.) மின் - (மாணிக்கத்தின்) ஒளி பொருந்திய, சுடிகை - உச்சிக் கொண்டையையுடைய, புயகங்கள் - பாம்புகள், வெருகொளும் - அச்சங் கொள்ளுதற்குக் காரணமான, வெம் கருடன் - வெவ்விய கருடப் பறவையின் வடிவத்தை யெழுதிய, கொடியோன்-துவசத்தையுடைய கண்ணபிரான், பற்பம் பதம் வல் நகம் கொடு - தாமரைமலர் போன்ற திருவடிகளின் வலிய நகத்தினால், எடுத்து - தூக்கி, உயர் வள் கனகத்து இடலால் - உயர்ந்த பெரிய ஆகாயத்திலே வீசியெறிதலால், எஞ்சிய பப்பரர் - அழிந்த பப்பர நாட்டு வீரர்கள், முன்பு - முன்னே [ஸ்ரீராமாவதார காலத்திலே], வனத்திடை வந்து - தண்ட

காரணியத்திலே வந்து, கவிக்கு இறை மொய்ம்பு உணர புகல் போது - வாநரங்களுக்குத் தலைவனை சுக்கிரீவன் (இராமபிரானது) வலி மையை அறிவதற்குக் கூறியபொழுது, என்பு மலைக்கு உறு பண்பை- (துந்துபியின்) எலும்பு மலைக்கு நேர்ந்த தன்மையை, அடுத்தனர் - ஒத்தார்கள்; (எ - று.)

பின்னிரண்டடியிற் கூறியவரலாறு:—இராமபிரான் அனுமான் மூலமாகச் சுக்கிரீவனோடு சிநேகஞ்செய்து அவனது மனைவியைக் கவர்ந்து கொண்டு அவனை இராச்சியத்தினின்று துரத்திவிட்ட அவனது அண்ணனை வாலியை அவன் வேண்டுகோளால் தாம் கொல்வதாக வாக்குத்தத்தஞ் செய்ய, வாலியைக் கொல்லவல்ல வலிமை இவருக்கு உளதோ வென்று சுக்கிரீவன் சிறிது சந்தேகிக்க, அந்த ஐயத்தை அகற்றுதற்பொருட்டு ஸ்ரீராமமூர்த்தி, அங்கே ஒரு பால் மலைபோலக் குவிந்துகிடந்த (முன்பு வாலியாற் கொல்லப்பட்ட) துந்துபியென்னும் பேரரசனது உடம்பின் என்புக்குவியலை அச் சுக்கிரீவன் கருத்தின்படி தமது கால் விரலால் எடுத்தெறிந்து வெகு தூரத்தில் வீசி அவனுக்கு நம்புதலுண்டாக்கினரென்பதாம்.

கிருஷ்ணவதாரமூர்த்திக்கு இராமாவதாரமூர்த்தியையும்,கொடிய பப்பரருக்குக் கொடிய அரக்கனென்பையும் உவமை கூறினர். பாம் பைக்கருடன் எளிதில் அஞ்சுவித்தல்போல, பாம்புக்கொடியோனைக் கருடக் கொடியோன் எளிதில் அஞ்சுவிக்கவல்லவனென்பார், இங்ங னங் கூறினர். பத பற்பம் - முன்பின்னகத்தொக்க உவமத்தொகை. பற்பம் - பத்மம் என்னும் வடமொழியின் திரிபு; 'பற்பநாபன்' என் பதிலுங் காண்க. (257)

198. மைந்துபடைத்துயர்பஞ்சவர்சொற்படிவந்தமலர்க்கழலால்
உந்தியுதைத்துடலம்புதையப் பிலமொன்றியொளித்திடலால்
அந்தணன்முற்பகல்வந்துபுடைத்திடவஞ்சிநிலத்திடைவீழ்
விந்தமொடொத்தனர்வன்குழியிற்றிகழ்வெங்கணரக்கருமே.

(இ - ன்.) மைந்து - வலிமையை, படைத்து - பெற்று, உயர் - சிறந்த, பஞ்சவர் - பாண்டவர்களது, சொல் படி - சொல்லின்படி, வந்த - தூது வந்த, மலர் கழலால் - தர்மரைமலர்போன்ற திருவடி களைக்கொண்டு, உந்தி உதைத்து - (கண்ணபிரான்) தள்ளி உதைத் தலால், உடலம் புதைய - உடம்புகள் அழுந்திடும்படி, பிலம் ஒன்றி ஒளித்திடலால் - நிலவறையினுட் படிந்து மறைந்துவிடுதலால், வல் குழியில் திகழ் வெம் கண் அரக்கரும் - வலிய நிலவறைப் பெரும் பள்ளத்திலே விளங்கிய பயங்கரமான கண்களையுடைய இராக்கத ரெல்லோரும்,—அந்தணன் - அகத்தியமுனிவன், முன் பகல் - ஆதி காலத்தில், வந்து புடைத்திட - அருகில்வந்து அழுத்தியிட, அஞ்சி- பயந்து, நிலத்திடை வீழ் - பூமியிலே யொடுங்கிய, விந்தமொடு - விந்தியமலையுடனே, ஒத்தனர் - போன்றார்கள்; (எ - று.)

பின்னிரண்டடியிற் குறித்த வரலாறு:—முன்னொரு காலத்தில் விந்தியமலை மேரு முதலிய எல்லா மலைகளினும் தான் உயரவேண்டு

மென்று கருதி, ஆகாயத்தையளாவி உயர்ந்து, சூரியன் முதலிய கிரகங்களும் நட்சத்திரங்களுஞ் செல்லுகின்ற வழியை யெல்லாம் மறித்துநின்றபொழுது, தேவர் முனிவர் முதலிய யாவரும் வந்து அதனீ யடக்கியருளவேண்டுமென்று அகஸ்தியரைப் பிரார்த்திக்க, அவர் அங்கு எழுந்தருளி, அப்பொழுது தம்மைக்கண்டு வணங்கி நின்ற அம்மலையை 'இனி யர்ன் வடதிசையிலிருந்து தென்திசைக்குச் சென்று மீண்டு வருமளவும் இவ்வாறே குறுகிக் கிடப்பாய்' என்று சொல்லிக் கையாலமைத்து அடக்கியருளி அம்மலையின்மேலேறி அப்பாற் சென்றன ரென்பது.

உபமேயத்தில் 'மலர்க்கழலாலுந்தி' என வருதலால், உபமானத்திலும் 'புடைத்திட' என்பதற்கு - காலாலேநிமிதிக்க எனப் பொருள் கொள்ளுதல் பொருத்தம். "யோகமுறு பேருயிர்கள்தாம் உலைவுறும, லோகமெறியாதென மிதித்து அடியினேறி, மேகநெடுமாலை தவழ்விந்தமெனும் விண்தோய், நாகமது நாகமுற நாகமென நின்றான்" என்றார் கம்பரும். விந்தம்-விந்த்யம்: வடசொற்றிரிபு. 'ஒடு' என்னும் மூன்றாமுருபு, ஒப்புப்பொருளில் வந்தது. அந்தணன் என்ற பொதுப் பெயர், இங்கே இடம்நோக்கிச் சிறப்பாக அகத்தியரைக் குறித்தது. வெங்கண்-கொடுந்தன்மையுமாம். (258)

189. அந்தவிடத்தெறிபம்பரமொத்துடலஞ்சுழலச்சுழலக்
குந்தியுறித்தயிருண்டவர்பொற்கழல்கொண்டுசுழற்றுதலான்
முந்தமரர்க்கமுதந்தரமைக்கடன்முன்சுழலச்சுழலு
மந்தரமொத்தனர்குந்தமெடுத்தெதிர்வந்துமலிந்தவரே.

(இ - ள்.) அந்த இடத்து - அவ்விடத்திலே, எறி பம்பரம் ஒத்து-வேகமாகவீசியெறியப்பட்ட பம்பரத்தைப் போன்று, உடலம் சுழல சுழல - உடம்பு இடைவிடாது மிகச்சுழலும்படி, குந்தி உறி தயிர் உண்டவர் - (உயரமான விடத்திலேறி) உட்கார்ந்து உறியில் வைத்த தயிர்களையெல்லாம் (இளமையில்) அமுதுசெய்தருளிய கண்ணபிரான், பொன் கழல் கொண்டு - (தமது) அழகிய திருவடிகளைக்கொண்டு, சுழற்றுதலால்-சுழலச்செய்தலால், குந்தம் எடுத்து எதிர் வந்து மலிந்தவர் - எறியீட்டிகளை யெடுத்துக்கொண்டு எதிரில் வந்து போர்செய்யவுற்ற வீரர்கள்,—முந்து - முன்னொருகாலத்திலே, அமரர்க்கு அமுதம் தர - தேவர்களுக்கு அமிருதந் தருகையில், மை கடல் முன்-கரிய பாற்கடலிலே, சுழல - (அக்கடல் வெள்ளஞ்) சுழிக்கும்படி, சுழலும்-(தான்) சுழன்ற, மந்தரம்-மந்தர மலையை, ஒத்தனர் - போன்றார்கள்; (எ - று.)

இதிற்குறித்த கதை, பிரசித்தம். திருப்பாற்கடல் வெளுத்த நிறத்ததாயினும், திருமாலினதுதிருமேனியின் நிழலீட்டாலேகறுத்த நிறத்ததாகுதலால் 'மைக்கடல்' என்றார்; "நீலக்கடலுள் நெடுங் காலம் கண்வளர்ந்தான்" "கருந்தண்மாகடற் கண்டுயின்றவன்", "நீலக்கடல் கடைந்தாய்" என்றார் பெரியாரும்: "மையாழியிற்றுயிலு மாலீனயான்" எனப் புகழேந்திப்புலவர் கூறியதுங்காண்க; வட மொழியிற் போஜராஜனும் இவ்வாறு கூறுவன். இனி, இருண்

டுள்ள நிலவறைக்கு உவமையாதல் நோக்கி, மைக்கடல் என இல் பொருளுவமை கூறியதாகவும் கொள்ளலாம். சுழலச் சுழல-ஆடுக்கு, இடைவிடாமை பற்றியது. பொற்கழல் - பொன்னுலாகிய வீரக் கழலையணிந்த பாத மெனினுமாம். குந்தம்-வடசொல். (259)

200. முட்டியதொல்குருதிக்கடன்மல்கலின்முட்டிகொள்பல்விரலால்
நெட்டுடலம்வகிர்பட்டதனுள்விழநித்தர்செய்கொல்விணையான்
மட்டறவல்விறலுற்றெதிர்செல்கவிமைக்கடலெல்கியிலே
யிட்டனகல்வரையொத்தனர்வெல்கழலெக்குலமல்லருமே.

(இ - ள்.) முட்டிய தொல் குருதி கடல் மல்கலின் - (அந்த நில வறை முழுவதிலும்) பாய்ந்த பழமையான இரத்தவெள்ளம் நிறைந்த தனுல், முட்டிகொள் பல் விரலால் நெடுஉடலம் வகிர்பட்டு அதனுள் விழ - கைப்பிடியாகக்கொண்ட (கண்ணனது) பலவிரல்களால் நீண்ட தம்தம் உடம்பு பிளவுபட்டு அக்குருதிக் கடனுலிள்ளே விழும்படி, நித்தர் செய் - ஆதிமத்தியாந்தரகிதனுன அக்கண்ணபிரான் செய் திட்ட, கொல் விணையால்-கொலைத்தொழிலால்,—வெல் கழல் ஏ குலம் மல்லரும் - வெல்லுதற்கடையாளமான வீரக்கழலையுடைய சிறந்த மல்லர்கள்யாவரும்,—மட்டு அற வல் விறல் உற்று எதிர்செல் கவி - அளவில்லாமல் மிகுந்த வலிமை கொண்டு (இராவணனை) எதிர்த்துச் சென்ற குரங்குகள், மை கடல் எல்கியிலே இட்டன - கரியகடலிலே (அணைகட்டுதற்குப்) போகட்டனவாகிய, கல்வரை-கல்மயமான மலை களோ, ஒத்தனர் - போன்றார்கள்; (ஏ - று.)

சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனை வெல்லுதற்கு இராம பிரான் சேனையாக்கூட்டிக்கொண்டுபோன வானரவீரர்கள் தென்கட லில் அணை கட்டுதற்பொருட்டுப் பலமலைகளைக்கொணர்ந்து கடலில் இட்டனரென்பது கதை. இரத்தவெள்ளத்துக்கு உவர்நீர்க்கடலும், மல்லர்க்கு மலைகளும் உவமை. முட்டி - முஷ்டி: நித்தர் - நித்தியர்: வடசொற்கள். (260)

201. எப்புவிநிற்பனவெக்கிரிநிற்பனவெக்கடனிற்பனவென்றிப் புவனத்துயிர்முற்றுமயக்குறவுட்கினரெய்த்திமையோர், மைப்புயலொ த்தொளிர் பச்சைநிறத்தினன்வர்க்கமலர்க்கழலா, லொப்பறமட்குழி யுற்றவரைப்படவொத்திமித்தலுமே.

(இ - ள்.) மை - கரிய, புயல் - மேகத்தை, ஒத்து - போன்று, ஒளிர் - விளங்குகின்ற, பச்சை நிறத்தினன் - பசிய திருநிறத்தை யுடையவனை கண்ணபிரான், வர்க்கம் மலர் கழலால் - பலவாகிய தாமரைமலர்போன்ற திருவடிகளால், ஒப்பு அற - உவமையில்லாத படி, மண் குழி உற்றவரை - நிலவறைப்பெரும்பள்ளத்திற் பொருந் திய வீரர்களை, பட - அழியும்படி, ஒத்து மித்தலும் - அழுத்தி மிதித்தவளவிலே,—இ புவனத்து உயிர் முற்றும்-இந்த நிலவுலகத் திலுள்ள பிராணிகளெல்லாம்,—'எ புவி நிற்பன - (இப்பொழுது அழியாமல்) எந்தவுலகங்கள் நின்றிடுவன? எ கிரி நிற்பன - எந்த மலைகள் (சலியாது) நிலைநிற்பன? எ கடல் நிற்பன - எந்தக்கடல்கள்

(கரைபுரளாது) நிலைநிற்பன?,' என்று - என்றவாறு, மயக்குஉற - திகைப்பை யடைய, இமையோர் - தேவர்களும், எய்த்து-சோர்ந்து, உட்கினர் - அஞ்சினார்கள்; (எ - று.)

வர்க்கம் - கூட்டம்: வடசொல். ஒத்திமிதித்தல்-தாள அடைவு பட மிதித்தலுமாம். 'ஒற்றி' எனவும் பாடம். (261)

202. கொண்டன்முழக்கெனவம்புவியைக்கடல்கொண்டெழு
தற்கெதிருஞ், சண்டமுழக்கெனவன்பவனக்கிளை தந்தமுழக்கெனவே,
வண்டினமொய்த்தெழுவண்டுளவத்தொடை வண்டுவரைத்திருமால்,
அண்டமுகட்டுறநின்றுசிரித்தனனங்கணைருப்பெழவே.

(இ - ள்.) (அப்பொழுது),—வண்டு இனம் - வண்டுகளின் கூட்டங்கள், மொய்த்து எழு - நெருங்கிப் பறக்கப்பெற்ற, வள் துள வம்தொடை - அழகிய திருத்துழாய் மாலையையுடைய, வள் துவரை திருமால் - வளப்பங்களையுடைய துவாரகாபுரிக்கு அதிபதியான சிறந்த கண்ணபிரான்,—கொண்டல் முழக்கு என - மேகத்தின் இடி முழக்கம்போலவும், 'அம்புவியை கடல்கொண்டு எழுதற்கு எதிரும் சண்டம் முழக்குஎன - அழகிய நிலவுலகத்தை (ப்பிரளய)க்கடல் தனக்கு உள்ளாக்கிக்கொண்டு மேற்கிளர்தற்குப் பொங்குகையில் உண்டாகின்ற பயங்கரமான ஆரவாரம்போலவும், வல் பவனம் கிளை தந்த முழக்குஎன - வலியகாற்றின் வருக்கத்தாலுண்டாகிற பேரொலிபோலவும், அம் கண் நெருப்பு எழ - அழகிய தனது கண்களிலின்று நெருப்பு உண்டாக, அண்டம் முகடு உற நின்று சிரித்தனன்-அண்டகோளத்தினது மேல் முகட்டையளாவும்படி உயர்ந்து நின்று நகைத்திட்டான்; (எ - று.)

இங்கே, சிரிப்பு - பெருவெகுளிபற்றியது; இது வீராட்டகாச மெனப்படும். சண்டம் - கொடுமை. இப்பாட்டில் வந்த உவமை மூன்றனுள், இடையிற்கூறிய கடலைப் பிரளயக்கட லென்றதனால், அதுவே உபலக்ஷணமாக, கொண்டல் பவனம் என்பனவற்றையும் பிரளயகாலத்தில் பெருமழை பொழிந்து உலகையழிக்க வரும் மேகங்களாகவும், அக்காலத்து உலகையழிக்கும் பெருஞ் சுழல்காற்றுகவுங் கொள்க. பவனக்கிளை என்றது - ஸப்த மருத்துக்களையும். (262)

203. ஒன்றுபடக்கடலம்புமுகப்பனவும்பர்குலத்தருவுஞ்
சென்றுமுறிப்பனவெண்டிசையிற்குலசிந்துரமெற்றுவவெண்
குன்றமுடைப்பனபைம்பொனுரக்கிரிகொண்டுதிரிப்பனவால்
அன்றுதனித்தனிநின்றுமலைத்தருளங்கைகள்பற்பலவே.

(இ - ள்.) (அந்த விசுவரூபமூர்த்திக்கு), அன்று - அக்காலத்தில், தனி தனி நின்று மலைத்தருள் - வெவ்வேறுக நின்று போர் செய்கிற, அம் கைகள பல பல - அழகிய மிகப்பலவான திருக்கைகள்,—கடல் அம்பு ஒன்று பட முகப்பன - கடல்நீரை முழுவதும் ஒருங்கே மொண்டெடுக்கவல்லனவும், உம்பர் குலம் தருவும் சென்று முறிப்பன - மேலுலகத்திலுள்ள தேவர்களது சிறந்த கல்பகவிருட்சங்களையும் அளாவிப்போய் முறிக்கவல்லனவும், எண் திசையில்

குல சிந்துரம் எற்றுவ - எட்டுத் திக்குக்களிலுமுள்ள சிறந்த திகீல யானைகளை அப்பால் தள்ளவல்லனவும், எண்குன்றம் உடைப்பன - எட்டுக் குலமலைகளையும் உடைக்கவல்லனவும், பைம் பொன் உரம் கிரி கொண்டு திரிப்பன - பசும்பொன்மயமான வலிமையையுடைய மகா மேருமலையை எடுத்துச் சுழற்றவல்லனவுமாக இருந்தன; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

அஷ்டகுலபருவதங்களாவன - கைலாசம், இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்பன. பைம் பொனுரக்கிரி என வருதற்கு ஏற்ப 'வெண்குன்றம்' என எடுத்து-வெள்ளிமலையான கைலாசமென்று உரைத்தலுமொன்று. கொடியவர்களைக் கொல்லுதல் நல்லவர்களைப் பாதுகாத்தற்காதலால், 'மலைத்தருள்' என்றது. (263)

204. துகிரிதழ்வைத்துநல்வலைகண்முழக்கினதொடர்சிலகைத்தல
அகிலம்வெருக்கொளவரிமழுவெற்றினவடுசிலகைத்தலமே[மே
புகலும்வடிக்கணியுதணமெடுத்தனபொருசிலகைத்தலமே
திகழ்விசயத்தொடுசிலைகள்குனித்தனசிலசிலகைத்தலமே.

(இ - ள்.) தொடர் சில கை தலம் - (ஒன்றையொன்று) தொடர்ந்த (விசுவரூபமூர்த்தியினது) சில கைகளின் இடங்கள், துகிர் இதழ் - பவழம் போலச் சிவந்த வாயிலே, நல் வலைகள் - சிறந்த (வலம்புரிச்) சங்கங்களை, வைத்து முழக்கின - வைத்து ஒலிப்பித்தன; அடு சில கை தலம் - (பகைவரைக்) கொல்லவல்ல சில கைகள், அகிலம் வெரு கொள - உலகமுழுவதும் அஞ்சும்படி, அரி மழு எற்றின - துணிக்கவல்ல கோடரிலிப்படையை வீசின; பொரு சில கை தலம் - போர் செய்யவல்ல சில கைகள், புகலும் - (சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற, வடி கணை - கூர்மையான அம்புகளையும், உதணம் - கூர்மை குறைவான மொட்டம்புகளையும், எடுத்தனஏந்தின; சில சில கை தலம்—, திகழ் விசயத்தொடு - விளங்குகின்ற வெற்றியுடனே, சிலைகள் குனித்தன - விற்களை வளைத்தன; (எ-று.)

உதணம் - அலகில்லா அம்பு; இனி, 'உவணம்' எனப்பாடங் கொண்டு கருடாஸ்திர மென்றும், அரிமழு என்பதற்கு - அனல்வடிவமான எரியிரும்புப்படையென்றுமாம். வடிக்கணை - வடித்தலையுடைய அம்பு; வடித்தல் - கெருப்பில் வைத்துக் காய்ச்சியடித்து அராவிக்கூராக்குதல். (264)

205. வெங்கணையத்திரள்குந்தநிறப்படைவெம்புமுலக்கைகள்போர்
பொங்கியவச்சிரமுந்துகலப்பைகள்புண்கழுவர்க்கமயில்
எங்குமலைத்தெழுசெஞ்சுரிகைத்திரடண்டமிவற்றினெடுந்
தங்கியசக்கரபந்திதரித்தனதண்பலகைத்தலமே.

(இ - ள்.) தண் - குளிர்ந்த [காண்டற்கு இனிய], பல கை தலம் - அநேகம் கைகள்,—வெம் கணையம் திரள் - கொடிய வளைதடிகளின் கூட்டமும், நிறம் குந்தம் படை - ஒளியையுடைய கைவே

லாகிய ஆயுதங்களும், வெம்பும் உலக்கைகள் - பயங்கரமாகவுள்ள உலக்கைகளும், போர் பொங்கிய வச்சிரம் - போர்த்தொழிலில் மிகுந்த வச்சிராயுதங்களும், உந்து கலப்பைகள் - செலுத்தப்படுகிற கலப்பைகளும், புண் கழு வர்க்கம் - (பகைவரது) தசை தோய்ந்த இருப்பு முட்படைகளின் கூட்டமும், அயில் - பெருவேல்களும், எங்கும் மலைத்து எழு செம் சுரிகை திரள் - எவ்விடத்தும் போர்செய்து சிறக்கின்ற (குருதி தோய்தலால்) சிவந்த உடை வாள்களின் கூட்டமும், தண்டம் - கதாயுதங்களும், இவற்றினெடும் - (ஆகிய) இப்படைகளுடனே, தங்கிய சக்கரம் பந்தி - தனக்கு ஏற்ற சக்கராயுதங்களின் வரிசைகளையும், தரித்தன - தாங்கியிருந்தன; (எ - று.)

சக்கரபாணியாதலால், 'தங்கியசக்கரபந்தி' என்றார். பந்தி, சுரிகை - பங்க்தி, க்ஷுரிகா என்பவைகளின் திரிபு. முந்து எனப் பதம் பிரித்து, சிறந்த என்றும், அலைத்து எனப் பதம் பிரித்து, வருத்தி என்றும் உரைப்பினுமாம். (265)

206. மேலெழுமங்கதிர்வாளுறைபோம்படிவீசினவான்புடையே
தோலினமேந்தினநீள்கவணேந்தினசோரிகள்சோர்ந்திடவே
ஞாலமெலாம்பொருதோமரம்வாங்கினநாவொருமூன்றனவாஞ்
சூலமொடோங்கினபாசமொடோங்கினசூழ்சிலபூங்கரமே.

(இ - ள்.) சூழ் சில பூ கரம் - சுற்றிலுமுள்ள சில அழகிய கைகள், —மேல் எழும் அம் கதிர் வாள் - மேலே எழுந்து விளங்குகின்ற அழகிய ஒளியையுடைய வாளாயுதங்களை, உறைபோம்படி - உறைகழியும்படி, வீசின - எடுத்து மேலெறிந்தன; வான் புடையே - ஆகாயத்தினிடத்தே [மிகஉயரத்திலென்றபடி], தோல் இனம் ஏந்தின - தோலினாலமைந்த பல கேடகமென்னும் ஆயுதங்களைத்தரித்தன; நீள் கவண் ஏந்தின - நெடுந்தூரஞ்செல்லுந்தன்மையனவான கவண் கற்களை எறிதற்கு எடுத்தன; சோரிகள்சோர்ந்திட - (பகைவருடல்களில்) இரத்தவெள்ளமொழுகும்படி, ஞாலம் எலாம் பொரு தோமரம் வாங்கின - உலகத்தவரெல்லாரோடும் போர்செய்து அழிக்கவல்ல தோமரமென்னும் ஆயுதங்களை எடுத்துக்கொண்டன; நா ஒரு மூன்றன ஆம் சூலமொடு ஓங்கின - மூன்றுநாக்குக்களையுடையனவாகிய சூலாயுதங்களோடு உயர்ந்தன; பாசமொடு ஓங்கின - கயிற்று வடிவமான பாசமென்னு மாயுதங்களோடு உயர்ந்தன; (எ - று.)

இப்பாட்டில் எல்லா வாக்கியங்களுக்கும் 'சிலகரம்' என்பதை எழுவாய். கீழ்ப்பாட்டில், சுரிகை என உடைவாள் வந்ததனால், இங்கே வாள் என்றது - பெரிய வாளை. மேலெழும் அங்கதிர்வாள் என்பதற்கு - ஆகாயத்தில் விளங்குகின்ற சூரியன்போல் ஒள்ளிய வாளெனினும் அமையும். தோல் - கருவியாகுபெயர். ஞாலம் - இடவாகுபெயர். கவண் - எறிகல். தோமரம் - பேரீட்டி. நாவொரு மூன்றனவாஞ் சூலம் - முத்தலைவேல். (266)

207. சிலசிலகைத்தலமடுகழலிற்பலதிணிகழல்கட்டினவே
சிலசிலகைத்தலமறுகுபுயத்திடைசெறிதொடையிட்டனவே

சிலசிலகைத்தலமணிகொளுரத்திடைபணிகடிருத்தினவே
சிலசிலகைத்தலம்விரல்கொடுசுட்டின செறுநர்திகைத்திடவே.

(இ - ள்.) சிலசில கை தலம்—, அடு கழலில் - (பகைவரைக்) கொல்லுகிற திருவடிகளில், பல திணி கழல் - அனேகமான நெருங்கின வீரக்கழல்களோ, கட்டின—; சிலசில கை தலம்—, மறுகு புயத்திடை - சுழல்கிற தோள்களில், செறி தொடை - அடர்ந்த பூமாலைகளோ, இட்டன - தரித்தன; சில சில கை தலம்—, அணி கொள் உரத்திடை - அழகைக்கொண்ட மார்பினிடத்தில், பணிகள் - ஆபரணங்களோ, திருத்தின - ஒழுங்காக அணிந்தன; சில சில கை தலம்—, செறுநர் திகைத்திட - பகைவர்கள் (அச்சத்தால்) திகைப்படையும் படி, விரல்கொடு சுட்டின - (அவர்களை) விரல்களாற் குறித்துக் காட்டின; (எ - று.)

மணிகொள் எனப்பதம் பிரித்து - கௌஸ்துப ரத்தினத்தையிணிந்துள்ள என்றும் உரைக்கலாம். செறுநர் - பகைப்பவர்; இப்பருபதத்தில், ந் - பெயரிடைநிலை. இப்பாட்டில், எந்த அடியை எடுத்து எந்த இடத்திற் கூட்டினாலும் பொருளும் செய்யுளோசையும் வேறுபடாதிருத்தலால், பொருளிசை மாட்சிமாரு அடிமறி மாற்றுப் பொருள்கோள்; கீழ் 204 - ஆம் பாட்டிலும் இது. 'அவிர் கழல்' என்ற பாடத்திற்கு, அவிர்தல் - விளங்குதல். (267).

208. மாயிருஞாலமெலாம்வெளியாயொளிர்மரகதசோபையுறப்
போயிருபாலும்வகுந்துவகுந்தெதிர்பொருமுகினவெம்படை
டாயிரமாயிரமங்கைபுறப்படவண்டருமாதவரும் [யோ
பாயிரநான்மறைபாடிவியந்துபணிந்துபுகழ்ந்தனரே.

(இ - ள்.) மா இரு ஞாலம் வெளி எலாம் ஆய் - மிகப்பெரிய பூலோகத்திலுள்ள வெளியிடங்களிலெல்லாம் பொருந்தி, ஒளிர் மரகதம் சோபை உற - விளங்குகிற பச்சையிரத்தினத்தின் காந்தி பொருந்த, இரு பாலும் போய் வகுந்து வகுந்து - இரண்டுபக்கத்திலுஞ் சென்று சூழ்ந்து சூழ்ந்து, எதிர் பொரு முகின வெம் படையோடு - எதிர்த்துப்போர்செய்யவல்ல கூர் நுனியையுடைய கொடிய ஆயுதங்களுடனே, ஆயிரம் ஆயிரம் அம் கை - அனேகமாயிரம் அழகிய திருக்கைகள், புறப்பட - (அவ்விசுவரூபத்தினின்று) வெளிப்பட்டுத்தோன்ற, (அதனைக்கண்டு), - வியந்து-அதிசயித்து, பணிந்து-வணங்கி, அண்டரும் - தேவர்களும், மா தவரும்-மிக்க தவமுடைய முனிவர்களும், பாயிரம் நால் மறை பாடி - முகவுரையையுடைய நான்கு வேதங்களைச் சுரத்துடனே சொல்லி, புகழ்ந்தனர் - துதித்தார்கள்; (எ-று.)

வியத்தல் - மனத்தின் தொழிலும், புகழ்தல் - வாக்கின்தொழிலும், பணிதல் - உடம்பின் தொழிலுமாகத் திரிகரணங்களாலும் கொண்டாடினமை விளங்கும். மா + இரு = மாயிரு: ஒருபொருட்பன்மொழி; உரிச்சொற்புணர்ச்சியாதலால், பொதுவிதிப்படி வகரமெய் பெறாது யகரம்பெற்று முடிந்தது; [நன் - மெய்யீறு - 36]; "மாமுன்

னுயிர்வரின் யகரமெய்தோன்றும்" என வழங்குஞ் சூத்திரத்தையும் உணர்க. பாயிரம் என்றது-வேதத்தின் முதலிலுள்ள பிரணவ மகா மந்திரத்தை; இனி, பாயிரம் - புகழ்ச்சி எனக்கொண்டு, பாயிரமறை-கடவுளைத் துதிப்பனவான வேதமென்றுமாம். ஞாலமெலாம் வெளி யாய் என்று எடுத்து - உலகமுழுவதும் விளக்கமடைய என்று உரைப்பினும் அமையும். ஆய் - ஆக; எச்சத்திரிபு. ஆயிரமா யிரம் - ஆயிரத்தாற் பெருக்கிய ஆயிரம். (268)

209. ஆரணனேயரனேபுவனங்களனைத்தையுமன்றுதவுங்
காரணனேகருணாகரனேகமலாசனிகாதலனே
வாரணமேபொதுவேயொருபேரிடவந்தருளும்புயலே
நாரணனேமுனியேன்முனியேலெனநாகர்பணிந்தனரே.

(இ - ள்.) 'ஆரணனே - பிரமரூபியே! அரனே - உருத்திர ரூபியே! புவனங்கள் அனைத்தையும் அன்று உதவும் காரணனே - உலகமெல்லாவற்றையும் அக்காலத்தில் [சிருஷ்டிகாலத்தில்] படைத் தருளிய மூலகாரணக் கடவுளே! கருணாகரனே - திருவருளுக்கு இருப்பிடமாகவுள்ளவனே! கமலாசனி காதலனே - தாமரை மலரைத் தங்குமிடமாகவுடைய திருமகளுக்கு அன்புள்ளகொழு நனே! வாரணம் - ஒரு யானை [கஜேந்திரன்), பொதுவே-பொது வாகவே, ஒரு பேர் இட - (ஆதிமூலமே என்று) ஒருபெயரை இட்டுக் கூவியழைக்க, வந்து - உடனே எழுந்தருளிவந்து முன்நின்று, அருளும் - கருணைசெய்த, புயலே - காளமேகம்போன்றவனே! நாரணனே - நாராயணனே! முனியேல் முனியேல் - கோபியாதே கோபியாதே', என - என்றுகூறி, நாகர்-சுவர்க்கலோக வாசிகளான தேவர்கள், பணிந்தனர் - வணங்கினார்கள்; (எ-று.)

ஆரணம் - வேதம். பிரமன் எப்போதும் நான்குமுகங்களாலும் நான்கு வேதங்களையும் ஓதுதல்பற்றி ஆரணன் என்று பெயர். திரு மால் பிரமரூபியாய் நின்று படைத்தலையும் காளைநிலையில் நின்று காத்தலையும் உருத்திரரூபியாய் நின்று அழித்தலையுஞ் செய்கின்றன னென்பது நூற்கொள்கை யாதலால், 'ஆரணனே யரனே' என அபேதமாகக்கூறினர்; "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவா னாய்ச், சீரார்சுடர்க ளிரண்டாய்ச் சிவனையனனாய்", "முனியே நான் முகனே முக்கண்ணப்பா" என்றார் திருவாய்மொழியிலும். "மூவர் காரியமும் திருத்தும் முதல்வன்" எம்பிரான் என்றபடி. கஜேந்தி ராழ்வான் ஆதிமூலமேயென்று பொதுப்படக்கூப்பிட்டபொழுது எம்பெருமானல்லாத பிறதேவரெல்லோரும் தாம்தாம் அச்சொல் லுக்குப் பொருளல்ல ரென்று கருதியொழிய திருமால் தாமே வந்து அருள் செய்தனரென நூல்கள் கூறும்:"அழைத்ததுசெவியிற் கேட்டு மயனரனாயினாயோர், புழைக்கை வெங்கரிமுன்காப்பப் புகுந்திலராகியாகித், தழைத்த காரணனேயென்ற தனிப்பெயர்ப் பொருள் யாமல்லோ, மிழைத்தகாரியம் யாமாவோ மென்செய்து மாலின் றென்றார்" எனப்பாகவதத்திலும் காண்க: "அண்டரெலாம் யாம் மூலமலேமென் றகல் போழ்திற், புண்டரிகக்கட் புண்ணிய னன்புள் ளரசின்மேற், கொண்டெதிரெய்திக்கரியர செய்துங்

கொடுவெங்கோய், கண்டுள கெக்கானஞ் சலிபஞ்சேல் களிறென்ஞ" என(க் காஞ்சிபுராணத்து)ப் பிற சமயத்தார் கூறியவாறு முணர்க. நாரணன் - நராயணன் என்பதன்திரிபு. சிருஷ்டிப்பொருள்களுக் கெல்லாஞ் சேர்விடமானவனென்று பொருள்; சிருஷ்டிப்பொருள் களுக்குத் தனக்கு இருப்பிடமாகவுடையவனென்றும், பிரளய காலத்து நீரைத் தனக்கு இருப்பிடமாகவுடையவனென்றும் பொருள்படும். நாகம்-சுவர்க்கம். முனியேல் முனியேல் - அடுக்கு, அன்பு பற்றியது. வாரணமே, ஏ - அசை, சிறப்புமாம். (269)

210. மாதவனேமுனியேலெமையாளுடைவானவனேமுனியேல்
யாதவனேமுனியேலிதயத்திலிருப்பவனேமுனியேல்
ஆதவனேமுனியேன்மதிவெங்கனலானவனேமுனியேல்
நீதவனேமுனியேன்முனியேலென நின்றுபணிந்தனரே.

(இ - ள்.) 'மாதவனே - திருமகள்கொழுநனே! முனியேல் - கோபித்தருளாதே; எமை ஆள் உடை வானவனே - எம்மை அடிமை யாகவுள்ள கடவுளே! முனியேல்—; யாதவனே - யதுகுலத்தில் திருவவதரித்தவனே! முனியேல்—; இதயத்தில் இருப்பவனே - (எல்லோருடைய) மனதிலும் எழுந்தருளியிருப்பவனே! முனியேல்—; ஆதவனே - சூரிய சொரூபியானவனே! முனியேல்—; மதி வெம் கனல் ஆனவனே - சந்திரன் வெவ்விய அக்கினி இவர்களின் சொரூப மானவனே! முனியேல்—; நீதவனே - நீதிமுறைமை யுடையவனே! முனியேல் முனியேல்—, என - என்றுகூறி, நின்று பணிந்தனர் - (முனிவர்கள் எங்கும்) நின்று வணங்கினர்கள்; (எ - று.)

கீழ் "மாயிருஞாலம்" என்ற கவியில், தேவர்களும் முனிவர் களும் புகழ்ந்தனரெனக் கூறியதில், தேவர்கள் புகழ்ந்த விதத்தை அடுத்த "ஆரணனே யரனே" என்ற கவியாற் கூறி, முனிவர்கள் புகழ்ந்த விதத்தை அதற்கு அடுத்த இக்கவியாற் கூறுகிறாரதி லின், 'முனிவர்' எனத் தோன்றுஎழுவாய் வருவிக்கப்பட்டது. இனி கீழ்க்கவியில் 'நாகர்' என்பதற்கு - பாதாளலோக வாசிகளென்று உரைத்து, மூவுலகத்தாருள் மேலுலகத்தாருங் கீழுலகத்தாரும் துதித்து வணங்கியமை கீழிரண்டுகவிகளிலும் கூறப்பட்டதெனக் கொண்டு, இக்கவிக்கு நிலவுலகத்தாரென்று எழுவாய் வருவித்தலு மொன்று. அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைத்த வடிவோடு கடவுள் விரைந்துசென்று வீற்றிருத்தலின், 'இதயத்திலிருப்பவனே' என்றார். (270)

211. கங்கைமகன்கதிரோன்மகனம்பிகைகாதன்மகன்றனயர்
அங்கவையின்கணிருந்தநராதிபரடையவெழுந்தடைவே
செங்கைகுவித்தசிரத்தினராயுணர்வொன்றியசிந்தையராய்
எங்கள்பிழைப்பினையின்றுபொறுத்தருளென்றுபணிந்தனரே.

(இ - ள்.) கங்கை மகன் - கங்காபுத்திரனை வீடுமனும், கதி ரோன்மகன் - சூரியபுத்திரனை கர்ணனும், அம்பிகை காதல் மகன்- அம்பிகையினது விருப்பமுள்ள புத்திரனை திருதராட்டிரனும்,

தனயர்-(அவனது) புத்திரர் பலரும், அங்கு அவையின்கண் இருந்த நர அதிபர்- (இன்னும்) அப்பொழுது அச்சபையிலிருந்த அரசர் களும், அடைய - எல்லோரும், எழுந்து - எழுந்திருந்து, அடைவே- முறைப்படி, செம் கை குவித்த சிரத்தினர் ஆய் - சிவந்த கைகளைத் தலைமேற் கூப்பியவர்களாய், உணர்வு ஒன்றிய சிந்தையர் ஆய்-அறி வுள்ள மனமுடையவர்களாய், எங்கள் பிழைப்பினை இன்று பொறுத்தருள் என்று - 'எங்கள் குற்றங்களை இப்பொழுது (நீ) பொறுத்தருள்வாயாக' என்று சொல்லி, பணிந்தனர்-வணங்கி னார்கள்; (எ - று.)

இது - பரவசமாக நிகழ்ந்தது. குற்றம் துரியோதனனது ஆயி னும், அதனைத் தாங்கள் தடுக்காமலே உடன்பட்டாற் போலிருந்த தனால், 'எங்கள் பிழைப்பு' என்றது. பிழைப்பு - பிழைசெய்தல்; தொழிற்பெயர். செங்கை குவித்த சிரத்தினர் - செங்கை சிரசிற் குவித்தனரென விகுதிபிரித்துக் கூட்டப்பட்டது. நராதிபர் - மனி தர்க்குத் தலைவர்; நர + அதிபர் எனப்பிரியும். தலைமேற் கைகளைக் குவித்து வணங்குதல், திரியங்க நமஸ்கார மெனப்படும். (271)

212. கண்ணபொறுத்தருள் வெண்ணெயருந்திய கள்வபொறுத் தருள்கார், வண்ணபொறுத்தருள் வாமபொறுத்தருள் வரதபொறுத் தருளீ, திண்ணமனத்துணர்வொன்றுமிலாதவர் செய்தபெரும்பிழை யென், றண்ணன்மலர்க்கழல் சென்னியில்வைத்தெதி ரன்றுதித் தனரே.

(இ - ள்.) 'கண்ண - ஸ்ரீகிருஷ்ணனே! மனத்து நிண்ணம் உணர்வு ஒன்றும் இலாதவர் செய்த பெரும் பிழை - மனத்தில் உறுதியான அறிவு சிறிதுமில்லாத நாங்கள் செய்த பெரிய குற்றங் களை, நீ பொறுத்தருள்—; வெண்ணெய் அருந்திய கள்வ - வெண் ணெயைக் களவுகொண்டு அமுது செய்தவனே! பொறுத்தருள்—; கார்வண்ண - மேகம் போன்ற கருநிறமுடையவனே! பொறுத்தருள் —; வாம - பேரழகுடையவனே! பொறுத்தருள்—; வரத - (அடி யார்களுக்கு வேண்டிய) வரங்களைத் தருபவனே! பொறுத்தருள்—,' என்று - என்றுசொல்லி, அண்ணல் மலர் கழல் சென்னியில் வைத்து-பெருமையிற் சிறந்த கண்ணபிரானது தாமரைமலர்போலுங் திருவடிகளைத் தம்தலையின்மேல் வைத்து வணங்கி, அன்று - அப் பொழுது, எதிர் - எதிரில், துதித்தனர்-துதிசெய்தார்கள்; (எ-று.) —இதற்கு முற்பாட்டிலுள்ள 'கங்கை மகன்' முதலியோர்களே எழு வாய்.

கிருஷ்ணனென்னும் வடமொழி, பிராகிருத பாஷை மூலமாய்க் கண்ணன் எனத் திரிந்துவந்தது; 'கண்ணனென்பது - கரியானென் னும் பொருளதோர் பாகதச்சிதைவு' என்று திருக்கோவையாருரை யில் பேராசிரியர் கூறியவாறு காண்க. இலாதவர் - தம்மைப் பிறர் போற் கூறியது; தன்மையிற் படர்க்கை வந்த இடவழு வமைதி. (272)

213 —கண்ணன் விசுவரூபத்தை அடக்கிக்கொள்ளுதல்.

தேவரும்வாசவனுந்தவருந்திசைமுகனுநராதிபரும்
யாவருமன்பினெடாயிரநாமமுமெண்ணியிறைஞ்சுதலான்
மூவருமொன்றெனநின்றருணாதனுமுனிவுதவிர்ந்தருளா
மீவருமண்டமுறுந்திருமேனியொடுங்கினன்மீளவுமே.

(இ - ள்.) தேவரும் - தேவர்களும், வாசவனும் - (தேவர்களுக்கு அரசனை) இந்திரனும், தவரும் - தவஞ்செய்துள்ள முனிவர்களும், திசைமுகனும் - நான்கு திக்கையும் நோக்கின நான்கு முகத்தையுடைய பிரமனும், நர அதிபரும் - மனிதர்களுக்குத் தலைவரான அரசர்களும், யாவரும் - (மற்றும்) எல்லோரும், அன்பினெடு - பக்தியுடனே, ஆயிரம் நாமமும் எண்ணி - (எம்பெருமானது) ஆயிரந் திருப்பெயர்களையுந் தியானித்து, இறைஞ்சுதலால்-வணங்கினதனால், —மூவரும் ஒன்று என நின்றருள் நாதனும் - திரிமூர்த்திகளும் ஏக மூர்த்தி யென்னும்படி (அவ்வவ்வடிவமாய்) நின்றருளுகிற தலைவனை கண்ணனும், முனிவு தவிர்ந்து அருளா - கோபந்தணிந்தருளி, மீவரும் அண்டம் உறும் திருமேனி - மேன்மை பொருந்திய அண்ட கோளமுழுவதிலும் பரந்த (தனது) பெரிய அவ்விசுவரூபம், மீளவும் ஒடுங்கினன் - மறுபடி ஒடுங்கப்பெற்றான்; (எ - று.)

ஆயிரநாமம் - ஸஹஸ்ர நாமம். இறைஞ்சுதலால் ஒடுங்கினன் என்று இயையும். தவர் என்பதற்கு - தபோலோகத்தவரென்று உரைப்பாரு முளர். சர்வசங்கார காலத்தில் பிரமருத்திரர் திருமாலின் திருமேனியில் ஒடுங்குதலால், 'மூவருமொன்றென நின்றருள் நாதன்' என்றார். (273)

214.—துரியோதனன் சிறிதும் மனஞ்சலியாமை.

தன்னிலுயர்ந்தவர்யாருமிலாமுகில்சதுர்மறையின்படியே
யெந்நிலமுந்திருவடியின்மறைந்திடவிப்படிநின்றிடவும்
பின்னீயுமஞ்சியயர்ந்திலனெஞ்சுபெயர்ந்திலனுசனமும்
சென்னியிலுங்கரம்வைத்திலன்வண்புகழ்சிறிதுமொழிந்திலனே.

(இ - ள்.) தன்னில் உயர்ந்தவர் யாரும் இலா முகில் - தன்னைக் காட்டிலுஞ் சிறந்தவ ரெவரையும் பெறாத காளமேகம்போன்ற கண்ணபிரான், சதுர்மறையின்படியே - நான்கு வேதங்களிற் கூறியுள்ளபடியே, எந்நிலமும் திரு அடியில் மறைந்திட - பூலோகம் முழுவதும் தனது திருவடியின்கீழ் மறைந்துபோம்படி, இப்படி நின்றிடவும் - இவ்வாறு (பெரிய விசுவரூபத்தைக்கொண்டு) நிற்கையிலும், பின்னீயும் - அவ்வடிவமொடுங்கிய பின்பும், (துரியோதனனெருவன்), அஞ்சி - பயந்து, நெஞ்சு அயர்ந்திலன் - மனம் சோர்ந்தானில்லை; ஆசனமும் பெயர்ந்திலன் - (தான் வீற்றிருந்த) சிங்காதனத்தினின்று சிறிது எழுந்தானுமில்லை; சென்னியிலும் கரம் வைத்திலன் - (தன்) தலையின்மேற் கைகளைவைத்தானுமில்லை; வள் புகழ் சிறிதும் மொழிந்திலன் - சிறந்த (அப்பிரானது) கீர்த்தியைச் சிறிதாயினும்

கூறினனுமில்லை; (எ - று.)—இதற்குக் காரணம், துரியோதனனது விபரீத காலமே.

பூலோகம் திருமாலின் திருவடியில் உதித்ததென்றும், அங்குத் தானே ஒடுங்குவதென்றும் நூல்கள் கூறும். சதுர்மறையின்படியே தன்னிலுயர்ந்தவர் யாருமிலா என்றும் இயைத்து உரைக்கலாம். ()

215.—இதுவும், மேற்கவியும் – ஒருதொடர்: கண்ணன் துரியோதனனை நோக்கிக் கூறியன.

தொல்லவையின்கணிருந்தநராதிபதுன்மதியா லெனைநீ
கொல்லநினைந்ததுநன்றெனவன்றிறல்கூறினனெம்பெருமான்
ஒல்லையினின்குலமுற்றுமடிந்திடவுற்றுமலைந்தொர்கணத்
தெல்லையின்வெஞ்சமர்நூறுவன்யாவருமேறுவர்வானுலகே.

(இ - ள்.) 'தொல் அவையின்கண் இருந்த நர அதிப - தொன்று தொட்டுவருகிற (சந்திரவமிசத்து) இராசசபையிலே வீற்றிருந்த அரசனே! துன்மதியால் - தீய அறிவினால், எனை - என்னை, நீ கொல்ல நினைந்தது—, நன்று - நல்லது,' என - என்று கூறி, எம்பெருமான் - நமது தலைவனான கண்ணபிரான், வல்திறல் கூறினன் - தனது மிக்க வலிமையைக் கூறுபவனானான்:—'ஒல்லையில் - விரைவிலே, நின் குலம் முற்றும் மடிந்திட - உனது வம்சம் முழுவதும் அழியும்படி, உற்று மலைந்து - எதிர்த்துப் போர்செய்து, ஓர் கணத்து எல்லையின் - ஒரு நொடிப் பொழுதினுள்ளே, வெம் சமர்-கொடிய யுத்தத்தில், நூறுவன்-பொடியாக்குவேன்; யாவரும் - (என்னை எதிர்ப்பவர்) எல்லோரும், வான் உலகு ஏறுவர் - (தவறாமல் இறந்து) மேலே வீரசுவர்க்கத்துக்குச் செல்வர்; (எ-று.)

ஒல்லை - விரைவுணர்த்தும் இடைச்சொல். (275)

216. அஞ்சினநின்னையழித்திடநின்னுடனன்றுபெருஞ்சமர்வாய்
வெஞ்சுடராயுதமொன்றுமெடுக்கிலமென்றுவிளம்பியதும்
எஞ்சமலைந்தெதிர்வந்துயிர்கொள்ளுதுமென்றுதனித்தனியே
பஞ்சவர்கூறியவஞ்சினவாசகமும்பழுதாமெனவே.

(இ - ள்.) அன்று - அக்காலத்தில் (நீ நம்மைப் படைத்துணை வேண்டியபொழுது), பெருஞ் சமர்வாய் வெம் சுடர் ஆயுதம் ஒன்றும் எடுக்கிலம் என்று - 'பெரிய போரில் கொடிய ஒளியையுடைய படைக்கலமொன்றையும் (உனக்கு எதிராக) எடுக்கமாட்டோம்' என்று, நின்னுடன் விளம்பியதும் - (உன்னோடு நாம் பிரதிஜ்ஞை வார்த்தை) கூறினதும்,—(அன்று) - அக்காலத்தில் [திரௌபதியைத் துகிலுரிந்தபொழுது], எதிர் வந்து எஞ்ச மலைந்து உயிர் கொள்ளுதும் என்று - 'எதிரில்வந்து (நீங்கள்) இறக்கும்படி போர் செய்து உயிரைவாங்குவோம்' என்று, தனி தனியே பஞ்சவர் கூறிய - தனித்தனி பாண்டவர் சொன்ன, வஞ்சினம் வாசகமும் - சபத வார்த்தையும், பழுது ஆம் எனவே - (இப்பொழுது நான்

உன்னைக் கொன்றால்) வீணுய்ப் போய்விடுமென்று கருதியே, நின்னை அழித்திட அஞ்சினம் - உன்னைக் கொல்லுதற்கு நாம் பயந்தோம்;

'அஞ்சினம்' முதலிய தனித்தன்மைப் பன்மைகள் உயர்வு தோன்ற நிற்கும். உன்னையும் உனக்குத் துணையாக வருபவரையும் இப்பொழுது நான் கொல்லாமைக்குக் காரணம், அதற்கேற்ற ஆற்றலில்லாமையன்று; எனதும் பாண்டவரதும் வார்த்தை தவறலர்கா தென்பதே என்றபடி. (276)

217.—கண்ணன் வெளியிற் செல்லுதல்.

என்றுரையாடி நெடுங்கடல்வண்ணன் எழுந்தருளப்பிறகே
சென்றனரெம்முடிமன்னவரும்பணிசேர்கொடியோனையலார்
நின்றுபசாரமுரைத்தவர்தம்மைநிறுத்தியனந்தரமே
வன்றிறலங்கர்பிராணனெடுகூறினன்மற்றிருவாசகமே.

(இ - ள்.) என்று உரை ஆடி - என்று வீரவார்த்தை சொல்லி, நெடுங்கடல் வண்ணன் - பெரிய கடல்போலுங் கருநிறமுடைய கண்ணன், எழுந்தருள - (சபையைவிட்டு வெளிச்)செல்ல, (அப்பொழுது),—பணிசேர் கொடியோனை அலார் எ முடி மன்னவரும் - பாம்பின் வடிவு பொருந்தின துவசமுடைய துரியோதனனை யொழிந்தவராகிய கிரீடாதிபதிகளான எல்லாவரசரும், பிறகே சென்றனர் - பின்னே (வழிவிடுவதற்குத்) தொடர்ந்து போனார்கள்; (அப்பொழுது கண்ணன்), நின்று—, உபசாரம் உரைத்து - (ஏற்ற) உபசார வார்த்தைகளைக் கூறி, அவர் தம்மை நிறுத்தி - அவர்களையெல்லாந் தொடராது நிற்கச்செய்து, அனந்தரமே-அதன் பின்பாக, வல் திறல் அங்கர் பிராணனெடு - மிக்க வலிமையையுடைய அங்கநாட்டார்க்குத் தலைவனன கர்ணனுடனே, ஒரு வாசகம் கூறினன் - ஒரு வார்த்தையை (இரகசியமாக)ச் சொன்னன்; (எ - று.)—அதனை, மேல் மூன்று கவிகளிற் காண்க. மற்று - வினைமாற்று; அசையுமாம். மற்றொரு என எடுத்து, வேறொரு என்றுமாம்.

உபசாரமுரைத்தவர் தம்மையென எடுத்து, தனக்கு உபசார வார்த்தை கூறின அவர்களை யெனினுமாம். (277)

218.—இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்; கண்ணன் கர்ணனுக்குப் பிறப்புணர்த்துவன.

வண்மையினுலுயரங்கர்குலாதிபமதிகுலம்வாழ்வுறவத்
துண்மையினுலுயர்மன்னவரைவருமுன்னிலுனக்கினியோர்
பெண்மையினுலுயர்குந்திவயிற்றிடைபெருமையினுலிதயத்
திண்மையினுலுயர்நின்னையுமன்பொடுதினகரனல்கினனே.

(இ - ள்.) வண்மையினுல் உயர் - தானத்தாற் சிறந்த, அங்கர் குல அதிப - அங்க நாட்டிலுள்ளாரது கூட்டத்துக்கு தலைவனே! —மதி குலம் வாழ்வு உற வந்து - சந்திரகுலம் சிறப்படையும்படி (அதில்) வந்து பிறந்து, உண்மையினுல் உயர்-சத்தியத்தாற் சிறந்த,

மன்னவர் ஐவரும் - பாண்டவராசர் ஐந்து பேரும், உன்னில் உனக்கு இளையோர் - ஆலோசித்துப் பார்க்குமிடத்து உனக்குத் தம்பிய ராவர்; (எவ்வாறெனின்),—பெண்மையினால் உயர் குந்தி வயிற் றிடை - பெண்மைக்குணங்களாற் சிறந்த குந்திதேவியினது வயிற் றிலே, பெருமையினால் இதயம் திண்மையினால் உயர் நின்னையும் - பெருந்தன்மையினாலும் மனவுறுதியினாலுஞ் சிறந்த உன்னையும், அன்பொடு - அன்புடனே, தினகரன் - சூரியன், நல்கினன் - (அவர் களுக்கு முன்பு) பெற்றான்; (எ - று.)

இதயத்திண்மை - தைரியம். வண்மை - ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல். (278)

219. ஏயுநெடுங்கொடிமுரசுடையோனையெழிற்றருமன்றரவே
வாயுவழங்கினன்வீமனைநல்கினன்விசயனைவாசவனும்
ஆயுநிகழ்ந்திடுவேதமருத்துவரன்பொடளித்தனர்செந்
தேயுவெனுந்திறனகுலனையுஞ்சகதேவனையும்பெரிதே.

(இ - ள்.) (உன்னைச் சூரியன் பெற்றபின்பு குந்தியினிடத்தில்), ஏயும் நெடு கொடி முரசு உடையோனை - பொருந்திய பெரிய முரசக் கொடியுடைய யுதிட்டிரனை, எழில் தருமன் - அழகிய யமதருமராசன், தர - உண்டாக்க, வாயு—, வீமனை - பீமசேனனை, வழங்கினன் - பெற்றான்; வாசவனும் - இந்திரனும், விசயனை - அருச்சுனனை, நல் கினன்-பெற்றான்; ஆயு நிகழ்ந்திடு வேதம் மருத்துவர் - ஆயுளைப் பற்றிக் கூறுகிற வேதத்தை யறிந்த தேவவைத்தியர்களான (இரட் டையராகிய) அசுவினிதேவர்கள், செம் தேயு எனும் திறல் நகுலனை யும் சகதேவனையும் - செந்நிறமுள்ள அக்கினியெனத்தக்க பராக்கிர மத்தையுடைய நகுலன் சகதேவன் என்னும் இரட்டைப்பிள்ளைகளை, பெரிது அன்பொடு அளித்தனர் - மிகுதியான அன்புடனே பெற்றார்கள்; (எ - று.)

மாத்திரியினிடம் பிறந்தவரான நகுலசகதேவரை இங்கே குந்தி மைந்தராக அபேதமாகக் கூறியது - அந்தமாத்திரிக்கு அந்த மந்தி ரத்தை உபதேசித்தவள் குந்தி யாதலாலும், பாண்டுவோடு மாத்திரி சகமனஞ்செய்து இறந்துவிட இவ்விருவரையும் குந்தியே அன் போடுவளர்த்தன ளாதலாலு மெனக. குந்தி நினைத்த அப்பொழுது கூற்றுவன் கோரவடிவமினறிச் சாந்தமானதொரு வடிவங்கொண்டு வந்தமைதான்ற, 'எழிற்றருமன்' என்றார். மருத்துவர் - மருந்தின் தன்மையறிந்து செய்துதருபவர்; இதில், பகுதி - மென்றொடர் வன் றொடராயிற்று. பராக்கிரமத்தைச் செந்நிறமுடையதென்று வரு ணித்தல் கவிமரபாதலாலும், பராக்கிரமம் பிறரையழிக்கவல்லதாதலா லும், 'செந்தேயுவெனுந்திறல்' எனப்பட்டது. வெற்றிக்கு ஏற்ற கொடியென்பார், 'ஏயு நெடுங்கொடிமுரசு' என்றார். (279)

220. அந்தணன்முன்றருமந்திரமைந்தினிலறுவரையுங்கடவுட்
குந்திபயந்தனள்யானினியென்பலகூறுவதுங்களினீர்

இந்தநிலம்பெறுவீர்தவிர்கிற்பெறயாரினிவேறுரியார்
வந்தினிநும்பியர்தம்மொடுசேர்கெனமாயன்மொழிந்தனனே.

(இ - ள்.) அந்தணன் - துருவாசமுனிவன், முன் தரு - முன்னே [கன்னிகையாயிருக்கையில்] உபதேசித்த, மந்திரம் ஐந்தினில்-ஐந்து மந்திரங்களால், அறுவரையும் - உங்களாறுபேரையும், கடவுள் குந்தி பயந்தனள் - தேவ சம்பந்தமுள்ள குந்திதேவி பெற்றாள்; யான் இனி பல கூறுவது என்-நான் இனிமேற் பலவார்த்தை சொல்லவேண்டுவ தென்ன? உங்களில் நீர் இந்த நிலம் பெறுவீர் - உங்களுக்குள்ளே நீங்கள் இந்த இராச்சியத்தைப் பெற்றுக்கொள்ளக்கடவீர்; தவிர்கின் - அங்ஙனம் பெறாது விட்டால், இனி பெற உரியார் வேறு யார்- இனிப்பெறுதற்கு உரியவர் வேறுயாவர்? [எவருமல்லரென்றபடி]; (ஆதலால்), இனி - இப்பொழுது, நும்பியர்தம்மொடு வந்து சேர்க - உன்தம்பிமாரோடு வந்து கூடுவாயாக, என-என்று, மாயன மொழிந்தனன் - கண்ணன் (கன்னனுக்குக்) கூறியருளினான்; (எ - று.)

"கரியவன் கன்னற்கு அன்று பிறப்பீனத் தேற்றியாங்கு" என இவ்வரலாற்றைச் சீவகசிந்தாமணியில் பிற [அருக] சமயத்தாரும் உவமையெடுத்துக் கூறியிருக்குமாறு காண்க. கீழ்ச் சம்பவச்சருக்கத்தில், "தெரிவைகே ளெனச் செவிபடுத்தொருமறை தேவரில் யார்யாரைக், கருதி நீ வரவழைத்தனை யவரவர் கணத்துணங்கரஞ் சேர்வார்" எனத் துருவாச முனிவர் தேவர்பலரைக் கருதத்தக்க ஒரு மந்திரமளித்ததாகக் கூறியதேனும் இது மாறுகொளக் கூறலாகாதபடி, அப்பெரியமந்திரமொன்றின் பகுதிகள் இவ்வைந்து மெனக் கொள்க. நும்பியர் - பாண்டவர்; நீர்-பகுதி; அது நும் எனத் திரிந்தது; [சன்-உருபு-8.] 'வந்தினி நும்பியர்' என்ற பாடத்துக்கு - இனி நீவந்தென்க. வந்து - துரியோதனனை விட்டுவந்து. தவிர்கின், கு-சாரியை. தந்திரமாகக்கூறி மித்திரபேதஞ் செய்யலுற்ற சூழ்ச்சியை நோக்கி இங்கே கண்ணனை 'மாயன்' என்றார். (280)

வேறு.

221.—இதுவும், மேற்கவியும் – ஒருதொடர்: கன்னன் கண்ணனை நோக்கிக்கூறும் உத்தரம்.

கன்ருல்விளவின்கனியுகுத்துங்கழையானிரையின்கணமழைத்துங்
குன்ருன்மழையின்குலந்தடுத்துங்குலவுஞ்செல்வக்கோபாலா
இன்ருலெனதுபிறப்புணர்ந்தேனென்றன்புருகியெம்பியர்பாற்
சென்ருலென்னைநீயறியச்செகத்தாரென்றுஞ்சிரியாரோ.

(இ - ள்.) கன்ருல் விளவின் கனி உகுத்தும் - மாயக்கன்றைக் கொண்டு (ஒருவஞ்சனை) விளாமரத்தின் பழங்களைக் கீழ்சிந்துவித்தும், கழையால் நிரையின் கணம் அழைத்தும்-வேய்ங்குழலிசையால் பசுக்களின் கூட்டத்தை ஒருங்கு வரவழைத்தும், குன்ருல் மழையின் குலம் தடுத்தும்-கோவர்த்தன மலையினால் மேகங்களின் கூட்டத்தை மறுத்தும், குலவும் - மகிழ்கின்ற, செல்வம்-எல்லாச் செல்வங்களையு

முடைய, கோபாலா - கோபாலனென்னுங் திருநாமமுடையவனே! இன்று எனது பிறப்பு உணர்ந்தேன் - இப்பொழுது (நீ சொல்ல) என்னுடைய பிறந்தவரலாற்றை யறிந்தேன், என்று - என்ற காரணத்தால், அன்பு உருகி - அன்பாய் மனங்கரைந்து, எம்பியர்பால்- என் தம்பியரான அப்பாண்டவரிடம், சென்றால் - (இப்போது துரியோதனனே விட்டு நான்) போனால், நீ அறிய—, செகத்தார்-நிலவுலகத்துச் சனங்கள், என்றும் - எப்பொழுதும், என்னை—, சிரியாரோ- (பரிகாசஞ்செய்து) சிரிக்கமாட்டார்களா, [நன்கு சிரிப்பரே என்றபடி];

கழை - மூங்கில்; அதனாலாகிய குழலுக்குக்கருவியாகுபெயரும், அதனிசைக்கு முதலாகுபெயருமாக இருமடியாகுபெயராம். பகல் முழுவதும் முல்லைநிலத்திற் பரவிச்சென்று மேய்ந்த பசுக்களை மாலைப்பொழுதில் ஒன்று சேர்த்தற்கு இனிதாக வேய்ங்குழலூதுதல் இயல்பு; அக்கீதத்தின் இனிமையைப் பசுக்கள் அறிந்து நன்குகேட்டற்கு அருகில்வந்து திரளுமென்க. பின்னே 'கணம்' என வந்ததனால், முனனே 'நிரை' - பசுக்கூட்டத்தையுணர்த்தாமல், பசுமாத்திரத்தை யுணர்த்திற்று.

இதுமுதற் பதினேழு கவிகள் - பெரும்பாலும் மூன்று ஆருஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (281)

222. ஆரென்றறியத்தகாதவெனையரசுமாக்கிமுடிசூட்டிச்
சீருந்திறமுந்தனதுபெருந்திருவுமெனக்கேதெரிந்தளித்தான்
பாரின்றறியநூற்றுவர்க்கும்பழிதீர்வென்றிப்பாண்டவர்க்கும்
போரென்றறிந்துஞ்செய்ந்நன்றிபோற்றுதவரிற்போவேனே.

(இ- ள்.) (துரியோதனன்), ஆர் என்று அறிய தகாத எனை - இன்னனென்று அறிந்துகொள்ளுதற்குந் தகுதியில்லாத என்னை, அரசும் ஆக்கி - இராசகுலத்தவனாகவும் வைத்து, முடி சூட்டி - முடிசூடாபிஷேகஞ் செய்வித்து, தனது சீரும் திறமும் பெரு திருவும் - தனக்குரிய சிறப்புக்களையும் அதிகாரத்தையும் மிக்கசெல்வத்தையும், எனக்கே தெரிந்து அளித்தான் - எனக்கு ஒருவனுக்கே தன் மனமறிந்து கொடுத்தான்; (அங்ஙனமிருக்க), இன்று - இப்பொழுது, பார் அறிய - உலகத்தார்யாவரும் அறியும்படி, நூற்றுவர்க்கும் - (துரியோதனரியர்) நூறுபேருக்கும், பழி தீர் வென்றி பாண்டவர்க்கும் - பழிப்புக்கிடமில்லாத சயத்தையுடைய பாண்டவர்களுக்கும், போர் என்று - சண்டை நேர்வதென்று, அறிந்தும் - தெரிந்திருந்தும், செய் நன்றி போற்றுதவரின் - (ஒருவர்) செய்த உபகாரத்தை நினையாது மறப்பவர் போல, போவேனே - (துரியோதனனைவிட்டுப் பாண்டவரிடத்துச்) செல்வேனே? [செல்லமாட்டேன் என்றபடி];

ஆர் - யார்; மரூஉ. இங்கே, கர்ணனது வார்த்தையில் பாண்டவர்க்கு 'பழிதீர்வென்றி' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டதனால், அவன் பாண்டவர்பக்கல் சிறிது அபிமானங்கொண்டா னெனபது விளங்கும். பழி தீர்வென்றி - தருமயுத்தத்தாற் சயித்தல்; புகழ் தரும் வெற்றி. (282)

223.—கண்ணன் கர்ணனுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, அசுவத்தாமனை அழைத்தல்.

இரவிக்குரியதிருமதலையிவ்வாறுரைக்கவிசைவண்டு
விரவிப்பயிலுந்துழாய்முடியோன்வேறோர்மொழியும்விளம்பாமல்
உரவிற்றடந்தோளுரவோனையேகென்றருளியொருசார்வெம்
புரவித்தாமாநின்றனவருகென்றழைத்துப்புகல்கின்றான்.

(இ - ள்.) இரவிக்கு உரிய திரு மதலை - சூரியனுக்குஉரிய செல்வப் புதல்வனான கர்ணன், இ ஆறு உரைக்க - இந்தப்படி சொல்ல, (அதன் பின்பு), இசை வண்டு விரவி பயிலும் துழாய் முடியோன் - கீதம்பாடுகிற வண்டுகள் கலந்து மொய்க்கப்பெற்ற திருத்துழாய் மாலையையணிந்த திருமுடியையுடைய கண்ணன், வேறு ஓர் மொழியும் விளம்பாமல் - வேறொரு வார்த்தை யெதையுஞ் சொல்லாது விட்டு, உரம் வில் தட தோள் உரவோனை - வலிமையையுடைய வில்லை ஏந்திய பெரியதோள்களின் வலிமையுடைய அக்கன்னனை, ஏகு என்று அருளி - நீ செல்வாயென்று அன்போடு அனுப்பிவிட்டு, ஒருசார் வெம்புரவித்தாமா நின்றனை-(அங்கு) ஒருபக்கத்தில் நின்றிருந்தவனாகிய (போரிற்) கொடிய அசுவத்தாமனை, வருக என்று அழைத்து - வருவாயாகவென்று அருகிற்கூப்பிட்டு, புகல்கின்றான்- இரகசியமாக (ச் சிலவார்த்தை) கூறுகிறவனானன்; (எ - று.)—அதனை, மேலிரண்டு கவிகளிற் காண்க.

திருமதலை யென்பதற்கு - சிறந்தகுமார னென்றும், உரவோன் என்பதற்கு - புத்திபலமுடையவ னென்றுங் கூறலாம். புரவி, அசுவம் என்பன - குதிரையாகிய ஒரு பொருளைக் குறிப்பன வாதலால், அசுவத்தாமாவைப் புரவித்தாமா வென்றார்; பரித்தாமா, இவுளித்தாமா என்றுங் கூறுவர். துரோணர் மனைவியாகிய இருபியின் அழகைக்கண்டு மிகக்காமுற்ற சிவபிரானது அருளினாற் குதிரையினிடம் பிறந்தவனிவனென்று அறிக. அசுவத்தாமன் - குதிரையைப் பிறப்பிடமாக வுடையவன். 'வேறோர்மொழியும் விளம்பாமல்' என்றது, கர்ணனிடத்து நாகாஸ்திரத்தைப்பற்றிக் குந்தி கூறவேண்டுமென்று நினைத்துத் தான்கூறாமல் விட்டதை. (283)

224.—இதுமுதல் நான்குகவிகள் – கண்ணன் அசுவத்தாமனை மித்திரபேதஞ்செய்தல்.

போயேகானம்பலதிரிந்துபுகன்றவிரதம்பொய்யாதோ
ராயேவந்தபாண்டவர்களைந்தூர்வேண்டமறுத்ததற்குச்
சேயேயணியசிலைமுனிவன்சேயேநாகச்செருக்களத்தில்
நீயேகரியென்றெடுத்துரைத்தானெடியோன்றுளபமுடியோனே.

(இ - ள்.) 'சேயே அணைய - முருகக்கடவுளையே ஒத்த, சிலை முனிவன் சேயே - வில்லாசிரியனாகிய துரோணாசாரியனது புத்திரனே! கானம் பல போயே திரிந்து - காடுகள் பலவற்றிற் சென்று கொண்டே அலைந்து, புகன்ற விரதம் பொய்யாதோர் ஆயே - (வன

வாச அஞ்ஞாதவாசங்களைப்பற்றிக்) கூறிய விரதமொழியைத்தவறாமல் நிறைவேற்றினவர்களாகியே, வந்த - (மீண்டு) வந்த, பாண்டவர்கள் - பாண்டுபுத்திரர்களுக்காக, ஐந்து ஊர் வேண்ட - (யான்) ஐந்துஊரையாயினும் (கொடுத்திடும்படி) பிரார்த்திக்க, மறுத்ததற்கு - (துரியோதனன் சிறிதுங் கொடுக்கமாட்டேனென்று) தடுத்துச் சொன்னதற்கு, நாளை செருகளத்தில் - இனிவிரைவில் நடக்கும் போர்க்களத்தில், நீயே கரி - நீயே சாட்சியாவாய்,' என்று—, எடுத்து உரைத்தான் - (அசுவத்தாமனை நோக்கி) எடுத்துக் கூறியருளினான்; (யாரெனில்),—நெடியோன் - எல்லாப்பெருமையையு முடையவனும், துளபம் முடியோன் - திருத்துழாய் மாலையை யணிந்த திருமுடியையுடையவனுமாகிய கண்ணபிரான்; (ஏ - று.)

அசுவத்தாமனுக்குச் சுப்பிரமணியன் உவமை - பலபராக்கிரமங்களால் மாத்திரமேயன்றி, சிவனருளாற் பிறந்தவனுதலாலும் ஏற்கும். இங்கு அசுவத்தாமனை, 'சேயேயனைய' எனக் கண்ணன் உவமைகூறி விளித்ததனால், முருகக்கடவுள் தேவசேனாபதியான துபோல இவன் துரியோதனனுடைய சேனைக்குத் தலைவனுயின் அவர்களை வெல்லுதல் அரிதென்ற கருத்தால் இவனிடஞ் சிறிது பேதஞ் செய்யலுற்ற கருத்தும் புலப்படும். கரி - சாட்சியென்னும் பொருளதாதலை "இந்திரனே சாலுங்கரி", "உய்த்திட்டும் தேனீக்கரி" எனத் திருக்குறள் நாலடியார்களிலுங் காண்க. மறுத்ததற்குக் கரி - இங்கே நான்கனுருபு, தகுதிப்பொருளது. "பிதுः சதகுணம்புத்रः' என்றபடி தந்தையினும் பலமடங்கு கல்வி கேள்வி அஸ்திரசஸ்திர சாஸ்திரப்பயிற்சி முதலியவற்றிற் சிறந்தவனென்பது விளங்க, 'சிலைமுனிவன்சேயே' என்றார். 'நீயேகரி' எனப் பிரிநிலையேகாரங் கொடுத்துக் கூறியதனால், பிறரெவரும் இங்கு உன்னளவு தகுதியுடையவரில்லையெனப்புகழ்ந்தவாறு. விரதம் - கொள்கை. தவறுமல் ஒழுகுதல். சிரஞ்சீவியாதலால் இவன் அழியா னென்று இவனைக் கரிபோக்கியது. ஏகாரங்களுக்கு ஏற்றபடி பொருளுணர்க. (284)

225. ஆனுவனதாண்மைக்குநிகரவனிதலத்தில்வேறுண்டோ
ஞானுதிபனேபோர்க்களத்தினுக்கொடியோன்பணிந்துன்னைச்
சேனுபதியாகென்றலுஞ்செலுத்தேனென்றுநீமறுத்தி
யானலுயிவரைவருமற்றவர்பாலுனக்குமன்புண்டே.

(இ - ள்.) ஞான அதிபனே - அறிவுக்குத் தலைவனுகவுள்ளவனே! ஆல - (எப்பொழுதும்) நீங்காத, உனது ஆண்மைக்கு - உனது பராக்கிரமத்துக்கு, நிகர் - சமானமாக, அவனிதலத்தில் - பூலோகத்தில், வேறு உண்டோ-வேறு யாருடையதேனும் பராக்கிரமமுள்ளதோ? [எதுவுமில்லை]; போர் களத்தில் - யுத்தகளத்திலே, சாகம் கொடியோன - பாம்புக் கொடியையுடைய துரியோதனன், உன்னை—, பணிந்து - வணங்கி, சேனுபதி ஆகு என்றலும்- சேனைத் தலைவனுவாயென்றுசொன்னலும், செலுத்தேனென்று-அச்சேனைத் தலைமையை நடத்தமாட்டேனென்று, நீ மறுத்தி ஆனல்-நீ தடுத்து விடுவாயானல், ஐவரும் - பாண்டவரைந்துபேரும், உய்வர் - பிழைத்

திடுவார்கள் [இல்லாவிடின் அரிதென்றபடி]; அவர்பால் உனக்கும் அன்பு உண்டே - அப்பாண்டவர்பக்கல் உனக்கும் அன்புள்ள தன்றே? (எ - று.)

இது, அசுவத்தாமனோக்கிக் கண்ணன் அருளிச்செய்தது. இதில், அசுவத்தாமனது மிகுந்த பராக்கிரமம் விளங்கும். மற்று - அசை. (285)

226. ஆயோதனத்திலடலரியேறனையான்றன்னையிவ்வாறு, மாயோனுரைத்துத் தன்விரலின்மணியாழியை மண்ணிடை வீழ்த் தான், சேயோனதனையெடுத்தவன்றன் செங்கைகொடுக்கவாங்காமற், றூயோயூர்கோள்பரிதிதனைச்சூழ்ந்ததகல்வான்மீதென்றே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) இ ஆறு - இந்தப்படி, மாயோன் - கண்ணபிரான், ஆயோதனத்தில் அடல் அரி ஏறு அனையான் தன்னை - போரில் வலிமையையுடைய ஆண்சிங்கத்தைப் போன்றவனை அசுவத்தா மனை (நோக்கி), உரைத்து - கூறி, தன் விரலின் மணி ஆழியை - தனது கைவிரலிலுள்ள இரத்தினமிழைத்த மோதிரத்தை, மண் ணிடை வீழ்த்தான் - பூமியிலே (தானுகவிழுந்ததுபோலத்தோன்ற) நழுவவிட்டருளினன்; (அப்பொழுது), அதனை - அம்மோதிரத்தை, சேயோன் - (பலபராக்கிரமங்களில்) முருகக்கடவுள் போன்ற அசுவத் தாமன், எடுத்து - கையிலெடுத்து, அவன்தன் செம் கை கொடுக்க - அக்கண்ணபிரானது சிவந்த கையிலே கொடுத்திட, (அவ்வெம்பெரு மானும்), வாங்காமல்-(அதனை உடனே கையில்) வாங்கிக்கொள்ளாமல் [வாங்குவதற்கு முன்பு என்றபடி], (அவ்வசுவத்தாமனை நோக்கி), 'தூயோய் - பரிசுத்தியுடையவனே! அகல்வான்மீது - பரந்த ஆகா யத்தில், பரிதிதனை - சூரியனை, ஊர்கோள் - மண்டலம், சூழ்ந்தது - சுற்றிற்று', என்று - என்று சொல்லி, (எ - று.)— 'வான்வாய் நோக்க' என மேற்கவியோடு தொடரும்.

இங்கே கண்ணன் வீழ்த்தின மணியாழியை அசுவத்தாமன் எடுத்து அவன்கையிற் கொடுக்கலுற்றான். இதிற் கண்ணன் செய் யும் மாயை மேற்கவியில் விளங்கும். அநேக யானைகளை எளிதில் ஒருங்கு அழிக்கவல்ல சிங்கம்போலப் போரிற் பல அரசர்களை ஒருங்கே அழிக்கவல்ல வீரனென்றற்கு, 'அடலரியேறனையான்' என்றார். வட்ட வடிவமாக வுள்ளதுபற்றி, ஆழியென்று மோதிரத்திற்குப் பெயர். சேயோன் - சேய் என்னும் உயர்திணை ஒருமைப்பெயரின்மேல் ஆன் என்ற ஆண்பால் விகுதி தொடர்ந்து, ஆ ஓ வாயிற்று; இனி செய் யோன் என்பது - சேயோன் என விகாரப்பட்டதென்றுங் கொள்ள லாம். சேயோன் என்பதற்கு - செம்மைக் குணமுடையோன் என்று உரைத்து, கபடமில்லாதவனென்று கருத்துக்கொள்வாரும் உளர். ஊர்ந்துகொள்வது பற்றி, பரிவேஷத்திற்கு ஊர்கோள் என்று பெயர். முதனிலை திரிந்த தொழிலாகுபெயரென்றுவது, கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்து கெட்டுப் பகுதி விகாரப்பட்ட தென்றுவது கொள்க; ஊர்தல் - சூழ்தல். (286)

227. வரித்தாமரைக்கட் டிருநெடுமால் வான்வாய்நோக்கவரி
விற்கைப், பரித்தாமாவு மாழியுடன் பரிதிவடிவந்தகனப்பார்த்தான்,
கிரித்தாழ்கவிகைக் கருங்கள்வன்கிளர் நூன்முனிவன்மைந்தனீயும்,
பிரித்தானவனுஞ் சூளுற்று னென்ருரிருந்தபேரவையோர்.

(இ - ள்.) வரி - (சிவந்த) இரேகைகளையுடைய, தாமரை - செந் தாமரை மலர்போன்ற, கண் - திருக்கண்களையுடைய, திரு நெடுமால் - சிறந்த பெரிய கண்ணபிரான், வான் வாய் நோக்க - ஆகாயத்தினிடத் தைப் பார்க்க, வரி வில்லை பரித்தாமாவும் - கட்டமைந்த வில்லில் வல்ல கையையுடைய அசுவத்தாமனும், ஆழியுடன் - (தன்கையிற் கொண்ட கண்ணன்) மோதிரத்துடனே, பரிதிவடிவந்தனை பார்த் தான் - சூரியனது உருவத்தைப்பார்த்திட்டான்; (இச் செயல்களை நோக்கி), இருந்த பேர் அவையோர் - (அங்குப்) பெரிய சபையிலிருந்த வர்களெல்லோரும், 'இரி தாழ் கவிகை கருங் கள்வன்-கோவர்த்தனமலை யாகிய கவிந்த குடையையேந்திய கருநிறமுள்ள மாயவனாகிய கண்ணன், இளர் நூல் முனிவன் மைந்தனீயும் - விளங்குகின்ற முப்புரி நூலையுடைய துரோணாசாரியனது புத்திரனாகிய அசுவத்தா மனீயும், பிரித்தான்-(துரியோதனனினின்று) பேதப்படுத்தினான்; அவனும் - அவ்வசுவத்தாமனும், சூள் உற்றான் - (எதோ) சபதஞ் செய்து கொடுத்தான்', என்ருர்-என்று (தங்களுக்குள்) கூறினார்கள்;

இங்குக் கண்ணன் அசுவத்தாமனிடத்து இயற்கைபோலச் செய்வித்த செய்கையால், பிறன் கைம்மோதிரத்தை அவன் கையி னின்று தான் கையில் வாங்கிப் பூமியைத்தொட்டு ஆகாயத்தை நோக்கிச் செய்வதாகிய ஒரு சபதத்தை அசுவத்தாமன் கண்ணனுக் குச் செய்து கொடுத்ததாகப் பார்ப்பவர்க்குத் தோன்றிற்று. இங்ங னம் கண்ணன் அசுவத்தாமனிடத்தில் கௌரவர் யாவர்க்கும் நம் பிக்கை கெடும்படி சூழ்ச்சி செய்ததுபற்றியே இக்கவியில் 'கள்வன்' என்று கூறினர். பரிதி என்று சூரியமண்டலத்துக்கும் பெயர். "நூலே காக முக்கோல் மகனையே, யாயுங் காலை யந்தணர்க்குரிய" எனத் தொல்காப்பியத்துக்குறிய மரபுபற்றி, 'இளர் நூல் முனிவன் மைந்தன்' என்ருர். இனி, இத்தொடர்க்கு - விளங்குகின்ற வேத சாஸ்திரங்களையும் வில்வித்தையையும் உணர்ந்தவன் என்றும் உரைக்கலாம். இருந்த பேரவையோர் - பேரவை யிருந்தோர். (387)

228.—துரியோதனன், அசுவத்தாமனை இனி நம்பலாகா தென்றல்.

தனிவந்தகலுந் தூதனப்போய்த் தானேயணுகித்தடஞ்சாப,
முனிவன்புதல்வன்மோதிரந்தொட் டருஞ்சூண்முன்னர்மொழிகின்
ருன், இனிவந்துறவாய்தின்ருலு மெங்ஙன்றெளிவதிவனையெனத்,
துனிவந்தரசர் முகநோக்கிச் சொன்னனிடியே றன்னனே.

(இ - ள்.) (அப்பொழுது), இடி ஏறு அன்னன் - பேரிடியை யொத்த [மிகக்கொடிய] துரியோதனன், துனி வந்து-(அதுநோக்கிக் கோபம் மிகுந்து, அரசர் முகம் நோக்கி - மற்றையரசர்களது முகத் தைப்பார்த்து, "தட சாபம் முனிவன் புதல்வன்-பெரிய வில்வித்தை

யில் வல்ல துரோணசாரியனது புத்திரனை அசுவத்தாமா, தனி வந்து அகலும் தூதனை - தனியே வந்து செல்கிற தூதனை கிருஷ்ணனை, தானே போய் அணுகி - தானுகவே போய்ச்சேர்ந்து, மோதிரம் தொட்டு - (அவனது) மோதிரத்தைக் கையில்வாங்கி, முன்னர் - எதிரில், அரு சூள் - அருமையான பிரதிஜ்ஞையை, மொழிகின்றான் - சொல்லுகிறவனுனன்; (ஆகையால்), இனி வந்து உறவுஆய் நின்றும் - (இவன்) இனிமேல் (நம்மிடம்) வந்து நட்புடையவனுய் நின்றும், இவனை எங்கன் தெளிவது - இவனை எவ்வாறு நம்புவது?' என - என்று, சொன்னன்—; (எ - று.)

தூரத்திலிருந்து பார்த்த துரியோதனனுக்குக் கண்ணன் அசுவத்தாமனைக் கூப்பிட்டதும், அசுவத்தாமன் பூமியினின்று மோதிரத்தை யெடுத்ததும் முதலியன தெரியாவாதலால், இங்ஙனங் கூறினன். இனி, தானே யணுகி என்பதற்கு - நமது கட்டளையில்லாமல் தானே சென்று என்றும் உரைக்கலாம். மேல் வீட்டும பருவத்தில் "வீரசாபமுட னுரைக்கும் வெய்ய சாபம் வல்ல வத்தீரன்" என்றபடி துரோணன் சாபானுக்கிரக சக்தியு முடையவனுதலால், 'தடஞ்சாப முனிவன்' என்பதற்குப் பெரிய சாபங் கொடுக்கவல்ல முனிவனென்றுமாம்; இரட்டுறமொழிதல். உறவு - சேர்தல்; உறவினனுக்குத் தொழிலாகுபெயர். ஏறு - ஆண்பாற்பெயர்; பெரியதையுஞ் சிறந்ததையும் ஏறென்றல் மரபு; பெரிய அலியை ஆணலியென்றலுங் காண்க. (288)

229.—அதுகண்டு அசுவத்தாமன் வருந்துதல்.

துளியார்மதுவின் வலம்புரித்தார்த் துரியோதனன்ருன் சொல்லியதும்
ஒளியாரவையில்வாள்வேந்த ரொருவர்க்கொருவருரைத்தனவுங்
களியாகியனுன்செவிப்படலுங் கலங்கிச்சித்தமிவரென்னைத்
தெளியாவண்ணம் பேதித்தான் றிருமாலென்றே சிந்தித்தான்.

(இ - ள்.) துளி ஆர் - துளித்தல் பொருந்திய, மதுவின் - தேனையுடைய, வலம்புரி தார் - நஞ்சாவட்டைப் பூமாலையையுடைய, துரியோதனன்—, தான்—, சொல்லியதும் - சொன்ன வார்த்தையும், ஒளி ஆர் அவையில் - விளக்கம்பொருந்தின அச்சபையிலே, வாள் வேந்தர் - ஆயுதங்களையுடைய அரசர், ஒருவர்க்கு ஒருவர் உரைத்தனவும்-ஒருத்தருக்கு ஒருத்தர் சொன்ன வார்த்தைகளும், களி யானை அனன் செவி படலும் - மதக்களிப்பையுடைய ஆண்யானையைப் போன்ற அசுவத்தாமனது காதுகளிற் கேள்விப்பட்டவளவிலே,—(அவன்), சித்தம் கலங்கி - மனம் நிலைகுலைந்து, 'இவர் என்னை தெளியாவண்ணம் - இவர்கள் என்னை நம்பாதபடி, திருமால் - கண்ணன், பேதித்தான் - மாறுபாடு செய்தான்', என்றே சிந்தித்தான்-என்று எண்ணினன்; (எ - று.) (289)

230.—கண்ணன் விதுரன் மாளிகையிற்சென்று இந்திரனை நினைத்தல்.

தண்ணந்துளப முடியோனுந் தனித்தங்கிருந்து தன்மனத்தில்
எண்ணம்பலித்த தெனமகிழ்ந்தே யினையோன்றனக்குவிடைநல்கி

விண்ணின்றமரர் மிகத்துதிக்க விதுரன்மனையின்மேவியபின்
திண்ணங்கடவுட்குலவரசன்வருமாறறிந்துசிந்தித்தான்.

(இ - ள்.) தண் அம் துளபம் முடியோனும் - குளிர்ந்த அழகிய திருத்துழாய்மாலையையணிந்த முடியையுடைய கண்ணனும்,— இனையோன் தனக்கு விடை நல்கி - அசுவத்தாமனுக்குச் செலவு கொடுத்தனுப்பி, (அதன்பின்), தனித்து அங்கு இருந்து-அங்கு ஓரிடத்தில் தனியனையிருந்து, தன் மனத்தின் எண்ணம் பலித்தது என மகிழ்ந்தே - தன்மனத்திற் கருதிய கருத்து முழுவதும் நிறை வேறிவிட்டதென்று மகிழ்ச்சிகொண்டே, விண் நின்று அமரர் மிகத்துதிக்க விதுரன் மனையில் மேவிய பின் - ஆகாயத்திலே வந்து நின்று தேவர்கள் மிகுதியாகத் துதிசெய்யாநிற்க விதுரனதுமாளிகையில் எழுந்தருளிய பின்பு, திண்ணம் கடவுள்குலம் அரசன் வரும் ஆறு அறிந்து சிந்தித்தான் - கலங்காத மனவுறுதியையுடைய தேவர்கூட்டத்துக்கு அரசனை இந்திரன் அருகில் வரும்படி ஆலோசித்து நினைத்தான்; (எ - று.)

'அங்குத் தனித்திருந்து' என்பதை 'விதுரன் மனையின் மேவியபின்' என்றதன்பின் எடுத்துக்கூட்டினும், 'திண்ணம்' என்பதை 'பலித்தது' என்பதனோடு கூட்டினும் அமையும். 'பலித்தது' என்றது, சாதியொருமையாம். (290)

231.—கண்ணன் அங்குவந்த இந்திரனை நோக்கிக் கூறத்தொடங்குதல்.

அந்தக்கணத்தில் வந்திறைஞ்சுமாகண்டலனைமுகநோக்கிக்
கந்தத்துளபமுடியோனுங்கண்ணுங்கருத்துங்களிகூரத்
தந்தத்தொழிலினரிசுமந்ததவிசினிடையேயுடனிருத்தி
முந்தக்கருதுகின்றவினைமுடிப்பானுபாயமொழிகின்றான்.

(இ - ள்.) அந்த கணத்தில்-அங்ஙனம் வரும்படிநினைத்த அந்த நிமிஷத்திலேயே, வந்து—, இறைஞ்சும்-வணங்கின, ஆகண்டலனை-இந்திரனை, முகம்நோக்கி - முகத்தைப் பார்த்து, கந்தம் துளபம் முடியோனும் - நறுமணத்தையுடைய திருத்துழாய்மாலையைத் தரித்த திருமுடியையுடையவனான கண்ணனும், கண்ணும் கருத்தும் களிகூர - (தனது) கண்களும் மனமும் களிப்பு மிக, தந்தம் தொழிலின் அரிசுமந்த தவிசின் இடையே உடன் இருத்தி - யானைத்தந்தத்தாலமைந்த விசித்திர வேலைப்பாட்டையுடைய சிங்கஞ்சுமந்த வடிவமாகச் செய்யப்பட்டதொரு ஆசனத்தினிடத்திலே உடனே (அவனை) வீற்றிருக்கச் செய்து, முந்த கருதுகின்ற வினை முடிப்பான் - பிரதானமாகத் தான் நினைக்கின்ற காரியத்தை நிறைவேற்றுதற் பொருட்டு, உபாயம் மொழிகின்றான்-தந்திரத்தைக் கூறுகின்றவனானான்; (எ - று.)

மைந்தனுக்கு நன்மைசெய்யும்பொருட்டுத் தந்தையான இந்திரனை வரவழைத்தான். 'ஆகண்டலன் - (நன்றுகப் பகைவரைத்) துணிப்பவன். கண்களிகூர்தல், பார்த்தலால். கருத்துக் களிகூர்தல்,

எண்ணம் முடியுமென்ற தெளிவால். முந்தக் கருதுகின்ற - முன்னமே தொடங்கி எண்ணி வருகின்ற என்றும், தவிசினிடையே உடனிருத்தி - தானிருந்த ஆசனத்திலேயே உடன் வீற்றிருக்கச்செய்து என்றும் உரைக்கலாம். முந்தக் கருதுகின்ற வினை - கர்ணனுற் போரில் அருச்சுனன் கொல்லப்படாதபடி காத்தல் கருதுகின்ற வினை. பெயரெச்சம், செயப்படுபொருள் கொண்டது. (291)

232.—இதுமுதல் ஆறு கவிகள் - ஒரு தொடர்: கண்ணன் இந்திரனுக்கு உபாயங் கூறுதல்.

கிரியின்சிறகையரிபடையாய்கேண்மோவாண்மைக்களமீதில்
வரிவெஞ்சிலைக்கைவிசயனுக்குமாருய்முனிந்துவருகின்ற
வெரியுங்கனல்வாய்விடவரவொன்றிவனுக்குற்றபகையான
அரியின்புதல்வன்றனக்கொருபேரம்பாகியதாரறியாதார்.

(இ - ள்.) கிரியின் சிற்கை அரி படையாய் - மலைகளின் இறகு களை அறுத்திட்ட வச்சிராயுதமுடையவனே! கேண்மோ - (யான் சொல்வதைக்) கேட்பாயாக; ஆண்மை களம் மீதில் - பராக்கிரமத்தைக் காட்டுதற்கிடமான போர்க்களத்து முனையில், வரி வெம் சிலை கை விசயனுக்கு மாறு ஆய் - கட்டமைந்த கொடிய வில்லியேந்திய கையையுடைய அருச்சுனனுக்குச் சத்துருவாகி, முனிந்து வருகின்ற - (நெடுநாளாகக்) கறுக்கொண்டுவருகிற, எரியும் கனல் வாய் விடம் அரவு ஒன்று - பற்றியெரிகிற நெருப்புப்போன்ற நுனியையுடைய தொரு விஷப்பாம்பு, இவனுக்கு உற்ற பகை ஆன அரியின் புதல்வன் தனக்கு - இவ்வருச்சுனனுக்கு மிகுந்த பகையாளியாகிய சூரிய புத்திரனான கர்ணனுக்கு, ஒரு பேர் அம்பு ஆகியது - ஒரு பெரிய அஸ்திரமாயமைந்திருப்பதை, அறியாதார் ஆர் - (உலகத்தில்) அறியாதவர் எவர்? [யாருமில்லை; மிகப் பிரசித்தமாக எல்லோரும் அறிவர் என்றபடி]; (எ - று.)

எரியுங் கனல்வாய் அரவு என்பதற்கு - (காண்டவவனத்தில்) எரிகிற அக்கினியினின்று எழுந்த பாம்பென்றும் உரைக்கலாம். கேண்மோ, மோ - முன்னிலை யசை. அரியென்னும் பலபொருளொரு சொல், இங்கே சந்தருப்பத்திற்கேற்பச் சூரியனைக் குறித்தது: (இருளை) அழித்தல்பற்றி, ஹரியென்று சூரியனுக்குப் பெயர். இனி, ஆய் என்பதை ஆகவென்பதன் திரிபெனக்கொண்டு, மாறு ஆய் - சத்துருவாதற்கு என்றுமாம். (292)

233. கன்னன்விசயன்றனைக்கொல்லிற்கடற்பார்முழுதுங்கண்ணில்லா
மன்னன் புதல்வன்றனக்கேயாமொழிந்தோர் தாமுமடிந்திடுவார்
முன்னஞ்சூதின் மொழிந்தபகை முடியாதிருக்கினவர்க்கன்று
நின்னெஞ்சறியயானறிய நினக்கேவசையுநிலையாமே.

(இ - ள்.) (அந்த அம்பைக்கொண்டு), கன்னன் விசயன்தனை கொல்லின்-கர்ணன் அர்ச்சுனனைக் கொன்றிட்டால், கடல் பார் முழுதும் - கடல் சூழ்ந்த பூலோகம் முழுவதும், கண் இல்லா மன்னன் புதல்வன் தனக்கே ஆம் - திருதராட்டிர புத்திரனான துரியோதன

னுக்கே உரியதாய்விடும்; (அன்றியும், அருச்சுனன் இறந்தால்), ஒழிந்தோர்தாமும் மடிந்திடுவார் - மற்றைப்பாண்டவரும் இறந்து விடுவார்கள்: (இங்ஙனம்), முன்னம் சூதில் மொழிந்த பகை முடியாது இருக்கின் - முன்னே சூதுபோர் நிகழ்ந்த பொழுது (அருச்சுனன் முதலியோர் கன்னன் முதலியோரைக் கொல்வதாகக்) கூறின சபதவார்த்தை நிறைவேறுமலிருந்தால், அவர்க்கு அன்று - (அருச்சுனன் முதலிய) அப்பாண்டவர்க்கு மாத்திரமே பழியாகாது; நின நெஞ்சு அறியயான் அறிய-உன் மனம் அறியவும் நான் அறியவும், நினக்கே வசையும் நிலை ஆம்வ - (அருச்சுனனது தந்தையான) உனக்கே பழிப்பும் (என்றும் அழியாது) நிச்சயமாய் நிலைநிற்பதாகும்; (எ - று.)—ஈற்றேகாரம் - தேற்றம்.

இங்ஙனம் கண்ணன் இந்திரனைத் தந்திரமாகத் தன் வழிப்படுத்தற்குக் கூறுகிறான். வசையும் என்ற உம்மை - புத்திரசோகம் மாத்திரமேயன்றி என்ற பொருளை விளக்குதலால், எச்சப்பொருளதென்னலாம். (293

234. கவசங்கனககுண்டலமென்றிரண்டுபுனையிற்கற்பாந்த, திவசம் பொரினுங் கன்னனுயிர்செகுப்பார்மண்ணிற் சிலருண்டோ, அவசங்கிளைஞருறத் துணைவரரற்றக் களத்திலடுகுரங்குத், துவசம் படைத்தோன்படும்பயந்ததுணைவா வின்னேசொன்னேனே.

(இ - ள்.) (தான்பிறந்தபொழுதே உடம்புடன் பிறந்த), கவசம் - கவசமும், கனக குண்டலம் - பொன்மயமான குண்டலமென்னுங் காதணியும், என்ற இரண்டு - என்று சொல்லப்பட்ட இவ்விரண்டையும், புனையின் - தரித்திருப்பானுனல், கற்ப அந்த திவசம் பொரினும் - கல்பகாலத்தின் முடிவு நாள் வரையிற் போர்செய்தாலும், கன்னன் உயிர் செகுப்பார் - கர்ணனது உயிரை ஒழிப்பவர், மண்ணில் சிலர் உண்டோ - பூமியில் (எவரேனுஞ்) சிலருளரோ? (எவருமில்லை யென்றபடி); (ஆதலால்,) நிளைஞர் அவசம் உற - பந்துக்கள் (சோகத்தாற்) பரவசத்தை யடையவும், துணைவர் அரற்ற - உடன் பிறந்தவர்கள் கதறிப்புலம்பவும், களத்தில் - போர்க்களத்தில், அடு குரங்கு துவசம் படைத்தோன் - (பகையை) அழிக்கவல்ல குரங்கின் வடிவத்தை யெழுதின கொடியைப் பெற்ற அருச்சுனன், படும் - (கன்னனுல்) இறப்பான்; பயந்த துணைவர் - (அவனைப்) பெற்றவனும் (எனக்குச்) சினேகிதனுமாகிய இந்திரனே! இன்னே சொன்னேனே - (அதனை முன்சாக்கிரதையாக) இப்பொழுதே (உன்னிடம்) கூறிவிட்டேன்; (எ - று.)

குரங்குக்கொடி - தேருடன் காண்டவதகனகாலத்தில் அக்கினிதேவனுல் அருச்சுனனுக்கு அளிக்கப்பட்டது; பின்பு வீமசேனன் புட்பயாத்திரையாக அளகாபுரிக்குச் சென்றபொழுது, இடையில் அநுமானைக்கண்டு வணங்கி வேண்டிப் போர்க்களத்தில் அருச்சுனன் தேர்க்கொடியில் வந்து நின்று மகிழ்ந்து கூத்தாடும்படி வரம்பெற்றான். கல்பம் - பிரமனுயுள். கவச குண்டலங்களுக்கு இத்தன்மை - சூரியனது வரத்தினுல் அமைந்தது. ந + வசம் = அவசம். (294)

285. வல்லார்வல்ல கலைஞருக்கு மறைநூலவர்க்குங் கடவுளர்க்கும், இல்லாதவர்க்கு முள்ளவர்க்கு மிரந்தோர்தமக்குந் துறந்தவர்க்குஞ், சொல்லாதவர்க்குஞ் சொல்பவர்க்குஞ் சூழுஞ்சமயாதிபர்களுக்கும், அல்லாதவர்க்கு மிரவிமகனரியதான மளிக்கின்றான்.

(இ - ள்.) வல்லார் வல்ல கலைஞருக்கும் - வல்லவர்களுள்ளும் வல்லவராகிய சாஸ்திரஞானமுடையோர்க்கும், மறை நூலவர்க்கும் - வேதமாகிய நூலில்வல்ல பிராமணர்களுக்கும், கடவுளர்க்கும்-தேவர்களுக்கும், இல்லாதவர்க்கும் - பொருளில்லாத ஏழைகளுக்கும், உள்ளவர்க்கும் - பொருளுள்ள செல்வவான்களுக்கும், இரந்தோர் தமக்கும்-யாசித்தவர்களுக்கும், துறந்தவர்க்கும் - (சம்சாரப்பற்றுக்களை) விட்ட துறவிகளுக்கும், சொல்லாதவர்க்கும் சொல்பவர்க்கும் - (தமது குறையைச்) சொல்லாதவர்களுக்கும் சொல்பவர்களுக்கும், சூழும் சமய அதிபர்களுக்கும் - ஆராய்ச்சி செய்கின்ற வெவ்வேறு மதங்களுக்குத் தலைவர்களானவர்களுக்கும், அல்லாதவர்க்கும்-இவரொழிந்த மற்றுமெல்லோர்க்கும், (சிறிதும் வேறுபாடு இல்லாமல்), இரவி மகன் - சூரிய புத்திரனான கர்ணன், அரிய தானம் அளிக்கின்றான்-(பிறராற் கொடுத்தற்கு) அரியனவான தானங்களைக் கொடுக்கிறான்; (எ - று.)

இனி, வல்லார் வல்ல கலைஞருக்கு - வல்ல ஆசிரியரிடத்துக் கல்வி பயின்று வல்லவரான மாணாக்கர்களுக்கு என்றும், மறைநூலவர்க்கு - வேதங்களையும் சாஸ்திரங்களையும் அறிந்தவர்களுக்கு என்றும், துறந்தவர்க்கு - (ஆதரவாகவுள்ளவர்களாற்) கைவிடப்பட்டவர்க்கு என்றும், (இரத்தலைத்) துறந்தவர்களுக்கு என்றும், சொல்லாதவர்க்கு - தன்னைப் புகழ்ந்து கூறுதவர்களுக்கு என்றும், சொல்பவர்க்கு - தன்னைப் புகழ்ந்து கூறுபவர்களுக்கு என்றும், அல்லாதவர்க்கு - பகைவர்க்கு என்றும் உரைப்பாரு முளர். பொருளிலாரையும் பொருளுடையாரையும், இல்லாதவர் உள்ளவர்என்பது - உலக வழக்கு; "உடையார் முனிலில்லார்போல்" எனத் திருக்குறளிலுங் காண்க. (295)

286. மைந்தற்குறுதிநீவேண்டின்வல்லேமுனிவர்வடிவாகிச்
சந்தப்பனுவலிசைமாலைத்தானகரனைவிரைந்தெய்தி
அந்தக்கவசகுண்டலங்களளிப்பாயென்றுலவனென்றும்
இந்தப்புவியின்மறுத்தறியாயுயிரேயெனினுமீந்திடுவான்.

(இ - ள்.) நீ—, மைந்தற்கு உறுதி வேண்டின் - உன் மகனான அருச்சுனனுக்கு நன்மையைப்பெற விரும்புவாயானால், வல்லே - விரைவிலே, முனிவர் வடிவு ஆகி - முனிவர்க்குரிய உருவத்தையுடையவனாய், சந்தம் பனுவல் இசைமாலை தான ஆகரனை-அழகிய பாடல்களிலமைந்த கீர்த்தி வரிசையையுடைய தானகுணத்துக்கு இருப்பிடமான கர்ணனை, விரைந்து எய்தி - துரிதமாக அடைந்து, அந்த கவச குண்டலங்கள் அளிப்பாய் என்றால்-அவனுடம்பிலுள்ள கவசத்தையும் குண்டலங்களையும் கொடுத்திடுவானென்று வேண்டி

ஞல், இந்தப் புவியில் அவன் ஒன்றும் மறுத்து அறியான் - இந்த வுலகத்தில் அக்கன்னன் ஒரு பொருளையும்(கொடுக்க இயலாதென்று சொல்லி) மறுத்தறியமாட்டான்; உயிரே எனினும் ஈந்திடுவான் - (இரக்கப்படுவது தனது) உயிரேயானலும் (அதனையும் தவருது) கொடுத்திடுவான்; (எ - று.)

கொடுப்பானது உயர்வும் பெறுவானது இழிவும் தோன்ற 'ஈந்திடுவான்' என்றது; இங்கே "ஈதாகொடுவெனு மூன்று முறையே, இழிந்தோனெப்போன் 'மிக்கோ னிரப்புரை" என்றதைக் காண்க. தானகரன் - தீர்க்கசந்திபெற்ற வடசொற்றொடர். உரையும் பாட்டும் என இருவகைப்பட்ட புகழில், பாட்டின் புகழ் இவனுக்குச் சிறப்பாக அமைந்துள்ளவாற்றை 'சந்தப்பனுவலிசை மாலே' என்ற அடைமொழி விளக்கும்; இந்த அடைமொழிக்கு - பல சந்தங்களையுடைய நூல்களாகிய கவிமாலைகளை யேற்ற என்று உரைப்பாரு முளர். உயிரினும் இனிதாய் இன்றியமையாதது எவர்க்கும் வேறென்று இன்றுதலால், 'உயிரேயெனினும்' என்ற ஏகாரமும் உம்மையும் - உயர்வு சிறப்பு. அந்தணர்க்குரிய அறுவகைத் தொழிலில், இரத்தலும் ஒன்றுதலால், அதற்குரிய அவ்வடிவமாகப் போகச் சொன்னன். (296)

287. இரண்டுமவன்பானீகவரினிருந்தேரூர்ந்திப்படியரசர்
திரண்டுவரினும்வெஞ்சமரிற்றிண்டேர்விசயனெதிர்நில்லார்
முரண்டுபொருவிற்கன்னனுந்தன்முன்னேயெய்திமுடிசிதறிப்
புரண்டுமறியுமெனவணங்கிப்புத்தேளரசன்போகின்றன்.

(இ - ள்.) இரண்டும் - (மேற்கூறிய கவச குண்டலமாகிய) இரண்டு பொருளையும், அவன்பால் நீ கவரின் - அக்கன்னனிடத்தினின்று நீ பெற்றுக்கொண்டு வந்தால், இப்படி அரசர் - இந்தப் பூலோகத்திலுள்ள அரசர்களெல்லோரும், இருந் தேர் ஊர்ந்து - பெரியதேரின்மேலேறிச் செலுத்தி, திரண்டுவரினும் - (தொகையாகக்) கூடிவந்தாலும், வெம் சமரில் - கொடிய யுத்தத்தில், திண் தேர் விசயன் எதிர் நில்லார் - வலிய இரதத்தையுடைய அருச்சுனனுக்கு எதிரில் நிற்கமாட்டார்கள்; முரண்டு பொரு வில் கன்னனும் - பகைத்துப் போர்செய்கிற வில்லில்வல்ல அக் கர்ணனும், தன் முன்னே எய்தி - அவ்வருச்சுனனுக்கு எதிரில் வந்து, முடி சிதறி - (அவனம்பால் தன்) தலை சிதறப்பெற்று, புரண்டு - கீழ் விழுந்து உருண்டு, மறியும் - இறப்பான், என - என்று (ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஞன இந்திரன், வணங்கி - (கண்ணபிரானை) நமஸ்கரித்து, போகின்றன் - (கன்னனிடஞ்) செல்பவனனன்; (எ-று.)

கவரின் - தந்திரமாகக் கைக்கித்துவிட்டால். முரண்டு என்னும் தெரிநிலை வினையெச்சத்தில், முரண் - வினைப்பகுதி. புத்தேள் - தேவன்; இதன் பன்மை - புத்தேளிர். (297)

வேறு.

238.—இந்திரன் கிழவடிவங்கொண்டு கர்ணன் மாளிகைவாயிலை யடைதல்.

தண்டுதாளெனக்குனிந்துடலலமரத்தாளிணைதளர்ந்துதள்ளாடக், கண்டியாவருங்கைதொழக் கவித்தகைக்குடையுடன் கங்கைநீர் நுரையை, மொண்டு மேலுறச்சொரிந்ததா மெனநரைதிரையுடன் மூப்பொரு வடிவங், கொண்டதாமெனவொரு முனியாகியே கொற்ற வன் வாயில்சென்றடைந்தான்.

(இ - ள்.) தண்டு தாள் என - (நடக்கும் ஆற்றல்குறைதலால் முன்னே கையி லூன்றிப்பிடித்த) தடி கால்போல் (உடம்புக்கு ஓர் ஆதாரமாய்) நிறகவும், உடல் குனிந்து அலமர-உடம்பு கூன்வளைந்து தளரவும், தாள் இணை தளர்ந்து தள்ளாட - இரண்டு கால்களும் சோர்வையடைந்து (நன்கு நடக்கமாட்டாமல்) நடுங்கவும், யாவரும் கண்டு கைதொழ - எல்லோரும் (தனது விருத்த வேஷிய வடிவத் தைப்) பார்த்து நன்கு மதித்துக் கைகூப்பி வணங்கவும், கவித்த கை குடையுடன் - மேலே கவியுமாறு பிடித்த சிறிய குடையுடனே, கங்கை நீர் நுரையை மொண்டு மேல் உற சொரிந்தது ஆம் என நரை - கங்கா நதியினது நீரின் நுரையை மொண்டெடுத்து மேலே மிகுதியாகச் சொரிந்ததுபோல வுள்ள வெள்ளை மயிர்களும், திரை யுடன் - தோல் சுருங்குதலும் ஆகிய இவற்றுடனே, மூப்பு ஒரு வடிவம் கொண்டது ஆம் என - முதுமைப் பருவமே ஒரு புருஷ ரூபத்தைக் கொண்டாற்போன்றதாமென்று சொல்லும்படி, ஒருமுனி ஆகி - அத்தனனது வடிவங்கொண்டவனாய், (இந்திரன்), கொற் றவன் வாயில் சென்று அடைந்தான்-வெற்றியையுடைய கர்ணனது வீட்டின் வாயிலைப் போய்ச்சேர்ந்தான்; (எ - று.)

"தண்டுகாலா வூன்றியூன்றித் தள்ளி நடவாமுன்" என்றார் திருமங்கையாழ்வாரும். கங்காநதி இயல்பில் வெண்ணிறமான நீரை யுடையதாதலால், நரையின் மிக்க வெண்மைக்கு அதன் நுரையை உவமையெடுத்துக் கூறினர். அலமர என்னுஞ் செயவெனெச்சத்தில் அலமா - பகுதி. நரைப்பது, நரை; திரைப்பது, திரை; வினைமுதற் பொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர்கள். நரைத்தல் - மயிர் வெளுத்தல்; திரைத்தல் - தோல் சுருங்குதல்; இவையெல்லாம், முதுமைப்பருவத்தின் இயற்கை. மூப்பு-மூத்தல், பிராயம் முதிர்தல்; மூ என்னும் வினைப்பகுதியடியாப் பிறந்த தொழிற்பெயர். இப்பாட் டில், தன்மைநவிற்சியணி, மூன்று உவமைகளை அங்கமாகக்கொண்டு வந்தது. "நூலே கரகம்" என்ற சூத்திரத்து 'ஆயுங்காலை' என்ற தனால் குடை முதலிய சிலவும் அந்தணர்க்கு உரியனவென்று கொள்ளப்பட்டவாறும், "எறித்தருகதிர்தாங்கி யேந்தியகுடை நீழல்" எனக் கலித்தொகையிற் கூறப்பட்டவாறுங் காண்க. "தண்டொடு பிடித்ததாழ்கமண்டலத்துப், படிவவுண்டிப் பார்ப்பன மக்களே" என்றபடி அந்தணர்க்குத் தண்டும் உரியதாம்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் ஈற்றுச்சீரும் மாச்சீர்களும், மற்றவையைந்தும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (298)

239.—கர்ணன் உள்ளேவந்த இந்திரனை வணங்கி உபசரித்தல்.

அடுத்ததானமும்பரிசிலுமிரவலர்க்கருளுடன் முற்பகலளவுங், கொடுத்துநாயகன் புகுந்தனனுனீர்குறுகுமினென்றவன்கோயிற், றடுத்தவாயிலோர்மீளவுமுணர்த்தலிற்றலைவனுந்தருகென விரைவின், விடுத்தநான்மறை முனியைமுன் காண்டலும் வேந்தனுந் தொழுதடி வீழ்ந்தான்.

(இ - ள்.) (இங்ஙனம் இந்திரன் பெருங்கிழவனுய் மிகமெது வாகச்சிரமப்பட்டுச் சென்று சேர்கையில் காலதாமதப்பட்டதனால்), 'இரவலர்க்கு - யாசகர்களுக்கு, அடுத்த தானமும் - செய்தற்கு உரிய தானங்களையும், பரிசிலும் - வெகுமானங்களையும், அருளுடன் - கருணையுடனே, முன் பகல் அளவும் - பகலின் முற்பொழுது கழியும் வரையிலும், கொடுத்து—, நாயகன் - எங்கள் தலைவனை கர்ணன், புகுந்தனன் - உள்ளே சென்றுவிட்டான்; (ஆதலால்), நீரீர் குறுகுமின் - நாளைக்கு நீர் வாரும்,' என்று - என்று சொல்லி, தடுத்த - (முதலில்) தடைகூறின, அவன் கோயில் வாயிலோர் - அக்கன்னனது அரண்மனையின் வாசற்காவலாளர்கள், மீளவும் - மறுபடி சென்று, உணர்த்தலின் - (இந்த விருத்த வேதியனது வருகையைக் கன்னனுக்குத்) தெரிவித்ததனால், தலைவனும் - எசமானனை கர்ணனும், தருக என - (அவரை உள்ளே) வர விடுங்க ளென்றுசொல்ல, விரைவின் விடுத்த-துரிதமாக உள்ளே யழைத்து வந்துவிடப்பட்ட, நால்மறை முனியை - நான்கு வேதங்களும் வல்ல அம்முனிவனை, முன் காண்டலும் - எதிரிற் பார்த்தவளவிலே, வேந்தனும் - கர்ணமகாராஜனும், தொழுது - கைகூப்பி அஞ்சலிசெய்து, அடி வீழ்ந்தான் - (அவனது) திருவடிகளில் வீழ்ந்து (சாஷ்டாங்க மாக) நமஸ்கரித்தான்; (எ - று.)

தடுத்தவாயிலோர் மீளவும் உணர்த்துதற்குக் காரணம், இவனது மூப்பின் முதிர்ச்சியை நோக்கி யெழுந்த இரக்கம். நீர் குறுகுமின் - சிறப்புப்பன்மை. முற்பகல் - பின்முன்னகத்தொக்க ஆரும்வேற்றுமைத்தொகை; இலக்கணப்போலி யெனப்படும். முற்பகல் - பகலின் முன்பாதி. முன்றிலினிடத்திலிருந்து கொடுத்தல் இயல்பாதலால், 'கொடுத்துப்புகுந்தனன்' என்றார். (299)

240.—'நீ விரும்பியவற்றைக் கொடுப்பேன்' என்று கர்ணன் இந்திரனுக்குக் கூறுதல்.

என்னமாதவம் புரிந்தனன் பரிந்துநீ ரீண்டெழுந்தருளுதற் கென்று, பொன்னினுசனத் திருத்திமெய் யருளுடன் பூசையுமுறை முறைபுரிய, அன்னவேதியன் மலர்ந்தவெண் ணடையினுலானதே பிற்பக

லென்று, சொன்னவேலியி னகைத்துனக்களிப்பனீ சொன்னவை யாவையுமென்ருன்.

(இ- ள்.) (கர்ணன் நமஸ்கரித்தபின் அவ்வந்தணனைப் பார்த்து), 'ஈர்—, ஈண்டு - இவ்விடத்தில், பரிந்து - அன்புகொண்டு, எழுந்தருளுதற்கு - கருணையோடு வருவதற்கு, என்ன மா தவம் புரிந்தனன்-(நான்) என்ன பெருந்தவத்தைச் செய்துள்ளேனே', என்று - என்று (உபசாரவார்த்தை) கூறி, பொன்னின் ஆசனத்து இருத்தி-(அப் பிராமணனைப்) பொன்மயமானதொரு ஆசனத்திலே யெழுந்தருளப்பண்ணி, மெய் அருளுடன் - உண்மையான கருணையுடனே, பூசையும் - (அதிதியாகவந்த அந்தணனுக்குச் செய்தற்குரிய) உபசாரங்களையும், முறை முறை புரிய - நூல் முறைமைப்படி செய்ய, (அப்பொழுது), அன்ன வேதியன் - அந்தப் பிராமணன், 'தளர்ந்த என் நடையினல்-மிகத் தளர்ச்சி பெற்றுள்ள எனது நடையினலே, பின் பகல் ஆனதை - (இங்கு நான் வந்து சேர்வதற்குப்) பிற்பகற் பொழுதாய்விட்டது,' என்று சொன்ன வேலியின்-என்று சொன்ன பொழுது, (கன்னன்), நகைத்து - சிரித்து, 'நீ சொன்னவை யாவையும் உனக்கு அளிப்பன் என்ருன் - (காலங்கடந்தாலும் இப் பொழுது) நீ விரும்பிய பொருள்களையெல்லாம் (உனக்கு நான்) கொடுப்பேன்' என்று கூறினன்; (எ - று.)

முற்பகல் கழிந்துவிட்டது காரணமாக இவன் வேண்டிய பொருளைக் கொடுக்கமாட்டான் என்று தன்பக்கல் இந்திரன் இகழ்ச்சியான கருத்துக் கொண்டமையை நோக்கிக் கர்ணன் சிரித்தான்; மிகுந்த அன்பால் முக மலர்ந்து சிரித்தா னென்றுமாம்: அன்றி, பரிகாசமாகச் சிரித்தானெனக் கொள்ளலாகாது; அது வள்ளன்மைக்குக் குறைவுபாடாதலால். இரப்பானது சிறுமையும் ஈவானது பெருமையுந் தோன்ற, 'மெய்யருளுடன்' எனப்பட்டது. மூப்புடைய பூதேவனது சிறப்பை நோக்கி, 'பூசை' என்ருர். (30)

241.—கர்ணனது சபதமொழி.

அருத்தியீதல்பொற் சுரதருவினுக்குமற் றரிதுநீயளித்தியோ வென்று, விருத்தவேதியன் மொழிந்திடநகைத்துநீ மெய்யுயிர்விழைத் திரந்தாலுங், கருத்தினேடுனக் களித்திலேனெனி னெதிர்கறுத்தவர் கண்ணிணைசிவப்ப, வுருத்தபோரினிற் புறந்தரு நிருபர்போயுறுபத முறுவ னென்றுரைத்தான்.

(இ - ள்.) 'அருத்தி ஈதல் - (எனக்கு) விருப்பமான பொருளைக் கொடுத்தல், பொன் சுர தருவினுக்கும்-பொன்மயமான தேவதருவா கிய கற்பக விருட்சத்துக்கும், அரிது - அருமையான தாம்; (அங்ஙன மிருக்க), நீ அளித்தியோ-நீ கொடுத்திடுவையோ?' என்று—, விருத்த வேதியன் - அந்தக் கிழப் பிராமணன், மொழிந்திட - சொல்ல, (கர்ணன்),— நகைத்து - சிரித்து, 'மெய் உயிர் நீ விழைந்து இரந்தாலும் - எனது உடம்பிலுள்ள உயிரை நீ விரும்பிக்கேட்டாலும், கருத்தினேடு - மனச் சம்மதியுடனே, உனக்கு அளித்திலேன் எனின் - உனக்குக் கொடாமற் போவேனுனல், (யான்),—எதிர்

கறுத்தவர் - எதிரிற் கோபித்துநின்ற பகைவர்களே, கண் இணை சிவப்ப - இரண்டு கண்களும் சிவக்கும்படி, உருத்த - உக்கிரமாகச் செய்கிற, போரினில் - யுத்தத்தில், புறம் தரு - முதுகு கொடுத்துச் செல்கிற, நிருபர் - அரசர்கள், போய் உறு - (மறுமையிற்) போய்ச் சேர்கிற, பதம் - துர்க்கதியை, உறுவன் - அடைவேன்', என்று உரைத்தான் - என்று கூறினன்; (எ - று.)

கருத்தின்றிக் கொடுத்தல், சிறப்புடைய தானமாகாது. கருமை யென்ற பண்படி திரிந்து வினைப்பகுதித் தன்மைப்பட்ட கறுத்தல் என்பது - ஒருவகை நிறத்தை மர்த்திரமே யன்றிக் கோபத்தையும் உணர்த்துவதாதலி, "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள" என்னுந் தொல்காப்பியத்தாலும் அறிக. வீரர்க்கும் போரில் புறந்தருதல் மிகப்பாவம். இங்கே, ஈகைத்தல் - தன்னைப்பிறன் இகழ்ந்தது காரணமாக வந்தது அளித்தியோ, ஓகாரம் - வினாவோடு எதிர்மறை குறிக்கும். விருத்தன் - வருத்தன்; வடமொழி. (301)

242.—கர்ணன் இந்திரனுக்குக் கவசகுண்டலங்களை அளித்தல்.

வந்தவந்தணன் கவசகுண்டலங்களோ வாங்கிநீவழங்கெனக் கென்னத்
தந்தனன்பெறுகெனவவன்வழங்கவிண்டலத்திலோர் தனியசரீரி
யிந்திரன்றனைவிரகினன் மாயவனேவினன்வழங்கனீயெனவுஞ் [வன்.
சிந்தையின்கணேர்கலக்கமற் றளித்தனன்செஞ்சுடர்த்தினகரன் சிறு

(இ - ள்.) (அதுகேட்டு), வந்த அந்தணன் - (இரப்பதற்கு) வந்த அந்தப் பிராமணன், கவசகுண்டலங்களை வாங்கி நீ எனக்கு வழங்கு என்ன - ('கூடப்பிறந்த) கவசத்தையும் குண்டலங்களையும் (உன் உடம்பினின்று) கழற்றி நீ எனக்குக்கொடு' என்று கேட்க, (உடனே), அவன் - அக்கன்னன், 'தந்தனன் பெறுக என வழங்க - கொடுத்து விட்டேன் பெற்றுக்கொள்வாயாக' என்று சொல்லி (அவற்றை) அவனுக்குக் கொடுக்கலுறுகையில், விண்தலத்தில் - ஆகாயத்தினிடத்திலே, ஓர் தனி அசரீரி - ஒப்பிலாததொரு ஆகாயவாணி, (கன்னனைநோக்கி), 'மாயவன் இந்திரன்தனை விரகினால் ஏவினன் - கண்ணன் இந்திரனை வஞ்சனையால் (இங்ஙனம் இரக்க) அனுப்பினன்; (ஆதலால்), நீ வழங்கல் - நீ கொடுத்திடாதே,' எனவும் - என்று சொல்லவும்,—(அதுகேட்டு இல்லை என்னுமல்), செம் சுடர் தினகரன் சிறுவன் - சிவந்த கிரணங்களையுடைய சூரியனது புத்திரனான கர்ணன், சிந்தையின்கண் ஓர் கலக்கம் அற்று - மனத்திற் சிறிது கலங்குதலு மில்லாமல், அளித்தனன் - (அவனுக்கு அவற்றைக்) கொடுத்திட்டான்; (எ-று.)

இதனால், கர்ணனது வரம்புகடந்த வள்ளன்மை விளங்கும். வடமொழி முடிபான கவசகுண்டலமென்னும் உம்மைத்தொகை, பன்மையீறுபெற்றது. தந்தனன்-தெளிவும் விரைவும் பற்றி, எதிர் காலம் இறந்தகாலமாயிற்று. அசரீரி - உடம்புடையதல்லாத சொல் தெய்வம்: ஒருருவமும் கண்ணுக்குப் புலப்படாமல் பேச்சுமாத்திரங் கேட்பது. இது இங்குச் சூரியனேவலால் இங்ஙனம் கூறிற்று.

உண்மையை யுணர்ந்து எடுத்துக் கூறின உய்ர்வை நோக்கி இதற்கு 'தனி' என்ற அடைமொழி ஏற்கும். சூரியனது தொழில் எதனலும் தடைப்படாததுபோல, இவனது தொழிலும் எதனலுந் தடுக்கப்படாதது என்ன, 'தினகரன் சிறுவன்' என்றார். (302)

243.—இதுவும், மேற்கவியும் - குளகம் : இந்திரன் கர்ணனுக்கு வேல் கொடுத்தல்.

அண்டர்யாவருமலர்மழைபொழிந்தனரந்தரதுந்துபியார்ப்பக்,
கொண்டல்வாகனன் கொண்டமெய்யொழிந்துதன்கோலமெய்யுடன்
வெளிநின்றருன், கண்டுமாமனமுருகியேகளித்திடுங்கன்னனுக்கந்நெடுங்
கடவுண், மண்டுபோரினில் வயந்தருமிதுவென மற்றொரு கொற்றவே
லெடுத்தே.

(இ - ள்.) (அங்ஙனங்கொடுத்தபொழுது), அண்டர் யாவரும் - தேவர்களெல்லோரும், அந்தர துந்துபி ஆர்ப்ப - ஆகாயத்திலுள்ள தேவதுந்துபி வாத்தியங்கள் முழங்க, அலர் மழை பொழிந்தனர் - புஷ்பவருஷத்தைச் சொரிந்தார்கள்; கொண்டல்வாகனன்-மேகத்தை வாகனமாகவுடைய இந்திரன், கொண்ட மெய் ஒழிந்து - (தான் கபட மாக) எடுத்த கிழப்பிராமண வடிவம் நீங்கி, தன் கோலம் மெய்யுடன் வெளி நின்றருன் - தனது அழகிய இயற்கையாகிய வடிவத்துடனே வெளிப்பட்டுநின்றான்; கண்டு - (அங்ஙனம் தேவராசனன இந்திரன் தன்னிடம் வந்து இரந்து பெற்றதைப்) பார்த்து, மா மனம் உருகி - பெருமைக்குணமுடைய தனது மனங் கரைந்து, களித்திடும் - மிக மகிழ்கிற, கன்னனுக்கு - கர்ணனுக்கு, அ நெடுங் கடவுள் - அந்தச் சிறந்த தேவனன இந்திரன், மற்று-பின்பு, மண்டு போரினில் வயம் தரும் இது என - 'கொடுமையாகிய மிக்க யுத்தத்தில் வெற்றியைக் கொடுக்கும் இவ்வாயுதம்' என்று கூறி, ஒரு கொற்றவேல் எடுத்து - வெற்றியைத்தருவதொரு வேலாயுதத்தைக் கையிலெடுத்து, (எ-று.) —'கொடுப்ப' என மேற்கவியோடு தொடரும்.

அலர்மழை பொழிதல் - பூக்களே மழைபோல மிகுதியாகச் சொரி தல்; அந்தர துந்துபி - வடசொற்றொடர். வாஹநம்-வகிப்பதென்று பொருள். வகித்தல் - சுமத்தல். காளமேகத்தை இந்திரனுக்கு வாகன மெனக் கூறுதல் கவிசமயம். தெய்வத்தன்மையால், கிரீனித்தலும் வேல் இந்திரன் கைக்கு வந்தது. யாவரும் மலர் என்றும்பிரிக்கலாம்.()

244. வெலற்கருந் திறல்விசயன்மேலொழித்துநீ வெஞ்சினம டங்கல்போனெஞ்சிற்,கலக்கமொன்றறப்பொருதிறல்புனைந்திடுகடோற் கசக்காலுதன்னுயிரே, யிலக்குவந்தெதிர்மலைந்தபோதிதற்கெனவே வெனமறையையுமியம்பிச், சொலற்கரும்புகழ்ச்சுரபதிகொடுப்பவத் தோன்றலுந்தொழுதுகைக்கொண்டான்.

(இ - ள்.) '(இந்த வேலாயுதத்தை), நீ—, வெலற்கு அரும் திறல்விசயன் மேல் ஒழித்து - (எவராலும்) வெல்லுதற்கு முடியாத வல்லமையையுடைய அருச்சுனன்மேற் பிரயோகிப்பதை விட்டு, வெம் னெம் மடங்கல்போல்-கொடியகோபத்தையுடைய ஆண்சிங்கம்

போல, நெஞ்சில் கலக்கம் ஒன்று அற - மனத்தில் நிலைகலங்குதல் சிறிதுமில்லாமல், பொரு - போர்செய்கிற, திறல் - வல்லமையை, புனைந்திடு - மேற்கொண்டுள்ள, கடோற்கசன் காளை தன் - (வீமன் மகனுகிய) கடோற்கசனென்னும் இளவீரனது, உயிரே - பிராணனே, எதிர் வந்து மலைந்தபோது - (அவன்) எதிரில் வந்து போர்செய்த பொழுது, இதற்கு இலக்கு என - இந்த ஆயுதத்துக்குக் குறியாக இருக்க, ஏவு - (இதனை அவன்மீது) பிரயோகிப்பாய்,' என - என்று சொல்லி, மறையையும் இயம்பி - (அதற்குரிய) மந்திரத்தையும் உபதேசித்து, சொலற்கு அரும்புகழ் சுரபதி - (எவராலுஞ்) சொல்லுதற்குமுடியாத கீர்த்தியையுடைய தேவராசனை இந்திரன், கொடுப்ப- (அந்தவேலைக்) கொடுக்க, அது தான்றலும் - அந்தக்கர்ணராசனும், தொழுது - (இந்திரனை) வணங்கி, கைக்கொண்டான் - (அவ்வாயுதத்தைப் பணிவோடு) பெற்றுக்கொண்டான்; (எ - று.)

வீமசேனன், மற்றைப் பாண்டவர்நால்வரையுங் குந்தியையுந் தோளிலேந்திக்கொண்டு, அரக்குமாளிகையினின்று தப்பிப் பிழைத்து, இடிம்பவனமென்னும் பெருங்காட்டை யடைய, அங்கு இடிம்பியென்னும் இராக்கதப்பெண் வந்து வீமனைக்கண்டு காதலித்து விவாகஞ்செய்துகொள்ளவேண்டுகையில், அவளது அண்ணனை இடிம்பனென்னும் இராக்கதன் வந்து வீமனை யெதிர்த்துப் போர்செய்ய, வீமன் தனது வலிமையால், அவனைக் கொன்றுதள்ளிவிட்டு, அவளை மணந்து, அவளிடம் கடோத்கசனென்னுங் குமாரனை யுண்டாக்கினனென்பது கீழ் வேத்திரகீயசருக்கத்திற் காண்க. அக்கடோற்கசன் பாண்டவர்க்குத் துணையாகவந்து போர் செய்யுமாறும், அப்பொழுது இவ்வேலினால் கன்னன் அவனைக் கொல்லுமாறும், மேற் பதினான்காம்போர் நாளிரவில் நிகழும். மடங்கல் - பிடரிமயிர் மடங்குதலையுடையதெனத் தொழிலாகுபெயராகிய காரணக்குறி யென்பர்; அடிக்கடி பின்னே திரும்பிப்பார்ப்பதென்ற தனால் வந்தபெயரென்பாருமுளர். (304)

245.—இந்திரன் கண்ணனிடம்சென்று நடந்ததைக் கூறுதல்.

நிரந்தரம்புகழ்நிலைபெறுங்கன்னனை நெஞ்சுறமகிழ்ந்தவணிறுத்திப், புரந்தரன்பசுந்தண்டுழாயணிந்திடும் புயல்வணனிருந்துழிப்போந்தே, யிரந்துசென்றுதான் மொழிந்ததுமவ்வளவீந்ததுமாங்கவற்கிசைத்தான், வரந்தருந்திருமாலதைவினவியவ் வாசவன்றனக்குரை வழங்கும்.

(இ - ள்.) (பின்பு), புரந்தரன் - இந்திரன், நெஞ்சு உற மகிழ்ந்து- மனம் மிகமகிழ்ச்சிபெற்று, நிரந்தரம் புகழ்பெறும் கன்னனை அவன் நிறுத்தி- இடைமாறுமல் [எப்பொழுதுங்] கீர்த்திநிலைபெற்ற கர்ணனை அவ்விடத்திலே நிற்கச்செய்து [தான் விடைபெற்றுக்கொண்டு], பசுந்தண் துழாய் அணிந்திடும் புயல்வண்ணன் இருந்த உழி போந்து - கர்ணனுடைய கண்ணபிரான் எழுந்தருளியுள்ள இடத்தை அடைந்து, —தான் சென்று இரந்து மொழிந்ததும்-தான் (கன்னனிடம்) போய்

யாசித்துச் சொன்னதையும், அவ்வளவு ஈந்ததும் - அம்மாத்திரத்தில் (அவன் தனக்குக்) கொடுத்ததையும், ஆங்கு அவற்கு இசைத்தான் - அவ்விடத்தில் [அப்பொழுது] அக்கண்ணனுக்குக் கூறினான்; வரம் தரும் திருமால் - (வேண்டிய) வரங்களையெல்லாங் கொடுத்தருளுகிற திருமகள் கொழுநனை கண்ணன், அதை வினவி- அந்த இந்திரன் வார்த்தையைக்கேட்டு, அவ்வாசவன் தனக்கு உரை வழங்கும் - அந்த இந்திரனுக்குத் தான் ஒருவார்த்தை கூறுவான்; (எ - று.)

புயல்வண்ணன் இருந்தவுழி - விதுரன்மாளிகை. மனம் மிக மகிழ்தற்குக் காரணம், கண்ணன் கட்டளைப்படியும் தான் விரும்பின படியும் அருச்சுனனுக்கு அபாயமுண்டாகாதவாறு கன்னனிடம் கவச குண்டலங்களைப்பெற்றுவிட்டது. 'அவ்வளவீந்ததும்' என்ற பாடத்துக்கு - வரையாதுகொடுப்பவனுகிய அக்கர்ணன் கொடுத்ததையுமென்க; வளம் - வள்ளல். எல்லாவரங்களையும் எல்லோருக்குந்தர வல்ல எம்பெருமான் இங்குத் தான் ஒருவனை இரந்ததும் மற்றொருவனை யிரக்கும்படி பிறனைத்தூண்டியதும் ஆகிய இவையெல்லாம், மனிதனுக அவதரித்ததறகேற்ற திருவிளையாடலேயாமென்பது தோன்ற, இங்கு 'வரந்தருந்திருமால்' என்றார். (305)

246.—கண்ணன் இந்திரனுக்குச் சில கூறுதல்.

உண்மையாகவெஞ்சமர்முகத்தெறிபடையொன்றும் வந்துடலுற வொட்டாத், திண்மையாலுயர்கவச குண்டலங்களைச் சென்றிரந்த வற்கிவன் கொடுத்தான், எண்மையாயினுங்கிளைஞரேயேற்பினுமியல் பிலாப்புன்செல்வரீயார், வண்மையாளர்தம்மாருயிர் மாற்றலார்கேட் பினுமறுக்கிலாரென்றே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ன்.) வெம் சமர் முகத்து - கொடிய போர்முனையிலே, எறிபடை ஒன்றும் வந்து - (பகைவர்) வீசுகிற ஆயுதமொன்றும் வந்து, உண்மை ஆக உடல் உற ஒட்டா - மெய்யாக உடம்பிற் படுதற்கு இடங்கொடாத, திண்மையால் - வலிமையினாலே, உயர்-சிறந்த, கவச குண்டலங்களை - கவசத்தையுங் குண்டலங்களையும், சென்று இரந்த வற்கு-போய் யாசித்தவனுக்கு, இவன் கொடுத்தான் - இக்கர்ணன் கொடுத்திட்டான்; இயல்பு இலா புல்செல்வர் - இயற்கையில் நற்குண மில்லாத இழிவான செல்வமுடையவர்கள், எண்மை ஆயினும் - (இரக்கப்படும் பொருள் தம்மாற் கொடுக்கப்படுதற்கு மிக) எளியதாயிருந்தாலும், இளைஞரே ஏற்பினும் - அதனையிரப்பவர் (நெருங்கிய) உறவினர் (அல்லது) நண்பர்களே) ஆனாலும், ஈயார் - (ஒன்றையும்) கொடுக்கமாட்டார்கள்; வண்மையாளர் - கொடையாளிகளோ வெனின், தம் ஆர் உயிர் - (இரக்கப்படுவது) தமது அரிய உயிரேயானாலும், மாற்றலார் கேட்பினும் - (அதனைப்) பகைவர்கள் வந்து இரந்தாலும், மறுக்கிலார் - தடுத்துக்கொடாதொழியார்கள்,

என்று - என்று சொல்லி, (எ - று.)—'விடை கொடுத்ததன்பின்', எனமேற்கவியோடு தொடரும்.

உத்தமரது தானச்சிறப்பை யெடுத்துக்கூறுவார், அதற்கு எதிராகிய அதமரது லோபகுணத்தின் இழிவையும் உடனெடுத்துக் காட்டினர். இங்கே 'கர்ணன் மிகுந்த கொடையாளி' என்ற சிறப்புப் பொருளை 'உத்தமரது உதாரகுணம் இத்தன்மையது' என்ற பொதுப் பொருள்கொண்டு விளக்கியது வேற்றுப்பொருள் வைப்பணி. இரந்தவற்கு - இரந்த உனக்கு என முன்னிலைப்படர்க்கை. உயிரினும் அரியது இனமுதலின், 'ஆருயிர்' எனப்பட்டது. ஆருயிர் - பண்புத் தொகை; இனி வினைத்தொகையாகக்கொண்டு, நிறைந்த [பஞ்ச] பிராணன்களென்றுமாம். எண்மையாயினும், நிலைஞரே யேற்பினும், ஆருயிர்மாற்றலார் கேட்பினும் என்றவற்றால், உலோபிகளுக்கும் உதாரகுணமுடையார்க்கும் உள்ள வேறுபாடு நன்குவிளக்கப்பட்டது. வண்மையாளர் - வண்மைக்குணத்தை யாளபவர். மாற்றலார் - தம்மிடத்து மனத்தை மாற்றுதலுடையவரென உடன்பாட்டுக் குறிப்பு வினையாலணையும்பெயராகிய காரணக்குறி. பின் இரண்டடி - உலக இயற்கை கூறியது. எண்மை என்னும் பண்புப் பெயரில் எள் - பகுதி; அது இகரம் பெற்று எளிமையென்றும் நிற்கும். செல்வம் படைத்ததற்குப் பயன் பிறர்க்குக் கொடுத்தலேயாதலால், அத்தன்மையில்லாதாரை, 'இயல்பிலாப் புன்செல்வர்' என்றார். (306)

247.—கண்ணன் குந்தியைக் கர்ணனிடம் அனுப்புதல்.

வாசவன்றனக்குவிடைகொடுத்ததன்பின்வந்தகாரியந்தனை முடிப்பான், கேசவன்றனதுதாதையோடுதித்த கேண்மைகூர் தெரிவையைக் கிட்டித், தேசவன்றந்தகுரிசில்பால்விரைவிற் செல்கெனப் பயந்த சேயிழையும், பாசமுன்னுறமாலேவலாற்றனது பாதபங்கயஞ்சிவப் பித்தாள்.

(இ - ள்.) வாசவன் தனக்கு - இந்திரனுக்கு, விடைகொடுத்ததன் பின் - செலவு கொடுத்தனுப்பியபின், கேசவன் - கண்ணன், வந்த காரியந்தனை முடிப்பான் - (தான் திருவுள்ளத்திற்கருதி) வந்த தொழிலை நிறைவேற்றும்பொருட்டு, தனது தாதையோடு உதித்த கேண்மை கூர் தெரிவையை கிட்டி - தனது தந்தையாகிய வசுதேவருடன் பிறந்த [தனது அத்தையாகிய] (யாவரிடத்தும்) அன்பு மிக்க குந்திதேவியை அடைந்து, தேசவன் தந்தகுரிசில்பால் விரைவின் செல்க என - ஒளிமிகுதியையுடைய சூரியன் பெற்ற குமாரனாகிய கர்ணனிடத்திற் சீக்கிரமாகச் செல்வாயென்று சொல்ல,—பயந்த சேயிழையும் - (அவனைப்) பெற்றவளான குந்திதேவியும், பாசம் முன்உற - (மைந்தனுடைய கன்னன்பக்கல்) அன்பு (தனக்கு) முன் செல்ல, மால் ஏவலால் - கண்ணனது கட்டளைப்படி, தனது பாதபங்கயம் சிவப்பித்தாள் - தன்னுடைய தாமரைமலர்போன்ற கால்களைச் சிவக்கச்செய்தாள்; (எ - று.)

முன்னே - இராமாவதாரத்தில் சூரியகுமாரனை சுக்கிரீவன் பக்கத்திற் சேர்ந்து இந்திரபுத்திரனை வாலியை வதைத்ததற்குப் பிரதியாக இவ் வவதாரத்தில் இந்திரகுமாரனை அருச்சுனன்பக்கல் சேர்ந்து சூரியபுத்திரனை கர்ணனை அழித்தருளுகின்றபோலும், தெரிவை - இங்கே பெண்ணென்னும் மாத்திரமாய்நின்றது; அப்பருவத்துக்கு வயதெல்லை - இருபத்தாறு முதல் முப்பத்தொன்றளவும். தேசு - கிரணம்; அதனையுடையவன், தேசவன். சேயிழை யென்பதற்குச் சிவந்த [செம்பொன்னாலாகிய] ஆபரணங்களையுடையவளென்று பொருள்; பண்புத்தொகை யன்மொழி; செம்மை இழையெனப் பிரிக்க. இழை - இரத்தினங்களை யிழைத்துச் செய்வதென ஆபரணமாம்; இனி, இழையென்னும் நூலின்பெயர் சினையாகு பெயராய், ஆடையையுணர்த்துவ தென்றுங் கொள்ளலாம். (307)

248.—தனது மாளிகைக்கு வந்த குந்திதேவியைக் கர்ணன் எதிர்கொண்டு சென்று உபசரித்தல்.

வந்துகுந்திநின்கோயிலெய்தினளெனவாயிலோருரைத்திட மைந்தன், முந்துமன்புடன்றொழுதெதிர் கொண்டுநன்முறைமையாலாசனத் திருத்தி, யிந்துவின்கதிர்கண்டுமேன்மேலுமுற்றிரங்கிவான்கரைகடந் தேறுஞ், சிந்துவெண்டிரைச்சிந்துவொத்துருகுந் தெரிவையோடுரை சிலசெப்பும்.

(இ - ள்.) (இங்ஙனம் குந்தி கர்ணன்வீட்டுக்கு நடந்து சென்றதும்), குந்தி வந்து நின் கோயில் எய்தினள் என வாயிலோர் உரைத்திட - குந்திதேவி வந்து உனது சிறந்த அரண்மனையை அடைந்தாளென்று வாயில் காவலாளர் சொல்ல, மைந்தன் - புத்திரனாகிய கர்ணன், முந்தும் அன்புடன் - மிகுந்த அன்புடனே, எதிர்கொண்டு - எதிர்கொண்டுவந்து, தொழுது - வணங்கி, நல் முறைமையால் - (சாஸ்திரங்களில் தாய்க்குச் செய்யும்படி சொன்ன) நல்ல உபசார முறைதவறாமல், ஆசனத்து இருத்தி - (சிறந்ததோர்) ஆசனத்திலே வீற்றிருக்கச்செய்து, இந்துவின் கதிர் கண்டு மேல் மேலும் உற்று இரங்கி வான் கரை கடந்து ஏறும் சிந்து வெள் திரை சிந்து ஒத்து உருகும் தெரிவையோடு - சந்திரனது கிரணத்தைப் பார்த்து (மிகமகிழ்ந்து) மேலேமேலே பொங்கி ஒலித்துப் பெரிய கரையைக் கடந்து மீதெழுகிற வீசுகிற வெண்மையான அலைகளையுடைய கடலைப்போன்று மனம் மிக மகிழ்கிற அக்குந்தியுடனே, சில உரை செப்பும் - சிலவார்த்தைகளைக் கூறுவான்; (எ - று.)

சந்திரனைக் கண்டமாத்திரத்தில் கடல் பொங்குவது பிரசித்தம். சூரியபுத்திரனை கர்ணனுக்குச் சந்திரனையும், அவனது தாய்க்குச் சந்திரனுக்கு உற்பத்தி ஸ்தானமான கடலையும் உவமை கூறினர். இந்து - வடசொல். நான்காமடியிலுள்ள சிந்துவென்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது - தமிழ்வினைப் பகுதி; பின்னது - ஸிந்து வென்னும் வடமொழிப்பெயர். (308)

249.—குந்தி கர்ணனேநோக்கி 'நான் உனக்குத் தாய்' என்றல்.

அன்னைவந்ததென்னருந்தவப்பயனெனவன்பினுள்ளின்புறவணங்கி, யென்னைவந்தவாறென்னமற்றவளுமே யீன்றதாயானுனக்கென்று, முன்னைவந்தொருமந்திரந்தவமுனி மொழிந்ததுங் கதிரவனருளாற், பின்னைவந்ததும்பேழையிற்விடுத்ததும் பிழைபிறா துரைத்திடக் கேட்டே.

இதுமுதல் மூன்று கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) 'அன்னை - தாயே! வந்தது - (நீ என்னிடம்) வந்தது, என் அருந்தவம் பயன் - எனது அருமையான தவத்தின் பயனும்', என - என்று சொல்லி, அன்பினுள்—, இன்பு உற வணங்கி-மகிழ்ச்சி பொருந்த (அவளை) நமஸ்கரித்து, வந்த ஆறு என்னை என்ன - '(நீ இங்கே) வந்த காரியம் என்ன?' என்று கேட்க,—மற்று - பின்பு, அவளும் - அக்குந்தியும், யான் உனக்கு ஈன்ற தாய் என்று - 'நான் உனக்குப் பெற்றதாயாவேன்' என்று (முதலிற் சுருக்கமாகக் கூறி), (உடனே),—தவம் முனி - தவத்திற் சிறந்த துர்வாசமுனிவன், முன்னை - இளம்பிராயத்திலே, வந்து—, ஒரு மந்திரம் - ஒரு மந்திரத்தை, மொழிந்ததும் - (தனக்கு) உபதேசித்தருளினதையும், கதிரவன் அருளால் - சூரியனது அனுக்கிரகத்தால், பின்னை - பின்பு, வந்ததும் - (கன்னன்) பிறந்ததையும், பேழையில் விடுத்ததும்-(தான் அவனைப்) பெட்டியில் (வைத்து நதியிற்) செலுத்தினதையும், (ஆகிய வரலாறுகளை), பிழை இலாது உரைத்திட - தவறுதலில்லாமற் சொல்ல, கேட்டு - (கர்ணன்) செவியுற்று,—(எ - று.)—'மதித்து' என மேற்கவியோடு குளகமாக இயையும்.

அன்னை - அண்மைவிளி; அன்னையாகிய நீ என முன்னிலைப் படர்க்கையுமாம். "சாபத்தாலுஞ் சாபமொழிதன்னால் வளருந்தவத்தாலுங், கோபத்தாலும் போர்படைத்த கொடிய முனிவன் துருவாசன்,' ஆதலால், 'தவமுனி' என்றார். உனக்கு ஈன்ற தாய் - நான் காம் வேற்றுமை முறைப்பொருளது. (309)

250.—கர்ணன் சில கூறி அதனை மறுத்தல்.

மாயனுர்விரகிதுவென மனத்தினின் மதித்துவந்தளித்திடும் வள்ளல், நீயநாளெனைப் பயந்தவளென்னினு நின்மொழி நெஞ் சுறத்தேறேன், பேயனுர்சிலர் பேரறிவின்மையாற் பெற்றதாயெனக் கெனவந்து, தூயநாகரினமைந்ததோர் துகிலாற்றுன்பமுற்றென்புரு வானுர்.

(இ - ள்.) உவந்து அளித்திடும் வள்ளல் - (தன்னை வந்து அடைபவர்க்கு வேண்டிய பொருள்களை) மகிழ்ச்சியோடு கொடுத்திருக்கிற உதாரகுணமுள்ளவனுகிய கர்ணன்,—இது மாயனுர் விரகு என மனத்தினில் மதித்து - (இங்ஙனம் இவள் சொல்லும்) இது கண்ண பிரானது வஞ்சனையாக இருத்தலுங் கூடுமென்று மனத்திலே

னீனைத்து, (அவனீ நோக்கி),—'நீ அ நாள் எனீ பயந்தவள் என்னினும் - நீ அக்காலத்தில் என்னீனப்பெற்றவளென்று சொன்னலும், நின் மொழி நெஞ்சு உற தேறேன் - உன்வார்த்தையை மனத்திற் பொருந்த நம்பமாட்டேன்; பேய் அனர் சிலர் - பேயை யொத்தவராகிய சில மகளிர், பேர் அறிவு இன்மையால் - சிறந்த அறிவு இல்லாமையால், எனக்கு பெற்ற தாய் என வந்து - எனக்கு ஈன்ற தாயாவேனென்று (தனித்தனி உறவு) கூறி வந்து, தூயநாகரின் அமைந்தது ஓர் துகிலால் - பரிசுத்த குணமுள்ள தேவர்களால் அமைக்கப்பட்ட தொரு வஸ்திரத்தால், துன்பம் உற்று - மரணவேதனையடைந்து, என்பு உரு ஆனர் - எலும்பு மாத்திரம் மிகுந்த வடிவமானர்கள்;

இன்னுள் பெற்ற பிள்ளீ யென்று ஏற்படாத கர்ணன் மிகுந்த உதாரகுணமுடையவனுக இருந்ததனுல் உலகத்தில் பணப்பித்துக் கொண்ட பல மகளிர் இவனிடம் வந்து தாம் தாம் தாயென்று கூறிச் செல்வம் பறிக்க முயல, அதனீ நோக்கிக் கர்ணன் தேவர்களீ வேண்டவே, அவர்கள் தெய்வத்தன்மையுள்ள ஓராடையைத் தந்து 'உண்மையான தாயொருத்தியொழிய வேறு எவரேனும் தாயென்று வருபவர் இதனீ உடுத்தால் இறப்பர்' என்று சொல்லிப் போக, அங்ஙனம் அவனுற் பரீட்சிக்கப்பட்டுப் பல தாய்மார் அச்சேலியால் உடலெரிபட்டு ஒழிந்தனரென வரலாறு காண்க. பேய் - வந்த பூதனீ யென்னும் பேய்மகளாகவுமாம். அந்நாள் - அகாளென எதுகைப் போருத்த நோக்கிய தொகுத்தல். (310)

வேறு.

251.—கர்ணனளித்த ஆடைகளீத் தரித்துக் குந்தி அழியாதிருத்தல்.

அடாதுசெய்தவர் படாதுபட்டனரென மங்கர்கோனருண்மொழி கேட்டுத், தடாதவன்புடைக்கெடாததூமொழி பகர்தையலு மையலிற் றவிர்ந்து, படாமதென்கையிற் றருகெனவருதலும்பயத்திலேனெனி லெனீமுனியென், றெடாவிரித்தலீத் துடற்படப்போர்த் தெதிரீன்ற தாயாமெனவிருந்தாள்.

(இ - ள்.) 'அடாது செய்தவர் - தகாத காரியத்தைச் செய்தவர்கள், படாது பட்டனர் - படுதற்கரிய பாடுபட்டு இங்ஙனம் ஒழிந்தார்கள்,' எனும் - என்று சொன்ன, அங்கர்கோன் அருள் மொழி - கர்ணனது கருணையோடு கூடிய வார்த்தையை, கேட்டு—, தடாத அன்பு உடைகெடாத தூ மொழிபகர் தையலும் - (எவராலும்) தடுக்கப்படாத அன்புடையவளும் குற்றமில்லாத பரிசுத்தமான சொற்களீச் சொல்பவளுமாகிய அழகிய அக்குந்தியும், மையலின் தவிர்ந்து - மயக்கத்தினின்று நீங்கி, படாம் அது என் கையில் தருக என - 'அந்த வஸ்திரத்தை எனது கையிலே கொடுப்பாய்' என்று சொல்லி, வருதலும் - (அவனுற் கொடுக்கப்பட்டு அது தன் கைக்கு) வந்த வளவிலே,—பயந்திலேன் எனில் எனீ முனி என்று - ('யான் இவனீப்) பெற்றவளல்லேனுனுல் என்னீக் கோபித்தழிப்பாய்' என்று (அத்தெய்வ வஸ்திரத்தை நோக்கிச்) சொல்லி, நாடா விரித்து

அலைத்து உடல் படபோர்த்து-(அதனை) எடுத்துப் பிரித்து உதறித் தன் உடம்பிலே படும்படி போர்த்துக்கொண்டு, எதிர் - (அக்கர்ண னது) எதிரிலே, ஈன்ற தாய்ஆம் என - பெற்றதாய் இவளேயாம் என்னும்படி, இருந்தாள் - வீற்றிருந்தாள்; (எ - று.)

அடாது - பொய்யுறவுகூறுதல். அடாது, படாது - எதிர்மறை ஒன்றன்பால் வினையாலணையும்பெயர்கள். "அறந்துறந்தென்று மடாதன செய்தாலார்கொலோ படாதனபடாதார்" என்றார் கீழ்ச் சடாசுரன் வதைச்சருக்கத்தும். 'அடாதுசெய்தவர் படாதுபடுவர்' என்பது ஒரு பழமொழி. எனும் மொழியென இயையும். இவள் பொய்த் தாயாயின் வீணை இறக்கலாகாது என்ற நல்ல கருத்தோடுங் கூறியதனால், "அருள்மொழி" எனப்பட்டது. தையல் - அழகுடைய வர்க்குப் பண்பாகுபெயர். மையலிற்றவிர்ந்து - என்னுருமோ வென்ற சங்கையில்லாம லென்றபடி; இவள் இங்ஙனம் மையலிற் றவிர்ந்தது, கண்ணன் பேச்சிலுள்ள விசுவாசத்தால். படாம் - பட மென்னும் வடசொல்லின் திரிபு; 'முகபடாம்' என்பதிலுங் காண்க.

இதுமுதற் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் இரண்டு நான்கு ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள்: கீழ் 247 - ஆம் கவியும் இவ்வாறே. (311)

252.—அதுகண்டு வியந்த கர்ணனை நோக்கிக் குந்தி சிலகூறுதல்.

இருந்ததாயின்றவன்றுபோலுருகி யிருதடங்கொங்கைபால் சொரிந்தாள், அருந்துவான்போல விரவிசெய்விரும்பியாதரத்துடன் புளகாளன், புரிந்ததாயன்போடிறுகுறத்தழுவிப்பொன்முடிமோயின ளுயிராப், பரிந்துநானன்றேயுனைவளர்த்தெடுக்கப் பாக்கியஞ்செய் திலேனென்றாள்.

(இ - ள்.) இருந்த தாய் - (இங்ஙனம் ஆசனத்தில்) வீற்றிருந்த தாயான குந்திதேவி, ஈன்ற அன்றுபோல்-பெற்ற அந்நாளிற்போல, உருகி - மனம் மிக அன்புகொண்டு, இருதட கொங்கைபால் சொரிந் தாள் - தனது பெரிய இரண்டு தனங்களினின்றும் பாலைச் சொரிய விட்டாள்; (அப்பொழுது), இரவி சேய் - சூரியபுத்திரனை கர்ணன், விரும்பி - (தாய்பக்கல்) அன்பு கொண்டு, அருந்துவான்போல-(அம் முலைப்பாலை) உண்பவன்போல, ஆதரத்துடன் - ஆசையுடனே, புளகு ஆளன் - உடம்பு மயிர் சிலிர்க்கப்பெற்றான்; புரிந்த தாய் - (இங்ஙனஞ்) செய்த தாயான அக்குந்தி, அன்போடு—, இறுகுற தழுவி - (அவனை) நன்றாக அணைத்துக்கொண்டு, பொன் முடி மோயினள் உயிரா - அழகிய அவனது உச்சியை மோந்துபெருமூச்சு விட்டு, நான் உனை அன்றே பரிந்து வளர்த்து எடுக்க பாக்கியம் செய்திலேன் என்றாள் - 'நான் உன்னைப்பெற்ற அக்காலத்திலேயே அன்பு கொண்டு எடுத்துவளர்க்க நல்வினைப்பயன் பெற்றேனில்லை' என்று கூறினாள்; (எ - று.)

மிக்க அன்பினால், இப்பொழுது தனங்களிற் பால் சுரந்தது. "அன்றன்போ டெடுத்தணைத்து முகிலக்கணூற லமுதூட்டி,' என்பர் மேற்கன்னபருவத்தும். மோயினள் - முற்றெச்சம்; "மோயின ஞயிர்த்தகாலை" என்றார் பிறரும். மோ - பகுதி, ய் - எழுத்துப் பேறு, இன் - இறந்தகால இடைநிலை, அள் - பெண்பால்விகுதி. உடம்பில் மயிர் சிலிர்த்தல், அன்பின் மெய்ப்பாடு. ஆதரம், புளகம், பாக்யம் - வடசொற்கள். பாக்கியம் - அதிருஷ்டம்; நல்லூழ்ப்பேறு. இறுகுற - அழுந்த. 'பால்சுரந்தாள்' என்றும் பாடம். (312)

253. வருகவென்மதலாயிகளுரைவருநின் மலரடியன்பினால் வணங்கி, யுரிமையான்மனமொத்தேவலேபுரியவொருதனிச்செய்ய கோலோச்சி, யரசெலாம்வந்துன்கடைத்தலைவணங்க வாண்மை யுஞ் செல்வமும்விளங்கக், குருகுலாதிபர்க்குங்குரிசிலாய்வாழ்வு கூர்வதே கடனெனக் குறித்தாள்.

(இ - ள்.) (பின்பு குந்தி கர்ணனைப்பார்த்து), 'என் மதலாய் - எனது புத்திரனே! வருக - (என்னுடன்) வருவாயாக; இளைஞர் ஐவரும் - (பாண்டவர்களாகிய உன்) தம்பியரைந்துபேரும், நின்மலர் அடி அன்பினால் வணங்கி - உனது தாமரை மலர்போலும் பாதங் களை அன்பால் நமஸ்கரித்து, உரிமையால் - க்ஷத்திரியதரும முறைப் படி, மனம் ஒத்து ஏவலே புரிய-மனம் ஒருமித்து (நீயேவின) சிறுகுற் றேவல் தொழில்களையே செய்ய, ஒருதனி - ஒப்பற்ற தனியாய், செய்ய கோல் ஓச்சி - (நீ) செங்கோலை நடத்தி, அரசு எலாம் வந்து உன் கடைத்தலை வணங்க - அரசர்களெல்லாரும் வந்து உனது வாயிற்புறத்தில் நின்று வணங்கவும், ஆண்மையும் செல்வமும் விளங்க - வீரமும் செல்வமும் விளங்கவும், குருகுல அதிபர்க்கும் குரிசில் ஆய் - குருகுலத்து அரசர்கட்கெல்லாம் அரசனாய், வாழ்வு கூர்வதே-வாழ்க்கை மிக வேண்டுவதே, கடன் - (நீ செய்தற்கு உரிய) கடமை,' என - என்று, குறித்தாள்-குறிப்பிட்டுக் கூறினாள்; (எ-று.)

மதலாய் - மதலையென்பது ஈறுதிரிந்த விளி. ஏவலே புரிய - அரசுபுரியாம லென்றபடி. ஒருதனி - தன்னந்தனியே. தலைக் கடை - கடைத்தலை; இலக்கணப்போலி. (313)

254.—இதுவும் மேற்கவியும் ஒருதொடர்: அதுகேட்டுக் கர்ணன் குந்தியை நோக்கிக் கூறுவன.

பெற்றநீர்மகவன்பிலாமையோவன்றிப்பெரும்பழிநாணியோவிடுத் தீர், அற்றைநாட்டொடங்கி யென்னையின்றளவு மாருயிர்த்துணை யெனக்கருதிக், கொற்றமாமகுடம்புனைந்தரசளித்துக் கூடவுண்டுரிய தம்பியருஞ், சுற்றமானவருமென்னடிவணங்கத்தோற்றமுமேற்றமு மளித்தான்.

(இ - ள்.) பெற்ற நீர் - (என்னை) ஈன்ற நீர், மகவு அன்புஇலா மையோ - புத்திரவாற்சலிய மில்லாமையினாலோ? அன்றி - அல்லது, பெரு பழி நாணியோ-பெரியலோகாபவாதத்துக்கு வெட்கப்பட்டோ? விடுத்தீர் - (என்னை) விட்டுவிட்டீர்; அற்றை நாள் தொடங்கி-அன்

றையதினம் முதல், இன்று அளவும் - இன்றைவரையிலும், என்னை —, ஆர்உயிர் துணை என கருதி - அருமையான உயிரோடொத்த நண்பனெகினனைத்து, (துரியோதனன்), கொற்றம் மா மகுடம்புனைந்து வெற்றியை விளக்குகிற சிறந்தகிரீடத்தை (எனக்கு)ச் சூட்டி, அரசு அளித்து - (அங்கதேசத்து) அரசாட்சியையுங் கொடுத்து, கூட உண்டு - (என்னை) உடன்வைத்துக்கொண்டு புசித்து, உரிய தம்பியரும் சுற்றமானவரும் என் அடி வணங்க - (அவனுக்கு) உரிய தம்பிமார்களாகிய துச்சாதனன் முதலியோரும் (மற்றும்அவனுடைய) உறவினரானவர்களும் எனது பாதங்களை நமஸ்கரிக்க, தோற்றமும் ஏற்றமும் அளித்தான் - பிரசித்தியான பேரையும் உயர்வையும் (எனக்குக்) கொடுத்தருளினன்; (எ - று.)

இவள் பழிநாணி விடுத்தது, அன்பில்லாது விடுத்ததுபோலு மாதலால் இதுவோ அதுவோ என விகற்பித்தான். அன்று + நாள் = அற்றைநாள். தோற்றம் - தோன்றுவதான புகழுக்குக் காரணப் பெயர். (314)

255. மடந்தைபொற்றிருமேகலைமணியுகவே மாசறத்திகழுமே காந்த, விடந்தனிற்புரிந்தேநானயர்ந்திருப்பவெடுக்கவோகோக்கவோ வென்றான், திடம்படுத்திட வேலிராசராசனுக்குச்செருமுனைச் சென்று செஞ்சோற்றுக், கடன்கழிப்பதுவேயெனக்கினிப் புகழுங் கருமமுந்தரு மமுமென்றான்.

(துரியோதனனுக்குத் தன்னிடத்தில் மிகுந்த விசுவாசம் [நம்பிக்கை] எனத் தெரிவித்தற்கு, முன்னே நடந்ததொரு அந்தரங்கமான செய்தியைக் கர்ணன் எடுத்துக் கூறுகிறான்.)

(இ - ள்.) மாசு அற திகழும் ஏகாந்தம் இடத்தனில் - குற்றமில்லாமல் விளங்குவதொரு இரகசியமான இடத்திலே, நான் —, மடந்தை பொன் திரு மேகலை மணி உக புரிந்து - (துரியோதனன் மனைவியான) பானுமதியினது பொன்னிழையாகிய அழகிய மேகலாபரணத்தின்மணிகளைச் சிந்தும்படி செய்து, அயர்ந்து இருப்ப - செயலற்றுச் சிந்தித்திருக்க, (அப்பொழுது துரியோதனன் வந்து), எடுக்கவோ கோக்கவோ என்றான் - (இம்மணிகளை நான்) எடுத்துக்கொடுப்பேனகவா? கோத்துக்கொடுப்பேனகவா? என்று (எனக்கு அச்சம்நீங்கும்படி அன்போடு) கேட்டான்; (அப்படிப்பட்ட), வேல் இராசராசனுக்கு - வேலில்வல்ல துரியோதனராசனுக்கு, திடம்படுத்திட - உறுதியை உண்டாக்குதற்கு, செருமுனை சென்று - (நான்) போர்க்களத்திலே போய், செம் சோறு கடன்கழிப்பதுவே - (அவன்) செவ்வையாகப் போகட்டு வந்த சோற்றுக்கு உரிய கடனைத்தீர்ப்பதே, எனக்கு இனி புகழும் கருமமும் தருமமும் - எனக்கு இனிமேல் கீர்த்தி தருவதும் செய்தக்கதொழிலும அறமுமாம், என்றான் - என்று (கன்னன் குறிப்பினையறிந்து) கூறினன்; (எ - று.) இங்ஙனஞ் சொல்லித் துரியோதனனைவிட்டுப் பாண்டவரிடம் வரமாட்டேனென்று கன்னன் தடுத்தான்.

"வெஞ்சோற்றே டினிதருந்தி யமுதருந்தும் விண்ணவர்போலுந்நெடு நாள் விழைந்துவாழ்ந்தேன், செஞ்சோற்றுக்கடனின்றே

கழியேனுகில் திண்டோள்கள் வளர்த்ததனற் செயல்வேறுண்டோ'' ''செருவிலெனதுயிரனைய தோழற்காகச் செஞ்சோற்றுக் கடன்கழித்தேன்' எனக் கன்னபருவத்துக் கூறுமாறுங்காண்க முன்புஒருநாள் கர்ணன் துரியோதனன்மனைவியான பானுமதியோடு தனிமையான இடத்திற்சூதாட்டமாடிக் கொண்டிருக்கையில் துரியோதனன் தூரத்தில் வருதலைக்கண்டு பானுமதி எழுந்துசெல்ல, அவன் வருதலைப் பாராத கர்ணன் ஆட்டத்தின்நடுவில் எழுந்துசெல்லலாகாதென்று அவள்மடியைப்பற்றி இழுத்தபொழுது, மேகலையறுந்து மணிகள் உதிரவே, அச்சமயத்தில் துரியோதனன்வந்ததைநோக்கிக் கன்னன் அஞ்சிவெள்கி என் செய்வதென்று அலமருகையில், அத்துரியோதனன், கன்னன் அஞ்சாதபடி 'இம்மணிகளை நான் எடுத்துக் கோத்துக் கொடுக்கட்டுமா?' என்று கேட்டனனென்பது வரலாறு. பாரதவெண்பாவிலும் இவ்வரலாறு கூறப்பட்டுள்ளது. செஞ்சோறு - சிறந்த அன்னம்; அறுசுவையோடு கூடிய உணவு; மானக்குறைவு இல்லாதபடி இட்டுவந்தது. மேகலை - எட்டுக்கோவையுடையது; ''எண்கோவைமேகலை'' என்பதுகாண்க. (315)

256.—குந்தி வருந்துதல்.

பின்னையும்பற்பன்மொழிந்தபின்பலவும்பேசியென்பூசலோவிளைந்தது, உன்னிநீரிங்குவந்ததென்கரவாதுண்மையாலுள்ளவாறுரைமின், என்னமைந்தனுமிப்பரிசினுலுரைப்ப வீன்றதத்துறந்தவன்றையினும், அன்னைநெஞ்சழிந்தேயிருகணீர்சொரியவலறிவாய்குழறிநொந்தழுதாள்.

(இ - ள்.) மைந்தனும் - புத்திரனை கர்ணனும், பின்னையும் பலபல மொழிந்தபின் - பின்னும் அநேகவார்த்தைகளைச் சொன்னபின்பு, 'பலவும் பேசி என் - பலவார்த்தைகளையுஞ் சொல்லிப் பயன் என்ன? பூசலோ விளைந்தது - யுத்தமோ உண்டாகிவிட்டது; நீர் இங்கு உன்னி வந்தது என் - நீர் இவ்விடத்தில் [என்னிடத்தில்] நினைத்துவந்த காரியம் யாது? கரவாதுஉண்மையால் உள்ள ஆறு உரைமின் - ஒளிக்காமல் மெய்யாக உள்ளபடிசொல்லும்,' என்ன - என்று, இப்பரிசினுல் உரைப்ப - இந்தவிதமாகச் சொல்ல,—அன்னை - தாயான குந்தி, ஈன்று அற துறந்த அன்றையினும் - பெற்று (உடனே) நீங்கும்படி விட்ட அந்நாளினும் (அதிகமாக), நெஞ்சு அழிந்து - மனம்வருந்தி, இருகண் நீர் சொரிய - தனது இரண்டு கண்களினின்றும் நீர் பெருக, அலறி - கதறி, வாய்குழறி-வார்த்தை தடுமாறி, நொந்து - வருந்தி, அழுதாள் - புலம்பினுள்; (எ - று.)

இங்கே 'பெற்றமனம்பித்து, பிள்ளைமனங் கல்லு' என்ற பழமொழியை அறிக. 'உன்னி நீர் இங்கு வந்தது என்' என்பதற்கு - இப்பொழுது நீர் கருதி வந்ததனல் என்ன பயனென்று உரைப்பினும் அமையும். 'அறற்றுறந்த' என்ற பாடத்துக்கு—அறல் - நீரிலே, துறந்த - விட்ட என்க; பழிக்கு அஞ்சி விட்டவளேயன்றி அன்பின்றி விட்டவளல்லளாதலால், அக்காலத்து மிகுந்த சோகமுற்றேயிருப்பள். விளைந்தது என் இறந்தகாலத்தாற் கூறினது, இனித்தவருதென்ற துணிவால். (316)

257.—குந்தியைக் கர்ணன் தேற்றுதல்.

ஆண்டுமாமகனுமிருகணீர்துடைத்தவ்வன்னையைப்பன்முறை தேற்றி, மூண்டவல்வினையின்பயனலாதியார்க்கு முயற்சியால்வருவ தொன்றுண்டோ, வேண்டும்யாவையுமே தருகுவேனீரும் வேண்டிய வேண்டுகவென்னப், பாண்டுவின்றிருமா மகனைவியு மதற்குப்பண்பினு லின்னனபகர்வாள்.

(இ - ள்.) ஆண்டு - அப்பொழுது, மா மகனும் - பெரிய முதற் புத்திரனான கர்ணனும், இரு கண் நீர் துடைத்து - (அவளது) இரண்டு கண்களினின்றும் பெருகுகிற நீரைத் துடைத்து, அ அன்னையை பல் முறைதேற்றி - அப்படி அழுகிற தாயைப் பலதரம் சமாதானப்படுத்தி, 'மூண்ட வல்வினையின் பயன் அலாது யார்க்கும் முயற்சியால் வருவது ஒன்று உண்டோ - (முற்பிறப்பிற் செய்யப் பட்டு இப்பிறப்பிற்)பயன்தரநின்ற வலியகருமத்தின் பயன் நேர்வதே யல்லாமல் எவர்க்கும் தமது பிரயத்தனத்தால் விளைவதொரு பயன் உண்டோ? [இல்லை யென்றபடி], வேண்டும் யாவையுமே தருகுவேன்- (யான எல்லோருக்கும்) விரும்பிக் கேட்ட பொருள்கள் எல்லாவற்றை யுமே கொடுக்கும் இயல்புடையேன்; (ஆதலால்), நீரும் வேண்டிய வேண்டுக - நீரும் (இது தவிர) உமக்கு வேண்டிய பொருள்களை வேண்டுவீராக,' என்ன - என்று சொல்ல, பாண்டுவின் திரு மா மனைவியும் - பாண்டுமகாராசனது சிறந்த பெரிய மூத்தமனைவியான குந்தியும், அதற்கு - (அக்கன்னன்) வார்த்தைக்கு, பண்பிலை-இனி மையாக, இன்னன பகர்வாள் - இவ்வார்த்தைகளைக் கூறுவாள்; (எ - று.)—அவற்றை, மேற்கவியிற் காண்க.

முன்னைய ஊழ்வினைப் பயன்படியே நடக்கும்; நான் வரும்படி நீர் செய்கிற முயற்சி பயன்படாததைப்பற்றி வருந்தவேண்டா என் பது, இரண்டாமடியின் கருத்து. வேண்டிய - பெயர். (317)

258.—குந்தி கர்ணனிடம் வரம் வேண்டுதல்.

பார்த்தன்வெஞ்சமரினின்னுடன்மலைந்தாற்பகைப்பெரும்பாந்தளம் பகழி, கோத்தலும்பிழைத்தான்மறித்துநீவிடுத்துக்கோறலென்றொரு வரங்குறித்தாள், வாய்த்தமற்றவர்களிலாஞரென்றவரை மலைய லென்றொருவரங்குறித்தாண், மூத்தவன்காதலிலாஞர்தம்பொருட்டான் மொழிந்தமைகேட்டிவைமொழிவான்.

(இ - ள்.) 'பார்த்தன் - அருச்சுனன், வெம்சமரில் - கொடியயுத் தத்தில், நின்னுடன் மலைந்தால் - உன்னுடன் போர்செய்தால், (அப் பொழுது நீ), பகை பெரு பாந்தள் அம் பகழி - (இவனுக்கு முன்னே தொடங்கிப்) பகையாயுள்ள பெரிய சிறந்த நாகாஸ்திரத்தை, கோத்த லும் - (அவன்மேல் ஒருதரம்) தொடுத்தவளவில், பிழைத்தால் - (அவன் அதற்குத்) தப்பிப் பிழைப்பானுனால், மறுத்தும் நீ விடுத்து கோறல் - மறுபடியும் (அந்த அஸ்திரத்தை) நீ (அவன்மேற்) பிரயோ கித்து (அவனை)க் கொல்லாதே,' என்று ஒரு வரம் குறித்தாள் -

என்று சொல்லி ஒரு வரத்தைக் குறிப்பிட்டு வேண்டினாள்; 'வாய்த்த மற்றவர்கள் - பொருந்தின மற்றைப் பாண்டவர்கள் நால்வரை, இளைஞர் என்று - தம்பிமார்களெனக் கொண்டு, அவரை மலையல்-அவர்களைக் கொல்லாதே,' என்று ஒருவரம் குறித்தாள்—: மூத்தவன் - தமையனான கர்ணன், காதல் இளைஞர்தம் பொருட்டு - அன்புக்கு உரிய தனது தம்பியர்களுக்காக, மொழிந்தமை - (தாய் இங்ஙனஞ்) சொன்னதை, கேட்டு—, இவை மொழிவான் - இவ்வார்த்தைகளைக் கூறுவான்; (எ - று.)

அம்பகழி - பகழிக்கு அழகு, குறித்த இலக்குத் தவருமை; இனி, அம்-அல்வழிச்சாரியை யெனவுமாம். கோறல், மலையல் - எதிர்மறை யொருமை ஏவல்கள். மலையல் என்பதற்கு - போர்செய்யாதே என்று கூறுதல் மேல் யுத்த பருவங்களோடு மாறுபடுமென விடுக்க. ஆல் - அசை. (318)

259.—கர்ணனது மறுமொழி.

தெறுகணையொன்று தொடுக்கவுமுனைந்துசெருச்செய்வோன் சென்னியோடிருந்தான், மறுகணைதொடுப்பதாண்மையோவலியோ மானமோமன்னவர்க்கறமோ, வுறுகணையொன்றேபார்த்தன்மேற் றெடுப்பனெழிந்துளோருய்வரென்றுரைத்தான், தறுகணரலர்க்குந் தறுகணனவர்க்குந்தண்ணளிநிறைந்தசெங்கண்ணன்.

(இ - ள்.) 'தெறு கணைஒன்று தொடுக்கவும் - அழிக்கவல்ல அஸ்திரத்தை ஒருமுறை பிரயோகிக்கவும், முனைந்து செரு செய்வோன் சென்னியோடு இருந்தால் - எதிர்த்துப் போர்செய்யும் பகைவன் தலைதுணிக்கப்படாமல் அதனோடு பிழைத்திருந்தால், மறு கணை தொடுப்பது - (அவன்மேல் அந்த அஸ்திரத்தை) இரண்டாம்முறை விடுப்பது, மன்னவர்க்கு - அரசர்களுக்கு, ஆண்மையோ - பராக்ரமாகுமோ? வலியோ - வல்லமையோ? மானமோ - பெருமையோ? அறமோ - தருமமாகுமோ? [ஆகாதென்றபடி]; உறுகணை ஒன்றே பார்த்தன்மேல் தொடுப்பன்-(நான்) அடைந்துள்ள நாகாஸ்திரத்தை ஒருதரமே அருச்சுனன்மேற் பிரயோகிப்பேன்; ஒழிந்துளோர் உய்வர்-அவனெழிந்த பாண்டவர் நால்வரும் (என்னுற கொல்லப்படாமற்) பிழைத்திடுவார்கள்,' என்று உரைத்தான்-என்று கூறினன்; (யாவனெனில்),—தறுகணர் அலர்க்கும்-கொடியவரல்லாத நல்லவர்க்கும், தறுகண் ஆனவர்க்கும் - கொடுமையையுடையோர்க்கும், (வேறுபர்டின்றி), தண் அளி நிறைந்த - குளிர்ச்சியான கருணை நிரம்பின, செம் கண்ணன் - சிவந்த கண்களையுடைய கர்ணன்; (எ-று.) (319)

260.—இதுவும், மேற்கவியும் ஒருதொடர்: கர்ணன் குந்தியை நோக்கிக் கூறுவன.

பெருவரமிரண்டும்பெற்றபின் றன்னைப்பெற்றதாயினைக் கரங் குவித்துத், தருவரமெனக்குமிரண்டுளவுலகிற்சராசரங்களுக்கெலாந் தாயீர், வெருவருமமரிற்பார்த்தனுலடியேன் வீழ்ந்தபோதவணிபரறிய, மருவருமுலப்பாலெனக்களித்துந்தமகனெனும் வாய்மையு முரைப்பீர்.

(இ - ள்.) பெரு வரம் இரண்டும் பெற்ற பின் - பெரிய வரங்களை இரண்டையும் (குந்தி தன்னிடம்) பெற்ற பின்பு, (கன்னன்), தன்னை பெற்றதாயினை கரம் குவித்து - தன்னைப்பெற்ற தாயாகிய அவளைக் கைகூப்பி வணங்கி, 'உலகில் சர அசரங்களுக்கு எலாம் தாயீர் - உலகத்திலுள்ள சராசரப் பொருள்களெல்லாவற்றிற்குந் தாயாகவுள்ளவரே!—எனக்கும் தரு வரம் இரண்டு உள - எனக்கும் (நீர்) கொடுக்க வேண்டிய வரங்கள் இரண்டு உண்டு; (அவை யாவையெனில்),— வெருவரும் அமரில் - அஞ்சத்தக்க யுத்தகளத்திலே, பார்த்தனால் அடியேன் வீழ்ந்தபோது - அருச்சுனனால் நான் இறந்து விழும் பொழுது, அவனிபர் அறிய - அரசர்களெல்லாருமறியும்படி, மருவு முலை பால் எனக்கு அளித்து - மனம் பொருந்திய (உமது) முலைப்பாலை எனக்குக் கொடுத்து, உம்தம் மகன் எனும் வாய்மையும் உரைப்பீர் - உம்முடைய புத்திரன் யானென்கிற உண்மையையும் வெளியிட்டுக்கூறுவீர்; (எ - று.)

'மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்' என உலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் உயிராகக் கூறப்படுகிற அரசனைப் பெற்ற தாயாதல் பற்றி, குந்தியை 'உலகிற் சராசரங்களுக்கெல்லாந் தாய்' என்றது; அன்றியும், தாயைத் தெய்வமாகப் பாவிக்கவேண்டுமென்பதுபற்றி, இங்ஙனம் கூறியதாகவும் கொள்ளலாம். மருவு அரு - பெறுதற்கு அருமையான என்றுமாம். (320)

261. உய்வருந்திறல்வெம் போர்முடிப்பளவு முமக்குநான் மகனெனுந்தன்மை, யைவருமறியாவண்ணநீர்காப்பீ ரல்லதங்கவர்சிறிதறியின், மைவருங்கடற்பாரனீத்தையுமெனக்கே வழங்குவர் வழங்கினுல்யானென், கைவருந்துணைவன்றனக்கலால்வழங்கேன் கடைப்பிடி கருமமீதென்றான்.

(இ - ள்.) உய்வு அரு திறல் வெம் போர் முடிப்பு அளவும் - தப்புதலருமையான வலியகொடிய பாரதப்போர் முடிக்கிறவரையிலும், உமக்கு நான் மகன் எனும் தன்மை ஐவரும் அறியா வண்ணம் நீர் காப்பீர் - உமக்கு நான் புத்திரனென்கிற உண்மையைப் பாண்டவர் ஐந்துபேரும் அறியாதபடி நீர் மறைத்துவைக்கக்கடவீர்; அல்லது - அங்ஙனமன்றி, அங்கு அவர் சிறிது அறியின் - அப்படி அவர்கள் சிறிதாயினும் அறிந்தாரானால், மைவரும் கடல்பார் அனைத்தையும் எனக்கே வழங்குவர் - கருநிறம் பொருந்திய கடல் சூழ்ந்த பூமி முழுவதையும் எனக்கே கொடுத்திடுவார்கள்; வழங்கினால் - (அங்ஙனம்) கொடுத்தால், யான்—, என் கை வரும் துணைவன் தனக்கு அலால் வழங்கேன் - எனக்குப் (பலகாலமாகப்) பயின்று வந்த சிநேகிதனை துரியோதனனுக்கே (அதனைக்கொடுப்பேனே) யல்லாமல் (பிறர்க்குக்) கொடுக்கமாட்டேன், ஈது கடைப்பிடி கருமம் - இது உறுதியாகக்கொண்ட செயலாம், என்றான் - என்று (கர்ணன் குந்தியைநோக்கிக்) கூறினன்; (எ - று.)

இனி, ஈதுகருமம் கடைப்பிடி என மாற்றி, இக்காரியத்தை மறவாமல் உறுதியாகக்கொள்வாய் எனவுரைத்தல், கீழ்ப்பலவிடத்

தும் மரியாதை பற்றிய முன்னிலைப் பன்மையாகக் கூறியவற்றோடு மாறுகொள்ளுமென விடுக்க. கைவருந்துணைவன் - கையையொத்து உதவும் நண்ப னென்றுமாம். (321)

262.—குந்தி கண்ணனிடம் சேர்தல்.

என்றலுமதுகேட்டின்றதாயொக்குமென்றுகொண்டிவ்வரநேர்ந்து, வன்றுயர்மேன்மேல்வளரயான்றளராவகையுயிருனக்குமுற்பெயர்வ, தென்றினியெனத்தன்கண்கணீர்சொரிய விகினந்து நைந்தழுதழுதிரங்கி, யென்றருண்மதலைதுணைத்தழீஇநிறுத்தியாதவனிருந்துழிச் சென்றாள்.

(இ - ள்.) என்றலும் - என்று (கன்னன்) சொன்னவளவிலே, அது கேட்டு—, ஈன்ற தாய் - (அவனைப்) பெற்ற தாயாகிய குந்தி, ஒக்கும் என்று கொண்டு - (இவை) தகுமென்று உடன்பட்டு, இவரம் நேர்ந்து - இந்த இரண்டு வரங்களையுங் கொடுத்து, வல்துயர் மேன்மேல் வளர - கொடிய துன்பம் மேலே மேலே அதிகப்பட்டுவளர, 'யான் தளரா வகை - நான் தளர்ச்சியடையாதபடி, உனக்கு முன் உயிர் பெயர்வது - உனக்கு முன்னே (நான்) உயிர் நீங்குவது, இனி என்று - இனி எக்காலத்திலோ?' என - என்று சொல்லி, தன் கண்கள் நீர் சொரிய - தனது கண்கள் நீரைப் பெருக்க, இகினந்து - சோகித்து, நைந்து - வாடி, அழுது அழுது - மிகப்புலம்பி, இரங்கி - இரக்கமுற்று, என்று அருள் மதலை தணை தழீஇ - சூரியன் பெற்ற பிள்ளையான அக்கன்னனைத் தழுவி, நிறுத்தி - (அங்கே அவனை) நிறுத்திவிட்டு [விடைபெற்று], யாதவன் இருந்த உழி சென்றாள் - கண்ணன் இருந்த இடத்துக்குப் போனாள்; (எ - று.)

என்று - ஒளியையுடையதெனக் காரணப்பெயர்; எல் - ஒளி; பகுதி. (322)

263.—கண்ணன் மகிழ்ந்து மீண்டு பாண்டவரிடம் வருதல்.

கண்ணனுங்குந்திகன்னனோடுரைத்தகருத்தெலாந்திருத்தமாகக் கேட்டாங்கு,கெண்ணமுமுடிந்ததெனமகிழ்ந்தந்தவணங்கையுமில்லிடையிருத்தித், தண்ணளியுடன்றன்பின்வருநிருபர்தம்மையுமுறைமுறை நிறுத்திப், பண்ணமைதடந்தேர்மீதுகொண்டன்றேபாண்டவருறைநகரடைந்தான்.

(இ - ள்.) கண்ணனும்—, குந்தி கன்னனோடு உரைத்த கருத்து எலாம் - குந்தி கர்ணனுடன்சொன்ன எண்ணங்களையெல்லாம், திருத்தம் ஆ கேட்டு - செவ்வையாகக்கேட்டு, ஆங்கு எண்ணமும் முடிந்தது என மகிழ்ந்து - அக் கன்னனிடத்திலும் தான் எண்ணிய எண்ணம் நிறைவேறிற்றென்று சந்தோஷித்து, அந்த அணங்கையும் இல்லிடை இருத்தி - சிறந்தமகளாகிய அக்குந்தியையும் வீட்டிலிருக்கச்செய்து, தண் அளியுடன் தன் பின் வரும் நிருபர் தம்மையும் முறை முறை நிறுத்தி - குளிர்ச்சியான அன்புடனே தன்

பின்னே தொடர்ந்துவருகிற அரசர்களையும் ஒருவரொருவராக நிற்கச் செய்து, பண் அமை தட தேர் மீது கொண்டு - அலங்காரம் அமைந்த பெரிய தனது தேரின்மே லேறிக்கொண்டு, அன்றே பாண்டவர் உறைநகர் அடைந்தான் - அப்பொழுதே புறப்பட்டுப் பாண்டவர்கள் வசிக்கிற (உபப்பிலாவிய) நகரத்தைச் சேர்ந்தான்; (எ-று.) (323)

264.—கண்ணன் நடந்தவற்றைப் பாண்டவர்க்கு உரைத்தல்.

தூதுபோயரவத்துவசனேடுறுதிசொன்னதுமறுத்தவன்சின
ந்து, மோதுபோர்புரியத்துணிந்ததும்விதுரன்மூரிவில்லிறுத்ததுங்கங்
குற், போதுபோர்வஞ்சம் விளைத்ததுங்கன்னன் புரந்தரற்கீந்ததும்
பயந்த, மாதுபோய்வரங்கள்பெற்றவையொழியமற்றெலாமைத்துனர்க்
குரைத்தான்.

(இ - ள்.) தூது போய் - (தான்) தூதுசென்று, அரவம் துவச னேடு - துரியோதனனுடனே, உறுதி சொன்னதும் - நன்மைதருவ தான சமாதான வார்த்தையைக் கூறியதையும், அவன் - அத்துரி யோதனன், மறுத்து - (அதனை உடன்படாது) தடுத்து, சினந்து - கோபித்து, மோது போர் புரிய துணிந்ததும் - தாக்குகின்ற யுத்தத் தைச் செய்ய நிச்சயித்ததையும், விதுரன்—, மூரிவில் இறுத்ததும்- வலிமையையுடைய [அல்லது பழைய] தனது வில்லை யொடித்துப் போகட்டுவிட்டதையும், கங்குல் போது - இராக்காலத்தில், (ஆலோ சித்துத் துரியோதனன்), வஞ்சம் போர் விளைத்ததும்-வஞ்சனையான யுத்தத்தை (நிலவறையில்) அமைத்துவைத்ததையும், கன்னன்—, புரந்தரற்கு ஈந்ததும்- இந்திரனுக்குக் (கவசகுண்டலங்களைக்) கொடுத் ததையும், பயந்த மாது போய் வரங்கள் பெற்றவை ஒழிய மற்று எலாம் - பெற்றதாயான குந்தி சென்று (கர்ணனிடத்து) வரங்கள் பெற்றவற்றைத் தவிர மற்றுமுள்ள எல்லாச் செய்திகளையும், மைத் துனர்க்கு உரைத்தான் - (ஸ்ரீகிருஷ்ணபகவான் தனது) மைத்துனர் களாகிய பாண்டவர்களுக்குக் கூறியருளினன்; (எ - று.)

பயந்த மாது போய் வரங்கள் பெற்றவற்றைக் கூறுததற்குக் காரணம் மேலே விளக்கப்பட்டது. அத்தைமகனை மைத்துனனென் பது-முற்காலத்து வழக்கம்போலும். மற்றெலாம் எனறதில், அசு வத்தாமனைப் பேதித்தது அடங்கும். (324)

கிருட்டிணன் தூதுசருக்கம் முற்றிற்று.

ஐந்தாவது

படையெழுச்சிச் சருக்கம்.

பாண்டவர் துரியோதனாதியர் என்னும் இருவரது சேனைகள் போரின் பொருட்டுத் தனித்தனி திரண்டெழுந்துநின்ற செய்தியைக் கூறுகின்றதொரு நூற்கூறுபாடென்பது பொருள். படையெழுச்சி என்பது - படை எழுதல் என எழுவாய்த்தொடராகவாயினும், படையினது எழுதல் என ஆரும்வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகவாயினுங் கொள்ளத்தக்கது. எழுச்சிச் சருக்கம் - எழுச்சியைக் கூறுஞ்சருக்கமென இரண்டனுருபும்பயனும் உடன்தொக்க தொகை; இனி, எழுச்சியினது சம்பந்தமான சருக்கமென விரித்து, ஆரும் வேற்றுமைத்தொகை யென்றுங் கொள்ளலாம். படை-(பகை வரைப்) படுத்தற்குக்கருவியானது எனக் காரணப்பெயர்; படு-பகுதி: படுத்தல் - அழித்தல்: ஐ - கருவிப்பொருளீறு. எழுச்சி - தொழிற் பெயர். சி - விகுதி. இச்சருக்கத்தில் முதற்பதின்மூன்று பாடல்கள்-கண்ணன் தூதுசென்று வந்தவுடனே தருமபுத்திரன் பகை முடித்தற்பொருட்டுச் சேனை திரட்டின செய்கையையும், பின் பதினெரு பாடல்கள் அங்ஙனமே துரியோதனன் சேனை திரட்டின வரலாற்றையுங் கூறுதல் காண்க.

1.—கடவுள் வணக்கம்.

படர்ந்தகானகந்திரிந்துமீண்டன்புடன்பணிந்தபஞ்சவர்க்காகக்
கடந்தஞானியர் கடவுளர் காண்கலாக் கழலிணை சிவப்பேறத்
தொடர்ந்தநான்மறைபின்செலப்பன்னகதுவசன் மாநகர்த்தூது
நடந்தநாயகன்கருமுகில்வண்ணமென்னயனம்விட்டகலாதே.

(இ - ள்.) படர்ந்த - பரவியுள்ள, கான் அகம் - காட்டினிடத்திலே, திரிந்து - (பலவருஷகாலம்) அலைந்து, மீண்டு - திரும்பிவந்து, அன்புடன் பணிந்த - அனபோடு (தன்னை) வணங்கின, பஞ்சவர்க்கு ஆக - பஞ்சபாண்டவர்கள் பொருட்டு,—கடந்த ஞானியர் - (இவ்வுலகப்பற்றுக்களை) வென்ற தத்துவஞானமுள்ள முனிவர்களும், கடவுளர் - தேவர்களும், காண்கலா - (உள்ளபடி) காணவொண்ணாத, கழல் இணை - (தனது) திருவடிகளிரண்டும், சிவப்பு ஏற - செந்நிறமமிகப் பெறவும்,—தொடர்ந்த-(தன்னைத்) தேடுந்தன்மையுள்ள, நால் மறை-நான்கு வேதங்களும், பின் செல - (காணமாட்டாமல்) விடாது தன் பின்னேவரவும்,—பன்னக துவசன் மாநகர் - பாம்புக்கொடியையுடைய துரியோதனனது பெரிய அஸ்தினபுரியிலே, தூது-தூதனாய் நடந்து சென்ற, நாயகன் - (எல்லாவுயிர்க்கும்) தலைவனான கண்ணபிரானது, கருமுகில் வண்ணம் - கரிய மேகம்போன்ற திருமேனிநிறம், என் நயனம் விட்டு அகலாது - (எப்பொழுதும்) எனது கண்களைவிட்டு நீங்காது; (எ - று.)—ஏகாரம் - தேற்றம்; ஈற்றசையெனினும் அமையும்.

"பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய வித்தகன்" எனப் பெரியார் திருவாய்மலர்ந்தருளியபடி எம்பெருமானுக்கு அடியார்களிடத்துள்ள சௌலப்பியத்தை 'அன்புடன் பணிந்த பஞ்சவர்க்காகக் கழலிணை சிவப்பேறப் பன்னகதுவசன்மாநகர்த்தூது நடந்த நாயகன்' என்றதனாலும், எம்பெருமானது எவரும் எளிதில் அறிதலரிய பரத்துவத்தை 'கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக்கழல்', 'தொடர்ந்த நான்மறை பின்செல' என்றவற்றாலும் வெளியிட்டார். இங்ஙனம் யோகிகட்கும் பிரமஞானியோர்க்கும் வேதங்கட்கும் எட்டாத முழுமுதற்கடவுள் வரம்பு கடந்தெழுந்த பெருங்கருணையால் பாண்டவ தூதனாய்ச் சென்றான் என்று கீழக் கிருட்டிணன் தூதுசருக்கத்தில் வரலாறுகூறிவந்தபொழுது அப்பிராணிடத்து இவ்வாசிரியர்க்கு உண்டான ஈடுபாடு அச்சருக்க முடிந்தபின்பும் ஆறாது கீலியெடுத்து நின்றதனால், அவற்றையேகுறித்து அடுத்த இச்சருக்கத்துக்குக் கடவுள்வாழ்த்துக் கூறினர். "பஞ்சபாண்டவர்க்காகி வாயுரை தூது சென்றியங்கு, மென்தூணை" என்றார், திருமங்கையாழ்வாரும்; "பஞ்சவர்க்குத்தூதாக நடந்தவடி", "நூற்றுவர்பால் நாறறிசையும் போற்றப், படர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது, நடந்தாணை யேத்தாத நாவென்ன நாவே" எனச் சிலப்பதிகாரத்துக் கூறியவாறுங் காண்க. "பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம் விரி கமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந், திருவடியுங் கையும் கனிவாயுஞ் செய்ய, கரியவனைக் காணுதகண்ணெனன்ன கண்ணே" "கேசவனைக்காண்க விழி" என்றபடி கண்படைத்தபயன் எம்பெருமானது திவ்வியசொரூபத்தைக் காணுதலேயாதலால், இங்ஙனம் கூறினர். கொடியவர்களையழித்து அடியவர்களை யளித்தருளுகிற ஆதிதேவன் விஷயமான காப்புக் கூறியதனால், எடுத்த கருமம இடையூறின்றி இனிது முடியு மென்பது கருத்து. "சூடுதொடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு பெறத் தூதுசெல்ல" எனக் கீழக் கிருட்டிணன தூதுசருக்கத்தில்வந்த அடிகளோடு இப்பாட்டை தொடர" என்பர், மேல் ஏழாம் போர்ச் சருக்கத்தும். வேதமும் போதும் பகவானைப் பின் தொடர்வது என்பதுபற்றியன்றே, இப் பெருமானது பின்புறத்தே செல்வது.

பஞ்சவர்க்காக ஏறச்செலத் தூதுநடந்த நாயக னென்க. கான் - காட்டிலும், அகம்- விராடனது வீட்டிலும் திரிந்து என, 'கானகம்' என்றதில் அஜ்ஞாதவாசத்தையும் அடக்கலாம். கான் - காமியம், துவைதம் முதலியன. 'அன்பென்பது - தான் கருதப்பட்ட பொருளின்கண் தோன்றும் வேட்கை' என்பர் நக்கீரர். 'அனபுடன்' என்றவிடத்து, 'உடன' என்னும் மூன்றனுருபு அடைமொழிப் பொருளது: அன்புடையராய்ப் பணிந்த என்க. பஞ்சவர் - ஐவர்; இங்கே பாண்டவர்களைக் குறித்ததனால், தொகைக்குறிப்பு. ஞானமாவது - பிறப்பு வீடுகளையும் அவற்றின காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மையால் அறியும் மெய்யுணர்வு. கடந்த என்பதை

ஞானியர்க்கு அடைமொழி யாக்காமல் ஞானத்துக்கு அடைமொழி யாக்கின், உலகத்தாரது அறிவினெல்லையின் மேம்பட்ட உண்மை யுணர்வென்க. கடவுளர் - (இவ்வுலக சம்பந்தத்தைக்) கடத்தலை யுடையவர். 'ஞானியர் கடவுளர்' என்ற தொடரில் உயர்வுசிறப் போடு எண்ணுப்பொருள் தரும் உம்மை தொக்குநின்றது. கழலிணை, நான்மறை, என்றவற்றின்பின், இனைத்தென்றறிபொருளில் வரும் முற்றும்மைகள் செய்யுள் விகாரத்தால் தொக்கன. செம்மை யெனனும் பண்பினடி விகாரப்பட்டுச் சிவப்பு எனத் தொழிற்பெய ராயிற்று. கழலிணை சிவப்பேற - இடத்து நிகழ்பொருளினதொழில் இடத்தின் மேல் ஏற்றிக் கூறப்பட்டது, உபசாரவழக்கு. நான்மறை- இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனபன. பங்கயதவஜன் என்னும் வேற்றுமைத்தொகை, வடநூல் முடிபு. பங்கமென்னும் வடசொல்லுக்கு - கால்களால் நடவாதது [மார்பினால் ஊர்ந்து செல்வது] என்றுவது, வக்கிரகதியாய் வளைந்து செல்வதுஎன்றுவது பொருள் கொள்க. 'பங்கயதவசன்' என்றது, அவன்கொடியே அவனது கொடுந்தன்மையையும், நாவிரண்டுடைமையையும், நன்றி யறிவினமையையும், எப்போதும் வக்கிரகதியிற செல்லுந்தன்மையை யும் விளக்கும் என்றற்குப் போலும். பன்னகம் - அதன வடிவுக்கு ஆகுபெயர்; அடுத்த கவியில் 'முரசு' என்பதும் அது.

பக்தி மிகுதியால் எம்பெருமானது உருவெளிப்பாட்டை எங்கும் என்றும் காண்பே னென்பார், 'எனனயனம்விட் டகலாதே' என்றார். 'கமலக்கண்ண னென்கண்ணினுள்ளான காண்ப னவன் கண்க ளாலே, அமலங்களாகவிழிக்கு மைம்புலனு மவன்மூர்த்தி'' என்ற ஆழ்வாருளிச்செயலின் பொருளை இங்கே அறிக.

ஆசீர்வாதம், நமஸ்காரம், வஸ்துநிர்த்தேசம் என்ற மூன்று வகை மங்களங்களுள் இது ஈற்றதன்பாற்படு மென்க. படர்ந்த கான் - (தாம்) சென்ற காடு. தொடர்ந்த நான்மறை - (சொற்கள் ஒன்றோடொன்று) தொடரப்பெற்ற வேதம் எனப் பொருள் கொள் வாரும் உளர்.

இதுமுதற் பதின்மூன்றுகவிகள் - பெரும்பாலும் முதற்சீர் மாச் சீரும், ஆருஞ்சீர் மாங்காய்ச்சீரும், மற்றைநான்கும் விளச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள்.

2.—தருமபுத்திரன் தனது நண்பரான அரசர்க்குச் செய்தி தெரிவித்தல்.

முகுந்தன்வாசகங் கேட்பதன்முன்னமே முரசுயர்த்தவன்முன்னி
மிகுந்தகோபமோ டிக்கணமுடிப்பன்யான் வெம்பகையினி யென்னுத்
தகுந்தராதிபர் தன்னுடனியைந்தவர் தமக்குவெஞ்சமர் மூளப்
புகுந்தவாறெலாந் தூதரிற்போக்கினனேலையின் புறத்தம்மா.

(இ - ள்.) முகுந்தன் - கண்ணனது, வாசகம் - வார்த்தையை, கேட்பதன் முன்னமே - கேட்பதற்கு முன்பே [கேட்டவுடனே விரை

வில் என்றபடி],—முரசு உயர்த்தவன் - முரசக்கொடியை உயர எடுத்துள்ள தருமபுத்திரன், முன்னி - ஆலோசித்து, மிகுந்த கோப மோடு - மிக்க கோபத்துடனே, 'யான் - நான், இனி - இனிமேல், வெம் பகை - கொடிய பகைவர்களான துரியோதனாதியரை, இ கணம் - இந்த க்ஷணத்திலேயே [மிகவிரைவில் என்றபடி], முடிப் பன் - அழிப்பேன்', என்னு - என்று கூறி,—வெம் சமர் மூள புகுந்த ஆறு எலாம் - கொடியபோர் உண்டாகும்படி நேர்ந்த விதங்களீ யெல்லாம், ஓலையின் புறத்து - ஓலையில், (எழுதி), (அத்திருமுகங் களீ), தன்னுடன் இயைந்தவர் தகும் தராதிபர் தமக்கு - தன்னு டன் மனமிணங்கினவரான தக்க அரசர்களுக்கு, தூதரின் போக் கினன் - தூதர்கள் மூலமாக அனுப்பினன்; (எ - று.)

இங்கே 'முகுந்தன் வாசகம்' என்ற விவரத்தைக் கீழ்ச் சருக் கத்தினிறுதியில் 264-ஆம் செய்யுளில் விளங்கக் காண்க.

கேட்பதன் முன்னமே தூதரிற்போக்கினன் எனக் காரியத்தை முன்னும் காரணத்தைப் பின்னும் நிகழ்ந்தனவாகச் சொல்லுதல் மிகையுயர்வுநவிற்சியணி: கேட்டவுடனே சிறிதுங் காலதாமதஞ் செய் யாமல் அரசர்க்குத் தூதனுப்பினனென்க.

அம்மா - ஈற்றசை; அம்ம என்னும் அசைச்சொல் நீண்டதென் பது, தொல்காப்பியனார் கொள்கை. இனி, துரியோதனனது அக்கிர மங்களீக் கேள்விப்பட்ட மாத்திரத்திலே மிக்க பொறுமைசாலியான தருமபுத்திரனுக்கும் பெருங்கோப முண்டாய்விட்டதென்ற அதிசயம் பற்றிக் கவி கூறின வியப்பிடைச்சொல்லெனினும் அமையும். உத்தி யோக பருவத்தின் முதலில் இவ்வரசர்கள் "இந்தவந்தணனீயிசைத் தனவெலா மியல்புடனினிதாக, அந்த வந்தணனுரைத்த பின்னவ னினதவனி தந்திலனுகில், முந்தவந்தண் மாமுரசகேதன திருமுகம் வரவிடுகென்று, வந்தவந்த மன்னவர்களுந் தத்தமாகரடைந்தனர்" ஆதலால், இவர்களுக்குக் கண்ணன் தூதுபோய் வந்தவுடன் போர் செய்ய முடிந்ததைத் தருமன் தெரிவித்தான்.

முகுந்தன் என்பதற்கு - முத்தியுலகவின்பத்தையும் இவ்வுலக வின்பத்தையும் (தன் அடியார்க்குத்) தருபவனென்று பொருள்; மு-முக்தி. கு - பூமி, த - கொடுப்பவன். துஷ்ட அசுரர்கள் பலரும் கெட்ட அரசர்கள் பலரும் ஒருங்கே கூடி வசிப்பதாலுண்டான பூமி பாரத்தை நிவர்த்திசெய்யும்பொருட்டு அப்பூமிதேவியின் பிரார்த் தனையின்படி தேவர்கள் வேண்டுகோளால் திருமால் வசுதேவ குமார னாய்க் கண்ணனெனத் திருவவதரித்தருளினன்; இது - திருமாலின் ஒன்பதாம் அவதாரம்.

முரசு - அதன் வடிவையெழுதிய கொடிக்கு இருமடியாகுபெயர். தனது வெற்றிக்கு அடையாளமாகவும் மங்களகரமாகவும் முரசத்தின் வடிவைத் தருமன் கொடியிற் கொண்டனன் போலும். (326)

3.—ஐந்துகவிகள் – பலதேசத்தரசர்கள் வந்து திரளுதலைக் கூறும்.

எட்டுத்திக்கினுமுள்ள மன்னவருடன் யாகசேனனும் வந்தான், திட்டத்துய்மனுந்திட்டகேதுவும் விறற்சிகண்டியுமுறைவந்தார், ஒட்டிப்போர்பொருமுத்தமோசாவும் வேலுதாமனுமுடன்வந்தார், பட்டப்போதகந் தேர்பரியாளெனும் படையுடைப்பாஞ்சாலர்.

(இ - ள்.) (அதனைற் செய்தியறிந்தவுடனே),—பட்டம்-கெற்றிப் பட்டத்தைத்தரித்த, போதகம் - யானையும், தேர் - இரதமும், பரி - குதிரையும், ஆள் - காலாளும், எனும் - என்கிற, படை - (நால் வகைச்) சேனையையும், உடை - உடைய, பாஞ்சாலர் - பாஞ்சால தேசத் தரசர்களுள், யாகசேனனும் - துருபதராசனும், எட்டு திக்கினும் உள்ள மன்னவருடன் - எல்லாத் திக்குக்களிலுமுள்ள அரசர்களுடனே, வந்தான் - (உபப்பிலாவியத்துப் பாண்டவரிடம்) வந்தான்; திட்டத்துய்மனும் - திருஷ்டத்யும்நனும், திட்டகேதுவும்-திருஷ்டகேதுவும், விறல் சிகண்டியும் - வலிமையையுடைய சிகண்டியும், முறை வந்தார் - முறையே வந்தார்கள்; ஒட்டி - (முன்னமே) சபதஞ்செய்து, போர் பொரும் - (அங்ஙனமே) போர்செய்து முடிக்க வல்ல, உத்தமோசாவும் - உத்தமோஜஸ் என்பவனும், வேல் உதாமனும்-வேலேயேந்திய யுதாமன்யுஎன்பவனும், உடன்வந்தார்-உடனே வந்தார்கள்; (எ - று.)

யாகசேனன் - திரௌபதியின் தந்தை. திருஷ்டத்யும்நன், சிகண்டி - யாகசேனனது புதல்வர். திருஷ்டத்யுமனது மகன் திருஷ்டகேது வென ஸ்ரீ விஷ்ணுபுராணத்தால் விளங்கும். அங்கி வேச முனிவனிடத்தில் துரோணாசாரியருடன் வில்வித்தையைக் கற்றுவந்தபொழுது 'எனக்கு இராச்சியங் இடைத்தபின்னர்ப் பாதி உனக்குப் பங்கிட்டுக் கொடுப்பேன்' என்று வாக்குத்தத்தஞ்செய்திருந்த பாஞ்சாலராசனுகிய துருபதன், பின்பு ஒருகாலத்தில் அத்துரோணன் தன்குழந்தைக்குப் பாலுக்காகப் பசுவேண்டுமென்று சென்றுகேட்டபொழுது, முகமறியாதவன்போல 'யீயார்?' என்று வினவிச் சில பரிகாச வார்த்தைகளைச் சொல்லிச் சபையிற் பங்கப்படுத்த, அப்பொழுது அவன் 'என்மாணாக்கனைக்கொண்டு உன்னை வெனறு கட்டிக் கொணரச்செய்து உன அரசையுங் கைக்கொள்வேன்' என்று சபதஞ்செய்துவந்து, பின் அங்ஙனமே அருச்சுனனைக்கொண்டு பங்கப்படுத்தி அந்தப்பிரதிஜ்ஞையைநிறைவேற்றிவிட, அவ்யாகசேனன்துரோணன்மீது மிகக்கறுக்கொண்டு அவனைக் கொல்லும்பொருட்டு ஒரு புத்திரனும், அருச்சுனனது பலபராக்கிரமங்களைக் கண்டு மகிழ்ந்து அவனுக்கு மணஞ் செய்து கொடுக்கும் பொருட்டு ஒரு புத்திரியும் உதித்தல் வேண்டுமென்று புத்திரகாமயாகஞ் செய்விக்க, அவ்வேமத்தீயினின்றும் திரௌபதியுடன் தோன்றின புத்திரனே திட்டத்துய்மனென அறிக. இவன் கௌரவ பாண்டவர்க்கு வில்லாசிரியனும் மிக்க ஆற்றலுடையவனுமான துரோணனைக் கொல்லும் வல்லமையுடையனாதலால், இவன் பெயரைமுதலில் எடுத்துக் கூறினார், 'விறற்சிகண்டி' எனச் சிகண்

டியை விசேஷித்துக் கூறினது, அவன் மகாபலபராக்கிரமசாலியான வீடுமனேவிண்ணுலகேற்றும் ஆற்றலுடையவனுதலின்;காசிராசனது பெண்கள் மூவரைத் தன் தம்பியான விசித்திரவீரியனுக்கு மணம் புரிவிக்கும் பொருட்டுச் சுயம்வரத்தில் வீடுமன் வலியத் தேரேற்றிக் கொண்டுசெல்லுகையில், அரசர்கள் பலர்வந்து பொருதுதோல்வியடைய, அவர்களுள் சிறிது போரில் முன்னிட்ட சாலுவனிடத்து அம்பை யென்பவள் மனத்தைச் செலுத்தி வீடுமனிடத்தினின்று நீங்கிச் சென்று சேர, அவன் 'பகைவன்கவர்ந்துபோன உன்னையான தொடேன்' என்று மணம் மறுத்துவிட்டதனால், அவள் பின்பு வீடுமனே மணஞ்செய்யும் பொருட்டுப் பலவாறுமுயன்றும் பயன் படாமையால்,வனஞ்சென்று தவஞ்செய்து அவ்வீடுமனைக் கொல்லும் பொருட்டுச் சிகண்டி யென்னும் அலிவடிவாகத் துருபதனிடத்துப் பிறந்தனள் என்பது வரலாறு.

மூன்றுமடியிற் குறித்தவர் இருவரும் - துருபதனுக்கு உறவினரான பாஞ்சாலராசர். ஸம்சப்தகர்போலப் போர் தொடங்கு முன்னமே பலவகைச் சபதஞ்செய்து பின் அவ்வாறே நடத்திக் காட்டும் வீரனிவ னென்பார், 'ஒட்டிப்போர்பொரு முத்தமோசர்' என்றார். வேல் - மற்றை ஆயுதங்களுக்கும் உபலக்ஷணம; காத்தற் றொழிலன்றி அழித்தற்றொழில் பூண்ட முக்கட்கடவுட்குச் சூலவேல் படையாதலாலும், அமரரை யோம்ப அசுரரை யழிக்கும் முருக மூர்த்திக்கு வேல் படையாதலாலும், சான்றோர் வேற்படையையே சிறப்பப் பெரும்பான்மை கூறுதல்பற்றி, இங்கே வேலைக்கூறி, மற்றைய படைகளை யெல்லாம் 'மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல்' என்னும் உத்தியாற் பெறவைத்தார். யுதாமன்யு - போரிற் கோபமுடையா னென்று பொருள். போதகம் - பத்து வருஷத்து யானைக்கன்று; ''படைதனக்கி யானைவனப்பாகும்,'' ''யானையுடைய படை காண்டல் முன்னினிதே'' என நால்வகைச் சேனையுள்ளும் யானை சிறப்பித்துக் கூறப்படுதலால், மதத்தாற்கதஞ் சிறந்து தானும் போர்செய்யும் யானையை முதலில் வைத்துக் கூறினர். இது - தமிழர் வழக்கு: வடநூலார் 'ரதகஜதுரகபதாதி' என முறைப்படுத்திக் கூறுவர். பரி - (பாரங்களைப்) பரிப்பது [சுமப்பது] எனக் காரணப்பெயர். பாண்டவர்க்குப் பெண்கொடுத்த நெருங்கிய உறவு முறையாராதலால், பாஞ்சாலர் வருகையை முதலிற் கூறினர். (327)

4. விராடபூபனுஞ்சதானிகநிருபனும்விறற்சிவேதனுமாதி
வராகேதுவுமுத்தரகுமரனுமச்சநாட்டவர்வந்தார்
பராவுபேருடைச்சேரசெம்பியருடன்பாண்டியன்முதலோருங்
குராநறும்பொழிற்கேகயத்தலைவருங்குந்திபோசரும்வந்தார்.

(இ - ள்.) மச்சநாட்டவர் - மத்ஸ்யதேசத்தவராகிய, விராடபூபனும் - விராடமகாராசனும், சதானிகநிருபனும் - சதானீக னென்னும் அரசனும், விறல் சிவேதனும் - வெற்றியையுடைய சுவேதனென்பவனும், ஆதி வராக கேதுவும் - தலைமைபெற்ற வராககேது வென்பவனும், உத்தரகுமரனும்-உத்தரகுமாரனும், வந்தார்—; பராவு பேர்

உடை - (யாவராலும்) புகழப்படும் பெயரையுடைய, சேர செம்பியரு டன்-சேரசோழ மன்னவருடனே, பாண்டியன் முதலோரும்-பாண்டி யராசன் முதலானவர்களும், குரா நறுபொழில் - குரவ மலர்களின் பரிமளத்தையுடைய சோலைகளையுடைய, கேகயம் - கேகய நாட்டின், தலைவரும் - அரசர்களும், குந்திபோசரும் - குந்திபோச தேசத்து அரசர்களும், வந்தார்—; (எ - று.)

விராடபூபன், சதானீகன்ருபன், ஆதிவராககேது, உத்தர குமாரன் - இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள். பூபன்-பூமியைக் காப்பவன். சதானீகன் - நூறு [மிகப்பல] பெருஞ்சேனையை யுடை யான்; சத அனீகம் அன் எனப் பிரியும். நிருபன் - மனிதர்களைக் காப்பவன். சதானீகனும், வராககேதுவும் - விராடனுடைய உற வினர். சுவேதன் - விராடனது மூத்த குமாரன்: இளையவன் - உத்தரன். மேல் பாண்டவர்க்கு முதற்சேனாதிபதியாதற் கேற்ற சிறப்புத்தோன்ற, 'விறற்சிவேதன்' என விசேடித்தது. வராக கேது - பன்றியின்வடிவ மெழுதப்பெற்ற கொடியையுடையவன். அனீகம், குமாரன் என்பன - இங்குக் குறுகின. குமாரன் என்பதற்கு மன்மதனையும் குறித்த ரூபமுடையவனுக்கவல்ல கட்டழகுடையவ னென்று பொருள்; கு - குத்ஸிதம், மாரன் - மன்மதன். நீர்வள மிகுதியால் எங்கும் மீன்கள் மலிந்திருத்தல்பற்றி, மத்ஸ்யதேச மெனப் பெயர்போலும். தமிழ்நாட்டு மூவேந்த ராதலின், சேர சோழ பாண்டியரை 'பராவுபேருடை' எனச் சிறப்பித்துக் கூறினர். செம்பியன் சைப்யனென்னும் வடசொல்லின் சிதைவுபோலும்; சிபி சக்கரவர்த்தியின் மரபிற் பிறந்தவனென்று பொருள். ஒரு [சூரிய] குலத்தவராதலின், சோழனைச் செம்பியனென்பது, மேற பதினே ழாம் போர்ச்சருக்கத்தில் ''விறலுடைப்புலிக்கொடிவீரன் மெய்யெ லாம், புறவினுக் கரிந்தநாட்போல மேல்விடுந், திறலுடை வாளியாற் சிவப்பித்தானரோ'' எனச் சோழனிடத்துச் சிபியின் தன்மையை ஏற்றிக் கூறியவாறுங் காண்க. குரா - ஓர்மரம். குந்திபோசர் - பாண்டவர் தாயாகிய குந்தியின் சுவீகாரத் தந்தை மரபினர். (328)

5. அரக்கிதந்தருள் கடோற்கசக்காளையு மபிமனேடிராவானும், விரிக்கும் வெண்குடை விந்தனுஞ் சோமனும்வீரகீர்த்தியும் போரிற், செருக்குநெஞ்சுடைப் புண்டலன்செயசேனன் செருவிடைத்தெவ் வோடத், துரக்கும்வெம்பரித் துரௌபதரைவருஞ் சூழ்படையுடன் வந்தார்,

(இ - ள்.) அரக்கி - (இடும்பியென்னும்) இராக்கதப்பெண், தந்து அருள் - பெற்றுவளர்த்த, கடோற்கசன் காளையும் - கடோத் கசனென்னும் வீரனும், அபிமனேடு - அபிமன்யுவும், இராவானும் - இராவானென்பவனும், விரிக்கும் வெள் குடை - விரித்துப்பிடிக்கும் வெண் கொற்றக்குடையையுடைய, விந்தனும்—, சோமனும்—, வீர கீர்த்தியும்—, போரில் - யுத்தத்தில், செருக்கு - மிகக்களிப்புக் கொள்ளும், நெஞ்சு உடை - மனத்தையுடைய, புண்டலன் - புண்ட லனும், செயசேனன் - ஜெயசேனனும், (ஆகிய), செரு இடை தெவ் ஓட துரக்கும் வெம்பரி துரௌபதர் ஐவரும் - போரிலே பகைவர்கள் (முன் நிற்கமாட்டாமல்) தோற்றோடும்படி துரத்தும் உக்ர வேக

முள்ள குதிரைகளையுடைய திரௌபதியின் மக்கள் ஐந்து பேரும், சூழ்படையுடன் வந்தார் - (தந்தம்மைச்) சூழ்ந்துள்ள சேனைகளு டனே வந்தார்கள்; (எ - று.)

கடோத்கச னென்னுங் குமாரன் தனது தாதையான வீமனையும் மற்றை அவனுடன்பிறந்தவரையும் விட்டுப் பிரிந்து செல்லுகையில் அன்போடு வணங்கி அவர்கள் தன்னை வேண்டியகாலத்து நினைக்கும் படியாகவும், அங்ஙனம் நினைத்த மாத்திரத்தில் தான் வந்து உதவு வதாகவும் வாக்குத்தத்தஞ்செய்து போய் அங்ஙனமே செய்து வந்தனன் என்பது - கீழ்ப்பருவங்களின் வரலாறு. அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை சென்றபொழுது, அவனுக்கு உலூபியென்னும் நாக கன்னிகையினிடம் பிறந்தவன் இராவானும், கண்ணனது தங்கை யான சுபத்திரையினிடம் அர்ச்சுனனுக்குப் பிறந்தவன் அபிமன்யுவும் என அறிக. விந்தன் முதலிய ஐவரும் - பஞ்சபாண்டவர்க்கு முறையே திரௌபதியினிடம் பிறந்தவர்; உபபாண்டவரெனப்படுவர். விந்தனென்பது - பிரதிவிந்த்யனென்றும், சோமனென்பது - ஸ்ருத சோமனென்றும் வடமொழியில் வழங்கும். அருச்சுனன் மகனுக்குச் சுருதகருமாவென்றும், நகுலன் மகனுக்குச் சதானீகனென்றும், சகதேவன் மகனுக்குச் சுருதசேனனென்றும் பெயர் வியாசபார தத்திற் காண்கிறது; அருச்சுனன் மகனுக்குச் சுருதகீர்த்தி யென்ற பெயரும் உண்டு. பாண்டவர்களுள் மூத்தவனாய் அரசுக்கு உரிய தருமபுத்திரனது மகனாதலின் விந்தனை 'விரிக்கும் வெண்குடை' என விசேடித்தும், குந்தி பௌத்திரர் போலவே மாத்திரி பௌத் திரரும் பலபராக்கிரமங்களிற் சிறந்தவரென்பார் 'போரிற் செருக்கு நெஞ்சுடைப் புண்டலன் செயசெனன்' என்றுங் கூறினர். துரௌப தியார் - திரௌபதியார். 'செயவிறற் சேனனும் தெவ்வோட, என்றும் பாடம். (329)

6. சீனர்சாவகர்மத்திரர்மாளவர்தெலுங்கர்வெங்கலிங்கேசர்
சோனகாதிபர்கன்னடர்மாகதர்துலுக்கர்குச்சரரோட்டர்
ஆனவெம்படையாதியாய்நடப்பனவையிரண்டெண்பூமித்
தானைமன்னரும்வந்தனரிந்தமண்டலத்திலார்வாராதார்.

(இ - ள்.) சீனர் - சினதேசத்தரசரும், சாவகர்—, மத்திரர்—, மாளவர்—, தெலுங்கர்—, (என்னும் இவ்வரசர்களும்), வெம் கலிங்க ஈசர் - (போரிற்) கொடிய கலிங்கதேசத்தரசரும், சோனக அதிபர் - சோனக தேசத்தரசரும்,, கன்னடர்-கர்ணடகதேசத்தரசரும்,மாகதர் - மகததேசத் தரசரும், துலுக்கர்-துருஷ்க தேசத்தரசரும், குச்சரர்-கூர்ச்சரதேசத்தரசரும், ஓட்டர் - ஓட்ரதேசத்தரசரும், ஆதி ஆய் ஆன - முதலாக உள்ள, வெம் படை நடப்பன தானை - கொடிய ஆயுதங்களோடு செல்வனவான சேனைகளையுடைய, ஐயிரண்டு எண் பூமி மன்னர்உம் - ஐம்பத்தாறுதேசத்து அரசர்களும், வந்தனர்—; இந்த மண்டலத்தில ஆர் வாராதார்-இந்தப் பூமண்டலத்தில் வாரா தவர் யாவர்? [எவருமில்லை, எல்லோரும் வந்தனர்]; (எ - று.)

தெலுங்கம் - திரிலிங்கதேச மெனப்படும். ஐயிரண்டு - ஐந்தும் இரண்டும; ஏழு; ஐயிரண்டு எட்டு - ஏழாகிய எட்டு; ஐம்பத்தாறும்.

இனி ஐயிரண்டெண் என்ற தொடரில், முன்னது பண்புத்தொகை யும் பின்னது உம்மைத்தொகையுமெனக் கொண்டு பதினெட்டுத் தேசமென்றும் பொருள் உரைக்கலாம். மண்டலமென்பதை - மண் தல மெனத் தென்மொழித் தொடர்மொழி யென்று கொளக. (330)

7. பாங்கினில்வருமகுடவர்த்தனருடன் பட்டவர்த்தனருள்ளார், வாங்கும்வெஞ்சிலைமன்னவகுமரரின்மண்டலீகரினுள்ளார், தாங்கு மாமொழிமந்திரிகளினிகற்றந்திரிகளினுள்ளார், ஓங்குநீள்கொடிப் பதாகினிதிரண்டவாறுன்னியாருரைக்கிற்பார்.

(இ - ள்.) பாங்கினில் வரு - (பாண்டவர்பக்கல்) உரிமையால் வந்த, மகுடவர்த்தனருடன்-கிரீடந்தரித்த அரசர்களோடு, பட்டவர்த் தனர் உள்ளார் - (கிரீடமில்லாமல்) பட்டம் மாத்திரம் அணியும் அரசர்களாக உள்ளவர்களும், வாங்கும் வெம் சிலை-வளைந்த கொடிய வில்லையுடைய, மன்னவர் குமரரின் - இராசகுமாரர்களுள்ளும், மண்டலீகரின் - சிற்றரசர்களுள்ளும், உள்ளார் - உள்ளவர்களும், தாங்கும் - (அரசர்களால்) ஏற்றுக்கொள்ளத்தக்க, மா மொழி - சிறப்பான சொற்களையுடைய, மந்திரிகளின்-மந்திரிகளுள்ளும், இகல் தந்திரிகளின் - பராக்கிரமமுள்ள சேனைத்தலைவருள்ளும், உள்ளார்- உள்ளவர்களும், (ஆகிய இவர்களுடைய), ஓங்கும் நீள் கொடி பதாகினி - உயரவெடுத்த நீண்ட துவசங்களையுடைய சேனைகள், திரண்ட ஆறு - (தம்மில்) ஒருங்குகூடிய விதத்தை, உன்னி-(இத் தன்மையதென்று) எண்ணி, உரைக்கிற்பார்-சொல்லவல்லவர், யார்- (இவ்வுலகத்தில்) யாவருளர்? [எவருமிலர் என்றபடி]; (எ - று.)

மனத்தால் எண்ணுதற்கும் வாயாற் சொல்லுதற்கும்கூடாதபடி அளவிறந்த சேனைகள் ஒருங்கே குவிந்தன வென்க. பாங்கினில் - அன்பினால் என்றபடி. மண்டலீகர் - நாற்பதுகிராமம் ஆள்பவர். ஒரு கோடி கிராமம் ஆள்பவன் மகுடவர்த்தன னென்றும், மகுட வர்த்தனர் நாலாயிரவரை வணக்கியாள்பவன் மண்டலீக னென்றும் கூறுவர் ஒருசாரார். "ஒருதலையாச், சொல்லலும் வல்ல தமைச்சு", "அறனறிந்தான்றமைந்த சொல்லான்", "தலைமகன் வெகுண்ட போதும், வெம்மையைத் தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரர்" என்ற அமைச்சிலக்கணத்தின்படி அரசன் அங்கீகரிக்குமாறு சமயத் துக்கு ஏற்ற ஆலோசனைகளை உறுத்திக்கூற வல்லவ ரென்பார் "தாங்குமா மொழி மந்திரிகள்' என்றார், மந்திரம் - ஆலோசனை, அதனையுடையவன், மந்திரி. தந்திரி - சேனையையுடையான்; தந்திரம் - சேனை. 'இயல் தந்திரி' என்றும் பாடம். பதாகினீ யென்னும் வடசொல்லுக்கு - கொடிகளையுடையதென்று பொருள். [பதாகா - கொடி]; இது காரணங்கருதாது பெயர் மாத்திரமாய் நிற்றலால், 'ஓங்குநீள்கொடி' என விசேடிக்கப்பட்டது. (331)

8.—தருமபுத்திரன் வந்த அரசரை எதிர்கொள்ளுதல்.

யானை தேர் பரி யாளெனுந் திறத்தினுலிலக்கணத் தெண்பட்ட, சேனையேழுமக்குரோணிக டிரண்டன திரைக்கடலேழென்னச்,

சோணமாமுகிலேழுமொத்ததிர்ந்தன துந்துபிக்குலம்வந்த, தானை மன்னரைத்தனித்தனிமுறைமையாற்றருமனுமெதிர்கொண்டான்.

(இ - ள்.) யானை தேர் பரி ஆள் எனும் நிறத்தினுல் - கஜ ரத துரக பதாதியென்னும் வகையினுல், இலக்கணத்து எண்பட்ட - (அக்ஷௌஹிணி) இலக்கணத்தில் வைத்துக் கணக்கிடப்பட்ட, சேனை ஏழுடம் அக்குரோணிகள் - ஏழு அக்ஷௌஹிணி சேனைகளும், திரை கடல் ஏழு என்ன - அலைகளையுடைய ஏழுகடல்கள்போல, திரண்டன - ஒருங்குகூடின; துந்துபி குலம் - (அவற்றிலே அடிக்கப் படுகிற) ரணபேரிகையின கூட்டங்கள், சோணை மா முகில் ஏழும் ஒத்து - இடைவிடாப்பெருமழைபொழியும் பெரியமேகங்கள் ஏழையும் போன்று, அதிர்ந்தன - ஒலித்தன; வந்த-(இவ்வாறு தனக்குப் படைத்துணையாக) வந்த, தானை மன்னரை - சேனைகளையுடைய அரசர்களை, தருமனும் - தருமபுத்திரனும், முறைமையால் - (அவரவர்க்குரிய) முறைப்படி, தனி தனி—, எதிர்கொண்டான் - எதிர் சென்று அழைத்துவந்து உபசரித்தான்; (எ - று.)

தருமத்தினின்றும் தவறினவர்களுக்குத் தகுந்த தண்டனை செய்து தருமதைதைக்காத்தலால், எமனுக்குத் தருமனென்று பெயர்; 'தந்தையே மைந்தனைப் பிறக்கிறுன்' என்னும் நூல்வழக்குப்பற்றி, தருமபுத்திரனை 'தருமன்' என்றது. இலக்கணம் - லக்ஷணம். அக்குரோணி - அக்ஷௌஹிணி. அக்குரோணி - யானை இருபத்தேராயிரத்தெண்ணூற்றெழுபது, தேர் இருபத்தேராயிரதெண்ணூற் றெழுபது, குதிரை அறுபத்தையாயிரத்து அறுநூறறுப்பது, காலாள் - லட்சத்தெண்பதினுயிரத்து மூன்நூறறைபது; ஆக இரண்டு லட்சத்துப் பதினெண்ணுயிரத்து எழுநூறு கொண்டது. (இதிஹாசை, வியாசபாரதத்தில் இரண்டாம அத்தியாயத்திற் கண்டது.) கடலேழ் - உவர்நீர், கருப்பஞ்சாறு, கள, நெய், தயிர், பால், நன்னீர் என இவற்றின் மயமானவை. ஏழ் என முகரமெய் யீற்றுப்பெயரென்பது, ஆசிரியர் தொல்காப்பியனுர் மதம்; ஏழு என முற்றியலுகர வீற்றுப்பெயரென்பர், நன்னூலார். முகிலேழ்-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரிதம், துரோணம், காள முகி, நீலவர்ணம் என்பன. 'துந்துபிக் குல மார்ப்ப' என்றும் பாடம்.

9.— தருமன் தனக்கு அரசுரிமைகொடாமல் துரியோதனன் மறுத்ததை அரசர்கட்குக் கூறுதல்.

தான்வணங்குநர் தன்கழல்வணங்குநர் தங்களைத்தழீஇக்கொண்டு
தேன்வணங்குதார் மன்னவரிருந்தபின்சென்றவர்முகநோக்கி
யான்வணங்கி மாமாயனைத் தூதுவிட்டெனதுபாரெனக்கென்ன
வான்வணங்கினும் வணங்கலாமுடியினன் மறுத்தமர்புரிகென்றன்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) (தருமபுத்திரன்), தான் வணங்குநர் தன் கழல் வணங்குநர் தங்களை - தனைல் வணங்கத்தக்கவரும் தனது பாதங்களை வணங்குபவரும் ஆகிய அவ்வவ்வரசர்களை, தழீஇக்கொண்டு - (அவரவர் தகுதிக்கு ஏற்ப) ஆதரித்து உபசரித்து, - தேன் வணங்கு

தார் மன்னவர் இருந்தபின் - வண்டுகள்மொய்க்கும் பூமாலையை யணிந்த அவ்வரசர்கள் (தக்க ஆசனங்களில்) வீற்றிருந்தபின்பு, சென்று - (அவரருகிற்) சென்று, அவர் முகம் நோக்கி - அவர்களது முகத்தைப் பார்த்து,—'யான்—, வணங்கி - பணிந்து, மா மாயனை தூது விட்டு - மிக்கமாயையுடைய கண்ணபிரானைத் தூதனுப்பி, எனது பார் எனக்கு என்ன - யான் முன் ஆண்டுவந்த இராச்சியம் (இப்பொழுது) எனக்கு(த் தரத்தக்கது) என்று கேட்க,—வான் வணங்கினும் வணங்கலா முடியினன் - தேவர்கள் (வந்து தன்னைப்) பணிந்தாலும் எதிர்பணியாத சிரத்தையுடைய துரியோதனன், மறுத்து - (சிறிதுங்கொடேனென்று என்வேண்டுகோளை) உபேட்சித்து, அமர் புரிக என்றான் - (வல்லவராயின்) போர்புரிவாராக என்று கூறிவிட்டான்; (எ - று.)

இப்பாட்டில் இரண்டாமடியில் 'நோக்கி' என்ற வினையெச்சம், அடுத்த கவியிறுதியில் 'என்றான்' என்ற முற்றொடுமுடியும். தேன் - வண்டின் ஓர் சாதி; அது - நல்லமணத்தைச்செல்வது. இனி, தேன் வணங்கு தார் - தேனெழுகும் மாலை யென்றுமாம். 'வணங்கு', என்பதற்குச் சந்தர்ப்பத்திற்கு ஏற்பப் பொருள்கொள்ளப்பட்டது. 'தார்' என்றதில், போர்வெற்றிக்குரிய பூமாலையும் அவரவர்க்குரிய அடையாளபூமாலையும் ஆக இரண்டும்அடங்கும். சென்றவர் என ஒரு சொல்லாக எடுத்து, வந்தவரெனக்கொள்ளலுமாம். வணங்கி எனற்கு - கண்ணனை நமஸ்கரித்து என்றுவது, கீழ்ப்படிந்து துரியோதனனேடு சாமவுபாயத்திற்பொருந்தி யென்றுவது கருத்துக்கொள்க. மாயையாவது - கூடாததையும் கூட்டுவிக்கும் திறம். அகடிதகடநா சாமர்த்தியம்: பிரபஞ்சகாரணமான பிரகிருதியுமாம்; ஆச்சரியகரமான குணங்களுஞ் செயலுமாகலாம். மாயவன் - மாயையேபோற் கருகிறமுடையா னெனினுமாம். வான் - அதிற்சஞ்சரிக்கும் தேவர்க்கு இடவாகுபெயர். துரியோதனனுக்கு 'வணங்கா முடிமன்னன்' என்று ஒரு பெயர். 'மன்னவன்' என்றும் பாடம். (333)

10.—இதுவும் அது.

கேண்மையாலெனதரசுநீதருகெனக்கேட்கவுமதியாமல், ஆண்மையாலவன்மறுத்தமையெனக்குயிரனையநீரறிமின்கள், வாண்மையால்வரிவின்மையான்மேன்மையால்வலியுடைக்கலனுங்கள், தோண்மையாலமர்தொலைத்தடல்வாகையுஞ்சூடுவனினியென்றான்.

(இ - ள்.) கேண்மையால் - சினேகதருமத்தால் [சமாதானவழியால் என்றபடி], எனது அரசு நீ தருக என - எனக்கு உரிய இராச்சியத்தை நீ கொடுப்பாயாக வென்று, கேட்கவும் - (யான் கண்ணனைக் கொண்டு வேண்டிக்) கேட்டிடவும், அவன் - அத்துரியோதனன், மதியாமல் - இலட்சியஞ் செய்யாமல், ஆண்மையால் - (தனது) பராக்கிரமத்தால், மறுத்தமை - (இராச்சியங் கொடுக்கமாட்டேனென்று) மறுத்துவிட்டதை, எனக்கு உயிர் அனைய நீர் - எனக்கு உயிரைப் போலச் சிறந்த ஆதாரமான நீங்கள், அறிமின்கள் - அறிந்திருங்கள்; வாண்மையால் - வாளின்தொழில் வன்மையாலும், வரி வின்மையால் - கட்டமைந்த வில்லின் தொழில்வன்மையாலும், மேன்மையால்

பெருமையாலும், வலி உரைக்கலான் - (நான்) பராக்கிரமங் கூறிக் கொள்கிறேனில்லை; இனி - இனிமேல், உங்கள் தோண்மையால் - உங்களது புஜபலத்தால், அமர் தொலைத்து - போரில் (பகைவரை) ஒழித்து, அடல் வாகையும் சூடுவன் - அவ்வெற்றிக்கு அடையாள மான காட்டுவாகைப் பூமாலையையுந் தரிப்பேன், என்றான் - என்று (தருமன் அரசரை நோக்கிக்) கூறினான்; (எ - று.)

கேண்மை - (ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமசமாசாரங்களைக்) கேட்குந் தன்மை யென நண்புக்குக் காரணப்பெயர்: விகுதிப்பகுதியடியாகப் பிறந்த பண்புப்பெயர். ஆண்மை - ஆண்தன்மை: பௌருஷம்; அரசாளுந் தன்மையுமாம். உயிருவமையால் இன்றியமையாமை கூறி அவரைப் புகழ்ந்தபடி. வாண்மை, வின்மை என்றவற்றில், 'மை' விகுதி தன்மைப் பொருளை யுணர்த்தும். அடல் - (பகைவரைக்) கொல்லுதல். வாகை யென்னும் ஓர் மரத்தின் பெயர்-அதன் மலரினாலாகிய மாலைக்கு இருமடியாகுபெயர். வாகைப்பூமாலை பகைவரை வென்றோர் சூடுவதாதலை "வெட்சிநிரை கவர்தல்****மிக்கோர், செரு வென்றது வாகையாம்" என்றதனாலும் அறிக. (334)

11.—வந்த அரசர்கள் தருமனுக்குத் தைரியங்கூறுதல்.

வெங்கண்மாமுரசுயர்த்தவனிர்மொழிவிளம்பலும்விளக்கஞ்செய்
திங்களஞ்சூழ்தருதாரையின் கணமெனச் சேர்ந்தமன்னவரெல்லாம்
எங்களாவியுமெம்பெருஞ்சேனையும் யாவையுநினவென்றார்
தங்கள்வீரமுமானமுமரபுநல்வாய்மையுந்தவறில்லார்.

(இ - ள்.) வெம் - (பகைவர்க்குப்) பயங்கரமான, கண் - தன்மையையுடைய, மா முரசு - பெரிய முரசத்தின் வடிவத்தையெழுதின கொடியை, உயர்த்தவன் - உயர எடுத்தவனான யுதிட்டிரமகாராசன், இ மொழி விளம்பலும் - இந்த வார்த்தையைக் கூறினவுடனே,—தங்கள் வீரமும் மானமும் மரபும் நல் வாய்மையும் தவறு இல்லார் - தங்களது பராக்கிரமமும் மானமும் குலப்பெருமையும் சிறந்த சத்தியமும் (என்றும்) பிறழ்தலில்லாதவராகிய, விளக்கம் செய் திங்கள் சூழ்தரு தாரையின் கணம் என சேர்ந்த மன்னவர் எல்லாம் - பிரகாசத்தைச் செய்கிற பூர்ணசந்திரனைச் சூழ்ந்துள்ள நட்சத்திரங்களின் கூட்டம்போல(த் தருமனை)ச் சூழ்ந்துள்ள அவ்வரசர்கள் யாவரும்,—எங்கள் ஆவியும் எம் பெருசேனையும் யாவையும் நின என்றார் - 'எங்கள் உயிரும் எங்கள் பெரிய சேனைகளும் ஆகிய எல்லாப் பொருளும் உனக்கேஉரியனவாம்' என்று (தருமனுக்கு) உறுதி கூறினார்கள்; (எ - று.)

விளம்பலும் என்றார் என இயையும். சந்திரன் நட்சத்திரங்களுக்கு அதிபதியாதல்போல, இவ்வரசரெல்லாம் தருமனைத் தமக்குத் தலைவனாகக் கொண்டதனால் இங்கே இவ்வுவமை கூறினர். "யாமெய்யாகக் கண்டவற்றுளில்லை யெனைத்தொன்றும், வாய்மையினல்ல பிற" என்பவாதலால் 'நல்வாய்மை' எனப்பட்டது. சொன்ன சொல்லைத் தவறாமல் பராக்கிரமங் கொண்டு பகைவெனறு மானங் காக்கவல்ல உயர்குடிப்பிறப்பினரென்பார் 'தங்கள் வீரமுமானமு

மரபு நல்வாய்மையுந் துவறில்லார்' என்றார். இனி, வெங்கண் என்பதில் கண் என்பதற்கு வாத்தியத்தில் அடிக்கப்படும் இட மென்றும், வாரினுற் கட்டப்படுகிற கண்களென்றும் பொருள் கொள்ளலாம்; "கடிப்பிடி கண் முரசம்" என்றார் நாலடியாரிலும். 'நினதென்றார்' என்ற பாடத்துக்குப் பன்மையொருமை மயக்கமாய், தனித்தனி நின்னுடையதென்க. எங்களாவி - ஒற்றுமைக்கிழமைப் பொருளில்வந்த ஆறாம்வேற்றுமைத்தொகை. மானமாவது - எப்பொழுதுந் தம் நிலையினின்று தாழாமையும், ஊழ்வினையால் தாழ்வு வந்தவிடத்து உயிர்வாழாமையுமாம். மரபு-அதன் சிறப்புக்கு ஆகுபெயர். (335)

12.—தருமன் சுவேதனைச் சேனாபதியாக்கலும், இராவான் வீரம் பேசுதலும்.

சுற்றுமன்னவர்சொற்றசொற்களிற்பகைதொலைத்தனன் போலாகிச், செற்றுவார்கழற்சிவேதனைத் தன்பெருஞ்சேனையின் பதியாக்கி, மற்றைநாண்முரசறைந்தமர்குறித்தலு மரவமின்மகன்றெவ்வர்,கொற்ற வெம்படையனைத்துமோரம்பினுற் கொல்வனேர் தினத்தென்றான்.

(இ - ள்.) (தருமபுத்திரன்), சுற்று மன்னவர் சொற்ற சொற்களின் - (தன்னைவந்து) சூழ்ந்த அரசர்கள் கீழ்ச்சொன்ன வார்த்தைகளால், பகை தொலைத்தனன் போல் ஆகி - பகைவர்களை ஒழித்தவன் போலக் கவலையற்றவனாய், செற்று வார் கழல் சிவேதனை - நெருங்கிய நீண்ட வீரக்கழலையுடைய சுவேதனென்னும் (விராடன் மூத்த) மகனை, தன் பெரு சேனையின் பதி ஆக்கி - தனது பெரிய சேனைக்குத் தலைவனாக நியமித்து, அற்றைநாள் - அந்நாளிலே, முரசு அறைந்து - பேரிகை முழக்கி, அமர் குறித்தலும் - போர் நிகழ விருப்பதை வெளிப்படுத்தினவளவில், (அப்பொழுது),— அரவம் மின் மகன் - (உலூபியென்னும்) நாககன்னிகையினது குமாரனான இராவான், 'தெவ்வர் கொற்றம் வெம்படை அனைத்தும் - பகைவர்களது வெற்றியையுடைய கொடிய சேனைகளையெல்லாம், ஓர் தினத்து - ஒரு நாளிலே, ஓர் அம்பினால் - ஒரு பாணத்தாலே, கொல்வன் - (யான்) கொன்றிடுவேன்,' என்றான்-என்று (வீரவாதம்)கூறினான்; (எ - று.)

சுவேதன் பாண்டவசேனாபதியாயிருத்தற்கு ஏற்ற திறமையுடையவனதலைக் கீழ் வெளிப்பாட்டுச்சருக்கத்தில் "சிவன்றன்னை நோக்கிச் சிவேதன் தவஞ்செய்த வாறும், அவன்ற னருளாற் பல வாயுதம் பெற்றவாறும், இவன் தன் பகை செற்றதும் யாவு மியம்பியுள்ளங், கவன்றன்புரூமல் விராடன்றன் கவற்சி தீர்த்தான்" என்ற தனாலுங் காண்க. தீர்த்த யாத்திரையாகப் புறப்பட்ட அருச்சுனன் கங்காநதியில் நீராடுகையில், அங்கு நீர்விளையாடவந்த நாககன்னிகைகளுள் உலூபி யென்பவள் அருச்சுனனைக்கண்டு காமுற்று அவனைப் பிலத்துவார வழியாய்த் தன்னுலகத்துக்கு அழைத்துச்சென்று அவனை மணஞ்செய்து கொண்டு இராவானென்னும் புத்திரனைப் பெற்றாள். இவன், தந்தையாகிய அருச்சுனனினும் பலமடங்கு பல பராக்கிரமங்களிற் சிறந்தவனதலின் இங்ஙனங் கூறினான். கழல் -

வீரர்கள் தமது வீரத்துக்கு ஓர் அறிகுறியாகக் காலில் அணிவதோர் ஆபரணம்; "வீரத்தின் வீக்கிய, கழலேயாடவர் கான்மிசை யணி வடம்," என்பதனாலும் அறிக. மின் - மின்னல் போல மெல்லியளாய் விளங்கும் பெண்ணுக்கு உவமையாகுபெயர். மின்னுவது, மின் எனக் காரணக்குறி. முரசறைந்து என்பதற்கு, தருமன் - ஏவுதற்கருத்தா; முரசறைவித்து என்க. (336)

13.—கவிக்கூற்று.

பாண்டுவின்றிருமைந்தர்களோவரும்பார்த்திவருடன்கூடி
யீண்டிருந்தனரிவ்வுழிச்செருக்குறித்தெழிலிமேனியனேடுந்
தூண்டுவெம்பரித்தேர்த்துரியோதனன்றூதுபோய்ப்பரந்தாமன்
மீண்டுவந்தபின்னவ்வுழிப்புரிந்தனவிளம்புகின்றனமன்னே.

(இ - ள்.) பாண்டுவின் திரு மைந்தர்கள் ஐவரும் - பாண்டு மகாராசனது சிறந்த குமாரர்களான (தருமன் முதலியோர்) ஐந்து பேரும், பார்த்திவருடன் கூடி - மற்றையரசர்களுடனே சேர்ந்து, செருக்குறித்து - போர்செய்ய விருப்பதை வெளிப்படுத்தி, எழிலி மேனியனேடும் - மேகம்போலக் கரிய திருமேனியையுடைய கண்ண பிரானுடனே, இ உழி - இவ்விடத்தில் [உபப்பிலாவியத்தில்] ஈண்டு இருந்தனர் - இவ்வாறு இருந்தார்கள்; (இது நிற்க), அ உழி - அவ்விடத்தில் [அஸ்தினபுரியில்], தூண்டும் வெம்பரி தேர் துரியோதனன் - செலுத்தப்படுங் கொடியகுதிரைகள் பூட்டுந் தேரையுடைய துரியோதனராசன், பரந்தாமன் தூது போய் மீண்டு வந்த பின் - கண்ணபிரான் தூதுசென்று திரும்பிவந்த பின்பு, புரிந்தன-செய்த காரியங்களோ, விளம்புகின்றனம் - (இனிச்) சொல்லத் தொடங்குகிறோம்; (எ - று.)

அரசாட்சிச்செல்வம் இவர்களோ ரணுக இருத்தல்பற்றியும், 'திரு மைந்தர்கள்' என்றார் போலும். மைந்து - வலிமை, இளமை, அழகு; அதனையுடையவர் - மைந்தர். எழிலி - எழுதலையுடையது என மேகத்துக்கு ஏதுப்பெயர். தேர் - மற்றை அங்கங்களுக்கும் உபலட்சணம். பரந்தாமன்-(எல்லாவுலகத்திலும்)மேலான இடத்தை [பரமபதத்தை]யுடையவன்; சிறந்த சோதிவடிவானவ னென்றும் பொருள் கொள்ளலாம். தாமம் - இடமும், ஒளியுமாம். துரியோதனன என்பதற்கு-(பகைவர்க்குக்) கொடிய போரையுடையா னென்று பொருள்; யோதனம்-யுத்தம். (337)

வேறு.

14.—தனக்குப் போர்த்துணையாகும்படி துரியோதனன் எல்லாவரசர்க்கும் செய்தி தெரிவித்தல்.

முந்தரவுயர்த்தோணேலிமுடியுடையரசர்காண்க
வெந்திறலிவரோடும்வெஞ்சமர்விளைந்ததம்மா
தந்தமகிளைஞரோடுஞ்சாதுரங்கத்தினேடும்
வந்தவர்தமக்கேவாழ்வுமுழுதுமென்றெழுதிவிட்டான்.

(இ-ள்.) 'முந்து-முன்பக்கத்திலே, அரவு உயர்த்தோன்-பாம்புக் கொடியை உயர எடுத்துள்ள துரியோதனனது, ஓலை - திருமுகத்தை, முடி உடை அரசர் - கிரீடத்தையுடையவராய் அரசாளும் இராசாக்கள், காண்க - காண்பாராக;—வெம் இறல் ஐவரோடும் - கொடிய வலிமையையுடைய பஞ்சபாண்டவருடனே, (நமக்கு), வெம் சமர் விளைந்தது - கொடிய யுத்தஞ் செய்ய நேர்ந்தது; (ஆதலால்), தம் தம கிளைஞரோடும் - தங்கள் தங்களுடைய சுற்றத்தாரோடும், சாதுரங்கத்தினோடும் - சதுரங்கசேனையோடும், வந்தவர் தமக்கே - (நமக்குத்துணையாக) வந்த அரசர்களுக்கே, வாழ்வு முழுதும்-எல்லா வாழ்க்கைகளும் (உண்டு) [பிறர்க்கில்லை],' என்று எழுதி—, விட்டான் - (அப்பத்திரிகைகளைத் தூதர்கள் மூலமாக எல்லா அரசர்களுக்கும்) அனுப்பினன்; (எ - று.)

இங்ஙனம் எழுதியதனால், துணை வேண்டும் பொழுதும் வணங்குதலில்லாது மிடுக்குடன் நிற்கிற துரியோதனனது செருக்கு விளங்கும். முந்து-இடப்பொருளுணர நின்ற இடைச்சொல்: இனி, விளைத்தொகையாகக் கொண்டு, சிறந்த எனினுமாம். பிறருடைய உதவி தனக்கு அவசியம் வேண்டுவதென்றற்கு, 'வெல்லுதலிலவர்' என்றான். அம்மா - வியப்பிடைச்சொல்; எல்லா வலிமைகளையு முடையராய் அரசாட்சிசெய்கிற நம்மோடு அரசிழந்த பாண்டவர் படைதிரட்டிப் போர்செய்யவரலாயிற்றே என்ற அதிசயம் பற்றியது. தாம்தாம் என்ற அடுக்கு முதல் குறுகி, வருமொழி பன்மையாயிருக்கையில் வருதற்குரிய அ என்னும் ஆறனுருபை ஏற்றது. சாதுரங்கம் - யானை முதலிய நான்கு அங்கங்கள்; சதுரங்கமென்பதன் விகாரம். "முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே" என்ற தொல்காப்பியத்து உரிச்சொல்லியற் சூத்திரத்தால், முழுது என்பது - எஞ்சாமைப் பொருளுணர்த்துவதோர் உரிச்சொல். முரணுடையரசர் என்றும், தந்த மாக்கிளைகள் என்றும் பாடம்.

இதுமுதல் மேல் களப்பலியூட்டு சருக்கம் முடிகிறவரையில் இருபத்து நான்கு கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ் சீரும் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள்; இவற்றில் மூன்று ஆறாஞ் சீர்கள் தேமாச்சீர்களாகவே நிற்கும். (338)

15.—இதுமுதல் ஏழுகவிகள் – பலதேசத்தரசர்கள் வந்து திரளுதலைக் கூறும்.

மித்திரரானமன்னர்விறலுடைத்துணைவரோடும்
புத்திரரோடுந்தத்தம்போர்புரிசேனையோடுஞ்
சத்திரநிழல்விடாததன்மையராகிச்சூழ
மத்திரபதியும்வென்றிமருகருக்காகவந்தான்.

இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்.

இவற்றால், சல்லியன் துரியோதனனுக்கு வஞ்சனைவழியால் துணைவனாய்விட்ட செய்தியைக் கூறுகிறார்.

(இ - ள்.) மித்திரர் ஆன மன்னர் - (தனது) நண்பர்களான அரசர்கள், தத்தம் - தங்கள் தங்களுடைய, விறல்உடை துணைவ ரோடும் - வலிமையையுடைய உடனபிறந்தவர்களுடனும், புத்திர ரோடும் - பிள்ளைகளுடனும், போர் புரி சேனையோடும் - போர்செய்ய வல்ல சேனைகளுடனும், சத்திரம் நிழல் விடாத தன்மையர் ஆகி - குடைநிழலை விட்டுநீங்காத தன்மையுடையவர்களாய், சூழ - (தங்க ளைச்) சூழ்ந்துவர, மத்திர பதியும் - மத்திரதேசத்தரசனை சல்லி யனும், வென்றி மருகருக்கு ஆக - வெற்றியையுடைய வல்ல (தனது) மருமக்களான பாண்டவர்களுக்கு உதவியாகும் பொருட்டு, வந்தான் - (தனது ஊரிலிருந்து உபப்பிலாவியத்துக்கு) வருகிறவனை; (எ - று.)

மித்திரரான மன்னரோடும் துணைவரோடும் புத்திரரோடும் அவரவர் சேனையோடும் அவரவர் சத்திரநிழல் விடாத தன்மைய ராய்த் தன்னைச் சூழ மத்திரபதியும் வென்றி மருகருக்காக வந்தா னெனப் பதவுரை கூறினும் பொருந்தும். சல்லியன் பாண்டு மகர் ராசனது இரண்டாவது மனைவியாகிய மாத்திரிக்கு உடன்பிறந்த வனதலால், நகுலசகதேவர்க்கு மாமனுவன். மருகர் - சகோதரி மக்கள். மருகருக்கு வென்றியாக வந்தான் என அநுவயித்து - தன் மருமக்களுக்கு வெற்றியுண்டாகக் கருதி வந்தான் எனினுமமையும். இவன் - நகுலசகதேவரிடத்திற்போலவே தருமபுத்திரன முதலிய மூன்று பாண்டவரிடத்தும் மிகுந்த அன்புடையவனதலால், 'மருகர்' எனப் பொதுப்படக்கூறினர். துணைவர் - சகாயமாகவுள்ள வருமாம்; புத்திர என்பதற்கு - (தமது தாய்தந்தையரைப்) புத் என்னும் நரகத்தினின்றும் (நீக்கிக்) காப்பவரென்று பொருள; புத் பிள்ளையில்லாதவர் அடைவதோர் நரகம். (339)

16. இடைப்படுநெறியில்வைகுமிவனதுவரவுகேட்டுத்
தொடைப்படுதும்பைமாலைச்சுயோதனன்சூழ்ச்சியாக
மடைப்படுவிதியிற்செய்தவிருந்தினன்மருண்டவற்கே
படைப்படுசேனையோடும்படைத்துணையாயினனே.

(இ - ள்.) இடை படு நெறியில் - (மத்திரதேசத்துக்கும் உபப்பிலாவியத்துக்கும்) நடுவிலுள்ளவழியில், வைகும் - வந்து தங்கியிருக்கிற, இவனது - இச்சல்லியனுடைய, வரவு - வருதலை, கேட்டு - கேள்விப்பட்டு, தொடைபடு தும்பை மாலை சுயோ தனன் - தொடுத்தல் பொருந்தின தும்பைப்பூமாலையைச் சூடிய துரியோதனன், சூழ்ச்சி ஆக - வஞ்சனையாக, மடைபடு விதியின் செய்த - சமைத்தறைமுறைவழுக்குப் பொருந்தின முறைமைப்படி செய் வித்த, விருந்தினன் - விருந்துணவினல், மருண்டு - பிரமித்து, படைபடு சேனையோடும் அவற்கே படை துணை ஆயினன் - ஆயுதங் களோடு பொருந்தின (தன்) சேனைகளுடனே (சல்லியன்) அத்துரி யோதனனுக்கே போர்த்துணைவனனை; (எ - று.)

சல்லியனென்ற இவன் பாண்டவர்க்குப் போர்த்துணைசெய்யுப் பொருட்டுத் தன் நாட்டிலிருந்து வரும்வழியில், துரியோதனன் தரும புத்திரன செய்ததென்று தோன்றும்படி ஆங்காங்குத் தண்ணீர்ப் பந்தல் முதலியன வைத்து எல்லாப்பொருளும் குறைவற அமைத்து

வஞ்சனையாக விருந்து செய்விக்க, சல்லியன் அதை ஆராயாது உண்டு, அங்ஙனந்தன்னை உபசரித்தவர்க்குத் துணை செய்யத் தான் கடமைப்பட்டிருப்பதாக வாக்களித்த பின்னர், அது துரியோதனன் செய்ததென்று தெரிந்து கலுழ்ந்தும், வாக்குத்தத்தஞ் செய்துவிட்டதுபற்றி, துரியோதனன் வேண்டுகோளின்படி அவனுக்கே துணையாயினனென்: இவ்வரலாற்றைக் கீழ் வெளிப்பாட்டுச்சருக்கத்தில் கூறியிருத்தலுங் காண்க. கீழ்க் கூறிநின்ற வரலாற்றையே, இங்கு இருதிறத்தும் படைத்துணையாயினவர் இவரிவரெனப் பகுத்துக் காட்டும் பொருட்டு மீண்டும் கூறினமையின். இதுகூறியதுகூறலாகாது, அநுவாதமுமாம்; ஒருகாற் கூறியதை மீண்டுங் காரணமின்றி எடுத்துக் கூறுதலே கூறியதுகூறலென்னுங் குற்றமென்றும், அங்ஙனம் ஒருகாற் கூறியதையே மீண்டும் ஒரு காரணம்பற்றி எடுத்துக்கூறுதல் அநுவாதமென்னுங்குணமாமென்றும் வேறுபாடு அறிக. இப்பாடலின் முதலடியால், இடைநெறியில் வைகுகையில் சல்லியனது வருகையைத் துரியோதனன் கேள்விப்பட்டானென்க.

தும்பைமாலை, போருக்கு உரியது. தும்பைமாலைச் சுயோதனன் என்றது, அவன் யுத்தத்திற்குச் சித்தனாயிருந்ததை விளக்கும். ஸுயோதனன் என்னும் பெயர்க்கு நல்ல [வெற்றியைத்தருகிற] போரையுடையவனென்று பொருள்; ஸு-நன்மை, யோதநம்-யுத்தம். சூழ்ச்சி - தந்திரம். விருந்து - புதுமை; இங்கு இருமடியாகுபெயராய், புதியராய் வந்தவர்க்குச்செய்யும் உபசாரத்தைக் குறித்தது. செய்ததென்னும் வினைக்கு, சுயோதனன் - ஏவுதற்கருத்தா. மடைப்படு விதி - பாகசாஸ்திர விதி. (340)

17. சல்லியன் முனுமாயச்சகுனியுந்தறுகண் வெம்போர்
வல்லியமனீயவென்றிமாகதபதியுங்கொற்ற
வில்லியல்கடகத்திண்டோள்விந்தரன்விந்தனென்று
சொல்லியநிருபர்தானீயாருடுங்கடலிற்சூழ்ந்தார்.

(இ - ள்.) சல்லியனும் - (கீழ்க்கூறிய) சல்லியனும், மாயம் - வஞ்சனையையுடைய, சகுனியும்—, தறுகண் வெம் போர்-அஞ்சாமையோடு செய்யத்தக்க கொடியயுத்தத்தில், வல்லியம் அனீய-புலியையொத்த [பராக்கிரமத்தையுடைய], வென்றி மாகதபதியும் - வெற்றியையுடைய மகததேசத்தார்க்குத் தலைவனான அரசனும், கொற்றம் - வெற்றியைத்தரத்தக்க, வில் - விற்றொழில் வன்மை, இயல்-பொருந்தின, கடகம் திண் தோள் - கடகமென்னும் அணியையணிந்த வலிய தோள்களையுடைய, விந்தரன் விந்தன் என்று சொல்லிய நிருபர் - விந்தரனென்றும் விந்தனென்றும் பேர் சொல்லப்பட்ட அரசர்களும், தானை ஆருடும் - அறுவகைச்சேனையுடனே, கடலின் சூழ்ந்தார் - சமுத்திரம்போலத் (துரியோதனனை வந்து) சூழ்ந்தார்கள்;

அளவிறந்த பரப்புக்கும், ஆரவாரத்துக்கும், அணியணியாக வருதற்கும் சேனைக்குக் கடல் உவமை. அறுவகைச்சேனை - மூலப்

படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்னும் பரிமேலழகர், தேர், யானை, குதிரை, வில்வீரர், வாள்வீரர், வேல்வீரர் எனினுமமையும்: "வேற்றானை வாட்டானை விற்றானை மேலோர், தேர்த்தானை பரித்தானை களிற்றுத் தானை யென, ஆற்றல் சான்ற வறுவகைத்தானை" என்பது திவாகரம் இனி, தானை யாவெறுடு என்பதற்கு - சேனைகளாகிய நதிகளோடு என்று உரைத்தல் சிறவாமை காண்க. சல்லியன் - (பகைவர்க்கு) அம்புநுனிபோல் (வருத்தஞ்செய்) பவன்; சல்யம் - அம்புமுனை. தான் - அசை. சகுனி - கர்ந்தாரதேசத்தரசன்; திருதராட்டிரனது மனைவியான காந்தாரியின் உடன்பிறந்தவன். ஆதலால், துரியோதனதியர்க்கு மாமன். இவன் வஞ்சகச்சூதில் வல்லவனதலால் 'மாயச் சகுனி' என்றார். கடகம்-ஓர் வகைக் கைவளை. விந்தன அனுவிந்தன் என இருவர் அவந்திதேசத்தரசர்கள் என்பது வியாசபாரதம். (341)

18. கலிங்கர்கோன்சோமதத்தன்கௌசிகன்காம்பிலீசன்
தெலுங்கர்கோன்போசனுதிகேகயன்றிகத்தபூபன்
வலங்கொள்வேற்கவுடராசன்மாளவன்வளவன்சேரன்
துலங்குநீரோகனீகனெனும்பலவேந்தர்தொக்கார்.

(இ - ள்.) கலிங்கர்கோன் சோமதத்தன் - கலிங்கநாட்டார்க்கு அரசனை சோமதத்தனென்பவனும், கௌசிகன் காம்பிலி ஈசன் - காம்பிலிதேசத்தரசனை கௌசிகனென்பவனும், தெலுங்கர்கோன் - தெலுங்கதேசத்தார்க்கரசனும், போசன்-போசதேசத்தரசனும், ஆதிகேகயன் - முதன்மையான கேகயதேசத்தரசனும், திகத்தபூபன் - திரிகர்த்ததேசத்தரசனும், வலம் கொள்வேல் - வெற்றியைக் கொள்ளும் வேலாயுதத்தை யேந்திய, கவுடராசன்-கௌடதேசத்தரசனும், மாளவன் - மாளவதேசத்தரசனும், வளவன் - சோழனும், சேரன் - சேரனும், துலங்குநீர் ஓகனீகன் - விளங்குகின்ற குணங்களையுடைய ஓகநீகனும், எனும் - என்கிற, பல வேந்தர் - பல அரசர்கள், தொக்கார் - வந்துகூடினார்கள்; (எ - று.)

கீழ்நான்கு ஆரங்கவிகளிற் கூறிய தேயங்களுள் சிலவற்றையே மீண்டும் இங்குக் கூறியதனால், அந்தந்ததேசத்து அரசகுலத்தாருள் சிற்சிலர் பாண்டவர் பக்கத்தும் சிற்சிலர் துரியோதனதியர்பக்கத்தும் வந்து கூடினரென்க. கௌசிகன் - குசிக குலத்தான்; தத்திதாந்த நாமம். நீர்வளநிலவளங்களிற் சிறந்த நாட்டையுடைமையின், சோழனுக்கு வளவனென்று பெயர்; வளவன் - எல்லாவளங்களையு முடையான். 'இலங்குநீ ரோதைவேலெனும் பல வேந்தர்' என்றும் பாடம். (342)

19. பங்களங்குரஞ்சினப்பரங்கொப்பம்வங்கஞ்
சிங்களந்துளுவமங்கமாரியந்திகத்தஞ்சேதி
கொங்கணங்கடாரங்கொங்கங்கூபகமிரட்டமொட்டம்
எங்கணுமுள்ளவேந்தரியாவருமீண்டிமொய்த்தார்.

(இ - ள்.) பங்களம் குகுரம் சீனம் பப்பரம் கொப்பம் வங்கம் சிங்களம் துளுவம் அங்கம் ஆரியம் திகத்தம் சேதி கொங்கணம் கடாரம் கொங்கம் கூபகம் இரட்டம் ஒட்டம்—, (என்கிற இத் தேசங்கள் முதலாக), எங்கணும் - எல்லாவிடங்களிலும், உள்ள—, வேந்தர் யாவரும் - அரசர்களெல்லோரும், ஈண்டி மொய்த்தார் - கூடி நெருங்கினர்கள்; (எ - று.)

பங்களம் - பங்காள மென வழங்கும். வேந்தரியாவர் - தன்னெழி மெய்ம்முன் யகரம் வர இகரந்தோன்றிற்று. (343)

20. அண்ணலந்துரகத்தாமாவாதியாங்குமரராலும்
எண்ணிருபத்துநூறும்யாதவகுமரராலும்
வண்ணவேற்பூரிகௌரிமாமுதற்குமரராலும்
எண்ணருஞ்சேனவெள்ளமெங்கணும்பரந்தமாதோ.

(இ - ள்.) அண்ணல் - பெருமையையுடைய, அம் - அழகிய, துரகத்தாமா ஆதி ஆம் - அசுவத்தாமன் முதலான, குமரராலும் - இளவீரர்களாலும், எண் இரு பத்து நூறு ஆம்-பதினாயிர மென்னுந் தொகையுள்ளவரான, யாதவ குமரராலும் - யதுகுலத்து இள வீரர்களாலும், வண்ணம் வேல் - அழகிய வேலாயுதத்தையுடைய, பூரி - பூரிச்ரவசு என்பவனும், கௌரிமா - கௌரிமா வென்பவனும், முதல் - முதலான, குமரராலும் - இளவீரர்களாலும், (ஆகிய) எண் அரு சேனை வெள்ளம் - கணக்கிடமுடியாத [அளவிறந்த] சேனைகளின் கூட்டம், எங்கணும் பரந்த - எல்லாவிடங்களிலும் பரவின; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசை.

எண்ணிரு பத்து நூறு - பண்புத்தொகைப் பன்மொழித் தொடர்; எண்ணிரண்டு - பதினாறு: பத்துநூறு - ஆயிரம் எண்ணிரண்டாகிய பத்து நூறென்க. யாதவர் - யதுவின் குலத்தவர்; தத்திதாந்தநாமம்; யது - சந்திரவமிசத்து ஓரரசன். எண்ணிருபத்து நூறும் யாதவகுமார ரென்றது, கண்ணனுக்குப் பதினாயிரம் கோபஸ்திரீகளிடம் பிறந்தவர்களான நாராயணகோபாலர் முதலியோரை; கீழ்த் துரியோதனன் கண்ணனைப் படைத்துணையழைக்கப் போனபொழுது அவனுல் துரியோதனனுக்குத் துணையாகக் கொடுக்கப் பட்டனர் இவரென அறிக. எண் அரு - (மனத்தால்) நினைத்துப் பார்ப்பதற்கும் முடியாத எனினுமாம். வெள்ளம்-ஓர்பெருந்தொகை; இனி, சேனை வெள்ளம்-சேனைகளாகிய் பிரவாகங்களென்றுமாம். (344)

21. தம்பியரனைவரும்துச்சாதனன்முதலாவுள்ளோர்
வெம்பரிதடந்தேர்வேழம்வேல்சிலைவடிவாள்வல்லோர்
அம்பரத்தளவுமுந்நீரம்பரமெழுந்ததென்ன
வும்பருமிம்பராருமுரகரும்வெருவவந்தார்.

(இ - ள்.) வெம் பரி - வேகமான குதிரைகளைச் செலுத்துந் தொழிலிலும், தட தேர் - பெரிய தேர்களை நடத்துந் தொழிலிலும்,

வேழம் - யானைகளை யோட்டுந் தொழிலிலும், வேல் - வேற்றொழிலிலும், சிலை - விற்றொழிலிலும், வடி வாள் - கூர்மையான வாளின் தொழிலிலும், வல்லோர்-வல்லவர்களாகிய, துச்சாதனன் முதல் ஆ உள்ளோர் - துச்சாதனன் முதலாக உள்ளவரான, தம்பியர் அனை வரும் - (துரியோதனனது) தம்பிமார்களெல்லோரும்,—மூ ந் நீர் அம் பரம் - மூன்று நீர்மையையுடைய கடல், அம்பரத்து அளவும் எழுந்தது என்ன - ஆகாயத்தளவும் பொங்கியெழுந்தாற்போல,— உம்பரும் இம்பாரும் உரகரும் வெருவ - மேலுலகத்துள்ள தேவரும் இவ்வுலகத்திலுள்ள மனிதரும் கீழுலகத்துள்ள நாகரும் (ஆக மூவுல கத்தாரும்) அஞ்சும்படி, வந்தார்—; (எ - று.)

தம்பியர், தொண்ணூற்றொன்பதின்மர். துச்சாதனன் என்ற சொல்லுக்கு - கொடிய கட்டளையுடையானென்று பொருள்; சாஸநம்-ஆஜ்ஞை. வெம்பரி தடந்தேர் வேழம் வேல் சிலை வடிவாள் வில் லோர் என்ற இது, அவரது அறுவகைச் சேனையாரையு மாகலாம். வேல் - வெல்லுதற்குரிய கருவி யென்பதுபற்றிய காரணக்குறி போலும். வடிவாள் - வடிக்கப்பட்ட வாள்; வடித்தல் - உலைநெருப்பில் வைத்துக் காய்ச்சி யடித்துக் கூராக்குதல். மூ ந் நீர் - மூன்றுகிய தன்மையை யுடையதெனப பண்புத்தொகையன்மொழிக் காரணப் பெயர். மூன்று தன்மைகள் - பூமியைப் படைத்தல் காத்தல் அழித் தல் என்பன; நீரினின்று நிலம பிறந்ததென வேத மோதுதலால் படைத்தலும், நீரின்றி உலகம் பிழையாதாதலால் காத்தலும், இறுதியில் நீரினுல் மூடப்பட்டு உலகம் அழிதலால் அழித்தலும் ஆக முத்தொழில்களும் கடலுக்கு உரியனவாயின. இனி, ஆற்று நீர் ஊற்றுநீர் வேற்றுநீர் [மழைநீர்] என்னும் மூவகை நீரையுடைய தென்பாரு முளர்; ஆற்றுநீர் மழைநீராதலாலும், அவ்விரண்டு மில்லாதவிடத்து ஊறறுநீரும் இல்லையாமாதலாலும், அது பொருந் தாது. ஆதியில் கடவுள் நீரையே படைத்தாரென்றும் புராணம் கூறுதலால் முந்நீர் முதிய நீரென்றும் பொருள்கொண்டு, முதுமை யென்னும் பண்புப்பெயர் விகாரப்பட்டதென்பாரு முளர். இனி, முன்னீர் என்று நகரத்தைமாற்றிப் பாடங் கொள்ளின் பழமையான நீரென்று பொருள்படும். அம்பரம் என்பது கடல் ஆகாசம் என னும் இவ்விருபொருளு முடையதாதலை "அம்பரங் கடலுமாடையு மாகாயமும்" என்ற நிகண்டினுலும் "அம்பரங் கடல் விண் தூசாம்" என்ற நிகண்டினுலுங் காண்க. உம்ப ரென்னும் மேலிடத் தின் பெயர், அதிலுள்ள தேவர்க்கு இடவாகுபெயர். உம்பர் இம்பர் என்பவற்றில் உகர இகரச் சுட்டுக்கள் முறையே மேலுள்ள பொருளை யுஞ் சமீபத்திலுள்ள பொருளையுங் குறித்தன. உரகராவார்-படமும் வாலுமுடையராய் மனிதவடிவமுந் தெய்வப் பிறப்புமான தொரு சர்ப்ப சாதியார். (345)

22.—துரியோதனன் சேனையின் சிறப்பு.

வீடுமன்கிருபன்கன்னன்விற்கையாசிரியன்வையம்
பாடுசீர்விகத்தசேனன்பகதத்தன்முதலாவுள்ளோர்

ஆடல்வெம்பரிதேர்யாகனையனீகினித்தலைவர்செம்பொற்
கோடுயர்குன்றஞ்சூழ்ந்தகுலகிரியேழுமொத்தார்.

(இ - ள்.) வீடுமன் - பீஷ்மனும், கிருபன் - கிருபாசாரியனும், கன்னன் - கர்ணனும், வில் கை ஆசிரியன் - விற்றொழிலில் வல்ல கையையுடைய துரோணாசாரியனும், வையம் பாடு சீர் - நிலவுலகத்தவராற் (கொண்டாடிப்) பாடப்படுகிற சிறப்பையுடைய, விகத்தசேனன் - விகத்தசேனனும், பகதத்தன் - பகதத்தனும், முதல் ஆ - முதலாக, உள்ளோர் - உள்ளவர்களான, ஆடல் வெம் பரி தேர் யானை அனீகினி தலைவர் - ஆட்டத்தையுடைய வேகமான குதிரைகளையும் தேர்களையும் யானைகளையுமுடைய சேனைகட்குத் தலைவரானவர்கள், செம் பொன் கோடு உயர் குன்றம் சூழ்ந்த குல கிரி ஏழும் ஒத்தார் - சிவந்த பொன்மயமான சிகரங்களுயர்ந்த மேரு மலையைச் சுற்றிலுமுள்ள ஏழு குலபர்வதங்களையும் போன்றார்கள்; (எ - று.)

வீடுமன் முதலிய சேனைத்தலைவர்கள் துரியோதனனைச் சூழ்ந்தது, மலைகளுட் சிறந்த மகாமேருவைக் குலபருவதங்கள் சூழ்தலைப் போன்ற தென்க. புகழ் தான், உரையும் பாட்டும் என இருவகைப் படும்; அவற்றுள் பாடப்படும் புகழைக் கூறுவார், 'வையம் பாடுசீர்' என்றார். "புலவர் பாடும் புகழ்" என்றார் புறநானூற்றிலும். பகதத்தன் - பிராக்சோதிஷபுரத்தரசனும் திருமாலுக்குப் பூமிதேவியினிடம் பிறந்தவனும் கண்ணனற் கொல்லப்பட்டவனுமாகிய நரகாசுரனது மகன். ஆடல் - வெற்றியுமாம். குலகிரி ஏழு - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன. குலகிரி யென்பதில், குலம் என்பதற்குச் சிறந்த தென்று பொருள். நாணற்காட்டிற் பிறந்திருந்த முனிமக்களை வேட்டைக்கு வந்த சந்தனு மகாராசன் பார்த்துக் கிருபையினால் எடுத்துச்சென்று வளர்த்ததனற் கிருப னென்றும், கிருபி யென்றும் பெயருண்டாயின வென்பது விஷ்ணு புராணம். (346)

23.—இதுவும் அது.

நதியெனைப்பலவும்வந்துசிந்துவினண்ணுமாபோல்
எதிரறப்பொருதுவெல்லுமிராசமண்டலங்களெல்லாஞ்
சதமகற்குவமைசாலுந்தரணிபன்றன்னைச்சூழ்ந்து
பதினெரக்குரோணிசேனைபார்மிசைப்பரந்தவன்றே.

(இ - ள்.) எதிர் அற - பகை யொழிய, பொருது - போர்செய்து, வெல்லும் - சயிக்குந்தன்மையுள்ள, இராச மண்டலங்கள் எல்லாம் - அரசர் கூட்டங்கள் யாவும், நதி எனை பலவும் வந்து சிந்துவில் நண்ணும் ஆ போல் - மிகப்பலவான ஆறுகளெல்லாம் வந்து கடலிற் சேரும் விதம்போல, சதமகற்கு உவமை சாலும் தரணிபன் தன்னை சூழ்ந்து - இந்திரனுக்கு உபமானமாகச் சிறந்த துரியோதன மகாராசனை வந்து சூழ்ந்ததனால், பதினெரு அக்குரோணி சேனை பார்மிசை பரந்த - பதினெரு அக்ஷௌஹிணி சைனியம் பூமியின்மேற் பரவின;

(எ - று.)—அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம்: அப்பொழுதே யென்றுங் கொள்ளலாம்.

சதமகற்குவமைசாலும் என்பதற்கு - இந்திரனினுஞ் சிறந்த வென்று பொருள்: உபமேயத்தினும் உபமானஞ் சிறந்திருக்க வேண்டுமென்பது, அலங்கார நூலார் கொள்கை. எனை - எத்தனை யென்பதன் மரூஉ. சதமகனென்னும் சொல்லுக்கு-பூமியைக் காப்பவ னென்றும் பொருள். இவ்வுலகத்தில் நூறு அசுவமேதயாகங்களைச் செய்தவன் மறுமையில் தேவேந்திர பதவி பெறுகின்றன னென்பது, நூற்கொள்கை. தரணி - (எல்லாப் பொருள்களையுங்) தரிப்பது. சூழ்ந்து - சூழ; எச்சத்திரிபு. 'நதியினம்', 'எதிருற' என்றும் பாடம். (347)

24.—துரியோதனன் வீடுமனைச் சேனாதிபதியாக்குதல்.

பரசுடையிராமன்பாதபங்கயஞ்சென்னியேந்தி
வரிசிலைவேதங்கற்றுமற்றவன்றனையும்வென்ற
குரிசிலைக்கங்கைதந்தகுருகுலக்கோமான்றன்னை
அரசன்வெஞ் சேனைக்கெல்லாமதிபதியாக்கினனே.

(இ - ள்.) பரசு உடை இராமன் - கோடாலிப்படையையுடைய பார்க்கவ ராமனது, பாத பங்கயம் - திருவடித்தாமரைமலர்களை, சென்னி ஏந்தி - (தனது) முடியின்மேற் கொண்டு, வரி சிலை வேதம் கற்று - கட்டமைந்த வில்வித்தையை (அவனிடத்து)க் கற்று, மற்று - பின்பு, அவன் தனையும் வென்ற - அப்பரசுராமனையே சயித்த, குரிசிலை - பெருமையிற் சிறந்தவனும், கங்கை தந்த - கங்காதேவி பெற்ற, குரு குலம் கோமான் தன்னை - குருவமிசத்துக்குத் தலைவனுமான வீடுமனை, அரசன் - துரியோதனராசன், வெம் சேனைக்கு எல்லாம் அதிபதி ஆக்கினன் - உக்கிரமான சேனைகளெல்லாவற்றிற்குந் தலைவனாக்கினன்; (எ - று.)

உலகத்திலே எவரும் அழிப்பவரில்லாமையாற் கொழுத்துத் திரிந்து கொடுமையியற்றிவந்த க்ஷத்திரிய வம்சங்கள் பலவற்றைப் பற்றற நாசஞ்செய்யும் பொருட்டு, நாராயணமூர்த்தி, ஜமதக்கி முனிவரது மனைவியான ரேணுகையினிடம் ராமனுருத்திருவதரித்து, பரசு என்னுங் கோடாலிப் படையையே ஆயுதமாகக் கொண்டு, தமது தந்தையின் ஓமதேனுவைக் கவர்ந்து அவரைக் கொன்றிட்டது காரணமாகக் கார்த்தவீரியார்ச்சுனனையும் அவனதுகுமாரர்களையுங் கொன்று அழித்து அதனாலேயே க்ஷத்திரிய வம்சம் முழுவதன் மேலுங் கோபாவேசங்கொண்டு, உலகத்திலுள்ள அரசர் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டார். இவர், திருமாலின் ஆறுவது திருவவதாரம்: (ஏழு சிரஞ்சீவிகளுள் ஒருவர்; மற்றையோர் - அசுவத்தாமா, பலி, வியாசன், அநுமான், விபீஷணன், கிருபன் என இவர்.) இவரிடம் வீடுமன் வில்வித்தை கற்றுத் தேர்ந்ததை "பூந்துழாய் மாலைப் போர்மழுப் படையோன் பொன்னடி பொலிவுற வணங்கி, யேந்துவேள் சிலையும் பலகணை மறையு

மேனிய படைகளும் பயின்றுன்" எனக் கீழ்க் குருகுலச்சருக்கத் திலுங்காண்க. வீடுமனுல் மணம் மறுக்கப்பட்ட அம்பை முடிவில் அவனது குருவான பரசுராமனைச் சரணமடைய, அப்பிரான் தன்ன ருளால் விரைந்து வந்து வீடுமனை அவளை மணஞ்செய்யும்படி வற் புறுத்த, விரதவுறுதியையுடைய வீடுமன் அதனை மறுக்கவே, அது காரணமாக அவன் கோபங்கொண்டு அறைகூவிப் பெரும்போர் செய்ய, அப்போரில் வீடுமன் பரசுராமனை வென்றிட்டன னென்பது வரலாறு; இதனையுங் கீழ்க் குருகுலச் சருக்கத்திற் காணலாம். பரசு ராமனிடம் ஆவேசித்திருந்த திருமாலின் சக்தி அத்திருமாலின் அமிசாவதாரமான ரகுராமனுற் கவர்ந்துகொள்ளப்பட்டு நீங்கினதாத லின் அவன் வீடுமனிடந் தோல்வியலடைந்தன னென உண்மை யுணர்க.

திருவடிக்குத் தாமரை யுவமை - செம்மை மேன்மை அழகுகளுக் கென்க. பாதத்தைப் பங்கயமென்றதற் கேற்ப, 'சென்னியேந்தி' என்றுர். பின்னே 'சென்னியேந்தி' என உருவகத்துக்கு ஏற்றவினை வந்ததனுல், இங்கே 'பாதபங்கயம்' என்பதை, பங்கயம்போன்ற பாத மென, முன் பின்னுகத் தொக்க உவமைத் தொகையாகக் கொள்ள வேண்டுவ தில்லை. பாதபங்கயஞ் சென்னியேந்தி யென்றது, அவ னுடைய திருவடிகளிலே தனது முடிபடும்படி சாஷ்டாங்கமாக விழுந்து தண்டனிட்டு என்றபடி. ஒலிவேதமாவது - வில் முதலிய ஆயுதங்களிற் பயிலும் வகைகளையும், சத்துருவை வெல்லுதற்குரிய மந்திரம் முதலிய பிரயோகங்களையும், அறிவிக்கிற ஆயுதசாஸ்திரம். 'அவன் தனையும்' என்ற உம்மை - உயர்வுசிறப்பு; அது மனிதர் தேவர் முதலாக யாவரையும் திக்கு விஜயஞ்செய்து வென்ற இரா வணனை எளிதிற் சிறையிலிட்ட கார்த்தவீரியார்ச்சுனன் முதலாக நிலவுலகத்து அரசர் பலரையும் வேரறுத்த வெற்றியை விளக்கும். குரு - சந்திர வமிசத்திற் பிரசித்திபெற்ற ஓரரசன்; இவனுல் இக் குலம் குருகுல மென்றும், இக்குலத்தவர் கௌரவரென்றும், இந்காடு குருநா டென்றும் பெயர் பெறுதல் காண்க. வேதம் என்பதற்கு - அறிவிப்பதென்று அவயவப்பொருள்; வித் என்னும் வினைப்பகுதி யினின்று பிறந்தது. 'அரசர்வென்சேனை' என்ற பாடத்துக்கு, துரி யோதன னெனத் தோன்ரு எழுவாய் வருவிக்க. (348)

படையெழுச்சிச் சருக்கம் முற்றிற்று.

ஆருவது

முகூர்த்தங் கேள்விச் சருக்கம்.

[துரியோதனன் தனக்கு வெற்றியுண்டாகுமாறு போர்க்களத்துக்கு உரியதெய்வத்துக்குப் பலிசெலுத்துவதற்கு] நல்லதொரு வேளையைக் குறித்துத் தரும்படி (பாண்டவருள் இளையவனான சகதேவனைக்) கேட்ட செய்தியைக் கூறும் பாகம். முகூர்த்தம் - பொழுதென்று பொருள்; இரண்டு நாழிகை [நாற்பத்தெட்டு நிமிஷங்] கொண்ட காலத்துக்கு முகூர்த்தமென்று பெயர். கேள்வி - கேட்டல்; தொழிற்பெயர்; வி. விகுதி.

1 —கடவுள் வணக்கம்.

கயம்படுமனத்தனுயகண்ணிலாவரசன்மைந்தன்
வயம்படநினைந்துகங்குல்வகுத்ததோர்சூழ்ச்சிதன்னுற்
பயம்படுமல்லரோடுபாதலமடியநீண்ட
சயம்படுகமலத்தாளென்றலைமிசையகல்கிலாவே.

(இ - ள்.) கயம்படு மனத்தன் ஆய - கீழ்மை பொருந்தின மனத்தையுடையவனான, கண் இலா அரசன் மைந்தன் - பிறவிக்குருடனான திருதராட்டிர மகாராசனது குமாரனான துரியோதனன், வயம்பட நினைந்து - (தனக்கு) வெற்றியுண்டாகுமாறு ஆலோசித்து, கங்குல் வகுத்தது - இராத்திரி காலத்திலே அமைத்து வைத்ததான, ஓர் சூழ்ச்சிதன்னுல் - ஒரு தந்திரத்தினால், பயம்பு அடு மல்லரோடு பாதலம் மடிய நீண்ட - பெருங்குழியிலே பொருந்தின மல்லர்களுடனே பாதாளலோகத்தவரும் அழியும்படி நெடிதாக வளர்ந்த, சயம் படு கமலம் தாள் - வெற்றி பொருந்திய செந்தாமரை மலர் போன்ற (ஸ்ரீ கண்ணபிரானது) திருவடிகள், என் தலைமிசை அகல்கிலா - எனது சிரத்தின்மேல் (எப்போதும்) நீங்கமாட்டா; (எ - று.)
—ஏ - தேற்றம்; ஈற்றசையுமாம்.

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான், தாளை வணங்காத் தலை" என்றபடி, எம்பெருமான் திருவடிகளை வணங்குபவரே தலைபடைத்த பயன் பெறுபவராதலால், இவ்வாறு கூறினர். தா ளென் தலைமிசை யகல்கிலா - எப்பொழுதும் திருவடிகள் அடியேனது முடியின்மீதுபடும்படி சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிப்பேன் என்றதாம். விசித்திரவீரியன் மனைவியருள் ஒருத்தியான அம்பிகை கணவனை யிழந்தபின் சந்ததி விருத்தியின் பொருட்டு மாமியார் கட்டளைப்படி மைத்துனனான வியாசமா முனிவனோடு சேருகையில் கூச்சத்தாற் கண் விழியாதிருந்ததனால், அவளிடம் திருதராட்டிரன் பிறவிக் குருடனாகப் பிறந்தான். 'கயம்படுமனத்தனுய' என்ற அடைமொழி - கண்ணிலா வரசனுக்கும், அவன் மைந்தனுக்கும் இயையும். 'கண்ணிலாவரசன் மைந்தன்' என்ற சொற்போக்கு-தந்தை ஞானக்கண் குருடன், மைந்தன் ஞானக்கண் குருடன் என்ற

இழிவைத் தொனிப்பிக்கும். 'கயமையாவது - நற்குணங்கள் யாவு மிலராய கீழோரது தன்மை,' என்றார், பரிமேலழகர். இனி, கய படு எனப் பிரித்து, பெருமை யொழிந்த என்றுவது, மென்மை நீங்கின என்றுவது பொருள் கொள்ளினும் அமையும்; "தடவுங் கயவு நளியும் பெருமை", "கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்" என்பன-தொல் காப்பியம். பயம்படு - பயம் + படு; பயனற்ற என்றும், அச்சமொழிந்த என்றும், அச்சமுற்ற என்றும், அச்சந்தருகிற என்றும் உரைப்பி னும் அமையும். வயம் பட - (கண்ணன்) தன் வசப்பட வென்றலு மாம். மல்லர் - ஆயுதமில்லாமலே கைகால் முதலிய உறுப்புக்களைக் கொண்டு போர்புரியும் மல்லுத் தொழிலில் வல்லவர். (349)

2.—இதுவும் அடுத்தகவியும் - வீடுமன் துரியோதனனை நோக்கிக் களப்பலிக்கு நிர்ணயம் செய்தல்.

அளப்பிலாச்சேனை நாதனடிபணிந்தவனிவேந்தன்
களப்பலிக்குரியார்யாவர்கடவநாள்யாவதென்னத்
தளப்பிலாமுகூர்த்தம்வல்லோன்சாதேவனல்லதில்லை
யுளப்பொலிவுடையாயின்றேயுற்றவற்கேண்மினென்றான்.

(இ - ள்.) அவனி வேந்தன் - பூமியையாளும் அரசனான துரி யோதனன், (பின்பு), அளப்பு இலா சேனை நாதன் அடி பணிந்து - அளவிடுதல் கூடாத (தனது) சேனைகளுக்கெல்லாந் தலைவனான வீடுமனது பாதங்களை வணங்கி, 'களப்பலிக்கு உரியார் யாவர்-போர்க் களத்தில் (போர்தொடங்குதற்குமுன் நம்மால்) பலிகொடுக்கப் படுதற்குத் தகுந்தவர் எவர்? கடவ நாள் யாவது-அதற்கு ஏற்றநாள் எது?' என்ன-என்றுகேட்க,—(அவ்வீடுமன்), 'தளப்பு இலா முகூர்த் தம் வல்லோன் - (பயன்) தவறுதல் இல்லாத நல்முகூர்த்தத்தை அமைக்கவல்லவன், சாதேவன் அல்லது இல்லை - சகாதேவனேயன்றி வேறெருவரு மில்லை,' (ஆதலால், உளம் பொலிவு உடையாய் - மன வெழுச்சியையுடையவனே! இன்றே உற்று - இப்பொழுதே (அவ னிடம்) போய், அவன் கேண்மின் - அவனை (நீங்கள்) கேளுங்கள்', என்றான்-என்று கூறினான்; (எ - று.)

சிறந்ததொரு முகூர்த்தத்திற் சிறந்த ஒருவீரனைப் போர்க் களத்திற்குரிய தேவதைக்கு முன்னர்ப் பலிகொடுப்பவர், தவருமல் வெற்றி பெறுவர் என்றல் மரபு. 'நாள் செய்வது நல்லோருஞ் செய் யார்' என்றபடி சிறந்த நேரத்தில் தொடங்கின காரியம் தவறாது பயன்தருதலால், 'தளப்பிலா முகூர்த்தம் என்றது. தளம்பல் - நிலைகலங்குதல். உளப்பொலிவு உடையாய் - மனவெழுச்சி கெடா தவனே! என்றுமாம். அவன் தங்கள் பக்கத்துக்காக நல்ல நாள் அமைத்தற்குமுன்னமே சென்று கேட்டல் வேண்டுமென்பார், 'இன்றே' என்றான்; ஏகாரம் - தேற்றவகையால் விரைவு குறிக்கும். அவற் கேண்மின் - உயர்திணையில் ஐயுருபு தொக்கது; இரண்டாம் வேற்றுமைச் சிறப்புவிதியால் உயர்திணைப்பெயரீறு திரிந்தது. 'கேண்மின்'என ஏவற்பன்மையாற் கூறினது. துச்சாதனன் கர்ணன்

சகுனி முதலிய இனத்தவரை உளப்படுத்தி யென்க; இதற்கு நீயாவது உன் இனத்தவராவது சென்று கேட்க வென்று கருத்து; இது - ஒருமைப் பன்மை மயக்கத்தின்பாற் படும். (350)

3. ஒன்றநம்படைகளெல்லாமொருபகற்பொழுதிற்கொல்வான்
நின்றனனிராவானென்பானீயவன்றன்னீவேண்டிற்
கொன்றெனீப்பலிகொடென்றுகூறுமக்குமரற்கொன்ருல்
வென்றுனக்கரசும்வாழ்வுமெய்தலாம்விரைவினென்ருன்.

(இ - ள்.) '(எதிர்ப்பக்கத்தில்), இராவான் என்பான் - இராவானென்பவன், நம் படைகள் எல்லாம் ஒன்ற ஒரு பகல் பொழுதில் கொல்வான் - நமது சேனைகளெல்லாவற்றையும் ஒருசேர ஒருதினத்துப் பகற்பொழுதினுள்ளே கொல்ல, நின்றனன - (உறுதிகூறி) நின்றுள்ளான்; அவன் தன்னை நீ வேண்டின் - அந்தச்சுத்த வீரனை நீ (போய்ப்) பிரார்த்தித்தால், 'எனை கொன்று பலிகொடு' என்று கூறும் - (அவன் சம்மதித்து) என்னைக் கொன்று பலிகொடுப்பாய் என்று (உன்னை நோக்கிச்) சொல்வான்; அக்குமரன் கொன்ருல் - அந்த இளவீரனைக் கொன்று பலிகொடுத்துவிட்டால், விரைவின் வென்று அரசும் வாழ்வும் எய்தல் உனக்கு ஆம் - துரிதத்தில் (பாண்டவரைச்) சயித்து அரசாட்சியையும் நல்வாழ்க்கையையும் அடைதல் உனக்குக் கைகூடும்,' என்ருன்-என்றும் [துரியோதனனை நோக்கிக்] கூறினன் (வீடுமன்); (எ - று.)

"அரவமின்மகன் தெவ்வர், கொற்ற வெம்படை யானைத்துமோரம்பினுற் கொல்வனோர் தினத் தென்ருன்" எனக் கீழ்ச்சருக்கத்து வந்தமையுங் காண்க. என்பானெனச் செயப்படுபொருள் வினை முதல்போலக் கூறப்பட்டது: "இல்வாழ்வா னென்பான்" என்ற திருக்குறளிற் போல: இது செய்வினை செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த வழுவமைதி யென்றும், இதில் அகரச்சாரியையும் படுவிகுதியுந் தொக்குநின்றனவென்றுங் கூறுவர். "ஊரெனப் படுவது உறையூர்" என்ற விடத்துப்போல, இங்கே என்பா னென்பது - என்று சிறப்பித்துக் கூறப்படுவானென உயர்வு தோன்ற நிற்கு மென்க. 'குமரற்கொன்ருல்' என்பதை, கீழ்க்கவியில் 'அவற் கேண்மின்' என்றதுபோலக் கொள்க. (351)

4.—சகதேவன் களப்பலிக்கு முகூர்த்தம் நிச்சயித்தல்.

என்றலுமவனுமாங்கோரியந்திரவெகினமூர்ந்து
சென்றனனவனுங்கேட்டுச்சிகியில்வெங்கதிரைத்திங்கள்
ஒன்றியபகலிராவிற்களப்பலியூட்டினல்லால்
வென்றிடலரிதென்றிட்டான்கிளைஞரைவேறிடாதான்.

(இ - ள்.) என்றலும் - என்று (வீடுமன்) சொன்னவுடனே, அவனும் - அத்துரியோதனனும், ஓர் இயந்திரம் எகினம் ஊர்ந்து -

ஒரு ஹம்ஸபந்திரத்தின்மேல் ஏறி, ஆங்கு சென்றனன் - அச்சக தேவனிடம் போனான்; கிளைஞரை வேறு இடாதான்-(தனது) சுற்றத் தாரைப் பேதமாகக் கொள்ளாதவனாகிய, அவனும் - அச்சகதேவ னும், கேட்டு - (துரியோதனன் வந்த காரியத்தை) விசாரித்து, (உடனே), 'சிலையில் - தநுர் [மார்கழி] மாசத்தில், வெம் கதிரை திங்கள் ஒன்றிய பகல் - சூரியனைச் சந்திரன் கூடிய நாளில் [அமாவா சையில்], இராவில் - இராத்திரியில், களம் பலி ஊட்டின் அல்லால் - போர்க்களத்துக்குரிய பலியைக் கொடுத்தாலல்லாமல், வென்றிடல் அரிது - (பகையைச்) சயித்திடுதல் அரியதாம்,' என்றிட்டான் - என்று உண்மை கூறினன்; (எ - று.)

தனது தாயாதிகளான துரியோதனாதியரை அபேதமாக நினைக்கும் தூயநெஞ்சுடையவனாதலால் இங்ஙனம் உள்ளபடி கூறினனென்பார், 'என்றிட்டான் கிளைஞரை வேறிடாதான்' என்றார். இயந் திரவெகினம் - அன்னப்பறவையின் வடிவமைத்துச் செய்யப்பட்ட யந்திர வாகனம். சிலை-வில்வடிவமானதோர் இராசி; அதிற் சூரியன் பிரவேசிக்கும் மாதம் அதனாற் பெயர்பெறும். வெங் கதிர்-உஷ்ண மான கிரணங்களை யுடையது; பண்புத்தொகையன்மொழி யென்ரு வது அடையடுத்த சினையாகுபெய ரென்ருவது இதற்கு இலக்கணங் கூறுக. சந்திரன் தனது பதினாறுகலைகளுள் இரண்டு கலைமாத் திரம் மிகுந்தவனாய்ச் சூரியகிரணங்களில் மறைகிற தினமே அமா வாசையாதலால், 'வெங்கதிரைத் திங்க ளொன்றிய பகல்' என்றார். பலி யூட்டுதல் - ஒருவனைக்கொய்து பலியாகத் தேவதைக்கு நைவேத் தியஞ் செய்தல்; பலி - தேவர்க்கு இடும் உணவு. கீழே "இன்றே யுற்றவற் கேண்மின்" என்று வீடுமன் கூறியதற்கு ஏற்ப, விரைந்து செல்லவேண்டி, இயந்திரவெகினமூர்ந்து சென்றனனென்க. 'இந்திர விமானமூர்ந்து' என்றும் பாடம்; துரியோதனன் அன்றிரவிலேயே கள்ளிருளில் எவருமறியாமல் உபப்பிலாவியம் புக்குச் சகதேவனைக் கண்டு நன்முகூர்த்தங் கேட்டு மீளவேண்டித் தேவசிற்பியான விசுவ கருமாவைத் தியானித்து வரவழைத்துப் பிரார்த்தித்து ஆகாசத் திலேயோடவல்லதொரு மாயத்தேரைப் பெற்றுச் சென்றனன் என்று பெருந்தேவனார் பாரதத்து உரைசெய்தனர். (352)

5.—இராவான் தன்னைப் பலியிட உடன்படுதல்.

ஐவரிலிளையோன்றன்பான்முகூர்த்தங்கேட்டவர்சேயான
பைவருமுடியோன்றன்பாற்சேறலும்பணிந்துதாதை
உய்வருவரங்கேட்டென்னையூட்டுகபலிநீயென்றான்
எய்வருசிலையினனும்பெற்றனனென்றுமீண்டான்.

(இ - ள்.) (இவ்வாறு துரியோதனன்), ஐவரில் இளையோன் தன்பால் முகூர்த்தம் கேட்டு - பஞ்சபாண்டவர்களுள் இளையவனான சகதேவனிடம் (களப்பலியூட்டுதற்கேற்ற) நல்முகூர்த்தத்தை விசா ரித்தறிந்துகொண்டு, அவர் சேய் ஆன பை வரு முடியோன் தன்

பால் சேறலும் - அப்பாண்டவர்களுள் ஒருவனது [அருச்சுனனது] குமாரனை படம்பொருந்தின தலையையுடைய இராவான்னிடத்திற் போனவளவிலே, (அவன்), பணிந்து - வணங்கி, தாதை - (தனக்குத்) தந்தைமுறையான துரியோதனன் (கூறின), உய்வரு வரம்-(அவன்) பிழைத்தற்குக் காரணமான வரத்தை, கேட்டு - (இன்னதெனக்) கேட்டறிந்து, (மறுக்காமல் அவ்வேண்டுகோளுக்கு உடன்பட்டு), 'என்னை நீ பலி ஊட்டுக' என்றான் - என்னை நீ (கொன்று) பலி கொடுத்திடுவாயாக என்று கூறினான்; (கூறினவுடனே), எய்வரு சிலையினனும் - (அம்புகளை) எய்து வருகிற வில்லையுடைய துரியோதனனும், பெற்றனன் என்று மீண்டான் - (இனி யான் எல்லா வாழ்க்கையையும்) பெற்றவனேனென்று (மகிழ்ச்சியோடு தன் ஊர்க்குத்) திரும்பிவந்தான்; (எ - று.)

பெரியவன் வார்த்தையை மறுத்தற்கு அஞ்சி அரிய இதற்கு உடன்பட்டனன் என்பார் 'தாதை யுய்வருவரங் கேட்டு' என்றார். தாதை உய்வு அருவரம் - தன் தந்தையான அருச்சுனன் பிழைத்தல் கூடாத வரம் எனினும் ஒக்கும். வரம் - வேண்டுவன கொள்ளுதல். துரியோதனன் அறைறை நாளிரவிலேயே இராவானிடஞ் சென்று "இவ்வளவும் யார்பாலுஞ் சென்றிரன் நிரந்தறியே, னெவ்வளவும் வந்தறியே னென்மகனே—செவ்வி,வருந்தருவாயாகென்று" வாழ்த்தி வேண்ட, அதுகேட்ட இராவான் 'நீ வேண்டும் வரம் வேண்டுக, தவறாது தருவேன்' என்ன, இவன் 'உன்னைப் பலி கொடுக்க வேண்டும்' என்ன, அங்ஙனமே அவன் அவ்வேண்டுகோளை மறுத்து 'எங்களில் உங்களைப்போல மறுத்து இரண்டு உரைப்பார் இல்லை கண்டாய்' என்று கூறி உடன்பட்டனன் என்பர் பாரதவெண்பாவில். செம்மையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆகி நீண்டு முன் நின்ற மகரமெய் யகரமாகத்திரிந்து, 'சேய்' என நிற்கும்; இது - முதலில் செம்மை நிறத்தையுடைய முருகக்கடவுளுக்குப் பண்பாகு பெயராய், பின்பு (குமாரனென்னும் வடமொழிபோல) அச் சுப்பிர மணிய மூர்த்திபோலப் பல பராக்கிரமங்களிற் சிறந்த இளவீரனுக்கு உவமையாகுபெயராக வழங்குதலால், இருமடியாகுபெயர்; இனி, 'செய்யவன்' என்பது சேய் என விகாரப்பட்டது' என்பாரு முளர். நாககன்னிகை குமாரனைதலால், 'பைவருமுடியோன்' எனப்பட்டான்; இனி 'பை' என்பதைப் பசுமை யென்னும் பண்புப்பெயர்த்திரி பெனக்கொண்டு, (சிறந்த பொன்மயமான தலை) பசுமையாய் வருகிற நிறத்தையுடையவனென்று உரைத்தலுமொன்று. (353)

முகூர்த்தங்கேள் விச்சருக்கம் முற்றிற்று.

ஏழாவது

களப்பலியூட்டு சருக்கம்.

பாண்டவர் தாம் வெற்றிபெறுதற்பொருட்டுப் போர்க்களத்துக் குரிய தேவதைக்குப் பலிகொடுக்கும் பாகம். 'களப்பலியூட்டுச் சருக்கம்' என்ற பாடத்துக்கு - களப்பலி ஊட்டுதலைக் கூறும் பாக மென்க.

1.—கடவுள் வணக்கம்.

குன்றெடுத்தாயர்மாதர்குரவைகொண்டொருவிளாவிற்
கன்றெடுத்தெறிந்துவெய்யகாளியற்கிருதாணல்கி
யன்றெடுத்திறுத்தவில்லேயணியவில்விழவுகாண்பான்
சென்றெடுத்திறுத்துநின்றசெங்கண்மாலெங்கள்கோவே.

(இ - ள்.) குன்று எடுத்து - (கோவர்த்தன) கிரியை (க் குடை யாக) எடுத்துப் பிடித்து, ஆயர் மாதர் குரவை கொண்டு - இடைப் பெண்களோடு குரவைக் கூத்தாடி, ஒருவிளாவில் கன்று எடுத்து எறிந்து - ஒருவிளாமரத்தின்மேற் கன்றை யெடுத்து வீசி, வெய்ய காளியற்கு இரு தாள் நல்கி - கொடிய காளியனென்னும் நாகத்துக்கு (த் தனது) இரண்டு திருவடிகளையுங் கொடுத்து, அன்று எடுத்து இறுத்த வில்லே அணிய வில் விழவு காண்பான் சென்று - அக்கா லத்தில் [முன்னொரு காலத்தில், ஸ்ரீராமாவதாரத்தில் என்றபடி] எடுத்து ஒடித்த சிவதனுசையே போன்ற [சிறந்த] வில்லின் திரு விழாவைப் பார்க்கும்பொருட்டுப் போய், எடுத்து இறுத்து நின்ற - (அங்கிருந்தவில்லை)எடுத்து ஒடித்து நின்ற, செம் கண் மால் - சிவந்த திருக்கண்களையுடைய திருமாலின் திருவவதாரமூர்த்தியான கண்ண பிரான், எங்கள் கோ - எங்கள் தலைவனுவன்; (எ - று.)—வ - தேற்றம்.

திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லோருங் கூடி மழையின் பொருட்டாக இந்திரனை ஆராதித்தற்கென்று சமைத்த சோற்றைக் கண்ணபிரான் அவனுக்கு இடாதபடி விலக்கிக் கோவர்த்தன மலைக்கு இடச் சொல்லித் தானே ஒரு தேவதாரூபங்கொண்டு அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களையேவிக் கண்ணன் விரும்பி மேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடை யருக்கும் இடைச்சியருக்கும் தீங்கு தரும்படி கல் மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது, கண்ணன் கோவர்த்தன மென்னும் மலையையெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையும் இடையூறு சிறிதுமின்றிக் காத் தருளின னென்பதும்;—கண்ணன் கோப ஸ்திரீகளோடனே ராஸக் கிரீடை செய்கையில், தான் விரைவாய்ப்பாயும் லாகவ சமத்காரத்தி னாலே, தன்னை விட்டு நீங்க மனமில்லாமல் தன் கையையே தனித் தனி பிடித்திருக்கக் கருதிய அவ்வாயர்மகளிர் யாவர்க்கும்

பக்கத்திலிருந்தவன் போலக் காணப்பட்டது மாத்திரமேயன்றி, ஏககாலத்தில் பலவடிவங்கொண்டு அவர்களிடையிடையே நின்று ஒவ்வொருத்தியது இவ்விருகைகளிலும் தன்கைகளிரண்டும் பொருந்த ஆடியருளின னென்பதும்;—கம்ஸனாலேவப்பட்ட கபித்தாசுரன் விளாமரத்தின் வடிவமாய், கண்ணன் தன்கீழ் வரும் போது மேல்விழுந்து கொல்வதாக எண்ணி வந்து நிற்க, அதனை யறிந்து கிருஷ்ணபகவான், அவ்வாறே தன்னை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு வந்து தான் மேய்க்கும் கன்றுகளோடு கலந்திருந்த வத்ஸாசுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மே லெறிய, இருவரும் இறந்து தமது அசுர வடிவத்துடனே விழுந்திட்டன னென்பதும்;—யமுனாநதியில் ஓர் மடுவிலிருந்து கொண்டு அந்நதிமுழுவதையும் தன் விஷாக்கினியினாற் கொதிப்படைத்த நீருள்ளதாய்ப் பானயோக்கிய மாகாதபடி செய்துவந்த காளியனென்னும் துஷ்டநாகத்தைக் கிருஷ்ணபகவான் தண்டிக்க வேண்டுமென்று திருவுள்ளம் பற்றி, அம்மடுவிற்குச் சமீபத்திலுள்ளதொரு கடம்ப மரத்தின் மேலேறி அம்மடுவிற் குதித்துக் கொடிய அந்நாகத்தின் படங்களின் மேல்ஏறி இரு காலாலும் துவைத்து நர்த்தனஞ்செய்து நசுக்கி வலியடக்கி,பின்பு,மங்கலிய பிக்ஷையிடவேண்டுமென்று தன்னை வணங்கிப் பிரார்த்தித்த நாககன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி உயிரோடு கடலிற் சென்று வாழுமாறு அந்தக் காளியனை விட்டருளின னென்பதும்;—ஸ்ரீராமலக்ஷ்மணர் விசுவாமித்திர மகாமுனிவனது வேள்வியை முடித்த பின்னர் அம்முனிவனுடனே மிதிலா பட்டணத்துக்குச் சென்று அங்குச் சனகமகாராசனாற் கன்யாசுல்கமாக வைக்கப்பட்டிருந்ததும், அறுபதினாயிரம் வீரர் அரிதின் எடுத்து வரற்பாலதுமாகிய சிவதனுசை ஸ்ரீராமமூர்த்தி எடுத்து வளைத்து நாணேற்ற முயலுகையில், அது முறிபட, பின் சீதாபிராட்டியைத் திருமணம் புரிந்தன னென்பதும்;—கம்ஸன் கிருஷ்ண பலராமர்களைக் கொல்ல நிச்சயித்துத் தநுர்யாக மகோத்ஸவ மென்று ஒரு வியாஜம்வைத்து அவர்களை வரவழைக்க, அங்ஙனமே கண்ணபிரான் நம்பி மூத்தபிரானுடனே கோகுலத்தினின்று மதுரைக்கு வந்து வில்லின் சாலையிலெழுந்தருளி, அங்குக் காவலாளராற் காட்டப்பட்ட வில்லை யெடுத்து வளைத்து நாணேற்றுகையில், அவ்வில் ஒடிந்ததென்பதும்;— இதிற குறித்த கதைகள்.

ஆயர்-பசுக்களையுடையவ ரென இடையர்க்குக் காரணப்பெயர். 'மாதர் காதல்'என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி விருப்பத்தையுணர்த்தும் மாதர் என்னும் உரிச்சொல் - விரும்பப்படுகிற அழகுள்ள பெண்களுக்கு ஆகுபெயர். குரவையாவது - கைகோத்தாடும் கூத்து: "குரவைக் கூத்தே கைகோத்தாடல்" என்பது இவ்வகரம்; பலபேர் வட்டமாய் நின்று சித்திரமான தாள லயைகளுடன் மெதுவாகவும் உன்னதமாகவுங் கூத்தாடுதல் இதன் இலக்கணமாம். 'குரவை யென்பது காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்து ஆடுவது; "குரவை யென்பது கூறுங்காலைச், செய்தோர்

செய்த காமமும் விறலும், எய்தக் கூறுமியல்பிற் றென்ப" எனவும், "குரவை யென்ப தெழுவர் மங்கையர், செங்கீலை மண்டலக் கடகக் கைகோத்து, அங்கீலை கொட்பின் ருடலாகும்" எனவுஞ் சொன்ன ராதலின்' என்பது, சிலப்பதிகாரத்து அடியார்க்கு நல்லாருரை. கன்று - பசுவின் இளமைப் பெயர்; "யானையுங் குதிரையுங் கழுதை யுங் கடமையு மானைடைந்துங் கன்றெனற்குரிய" என்பது, தொல் காப்பியத்து மரபியல். அடியார்களீ அருளுடன் நோக்கி நோக்கிக் கண்கள் சிவந்திட்டனபோலு மென்பார், 'செங்கண்மால்' என்ருர். மால் - பெருமை; அல்லது மாயை; அல்லது, அடியவர்களிடத்து மிகுந்த விருப்பம்; அதனையுடையவனுக்குப் பண்பாகுபெயர். தானெ ருவன் கடவுளீயறிந்து அன்புகூர்ந்து வணங்கி அப்பயனைத் தான் மாத்திரமே யடைதலினும் சிருஷ்டி தொடங்கித் தன் கோத்திரத்தா ரையுந் தன்னெடு கூட்டி வணங்கி அவர்க்கும் அப்பயனை அடைவித் தலே சிறந்ததெனக் கருதி, அவர்களீ உளப்படுத்திய தன்மைப்பன் மையால் 'எங்கள்கோ' என்ருர். ஈற்றேகாரத்தைப் பிரிநிலையாக்கி மால் என்பதனோடு கூட்டின், "மறந்தும் புறந்தொழாமாந்தர்" என்ற படி தேவதாந்தரங்களீத் தமக்குநாயகனாகக் கொள்ளாதவர் இவ் வாசிரியரென விளங்கும். (354)

2.—கண்ணன் சதுர்த்தசியை அமாவாசையாக மாற்றுதல்.

கொடுத்தனன்பலிக்குத்தன்னைக்குமரனென்றறிந்துகுன்ற
மெடுத்தவன்றிதிபன்னுன்கினிடையுவாவின்ருகென்று
தொடுத்தநூன்முனிவரோடுஞ்சொல்லினன்சுடர்கடம்மி
லடுத்ததிங்கென்னையென்னவன்றதுவாயதன்றே.

(இ-ள்.) 'குமரன்-(அருச்சுனனது) குமாரனை இராவான், தன்னை பலிக்கு கொடுத்தனன் - தன்னைப் பலியிடும்படி (துரியோதனனுக் குக்)கொடுத்திட்டான்,' என்று—, குன்றம் எடுத்தவன் - கண்ணன், அறிந்து—,—திதி பன்னுன்கின் இடை - (அமாவாசைக்கு முந்தின தினமான) சதுர்த்தசி திதியினன்றைக்கே, இன்று உவா ஆக என்று-இன்றையதினம் அமாவாசையாகக்கடவதென்று, தொடுத்த நூல் முனிவரோடும் சொல்லினன் - (ஒன்றோடொன்று சொற்கள்) தொடரப்பெற்ற சாஸ்திரங்களீ வல்ல முனிவர்களுடனே கூறியருளி னன்; (சொன்னவளவிலே), சுடர்கள் தம்மில் இங்கு அடுத்தது என்னை என்ன-சூரிய சந்திரர் தங்களுக்குள் இப்பொழுது நேர்ந்தது என்ன வென்று ஆராய்ச்சிசெய்ய, அன்று அது ஆயது - அப் பொழுது அமாவாசையாயிற்று; (எ-று.)—அன்றே - ஈற்றசை.

துரியோதனனுக்குச் சகதேவன் காள்வைத்துக் கொடுத்ததை யும் அவனுக்கு இராவான் களப்பலிக்கு உடன்பட்டதையும் கண்ண பிரான் அறிந்து, அந்தநாளீ மாற்றவும், இராவானைத் தமக்காக்கிக் கொள்ளவுங் கருதி, முந்தினநாளாகிய சதுர்த்தசி யன்றைக்கே அமா வாசையை வரும்படி தமது திவ்யசக்தியால் செய்து, முனிவர்கள் முதலிய பலரை நோக்கி இன்றைக்கே அமாவாசையென்று கூற, யாவருங் கண்ணன் கட்டளீப்படியே அதனைக் கொண்டாடினர்;

அப்பொழுது சூரியசந்திரர் பார்த்து, 'இதென்ன காரணம்?' என்று தமக்குள் ஆலோசித்துக் கண்ணபிராகீன ஒருங்கே வந்தடைந்து 'இன்றைக்கு எப்படி அமாவாசை?' என்று வினவ, அவ் வெம்பெரு மான் 'அமாவாசை யென்பது, நீங்களிரண்டுபேருங் கூடுந் தின மன்றே? நீவிர் இருவரும் இப்பொழுது கூடிவந்த இத்தினத்தை அமாவாசையென்று சொல்லத் தடையென்ன?' என்று விடைகூற, அவர்கள் உவந்துசென்றன ரென்க.

பன்னென்கு - பதினென்கு என்பதன் மரூஉ. உவா - பதினைந்தாந் திதி. இங்கு இடத்திற்கு ஏற்ப அமாவாசை யாயிற்று. பஞ்சைக் கொண்டு நூல் நூற்கப்படுதல்போல சொற்களைக்கொண்டு அமைக் கப்படுதலாலும், மரம் முதலியவற்றின் கோணலைப் போக்கும் ஏற்று நூல்போல மனிதர்களது மனத்தின் கோணலைப் போக்குதலாலும், நூல் என்றது உவமவாகுபெயராம்; "பஞ்சிதன் சொல்லாப் பனுவ விழையாகச், செஞ்சொற்புலவனே செயிழையா—எஞ்சாத கையேவா யாகக் கதிரே மதியாக, மையிலா நூன் முடியுமாறு", "உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய நீமைப், புரத்தின் வளமுருக்கிப் பொல்லா— மரத்தின், கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர், மனக் கோட்டந்தீர்க்குநூன் மாண்பு" என்றார், நன்னூலார்; 'இனி நூலென்றசொற்குப் பொருளுரைக்கப்படும்; — நூல்போறலின் நூலென்ப; பாவைபோல்வாரைப் பாவையென்றதுபோல. நூல்போற லென்பது-நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவல்மகடூஉத் தனது செயற்கைநலந் தோன்ற ஒரிழைப்படுத்தலாம், உலகத்து நூல்நூற்ற லென்பது; அவ்வாறே சுருங்கியுபரந்த சொற்பாவை களாற் பெரும்புலவன் தனது உணர்வுமாட்சியின் பிண்டம் படலம் ஒத்துச் சூத்திரமென்னும் யாப்பு நடைபடக் கோத்தலாயிற்று, நூல்செய்தலாவது: அவ்வகை நூற்கப்படுதலின், நூலெனப்பட்டது. இனி, ஒருசாரார், நூல்போலச் செப்பஞ் செய்தலின் நூலென்ப. இனி, தந்திரமென்னும் வடமொழிப்பொருளை நூலென வழங்குதல் தமிழ்வழக்கெனக் கொள்க. இது, 'நூலென்றசொற்குப் பொருள்' என்ற இறையனாரகப்பொருளுரைநடையையும் இங்கே அறிக. தொடுத்த நூல் முனிவர் என்பதற்கு - தரித்தமுப்புரிநூலியுடைய முனிவரென்றும் பொருள்கொள்ளலாம்; "நூலே கரகம் முக்கோல் மகிணையே, ஆயுங்காலை யந்தணர்க்குரிய" என்றார், ஆசிரியர் தொல் காப்பியனார். முநி - (கடவுளைத்) தியானஞ்செய்பவனென்றும், (முக்காலத்து) ஞானமுடையவனென்றும் பொருள்; இனி, (எல்லாப் பற்றுக்களையும்) முனிந்தவன் [வெறுத்துவிட்டவன்] ஆதலால், முனியென்று காரணப்பொருள் கூறி இது தென்மொழியென்று சாதிப்பர் ஒரு சாரார். சுடர் - ஒளி; அதனையுடைய சூரியசந்தி ரர்க்கு ஆகுபெயர்.

"நீயிர நின்ற பதினலா நாள்தன்னை, யாதி யமாவாசை யாக்க லாஞ்—சோதிமதி, யாதித்தனேடே யமர்ந்திருக்கும் வேதியராற், சாதித்துக் கொள்வதுகாண் சார்வு" என்று திருவுள்ளம்பற்றி, கண்ணபிரான் பன்னீராயிரம் பிராமணர்க்கு மகாதானங்கற்பித்து

அவர்களோவரவழைத்து 'சதுர்த்தசியை அமாவாசையாக்கித் தர வேண்டும் என்றும், "தேவராவாருந் திசைபால ராவாரு, மூவராய் நிற்கின்ற மூர்த்தியுமாய்—யாவருந்தான் கொந்தலரும் சோலைக் குரு நாட்டுப் பூசுரர்கள், அந்தணரால்லரே வவர்' என 'பிராமணருச் சரித்த மந்திரமன்றே, தெய்வம்; உங்கள்பணி மறுக்குந் தன்மை யுடையார் யாவருமுண்டோ?' என்றும் உரைக்கக் கேட்டு அந்தணர் அந்த ஸ்ரீவாசுதேவன்பணியைமறுது தலைமேற்கொண்டு ஒருங்கு கூடி அநேக மந்திரங்களோ உத்தோஷித்து அமாவாசைக்குரிய சடங்குகளுடனே சூரிய சந்திரரைத்துதிக்குமளவிலே, அந்தச்சந்திராதித்தர்களுந் தம்மிற்கூடி 'இது என் கொலோ?' என்னுமளவில், சதுர்த்தசியும் அமாவாசையாயிற்று அப்பொழுது, எனப் பெரும்தேவனார் பாரதத்துக் கூறியுள்ளதனால், அதற்கு ஏற்பவே இப்பாட்டுக்குப் பொருள் கூறுதலும் பொருத்தமுடைத்தென அறிக. (355)

3.—கண்ணன் முதலில் தன்னைப் பலியிடும்படி தருமனுக்குக் கூறுதல்.

ஆயபின்றருமற்குற்றவாறெலாம்விளம்பியின்று
நீயவன்றனக்குமுன்னேகளங்கொளநேரினல்லாற்
போயவன்றன்னைவேறலரிதெனப்புகன்றுசெங்கண்
மாயவனென்னைவல்லேவன்பலியூட்டுகென்றான்.

(இ - ள்.) ஆய பின் - (இவ்வாறு) ஆனபின்பு [இது மாறின பின்னர் என்றபடி], செம் கண் மாயவன் - சிவந்த திருக்கண்களையும் மாயையுமுடைய கண்ணபிரான், உற்ற ஆறு எலாம்-நடந்த செய்கைகளையெல்லாம், தருமற்கு விளம்பி-யுதிட்டிரனுக்குக் கூறி, 'நீ—, இன்று - இன்றைக்கு, அவன் தனக்கு முன்னே-அத்துரியோதனன் பலியூட்டுதற்கு முன்பே, களம் கொள - களப்பலிகொடுக்க, நேரின் அல்லால் - உடன்பட்டாலல்லாமல், போய் அவன் தன்னை வேறல் அரிது - (போரிற்) சென்று அத்துரியோதனனை வெல்லுதல் (உனக்குக்) கூடாதாம்,' என புகன்று-என்று கூறி, 'என்னை வல்லே வல் பலி ஊட்டுக' என்றான் - என்னை விரைவிலே வலிய பலியாகக் கொடுக்கக் கடவாய்' என்றுங் கூறினன்; (எ - று.)

துரியோதனன் நமக்குமுன்னே பலிகொடுத்துவிட்டால், சயம் அவனதேயாய்விடும்; ஆதலின் 'உத்தமவிலக்கணமுடையவனைப் பலிகொடுக்க வேண்டும்' என்னும் முறைமைப்படி எல்லாவிலக்கணமும் அமைந்துள்ள என்னையே இப்பொழுது துரிதமாகப் பலி கொடுத்திடுங்க ளென்று கபடமாகக் கூறியருளினன். உற்றவாறு எலாம் - சகதேவன் நாள்வைத்ததும், இராவான் துரியோதனனுக்குக் களப்பலிக்கு உடன்பட்டதும் முதலியன. களம் - களப்பலிக்கு ஆகுபெயர். கபடமாகக் கூறினது தோன்ற, மாயவன் என்றார். வல் - விரைவுகுறிக்கும் இடைச்சொல். ஏ - சாரியை; ஐகாரச் சாரியை பெற்று, 'வல்லே' என்றும் வரும். (356)

4 —பாண்டவர் அதுகேட்டு வருந்துதல்.

தருமனுந்தம்பிமாருஞ்சாற்றியமாற்றங்கேட்டே
யுருமெறிபுயங்கள்போலவுள்ளழிந்துள்ளாயிநின்ற
கருமுகில்வண்ணன்பாதகமலத்தில்வீழ்ந்துவாழ்வும்
பொருமுகீனவயமும்வேண்டோம்பொன்றுதலையுமென்றார்.

(இ - ள்.) (அப்பொழுது), தருமனும்—, தம்பிமாரும்-(அவனது) தம்பியாகிய வீமன்முதலிய நால்வரும், சாற்றிய மாற்றம் கேட்டே-(கண்ணன்) கூறிய அவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்திலே, உருமெறி புயங்கம் போல - இடிவிழப்பெற்ற பாம்புபோல, உள் அழிந்து-மனமழிந்து, உள ஆய் நின்ற கருமுகில் வண்ணன் பாத கமலத்தில் வீழ்ந்து - எல்லாப் பொருள்களுள்ளும் வியாபித்து மறைந்து நின்ற காளமேகம்போலும் கரிய நிறத்தையுடைய அக் கண்ணபிரானது திருவடித்தாமரைமலர்களிலேவிழுந்துநமஸ்கரித்து, '(இனி நாங்கள்), வாழ்வும் பொரு முகீன வயமும் வேண்டோம்-செல்வ வாழ்க்கையையும் போர்க்களத்து வெற்றியையும் விரும்பமாட்டோம்; பொன்றுதல் அமையும் - (நாங்கள்) இறத்தலே தகுதி', என்றார் - என்று கூறினர்கள்; (எ - று.)

உன்னீனக்கொன்று பலிகொடுத்தபின் அதனால்வரும் வாழ்வும் வெற்றியும் எங்களுக்கு வேண்டா வென்றார். இங்ஙனங்கூறினது, கண்ணீன அவர்கள் தம் உயிராகப் பாவித்திருந்த மிக்க அன்புடை மையா லென்க. புயங்கம்-புஜங்கமென்பதன் திரிபு; இதற்கு-(கால்க ளில்லாமையால்) மார்பினால் ஊர்ந்து செல்வதென்றும், வக்கிரகதி யாய்ச் செல்வதென்றும் பொருள்; புஜம் - வக்கிரம்: புஜமென்னுந் தோளின் பெயர், மார்புக்கு இலக்கணையாம். இடியோசை கேட்ட மாத்திரத்திற் பாம்புகள் அஞ்சி யொடுங்கியழியும் என்பது, நூற் றுணிபு; "விரிநிற நாகம் விடருளதேனும், உருமின்கடுஞ் சினஞ் சேணின்று முட்கும்" என நாலடியாரிலும் காண்க. உள் - உள்ளி டம்; அகத்துறுப்பான மனத்துக்கு இடவாகுபெயர். சரீரத்திலுள்ள சிவான்மா இன்றியமையாததாய மறைந்துநின்று அதனைக் கொண்டு தொழில்களனீயெல்லாம் நடத்துதல்போல, சர்வாந்தரியாமியாய்ப் பர மாத்மா எல்லாப் பொருள்களினுள்ளும் மறைந்து நின்று தொழில் நடத்துதலால், 'உள்ளாய் நின்ற' என விசேடித்தது; "எளரு மெண்ணெயும்போல், நீங்கா துலகத் துயிர்க்குயிராகி" எனத் திரு வரங்கத்து மாலியிலும், "திடவிசும் பெரிவளி நீர் நிலமிவைமிசைப், படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும், உடன்மிசை யுயி ரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" எனத் திருவாய்மொழியிலும் வரு தல் காண்க. இனி, வண்ணம் என்பதற்கு - குணமென்று பொருள் கொண்டால், தண்மையும் கைம்மாறு கருதாது கருணைமழை பொழி தலுமாகிய இக்குணங்களிற் கருமுகிலையொப்பவன் கண்ணனென்க. பாதகமலம் - முன்பின்னுகத் தொக்குவந்த உவமைத்தொகை; வட நூல் முடிபு; பாதமாகிய கமலமென உருவகமாக்கி யுரைத்தற்கு இங்கே இயைபின்று.

(357)

5.—இராவான் தன்னைக் களப்பலியிடும்படி உடன்படுதல்.

அப்பொழுதரவமைத்தனரவுயர்த்தவற்குநேர்ந்தேன்
இப்பொழுதுமக்குநேர்ந்தேனெனைப்பலியிடுமினென்ன
மைப்புயல்வண்ணனின்னையல்லதுமண்ணிலென்னை
யொப்பவரில்லைநம்மிலொருவரேவேண்டுமென்றான்.

(இ - ள்.) (அப்பொழுது), அரவம் மைந்தன் - நாககன்னிகை குமாரனான இராவான், 'அரவு உயர்த்தவற்கு அப்பொழுது நேர்ந்தேன் - பாம்புக் கொடியை உயர எடுத்துள்ள துரியோதனனுக்கு (அவன் என்னை வேண்டிக்கொண்ட) அச்சமயத்தில் (பலிக்கு) உடன்பட்டேன்; உமக்கு இப்பொழுது நேர்ந்தேன் - உங்களுக்கு இப்பொழுது (பலிக்கு) உடன்படுகிறேன்; (ஆதலால்), என்னை பலி இடுமின் - என்னைப் பலியிடுங்கள்,' என்ன - என்றுகூற,—(அதுகேட்டு), மைபுயல் வண்ணன் - கரிய மேகம்போலும் திருமேனி நிறமுடைய கண்ணன், 'நின்னை அல்லது மண்ணில் என்னை ஒப்பவர் இல்லை - உன்னைத்தவிர உலகத்தில் என்னை யொக்கும் தன்மையார் வேறு எவரும் இல்லை; (ஆதலின்), நம்மில் ஒருவரே வேண்டும் - (ஒத்த உத்தம விலக்கணமுடைய) நம்மிருவருள ஒருவரே பலியாகவேண்டும்,' என்றான் - என்று கூறினன்; (எ - று.)

அமாவாசையில் தான் பலியாவதாக முன்பு துரியோதனனுக்கு வாக்களித்தபடி அமாவாசை வந்தும் பலிகொடுத்தற்குத் துரியோதனன் வரக் காணுமையால், இராவான் இப்பொழுது பாண்டவர்க்குப் பலிக்கு உடன்பட்டான். மைப்புயல் - உம்மைத்தொகையாய், மைப்புயல் வண்ணன் - அஞ்சனமும் மேகமும் போலும் வர்ணமுடையவனென்றுங் கொள்ளலாம். வேண்டும் - ஒருவகை வியங்கோள்: இது, நச்சினார்க்கினியர் கருத்து; இதற்கு - வெவ்வேறு பலவகையாகப் பிற ஆசிரியர் இலக்கணங் கூறுவாராயினும், வியங்கோளென்றலே தகுதியுடையதெனத் தோன்றுகிறது. (358)

6.—இராவான் கண்ணனிடம் தான் சிலநாள் வரையில் உயிரோடிருக்கும்படி வரம் வேண்டுதல்.

அடியனேனிருக்கநீயேயரும்பலிக்கிசைவாய்போரின்
மடியநேரலரைக்கொன்றுவாழ்விவர்க்களிக்கநின்றாய்
கடியநேர்பலிதந்தாலுங்காயமர்சிலநாட்கண்டு
முடியநேரலர்வெம்போரின்முடிவெனக்கருளுகென்றான்.

(இ - ள்.) (அதற்கு இராவான்), 'போரில் - யுத்தத்திலே, மடிய - அழியும்படி, நேரலரை - பகைவர்களை, கொன்று—, இவர்க்கு - இப்பாண்டவர்க்கு, வாழ்வு அளிக்க நின்றாய் - செல்வ வாழ்க்கையைக் கொடுத்தருள நின்றவனே! அடியனேன இருக்க - அடியேன(பலிசெலுத்தத்தக்கவனுக) இருக்கையில், நீயே அரு பலிக்கு இசைவாய் - நீயோ அரிய பலி செலுத்தப்படுதற்கு உடன்படுவாய்? [நீ பலியா

தற்கு இசையவேண்டுவது இல்லை]: (ஆனால்), நேர் பலி கடிய தந்தாலும் - ஏற்ற பலியாக (என்னை) விரைவிற்கொடுத்திட்டாலும், காய் அமர் சில நாள் கண்டு - உக்கிரமான போரைச் சில தினங்களில் (அடியேன்) பார்த்து, சேரலர் முடிய - (பல) பகைவர்கள் அழிய, (அதன்பின்), வெம்போரில் முடிவு எனக்கு அருளுக-கொடியபோரில் இறந்தொழியும் வரத்தை எனக்குத் தந்தருளுவாயாக,' என்றான் - என்று பிரார்த்தித்தான்; (எ - று.)

இராவான் பலவடிவங்கொண்டு போர்செய்து வென்று முடிவில் பகாசுரனது தம்பியான அலம்புச னென்பவனால் இறந்தானென்பர், மேல் எட்டாம் போர்ச்சருக்கத்தில். அடியனேன் - உனக்கு அடியவனாகிய யான்; அடிமையென்னும் பண்பினடியாப் பிறந்த தன்மையொருமைக் குறிப்பு வினையாலணையும் பெயர். நீயே என்ற ஏகாரம்-வினைவகையால், நீ பலிக்கு இசையத்தக்கவனல்ல னென்ற எதிர்மறைப் பொருளைக்குறிக்கும். 'நீயேன்' என்ற பாடமுங் கொள்ளலாம். சேரலர் - தம்மொடு இணங்கார்தவர். காயமர் - (பகைவரைக்) காயும் அமரென விகாரத்தாகை; காய்தல் - சிறியொழித்தல். இரட்டுற மொழிதலால், கண்டு என்பதற்கு - செய்து என்றும் பொருள். (359)

7.—இராவான் போர்க்களத்திற் சென்று காளியினெதிரில் தானே தனது உறுப்புக்களை அறுத்துப் பலியிடுதல்.

அவ்வரமவற்குநல்கியத்தினத்தல்விராவிற்
றெவ்வரையொளித்துத்தங்கள்சென்மதேயத்திற்சென்றார்
மெய்வருகாளிமுன்னர்மெய்யுறுப்பணிந்தும்வீரன்
கொய்வருதிலியிற்கொய்துகொடுத்தனனென்பமன்னே.

(இ - ள்.) (கண்ணபிரான்), அ வரம் - அந்த வரத்தை, அவற்கு - அவ்விராவானுக்கு, நல்கி - கொடுத்தருளியபின்பு, (பாண்டவர்கள்), அ தினத்து - அந்த மாறுபட்ட அமாவாசை நாளில், அ இராவில் - அந்த இராத்திரியிலே, தெவ்வரை ஒளித்து - பகைவர்களான துரியோதனாதியர்களுக்குத் தெரியாதபடி, தங்கள் சென்மதேயத்தில் சென்றார் - தங்களது பிறப்பிடமான குருநாட்டிற் போய்ச் சேர்ந்தார்கள்; (அந்தராளிரவிலேயே), வீரன் - சுத்த வீரனான இராவான், மெய் வரு காளி முன்னர் - (போர்க்களத்துக்கு உரிய தெய்வமான) உண்மை பொருந்தின காளியினெதிரில், மெய் உறுப்பு அனைத்தும் - (தனது) உடம்பின் அவயவங்களையெல்லாம், கொய் வரு திலியின் கொய்து - அறுக்கவேண்டிய முறைமைப்படி (தானே வாளால்) அறுத்து, கொடுத்தனன் - பலிகொடுத்தான்; (எ - று.) என்ப - அசை மன், ஓ - ஈற்றசைகள்.

கொய்வு அரு திலியின் எனப் பிரித்து-(பிறர்க்கு) அறுத்தற்கு அருமையான முறையின் என்றுங் கொள்ளலாம்; மிகக் கொடிதாக என்று கருத்து. வீரனாதலின் இங்ஙனங் கொய்தனனென்பார்,

'வீரன் கொய்து கொடுத்தனன்' என்றார். நல்கி - நல்கவென்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு; செய்தெனெச்சம் வேறு கருத்தாவின் வினையைக்கொண்டு முடிதற்கு ஏலாதாதலால், இங்குப் பாண்டவர் வினையாகிய சென்றார் என்பதைக் கொண்டு முடியும். காளி - துர்க்கை: பார்வதியின் அம்சமான பெண்தெய்வம். காளியென்னுஞ் சொல்லுக்குக் கருநிறமுடையவளென்று பொருள்; காளம்-கருமை. தெவ்வரை ஒளித்து - தெவ்வர்க்கு ஒளித்து என உருபுமயக்கமாகக் கொள்க. மெய் வரு - வடிவம் பொருந்தி விளங்குகிற என்றுமாம். இவ்வடைமொழியை வீரனுக்குக் கூட்டி, சத்தியந்தவறுத இராவானெனினும் அமையும். நிலையில்லாமையாற் பொய்யாகிய உடம்பை மெய்யென்பது - மங்கலவழக்கு. என்ப என்னும் அசையைச் சிவகசிந்தாமணியுரையில் "இளந்த வல்ல வேறுபிற தோன்றினுங், இளந்த வற்றியலானுணர்ந்தனர் கொளலே" என்னுந் தொல்காப்பியப்புறனடைச்சூத்திரத்தாற் கொள்க என்பர் நச்சினார்க்கினியர். (360)

8.—பாண்டவர் மற்றும் சிலபலிகளிட்டு வரம் வேண்டி வருதல்.

ஆண்டகைகன்னிமுன்னரவயவமனைத்துமீந்து
காண்டகமலர்ந்ததீபமெனமுகங்கவினநின்றான்
பாண்டவர்யாமளத்தின்படிபகடாதியாக
வேண்டியபலிகளீந்துவென்றியும்வேண்டிமீண்டார்.

(இ - ள்.) ஆண் தகை - ஆண்மைக்குணத்தை யுடைய இராவான், கன்னி முன்னர் - காளியின் முன்னிலையில், அவயவம் அனைத்தும் ஈந்து - உறுப்புக்களையெல்லாம் அறுத்துப் பலிகொடுத்து, காண்தக மலர்ந்த தீபம் என முகம் கவின - (யாவரும்) காணத்தகுமாறு (அழகியதாய்) விளங்குகிற விளக்குப்போலத் தன் முகம் ஒளி பெற்று விளங்க, நின்றான்-(சிறிதுந் துயரமின்றி மகிழ்ந்து) நின்றான்; (அதன்பின்), பாண்டவர்-பாண்டு குமாரர் ஐவரும், யாமளத்தின்படி-யாமள நூல் முறைமைப்படி, பகடு ஆதி ஆக - யானை முதலாக, வேண்டிய பலிகள் ஈந்து - இன்றியமையாத பலிகளைக் கொடுத்து, வென்றியும் வேண்டி - (தமது) சயத்தையும் பிரார்த்தித்து, மீண்டார் - திரும்பினார்கள்; (எ - று.)

கீழ்க்கவிகளின் பின்னிரண்டடிகளிற் கூறிய கருத்தையே இக்கவியின் முன்னிரண்டடிகளில் மீண்டும் எடுத்து அநுவதித்துக்கூறியது, அப்பொழுது அவன் சிறிதும் வருந்தாது முகமலர்ந்திருந்த சிறப்பை விளக்கவேண்டியதாதலின், கூறியது கூறலாகாது. 'தீபமென' என்ற பாடத்துக்கு—காண்டகம் - காட்டிலே, மலர்ந்த - பூத்த, தீபம் என - கடப்பமரம் போல வென்க; அதன் மலர்கள் மிக்க செந்நிறமாய் எங்கும் விளங்குதல் போல, இவனுடம்பு முழுவதும் இரத்தப்பெருக்காற் சிவந்து விற்க வென்றவாறு. யாமளியென்று காளிக்குப் பெயராதலால், யாமளமென்பது - அவளுக்குப் பலி கொடுத்தல் முதலியவற்றைக் கூறும் நூலைக் குறிக்கும்: அது

அதர்வண வேதத்தின் ஒரு பகுதிபோலும். "அருகு நடிப்பன அலகைகள் பாடுவ யாமள வாரணமே" என்பர் மேற்பதினைரும் போர்ச் சருக்கத்தும். ஆண்டகை - பண்புத்தொகையன்மொழி. கன்னி-கன்யா என்பதன் திரிபு; இளமகளென்று பொருள். பகடு - யானை எருமை பசு இவற்றின் ஆண்பாற்பெயர். ஈங்கு, எருமைக் கடா என்னலுமாம். 'ஈர்ந்து' என்றும் பாடம். (361)

களப்பலியூட்டு சருக்கம் முற்றிற்று.

எட்டாவது

அணிவகுப்புச் சருக்கம்.

பாண்டவரும் துரியோதனாதியரும் தத்தஞ்சேனைகளைப்பகுத்து ஒழுங்குபடுத்திப் போருக்குச் சித்தஞ்செய்யுஞ் செய்தியைக் கூறும் பாகம். அணி - வரிசை. வகுப்பு - வகுத்தல். தொழிற்பெயர்: பு - விகுதி. இச்சருக்கத்தில், முதற்பதினைறு கவிகள்-பாண்டவர் அணி வகுத்தலையும், பின்பதினெட்டுக் கவிகள் துரியோதனாதியர் அணி வகுத்தலையும் கூறும்.

இந்தச் சருக்கத்திற் கடவுள் வாழ்த்துச் செய்யுள் காணப்பட வில்லை; மாதவிகமாதிரமாகக் கடவுள்வணக்கம் நிகழ்ந்துவிட்ட தென்றுவது, கடவுள் வாழ்த்தாக நூலாசிரியரால் பாடப்பட்ட தொரு செய்யுள் பிறகாலத்தில் ஏடெழுதுவோரால் எழுதாது விடப் பட்டு எஞ்சிய தென்றுவது, இச்சருக்கத்து முதற்செய்யுளில் போரு க்குச் செல்லவேண்டும் வகையைக் கண்ணன் சுவேதனுக்குக் கூறினு னென்பதுவே வஸ்துநிர்த்தேசரூபமான மங்களமாக ஆசிரியராற கருதப்பட்ட தென்றுவது கொள்க.

வேறு.

1.—கண்ணன் படையெடுத்துச் செல்லும்படி சுவேதனுக்குக் கட்டளையிடுதல்.

மற்றைநாள்வசுதேவன்மாமகன்மண்டலீகருமன்னருஞ்
செற்றுநீடவைபுக்கிருந்தசிவேதனேடிவைசெப்பினன்
இற்றைநாளதிரதர்மகாரதர்சமரதாதியரெவரொடுங்
கொற்றவஞ்சிமிலிச்சியேகுகருநிலத்திடையென்னவே.

(இ - ள்.) மற்றை நாள் - மறுநாள் உதயத்திலே, வசுதேவன் மாமகன்-வசுதேவனது சிறந்த குமாரனை கண்ணபிரான், மண்டலீ கரும் மன்னரும் செறறும் நீடு அவை புக்கு - மண்டலாதிபதிகளான அரசர்களும் (மற்றும் பல வகையான) அரசர்களும் நெருங்கியுள்ள பெரிய பாண்டவ சபையிற்சென்று, இருந்த சிவேதனேடு - (அங்கு வந்து) வீற்றிருந்த (பாண்டவ சேனாதிபதியான) சுவேதனுடனே,

'இற்றை நாள் - இன்றையதினம், அதிரதர் மகாரதர் சமரதஆதியர் எவரோடும் - அதிரதர் மகாரதர் சமரதர் முதலியோரான எல்லாரோடும், கொற்றம் வஞ்சி மிலேச்சி - வெற்றியைக் கொடுப்பதான வஞ்சி மாலையைச் சூடி, குரு நிலத்திடை ஏகுக - குருக்ஷேத்திரத்திற் (போருக்குப் புறப்பட்டுச்) செல்வாயாக,' என்ன- என்று, இவை செப் பினன் - இவ்வார்த்தைகளைக் கூறியனுப்பினன்; (எ - று.)

வசுதேவன் கண்ணனைப் பெற்ற தந்தை; தேவகியின் கணவன். 'ஆதியர்' என்றது, அர்த்தரதரை. அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் எனத் தேர்வீரர் நால்வகைப்படுவர். அதிரதர் - முழுத் தேரரசர்; அவராவார் - தாம் ஒரு தேரில் ஏறி நின்று தம் தேர் குதிரை சாரதிகளுக்கு அழிவுவராமற் காத்துப் பலவாயிரந் தேர்வீர ரோடு எதிர்த்து வேறு துணையில்லாமலே போர் செய்து வெல்லும் வல்லமையுடையார். அவரிற் சிறிது தாழ்ந்தவர் - மகாரதர் இவர் பதினாயிரந் தேர்வீரரோடு பொருபவர். சமரதர்-ஒரு தேர் வீர னொடு தாமும் ஒருவராய் எதிர்க்க வல்லவர். அர்த்தரதர்-அவ்வாறு எதிர்க்குமளவில் தம் தேர் முதலியவற்றை இழந்து போம்படியான வர்; இவர் இருவர் சேர்ந்தால் ஒரு சமரதனுக்கு ஒப்பாவர். வஞ்சிப் பூ மாலை - பகைவர் மேற் பொரச் செல்வோர் அணிவதற்கு உரியது. 'இருந்து' என்றும் பாடம்.

இது முதற் பதினாறுகவிகள் - பெரும்பாலும் முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (362)

2.—இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்: பாண்டவர் சேனைவீரரைச் சுவேதன் வகுத்தமையைக் கூறும்.

அதிரதாதிபர்தானும்வீமனும்விசயனுந்திறலபிமனுஞ்
சிதைவிலாதசிகண்டிசாத்தகிதிட்டத்துய்மன்விராடர்கோன்
மதுரமாமொழிதருமனோடிவர்மாரதாதிபர்சமரதப்
பதிகளானவரியாகசேனனுதாமனுத்தமபானுவே.

(இ - ள்.) தானும் - சுவேதனும், வீமனும் - வீமசேனனும், விசய னும்-அர்ச்சுனனும், திறல் அபிமனும் - போர் வல்லமையுடைய அபிமன்யுவும், (என்னும் இவர்), அதிரத அதிபர் - அதிரதத்தலைவர் களாகவும், சிதைவு இலாத-(போரில்) வலியழிதலில்லாத, சிகண்டி—, சாத்தகி—, திட்ட துய்மன்—,விராடர்கோன்-விராடராசன், மதுரம் ஆ மொழி தருமனோடு - இனிமையாகப் பேசுகிற யுதிட்டிரனுடன், இவர் - இவர்கள், மாரத அதிபர் - மகாரதத் தலைவர்களாகவும், யாக சேனன்-துருபதராஜன், உதாமன் - யுதாமன்யு, உத்தமபானு - உத்த மோசா, (என்னும் இவர்), சமரதர் பதிகள் ஆனவர்-சமரதத் தலைவர் களாகவும்; (எ - று.) மேற்கவியிலுள்ள 'ஆக' என்பது, ஈண்டும் ஆங்காங்கு எடுத்துக கூட்டத்தக்கது.

வீமன் - பீமன்; பகைவர்க்குப் பயங்கரனனவனென்று பொருள். விசயன், பற்குனன், பார்த்தன், கிரீடி, சுவேதவாகனன், பீபற்சு, கிருஷ்ணன், சவ்வியசாசி, தனஞ்சயன், பாகசாஸனி, நரன், ஜிஷ்ணு

என்பன - அருச்சுனனது மறு பெயர்களாம்; "பார்த்த னருச்சுனன் கரியோன் விசயன் பாகசாதனி சவ்வியசாசி பற்குனன் பா, ரேத்து தனஞ்சயன் கிரீடி சுவேத வாகனனெ நாமம் படைத்த பிரான்" எனக் கீழ்த் தீர்த்தயாத்திரைச் சருக்கத்துக் கூறியதைக் காண்க. விசயன் - விசேஷமான வெற்றியை யுடையவன்; இராசசூய யாகத் திற்காக வடக்கிற் சென்று பல அரசர்களைச் சயித்ததனாலும், காண்டவதகன காலத்துத் தேவர்களை வென்றதனாலும், பாசுபதம் பெறுங்காலத்துப் பரமசிவனை யெதிர்த்து விற்கழுந்தால் முடியி லடித்ததனாலும், பின்பு தேவர்க்குப் பகைவராகிய நிவாதகவசர் காலகேயர்களை வதைத்ததனாலும், இவை முதலிய வெற்றிகளால் இவனுக்கு இப் பெயர் அமைந்தது. இனி, விசயன் - தன்னைச் சயிப்பார் எவருமில்லாதவனென்றுமாம்; "பயிற்றிய படையால் வாகுவலியினுற் பாரிலென்னைச், செயித்தவரிலாத பண்பால் விசயனு நாமஞ் செய்தார்" என்றார் நல்லாப்பிள்ளை பாரதத்தும். முன்னைய பொருளில், வி - விசேஷமும், பின்னைய பொருளில் வி - எதிர்மறையும் குறிப்பனவாம். இருபொருளிலும், சயம் - வெற்றி. மற்றைய பெயர்களின் பொருட்காரணம் அவ்வப்பெயர் வருமிடத்துக் கூறப்படும். பிராயத்திலிளையனையினும் போரில் இளையானென்பார், 'இறலபிமன்' என்றார். யதுகுலத்தரசர்களுள் வசுதேவனுக்கு உடன்பிறந்த முறையாகிற சத்யகனது குமாரனை சாத்யகி, பிரா யத்தில் கண்ணனினும் இளையவனதலால், கண்ணனுக்குத் தம்பி முறையாவன். சாத்தகி - ஸாத்யகி யென்னும் தத்திதாந்தநாமம் திரிந்தது; இவன் - இலக்குமணன் இராமனிடத்திற்போலக் கண்ணனிடம் மிகுந்த அன்புகொண்டு அவனது கருத்துக்குச் சிறிதும் மாறுபடாது நடப்பவன்; அன்றியும், இவன் அருச்சுன னிடம் வில்வித்தையைக் கற்றறிந்த மாணாக்கனதலால், ஆசிரியனு மிய அருச்சுனனிடத்தும் மற்றைப் பாண்டவரிடத்தும் அன்பு கொண்டு ஒழுகுபவன். விராடர்கோன் - விராடதேசத்திலுள்ளார்க் குத் தலைவன். மொழிதருமன் - வினைத்தொகை. மதுரம் ஆம் மொழி யென்றுவது, மதுரம் மா மொழியென்றுவது பிரித்து, இனி மையான சிறந்த சொற்களையுடைய எனப் பொருள்கொள்ளின், இரண்டாம் வேற்றுமையுருபும் பயனுமுடன்தொக்க தொகையா தலால், மொழித்தருமனென வலி மிக்கே வருமென்க. உத்தமோஜா- உத்தம ஓஜஸ் எனப் பிரிந்து, மேலான ஒளியையுடையானெனப் பொருள்படும்; அப்பெயரின் பொருள்பற்றி, உத்தமபானு என்றார்; பானு - ஒளி. சிகண்டி முதலியனவும், யாகசேனன் முதலியனவும் - எண்ணும்மை தொக்கதனால் பெயர்ச்செவ்வெண். (363)

3. நண்ணுமர்த்தரதர்க்குநாயகர்நகுலனுஞ்சகதேவனும், எண் ணும்வெற்றிபெறுங்கடோற்கசனென்னும்வீரனுமாகவே, மண்ணகத் தணியணிகளாகமகீபர்தம்மைவகுத்துளான், விண்ணகத்தணிவிபுதர் சேனையில்வேளொடொத்தவன்வீரனே.

(இ - ள்.) நகுலனும்—, சகதேவனும்—, எண்ணும் வெற்றி பெறும் - (யாவராலும்) நன்குமதித்துக் கருதப்படுகிற சயத்தை

அடையவல்ல, கடோற்கசன் என்னும் வீரனும்—, நண்ணும் அர்த்தரதர்க்கு நாயகர் ஆக-பொருந்தின அர்த்தரதத் தலைவர்களாகவும், மண் அகத்து மகிபர்தம்மை - நிலவுலகத்து அரசர்களையெல்லாம், அணி அணிகள் ஆக வகுத்துளான்-இனமினமாகப் பிரித்திட்டான்; (யாவனெனில்), விண் அகத்து அணி விபுதர் சேனையில் வேளொடு ஒத்தனன் வீரன் - சுவர்க்கலோகத்திற்குப் பொருந்தின தேவர்களுடைய சேனையில் தலைவனுகவுள்ள சுப்பிரமணியக் கடவுளோடு ஒத்த பலபராக்கிரமசாலியான சுவேதராசன்; (எ - று.)

எண்ணும் வெற்றி பெறும் - தான் மனத்தில் நினைக்குஞ் சயத்தை நினைத்தவாறே பெறத்தக்க என்றுமாம். விபுதர் - விசேஷ புத்தியுடையோர்: தேவர்க்குப் 'புலவர்' என்றதொரு தமிழ்ப்பெயருங் காண்க. மஹீ - பூமி; பெரியது. வேள் என்னும் பகுதிக்கு - விரும்புதலென்று பொருளாதலால், யாவராலும் விரும்பப்படுங் கட்டழகுடைய மன்மதனுக்கும், முருகனுக்கும், வேள் என்பது - காரணபெயர். இங்கே காமவேளை விலக்குதற்கு, 'விபுதர் சேனையில் வேள்' என்றார். தேவாமிசமான பாண்டவரது சேனைக்குத் தலைவனுதலால் சுவேதனுக்குத் தேவசேனுதிபதியை உவமை கூறினர். (364)

4.—பாண்டவரும் கண்ணனும் போர்க்குச் சித்தஞ் செய்ய, பலராமன் தீர்த்தயாத்திரை செல்லத் தொடங்குதல்.

நெருங்குவெம்படைகண்டுவந்தபிணம்புலன்களுநெஞ்சமும்
ஒருங்குசென்றெனமன்னரைவருமாலும்வெஞ்சமமுன்னவே
மருங்குநின்றவிராமனும்பின்மதித்தபோர்முடிவளவும்யான்
பொருங்கடும்புனலதிகளாடுவனென்றுநண்பொடுபோயினான்.

(இ - ள்.) நெருங்கு வெம் படை கண்டு - (இங்ஙனம் அணிவகுக்கப்பட்டு) நெருங்கின உக்கிரமான சேனையைப் பார்த்து, உவந்தபின் - மகிழ்ந்த பின்பு, ஐம்புலன்களும் நெஞ்சமும் ஒருங்கு சென்று என - பஞ்ச இந்திரியங்களும் மனமும் ஒருமித்துப் போனதைப்போல, மன்னர் ஐவரும் மாலும் - பஞ்சபாண்டவர்களும் கண்ணனும், (ஒருமித்து), வெம் சமம் உன்ன - கொடிய போரைக் குறித்து நிற்க,—மருங்கு நின்ற இராமனும் - பக்கத்திலேயிருந்த பலராமபிரானும், பின்-பின்பு, 'மதித்த போர் முடிவு அளவும் - (நீங்கள்) நினைத்த யுத்தம்முடிகிற வரையிலும், யான்—, பொரும் கடு புனல் நதிகள் ஆடுவன் - (அதில்) மோதும் விரைவான புண்ணிய தீர்த்தத்தையுடைய ஆறுகளிலே (சென்று) நீராடுவேன்,' என்று - என்று சொல்லி, நண்பொடு போயினான் - (யாவரிடத்தும்) இனேகமாகவே போயருளினன்; (எ - று.)

"நளியிரு முந்நீ ருடுத்தமா நிலமு நார்நிலம் பொறுத்தவாளரவு, நெளியமா கடலந் தாணிவந் தீண்ட நெய்ம்முகங் கமழும்வேலிலவர்க், களியுறையரவ முயர்த்தவ ணெடுபோ ரடுத்திட நடுங்கிலை யமைந்த, வகிமருள் மேனி யொருகுழை யொருவன் வண்புனலாட்டின்மே லெழுந்தான்" என்றார், ஸ்ரீபாகவதத்தும். பலராமன் - கண்ணனுக்குத் தமையன்: திருமாலின் எட்டாம் அவதாரம்; இவனிடத்து ஆதி

சேஷனது அம்சமுங் கலந்திருந்தது.வசுதேவனுடைய பத்தினிகளுள் தேவகியின் கருப்பத்தில் ஏழுமாசமும், ரோகிணியின் கருப்பத்தில் ஆறுமாசமும் இருந்து பிறந்தவன், இவன். இவ்விடம் துரியோதனன் கதாயுதப்பயிற்சியை விசேஷமாகக் கற்றுக் கொண்டதுபற்றி, இவனுக்குத் துரியோதனனிடம் பக்ஷபாதமுண்டு: தனது தங்கையான சுபத்திரையைத் துரியோதனனுக்குந் தனது மகளான வற்சலையைத் துரியோதனனது மகனாலக்ஷ்மணகுமாரனுக்கும் மணஞ்செய்விக்கக் கருதியிருந்த எண்ணம் நிறைவேறுதபடி, கிருஷ்ணனசுபத்திரையை அருச்சுனனுக்கும் வற்சலையை அருச்சுன குமாரனான அபிமன்யுவுக்குந் தக்கபிரகாரம் மணஞ் செய்துவைத்தும், இவனுக்குப் பழைய அபிமானந் துரியோதனனிடத்தில் நீங்காதிருந்தது; அங்ஙனமிருந்தும் பாண்டவசகாயனான கண்ணனுக்கு மாறுகத்தான் எதிர்ப்பக்கத்திலிருந்து போர்செய்தல் தகாதென்றும் துரியோதனனழிதலிற் தான அருகிலிருந்து கண்ணுற்பார்க்க மனமில்லாமலும் புறப்பட்டுத் தீர்த்தயாத்திரை போய்விட்டனன் இவனென்க. "உலக நின்னதெனல் பொய்ம்மையல வங்ஙவ ரடங்கலுயிர் நீங்குவது திண்ணமினியான், பன்னரவகேதனன் விளிந்திடுத லென்விழி படாதகல்வ னீர்படியவே" என்றார் கல்லாப்பிள்ளை பாரதத்தில்.

"நயனங்கள் முதலான வைம்புலனு மனமும்போ னகரியெய்திப், பயன்விஞ்சு தொழிலினராய்ப் பாண்டவரும் திருமாலும் பயிலும் வேலை" எனக் கீழ் இராசசூயச்சருக்கத்திலும் பஞ்சபாண்டவர்க்குப் பஞ்சேந்திரியங்களும், கண்ணனுக்கு மனமும் உவமை கூறப்பட்டவாறு காண்க. பஞ்ச இந்திரியங்களாக்கொண்டு தொழில் நடத்துவது மனமேயாதல்போல,பஞ்சபாண்டவராகளாக்கொண்டு தொழில்நடத்துபவன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே யாதலால், இவ்வுவமை ஏற்கும். ஐம்புலன்கள் ஐவர்க்கும், நெஞ்சம் மாலுக்கும் உவமையாக முறையே சென்று இயைதலால், முறைநிரனிறைப்பொருள்கோள். ஐம்பொறிகள் - மெய் வாய் கண் மூக்கு செவி என்பன: அவற்றின் புலன்கள் - முறையே ஸ்பர்சம் ரஸம் ரூபம் கந்தம் சப்தம் என்பன; ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை எனபபடும். ஒருங்கு - இடைச்சொல். 'முன்ன' எனப் பிரித்து உரைத்தல் மோனைத் தொடைக்குப் பொருந்தாதாம். 'பின் மதித்த போர்' என எடுத்து, தனக்குப்பின் பிறந்த [தம்பியான] கண்ணன் நடத்தக்கருதின போரென்று உரைப்பாருமுளர்; அவ்வுரைக்கு, பின - காலவாகுபெயராம். கடும்புனல் என்பதில், கடுமை யெனனும் பண்புப்பெயர் விகாரப்பட்ட தென்றுவது,கடியென்னும் உரிச்சொல் நீறுநிரந்த தென்றுவது கொள்க. இங்கே 'நதிகள்' என்றது, மற்றைப் புண்ணிய தீர்த்தங்களுக்கும் உபலக்ஷணம். நண்பொடு - பக்ஷபாதமில்லாமல் நடுவுநிலைமையாகவே யென்றபடி. ()

5.—பலராமனும் விதுரனும் பலதேயங்களில் தீர்த்தயாத்திரைக்குச் செல்லுதல்.

போனவெம்பலபத்திரன்பொருபூசலிற்புகுதேனெனு
மானவெஞ்சிலைமுன்னிறுத்தவிதுரனேடுமகிழ்ந்துபோய்க்
கானகங்களில்வரையில்வாழ்முனிகணம்விரைந்தெதிர்கொள்ளவே
நானமெங்களுமாடுவானிருநாலுதிக்கினுநண்ணினன்.

(இ - ள்.) போன - (இவ்வாறு) புறப்பட்டுச்சென்ற, வெம் - (பகைவர்க்குக்) கொடிய, பலபத்திரன் - பலராமன், பொரு பூசலில் புகுதேன் எனு மானம் வெம் சிலை முன் இறுத்த விதூரனோடு - 'எதிர்க்கிற யுத்தத்தில் (எவர்பக்கத்துஞ்) சேர்ந்து போர் செய்யமாட்டேன்' என்று (தன்போலவே) கூறிப் பெருமையையுடைய கொடிய வில்லை முன்னமே முறித்துப்போகட்ட விதுரனுடனே, மிழற்று போய் - மனமுவந்து சென்று, கான் அகங்களில் வரையில் வாழ் முனி கணம் விரைந்து எதிர்கொள்ள - காட்டிடங்களிலும் மலைகளிலும் வசிக்கிற முனிவர்கூட்டம் (ஆங்காங்கு) விரைந்து வந்து (தம்மை) எதிர்கொண்டு உபசரிக்க, எங்கணும் நானம் ஆடுவான் - எல்லாவிடங்களிலும் [புண்ணிய தீர்த்தங்களிலெல்லாம்] ஸ்நானஞ் செய்யும்பொருட்டு, இரு நாலு திக்கினும் நண்ணினன - எட்டுத் திக்குகளிலுஞ் சேர்ந்தான்; (எ - று.)

பலபத்திரன் என்பதற்கு - வலிமையாற் சிறந்தவனென்று பொருள்; பத்ரன் - சிரேஷ்டன். கீழ்க் கிருட்டிணன் தூதுசருக்கத்தில் கூறியபடி, "வில்லிரண்டினு முயர்ந்த வில்"லாதலால், 'மான வெஞ்சிலை' எனப்பட்டது. கானகங்களில் வரையில் வாழ்முனிகணம் விரைந்து எதிர்கொள்ள-"மலர்தலையுலகமேத்து மாதவக் கிழவ ரெல்லாம், இலை விரி சாலை நின்று மெழுந்தன ரெதிர்கொண்டாரால்" எனப்பாகவதத்துக் கூறுமாறுங் காண்க. வரையென்னுங் கணுவின் பெயர், அதனையுடைய மூங்கிலுக்குச் சினையாகுபெயராய், அது பின் அம் மூங்கில் விளையும் மலைக்குத் தானியாகுபெயராதலால், இருமடியாகுபெயர். (366)

6.—இதுமுதல் நான்குகவிகளால், பாண்டவர்பக்கத்தில் அணிவகுக்கப்பட்டு நின்ற சதுரங்கசேனைகளை முறையே வருணிக்கிறார்: அவற்றுள், இது – யானை வருணனை.

இடிபடப்படவருமுகிற்குலமென நிரைக்கடலென நெடுங்
கடிபடப்படவதிர்பணைக்குலமெனவதிர்ப்பனகறைகள்போ
லடிபடப்படவுரகர்பைத்தலையணிமணிக்கணமடையவும்
பொடிபடப்படவுடனடப்பனபுகர்முகக்கரிநிகரமே.

(இ - ள்.) புகர் முகம் - செம்புள்ளிகளையுடைய முகத்தையுடைய, கரி - யானைகளின், நிகரம் - கூட்டம்,—இடி பட பட வரும் முகில் குலம் என - இடிகள் மிகுதியாகஉண்டாக (நீருண்டு மழை பெய்ய) வருகிற காளமேகங்களின் கூட்டம் போலவும், நிரை கடல் என - வரிசையாகப் பொங்கிவருகிற கடல்கள் போலவும், நெடு கடி பட பட அதிர் பணை குலம் என - மிக்க ஓசை மேன்மேல் உண்டாக முழங்குகிற வாத்தியங்களின் கூட்டம் போலவும், அதிர்ப்பன-பிளிறுவன; கறைகள்போல் அடி பட பட - உரல்கள்போன்ற (தமது) கால்கள் (அடியெடுத்துவைக்குந்தோறும்) மேன்மேற்படுதலால், உரகர் பை தலை அணி மணி கணம் அடையவும் பொடி பட பட - (கீழுலகத்திலுள்ள) நாகரது படத்தையுடைய தலையிற் பொருந்தி

யுள்ள மாணிக்கங்களின் கூட்டமெல்லாம் மிகப் பொடியாகும்படி, உடன் நடப்பன - விரைந்து செல்வன; (எ - று.)

முன்னிரண்டடி - உவமையணி. படப்பட - அடுக்குகள், மிகுதிப் பொருளன. கடி - பலபொருளுணர்த்தும் உரிச்சொல்; "கடியென் கிளவி காப்பே கூர்மை, விரையே விளக்க மச்சஞ் சிறப்பே, விரைவே மிகுதி புதுமையார்த்தல், வரைவே மன்றல் கரிப்பிறகும்" என்பது நன்னூல். நெடுங்கடி - மிக்க தூரத்துஞ் சென்றொலிக்கும் ஓசை. இனி, கடியென்பதைக் கடிப்பு என்பதன் விகார மெனக்கொண்டு, பெரிய குறுந்தடி யெனினும் அமையும். உரல் - யானைக்காலுக்கு, வடிவாலும் வலிமையாலும் உவமம்: "உரற்கால் யானை" என்றார் முன்னோரும். இனி கறைகள்போல் நடப்பன என இயைத்து, கறுத்த இருட்டொகுதிபோல நடப்பன வென்று உரைப்பாரு முளர். பின்னிரண்டடிகளில் யானைகள் அடிவைக்கும் வன்மை யால் கீழுள்ள நாகர்களது தகிலமணிகள் பொடியாகுமென்றது- தொடர்புயர்வுநவிற்சியணி. உடன் நடப்பன - ஒன்றோடொன்று தொடர்ச்சியாக நடப்பன எனலுமாம். யானைகளுக்கு முகத்திற் செம் புள்ளிகளிருத்தல், உத்தமவிலக்கணம்: "தீயுமிழ் சிறுகணுஞ் செம் புகருமுடைத்தாய்" எனப் பிங்கலந்தையிலுங் காண்க. "மதம்பொழி யாழியினளவும் புகரா லழகெய்தி," "செம்புகர்பட்டின்தொழிலிற் பயில்கிற்பது" என்பர் மேற் பதினேழும்போர்ச் சருக்கத்தும். கரி - கரத்தையுடையது; கரம் - கை: இங்கே துதிக்கை:இதற்குக் கருநிறத் தையுடையதெனப் பொருள் கூறலாகாது. மேகமுங் கடலும் யானைக்கு ஒலியினாலேயன்றி, கரியபெரிய வடிவத்தாலும், மதநீர் வெள்ளத்தாலும் உவமையாம்.

இதுமுதல் 15-ஆம் பாடல் வரையிலுள்ள செய்யுள்கள், தன தனத்தன தனதனத்தன தனதனத்தன தனதனு என்ற சந்தக் குழிப்பைக் கொண்டிருத்தலால் சந்தவிருத்தமெனற்கு ஏற்பன. (367)

7.—இது தேர் வருணனை.

உருண்மணித்திகிரியின்முனைப்படிலுயர்பொருப்பையுமுரகர்வா
ழிருநிலத்திடைபுதைபடப்பட்வெதிர்நடப்பனவிவுளியின்
குரதுகட்கொடுகலகமிட்டணிகொடிநிரைத்துகில்கொடுபொலந்
தருநிலத்தவர்விழிதுடைப்பனசரதமிப்படியிரதமே.

(இ - ள்.) இரதம் - தேர்கள்,—உருள் மணி திகிரியின் முனை படில் - உருண்டு செல்லும் அழகிய சக்கரங்களின் நுனிபட்டால், உயர் பொருப்பையும் - உயர்ந்த மலைகளையும், உரகர் வாழ் இரு நிலத்திடை - நாகர்கள் வாழும் பெரிய பாதாளலோகத்திலே, புதை படப்பட - நன்றாகப் புதைந்தழுந்தும்படி, எதிர்நடப்பன - எதிரே செல்லுந் தன்மையன; இவுளியின் - (தம்மிற் கட்டிய) குதிரைகளி னுடைய, குரம் துகள் கொடு - காற்குளம்புகளால் எழுப்பப்பட்ட தூளிகளால், கலகம் இட்டு - (மேலுள்ளதேவர்களோடு) போரைச் செய்து, அணி கொடி நிரை துகில் கொடு - (தம்மீது கட்டியுள்ள)

அழகிய துவசங்களுடைய வரிசைகளின் சீலைகளால், பொலம் தரு நிலத்தவர் விழி துடைப்பன - பொன்மயமான கற்பக விருட்சங்களை யுடைய சுவர்க்கலோகத்திலுள்ள அத்தேவர்களது கண்களைத் துடைப்பன; இப்படி சரதம் - இவ்வாறு செய்தல் உண்மை யாம்; (எ - று.)

பிறர்க்கு வருத்தமுண்டாகும்படி முன்னே கலகம் விளைத்துப் பின்பு அவரைக் கண்துடைத்துச் சமாதானப்படுத்துபவரது தன்மை தேரினிடத்து ஏற்றிக் கூறப்பட்டதனால், பின்னிரண்டடி - தற்குறிப் பேற்றவணி. "அன்னபோலெனு மவைமுதலாகிய, சொன்னிலை விளக்குந் தோற்றமுடைத்தே" என்றபடி அன்ன, போல, நிகர்க்கின் றேன், நிச்சயம், உண்மை, துணிவு முதலிய சொற்களைப் புணர்த்து விளக்குதல் இவ்வணிக்கு ஓரிலக்கண மாதலுமுள்ளதாதலால்,' 'இப் படிசரதம்' என்றார். தேர்க்குதிரை காற்புழுதிகள் வானத்து எழுந்து சென்று தேவர்களது இமையாக் கண்களிற் படிந்து அவர்களது கண்களை வருத்து மென்பார், 'குரதுகட்கொடு கலகமிட்டு' என்றும் அங்ஙனம் துகள்பட்டு வருந்துங் கண்களைத் தேர்க்கொடிச்சீலைகள் துடைத்து அவ்வருத்த மொழிக்குமென்பார், 'அணிகொடிநிரைத் துகில் கொடு பொலந்தரு நிலத்தவர் விழி துடைப்பன' என்றுங் கூறினர். முன்னிரண்டடி - உயர்வுநவிற்சி. மணித் திகிரி யென்ப தற்கு - இரத்தினங்கள் பதிக்கப்பட்ட சக்கரமென்றும், திகிரியின் முகீனபடில் என்பதற்கு - சக்கரங்களின் எதிரிற் பட்டாலென்றும் பொருள் கொள்ளலாம். பெரிய மலைகளையும் பாதாளத்தில் அழுத்த வல்லன என்றது - தேரின் வலிமிகுதியையும், இவுளியின்குரதுகட் கொடு கலகமிட்டு என்றது - குதிரைகளின் வலிமையையும், அணி கொடி நிரைத்துகில் கொடு பொலந்தரு நிலத்தவர் விழிதுடைப்பன என்றது - தேர்களின் உயர்ச்சியையுங் குறிப்பிக்கும்.

பொன் + தரு = பொலந்தரு: இது - "பொன்னென் னிளவியீ றுகெட முறையின், முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ், செய்யுண் மருங்கிற் றொடரிய லான" என்னுந் தொல்காப்பிய விதியாற் புணர்ந் தது. இதனை நன்னூலின்படி பொலம் தரு - எனப்பிரித்து மகர வீற்று விதியாற் புணர்க்க: பிற்காலத்து நிகண்டு திவாகரங்களில் பொலமென்றே ஒரு பெயர் கூறியவாறுங் காண்க. பொன்னுலக மாகிய தேவலோகத்திலுள்ள பொருள்களெல்லாம் பொன்மய மாத லால், பொலந்தரு எனப்பட்டது. இனி 'பொலம்' என்பதை நில மென்பதனோடு கூட்டலுமாம். சந்தானம், மந்தாரம், பாரிசாதம், கல்பகம், அரிசந்தன மெனத் தேவதரு ஐந்தாம்: இவை தன்னிடம் வந்து வேண்டுவார் வேண்டும்பொருளை வேண்டியவாறே விளைப் பன. பொலந்தரு - (வேண்டிய) செல்வத்தை விளைக்கும் தருவு மாம். பொலன் - பொருள். (368)

8.—இது - குதிரை வருணனை.

பலவகைப்படுகவனமெய்க்கதிபவனமொப்பனபரவைசூழ்
உலகணைத்தையும்வெளியிலுய்த்தலினுரகருக்குமொருதவியா

யிலகுசக்கரசிகரிசுற்றடியெனவகோப்பனவெழுபெயர்க்
குலமுகிற்றலைகிழியவைப்பனகுரவிதத்தனபுரவியே.

(இ - ள்.) புரவி - குதிரைகள்,—பல வகைப் படுகவனம்-அநேக வகைப்பட்ட நடைகளையுடைய, மெய் கதி - இலக்கணந்தவறுதி விரைந்த நடையாலே, பவனம் ஒப்பன - காற்றை ஒத்திருப்பன; பரவை சூழ் உலகு அனைத்தையும் - கடல் சூழ்ந்த பூலோகம் முழுவதையும், வெளியில் உய்த்தலின் - (தம்கால்களால் எழுப்பப்படும் துகள்கள் மூலமாக) ஆகாயத்தில் செலுத்துதலால், உரகருக்கும் ஓர் உதவி ஆய் - (கீழிருந்து நிலத்தைத் தாங்கும்) நாகர்களுக்கும் (தலைப்பாரத்தைக் குறைத்து) ஒப்பற்ற உதவியாகி, இலகு சக்கர சிகரி - (உலகத்தைச் சூழ்ந்து) விளங்குகின்ற சக்கரவாளகிரியை, சுற்று அடி என - (தாம் வட்டமாக ஓடுதற்கு அளவாக அமைத்தி) சுற்றெல்லை யென்னும்படி, வகோப்பன - மண்டலகதியாய்ச் சுற்றி வருவன, எழு பெயர் குலமுகில் தலை இழிய வைப்பன - ஏழுபெயர் களையுடைய சிறந்த மேகங்களின் தலை இழியும்படி (அவற்றின்மேல்) வைப்பனவான, குரம் விதத்தன - காற்குளம்புகளின் வகையை யுடையன; (எ - று.)

பலவகைப்படு கவனம் - ஐவகைநடை; அவை - "விக்கிதம் வற்கிதம் வெல்லுமுபகண்டம், மத்திமஞ் சாரியோடைந்து" என்பன. இவற்றுள், நிச்சலமாக அதிவேகமும் அதிமந்தமு மாகாமல் சமமான கதி - விக்கிதம்; அதனினும் அதிகமாய்ச் சதுரமான கதி - வற்கிதம்; தாளகதியுடன் வட்ட மிட்ட கதி - வெல்லுமுபகண்டம்; வேகத்தினால் முன்னங்கால்களைத் தூக்கி வரும் நடை - மத்திமம்; அவ்வளவு வேகமாகவுஞ் சமமாகவும் போகுகை - சாரி. இவை பஞ்சகதி யெனவும், பஞ்சதாரை யென வும் படும்: இனி, மல்லகதி, மயூரகதி, வியாக்ரகதி, வானரகதி, ருஷபகதி எனவுமாம். இனி இவற்றோடு பஞ்சனி, முரளி, சுடாலம், வலனம் என்னும் நான்கு கூட்டி நவகதி கூறுதலுமுண்டு. ஒரு தவியாய் - சிறிது உதவியாய் என்றுமாம். பூமியைச் சூழ்ந்துள்ள கடலைச் சுற்றிலும் கோட்டை மதில்போல் வளைந்துள்ளதொரு பெரு மலைக்குச் சக்கரவாள மென்றுபெயர். சக்கரம்போல வட்டவடிவாக வுள்ளமையால், சக்கரவாள மெனப்படும். சர்ப்பராசனை ஆதி சேஷனும் அவற்குத் துணையாக அஷ்டமகாநாகங்களும் கீழுலகத்தி லிருந்து தம் தலைகளால் பூமியைப் பரிக்கின்றன வென்பது நூன் மரபு. குலம் முகில் தலை - கூட்டமான மேகங்களினிடம் என்றுமாம். குரவிதம் என்றது, இங்கே முன்னிரண்டு கால்களை. இப்பாட்டில் தற்குறிப்பேற்றவணியும், தொடர்புயர்வுநவிற்சியணியும் விரவி வந் தன. சக்கரவாளகிரி உட்பக்கம் சூரிய கிரணங்களால் விளங்கியும் வெளிப்பக்கம் அவற்றால் விளங்காமலும் 'லோகாலோகம்' எனப் பெயர் பெறுந்தன்மை தோன்ற, 'இலகு சக்கரசிகரி' என்றார். 'சக்கர சிகரி சுற்றடியென வகோப்பன' என்பதற்கு-கடல் சூழ்ந்த பூமி முழுவ தையும் மிகவிரைவிற் சூழ்ந்துவரவல்லனவென்பது தோற்றகருத்து 'புவனதலமுற்றுமுடன் வகையவொரிமைப்பொழுதில் வருவன

என்பர் 'மேல் இருபத்து மூன்றும் பாட்டிலும். மெய்க்கதி - உடம்பி னுற் செல்லுங் கதி யென்பாருமுளர். 'ஒத்தெழு பரவைசூழ்' என் றும் பாடம். (369)

9.—இது - காலாள் வருணனை.

புருவவிற்குனிவெழுவுயிர்ப்பொடுபுகையெழத்துகிர்புரையும்வாய்
மருவுமுத்திளநிலவெழத்தனிமனநெருப்பெழவளர்தடக்
கரதலத்தயில்வெயிலெழப்புனைகலன்வனப்பெழமிளிருநீள்
நிரையிமைப்பெறுவிழிசிவப்பெழநிருதரொத்தனர்விருதரே.

(இ - ள்.) விருதர் - காலாள் வீரர்கள்,—புருவம் வில் குனிவு எழ - (தத்தம்) புருவங்களாகிய விற்களின் வளைவு தோன்றவும், உயிர்ப்பொடு புகை எழ - (தமது) சுவாசத்தோடு புகை கிளம்பவும், துகிர் புரையும் வாய் மருவும் முத்து இள நிலவு எழ - பவழத்தை யொத்த [மிகச்சிவந்த] (தமது) வாயிற் பொருந்திய முத்துப்போன்ற பற்களில் இளஞ்சந்திரகாந்திபோன்ற ஒளி (வீரரசை செய்யுங் காலத்து) வெளித்தோன்றவும், தனி மனம் நெருப்பு எழ - ஒப்பில் லாத (தமது) மனத்தில் (கோபமாகிய) தீப்பொங்கவும், 'வளர் தடகர தலத்து அயில் வெயில் எழ - நீண்டுவளர்ந்த பெரிய (தமது) கையி னிடத்துப் பொருந்தின வேல்களில் சூரியகாந்தி போன்ற ஒளி வீசவும், புனைகலன் வனப்பு எழ - (தாம்) அணிந்துள்ள ஆபரணங் களின் அழகு விளங்கவும், மிளிரும் நீள் நிரை இமை பெறு விழி சிவப்பு எழ - ஒளி செய்கிற நீண்ட ஒழுங்கான இமைகளைப் பெற்ற கண்களில் (கோபமிகுதியால்) செங்நிறம் பொருந்தவும், (இக்கார ணங்களால்), நிருதர் ஒத்தனர் - அரக்கரைப் போன்றனர்; (எ - று.)

உவமையணி. கோபத்தாற் புருவம் வளைதல், கோபத்தோடு விடும் பெருமூச்சில் புகை கிளம்புதல், சிவந்தவாயிற் பொருந்தின கோரப்பற்களின் வெள்ளொளி வெளிவிளங்குதல், பிறரோடு கூடாது தனிப்பட்டு மனம் கோபாக்கினியாற் கொதித்தல், கையில் வேலேந்துதல், உடம்பில் ஆபரணமணிதல், கோபத்தாற் கண்கள் சிவத்தல் என்னும் இவை அரக்கர்க்கும் உண்மை காண்க; அன்றி யும், வில்வளைவு, புகை, நிலா, நெருப்பு, வெயில், அழகு, கொடுங் கண் முதலியவற்றை மாயையால் ஒருங்கு காட்டுவராதலற்றியும், அரக்கரை உவமை கூறிய தென்னலாம். முத்து - வெள்ளிய பல் லுக்கு உவமையாகுபெயர். கைகள் முழங்காலளவும் நீண்டு தொங் குதல் உத்தம இலக்கணமாதலால், 'வளர் தடக்கர தலம்' என்றது. விருது-வெற்றி; அதனையுடையவர், விருதர். 'இமைப்பறு' என்றும் பாடம். (370)

10.—இது - அரசர் வருணனை.

கொடிநெருக்கவுமதியெனத்திகழ்குடைநெருக்கவுதடைகொளா
ளடிநெருக்கவு மிபநெருக்கவு மயநெருக்கவு மெழுதுகட்
பொடிநெருக்கவும்வளர்புயத்தொடுபுயநெருக்கவுமொளியரு
முடிநெருக்கவுமுறைநெருக்கினர்முரசமொத்தசொலரசரே.

(இ - ள்.) முரசம் ஒத்த - பேரிகை முழக்கத்தைப் போன்ற, சொல் - (கம்பீரமான) சொற்களையுடைய, அரசர்—,—கொடி - துவசங்கள், நெருக்கவும் - இடைவிடாது செறியவும், மதி என திகழ் குடை - பூர்ண சந்திரன் போல விளங்குகிற வெண்கொற்றக் குடைகள், நெருக்கவும்—, நடை கொள் ஆள் அடி - நடத்தலைக் கொண்டபதாதிகளின் கால்கள், நெருக்கவும்—, இபம் - யானைகள், நெருக்கவும்—, அயம் - குதிரைகள், நெருக்கவும்—, எழு துகள் பொடி - மேலெழுகிற புழுதிகள், நெருக்கவும்—, வளர்புயத்தொடு புயம் நெருக்கவும் - [உயர்ந்தும் பருத்தும்] வளர்ந்த (தமது) தோள்களோடு (பிறர்) தோள்கள் அடரவும், ஒளி அரு முடி நெருக்கவும் - பிரகாசம் நீங்காத கிரீடங்கள் (ஒன்றையொன்று) உராயவும், (ஒருவரையொருவர்), முறை - முறையே, நெருக்கினர்—; (எ - று.)

தன்மைநவிற்சியணி; முரச மொத்த சொல்-உவமையணி. மதி - (யாவராலும்) மதிக்கப்படுவதெனக் காரணப்பெயர். சந்திரன்-குடைக்கு வட்டவடிவாலும் தண்மையாலும் வெண்ணிறத்தாலும் மேல் விளங்குதலாலும் உவமை. நடையென்னுந் தொழிற்பெயரில், நட என்னும் பகுதி சுற்றகரம் தொக்கது. துகட்பொடி-ஒருபொருட் பன்மொழி, செவிக்குச் சொல்லின்பந் தோன்ற நின்றது; என்றது, நுண்தூளிகளா யாகலாம். 'நடைகொள் தேரடி' எனவும் பாடம்.(371)

11.—இது – தேர்த்துவச வருணனை.

பகல்மறைத்திருள்வரவிடுத்தெறிபவனமெய்க்கதியுடனுலாய்
அகனிலத்திடைவருநதிப்புனலருவருத்துயர்நதியின்வாய்
உகள்வரிக்கயலினமுமொத்தனவுடுகுலத்துடனெளிர்பெருங்
ககனவட்டமுமறையவிட்டனகவசமொத்தனதுவசமே.

(இ. - ள்.) துவசம் - கொடிச்சீலைகள்,— பகல் மறைத்து - (மேலே தாம் நெருங்கிப்பரந்திருத்தலால்) சூரியனெளியை மறைத்து, இருள் வர விடுத்து - (அதனால்பூமியிலே) இருளை வரும்படி செய்து, எறி பவனம் மெய் கதியுடன உலாய் - வீசுகின்ற காற்றினது உண்மையான சஞ்சாரத்துக்கு ஏற்ப அசைந்து, அகல் நிலத்திடை வருநதி புனல் அருவருத்து உயர் நதியின்வாய் உகள் வரி கயல் இனமும் ஒத்தன - பரந்த பூலோகத்தினிடத்திலே ஓடுகின்ற நதிகளெல்லாவற்றின் நீரையும் (மிக்கசுவையுடைத்தன்றென்று) வெறுத்து மேலுள்ள ஆகாசகங்கா நதியில் (சென்று) சஞ்சரிக்கிற (உடம்பிற்) கோடுகளையுடைய கயல்மீன்களின் கூட்டத்தையும் போன்றன; உடு குலத்துடன் ஒளிர் பெரு ககனவட்டமும் மறைய இட்டன கவசம் ஒத்தன - நக்ஷத்திரக் கூட்டத்தோடு விளங்குகிற பெரிய ஆகாய வட்டமும் மறைபடும்படி போகவிட்ட கவசத்தையும்போன்றன;(எ-று.)

தற்குறிப்பேற்றவுவமையணி. உகளுதல் - பிறழ்தல், புரளுதல். கயல் - மீனின் ஒர்சாதி. விட்டன எனப் பதம்பிரித்தல் சிறவாதாம். கவசம் - உடம்பின்மேற்சட்டை. 'இனமொடொத்தன' எனவும் பாடம்.
(372)

12 —இது - அறுவகைத் தாஅ வருணனை.

உறவின் மிக்கவர் பகையினெய்த்தவருதவுமப்படைகுடைநிழற்
செறிதலத்தினில் வளர்நகர்ப்படை திரள்வனப்படைபொருள்விலைத்
தறுகண்மெய்ப்படையுறுதியிற்பொருதமதகப்படையெனவிராய்
அறுவகைப்படைகளும்வகுத்தனவணிகளுட்கினபணிகளே.

(இ - ள்.) உறவில் மிக்கவர் (உதவும் அ படை) - (பந்துத்துவம் சிநேகம் முதலிய) சம்பந்தத்திலே மிகுந்த துணைவர்கள் (தமக்கு) உதவியாகக் கொடுத்த அந்த சேனையும் [துணைப்படையும்], பகையின் எய்த்தவர் உதவும் அ படை - பகைமையினால் (தம்மோடு எதிர்த்துப் போர்செய்து) தோற்றவர்கள் (தமக்குத்) திறைகொடுத்த அந்தச் சேனையும் [பகைப்படையும்], குடை நிழல் செறிதலத்தினில் வளர் நகர் படை - (தமது) குடையின் நிழலிலே [அரசாட்சியிலே] பொருந்தின நாட்டிலுள்ள நகரங்களினின்று வந்த சேனையும் [காட்டுப்படையும்], வனம் திரள் படை-காட்டினின்றுதிரண்டு வந்தசேனையும் [காட்டுப் படையும்], பொருள் விலை தறுகண் மெய் படை - (தாம் கொடுக்குங்) திரவியமாகிய விலையைப் பெற்றுக்கொண்டு ஊழியஞ் செய்யும் அஞ்சாமையையும் (வலிய) உடம்பையுமுடைய சேனையும் [கூலிப் படையும்], உறுதியின் பொரு தமது அகம்படை - (தஞ்சுறுதியோடு போர் செய்கிற தம்முடைய அந்தரங்கமான சேனையும் [மூலப்படையும்], என - என்று, அறுவகை படைகளும் - அறுவகைச் சேனைகளும், விராய் - சேர்ந்து, அணிகள் வகுத்தன - அணிவகுக்கப்பட்டனவாக, (அப்பொழுது), பணிகள் உட்கின - (கீழிருந்து பூமியைத் தாங்குகின்ற) நாகங்கள் (பாரமிகுதியை நோக்கி) அஞ்சின; (எ - று.)

எய்த்தவர் - இளைத்தவர். நீதிதவறாது குடிகளுக்கு நன்மையைச் செய்யும் அரசாட்சியைக் குடைநிழலென்றல், கவிமரபு. இனி, பொருள் விலை - பொருளுக்குத் தம்மை விற்றல் செய்கிற என்றும் உரைக்கலாம். மெய்ப்படை - தொழிலில் உண்மையுள்ள சேனை யென்றுமாம். அறுவகைப்படையுள்ளும், மூலபலம் - மற்றையவை போல அப்பொழுதப்பொழுது அரசனுற் சேர்க்கப்படுவதன்றி, முன்னோர் தொடங்கிவந்து அரசனிடத்தே தொன்றுதொட்டு உளதாகி வரும் அன்புடைமையும் தனக்கு அழிவுவருங் காலத்தும் அஞ்சி நீங்காத வன்புடைமையுமாகிய சிறப்பை யுடைமையால் 'உறுதியிற் பொருதமதகப்படை 'எனப்பட்டது. "உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத், தொல்படைக் கல்லாலரிது', என்றார், தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும். இதனை இறுதியில் நிறுத்தினதற்குக் காரணமும் இதுவே. பணம் - படம். 'வகுத்தன' என்பதை முற்றெச்சமாகக் கொண்டு உரையாவிடின் ஏகவாக்கியமாகாமற் பின்னவாக்கியமாகிப் பொருள் சித்தியாது என்பர். (373)

13.—இது - முரசம், குடை, கொடி, ஆயுதம் என்பவற்றின் வருணனை.

சதியெனைப்பல வெனமுழக்கின சதவிதப்பணை தவளமா
மதியெனைப்பல வெனநிழற்றின மகிபர்பொற்குடை மழைகொள்வான்
நதியெனைப்பல வெனநிரைத்தன நவமணிக்கொடி நளினவெம்
பதியெனைப்பல வெனவெறித்தன பலவகைப்படை குலவவே.

(இ - ள்.) (அந்தச் சேனையில்), சதம் விதம் பணை - நூறு வகைப்பட்ட வாத்தியங்கள், எனை பல சதி என - மிகப்பலவான தாள வகைகளை யொத்து, முழக்கின - ஒலித்தன: மகிபர் பொன் குடை - அரசர்களது அழகிய குடைகள், தவளம் மா மதி எனை பல என - வெண்ணிறமான பெரிய பூர்ண சந்திரன் மிகப்பல என்னும்படி [அனேக சந்திரர் இருந்தாற்போல], நிழற்றின - நிழலிச்செய்தன; நவ மணி கொடி - நவரத்தினங்களிழைக்கப்பெற்ற கொடிகளின் சீலைகள், மழை கொள் வான் நதி எனை பல என - குளிர்ச்சியைக் கொண்ட ஆகாச கங்காநதி மிகப்பல என்னும்படி [பல கங்கைகள் இருந்தாற்போல], நிரைத்தன - ஒழுங்காய் நிறைந்தன; பலவகை படை - அநேக வகை ஆயுதங்கள், கனினம் வெம்பதி எனை பல என - தாமரைக்கு விரும்பப்படுந் தலைவனை சூரியன் அநேகமென்னும்படி [பல சூரியர் ஒருங்கு விளங்கினாற்போல], குலவ எறித்தன - விளங்க ஒளி வீசின; (எ - று.)

இரண்டு முதலிய மூன்றடிகள் - இல்பொருளுவமை. மேலே வரிசை வரிசையாக அசைந்து நெடுந்தூரம் தொடர்பட்டு நிற்றலால், கொடி வரிசைக்கு வான்நதி உவமையாம். தாமரை சூரியனொளியைக் கண்டவிடத்து மலர்தலும், அதனைக் காணுதவிடத்துக் குவிதலு மாகிய இயல்புபற்றி, தாமரையாகிய பெண்ணுக்குச் சூரியனைக் கணவனென்றல் மரபு. பலவகைப்படை-எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவாகிய அம்பு வேல் வாள் ஈட்டி முதலியன. தாளங்கள் நூற்றெட்டு வகையாதலால், 'சதியெனைப்பல' என்றது. நூறென்னும் பொருளைத் தருகின்ற சதமென்னும் சொல், இங்கே மிகப்பல வென்ற மாத்திரமாய் நின்றது. பணை-பறைப்பொது. பொன் குடை - பொற்காம்பிட்ட குடை யென்றுமாம்; பொன் - கருவியாகுபெயர். நவமணி-கோமேதகம், நீலம், பவழம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. வெம்மை என்பது - பண்புச் சொல்லாய் வெப்பத்தை யுணர்த்துவதையன்றி, உரிச்சொல்லாய் விருப்பத்தையும் உணர்த்துதலை 'வெம்மை வேண்டல்' என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. (374)

14.—இது - சேனைப்பொது வர்ணனை.

பிடர்வலிக்கட கரிகளிற்செறிபிடிகளிற்புனைமுடிகளிற்
படர்நிழற் கவிகையின்மிசைத் துகள்பரவிமொய்த்தெழுபுரவியிற்
சுடர்விதப்படை களினிரைப்படுதுகிலுடைக் கொடிகளின் விராய்
அடர்பொருப்பினமிடையிடைப்பயிலடவியொத்ததுபுடவியே.

(இ - ள்.) பிடர் வலி கட கரிகளின் - பிடரியில் வலிமையுள்ள மதத்தையுடைய ஆண் யானைகளாலும், செறி பிடிகளின்-நெருங்கின பெண் யானைகளாலும், பூண் முடிகளின் - (அவரவர்) அணிந்துள்ள கிரீடங்களாலும், படர் நிழல் கவிகையின்-பரந்த நிழலையுடைய குடைகளாலும், மிசை துகள் பரவி மொய்த்து எழு புரவியின் - ஆகாயத்திலே தூளிகள் பரவுவதற்குக் காரணமாய் நெருங்கி வருகிற குதிரைகளாலும், சுடர் விதம் படைகளின் - விளங்குகிற பலவகைப்பட்ட ஆயுதங்களாலும், நிரை படு துகில் உடை கொடிகளின் - வரிசைகளாய் அமைந்த சீலைகளையுடைய துவசங்களாலும், விராய்-கலந்து, புடவி - (சேனைபரவிய) அப்பூமியானது, அடர் பொருப்பு இனம் இடை இடை பயில் அடவி ஒத்தது-நெருங்கிய மலைகளின் கூட்டம் நடு நடுவே பொருந்தப்பெற்ற வனத்தைப்போன்றது; (எ - று.)

யானைகள் - மலைபோலுதலாலும், குடை குதிரை கொடிகள் - அடர்ந்த மரங்கள் போலுதலாலும், கிரீடமும் ஆயுதங்களும் பொன் மணிகள்போல விளங்குதலாலும், இங்ஙனம் வருணித்தார். தற்குறிப் பேற்றவுவமையணி. பிடர்-கழுத்தின்பின்புறம். கடமென்னும் யானைக் கன்னத்தின் பெயர் அதனினின்றுவழியும் மதநீருக்கு இடவாகு பெயர்; பின்னர் 'பிடி' என வருதலாலும், 'கடம்' என்ற அடைமொழி யாலும், கரி - இங்கே ஆண்யானையாயிற்று. பிடி-யானையின் பெண் மைப்பெயர். முடி - முடியில் தரிப்பது. கவிகை - கவிந்துள்ளது; காரணப்பெயர். 'பரவ' எனவும் பாடம். (375)

15.—இது-பலவகை வாத்திய கோஷ வருணனை.

வலம்முழக்கினகிடுகுகொட்டினவயிரொலித்தனமகுடியின்
கிளையிமிழ்த்தனமுழவதிர்த்தனகிணையுரற்றினபலவிதத்
துளையிசைத்தனமுரசிரைத்தனதுடியரற்றினசெவிடுபட்
டுலகவிப்படிபடைபுறப்படவுலகமுற்றதுகலகமே.

(இ - ள்.) (அந்தச்சேனையில்), வலம் - சங்குகள், முழக்கின - ஒலித்தன; கிடுகு - கிடுகென்னும் (ஓர்வகைப்) பறைகள், கொட்டின - அடிக்கப்பட்டன; வயிர் - ஊதுகொம்புகள், ஒலித்தன—; மகுடியின் கிளை - மகுடியென்னும் வாத்தியத்தின் இனங்கள், இமிழ்த்தன - ஒலித்தன; முழவு - மிருதங்கங்கள், அதிர்த்தன-ஒலித்தன; கிணை - கிணையென்னும் பறைகள், உரற்றின - ஒலித்தன; பல விதம் துளை - பலவகையான துளைக்கருவிகள், இசைத்தன-ஒலித்தன; முரசு - பேரிகைகள், இரைத்தன - ஒலித்தன; துடி - உடுக்கைகள், அரற்றின - ஒலித்தன; செவிடு பட்டு உலைய - (இவ்வோசைமிகுதிகளால் கேட்பவர்) காதுகள் செவிடாகி வருந்தும்படி, இப்படி படை புறப்பட - இவ்வாறு (பாண்டவர்) சேனை புறப்பட்டதனால், உலகம் கலகம் உற்றது - உலக முழுவதுங் குழப்பமடைந்தது; (எ - று.)

உலகத்திலுள்ளவர் காது செவிடாகிக் கலங்கினர் என்பதாம். வலம் - உள் சுழிந்துள்ளது. 'முழக்கின' முதல் 'அரற்றின' ஈறாக உள்ள ஒருபொருள்மேல்நின்ற பலசொற்கள் அடுத்து வந்ததனால், பொருட்பின்வருநிலையணி: "முன்வருஞ் சொல்லும்பொருளும்

பலவயின், பின்வருமென்னிற் பின்வருகிலையே" என்றுர் தண்டிய லங்காரத்தும். கிணை - மருதப்பறை; துடி - குறிஞ்சிப்பறை: பல வகை நிலத்தினின்றும் படைகள் திரண்டு வந்ததனால், பலநிலப் பறைகளும் இவற்றிற்கு உரியனவாம். துணை - துணையுள்ள கரு விக்கு ஆகுபெயர். (376)

16.—இது – இங்ஙனம் அணிவகுக்கப்பட்டுப் போருக்குச் சென்றுநின்ற பாண்டவர்சேனைத்தொகையின் தோற்றத்தை வருணிப்பது.

செங்கண்மாலுயிர்தருமன்மார்புசிவேதனனனமிருபுயம்
வெங்கண்வீமனும்விசயனுந்திறல்வின்மருத்துவர்மைந்தர்தாள்
அங்கண்மாமுடியரசர்மற்றுளவவயவாதிகளாகவே
தங்கள்பூமியிலானபோதொருவடிவமொத்ததுதானையே.

(இ - ள்.) செம் கண் மால் - சிவந்த திருக்கண்களையுடைய கண்ணபிரான், உயிர் - உயிராகவும், தருமன் - தருமபுத்திரன், மார்பு - மார்பாகவும், சிவேதன் - சுவேதன், ஆனனம் - முகமாகவும், வெம் கண் வீமனும் விசயனும்-(பகைவர்க்குக்) கொடிய தன்மையையுடைய வீமசேனனும் அருச்சுனனும், இரு புயம் - இரண்டு தோள்களாகவும், திறல் வில் மருத்துவர் மைந்தர் - வலிமையையுடைய வில்லையுடைய அசுவினி தேவர்களது குமாரர்களான நகுல சகதேவர்கள், தாள் - (இரண்டு) கால்களாகவும், அம் கண் மா முடி அரசர் - அழகிய தன்மையையுஞ் சிறந்த கிரீடத்தையு முடைய மற்றையரசர்கள், மற்று உள அவயவ ஆதிகள் ஆக - இன்னுமுள்ள (வேறு) உறுப்புக்கள் முதலியவையாக, தானை - அந்தச் சேனை, தங்கள் பூமியில் ஆனபோது - தங்களது [பாண்டவரது] இராச்சியமான குருக்ஷேத்திரத்திற் சேர்ந்தபொழுது, ஒரு வடிவம் ஒத்தது - ஒரு ரூபத்தையொத்திருந்தது; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. சேனையின் தோற்றத்தை ஒரு புருஷரூபமாகக் கற்பித்துக் கூறியவாறு. உயிர் உடம்பிலிருந்து அதனைக் கொண்டு தொழில் நடத்துதல்போலப் பரமாத்மா எல்லாச் சீவாத்மாக்களிலும் உள்ளிருந்து அவற்றைக் கொண்டு தொழில் நடத்துதலால் 'செங்கண்மால்உயிர்' என்றும், வீரர்க்கு எல்லாவுறுப்பினும் மார்பு சிறந்து முற்படவிளங்குமாறுபோலத் தருமன் எல்லோரினுஞ் சிறந்து முற்பட விளங்குதலால் 'தருமன் மார்பு' என்றும், முகம் முக்கிய அவயவமாய் முன் விளங்குதல்போலச் சுவேதன் சேனைதிபதியாய்ச் சேனைமுகத்தில் நின்று விளங்குதலால் 'சிவேதன் ஆனனம்' என்றும், தமது வலிமையாற் பகைதானைத்து வெற்றிதர வல்ல தோள்கள்போல வீமார்ச்சுனர் தமது திறமையாற் சத்துருசங்காரஞ் செய்து வெற்றிவிளைப்பவராதலால் 'வெங்கண் வீமனும் விசயனுமிரு புயம்' என்றும், கால்கள் தாழ்ந்த வுறுப்புக்களாய்த் தம்மையுடையவன் நினைத்தவிடஞ் செல்லுதற்கேற்ற கருவியாயிருத்தல்போல நகுல சகதேவர் இளையவர்களாய்த் தருமன் முதலிய மூத்தவர் மூவரும் விரும்பினபடி தொழில் செய்பவராதலால் 'திறல்வில்

மருத்துவர் மைந்தர்தாள்' என்றும், தேகத்தில் பிற உறுப்புக்களெல்லாம் ஏற்றபடி உதவுதல்போலப் போரிற் படைத்துணையாக வந்த அரசரெல்லாம் சமயோசிதமாகத் தொழில் செய்தலால் 'அங்கண்மா முடியரசர் மற்றுள வவயவாதிகளாக' என்றும் உருவகப்படுத்தினர், முதல் மூன்றடிகளிற் கூறிய இவ்வுருவகம் ஈற்றடியிலுள்ள தற்குறிப் பேற்றத்திற்கு அங்கமாய்க்கலந்து வந்ததனால், உறுப்புறுப்பிக்கலவையணி; உருவகத்தை விளக்கும்'ஆக' என்னும் உருபைப் பிறவிடத்தும் எடுத்துக் கூட்டுக. மார்பு என்பது - இடவாகுபெயராய் நெஞ்சைக் குறிப்பதெனக் கொண்டால், புறத்துறுப்பாகிய முகம் கை கால் முதலியன வெல்லாந் தொழில் செய்தற்கு அகத்துறுப்பாகிய நெஞ்சின் நினைப்பே காரணமாதல் போல, மற்றையோர் தொழில் செய்தற்கெல்லாம் பிரதானனான யுதிட்டிரனது கருத்தே காரணமாதலால், 'தருமன் மார்பு' என்றாரென்னலாம். தறுகண் என்பது போல, வெங்கண் என்பதும் அஞ்சாமையைக் குறிக்கும்; இனி, பகைவர்க்குப் பயங்கரமான கண்களையுடைய என்றுமாம். மருத்துவர் - மருந்தையுடையவர்; மருந்தின் தன்மையை அறிந்து வியாதிக்கு ஏற்றபடி தரவல்லவரென வைத்தியர்க்கு இது ஏதுப்பெயர்; மருந்து என்னும் மென்றொடர்ப்பகுதி வன்றொடராய், (சிறுபான்மை) உயிர்வர உகரம் கெடாது வகரவுடம்படுமெய் பெற்று நின்றது. அசுவினி தேவர் தேவ வைத்தியராதலால், 'மருத்துவர்' எனப்பட்டார். அங்கண் - அவ்விடத்திலுள்ள எனினுமாம். மற்றுள என்பதை அரசரோடுங் கூட்டுக. தங்கள் பூமி-தங்களுக்கு உரிய போர்க்களமுமாம். 'விண்மருத்துவர்' என்றும் 'அவயவத்திரளாகவே' என்றும் பாடம். (377)

வேறு.

17.—துரியோதனன் வீடுமனுக்குச் சில கூறுதல்.

இங்கிவர்வயப்படைகுறித்தகுருபூமியிடையிவ்வகையெழுந்தினிமேல், அங்கவர்சயப்படையெழுச்சியுரைசெய்குவமருந்திதிமயக்கி விரையக், கங்குலினழைத்துரக கன்னிமகனிப்புகல்களப்பலிகொடுத்தனரெனச், செங்கணரவத்துவசமீளியு முணர்ந்துதனசேனைமுதல்வற் குரைசெய்வான்.

(இ - ள்.) இங்கு - இந்தப்பக்கத்தில், இவர் - இப்பாண்டவரது, வயம்படை - வெற்றியைத்தரவல்ல சேனை, குறித்த குரு பூமியிடை - (போர்செய்யும் இடமாக இருதிறத்தாரும்) குறித்த குருக்ஷேத்திரத்திலே, இ வகை எழுந்தது - இவ்வாறு (போருக்குச்) சித்தமாய் நின்றது; இனிமேல்—, அங்கு - அந்தப் பக்கத்தில், அவர் - அத்துரியோதனனியாது, சயம் படை - வெற்றியைத் தரவல்ல சேனை, எழுச்சி-(போருக்கு) எழுந்த தன்மையை, உரைசெய்குவம் - கூறுவோம்; அரு திதி மயக்கி - (மாற்றற்கு) அரிய திதியை மாற்றி [சதுர்த்தசியை அமாவாசையாக்கி], விரைய - விரைவாக [தம்மினும் முற்பட என்றபடி], உரககன்னி மகனை - நாககன்னிகை குமாரனான இராவானை, கங்குலின் அழைத்து - இரவிலே கூப்பிட்டு, புகல் களம்

பலி கொடுத்தனர் - (சிறப்பித்துக்) கூறப்படுகிற போர்க்களத்துக் குரிய பலியாகக்கொடுத்துவிட்டார்கள், (பாண்டவர்கள்), என - என்று, செம் கண் அரவம் துவ்சம் மீளியும் உணர்ந்து - (கோபத் தாற்) சிவந்த கண்களையுடைய பாம்புக்கொடியையுடைய் வீரனை துரியோதனனும் அறிந்து, தன் சேனை முதல்வற்கு உரை செய் வான் - தன்னுடைய சேனாதிபதியான வீடுமனுக்குக் கூறுபவனானன்; (எ - று.)—அதனை மேற்கவியிற் காண்க.

வயப்படையென்றும், சயப்படையென்றும் கவியிரண்டையும் பட்சபாதமின்றிக் கூறினர். வய எனப் பிரித்தால், வலிமையென்று பொருள் படும் உரிச்சொல்லாம்; "வயவலியாகும்" என்றார் தொல் காப்பியனர். இப்பாட்டில் 'உரைசெய்குவம்' என்பதுவரையில் (கதா சம்பந்தமில்லாத) கவிக்கூற்று. கண்சிவத்தல் - கோபக்குறி. மீளி - வலிமையிற் சிறந்தவன்; ஆண்பாற் சிறப்புப்பெயர். முதல்வன் - முதன்மையுடையவன், முதல்வற்கு உரைசெய்வான் - நான்காமுருபு, கொடைப்பொருளின் பாற்படும்.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் பதினெட்டுக்கவிகள் பெரும்பாலும் முதல் ஐந்துசீர்கள் விளங்காய்ச்சீர்களும், ஆருஞ்சீர் தேமாச்சீரும், ஏழாஞ்சீர் புளிமாச்சீரு மாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (378)

18.—தனது சேனைவீரரை நால்வகைத் தேர்வீரராகப் பிரிக்கும்படி வீடுமனுக்குத் துரியோதனன் கூறுதல்.

கொதிகொள்சினநெஞ்சின்வலியின்றியவரஞ்சுகொடுத்தனர் களப்பலிநமக், கெதிரொருவர்நிற்குமவரில்லையெனும்வீரநிலையானறிவ னீயறிவையே, அதிரதர்கண்மாவிரதர்சமரதர்களர்த்தரதராகநம்மனிகி னியின்மா, மதுகைமுடிமன்னரைவகுத்தெழுகவென்றனன் மனத்தசை விலாதவலியோன்.

(இ - ள்.) 'கொதி கொள் சினம் - பொங்குதலைக்கொண்ட கோபத்தையுடைய, நெஞ்சின் - மனத்திலே, வலி இன்றி - தைரிய வுறுதி யில்லாமல், அவர் - அப்பாண்டவர்கள், அஞ்சுபு - (நமக்குப்) பயந்து, களம் பலி கொடுத்தனர் - (நமக்குமுன்) போர்க்களத்துக் குரிய பலியைக் கொடுத்திட்டார்கள்; நமக்கு எதிர் ஒருவர் நிற்குமவர் இல்லை எனும் வீரம் நிலை - நமக்கு எதிராக நிற்குந்தன்மையர் ஒருத் தருமில்லையென்கிற பராக்கிரமத்தன்மையை, யான அறிவன் நீ அறி வையே - நான் அறிவேன், நீயும் அறிவாயன்றே? (ஆதலின், இப் பொழுது), நம் அனீகினியில் - நமது சேனையிலுள்ள, மா மதுகை முடிமன்னரை - மிக்கவலிமையையுடைய கிரீடாதிபதிகளான அரசர் களை, அதிரதர்கள் மாதிரதர் சமரதர்கள் அர்த்தரதர் ஆக - அதி ரதரும் மகாரதரும் சமரதரும் அர்த்தரதருமாக, வகுத்து - அணி வகுத்து, எழுக - (போருக்குப்) புறப்படுவாயாக' என றனன்-என்று (வீடுமனைநோக்கிக்) கூறினன், மனத்து அசைவு இலாத வலியோன்- மனத்திலே தளர்ச்சியில்லாத உறுதியையுடைய துரியோதனன்;

'களப்பலி கொடாமலே சேனைகளை வகுத்துப் போர்க்குஎழுக' என்றனன் துரியோதனனென்க. கொதி - முதனிலைத்தொழிற் பெயர். நெஞ்சின் வலி, மனத்து வலி - மனோபலம். அஞ்சுபு - செய்புஎன்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். நமக்கு என்பதை மத்திமதீபமாக அஞ்சுபுஎன்பதனோடும் கூட்டுக. ஒருவர் என்பதன் இறுதியில் இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. நம் - முன்னிலையை உளப்படுத்திய தன்மைப்பன்மை: வீடுமனைக் கூட்டும். அசைவு - சலனம்; கலக்கமென்றபடி. அகிகி - அகிகங் களையுடையதென்று பொருள்; அகிகம் - குதிரை முதலியவற்றின் கூட்டம். (379)

19.—இதுவும், மேற்கவியும் குளகம்: வீடுமன் அரசரைப் பிரிக்கக் கர்ணன் மனஸ்தாபப்படுதல்.

ஆனதெனவீடுமனுமதிரதரின்மிக்கதனுவாசிரியனும்புதல்வனுந் தானுமுயர்பூரிசரவாவுமிவர்சோமவரதத்தபகதத்தர்கள்வழா மானமிகுதுன்மருடனற்றலிவர்மாரதரில்வன்கிருதபற்பவரசன் ஞானகிருபன்சகுனிசல்லியசயத்திரதர்நன்சமரதத்தலிவரே.

(இ - ள்.) (இவ்வாறு கூறின துரியோதனன் வார்த்தையைக் கேட்டவுடனே), வீடுமனும் - பீஷ்மனும், ஆனது என - (அணி வகுப்பு இப்பொழுதே) முடிந்த தென்று கூறி, மிக்க தனு ஆசிரி யனும் - பாண்டவ துரியோதனரியர்க்குச் சிறந்த வில்வித்தையைப் போதித்த ஆசாரியனான துரோணனும், புதல்வனும் - (அவனது) குமாரனான அசுவத்தாமனும், தானும் - (வீடுமனாகிய) தானும், உயர் பூரிசரவாவும் - சிறந்த பூரிசிரவஸ் என்பவனும், இவர் - (ஆகிய) இவர்கள், அதிரதரில் (நல் தலிவர்) - அதிரதர்களில் நல்ல சிரேஷ்டர் கள்; வர சோமதத்த பகதத்தர்கள் - சிறந்த சோமதத்தனும் பகதத் தனும், வழா மானம் மிகு துன்மருடன் - (போரில்) தவருத மானம் மிகுந்த துர்மர்ஷணனென்பவனும் (ஆகிய இவர்), மா ரதரில் நல் தலிவர் - மகாரதர்களில் சிறந்த சிரேஷ்டர்கள்; வல் கிருதபற்ப அர சன் - வலிய கிருதவர்மராசனும், ஞானகிருபன் - நல்லறிவுடைய கிருபாசாரியனும், சகுனி - சகுனியும், சல்லியன் சயத்திரதன் - சல்லியனும் ஜயத்ரதனும், (ஆகிய இவர்), நல் சமரதர் தலிவர் - சிறந்த சமரத சிரேஷ்டர்கள்; (எ - று.)

இப்பாட்டில் 'வீடுமனும்' என்ற எழுவாயும், 'ஆனதென' என்ற வினையெச்சமும், அடுத்த கவியில் 'என இம்முறை வகுத்து உரை செய்தான்' என்றதனோடு முடியும்.

ஆனது - விரைவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல் லப்பட்ட காலவழுவமைதி; துரிதத்தில்முடியு மென்றவாறு. இனி, ஆய்விட்ட தென்று கண்டோர் கூறும்படி யென்றும் உரைக்கலாம். வரசோமதத்த பகதத்தரென மாறுக. சோமதத்த பகதத்தர் - பலர் பாலால் முடிந்த உயர்திணை யும்மைத்தொகை. துர்மர்ஷணன் என்ற சொல்லுக்கு - (பகைவராற்) பொறுக்க வொண்ணாதவ னென்று பொருள். கிருதபற்பன் - துரியோதனன் கண்ணனைப் படைத்

துணை யழைக்கப்போனபொழுது, அவ்வெம்பிரானுல் அவனுக்குத் துணையாகக் கொடுக்கப்பட்ட யாதவ சேனைக்குத் தலைவனுக அனுப்பப்பட்டவன்; யதுகுலத்தில் இருதிகனென்பவனது குமாரன். ஜயத்ரதன் - சிந்து தேசத் தரசன்; ஆதலால், ஸைந்தவனென்றும் இவனுக்கு ஒரு பெயர் வழங்கும்: இவன் - துரியோதனுதியருடன் பிறந்த வளான துச்சளையின் கணவன். "துன்மருடணன்றலைவர்" என்றும் பாடம். (380)

20. அங்கர்பெருமான்விருடசேனனரசற்குரியவனுசரிவரர்த்தரதரிற், றுங்கவயவீரரெனவிம்முறைவகுத்துரகதுவசனுடனேயுரைசெய்தான், கங்கைமகனேடுபலகூறிநனிசீறியுயிர்காய்வனெனவாளுருவினீ, பொங்கமரின்மாளுமளவும்படைதொடேனெனமொழிந்தனனிசாரிபுதல்வன்.

(இ - ள்.) அங்கர் பெருமான் - அங்க தேசத்தார்க்கு அரசனை கர்ணனும், விருடசேனன் - விருஷஸேநனும், அரசற்கு உரிய அனுசர் - ராஜராஜனை துரியோதனனுக்கு உரிய தம்பிமாரான துச்சாதனன் முதலிய தொண்ணூற்றொன்பதின்மரும், இவர் - (ஆகிய) இவர்கள், அர்த்தரதரில் துங்க வயவீரர் - அர்த்தரதர்களில் சிறந்த வலிமையையுடைய வீரர்கள், என - என்று, இ முறை வகுத்து - இவ்வாறு பிரித்து, உரகதுவசனுடனே உரைசெய்தான் - பாம்புக்கொடியனை துரியோதனனேடு (வீடுமன்) கூறினன்; (இது கேட்டவளவில்), நிசாரி புதல்வன் - சூரியகுமாரனை கர்ணன், நனி சீறி - மிகக் கோபித்து, கங்கை மகனேடு பல கூறி - கங்கையின் புத்திரனை வீடுமனேடு பல வார்த்தைகள் சொல்லி, உயிர் காய்வன் என வாள் உருவி - (உன்) உயிரை மாய்ப்பேனென்று (வீரவாதங் கூறித் தன்) வாளாயுதத்தை (உறையினின்று) எடுத்து, (முடிவில்), 'பொங்கு அமரில் நீ மாளும் அளவும் படைதொடேன்' என மொழிந்தனன்-'கொடிய யுத்தத்தில் நீ இறக்கும் வரையிலும் நான் ஆயுதந் தொடவும்மாட்டேன் [வந்து போர்செய்யேன்]' என்று சபத வார்த்தை கூறினன்; (எ - று.)

வீடுமன் கர்ணனை அதிரத மகாரத சமரதரில் எவ்வகுப்பிலும் சேர்க்காமல் ஈற்றதான அர்த்தரதரினத்திற் சேர்க்கவே, அவன் மிகக்கோபங் கொண்டு பல நிந்தனைகளும் வீரவாதங்களும் கூறி வீடுமனைக் கொல்ல வாளுருவ, அதுகண்ட துரியோதனன் முதலியோர் விலக்கினவளவிலே அவன் 'போரில் வீடுமன் இறக்குமளவும் நான் வந்து போர் செய்வதில்லை' என்று சபதங்கூறிப் போயினன் என்றதாம்.

கர்ணனை அர்த்தரதனுக வைத்ததற்குக் காரணம் - தன்னுடன் பிறந்தனவும் அழியா வலிமை தருவனவுமான கவச குண்டலங்களை இந்திரனுக்குத் தானஞ் செய்து இழந்ததும், கற்ற வில்வித்தையெல்லாம் தக்க சமயத்திலே உதவாமல் மறந்து போய்விடும்படி குருவாகிய பரசுராமனுற் சபிக்கப்பட்டதும், தன்னுடம்பு பகைவரம் பாற் சிதைபடவும் தேர்ச்சக்கரம் போர்க்களத்தில் அழுந்தி விடவும் ஓர்தணனுற் சாபம் பெற்றதும், இதற்கு முன் பல போர்களிற் செருக்குக்கொண்டு சென்று எதிர்த்து ஒன்றிலேனும் வெற்றி

பெரிது தோற்று மீண்டதும் முதலியன வென வடமொழி வியாச பாரதத்தால் விளங்குகிறது. துரியோதனன் ராசராசனுய் அரசாள் கிறவனுதலால், அவனேப் படைவகுப்பில் எந்தவகையிலுஞ் சேர்க்க வில்லே; தருமபுத்திரனும் மகாராசனேயாகிலும் அவனே மாத்திரம் மகாரதனுகக் கணக்கிட்டது, அக்காலத்தில் அவன் அரசாட்சி யின்றி கூடத்திரிய வீரனுக மாத்திரம் இருத்தலாலெனக் காண்க. கீர்த்தி சேனனத்தலேவனுக்கே செல்லுதல் இயல்பாதலால். வீடுமன் சேனுபதியாய் வாழ்ந்திருக்கையில் தான் யுத்தஞ் செய்து அருச்சு ணியோரைச் சயித்தால் அந்தப் புகழ் தனக்குவராமல் வீடும னுக்குச் சென்றிடுமே என்று கருதி கர்ணன் வீடுமனுள்ளவரையில் 'நான் போர் செய்யேன்' எனருன். துங்கவயவீரர் - அக்கிரகண் ணியர்.

பரமசிவனது நெற்றிக் கண்ணின் நெருப்புக்கு இரையாகி எரி பட்ட மன்மதனது அங்கம் [உடம்பு] விழுந்த இடத்திற்கு அக்கார ணத்தால் அங்கதேச மென்று பெயர். பெருமான - பெருமையுடை யவன். விருடசேனன் - கர்ணனது புத்திரருள் மூத்தவன். அநுஜர் - பின் பிறந்தவரென்று பொருள். நிசாரி - இரவிற்குப் பகைவனென்று பொருள். இருளே யொழிப்பவனென்று கருத்து. இது உயர்திணேப் பெயராதலால், இதன் முன் வலிமிகவில்லே. (381)

21.—துரியோதனன் பெருஞ்சேனேயோடு போர்க்களத்துக்குச் செல்லுதல்.

யாணமிசைதேரின்மிசையிவுளிமிசைபோம்வயவரேதிசிலேவேல் வயவரிற், ருணகளொராறுமுகிலேழுமெனவண்பணே தழங்குதிசைசூழ வரவும், ஏணநரபாலரணிதோறும்வெயில்வாளிரவியென்னவிருபாலும் வரவுஞ், சேணமுதனுதனெடுமெய்த்துணேவர்தங்களொடுசென்றன னிராசதிலகன்.

(இ - ள்.) யாணமிசை தேரின்மிசை இவுளிமிசைபோம் வய வர் - யாணைகளின் மேலும் தேர்களின் மேலும் குதிரைகளின் மேலும் (தனித்தனி) ஏறிச் செல்லும் வீரரும், ஏதி சிலே வேல் வயவரின் - வாளேயும் வில்லேயும் வேலேயும் (தனித்தனி) ஏந்திய வீரர்களும் (ஆகிய) இவர்களால் (ஆகிய), தாணகள் ஓர் ஆறும் - அறுவகைச் சேனைகளும், முகில் ஏழும் என வண் பணே தழங்கு திசை - ஸப்த மேகங்கள்போலப் பெரியபேரிகைகள் முழங்கப்பெற்ற திக்குக்களி லெல்லாம், சூழவரவும் - சுற்றிலும் வரவும், ஏண நரபாலர் - மற்றை அரசர்கள், அணிதோறும் - படைவகுப்பு வரிசைகளிலெல்லாம், வெயில்வாள் இரவி என்ன - உஷ்ணகிரணமுடைய சூரியன்போல, (மிக்கவிளக்கமுற்று), இருபாலும் வரவும் - இரண்டு பக்கத்திலும் வரவும், சேண முதல் நாதனெடு - சேனைக்குப பிரதானுதிபதியான வீடுமனுடனும், மெய்துணேவர் தங்களொடு-(தன்னிடத்து)உண்மை யன்புள்ள (தன்) தம்பிமார்களுடனும், இராச திலகன் - அரசரிற் சிறந்தவனன துரியோதனன், சென்றனன - (போர்க்களத்துக்குப்) போயினன்; (எ - று.)

வீடுமனுக்கு உட்பட்டுத் துரோணன் இருபன் பகதத்தன்முதலாக உதவிச் சேனைத்தலைவரும் உளராதலால், வீடுமனை 'சேனை முதல் நாதன்' என்றது. திலகம் நெற்றிக்கு அழகு செய்தல்போல, இவன் அரசர்க்கெல்லாம் அழகு செய்து சிறந்து விளங்குபவனென்பார்,'இராசதிலகன்' என்றார். "ஒத்தவில் வேல் வாள் யானை யுயர்பரி தேரொடாறே" என்ற நிகண்டையுங் காண்க. வயவர், வய அல்லது வயம் - பகுதி: வலிமை அல்லது வெற்றி என்று பொருள், ஏதி - ஆயுதப்பொதுப்பெயர்; வாளை உணர்த்திற்று. நரபாலர் - மனிதரைக் காப்பவர்: வாள் - ஒளியை உணர்த்தும்போது, உரிச்சொல்; வெயில் வாள் - வெயிலாகிய ஒளியென இருபெயரொட்டுப் பண்புத் தொகை. (382)

22.—இதுமுதல் நான்கு கவிகளால், முறையே துரியோதனனது சதுரங்க சேனையை வருணிக்கின்றார்: அவற்றுள் இது – கஜவருணனை.

பொழியுமுகில்பற்றியெழுமிளவெயிலெறித்தனையபுகரனபனைக்கை கொடுகார், கிழியும்வகையெற்றிமிசையொளிருநவரத்நகணகிரணவுடு வைக்கவர்வபோர், விழிவழிநெருப்புருகிவழியநுதலிற்றிலகம்வெயில் வழியமுற்றுநிலவே,வழியுமதியத்தின்வகிர்நிகர்பணிமருப்பினிடைமகரி கைதரித்தமதமா.

(இ - ள்.) (அச்சேனையில்), மதம் மா - மதயானைகள்,—பொழியும் முகில் பற்றி எழும் இளவெயில் எறித்து அனைய - மழைபொழிகிற காளமேகத்தைத் தழுவித் தோன்றுகிற இளவெயில் விளங்கி ஞற்போன்ற, புகரன - செம்புள்ளிகளையுடையன; பனை கை கொடு - பனைமரம் போன்ற (தமது) துதிக்கையால், கார் கிழியும் வகை எற்றி - மேகங்கள் கிழிபடும்படிமோதி, மிலைச ஒளிரும் - மேலே (ஆகாயத்திலே) விளங்குகின்ற, நவரத்நகண கிரண உடுவை - ஒன்பது வகை இரத்தினங்களின் இனங்கள் போன்ற (பல்வேறு நிறத்தனவான) ஒளியையுடைய நட்சத்திரங்களை, கவர்வ - (துதிக்கையாற்) பறிப்பன; போர் - யுத்தஞ்செய்கையில், விழி வழி - கண்களின் வழியாக, நெருப்பு உருகி வழிய - கோபத்தீ வெளிப்பட்டுப் பெருகவும், நுதலில் - நெற்றியிலே, திலகம் - சிந்தூரத்திலகம், வெயில் வழிய - சூரிய காந்தி போன்ற காந்தி வீசவும், முற்றும் நிலவே வழியும் மதியத்தின் வகிர்நிகர் பணை மருப்பினிடை - முழுவதும் நிலாப் பொழிகிற சந்திரனது துண்டங்களைப்போன்ற பருத்த தந்தங்களிலே, மகரிகை தரித்த - கிம்புரியென்னும் பூணை அணிந்துள்ளன; (எ-று.) —இதுமுதல் 29-ஆம் பாடல் வரையிலும் சந்தக்குழிப்புக்கு ஒத்து வருதலால், சந்தவிருத்தமாம்.

உவமையணியையும் உயர்வுநவிற்சியணியையும் அங்கமாகக் கொண்டு வந்த தன்மைநவிற்சியணி. மேகம் - யானைக்கும், இளவெயில் - செங்நிறப்புள்ளிக்கும் உவமை; கருமை பெருமைகளாலும், ஆரவாரத்தாலும், மதமழை பொழிதலாலும் விரைந்து செல்லுதலாலும், யானைக்கு மேகம் உவமையாம். இளவெயில்-பாலசூரியகிர

ணம். பலமரம் - துதிக்கைக்குத் திரண்டு உருண்டு நீண்ட வடிவத்தால் உவமம். 'பலைக்கை' என்ற பாடத்துக்கு - பருத்த கை யென்க. 'மிசை' என்பதை மத்திமதீபமாக, 'எற்றி' என்பதனோடும் இயைக்கலாம்; "நாணிரைத்தநேக தாரகா கணமா நவமணியுடனவ விதங்கொள், கோணிரைத்து" என இந்நூற் சிறப்புப்பாயிரத்தும் நட்சத்திரங்கள் நவரத்தினங்களையொக்கு மெனக் கூறியவாறு காண்க. கோபமிகுதியாற் கண்மிகச் சிவந்து கொடுமையாகத் தோன்றுதலை 'விழிவழி நெருப்புருகிவழிய' என்றது. மதியத்தின் வகிர் [பிறைச்சந்திரன்] - தந்தத்துக்கு, வெண்மை யொளிகளாலும் வளைவாலும் ஒப்பாம், மகரிகை - யானைக் கொம்பிற்பூண்; சுறு மீனின் திறந்த வாய்வடிவமாகச் செய்யப்படுவது; மகரமென்பதனடி யாகப் பிறந்த காரணப்பெயர்; மகரம் - சுறுமீன். இனி, மருப்பினிடை மகரிகை தரித்த-இரண்டு தந்தங்களின் நடுவிலே (துதிக்கைமேலே) மகரிகாபத்திரத்தைத் தரித்தனவென்றும் பொருள் கொள்ளலாம். அது - சுறுமீன் வடிவமாக எழுதப்படும் ரேகை, 'பலைக்கைகொடு' எனபதை 'உடுவைக்கவர்வ' என்பதனோடுங் கூட்டுக. (383)

23.—இது – அசுவ வருணனை.

யவனசவனத்தினிடைவளர் வனகதத்தினெடுமிரவிபுரவிக்குநிகர்வ, புவனதலமுற்றுமுடன்வலையவொரிமைப்பொழுதில் வருவனபுறப்புணரி யைக், கவனமொடெழுப்பிவிடுதுகள்கொடுதுகிர்ப்பவிரைகதிகளின் விதத்தைமொழியிற்,பவனகதியைத்தொடர்வபரிமளவுயிர்ப்புடையபல வகைநிறத்தபரிமா.

(இந்நூலாசிரியர் இங்குத் தேருக்கு முன் குதிரையை நிறுத்தினது, சேனையின் அங்கங்கள் நான்கனுள் தான் ஒன்றுக இருப்பது மாத்திரமே யன்றி மற்றேரங்கமாகிய நிலைத்திணைப் பொருளான தேரை நடத்துவதாயு மிருக்குஞ் சிறப்புப்பற்றி யெனக்காண்க.)

(இ - ள்.) பரிமா-குதிரைகள்,—யவனம் சம் வனத்தின் இடை வளர்வன - யவனதேசத்தி லுண்டான காடுகளின் இடையிலே வளருந்தன்மையன; கதத்தினெடும்-(போரில்) உக்கிரமான தன்மை யோடு (கூடி), இரவி புரவிக்கு நிகர்வ - சூரியனது தேர்க்குதிரைக்கு ஒப்பாவன: ஓர் இமைபொழுதில்-ஒரு மாத்திரைப்பொழுதினுள்ளே, புவன தலம் முற்றும் - பூலோகத்தினிடம் முழுவதும், உடன் வலைய வருவன - விசைவிற் சுற்றிவருந் தன்மையன: கவனமொடு எழுப்பி விடு துகள்கொடு - (தமது) நடைவேகத்தால் மேலே கிளப்பி விடப் பட்ட புழுதிகளால், புறம் புணரியை - இவ்வண்டத்துக்கு வெளியி லுள்ள பெரும்புறக்கடலையும், துகிர்ப்ப - தூர்க்குந் தன்மையன; விரைகதிகளின் விதத்தைமொழியின் - வேகமான நடைகளின் தன் மையைச் சொல்லப்புக்கால், பவனம் கதியை தொடர்வ - காற்றின் சஞ்சாரத்தைப் பின்தொடருந் தன்மையன; பரிமளம் உயிர்ப்பு உடைய - நல்மணத்தையுடைய சுவாசத்தையுடையன; பலவகை நிறத்த - அநேகவித வர்ண முடையன; (எ - று.) 'பலமலர் நிறத்த' என்றும் பாடம்.

எப்பொழுதும் வேகமாகவே சென்று கொண்டிருந்தாலுஞ் சிறிதும் இளைப்புறுத தன்மையில் இரவி புரவி, உவமை. உவமையணியும் உயர்வுநவிறசியணியும் விரவியது. கதத்திலெடும் - வலிமையோடும் என்றுமாம்: இமைப்பொழுது - இயற்கையில் மனிதன் ஒருகால் கண்ணிமைகளை மூடித்திறக்குங் காலம். அண்டத்துக்கு உள்ளே யிருக்கும் ஏழு கடல்களன்றி அண்டத்துக்கு வெளியே எல்லா அண்டங்களுக்கும் ஆதாரமாக இருப்பதொரு பெரு வெள்ளத்துக்குப் பெரும் புறக்கடலென்று பெயர்; புணரி - (நதிகளோடு) புணர்வது எனக் காரணப்பெயர்; புணர்தல் - கலத்தல். நதிகளாகிய பெண்களுக்குக் கடலைக் கொழுநனென்றல், கவிமரபு. துஞ்ர்ப்ப - தூர்ப்ப என்பதன் மரூஉ; தனித்தனி ஒவ்வொரு நிறமுடையனவும், ஒவ்வொன்றே பலநிறங் கலந்துள்ளனவும் ஆகிய எல்லாம் அடங்க, 'பல வகை நிறத்த' என்றார். இனி யவன, சவனத்தினிடை வளர்வன என்பதற்கு - யவனக்குதிரைகளுள்ளும் ஜவனக்குதிரைகளுள்ளும் வளர்ந்த தோற்றமுடையனவென்றும் உரைக்கலாம்; யவநம் - யவநதேசத்துக் குதிரை: ஜவநம் - ஜவத்தால் மிக்கது; ஜவம் - வேகம். (384)

24.—இது இரத வருணனை.

நடுநிலமுரைக்கிலுயரவனிதலமொக்குமிசை நவமணியழுத்தியனவா, னுடுநிகரமொக்குமுருளுருளைகளருக்கனுடனுடுபதியையொக்குமகுடங், கொடிமுடிகளொக்குமிவுளிகடிசையனைத்துமெறிகுரைபவனமொக்குமலடவே, யிடுதுகினிரைத்தகொடிசொரியருவியொக்குமெழுகுலகிரிகளொக்குமிரதம்.

(இ - ள்.) (அங்குள்ளதேர்களின்), நடு நிலம் - நடுவிடத்தை, உரைக்கில் - கூறத்தொடங்கினால், உயர் அவனி தலம் ஒக்கும் - (அது) உயர்ந்த பூமியின் பரப்பை ஒத்திருக்கும்; மிசை அழுத்தியன நவ மணி - மேலே பதித்துள்ள ஒன்பது வகை இரத்தினங்கள், வான் உடு நிகரம் ஒக்கும் - ஆகாயத்திற்பொருந்திய நட்சத்திரங்களின் கூட்டத்தைப்போலும்; உருள் உருளைகள் - சுழலுந்தன்மையனவான சக்கரங்கள், அருக்கனுடன் உடுபதியை ஒக்கும் - சூரியமண்டலத்தோடு சந்திரமண்டலத்தையும் போலும்; மகுடம் - சிகரங்கள், கொடி முடிகள் ஒக்கும் - மலைச்சிகரங்களைப்போலும்; இவுளிகள் - (பூட்டிய) குதிரைகள், திசை அனைத்தும் ஏறி - எல்லாத்திக்குகளிலும் வீசுகிற, குரை பவனம் - ஒலிக்கின்ற காற்றை, ஒக்கும்—; அடைவே இடுவரிசையாகக் கட்டப்பட்ட, துகில் நிரைத்த - சீலைகள் ஒழுங்கமையப் பெற்ற, கொடி - துவசங்கள், சொரி அருவி ஒக்கும் -(மலைச்சிகரத்தினின்று) பெருகுகிற நீர்ப் பெருக்கைப்போலும்; இரதம்-(இவற்றோடு கூடிய) தேர்கள், எழு குலகிரிகள் ஒக்கும் - ஏழு குலபருவதங்களையும் போலும்; (எ - று.)

தேர்க்குக் குலகிரி உயர்வு வலிமைகளுக்கு உவமை: உவமையணி, இக்கவியிலுள்ள 'ஒக்கும்' என்ற முற்றுக்கள் பலவற்றுள் இறுதியிலுள்ள தொன்றெழியப் பிறவற்றையெல்லாம் 'ஒப்ப' என

முற்றெச்சமாகக் கொண்டு ஏகவாக்கியமாக்கிப் பொருள் கூறினுமாம். நடுநிலம் - வீரன் ஏறி வீற்றிருக்கு மிடம். தக்ஷமகாமுனிவனது பெண்களான அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களையுஞ் சந்திரன் மணஞ்செய்து கொண்டன ஞதலால், அவனுக்கு 'உடுபதி' என்று ஒரு பெயர். (385)

25.—இது-பதாதி வருணனை.

அரவின்விடமொத்தவெரிசினமுநிலைபெற்றுடையவசலநிகரொத்த மனமும், புரவியுடனெத்தகதிவிரைவுமுருமொத்தவதிர்குரலுமெழு வொத்தபுயமு, முரவனிலமொத்தவலியுரமுமதனெத்தவொளியுருவமு மகனத்தும்விரவிப், பரவைமணலொத்தபலவணிபடவகுத்தபலபடை யுடனடக்குநடையார்.

(இ - ள்.) அரவின் விடம் ஒத்த - பாம்பின் விஷத்தைப் போன்ற [தவருது கொல்லவல்ல], எரி சினமும் - பற்றியெரியுங் கடுங்கோபமும், நிலை பெற்று உடைய - சலியாமல் (உறுதியாக) நிற்றலைப் பெற்றுள்ள, அசலம் - மலையை, நிகர் ஒத்த-சமானமாகப் பொருந்தின, மனமும் - (எதற்குஞ் சலியாத உறுதி) நெஞ்சும், புரவி யுடன ஒத்த - குதிரைகளோடு சமமான, கதி விரைவும் - நடையின் வேகமும், உரும் ஒத்த - இடிமுழக்கத்தைப்போன்ற, அதிர் குரலும்-கர்ச்சிக்கிற ஒலியும், எழு ஒத்த - தூண்களைப் போன்ற, புயமும் - தோள்களும், உரம் அனிலம் ஒத்த - வலிமையையுடைய காற்றைப் போன்ற [எதையுந் தாங்கவல்ல], வலிஉரமும் - வலிமையையுடைய மார்பும், மதன் ஒத்த - மன்மதனைப் போன்ற [மிக அழகிய], ஒளி உருவமும் - பிரகாசத்தையுடைய வடிவமும், அனைத்தும் - (ஆகிய இவை) எல்லாம், விரவி - கலந்து, பரவை மணல் ஒத்த பல அணி பட வகுத்த - கடற்கரையின் மணலைப் போன்ற [அளவிறந்த] மிகப் பல அணிகளாக வகுக்கப்பட்ட, பல படையுடன் நடக்கும் - அநேக ஆயுதங்களுடனே செல்லுகிற, நடையார்-காலாள்கள், (அச்சேனையி லிருந்தனர்; (எ - று.)

ஏற்றவினை வருவித்து முடிக்கப்பட்டது. நடையான் என்ற பாடத்துக்கு - பதாதிக்கூட்ட மெனச் சாதியைக்குறிப்பதாகக் கொண்டு, 'ஒத்த' என்பதை வினைமுற்றுக்கு யுரைக்கவுமாம். அசலம் - சலியாதது; காரணப்பெயர். உரம் வல் நிலம் ஒத்த எனப் பிரித்து - மிக்க வலிமையையுடைய நிலத்தைப்போன்ற மிக்க வலிமை யென்று உரைப்பாரு முளர். மதன் - மதனன், அல்லது மன்மதன் என்பதன் விகாரம். படையுடன் - சேனையுடன் என்றுங் கொள்ளலாம், நடையார் - நடையுடையவர்; எனவே, பதாதியாவர். உவமையணி. எழு - புயத்திற்குத் திரண்டு உருண்டுநீண்ட தன்மை யால் உவமம். (186)

26.—இது - ராஜ வருணனை.

குடைநிலவெறிக்கவிருபுறமுமசைபொற்கவரிகுளிர்நிலவெறிக்க வெறிகைப், படைவெயிலெறிக்கவணிமுடியுடன்மணிப்பணிகள்பல

வெயிலெறிக்கவுடனே, யிடையிடையெடுத்தகொடி நிரையிருளெறிக்க யெழுதுகளிருளெறிக்கவெழுபா, ரடையவொர் தினத்தின்வலம்வரு திகிரியொத்தனர்களவனிபரெனப்பலருமே.

(இ - ள்.) குடை—, நிலவு எறிக்க - சந்திரகாந்திபோன்ற ஒளியை வீசவும், இருபுறமும் அசை பொன் கவரி - இரண்டு பக்கத்திலும் வீசுகிற அழகிய சாமரமும், குளிர் நிலவு எறிக்க - குளிர்ந்த சந்திரகாந்திபோன்ற காந்தியை வீசவும், எறி கை படை - (பகைவர் மேற்) பிரயோகித்தற்கு உரிய கையிலுள்ள ஆயுதங்கள், வெயில் எறிக்க - சூரியகாந்திபோன்ற காந்தியை வீசவும், அணிமுடியுடன் மணிபணிகள் பல - அழகிய கிரீடத்தோடு இரத்தினங்கள் பதித்த பிற ஆபரணங்கள் அநேகமும், வெயில் எறிக்க-சூரிய காந்திபோன்ற காந்தியை வீசவும், உடனே - (இவற்றோடு) கூட, இடை இடை எடுத்த கொடி நிரை - நடுவிலே நடுவிலே தூக்கிப்பிடிக்கப்பட்ட துவச வரிசைகள், இருள் எறிக்க - இருளைச் செய்யவும், எழு துகள்- (சேனைகளால்) எழுப்பப்பட்ட தூளிகளும், இருள் எறிக்க - இருளைச் செய்யவும், அவனிபர்எனே பலரும்-அரசர்களெல்லோரும், எழு பார் அடைய ஓர் தினத்தின் வலம்வரு திகிரி ஒத்தனர்கள் - ஏழுதீவுகளாகிய பூமிமுழுவதையும் ஒருநாளிலே பிரதக்ஷிணமாகச் சுற்றி வருகிற காலசக்கரத்தைப் போனருர்கள்; (எ - று.)

காலம் சக்கரம்போல் மாறிமாறிச் சுற்றிவருதல்பற்றி, காலசக்கரமெனப்படும். பொற் கவரி - பொற்காம்பையுடைய சாமரமென்றுமாம்; பொன் - கருவியாகுபெயர். கவரி - சமரீயென்பதன் திரிபு; இப்பெண்மானின் பெயர், அதன் வால்மயிரினாற் செய்யப்பட்டதொரு இராசசின்னத்துக்கு இருமடியாகுபெயர். 'உடனே' என்றது, நிலவு வெயில்களுக்கும் இருளுக்கும் உள்ள மாறுபாட்டை நன்கு விளக்க வந்தது. எழு பார் - ஜம்பு, பிலட்சம், குசம், கிரௌஞ்சம், சாகம், சால்மலி, புஷ்கரம் என்பன. (387)

27.—இது - வாத்தியகோஷ வருணனை.

முழவுமுதலெற்றுவன கடிபடுபணைக்கருவி முழுமணிமுதற்கருவி பைங், குழல்முதலமைத்தபல வகைபடுதுளைக்கருவி குலவுநர நரப்பு நிரையா, லுழைமுதலெழுப்புவனவிசைபடுமிசைக்கருவி யுழையுழை யதிர்த்தவுடனே, யெழுகடல் கொதித்ததெனவெழுபுவிமறித்ததென வெழுமுகிலிடித்ததெனவே.

(இ - ள்.) முழவு முதல் - மத்தளம் முதலாக, எற்றுவன - அடிக்கப்படுவனவான, கடிபடு - ஒலி மிக்க, பணை கருவி - பறைகளாகிய தோற்கருவிகளும், முழு மணி முதல் - பெரிய அடிக்கும் மணி முதலான, கருவி - கஞ்சக்கருவிகளும், பைங்குழல் முதல் - பசுமையான வேய்ங்குழல் முதலாக, அமைத்த - ஒழுங்காகச்செய்யப்பட்ட, பல வகை படு - அநேகவகைப்பட்ட, துளை கருவி - துளையுடைக்கருவிகளும், குலம் வளை - சிறந்த சங்குகளும், நரம்புநிரையால் - நரம்புகளின் வரிசையால், உழை முதல் எழுப்புவன இசை படும் - உழை முதலாக எழுப்பப்படுகிற (ஏழுவகைச்) சுரங்கள் பொருந்தின, இசை

கருவி - சங்கீதக்கருவிகளும், உடனே - ஒன்றுக, எழு கடல் கொதித்தது என - ஏழு கடல்களும் பொங்கியது போலவும், எழு புவி மறித்தது என - ஏழு தீவுகளும் எதிர்த்தது போலவும், எழுமுகில் இடித்தது என - ஏழு மேகங்களும் இடிமுழங்கியது போலவும், உழை உழை அதிர்த்த - (அச்சேனையின்) இடந்தோறும் ஒலித்தன; (எ - று.)

இதில்-தோற்கருவி, கஞ்சக்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி என்னும் நால்வகை இசைக்கருவிகளுங் கூறப்பட்டமை காண்க. உழை முதல் எழுப்புவன இசை - உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, என்பன. நரப்புக்கருவி - யாழ் முதலியன. உழைஉழை - அடுக்கு, தொறுப்பொருளது. (388)

28.—இது-துரியோதனனது பாம்புக்கொடியின் வருணனை.

முறைமைதவறற்றகடிமுரசெழுதுபொற்றுவசமுதல்வனுயிர்மைத் துனமையால், விறலுதவுதற்குவருகரியவன்மணித்துவசமிசைகருட னிற்குமெனவோ, வெறிகொளுருமுத்துவசன்மதலிவிதலிச்சமரினிறு தியைவிளக்குமெனவோ, வறைவளியெதிர்த்துவரவெருவொடுபுறக் கிடுவதரசனுரகத்துவசமே.

(இ - ள்.) முறைமை தவறு அற்ற - நீதி தவறுதலில்லாத, கடி முரசு எழுது பொன் துவசம் முதல்வன் - ஒலிக்கின்ற பேரிகைவடி வத்தை யெழுதின அழகிய கொடியையுடைய தலைவனை யுதிஷ்டி ரனது, உயிர் மைத்துனமையால் - உயிரோடொத்த [மிக்க அன்புக் கிடமான] மைத்துன உரிமையால், விறல் உதவுதற்கு வரு - (அவ னுக்கு) வெற்றியைத் தருதற்கு வருகிற, கரியவன் - கருநிறமுடைய கண்ணபிரானது, மணி துவசம் மிசை - அழகிய கொடியின்மேலே, கருடன் நிற்கும் - (எனக்கு இயற்கைப்பகையான) கருடன் நிற்பான், எனவோ - என்று எண்ணியோ? வெறிகொள் - யுத்தாவேசத்தைக் கொண்ட, உருமு துவசன் மதலை - (எனக்குப்பகையான) இடியை யெழுதிய கொடியையுடைய இந்திரனது குமாரனான அருச்சுனன், விதலை சமரின் - (காண்பவர் கேட்பவருக்கு அச்சத்தால்) நடுக்கத் தைத்தருகிற போரிலே, இறுதியை விளக்கும் - (முன்காண்டவ தகன காலத்தில் சிறந்த பாம்புகளை அழித்ததுபோல எனக்கு) அழிவை யுண்டாக்குவான், எனவோ - என்று எண்ணியோ? வெரு வொடு - அச்சத்தோடு, அரசன் உரகம் துவசம்-துரியோதன ராச னது பாம்புக்கொடி, அறை வளி எதிர்த்து வர - வீசுகிற காற்று எதிர்முகமாய் வருகையில், புறக்கு இடுவது - பின்னுக்குச் செல் வது; (எ - று.)

துரியோதனனது தேர் மிக விரைவாகச் செல்லுகையில் வீசும் எதிர் காற்றால் அத்தேரின்மீதுள்ள பாம்புக்கொடி இயற்கையாக அசைந்து பின்னிடுதலை, அக்கொடியிலுள்ள பாம்பு சிலகாரணங் களால் அஞ்சிப் புறங்கொடுப்பதாகக் கற்பித்துக் கூறினர்; இது ஏதுத்தற்குறிப்பேற்றவணி. கரியவன் - கிருஷ்ணன். புறத்துக்கு எண்

பது புறக்கு என அத்துச்சாரியையின்றிவந்தது. 'பிறக்கிடுவது, என்ற பாடத்துக்குப் பிறகு இடுவது என்பது தன்னெற்றிரட்டிற்று என்னலாம்: இனி 'பிறக்கு' என ஒரு தனிச் சொல்லுங் கொள்ளலாம்: 'புறத்திடுவது' என்றும் பாடம். கருடனென்னும் சொல்லுக்கு - (பெரிய) சிறகுகளாற் பறப்பவனென்று பொருள். (389)

29.—இது – சேனையாலெழுப்பப்பட்ட தூளியின் வருணனை.

உயர்முறைமைதப்புமவர்குடைநிழலிலிற்றையளவுளகுறையகற்றியினிநா, னியல்புடைநெறித்தருமனெருகுடைநிழற்றவவனிடையினிலிருக்குவனெனு, வியனதிமுழுப்புனலின்முழுகிவருதற்கவனிமிசையுறநடப்பதெனவே, பயில்படைநடக்கவதன்முகடுறநிறைத்தரிய பகலையு மறைத்ததுகளே.

(இ - ள்.) 'உயர் முறைமை தப்புமவர் - சிறந்த இராசநீதி தவறுந்தன்மையுள்ள துரியோதனனுடைய, குடை நிழலில்-அரசாட்சியின்கீழே, இற்றை அளவு உள - இன்றைத்தினமளவும் (நான்) இருந்த, குறை - குற்றத்தை, அகற்றி - ஒழித்து, இனி—, நான்—, இயல்பு உடைய நெறி தருமன் - முறைமை தவறாமலுள்ள நீதிமார்க்கத்தையுடைய யுதிட்டிரன், ஒரு குடை நிழற்ற - ஒப்பற்ற அரசாட்சியைச் செய்ய, அவன் இடையினில் - அவனது குடை நிழலினிடத்திலே, இருக்குவன் - இருப்பேன்', எனு-என்று எண்ணி, அவனி-பூமியான தது, வியன் நதி முழு புனலில் முழுகிவருதற்கு - பெரிய தேவகங்கா நதியினது மிக்கநீரிலே நீராடிவரும்பொருட்டு, மிசை உற - மேலேபொருந்த [மேல்நோக்கி யென்றபடி], நடப்பது என - செல்வதுபோல, பயில்படைநடக்க - (போரைப்) பயில்கிற[பழகிய] சேனைகள் செல்லுகையில், துகள் - புழுதிகள், அதன் முகடு உற நிறைத்து - அவ்வாகாயத்தின் மேலிடத்தை அளாவ மிக்கெழுந்து, அரிய பகலையும் மறைத்த - மறைப்பதற் கருமையான சூரியனொளியையும் மறைத்து விட்டன; (எ - று.)

சேனைகள் ஒருங்கே பூமியின்மேல் நடத்தலால் மேலெழும்பின புழுதிகள் இயல்பாக ஆகாயத்தைநோக்கிச் செல்லுதலை, துரியோதனனுடைகையின் கீழ்தான் இருந்த தோஷத்தை நிவிருத்திசெய்தற்கு ஆகாசகங்காநதியில் நீராடும்பொருட்டுப் பூமிதேவி மேலே சென்றதாகக் கற்பித்துக் கூறினதனால், இதுவும் ஏதுத்தற்குறிப்பேற்றவணி. வியனென்னும் உரிச்சொல் விசாலமென்னும் பொருளுணர்த்தும். "வியனென இளவி யகலப்பொருட்டே": வியல் எனப் பதம் பிரித்தாலும் பொருள் இதுவே; இனி, வியனதி, வியத் - வானத்திலுள்ள, நதி - ஆகாசகங்காநதி யென்க. (390)

30.—இது – இருதிறத்துச் சேனைத்தொகை வருணனை.

பொருபடைகொடிப்படை புறப்படுபெரும்படைபுகுந்து குருபூமியுறவே, யிருபடையுமொத்துடனெருங்கினசுராசுரரெதிர்ந்துபொருபூசலெனவே, யொருபடையெனப்படமோராயிரமுநொந்துரகனுரநெரிய வேழுலகமும், வருபடைநிலத்தினிடை வந்தளவில் வேறுதிவைய மெனதாய்முடியுமே.

(இ - ள்.) (துரியோதனனுடையது), பொரு படை - போர்செய்ய வல்ல (நடுவிலுள்ள) சேனைகளும், கொடி படை - முன்னணிச் சேனைகளும், புறம் படு பெரு படை - பின்னே வருகிற பெரிய [பின்னணிச்] சேனைகளும், குரு பூமி - குருக்ஷேத்திரத்தில், புகுந்து உற - போய்ச் சேர, (இவ்வாறு), இருபடையும் - (பாண்டவகௌரவரது) இருதிறச் சேனைகளும், சுர அசுரர் எதிர்ந்து பொரு பூசல் என - தேவர்களும் அசுரர்களும் (தம்மில்) எதிரிட்டுச்செய்யும் போர்போல, உடன் ஒத்து நெருங்கின - விரைவாக ஒருங்கு அடர்ந்தன; (இங்ஙனம்), ஏழு உலகமும் வரு படை - ஏழு தீவுகளிலும் பொருந்தின சேனைகள், ஒரு படை என-ஒரே திரளாக, உரகன் படம் ஓர் ஆயிரமும் நொந்து உரம்நெரிய - (கீழிருந்து பூமியைத் தாங்கும்) ஆதிசேஷன் (பாரமிகுதியால்) தனது ஆயிரம் படங்களும் வருந்தி மார்புஞ் சிதையும்படி, நிலத்தினிடை வந்த அளவில் - குருக்ஷேத்திரத்திலே [யுத்தகளத்திலே] வந்தமாத்திரத்தில், உததி வையம் - உவர்க்கடல் சூழ்ந்த இந்தச் சம்பூத்துவீபம், வேறு எனது ஆய்முடியும் - வேறே எத்தன்மையதாய் முடியும்? (எ - று.)

என்றது, ஏழுதீவுச் சேனைகளும் ஒரு தீவில் ஓரிடத்தில் ஒருங்கு திரளவே அப்பூமி அதிபாரத்தால் மிகத்தளர்ந்தது என்றவாறும். பாண்டவரது சேனைக்குத் தேவசேனையும், துரியோதனனுடையது சேனைக்கு அசுர சேனையும் உவமையாம். உரம் நெரிய - வலிமையொழிய என்றுமாம். உததி - நீர்தங்குமிடம்; உதம்-நீர்; உதக மென்பதன் விகாரம். 'வந்தளவிலேயுததி' என்றும் பாடம். (391)

31.—இருதிறத்துச் சேனை முழுவதையும் அழிக்க எவ்வளவு நாள்செல்லும் என்று துரியோதனன் வீடுமனை வினவுதல்.

எண்ணறுபரப்பினிடையோசனைகளத்தினிடையிருபடையுநிற்ப வெவருந், துண்ணெனவெருக்கொள முனின்றருள்பகீரதிசுதன்றனைவி யாளதுவசன், கண்ணெதிர்நிரைத்தபடையாவையுமுருக்கியுயிர்கவர வெதுநாள்செலுமெனப், பண்ணளிநெருக்கொழிய மாதிருகண்ணளி படாததொடைமீளிபகர்வான்.

(இ - ள்.) (இவ்வாறு) களத்தினிடை - போர்க்களத்திலே [குருக்ஷேத்திரத்திலே], எண் அறு யோசனை பரப்பினிடை-அளவில்லாத [மிகப்பலவான] யோசனையளவுகொண்டபரந்தஇடத்திலே, இருபடையும்-இருதிறத்துச் சேனைகளும், நிற்ப-(போருக்குச் சித்தமாய்)நிற்க, (அப்பொழுது), வியாள துவசன் - பாம்பையெழுதின கொடியையுடைய துரியோதனன், எவரும் துண்ணென வெருகொள முன்நின்றருள் பகீரதி சுதன்தனை - (கண்டவர்) எல்லோரும் திடுக்கிட்டு அச்சமடையும்படி (தனது சேனையின்) முன்னிடத்திலே (தன்னிடத்துக்) கருணையோடு (முதற்சேனாபதியாய்) நிற்கின்ற கங்கையின் குமாரனை வீடுமனைநோக்கி, கண்ணதிர் - (நமது) கண்ணுக்கு எதிரிலே, நிரைத்த - அணிவகுக்கப்பட்டுத் திரண்டுள்ள, படையாவையும் - சேனைகளெல்லாவற்றையும், முருக்கி - அழித்து, உயிர் கவர - உயிரை வாங்குவதற்கு [கொல்ல], எதுநாள்செலும்-

எத்தனைநாள் பிடிக்கும்? என - என்றுவினவ, பண்ஆளிநெருக்கு ஒழிய மாதர் இருகண் அளி படாத தொடைமீளி-இசைபாடுகின்ற வண்டுகள் நெருங்கிமொய்த்தல்உளதேயன்றி மகளிரது இரண்டு கண்களாகிய வண்டுகள் வந்து பொருந்துதலில்லாத மாலையையுடைய வீரனை வீடுமன், பகர்வான் - (அதற்கு உத்தரம்) கூறுவான்; (எ - று.)—அதனை மேற்கவியிற் காண்க.

யோசனை, காதம் என்பன ஒரு பொருளன. பகீரதி-பகீரதனால் கொணரப்பட்ட தென்று பொருள்; பகீரதன் - சூரியகுலத்துப் பிரசித்தனை ஓரரசன்; இவன், கபில முனிவரது சாபத்தாற் சாம்பரானவரும் சகரசக்கரவர்த்தி குமாரரும் தனது பாட்டனுக்குச் சிற்றப்பன்மாருமாகிற அறுபதினாயிரவரை நற்கதி பெறுவித்தற் பொருட்டுத் தேவலோகத்திலிருந்து ஆகாச கங்காநதியைக் கீழுலகத்துக்குக் கொணர்ந்தானென வரலாறு காண்க. படையாவையும் என்றது, இருநிறத்துச் சேனைகளையும் என்றபடி. "பண்ணளி நெருக்கொழிய மாதரிரு கண்ணளிபடாத தொடை மீளி" என்பதற்கு, பெண்களுக்குச் சிறிதும் வசப்படாமல் நித்திய பிரமசாரியாகவே நின்ற சூரனென்று கருத்து: மிக்க வைராக்கியமுடையவனை மங்கையர் காதலித்து நேசக்குதலுஞ் செய்யார். தொடை என்றது - அடையாளப் பூமாலை, போர்ப் பூமாலை என்ற இரண்டையும். (392)

32.—வீடுமன் கூறும் மறுமொழி.

ஒருபகலில்யான்மகிவன்முப்பகலிலேமகிவனுபநிடதவிற்கைமுனியும், வருபகலொரைந்தின்மகிவன்பரிதிமைந்தன்முனிமைந்தனைஞரு தாழிகையினிற், பொருபடையடங்கமகியும்புவியும் வாளைடுபுரந்தரனிருந்தவுலகும், வெருவரமுனைந்தொரு கணத்தினிடையே மகிவன் வில்விசயனென்றனனரோ.

(இ - ள்.) 'பொரு படை அடங்க - போர் செய்யவல்ல இச் சேனைகள் முழுவதையும், யான் - நான், ஒரு பகலில்-ஒரு தினத்திலே, மகிவன் - போர் செய்து கொல்லவல்லேன்; உபநிடதம் - வேதாந்தத்தை யறிந்த, வில் கை - வில்லியேந்திய கையையுடைய, முனியும் - துரோணாசாரியனும், முப் பகலிலே - மூன்று தினத்திலே, மகிவன் - போர்செய்து கொல்லவல்லான்; பரிதி மைந்தன் - சூரியபுத்திரனான கர்ணன், வரு பகல் ஒர் ஐந்தில் - அடுத்துவருகிற ஒரு அஞ்சுதினத்திலே, மகிவன்—; முனி மைந்தன் - துரோணபுத்திரனை அசுவத்தாமன், ஒரு நாழிகையினில் - ஒரு நாழிகைப்பொழுதிலே, மகியும் - போர் செய்து கொல்லவல்லான; வில் விசயன் - (காண்டீவமென்னும்) வில்லியேந்திய அருச்சுனனே எனின், புவியும் - பூலோகத்து உயிர்களும், வாளைடு - ஆகாயத்திற சஞ்சரிக்கும் பிராணிகளும், புரந்தரன் இருந்த உலகும - இந்திரன் வீற்றிருக்கிற சுவர்க்கலோகத்தார்களும, வெருவர - அஞ்சும்படி, முனைந்து - எதிர்த்து, ஒரு கணத்தின் இடையே - ஒருக்ஷணப்பொழுதினுள்ளே, மகிவன்—;' என்றனன் - என்று (வீடுமன துரியோதனனுக்குக்) கூறினன்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

இதில், அவரவர்க்குப் போர்த்திறத்து உள்ள தாரதமியம் [ஏற்றத்தாழ்வு] விளங்குவது காண்க; உபநிஷதம் - வேதத்தின் சாரமான பாகம்; வேதத்தின் முடிவென்றும், பிரமகாண்டமென்றும் கூறப்படும்; இது - பகவானைப்பற்றிக் கூறுவது. புரந்தரன் - (பகைவரது) பட்டணங்களை (அல்லது) உடம்புகளை அழிப்பவன்; புரம் - ஊரும் உடலுமாம். (393)

33.—எதிர்ப்பக்கத்துச் சேனையிலுள்ளவர் யாவரும் தனக்கு நெருங்கிய உறவினராயிருந்தது கண்டு அருச்சுனன் கலங்குதல்.

யானையொடுதேர்புரவியாளிவையநேகவிதமெண்ணரியதானையு டனே, சேனைமுதலாய்முனியினின்றருள்பிதாமகனுமற்றுளசெழுங்குர வரும், தானைநெடுவாரியிடைதேரிடையருக்கனென நின்றதுரியோதன னும்வான், மீனைநிகர்கேளிருமணிந்தநிலைகண்டுருகிவிபுதபதிமைந்தன் மொழிவான்.

(இ - ள்.) யானையேர்டு - யானைகளும், தேர் - தேர்களும், புரவி - குதிரைகளும், ஆள் - காலாட்களும், இவை - என்னும் இவற்று லாகிய, அநேகம் விதம் - பலவகைப்பட்ட, எண் அரிய - அளவிட வொண்ணாத, தானையுடனே - சேனைகளுடனே, சேனை முதல் ஆய் முனையில் நின்றருள் பிதாமகனும் - சேனைத் தலைவனாய்ச் சேனைமுகத் தில் நின்றருள்கிற (தன்பெரிய) பாட்டனான வீடுமனும், மற்றுமுள செழு குரவரும் - (துரோணாசாரியன் கிருபாசாரியன் அசுவத்தாமன் முதலாக) மற்றுமுள்ள சிறந்த பெரியோர்களும், தானை நெடுவாரி யிடை தேரிடை அருக்கன் என நின்ற துரியோதனனும் - சேனை யாகிய பெரிய கடலிலே தேர்மீது சூரியன்போல நின்ற துரியோதன னும், வான் மீனை நிகர் கேளிரும் - நட்சத்திரங்களையொத்த [அநேக ரான] (சல்லியன் துச்சாதனன விகர்ணன் சயத்திரதன் சகுனி முதலான) உறவினர்களும், அணிந்த - வரிசை வரிசையாக நின்ற, நிலை - நிலையை, கண்டு - (எதிரிற்) பார்த்து, விபுதபதி மைந்தன் - தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனது புத்திரனான அருச்சுனன், உருகி - (இவர்களோடு எங்ஙனம் போர் செய்வதென்று) மனங் கரைந்து, மொழிவான் - (கண்ணனை நோக்கிக்) கூறுவான்; (எ - று.)

எதிர்வந்து நின்ற வீரர்யாவரும் பாட்டனும் அண்ணன் தம்பி மாரும் மாமனும் மற்ற உறவினரும் கல்விபயிற்றிய ஆசாரியரும் கண் பார்களுமாக விருக்கக் கண்டு அருச்சுனன் மனம் மாறிக் கூறுகிறான். குரவர் - குரு என்பதன் பன்மையான, குரவ: என்னுஞ்சொல் ஈறு திரிந்தது, வாரி - நீர்; கடலுக்கு இலக்கணை. அளவிறந்த பரப்பும் ஆரவாரமும் அணியணியாக வருதலும் அச்சந்தருதலும் பற்றிக் கடலைச் சேனைக்கும், கடலினிடையில் தேரின் மீதுசிறந்துவிளங் குதல் பற்றிச் சூரியனைத் துரியோதனனுக்கும், அளவிறந்து நெருங்கிவிளங்குதல் பற்றி நட்சத்திரங்களைச் சுற்றத்தார்க்கும் உவமை கூறினர். (394)

34.—உற்றுரைக் கொல்லப் பின்வாங்கி அருச்சுனன் போர் செய்யமாட்டே னெனல்.

நின்றமர்தொடங்கநினைகிற்பவர்பிதாமகனுநீள்கிளைஞருந்துணைவ
ருங், கொன்றிவரைவாகுவலியிற்கவர்வதித்தரணிகொள்பவனுமென்
றுணைவனே, யென்றுபலபேசியதிபாதகமெனக்கருதியான்மலிவுறே
னினியெனை, அன்றுவசுதேவன்மகனோடுரைசெய்தானமிலவனுமிவ
னோடுரைசெய்வான்.

(இ - ள்.) 'நின்று - (எதிரில்) நின்று, அமர் தொடங்க - போரைத் தொடங்கிச்செய்ய, நினைகிற்பவர் - எண்ணியிருப்பவர், பிதாமகனும் - பாட்டனும், நீள் கிளைஞரும் - மிக்க உறவினரும், துணைவரும் - அண்ணன் தம்பிமார்களும், (ஆவர்); இவரை - இவர்களை, வாகு வலியின் - தோள்வலிமையால், கொன்று—, கவர்வது - பறித்துக்கொண்டு அடையப்படுவது, இ தரணி - இந்தப் பூமியாம்; கொள்பவனும் - (அதனை) அடைபவனும், என் துணைவனே - எனது தமையனே,' என்று—, பலபேசி - அநேக வார்த்தைகளைச் சொல்லி, அதி பாதகம் என கருதி - (இவர்களைக்கொல்வது) மிகப்பாவமென்று எண்ணி, இனி யான் மலிவு உறேன் எனை - இப்பொழுது நான் போர்செய்ய மேற்கொள்ளேனென்று, அன்று - அப்பொழுது, அமரில் - யுத்தகளத்தில், வசுதேவன் மகனோடு - வசுதேவ புத்திரனை கண்ணனுடனே, உரை செய்தான் - (அருச்சுனன்)கூறினன்; அவனும்-அந்தக்கண்ணபிரானும், இவனோடு-இவ்வருச்சுனனோடு, உரை செய்வான் - (அதற்கு உத்தரங்) கூறியருளுவான்; (எ - று.)—அதனை, மேல் வீட்டுமபருவ முதற்போர்ச்சருக்கத்தில் இரண்டாங்கவிமுதல் ஆறுகவிகளிற் காண்க. 'உரைசெய்தான் விசயன்' என்றும் பாடம். (395)

அணிவகுப்புச்சருக்கம் முற்றிற்று.

உத்தியோகபருவம் முற்றுப்பெற்றது.

செய்யுள் முதற்குறிப்பகராதி

அங்கர்பெருமான் 344
அஞ்சினிஞ்சீ 254
அஞ்சினமஞ்சின 238
அடர்சிலைவிசய 50
அடாது செய்தவர் 279
அடிநிலத்திலே 140
அடியவர்மனத் 232
அடியனேனிருக்க 323
அடுத்ததானமும் 270
அண்டர்ய்வருவ 273
அண்ணலந்தாக 307
அணிகொளத்தி 139
அணிந்துவருஞ் 94
அதிரதர்முதலா 228
அதிரதாதியர் 327
அத்தக்கணத்தில் 264
அந்தணன்முன்ற 256
அந்தநின்மைந்த 215
அந்தவிடத்தெறி 244
அந்தவிலலினை 197
அப்பொழுதாவ 123
அம்பரத்தவ 202
அமைத்தவாச 158
அரக்கிதந்தருள் 295
அரசர்போனபின் 15
அரவமல்கிய 179
அரவியலல்கு 223
அரவின்விடமொ 349
அரவுயர்த்தோ 82
அராவணைதுறந்து 35
அருஞ்சமரம் 78
அருத்தியீதல் 271
அருள்குடியிருக் 42
அவ்வரமவற்கு 324
அவன்மொழிந்த 204
அளப்பிலாச்சேனை 313
அளிவருங்குழல் 189
அனேத்தவாரி 170
அற்புதபங்கய 240
அறத்தின்மைம் 58
அன்பாலின்றென் 120
அன்றியேயவருடன் 20
அன்றுதுதுகொ 147
அன்னநடை 108
அன்னேயான 124
அன்னேவந்ததென் 278
ஆங்கவர்க்கிவ 33
ஆலிமறை 144
ஆண்டகை கன்னி 325
ஆண்டிருந்த 121
ஆண்டுபன்னிராண் 19
ஆண்டுமாமகனு 284
ஆயின்றருமற் 321
ஆயோதனத் 261
ஆரணனேயானே 250
ஆரென்றறியத் 258
ஆவதுகருதா 206
ஆனதெனவீடுமனு 343
ஆனவுனதாண் 260
இகலும்வாளா 171
இங்கிவர்வயப் 341
இடக்கணுக 68
இடிபடப்படவரு 331
இடைப்படுநெறி 304
இந்தவண்ண 176
இந்தவர்தணவீ 13
இரண்டுமவன் 268
இரவிக்குரியதிரு 259
இரவிமைந்த 204
இருந்ததாயின்ற 280
இருந்தபோவை 71
இருந்துயிலுணர் 234
இருந்துவந்தருளி 153
இருவிரும்வந்த 47
இவ்வண்ணஞ் 114
இளையசரத்தி 10
இறையனெழிற் 237
இன்னவாறிவ 194
ஈண்டவர்க்கு 195
ஈண்டுவீரிரு 41
உண்மையாகவெ 275
உய்வருந்திறல் 286
உயர்முறைமை 352
உரகபுங்கவன் 164
உரிமையுடன் 96
உரியவம்புவியுதிட் 7
உருண்மணித்திரி 332
உவந்துமொழி 69
உள்ளிலுணர் 155
உற்றமருதவி 48
உற்றயோனிக 61
உறவின்மிக்கவர் 337
எட்டுத்திக்கினு 293
எண்ணுபரப்பி 353
எப்புவிநிற்பன 245
எம்மையேயொழிய 51
எமக்குநீபிரமப் 67
எரியமுதருந்தக் 217
என்றலுங்குந்தி 212
என்றலுமதுகேட் 287
என்றலுமவனுமாக 314
என்றிசைக்குரல் 146
என்றுகூறவிற 201
என்றுகேசவ 183
என்றுபாரினிலி 168
என்றுபூசுரனியம்ப 22
என்றுரையாடி 255
என்றென்றிறைஞ் 121
என்னக்கழறி 135
என்னமாதவம் 270
என்னினின்னி 178
எயுநெடுங்கொடி 256
எவிலங்கு 189
ஏற்றியாறு 208
ஐவரிலிளையோன் 315
ஒருகுலத்தினி 186
ஒருதலத்திடையவ 55
ஒருதன்மாமெடுத் 31
ஒருபகலில்யான் 364
ஒன்றரம்படைக 314
ஒன்றுபடக்கடலம் 246
கங்கைமகன் 251
கங்கைமாமகனி 32
கண்ணபொறுத் 252
கண்ணனங்கருளிச் 53
கண்ணனுங்குந்தி 287

கண்ணிலாளு 225
கதிரவனருளிஞ 214
கந்தடுகளிற்று 236
கயம்படுமனத் 312
கரிந்துமாலை 192
கருதியந்தணர் 161
கல்வரையும் 136
கல்வியூயநெஞ்சி 23
கலந்துமங்கல 163
கலிங்கர்கோன் 306
கவசங்கனகருண் 266
கற்றைக்குழல் 125
கன்னல்விளவின் 257
கன்னன்விசயன் 265
காருமன்னுகின் 26
காதனின்புதல் 214
கார்க்கடல்வண்ண 40
கார்வழங்குரு 184
காரணத்தும் 198
காலன்மன்னவர் 175
காளமாமுகி 220
கான்பட்டகன 218
காஞ்சனவுனைவிடுத் 91
காணெலாமலர் 222
காணெறிபோய் 109
கிரியின் சிறகை 265
கிருதவன்மாவக்கு 52
குடைநிலவெறிக்க 349
குரவரையுங் 83
குருகுலத்தரசர் 57
குளிருமாமதி 169
குன்றெடுத்தாயர் 317
கூறியவேகராகக் 54
கேண்மையாலெ 299
கேவலந்தீர் 106
கொடிநெருக்கவு 335
கொடுத்தனன் 319
கொண்டமென் 221
கொண்டன்முடிக் 246
கொதிகொள்சின 342
கொல்லுவதியற் 230
கோடுகொண்ட 154
கோதிலாளிந்த 84
சங்குமணிமுரசுஞ் 135
சண்டமுகிலுரு 128
சதியெனைப்பல 338
சல்லியன்றானு 305
சாத்தகிங்கின் 130
சாலக்கனகன் 123
சித்திரத்தபடி 112
சிரந்தருசுடி 233
சிலசிலகைத்தல 248
சீதநாண்மலர் 180
சீர்வலம்புரிதிகிரி 150
சேர்சாவகர் 296
சுற்றுமன்னவர் 301
சூடுகின்றதுமாய் 97
சூதுஞலரசிழந் 181
செங்கண்மாலு 340
செங்கதிரொழு 229
செஞ்சொன்முனி 77
செம்மையல்லது 65
செய்வராவின 79
செருமவியாழி 49
செல்வம்வந் 206
சென்றவம்முனி 59
சொல்லவாவு 182
சொல்லிரண்டு 195
சோதிவானாதி 172
ஞாலமுற்று 191
ஞானகஞ்சுக 160
ஞானமன்பொ 75
தண்டிருந்திவன் 126
தண்டுதாளெனக் 269
தண்ணந்துளப 263
தந்தைகாதலுறு 185
தந்தையும் தம்பி 223
தம்பியரனைவரும் 307
தம்பியரைந்து 216
தாங்கவாரிதி 162
தருமனுக்குங் 122
தருமனுந்தம்பி 322
தன்பெருஞ்சேனை 237
தன்மைநாலு 213
தன்னிலுயர்ந்த 253
தனிவந்தகலுந் 262
தான்வணங்குநர் 298
திகந்தவெல்லை 62
திசையனைத்திலும் 202
திரத்துவாய்மைசீ 24
தீண்டாதகற்பு 103
தீதறுமதிவல் 224
துகிரிதழ்வைத்து 247
துளியார்மதுவின் 263
துன்றுபிணியோர் 133
துன்னுகங்கை 177
தூதுபோயரவத் 288
தூமவெங்கனற் 29
தூவியனிலவு 222
தெறுகணையொன் 285
தேக்குந்தி 218
தேயமெங்கெங்குஞ் 38
தேவராயினும் 101
தேவரும்வாசவ 253
தொக்கவெண 173
தொடர்ந்தெளி 233
தொல்பகைதி 150
தொல்லவையின் 254
தொல்லாண்மைப் 131
தொல்லோயகன் 148
தோட்டுவந்து 166
நகுலனிவையுரைத் 111
நஞ்சாகமுயர்த்த 56
நடந்தநாயகன் 140
நடுநிலமுரைக்கி 348
நண்ணுமர்த்த 328
நதியெனைப்பல 309
நாமவேலரச 236
நாற்றிசை 220
நிரந்தரம் புகழ் 274
நிரைகதிர்க் 174
நின்பெரும்புதல் 212
நின்றமர்தொடங்க 356
நீன்றவனிருந்த 46
நின்னறத்தினி 66
நினைக்கவுந் 207
நீதியிற்புகல் 163
நீதுதுடந்தரு 85
நீதேவனென் 119
நீபாரதவமரில் 115
நீயிருக்கதெடு 200
நீவெறுக்கிலை 183
நெருங்குவெம் 329
நேமியானிவை 70
பகலிறுங்கடும் 141

பகன்மறைத்திரு 336
பங்களங்குரஞ் 306
படர்ந்தகான 289
பண்புடைக்கும 215
பதிப்பெயர்த்தேகி 229
பரசுடையிராமன் 310
பராசரன்குல 63
பரிவுடன்மற் 95
பலவகைப்படுகவ 333
பழியுடைப்பகை 227
பன்னியபுரையில் 209
பாங்கிலுல்வரு 297
பாண்டுவின்றிரு 302
பார்த்தன்வெஞ் 284
பார்த்தனிவை 105
பாராளக் 116
பாரிலாசையு 64
பிடர்வலிக்கட 338
பிதாமகன்பரிவு 199
பின்னேயும்பற்பன் 283
புடவியாளுதல் 60
புயங்கபூமி 142
புருவவிற்குனி 335
புரோகிதன்றாது 37
புன்பிறப்புடைய 188
பெண்ணீர்மை 132
பெரும்பிலவுறை 232
பெருவரமிரண்டும் 285
பெற்றநீர்மக 281
பேர்படைத்த 73
பேராவணை 187
பேருலகமும் 12
பைவருந்தலை 219
பொங்கரா 165
பொய்வளர்ந்த 187
பொருசிலமுறி 205
பொருபடைகொடி 352
போரும்படை 224
பொழியுமுகில் 346
பொற்புடைப் 44
பொன்னுருக் 104
போயேகானம் 259
போர்மூட்டித்தர 92
போராதிய 70
போனகரன்மறைப் 16
போனவெம்பல 330
மங்கலந்திகழ் 145
மடந்தைபொற் 282
மண்டலமதிய 210
மல்லர்பப்பாவர் 231
மல்லராக்கர் 239
மலைகண்டதென 98
மற்றைநாள்வசு 326
மன்றலர்தெரி 217
மன்றிலழைத் 125
மன்னர்வேழ 142
மாடநீள்வீதி 39
மாடலிக்குல 185
மாதவனிருந் 235
மாதவனேமுனி 251
மாதுலனுரைத்த 230
மாயவனுமன்பன் 118
மாயிருஞால 249
மாயனர்விரிது 278
மாயனுமகிழ் 208
மித்திரான 303
மின்சுடிகைப் 242
மின்னுமாமுகிற் 149
மீனமாயுங் 1
முகுந்தனவாச 291
முட்டநித்தில 175
முட்டியதொல்குரு 245
முடைகமழ்முல்லை 48
முதல்விழைந் 193
முந்தாவுயர்த்தோ 302
மூன்றாண்வெம் 87
மும்மையாகிய 157
முருகவிழ்க்கும் 112
முழக்கினுலுயர் 166
முழவுமுதலெற்று 350
மூலமதைவதற் 351
முன்றிலின்கணி 146
முன்னகக்குடை 178
முன்னரீகூறிய 117
முன்னமேதுயின் 156
முன்னமேயுகி 27
முன்னரும்பொரு 19
முனியுமப்பெரு 66
மூத்தவரினே 226
மூத்தோன்மற் 88
மேல்வலியுற்றெதி 240
மேலெழுமங் 248
மேவுசெந்துகிர் 137
மைக்காலமுகி 100
மைக்குழலாய் 132
மைந்தற்குறுதி 267
மைந்துபடைத் 243
யவனசவனத் 347
யானுறையில் 211
யானேதேர்பரி 299
யானைமிசை 345
யானையொடுதேர் 355
வண்மையிலுலய 255
வந்தகொற்ற 158
வந்தமையறிந்து 43
வந்தவர்தணன் 272
வந்திலன்விசய 45
வந்துகுந்திசின் 277
வந்துவந்திரு 152
வம்புலாமகில் 138
வயிரமெனுங் 80
வரித்தாமரைக் 262
வருகவென்மத 281
வரையெலாம் 143
வல்லார்வல்ல 267
வல்வினுலவன்கொ 6
வளைமுழக்கின 339
வன்பிலுலவனி 192
வாசநீரும்வண் 159
வாசவன்றனக்கு 276
வாசவாவியினத 167
விந்தமன்னதோள் 17
விரவுகான் 144
விராடபூபனுஞ் 294
விரிகுழற்பைந 90
விரைந்துபாய் 168
வீடுமன்கிருபன் 308
வெங்கண்மாமுரச 300
வெங்கணையத் 247
வெம்புயவலியான் 227
வெம்புயவீமனும் 99
வெயில்விடுபைத் 241
வெலற்கருங்கிறல் 273
வேத்தர்யாரை 153

பிழைத்திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	16	தூதனுப்ப	தூதனுப்ப
9	23	சூதிரை	குதிரை
13	7	யானைக்கு	யானைக்கு
40	11	யோசனை	யோசனை
54	17	உதிரட்டிரன்	உதிட்டிரன்
71	43	புரியசைச்	புரியைச்
86	4	)கொடுப்பான்	கொடுப்பான்)
87	13	சிந்துத்தின்	சிந்துரத்தின்
,,	14	சிந்தத்தை	தந்தத்தை
114	41	சகதேவன்-	சாதேவன்-
146	19	கிரீடங்களிள்	கிரீடங்களின்
163	39	வளி	வனி
190	32	போலிப்பெற்று	போலிபெற்று
191	39	முடிவு	மிகமுடிவு
192	14	இருந்து	திருந்து
,,	15	மிருந்த	இருந்த
216	31	ஜவரும்	ஐவரும்
217	43	ஒட்டேன்	ஒட்டேன்
235	8	தம்	தன்
258	19	கழிநடி	கழிநெடி
266	32	துணைவர்	துணைவா
275	13	அவ்வளவிந்த	அவ்வளலீந்த
,,	15	வளம்	வளல்
334	1	434	334

மற்றும் பிழைகள் காணப்படினும் திருத்திக்கொள்ளவும்.

அபிதான சூசிகை யகராதி.

அகத்தியன் . விந்தமலையொடுக்கினவன், சிருட் - 198.

அசுவசேனன் - காண்டவவனம் எரிந்தபோது தப்பி அகன்று போன பாம்பு; இதனைக் கர்ணன் ஆசுகமாகக்கொண்டான், சிருட் - 158.

அசுவத்தாமா - துரோணன் மகன்; ஐந்தூர் வேண்டமறுத்த தற்குச் சாட்சியாவன், சிருட்-221; ஞாலநிபன், ஆண்மையில் நிகரற்றவன், சிருட்-225; கண்ணபிரானால் மோதிரம் வீழ்த்திப் பேதிக்கப்பட்டவன், சிருட் - 226 - 229; ஒரு காழிகையினில் சேனைகளோ டடங்கவும் மலையவல்லவன், அணி - 32.

அசுவிநீதேவர்கள் - ஆயுர்வேத மறிந்த தேவவைத்தியர்கள்; இவர்கள் நகுலனையும் சகதேவனையும் அளித்தவர், சிருட்-219.

அசோதை - கண்ணபிரானை வளர்த்த தாய், வாசு - 1.

அபிமன்னு - கண்ணனுடன் பிறந்தவளான சுபத்திரையினிடம் அருச்சுனனுக்குப் பிறந்த புத்திரன்; இளமையிலேயே வில்வித்தையில் ஒப்புயர்வின்றி மிகச் சிறந்தவன், சிருட் - 50.

அருச்சுனன்-விசயன், உலாக-12; தனஞ்சயன், உலாக-15; நரன், உலாக - 18, வாளி வெருநர் மேல் விடான், உலாக - 19, ஐயிருநாமத்தோன், வாசு - 20; சிந்தையிற்கடிய தேரோன், வாசு - 10; இந்திரன் மதலை, சிருட் - 22, 160; குரங்குத் துவசமுடையவன், சிருட்-234, பாண்டவசேனைக்குத் தோள் போன்றவன், அணி - 16; ஒரு கணப்போழுதினுள் புலியும் வானும் புரந்தானுலகும் வெருவ முனைந்தமலையவல்லவன்; அணி - 32.

இந்திரன் - மகவான், சிருட்-20; முதிலை யூர்தியாகவுடையவன், சிருட் - 22; வச்சிரப்படையால் மலைகளின் சிறகரிந்தவன், சிருட் - 195,232; விசயனை நல்கியவன், சிருட் - 219; ஆகண்டலன், சிருட் - 231; வாசவன், சிருட் - 213, புத்தேளாசன், சிருட் - 237; கொண்டல் வாகனன், சிருட் - 243; உருமுத்துவசன், அணி - 28.

இராயசூயம் - அரசர்களனைவரையும் வென்று அவர் தரும் திறைப்பொருள் கொணர்ந்து செய்யப்படுவதொரு பெருவேள்வி, சஞ்-17.

இராவான் - உலூபியென்னும் நாககன்னிகைக்கு அருச்சுனனிடம் பிறந்தவன்; துரியோதனன் படைகளையெல்லாம் ஒரு பகற்பொழுதில் கொல்ல உறுதி கூறி நின்றவன், படை - 12, முகூர்-3: கண்ணனுடனொத்த உத்தமவிலக்கண முடையவன், களப்-5; தன்னைப் பலிதந்தாலும் நிலாள் வரையில் உயிரோடிருக்கும்படி கண்ணனிடம் வரம்வேண்டினன், களப்-6. தருமனுல் களப்பலியூட்டப்பட்டவன்; களா - 7, 8; உறுப்புக்களையறுத்துப் பலிகொடுத்தும் மலர்ந்த நீபமென முகைகவின் நின்றவன், களப்-8.

உத்தமோசா - உத்தமோஜஸ் என் பவன்; திரௌபதி ஐக்கு உறவினன்; படை-3.

உத்தரன் - விராடராசன் இளைய மகன், உலூக-19: படை-4.

உதாமன் - யுதாமன்யு: திரௌபதி ஐக்கு உறவினன், படை-3.

உலூகன் - தருமன் சொற்படி தூது போனவன், உலூக-7. விராடனது புரோகிதன், நான் மறைவல்லவன், உலூக - 8. பிரமனைப்போன்றவன், உலூக-20: உட்காமியாதமுனி, சஞ் - 18.

கடோற்கசன் - வீமனுக்குக் இடும்பியினிடம் பிறந்தவன்; இந்திரன் கர்ணனுக்கு கொடுத்த வேலால் எறியப்பட்டு இறப்பவன், கிருட் - 244.

கன்னன் - சூரியகுமாரன், வாசு-2; உதாரசீலன், அங்கர்கோன், கிருட் - 134; கற்பகபூம்நாண வண்மையிலையர்ந்தவீரன், கிருட் - 137; வண்மை அருள அழகு ஆண்மை இவற்றிற் சிறக்கப் பேசப்படுபவன், கிருட்-147; கன்னனென்றபெயர் சூரியனுலிடப்பட்டது; கிருட்-154; துரியோதனனுல் வாழ்வளிக்கப் பெற்றவன், வெலற்கரியான், கிருட் - 155; உம்பர் காவலனேயகையான், கிருட் - 157; வரம்பெற்ற கவசகுண்டலம் பூனைந்தவன், அவை யிருக்கும் வரையில் அவனேயிர்செகுப்பாரிலர், கிருட்-234: எல்லார்க்கும் கொடுப்பவன், கிருட்-235: தானுகரன், எதையும் மறுத்தறியாதவன், உயிரேயெனினும் ஈந்திடுபவன், கிருட்-236: செஞ்சோற்றுக்கடன் கழிப்பதுவே புகழும் கருமமும் தருமமுமென்றவன், கிருட்-255: தமுகணாலர்க்கும் தமுகணுனவர்க்கும் தண்ணளி நிறைந்த செங்கண்ணுன், கிருட் - 259: அர்த்தரதனுக வைக்கப் பட்டான், அணி - 20.

காமபாலன் - [பலராமன்] இராச்சியத்தைமீட்டற்கெண்ணும் வீமதி கொடிதென்றவன், உலூக - 3: வெண்ணிறமுடையவன், உலூக -4: கிருட்-105: தாலகேது, வாசு -17: கண்ணனமுன்னுன், வாசு -18: சங்கவண்ணன், வாசு-19: போர்முடிவளவும் தீர்த்தயாத்திரை சென்றவன், அணி 4.

கிருட்டிணன் - கரியமாமுகிலனேயவன், கல்லினல் வரு கல்முகில் விலக்கியவன், உலூக -2: உற்றவரிடுக்கண்களேபவன், உலூக - 4: உலூகலமுடன் தவழ்ந்தவன், உலூகனைத் தூதுபோக உடன்படுத்தினவன், உலூக-5: தழாயவன், உலூக - 19: கோவியர்குரவைகொண்டவன், வாசு-1; களப்-1: காயமுமுயிருமாகிப் பொருளுதொறும் கலந்துநின்றமாயவன், வாசு-3: அருள்குடியிருக்குங்கண்ணுன், வாசு - 7: பந்தனேயிலாதான், வாசு-8: உற்பலவண்ணன், வாசு -9: பந்தனேயறுக்கும் பாதமுடையோன், வாசு-10: நேமிப்படையோன், வாசு - 11: பாண்டவர் சகாயன், வாசு-13: முடைகமழ் முல்லைமாலைமுடியவன், வாசு - 14: மும்மையுமுணர்ந்தநாதன், வாசு - 17: மருதுபோழ்ந்திட்டமாயவன், வாசு-18: ஆறிருநாமத்தோன், வாசு - 20: பொதுவர் சிற்குடில் உறைவதோர்மாகதப் புயல், சஞ் - 1: கஞ்சமாமலனை வென்றவன், சஞ்-2: நேமியான், சஞ் - 18: குருந்தொசித்தருண் முகில், சஞ்-19: யார்மனத்தும் இருக்குஞ்சோதி, கிருட் - 3: வாணன்இருஞ்சமரம்தொலைத்தபிரான், கிருட்-4: சிந்தாததின் மருப்பொசித்தவன், கிருட்-11: ஞாலமெல்லாம் பூத்தோன், கிரு

மகள் புணர்மணிமார்பன், புன்மையாவும் தீர்த்தோன், கிருட்-12: சிவனது இரத்தலே யொழித்தவன், கிருட்-15, 83: பாரதாமன், கிருட்-21: முக்காலங்களு முணர்பவன், முகுந்தன், கிருட்-22: மூவராயவர்களுக்கும் முதல்வனுமியமூர்த்தி, கிருட்-23: நீண்டான், நிமலன், கிருட்-24: தீர்த்தன், கிருட்-26: ஆதிமூர்த்தி, கிருட்-31: அலகை முலேப்பாலுண்டவன், சகடம் விழுவுதைத்தவன், கிருட்-32: பூபாரம்தீர்க்கப் பிறந்தவன், கோபாலன், கோவிந்தன், கிருட்-34: தன்னேத்தாலுணராதவன், கிருட்-36: உலகத்தாய அடியினையுடையவன், கிருட்-37: பூதேவரும் மாதேவரும் காணு மலாடியோன், கிருட்-38: தூணிடைவந்தவன், மூலப்பேரிட்டழைத்த யானேக்கு முன்னின்றவன், கிருட்-43: நெடுமால், கிருட்-48: பஞ்சபூதங்களின் வடிவினன், கிருட்-51: தொல்லோயகன், கிருட்-71: வலம்புரி திருச்சேர்செங்கையான், கிருட்-73: எல்லாச் செல்வங்கட்கும் நாயகன், கிருட்-74: அமாருக்கு அமுதருளியவன், கிருட்-77: மும்மையாகிய புவனங்களே யருந்தியவன், கிருட்-81. கேசவன், கிருட்-84, 247: கங்கை திருவடியினின்றும் பெருகப்பெற்றவன், கிருட்-91: பலராமனுடன் பிறந்தவன், கிருட்-105: இசைகொள்வேயினன், கிருட்-105: தேதாணமலர் மடந்தை கேள்வன், நாதநாயகன், கிருட்-110. வேதாறுமலருந்தியினன், கிருட்-110. உலகெலாமுதவும் உந்தியான், கிருட்-115: அராவணே துறந்த மாயன், கிருட்-119: துவராபதன், கிருட்-125; அவனி வெளவ மனேயி லுண்டியை மறுத்தவன், கிருட்-127. உலகெங்கணும் நீண்டவன், கிருட்-130. மல்லிரண்டினேயும் மலேந்த காளமுகில், கிருட்-131: கன்றினுல் விளவெறிந்த கள்வன், கிருட்-136: குந்தியின் மருகனுவன், கிருட்-148: உற்றவர்க்குறுதி சூழ்வான், கிருட்-158: மீக்குன்றி உறிகடோறும் வெண்ணெயுண்டியிருமுனேயன், வாக்குன்றி மலரோன், கிருட்-161: அறிவன், கிருட்-181: அடியவர் மனத்திலுள்ள ஆசிருட்கங்குல் தீர்க்கும் நெடியவன், கிருட்-183: அரக்தபோகம்பேரினேயிற் பெருந்துயில் துறந்தமால், கிருட்-186: யாதவகுலத்தோர் ஏறு, கிருட்-234: விபுதர்களுக்கரியோன், கிருட்-196: கருடக்கொடியோன, கிருட்-197: நித்தன், கிருட்-200: பச்சைநிறத்தினன், கிருட்-201, ஆணன், சரன், கருணுகரன், கமலாசனி காதலன, ஆதிமூலம், நாரணன் எனத்துதிக்கப்படுபவன், கிருட்-209; இதயத்திலிருப்பவன், ஆதவன், மதிவெங்கலாளனவன, தீதவன், கிருட்-210, வாமன், வரதன், கிருட்-212: மூவரும் ஒன்றென நின்றருள் நாதன். கிருட்-213; தன்னிலுயர்ந்தவர் யாருமில்லாதவன். கிருட்-214: தூதுரடந்த நாயகன், படை-1: காளிய னுக்கு இருதாள் கல்லியவன், கம்சன் வில்விழவு காணச் சென்று வில்லிறுத்து நின்றவன், களப்-1. பாண்டவ சேனேக்கு உயிர், அணி-16.

கிருதவன்மா - யதுகுலத்து இருதிகன்குமாரன்; துரியோதனனுக்குத் துணேயாகக்கொடுக்கப்பட்ட யாதவசேனேக்குத் தலேவ

ளுக்கு கண்ணனுல் அனுப்பப் பட்டவன், வாசு-18: அணி-19:

கிருபன்-முதலில் கௌரவபாண்ட வர்க்கு வில்வித்தை பயிற்றிய ஆசிரியர், உலூக-15: துரியோத னனுக்காகத் தூதுபோக, இவர் சமரதத்தலைவராகப்பிரிக்கப்பட் டவர், அணி - 19.

குந்தி-கன்னனைப் பயந்தகன்னி, கிருட் - 147: குந்திதேசத் தரசன் பெண், கிருட்-161: பெண்மையினுலுயர்ந்தவன், கிருட் - 218: வசுதேவர்க்கு உடன்பிறந்த முறையினள், கிருட்-247: கர்ணனுல் சராசரங் களுக்கெல்லாம் தாய் என்னப் பட்டவள், கிருட்-260.

குந்திபோசர்-குந்தியின் சுவீகாரத் தந்தை மரபினர், படை-4.

சகதேவன் - புகலரியவுணாவுடை யவன், கிருட்-30: தெய்வ மன்னன், கிருட்-32: தூயவன், கிருட் - 37: முகூர்த்தம் வல் லோன், முகூர்-2: கிளைஞரை வேறிடாதான், முகூர்-4. பாண் டவசேனைக்குக் காவல்போன்ற வன், அணி-16.

சகுனி சுபலன் புத்திரன், கிருட்-178: துரியோதனனுக்கு மாமன், கிருட்-180: வஞ்சகச் சூதில் வல்லவன், படை-17: சமரதத் தலைவர், அணி-19.

சஞ்சயன் - கவல்கணன் குமா ரன்: [காவல்கணியெனவும் படுவன்]: திருதராட்டிரனுக்கு மிகவும் இஷ்டனை நண்பன், குருகுலத்தரசர்க்கு நல்குரு, சஞ் 3: பாண்டவரிடம் தூது போனவன், சஞ்-4.

சதானிகன் - விராடனுடைய உற வினன், படை-4.

சயத்திரதன்-சிந்துதேசத்தரசன்: ஸைந்தவன் எனப்படுவன்: இவன் துரியோதனனின் உடன்பிறந்தவளான துச்சளை யின் கணவன், சமரதத் தலை வன், அணி-19.

சராசந்தன் - இடிபோன்றவன்: அவனுக்கு அஞ்சிக் கிருஷ்ணன் துவரையை அரணுகக்கொண்டு வடமதுரையைக் கைவிட்ட னன், கிருட்-47.

சல்லியன் - மத்திரதேசத்தரசன்: படை-15: துரியோதனன் வஞ் சனையாக இட்ட விருந்தை யுண்டு அவற்கே போர்த்துணை வனுனன், படை-16: சமரதத் தலைவர், அணி-19.

சாத்தகி - பலராமகிருஷ்ணர்க் குத் தம்பி, பலராமனைப் பழித்தவன், உலூக - 4: சமா தானங் கூடாது என்றவன், கிருட்-46, 47.

சிகண்டி-அலிவடிவாகத் துருபத னிடத்துப் பிறந்தவன்: வீடு மனை விண்ணுலகேற்றும் ஆற்ற லுடையான், படை-3.

சுவேதன் - விராடனது மூத்த குமாரன்: தருமனுல் சேனைபதி யாக்கப்பட்டவன, படை - 12. பாண்டவ சேனைக்கு முகம் போன்றவன், அணி-16.

தருமன்-முரசகேதனன், உலூக - 6: 7: அறத்தின் மைந்தன், சஞ்-4, 5: 19: கிருட் - 219: சுகனை நிகர்ப்பவன், சஞ்-9: ராயசூயம கஞ்செயும் வீரமாமுனி, சஞ்-17: அறத்தின் உருவம்போல்வான், கிருட் - 6: கோதிலான், கிருட்-9: புகழேபூண்பான், கிருட்-18: பொறைவேந்தன், கிருட்-25: பாண்டவசேனைக்கு மார்புபோன்றவன், அணி - 16.

திட்டகேது - திட்டத்துய்மன் மகன், படை - 3.

திட்டத்துய்மன்-துருபதன் மகன்: திரௌபதியுடன் ஓமத்தீயி னின் றும் தோன்றியவன்: துரோணனைக்கொல்லும் வன் மையுடையவன், படை-3.

திருதராட்டிரன் - கண்ணிலாவரசன், சதுரங்கசேனையினன், உலூக - 5: பின்புத்திக்காரன், சஞ் - 15: காவுறையும் மனத்தன், கிருட்-8: அருளிலி, கிருட்-14: அம்பிகையென்பவளின்மகன், கிருட்-211; கயம்படு மனத்தன், முகூர்-1.

திரௌபதி - கனலிற்றோன்றியவள், உலூக-18: தீண்டாதகற் புடைய செழுந்திரு, கிருட்-24: ஏத்தரிய பெருங்கற்பினள், கிருட்-48: பெண்ணீர்மை குன்றாப் பெருந்திரு, கிருட்-51

துச்சாதனன்-புயவலியால் மாதை விரிதுகிலுரிந்தவன், கிருட்-175.

துரியோதனன் - [சுயோதனன்] யுதிட்டிரனைச் சூதிலுல்வென்று பல்லாண்டடிப்படவாண்டவன், உலூக - 3: அரவவெங்கொடியோன், உலூக-8: குருகுலத்தவன், உலூக - 13: கல்வியாய நெஞ்சிலாதவன், உலூக - 14: சித்தசித்துணர்விலாதான், வாசு 7: பராசரன் குலத்தினன், சஞ் - 9: பாண்டவரின் உரிமை கவர்ந்தவன், கிருட்-14: கோடுகின்ற மொழியவன், கிருட்-19: திரௌபதிக்கு மாசளித்தவன், கிருட்-45: மல்வரையதோளான், கிருட்-55: வலம்புரித்தாரவன், கிருட் - 73: முறைமைமாறினவன், கிருட்-104: இராசராசன், கிருட் - 105: பொய்வளர்ந்த மொழிமன்னன், கிருட்-120: நாசமுறுபோன், கிருட் - 134: கடியவன், கிருட் - 183: நாகவிடம் நிகர்மனத்திலுன், கிருட்-190: மறலியெனத் தகுபவன், கிருட்-191: வஞ்சகன், கிருட்-192: கர்ணனுக்குக் கைவருந் துணைவன், கிருட்-261: வான்வணங்கிலும் வணங்கலாமுடியினன், படை-9: சதமகற்குவமை சாலும் தாணிபன், படை-23.

துரியோதனனுக்குத் துணையாய்வந்தவரிற் சிலர் - விந்தன், விந்தன், சோமதத்தன், கௌசிகன், போசன், ஆதிகேயன், திகத்தபூபன், கவுடராசன், மாளவன், சோமன், சோன், ஓகதீகன், நாராயணகோபாலர் பதினொருயிரவர், பூரிச்ரவசு, கௌரிமா, துச்சாதனன் முதலாய தம்பியர் தொண்ணூற்றொன்பதின்மர், விகத்தசேனன், பகதத்தன் முதலியோரரவர், படை - 17-22: தன்மருடன், கிருதவன்மா, சயத்திரதன், அணி-19.

துருபதன் - பாஞ்சாலராசன், யாகசேனன் எனப்படுவன், திரௌபதியின் தந்தை, படை-3.

துருவாசமுனிவன் - குந்திதேவி கன்னியாயிருந்த காலத்து அவளுக்கு ஐந்தமந்திரம் உபதேசித்துப் புத்திரபாக்கியத்தைப்பெறுமாறு கூறிப்போனவன், கிருட்-152, 220.

துரோணன்-வேதியர்கோன், உலூக-7: பரத்துவாசகுமாரன், உலூக-15: சுருதியா லுயர்ந்தவன், கிருட்-100.

துரௌபதர் - [த்ரௌபதேயர்] - திரௌபதியிடம் தோன்றிய ஐவர் மகார்; உபபாண்டவர் எனப்படுவர்: அவர்கள் பெயர் - விந்தன், சோமன், வீரகீர்த்தி, புண்டலன், செயசேனன், படை - 5.

துவரை - துவாரகை; கண்ணனது இராசதானியான ஊர், உலூக-5: வாசு-3: வைகுண்டமகரம் பூமியில் வந்தது போன்றது, வாசு-7.

நகுலன் - அக்கினியெனத் தக்க நிறலுடையன், கிருட் - 219: பாண்டவசேனைக்குக் கால்போன்றவன், அணி-16.

பட்டவர்த்தனன் - மகுடவர்த்தனனுக்கு மேற்பட்டவன்: [மகுட

வர்த்தனன்-ஒரு கோடிகிராமம் ஆள்பவன்], கிருட்-103.

பராசரன் - வியாசமுனிவரது தந்தை, சஞ்- 9.

பாண்டவர்- தலைகோத்துபடைத்த பன்னகம் போன்றவர், ஒருவர் இறக்க மற்றை யோரும் இறப்பர்: கிருட்-162: தனித்தனியே வஞ்சினங்கூறியவர், கிருட்-216: உண்மையி னுயர்ந்தவர், கிருட்-218: கிருஷ்ணனுக்கு மைத்துனராவர், கிருட்-264: யாமளத் தின்படி காளி முன்னர் பகடாதியாக பலிகளீர்த்தனர், களப் - 8.

பாண்டு - பஞ்சபாண்டவர்களின் தந்தை, உலூக-10.

புரூரவன் - ஊர்வசியை அவுணர் கவர்ந்திட இந்திரன்பொருட்டு அவருடன் பொருது அவளைச் சிறைமீட்டவன், கிருட்-28.

பூதனை - கண்ணனை முலையூட்டிக் கொல்லவந்த அலகை, சஞ்-1.

மகுடவர்த்தனன் - ஒருகோடி கிராமம் ஆள்பவன்: பட்டவர்த்தனனுக்குக் கீழ்ப்பட்டவன், கிருட்-103.

மந்தேகர் - மந்தேகாருணமென்னும் துவீபத்தில் வாழும் அரக்கர்: இவர்கள் செருக்கிச் சூரியனை வளைத்து எதிர்த்துப் போகவொட்டாது தடுத்துப் போர் செய்கின்றனர்: அந்தணர்கள் சந்தியாகாலங்களில் மந்திரபூர்வமாகக் கையிலெடுத்து விடும் அர்க்கியநீர்த் தங்கள் வச்சிராயுதம் போலாகி அவர்கள்மேல் விழுந்து அவர்களை அப்பால் தள்ளிச் சூரியனது சஞ்சாரத்துக்குத் தடையில்லாதபடி செய்கின்றன: கிருட்-86, 87.

வராககேது - விராடனுடைய உறவினன், படை-4.

விகன்னன் - துரியோதனன் இளைத்தம்பி: நீதிகளைநன்குணர்ந்து பேசுபவன்: கிருட்-172, 174.

விதுரன் - பாண்டவர்பக்கல் மெய்யன்புடையவன், உலூக - 7. வில்லில்வல்லவன், உலூக 14. தத்துவஞான மிக்கவன், கிருட்-75: ஞானகஞ்சுகம் உடையவன், கிருட்-85: நீதிபுனைந்தவன், கிருட்-106: கண்ணபிரான் தன்னில்லில் இரண்டுதினம் வைகுதற்கு எண்ணிலாத தவமெய்தினவன், கிருட் - 131. புரையில் கேள்விப்பயன் நுகர்மனத்தினன், கிருட்-147: மாதவத்தின் மிக்கவன், கிருட்-163. பலராமனுடன் தானும் தீர்த்தயாத்திரை சென்றவன், அணி-5.

விராடன்-மச்சநாட்டார் கோமான்: சுவேதன், உத்தரன், இருவர்க்கும் தந்தை, படை-4.

விருடசேனன்- கர்ணனது புத்திரருள் மூத்தவன், அணி-20.

வீடுமன் - விந்தமனனதோளான், உலூக - 9, கங்காபுத்திரன், உலூக-17: வாசு-2: கிருட்-74: இளையதாய் பயந்த இருதம்பியர்க்கு வாழ்வும் அரசும் கொடுத்தவன், கிருட்-117: அசைவிலாதவன், கிருட்-138: பரசுராமனிடம் வில்வித்தை கற்று அவனையே வென்றவன், துரியோதனனால் சேனபதியாக்கப்பட்டவன், படை-24: பண்ணளி செருக்கொழிய மாதரிரு கண்ணளிபடாத மீளி, அணி-31.

வீமன்-துரியோதனனை அந்தரசரித்தர் கொண்டேகாமல் வெஞ்சிறை மீட்டான், உலூக-18. மாருதி தம்பி, சஞ்-13: பவனகுமாரன், கிருட்-17, 219: குருகுலத்தோர் போரேறு, கிருட்-17: பாண்டவசேனைக்குத் தோல் போன்றவன், அணி-16.

அரும்பதவகராதி முதலியன

அக்குரோணி - அக்ஷௌஹிணி யென்னுந்தொகை, வாசு - 18, இருட்-100, படை-8, 23
அகத்தியன் விந்தம் ஒடுக்கியது, இருட்-198
அகந்தை-செருக்கு, சஞ்-8
அகப்படை-அந்தரங்கமான சேனை [மூலப்படை], அணி-12
அகம்-வீடு, இடம், இருட்-107
அகிலநாயகன் - திருமால், கண்ணபிரான், இருட்-99
அகிலம்-எல்லாப் பொருள்கள், இருட்-99, உலகம், இருட்-204
அங்கர்பூபதி-கர்ணன், இருட்-136
அங்கை கொட்டுதல், பரிகாசக் குறிப்பு, உலோக 20
அச்சுதன்-திருமால், அருட்-132
அசரீரி-ஆகாயவாணி, இருட்-242
அசலம்-மலை, அணி, 25
அசித்-உணர்வில்லாதது, தேகம், வாசு-7
அசுவத்தாமனுக்குச் சுப்பிரமணியன் உவமை, இருட்-224
அசைவு-சோர்வு, இருட் - 138, சலனம், கலக்கம், அணி-18
அடங்க-முழுவதையும், அணி-32
அடர்த்தல் - முறித்தல், அழித்தல், இருட்-82, 120
அடர்தல்-போரிடுதல், வாசு-16
அடல்-வலிமை, இருட் - 26
அடலாண்மை-பலபராக்கிரமங்கள், இருட்-120
அடவி-காடு, உலோக-10, சஞ்-4
அடாது செய்தவர் படாதுபடுவர், இருட்-251
அடிசில்-உணவு, இருட்-83,108
அடுதல்-கொல்லுதல், இருட்-11
அண்டம் - உலகவுருண்டை, இருட்-98
அண்டமுகடு, இருட்-202
அண்டர்-தேவர்கள், இருட்-192
அண்ணல் - ஆண்பாற் சிறப்புப் பெயர், இருட்-105 [164
அணங்கு-பெண், இருட்-25, 58,
அத்திலுபுரியெனும் அணங்கு, இருட்-58
அதலம்-பாதாளம், இருட்-191
அதி - மிகுதிப்பொருள தோர் உடைச்சொல், அணி-34
அதிசயம்-வியப்பு, சஞ்-15
அதிசயோக்தி, இருட்-74, 81
அதிதர்,இருட்-176, அணி-1
அந்தணன் - அகத்திய முனிவன், இருட்-198, திருவாசமுனிவன், இருட்-220
அந்தம்-கடைசி, இருட்-31
அந்தாசரிதர்-கந்தருவர்கள், [அந்தரம்-ஆகாயம்]; உலோக-18
அந்தாதாந்தபி, இருட்-243
அந்தரம்-ஆகாயம், இருட்-243
அந்தன்-குருடன், உலோக - 6, வாசு-8
அநந்தம்-அநேகம், வாசு-4
அநந்தன்-ஆதிசேடன், இருட்-186
அம்-அழகிய, இருட்-27
அம்பாத்தவர்-தேவர், இருட்-137
அம்பரம் - கடல், ஆகாயம், படை-21
அம்பு-நீர், இருட்-203
அம்ம - வியப்பிடைச்சொல், இருட்-81
அம்மா - வியப்பிடைச்சொல், உலோக-12
அமர்கருதுதல் - போரை விரும்புதல், இருட்-133
அமரர்-தேவர், இருட்-5
அமருலகமேறுதல் - இறத்தல், சஞ்-18
அமளி-சயனம், படுக்கை, இருட்-168

அமையாமல்-போதாமல், இருட்-22
அமையும்-போதும், இருட்-134
அயம்-குதிரை, அணி-10
அயர்தல் - சோர்வடைதல், இருட்-122
அயில்-வேல், இருட்-196, 205
அர்த்தரதர், அணி-3
அரசியல்-அரசாட்சியின் இயல்பு, இருட்-117
அரம்பை-ரம்பா: ஊர்வசி யென்னுந் தேவமகள்: இருட்-28
அரவம்-பாம்பு, உலோக-8, ஓரவாரம், இருட்-8
அரவமின்-உலூபி என்னும் நாக கன்னிகை, படை-12
அரவமின்மகன் - இராவான், படை-12
அரவினம் - பாம்பின் கூட்டம் [அஷ்டமகா நாகங்கள்], சஞ்-14
அரன் - சிவபிரான், இருட்-132, உருத்திரரூபி, இருட்-209
அராதிருபன்-ஆதிசேடன், இருட்-119
அராவணை-ஆதிசேடசயனம், வாசு-1, இருட்-91
அரி-சூரியன், இருட்-232
அரியேறு-ஆண்சிங்கம், இருட்-76
அருக்கன் - சூரியன், இருட்-184, அணி-33
அருடி - சொல்லியருள்வாய், இருட்-149 [அருள் + இ]
அருத்தி-விருப்பம், இருட்-241
அருவி-சிந்தா அருவி, இருட்-184
அருள்வெள்ளம்-கருணைப்பெருக்கு, இருட்-4
அல் இராத்திரி, இருட்-181
அலகை-பேய்மகள், சஞ்-1
அலங்கல்-மாலை, இருட், 156,175
அலமரல்-தளரல், இருட்-238
அலைத்தல்-உதறல், இருட்-251
அவசம்-வசமிழத்தல், இருட்-234
அவனி-பூமி, இருட்-8
அவனிபன், அரசன், சஞ்-19, இருட்-54
அவாவுதல்-விரும்புதல், இருட்-112
அவிர்தல்-விளங்குதல், இருட்-207
அவை-சபை, சஞ்-19, இருட்-18
அழுகுதல்-கோபித்தல், இருட் - 106, 109
அளகை - அளகாபுரி, [குபேரனது] இருட்-62
அளி-வண்டு, இருட்-10, அணி-31: கருணை, இருட்-79: அன்பு, இருட்-263
அளைந்த-பரவி நிறைந்த, இருட்-98
அறன்-யமதருமராசன், சஞ்-19
அறன்தருகாலோ-யுதிட்டிரன், சஞ்-19
அறிவன்-கண்ணபிரான், இருட் - 181
அறுதி-வரையறை, உலோக-16
அறுதியிடல்-துணிதல், சஞ்-14
அறுவகைப்படைகள், அணி-12
அறை வளி-வீசுகிறகாற்று, அணி-28
அன்பு-பக்தி, இருட்-39
அன்னகடையரம்பை, இருட்-28
அன்னமும் மயில்களும்உடன்விளையாடும் வளநாடு, உலோக-11
அனந்தம்-பின்பு, இருட்-217
அனிகம்-சேனை, வ சு-9
அனிலம்-காற்று, வாயு, இருட்-51, அணி-25
அனீகினி-சேனை, படை-22, அணி - 18
அனுசர்-தம்பிமார், சஞ்-5
ஆகண்டலன் - இந்திரன், இருட் - 231
ஆகமம்-மரம், இருட்-185
ஆகான் - இருப்பிடமாகவுள்ளவன், இருட்-209
ஆசு-குற்றம், இருட்-66
ஆசுகம்-அஸ்திரம், இருட்-158
ஆடல்-வெற்றி, இருட்-136
ஆண்டு-அப்பொழுது, இருட்-257
ஆதபத்திரம்-குடை, இருட்-88
ஆதபன்-சூரியன், இருட்-154
ஆதாம்-ஆசை, இருட்-252
ஆதவன் - சூரியசொரூபி, இருட் - 210

ஆனிரை - பசுக்கூட்டம்; உலோக - 19
ஆயிராமம் - ஸஹஸ்ராமம், இருட் -213
ஆயோதனம் - போர், இருட்-226
ஆர்தல்-பொருந்துதல், இருட்-25, நிறைதல், இருட் - 71
ஆரணன்-பிரமரூபி, இருட்-209
ஆலவட்டம் - பெருவிசிறி, இருட்-101
ஆலோசனைச்சபையில் வரத்தகாதவர்கள், இருட்-52
ஆவணம்-கடைவீதி, இருட்-64
ஆவது - நன்மையாகுங் காரியம், இருட்-142
ஆழி-சக்காப்படை, வாசு - 15: கடல், இருட்-1, 226
ஆழியான் - கண்ணபிரான், இருட்-151
ஆறிருநாமத்தோன் - கண்ணபிரான், வாசு-20
ஆறு-வகை, இருட்-36
ஆறுவகைச்சேனை, படை-17
ஆனனம்-முகம், அணி-16
ஆனு-நீங்காத, இருட்-225
இகல்-வலிமை, உலோக - 13, இருட்-179, பகைமை, இருட்-35
இகலுதல்-பகைத்தல், இருட்-99
இசை-ஸ்வரம், இருட் - 105; கீர்த்தி, இருட்-130
இசைகொள்வேய், இருட்-105
இசைக்கும்-உவமவுருபு, இருட்-69
இசைத்தல் - சொல்லுதல், ஒலித்தல், இருட்-69
இடத்தல் - (கோட்டாற்) குத்தியெடுத்தல், இருட்-59
இணை-இரண்டு, இருட் -37,78,238
இதயத்திண்மை - மனவுறுதி. தைரியம், இருட்-218
இதயம் கரி, உலோக-4
இதம்படல்-இனிமை பொருந்தல், இருட்-95
இந்தனம்-விறகு, இருட்-146
இந்திரன்கிழக்குத்திக்குப்பாலகன், இருட்-184
இந்திரன் மலைகளின் சிறகறுத்தமை, இருட்-195
இந்து-சந்திரன், இருட்-248
இபம்-யானை, அணி-10
இம்பர்-இவ்வுலகம், இருட்-137
இமிர்தல்-ஒலித்தல், இருட்-182
இமைப்பிலார் - தேவர்கள், இருட்-83
இயந்திரஎகினம் - ஹம்ஸயந்திரம், மூகூர்-4
இயம்-வாத்தியம், இருட்-72
இயல்-தன்மை, இருட்-167
இயைபுத்தொடை, இருட்-66
இரட்ட-வீச, இருட்-54,84
இரட்டி - இரண்டு மடங்கு, இருட்-181
இரவி-சூரியன், இருட் - 99, 138, 139
இரவிசிறுவன்-கர்ணன், இருட்-139
இரவு-இரத்தல், இருட்-15, 83
இராசமண்டலங்கள்-அரசர் கூட்டங்கள், படை-23
இரு-பெரிய, இருட்-171,237
இருக்கை-இருப்பிடம், இருட்-188
இல்-வீடு, இருட்-107,108
இல்லாதவர்-ஏழை, இருட்-235
இலக்கு - இலட்சியம், குறி, இருட்-244
இலஞ்சி-நீர்நிலை, உலோக-11
இவுளி-குதிரை, அணி-7
இளி-இழிவு, இருட்-123
இளைஞர்-சிறியோர், இருட்-175
இளைத்தல் - பின்னிடைதல், இருட்-9,13
இளையாள் - திருமகள்; திருமண பதிக்கு உவமையாகுபெயர், இருட்-48
இறத்தல்-தங்குதல், இருட்-70
இறுதல்-ஒழிதல், இருட்-192
இன்னே - இப்பொழுதே, இருட்-234
இனைதல்-சோகித்தல், இருட்-262
ஈட்டம் - கூட்டம், இருட்-65
ஈண்டுதல்-கூடுதல், படை-19
ஈர்தல்-அறுத்தல், இருட்-195

ஈரம்-அன்பு, சஞ்-17
ஈறிலா உலகு - முத்தியுலகம், சஞ்-8
ஈனம்-குறைவு, கிருட்-29
உகண்டு-துள்ளி, கிருட்-94
உகளுதல்-துள்ளுதல், கிருட்-5,23
உகிரிழந்தவெம்புலி, [உகிர்-நகம்], உலாக-17
உகுதல்-பெருகுதல், சஞ்-16
உட்குதல்-அஞ்சுதல், கிருட்-193, அணி-12
உடற்றல் - போர் செய்தல், உலாக-15
உடுபதம் - நக்ஷத்திர மண்டலம், கிருட்-60
உத்தமோசா, படை-3
உத்திரம்-வீட்டம், கிருட்-102
உதணம்-அலகில்லா அம்பு; மொட்டம்பு, கிருட்-204
உததி-கடல், சஞ்-3; அணி-30
உதயாகம், கிருட்-185
உதாமன்-யுதாமன்யு, படை-3
உதாரசீலன்-கர்ணன், கிருட்-134
உந்தி-நாபி, கிருட்-110
உந்துதல்-தள்ளுதல், கிருட்-161
உம்பர்-தேவர், கிருட்-57; மேலிடம், தேவலோகம், கிருட்-137
உம்பர்கா - தேவலோகத்துக் கற்பகச்சோலை, கிருட்-157
உம்பர்கா அணைய கையான்-கர்ணன், கிருட்-157
உம்பர்நாயகன் - கண்ணபிரான், கிருட்-57
உய்தல் - பிழைத்துவாழ்தல், கிருட்-33
உய்வு - தப்பிப்பிழைத்தல், கிருட்-162
உயர்வுநவிற்சியணி, கிருட்-58
உயவி-ஆலோசித்து, சஞ்-2
உரகபுங்கவன் - ஆதிசேடன், கிருட்-90
உரகம்-பாம்பு, கிருட்-90
உரகர்-நாகர், படை-21, அணி-6
உரம்-வலிமை, உலாக - 15, கிருட் - 33, 223; மார்பு - வாசு - 11, கிருட் - 196, 207
உரவோன் - வலிமையுடையோன் கிருட்-223
உரிதல்-கவர்தல், கிருட்-24, 28
உரிமை-உரிய இராச்சிய பாகம், கிருட்-111
உருத்தல் - கோபங்கொள்ளல், கிருட்-5
உரும் - இடி, சஞ் - 13-47; கிருட்-115
உருமுதவசன்-இந்திரன்[உருமு-இடி], அணி-28
உருவகவணி, கிருட்-50, 165
'உரைத்தும்' என்னும் உத்தி, கிருட்-108
உரைதவிர்த்தல் -பேச்சை யடக்குதல், கிருட்-53
உலகுவிற்சியணி, கிருட்-80
உலகெலாம் உதவும் உந்தியான்-கண்ணபிரான், கிருட்-115
உலாகம்-குதிரை, உலாக-5
உலாகலம்-உரல், உலாக-5
உலக்கனலன்ன பிள்ளைகள், சஞ்-3
உவமையணி, உலாக - 17, கிருட்-56, 148, 163, 164, 166
உவர்நிலம்-களர்நிலம், கிருட்-25
உழக்குதல்-கலக்குதல், கிருட்-93
உழி-இடம், கிருட்-172, 245, படை-13
உழை-பக்கம், இடம், சஞ்-14; மான், கிருட்-167
உழைமுதல் எழுப்புவன இசை, அணி-27
உள்-உள்ளிடம்; மனத்திற்கு இடவாகுபெயர், சஞ்-18
உள்ளவர்-செல்வர்கள், கிருட்-235
உள்ளுதல் - நியானித்தல், கிருட்-79
உளம் கருகுதல்-மனம் வெதும்புதல், கிருட்-106
உற்பலம்-கருங்குவளை, வாசு-9
உற்பவம்-சன்மம், பிறப்பு, சஞ்-7
உற்றபகை - மிக்கபகையாளி, கிருட்-127
உறவு-பந்துத்துவம், கிருட்-156

உறவு கூர்தல் - உறவு கொண்டாடுதல், இருட்-104
உறுகணை-அடைந்துள்ள காகாஸ்திரம், இருட்-259
உறுதிகள் - நன்மைதருவன, உலோக-16; இருட்-17,158,236
உறைதல் - வசித்தல், பொருந்துதல், இருட்-149
உன்னுதல் - எண்ணுதல், ஆலோசித்தல், இருட்-108
ஊடு-இடையிலே, சஞ்-16
ஊர்கோள்-மண்டலம், இருட்-226
ஊர்தி-வாகனம், இருட்-22
ஊனம்-குற்றம், இருட்-12
எஇனம்-அன்னம், முகூர்-4
எஞ்சுதல் - உயிரொடுங்குதல், இருட்-3, 216
எடுத்துக்காட்டுவமையணி, இருட்-122, 171
எண்-அளவு, இருட்-131, ஆலோசனை, இருட்-172
எண்குன்றம் - அஷ்டகுலபர்வதங்கள், இருட்-203
எண்மை-எளியது, இருட்-246
எதிர்ந்தோர் - போரில் எதிரிட்டவர், இருட்-23
எதிரெதிர்மயங்கல், இருட்-63
எதுகாள்-எத்தனைநாள், அணி-31
எயில்-மதில், இருட்-70
எயினர்-வேடர்கள், இருட்-171
எரி-அக்கினி தேவன், இருட்-158
எல்-பகல், இருட்-179
எழில் - அழகு, வாசு-6, இருட்-54, 97
எழிலி-மேகம், வாசு-6, சஞ்-13, படை-13
எழு-தூண், அணி-25
எழுந்தருள் - புறப்பட்டுச் செல்வாய், சஞ்-18
எழுபார் - எழுதீவுகளாகவுள்ள பூமி; இருட்-26, அணி-26
எழுபுவி - எழுதீவுகளாகவுள்ள பூமி, இருட்-118
எழுபெயர்க்குலமுதில் - சப்தமேகம், அணி-8
எற்றுதல்-தாக்குதல், இருட்-68, உதைத்துத் தள்ளுதல், இருட்-203
என்பு-எலும்பு, இருட்-197, 250
என்றூழ்-சூரியன், [எல் - ஒளி] இருட்-262
எனதாய் - எத்தன்மையதாய், அணி 30
எ-அம்பு, இருட்-122
ஏகாந்தம் - இரகசியமான இடம், இருட்-255
ஏத்துதல்-புகழ்தல், இருட்-61
ஏதி-ஆயுதம், அணி-21
ஏதிலார்-அயலார், இருட்-111
ஏதுத்தற்குறிப்பேற்றவணி, இருட்-85,183; அணி-29
ஏதுத்தற்குறிப்பேற்றவுவமையணி, இருட்-89
ஏய்தல் - பொருந்துதல், எழுந்தருளல், இருட்-105
ஏழ்நாகு, சஞ்-11
ஏற்றம்-உயர்வு, இருட்-254
ஏறு-ஆண்சிங்கம், இருட்-17,34
ஏனம்-பன்றி, உலோக-1
ஏனல்-தினைப்பயிர், இருட்-2
ஐந்தலைநாகம், இருட்-162
ஐயநிலையுவமையணி, இருட்-62
ஐயவுவமையணி, இருட்-80
ஐயிருதாமத்தோன் - அருச்சுனன், வாசு-20
ஒசித்தல்-முறித்தல், சஞ் - 19, இருட்-11
ஒட்டர் - ஒட்டதேசத்தரசர், படை-6
ஒட்டுதல் - சபதஞ்செய்தல், படை-3
ஒத்துதல் - அழுத்துதல், தாள அடைவுபடல், இருட்-201
ஒப்பனை-அலங்காரம், இருட்-71
ஒல்லை-விரைவு [இடைச்சொல்], இருட்-215
ஒவ்வுதல் - உடன்பாடாதல், இருட்-18
ஒழி - தணிவுப்பொருளுணர்த்துவது, இருட்-40

ஒன்றுதல் - பொருந்துதல், இருட்-40
ஒன்னலர்-பகைவர், சஞ்-16
ஒக்கும்-தகும், இருட்-262
ஓதனம்-அன்னம், இருட்-127
ஓதை-ஓசை, இருட்-168
ஓதையமர்தல் - ஓசையடங்குதல், இருட்-168
ஓம்-அங்கீகாரப் பொருளே யுணர்த்தும் வடமொழியிடைச்சொல், இருட்-40
ஓருழைசார்தல்-பட்சபாதமாதல், சஞ்-14
ஓலை-திருமுகம், படை-14
ஓவல்-ஒழிதல், இருட்-104
ஓவலின்றி-சும்மா இராமல், இருட்-104
ககனம்-ஆகாயம், இருட்-166, 191, 197, அணி-11
கங்குல்-இராத்திரி, இருட்-97
கங்கை திருமாலின் காலினின்று பெருகுதல், இருட்-91
கங்கைநீர்நுரை × நரைத்த வெண்மயிர், இருட்-238
கஞ்சுகம்-கவசம், இருட்-85
கட்டுரை - உறுதிமொழி, உலோக-3; வாசு-19
கடம்-கன்னம்; மதநீருக்கு இடவாகுபெயர், அணி-14
கடலாடை அவனி, இருட்-8
கடவ நாள்-கடமைப்பட்டனவான நாள்கள், இருட்-92
கடவுட்குலவாசன் - இந்திரன், இருட்-230
கடவுதல் - ஏறிச்செலுத்துதல், இருட்-196
கடவுள்-தெய்வத்தன்மை, சஞ்-13; இருட்-15, 138
கடவுளர்-தேவர்கள், இருட்-196
கடன்-கடமை, இருட்-86, 253
கடாவுதல்-செலுத்தல், இருட்-136
கடி-ஒலி, அணி-27
கடிகை-நாழிகை, இருட்-181
கடுங்கதை - கொடிய கதாயுதம், சஞ்-15
கடுப்ப-ஒப்ப, இருட்-58
கடைத்தலை - வாயிற்புறம், இருட்-253
கடைநிலம் - இறுதியிடம், இருட்-18
கடைப்பிடிகருமம் - உறுதியாகக் கொண்ட செயல், இருட்-261
கண் - தன்மை, அடிக்கப்படும் இடம், படை-11
கண்களால் அருந்துதல், இருட்-79
கண்சிவத்தல், கோபக்குறி, இருட்-126
கண்பரப்பல்-நன்றாகப் பார்த்தல், இருட்-104
கண்மலர்பரப்புதல் - குளிரப் பார்த்தல், இருட்-75
கண்வளர்தல் - துயிலுதல், இருட்-96
கணம்-கூட்டம், அணி-6
கணிகை-வேசை, இருட்-97
கணிகைமாதர் - வேசைமகளிர், இருட்-165
கணையம்-வளைதடி, இருட்-205
கதம்-உக்கிரம், வலிமை, அணி-23
கதிரவன்-சூரியன், இருட்-153
கதிரைத்திங்கள் ஒன்றிய பகல்-அமாவாசை, முகூர்-4
கதுமென-விரைவாக [இடைச்சொல்], இருட்-12
கதுவுதல்-பற்றுதல், இருட்-146
கந்தடுகளிறு, இருட்-188
கந்தம்-பரிமளம், இருட்-105
கந்து-கட்டுத்தறி, இருட்-82
கமடம்-ஆமை, உலோக-1
கமலாசனி-திருமகள், இருட்-209
கமுகம் × காவணம், இருட்-56
கயம்-கயமை, கீழ்மை, முகூர்-1
கயிரவம்-ஆம்பல்மலர், இருட்-6, செவ்வல்லி, 165
காரணன் அர்த்தாதனுகவைத்தற்குக் காரணம், அணி-20, உரை
காரடம்-மதஜலம், இருட்-122
காவு-வஞ்சனை, இருட்-8
கரி-சாட்சி, இருட்-224

கரியமாமுகில் - கிருஷ்ணன், உலோக 2
கருடக்கொடியோன் - திருமால், கண்ணபிரான், கிருட்-197
கருத்துடையடை கொளியணி, கிருட்-93
கருதலர்-பகைவர், கிருட்-46
கரும்பொழுது - இராப்பொழுது, கிருட்-171
கருமம்-தொழில், கிருட்-171
கருவிளமலர், கிருட்-167
கல்லினல் வருகல்முகில் விலக்கிய கரியமாமுகில் - கண்ணபிரான், உலோக-2
கவந்தம்-உடற்குறை, சஞ்-16
கவரி-சாமரம், கிருட்-54, 101
கவனம்-குதிரையின் நடை, கதி, அணி-8
கவி-குரங்கு, கிருட்-200
கவிக்கு இறை-சுக்கிரீவன் [கவி - குரங்கு], கிருட்-197
கவிகை-குடை, கிருட் 227
கவின-விளங்க, களப்-8
கழி - மிகுதி (உரிச்சொல்), கிருட்-174
கழை - மூங்கில்; வேய்ங் குழலினிசைக்கு இருமடியாகுபெயர், கிருட்-221
களாவேள்வி, சஞ்-17
களரி-படிக்கம்; தாம்பூலம் முதலியவை ஏந்தும் ஒருவகைப் பாத்திரம், கிருட்-101
கறங்குதல்-ஒலித்தல், கிருட்-89
கற்பகம்-கல்பகமரம், கிருட்-137
கற்பகமும் நாண வண்மையி னுயர்ந்தவன் - கர்ணன், கிருட்-137
கற்பாந்த திவசம்-கல்பகாலத்தின் முடிவுநாள், கிருட்-234
கறி-கறியமுது, கிருட்-83
கறுத்தவர் - கோபித்தவர், பகைவர், கிருட்-241.
கறை-உரல், அணி-6
கன்றுதல்-கோபித்தல், [கன்று ஸினம்-மிக்ககோபம்], கிருட்-52
கன்னி - மணமாகாத இளமகள், கிருட்-152
கனகப்பூங்கா - கற்பகச்சோலை, கிருட்-38
கனகம்-பொன், கிருட்-38, 102
கனகன்-இரணியன், கிருட்-43
கனலுதல் - கோபித்தல், கிருட்-177
கா-சோலை, கிருட்-185
காக்கெயன் - கங்காபுத்திரனுகிய வீடுமன், உலோக-17
காத்தல் - தடுத்தல், கிருட்-35, மறைத்து வைத்தல், கிருட் - 261
காமபாலன் - பலராமன், கிருஷ்ணனது தமையன், உலோக-3
காமர்-அழகிய, கிருட்-195
காமன்-மன்மதன், கிருட்-185
கால்-காற்று, கிருட்-61
காவணம்-பந்தல், கிருட்-56
காவி - நீலோற்பலமலர், கிருட்-167
கிடங்கு-அகழி, கிருட்-59
கிளர்தல்-விளங்குதல், கிருட்-84
கிளைஞர்-உறவினர், கிருட்-8, 95
கிரௌஞ்சமலை துளைபட்டமை, கிருட்-196
கீழ்த்திசை - இழக்குத்திக்கு, கிருட்-99
குஞ்சரம்-யானை, கிருட்-122
குடதிசை - மேற்குத்திக்கு, கிருட்-85
குடில்-குடிசை, கிருட்-80
குடை-ஆஞ்ஞை, கிருட்-20, 28
குந்தம்-எறியீட்டி, கிருட் - 199; கைவேல், கிருட்-205
குத்துதல் - உட்காருதல், கிருட்-161, 199
கும்பம்-குடம்; பூர்ண கும்பம், கிருட்-166
குமுதம்-ஆம்பல், கிருட்-97
குயிற்றுதல் - பதித்தல், அமையச்செய்தல், கிருட்-56
குரங்குத்துவசம் உடையவன் அருச்சுனன், கிருட்-234

குரம் - குதிரையின் காற்குளம்பு, அணி-7
குரவர்-பெரியோர், இருட்-109
குரிசில் - ஆண்பாற்சிறப்புப்பெயர், இருட்-78, 247; படை-24
குருகுலத்துமுதல்வன் -புரூரவன், இருட்-28
குருநிலம் - குருகேஷேத்திரம். இருட்-120
குரை-ஒலிக்கின்ற, அணி-24
குலகிரி ஏழு, படை-22
குலம்-கூட்டம், இருட்-116
குவடு-சிகரம், இருட்-194
குழல்களைதல் - கூந்தலையரிதல்; கூந்தலைக் கூட்டி முடித்தல் எனினுமாம், இருட்-35
குழிபறித்தல் - பள்ளந்தோண்டுதல், இருட்-179
குறள்-வாமனவடிவம், உலோக-1
குறித்தல்-சிந்தித்தல், இருட்-142
குனித்தல்-வளைத்தல், உலோக-16
குனிவு-வளைவு, அணி-9
கூர்தல்-மிகுதல், இருட்-75
கூனல்-வளைவு, உலோக-1
கெழு-விளங்குகிற, இருட்-96
கெழுமுதல் - கலந்து ஒருமித்தல், இருட்-112
கேசரி-ஆண்சிங்கம், இருட்-84
கேசரித்தவிசு - சிங்காதனம், இருட்-84
கேசவன் - கண்ணபிரான், இருட்-84, 247
கேண்மை-அன்பு, இருட் - 247; நிகேதநமும் [சமாதானவழி], படை-10 [இருட்-232
கேண்மோ, மோ-முன்னிலையசை,
கேதனம்-கொடி, உலோக, 6,7,20
கேது-கொடி, வாசு-2
கேவலம்-சிறுமை, இருட்-26
கேள்வன்-கணவன், இருட்-110
கேள்விப்பயன்-தத்துவப்பொருள், இருட்-147
கையமைத்தல் - (போதுமென்று) கையாற்குறிப்புக்காட்டுதல், இருட்-30
கையறைதல் - கையடித்துத்தரல், இருட்-122
கைவரல் - பயின்று பழகிவரல், இருட்-261
கைவழங்குதல் - கைதட்டிக் கொடுத்தல்; சபதம் செய்யுமாறு இது, இருட்-120
கொங்கை-தனம், இருட்-252
கொடிநிரைக்கு அலை வரிசையுவமை, இருட்-61
கொடிப்படை- முன்னணிச்சேனை, அணி-30
கொண்டல்வாகனன் - இந்திரன், இருட் - 243; [கொண்டல்-மேகம்]
கொந்து - கொத்து [மெலித்தல் விகாரம்], இருட்-31,156
கொல்லத்தகாதவர் இன்னரெனல், இருட்-173
கொழு-காறு, கலப்பை முனை. இருட்-50
கொற்றம்-வெற்றி, இருட்-82
கோகனதம்-தாமரை, இருட்-78
கோடு-வளைவு, உலோக-16; சங்கம், இருட்-78
கோடுதல் - நீதிதவறுதல், மாறுபடுதல், இருட்-19
கோது-குற்றம், இருட்-111
கோமளம்-அழகு, இருட்-102
கோயில்-அரண்மனை, இருட்-68
கோலம் - வாசகம், பன்றி, இருட் - 59; அழகு, இருட் - 125, 243
கோலுதல் - வளைதல், அகப்படச் செய்தல், இருட்-178
கோவியர் - இடைப்பெண்கள், வாசு-1, இருட்-121
கோவிலங்கு-சிங்கம், இருட்-122
கோறல் - கொல்லுதல், இருட் - 173, கொல்லாதே, [எதிர்மறையேவல்], இருட்-258
சக்காப்பொருப்பு -சக்கரவாளமலை, இருட்-60
சகடம்-சகடாசுரன், இருட்-32
சகோரம் - ஒருபறவை விசேடம்;

இது நிலவை உணவாகக் கொள்ளும், இருட்-167
சங்கவண்ணன் - பலராமன், வாசு-19
சண்டம்-உக்கிரம், இருட் - 47; பயங்காம், இருட்-202
சத்திரம்-குடை, படை-15
சததளம்-தாமரை, இருட்-97
சதம்-நூறு, அணி-13
சதமகன்-இந்திரன், படை-23
சதிப்பது-வஞ்சனையாகவெல்வது, இருட்-178
சதி-தானவலகை, அணி-13
சந்தம்-அழகு, இருட்-132,236
சந்திரன் - சந்திரகலை, மூக்கின் இடப்பக்கச் சுவாசம், வாசு-8
சந்திரனைக்கண்டு கடல் பொங்குதல், இருட்-248
சந்து-சமாதானம், இருட்-6, 41
சமயாதிபர் - மதத்தலைவர், இருட்-235
சமர்-போர், இருட்-93
சமாதர், அணி-1
சமைத்தல்-அமைத்து வைத்தல், இருட்-56
சாதம்-உண்மை, அணி-7
சாசரங்களுக்கு எல்லாம்தாய்குத்தி, இருட்-260
சாசரம்-இயங்குதிணைப்பொருள் நிலைத்திணைப்பொருள், சஞ்-9, இருட்-260
சாகாதல் - உலர்ந்து போதல், இருட்-126
சாரோருக சதனம்-தாமரையிலை, வாசு-2
சல்லரி-ஒருவாத்திய விசேடம், இருட்-54
சிற்பதலம் - பாதாளலோகம் [சிற்பம்-பாம்பு], இருட்-194
சிற்பம்-பாம்பு, வாசு-9
சாகம்-இலை, இருட்-8
சாதுரங்கம்-சதுரங்கசேனை, நால்வகைப்படை, படை-14
சாந்து-சந்தனமரம், இருட்-161
சாபம்-வில், சபித்தல், இருட்-228
சாமபேததானதண்டம், இருட்-2
சாமம்-பகைவரிடம் இன்சொற் சொல்லல், இருட்-2
சால-மிக, இருட்-125
சாலும்-அமையும், சஞ்-16
சிகரி-மலை, அணி-8
சித் - உணர்வுடையது, ஆத்மா, வாசு-7
சிந்து-கடல், இருட்-248, படை-23
சிந்தாம்-யானை, இருட்-11, 203
சிந்தூரம்-ஒருவகைச் செம்பொடி, இருட்-11
சிலேடையணி, இருட்-50
சிலிஷ்டரூபகம், இருட்-86, 87
சிலேடையுவமையணி, இருட்-97, 185
சிலை - தநுர்மாசம், மார்கழி, முகூர்-4
சிலையின் ஆண்மை - வில்லின் திறமை, இருட்-136
சிவபிரானின் இரவொழித்தது, இருட்-83
சிறை-காவல், உலோக-18; இறகு, இருட்-69; சீர் - தன்மை, இருட்-103
சுடிகை-உச்சிக்கொண்டை; தலை, இருட்-119, 184, 193, 197
சுண்ணம் - வாசனைப்பொடி, இருட்-84
சுதன்-மகன், வாசு-2, இருட்-74 154
சுயோதனன் - துரியோதனன், உலோக-1; இருட்-1
சுயோதனுடையர் பூமிக்குப்பாரம், சஞ்-17
சுரதரு-கற்பகவிருட்சம், இருட்-21
சுரபதி-இந்திரன், இருட்-244
சுரிகை-உடைவாள், இருட்-205
சுருதி-வேதம், இருட்-80
சுரும்பு-வண்டு, இருட்-71
சுற்றடி-சுற்றெல்லை, அணி-8
சுற்றம் கெடும் - சொல்லியேக் கேற்பச் செய்யுமென் மூற்றைக் கொண்டது, உலோக-14
சீதம்-குளிர்ச்சி, இருட்-110

சீலமற்றவர் கினந்தபோதும் ஒரு தீதிலாதவர் செயிர்க்கமாட்டார், இருட்-125
சீற்றம்-கோபம், இருட்-141, 146
சூடிகாமகுடம்-உச்சிக்கொண்டை, வாசு-4
சூரன்-சூரியன், இருட்-152
சூரியகலை - மூக்கின் வலப்பக்கச் சுவாசம், வாசு-8
சூரியசந்திரருள்ளவளவும் நரகிலெய்துவாரிவர்கள், இருட்-109
சூரியன்பகைவர் - மந்தேகர், இருட்-86
சூழ்தல் - ஆலோசித்தல், இருட்-168
சூள்-சபதம், பிரதிஜ்ஞை, இருட்-227, 228
சேகம்-நிலவுலகம், இருட்-111
சேகத்தார் - நிலவுலகத்தார், இருட்-221
செங்கோலோச்சுதல் - அரசாட்சி டாத்தல், இருட்-253
செஞ்சோற்றுக்கடன் கழித்தல், இருட்-255
செண்பகமலர்தொடும் வண்டிசைத்தல், இருட்-69
செம்பியன் - சோழன், படை-4
செய்-கழனி, இருட்-5
செய்ய-இவந்த, இருட்-126
செய்யகோல் - செங்கோல், இருட்-253
செயிர்-உக்கிரம், இருட்-6
செயிர்த்தல் - கோபித்தல், இருட்-119, 125
செருத்தொழில் - போர்த் தொழில், இருட்-150
செறுதல்-நெருக்குதல், படை-12
செறுநர்-பகைவர், இருட்-207
சென்மதேயம்-குருசேடு, களப்-7
சென்னி-தலை, இருட்-214, 259
சேய்-குமரன், இருட் - 135; முருகக்கடவுள், இருட்-224
சேவகம்-பாக்கிரமம், உஞ்ச-17
சேனையைப் புருஷரூபமாகக் கற்பித்தல், அணி-16
சேனைவெள்ளம்-சேனைக்கூட்டம், படை-20
சொட்டை-வழுதடி, இருட்-101
சொற்பொருட்பின்வருநிலையணி, இருட்-70
சோபை-ஒளி, காந்தி, இருட்-208
சோரி - இரத்தம், உஞ்ச-15, சஞ்-16
சௌபலன்-சகுனி, இருட்-178
ஞாயம்-நியாயம், நீதி, இருட்-122
ஞாலம்-நிலவுலகம், இருட்-125
ஞானகஞ்சுகவித்தான், இருட்-85
தகைதல்-தடுத்தல், இருட்-72
தண்ணளி-குளிர்ந்தகருணை, இருட்-259
தணத்தல்-விட்டுநீங்குதல், இருட்-125
தத்துவம்-மெய்ப்பொருள், இருட்-79
தந்தவண்ணன்-பலராமன், இருட்-105
தந்திரம்-சேனை, இருட்-188
தந்திரி-சேனைத்தலைவர், படை-7
தபனன்-சூரியகலை; மூக்கின் வலப்பக்கச்சுவாசம், வாசு-8
தமர்-ஞாதிகள், இருட்-144
தமாலம்-பச்சிலைமரம், இருட்-57
தாங்கம்-அலை, இருட்-61
தரணி-பூமி, இருட்-145
தாணிபன்-அரசன், [தாணி-பூமி] படை-23
தாளம்-மூத்து, இருட்-56, 102
தவர்-முனிவர்கள், இருட்-208, -213
தவளம்-வெண்மை, அணி-13
தவிசு-இருக்காதனம், ஆசனம், வாசு-9, சஞ்-6, இருட்-12, 103
தழக்கு-ஆரவாரம், இருட்-93
தளம்-சேனை, இருட்-137
தளம்பல்-நிலைகலங்குதல், முகூர்-2
தளவம்-முல்லை, இருட்-97
தளை-விலங்கு, இருட்-35
தற்குறிப்பேற்றவுவமையணி, அணி-11, 14

தற்குறிப்பேற்றவணி, வாசு - 5, 6, 7, இருட் - 59, 60, 98, 99, 184; அணி - 16
தறுகண் - அஞ்சாமை, படை-17, அணி - 12
தறுகணாளர் - நல்லவர், இருட் - 259
தறுகணுணவர் - கொடுமையையுடையவர், இருட்-259
தன்மைத்தற்குறிப்பேற்றவணி, இருட்-87
தன்மைநவிற்சியணி, இருட்-238, அணி - 10, 22
தன்னுடைச்சோதி, வாசு - 7
தனயன் - குமாரன், உலோக - 16
தனி - ஒப்பற்ற, இருட்-21, 43, 44
தனிதம் - இடி, சஞ் - 13
தாது - பூவிதழ், மகரந்தப்பொடி, இருட்-10
தாமம் - ஒளி, இருட்-132
தாய - தாவிய, இருட்-37
தாயம் - இராச்சிய பாகம், சஞ்-8, இருட்-1, 145
தாரை - நட்சத்திரங்கள், படை - 11
தாலகேது - பனைக்கொடியோன், பலராமன், வாசு - 17
தாழ்புனல் - ஆழ்ந்த நீர், இருட்-59
தாழ - ஆழமாக, இருட் - 180
தானவர் - அசுரர், இருட் - 138
தானுகான் - தானத்திற்கிருப்பிடமானவன், கர்ணன், இருட் - 236
திக்கந்தம் - திக்குக்களின் முடிவு, சஞ் - 8
திகிரி - சக்கராயுதம், இருட் - 21, 25, 73, 99, காலசக்கரம், அணி - 26 [190
திகிரியான் - கண்ணன், இருட் -
திசைக்களிறு - இருட், 118
திசைமுகன் - பிரமன், இருட்-213
திதிபன்னன்கு - சதுர்த்தசி, களப் -2
திரம் - ஸ்திரம், உறுதி, உலோக- 15
திரிகாணங்களாலும் கொண்டாடிணமை, இருட் - 208
திரிபுஎன்ற சொல்லணி, இருட் - 69, 73, 77
திரிய - மீளவும், உலோக - 3
திருத்தமா - செவ்வையாக, இருட் -263
திருந்து - அழகாகவுள்ள, இருட் - 126
திரைத்தல் - தோல்சுருங்குதல், இருட் - 238
திறம் - பக்கம், இருட் - 6; பாகம், இருட் - 11; அதிகாரம், இருட் - 222
திறல் - வலிமை, உலோக - 15; வல்லமை, இருட் - 30
தினகரன் - சூரியன், சஞ் 13, 218, 242
தீது - தீமை, குற்றம், இருட்-111
தீர்த்தன் - பரிசுத்தன், இருட்-26
தீவலஞ்செயல் - நெருப்புச்சுற்றல், இருட்-104
துகிர்-பவழம், இருட் 56, 87, 204
துகிர்த்தல்-தூர்த்தல், அணி-23
துகில்-கொடிச்சீலை, இருட்-101
துகிலுரிதல் - வஸ்திராபஹரணம், இருட்-123
துங்கம்-சிறப்பு, அணி-20
துடி - வாத்தியவிசேடம், இருட்-96; அணி-15
துண்ணெனல்-திடுக்கிடல், அணி-31
துணை-இரண்டு, சஞ்-13
துணைவன்-சகோதரன், சஞ் - 13; இருட்-8, 111
தூங்கம்-குதிரை, இருட்-87
தும்பைமாலை, போருக்கு உரியது, படை-16
தொடித்தல்-துணித்தல், வாசு-15
தொடுதலுணர்தல்- தூக்கத்தினின்றெழுதல், இருட்-105 [20
தோகத்தாமா-அசுவத்தாமா, படை
தோத்தல்-பிரயோகித்தல், செலுத்தல், இருட்-95

தராசர்-கெட்ட போராசையுடையவர், சஞ்-9
திரௌபதர்-த்ரௌபதேயர்; உபபாண்டவர், படை-5
துலாம் - வரிச்சல், கைத்துண்டு, இருட்-102
துவந்தன்-இருவினை, இருட்-77
துவரை - துவாரகை, வாசு - 20, இருட்-47, 125
துளபம்-துழாய், இருட்-110
துன்மதி-தீயஅறிவு, இருட்-215
துன்றுதல்-நெருங்குதல், இருட்-70 [52
துன்றுபிணி-மிக்கநோய், இருட்-
துன்னுதல்-நெருங்குதல், இருட்-63
துனி-கோபம், இருட்-228
தூ-பரிசுத்தகுணம், இருட்-2, 251
தூணிடைஅறைதல் சினத்தால், இருட்-120
தூமம்-புகை, உலோக-18
தூரியள் - சேய்மையிலுள்ளவள், உலோக-14
தூரிலாசை - அடங்குதலில்லாத ஆசை, சஞ்-10
தெயித்தியர்-அசுரர், இருட்-23
தெரியச்செப்புதல் - விளக்கமாகச் சொல்லுதல், இருட்-110
தெரியல்-மாலை, இருட்-159
தெரிவை-பெண், இருட்-247
தெவ்வர்-பகைவர், சஞ்-12
தொறுதல்-அழித்தல், இருட்-259
தென்புலம்-யமலோகம்; (தென்திசையிலுள்ளதென்ப), இருட்-146
தென்புலம் படர்கை - யமலோகத்துக்குச் செல்லுதல் [அழிதல்], இருட்-146
தென்புலவேந்தன்-யமன், இருட்-150
தேக்கு-ஒருவகை மரம், இருட்-161
தேசவன்-சூரியன், இருட்-247
தேயு-அக்கினி, இருட்-219
தேர்ச்சூதன்-தேர்ப்பாகன், இருட்-154
தேற்றுதல்-சமாதானப்படுத்துதல், இருட்-51
தேறுதல்-நம்புதல், இருட்-250
தேன்-வண்டு, இருட்-69, படை-9
தையல்-பெண், இருட்-251
தொடர்புயர்வுகவிற்சியணி, இருட் 60, 72, அணி-6
தொடை-மாலை, இருட்-173
தொடையல்-மணமாலை, உலோக-18
தொடைமுரண், இருட்-63
தொல்லை-பழமை, இருட்-16
தொல்லோனாயகன் - ஆதிப்பிரான், கண்ணன், இருட்-71
தோகை-மயில், இருட்-148
தோடு-பூவிதழ், இருட்-78, 92
தோண்மை-புஜபலம், படை-10
தோம்-குற்றம், இருட்-12
தோமரம்-வேலாயுதம், இருட்-206
தோல் - கேடகம் [கருவியாகுபெயர்], இருட்-206
தோற்றம் - பிரசித்தியான பேர், புகழ், இருட்-254
தோன்றல், ஆண்பாற்சிறப்புப் பெயர், இருட்-187
நகம்-மலை, இருட்-107
நகர்வட்டம், இருட்-89
நகரி-பட்டணம், இருட்-168
நகுதல்-சிரித்தல், உலோக-20
நகை-பற்கள், விளக்கம், இருட்-97
நகைத்தல்-சிரித்தல், இருட்-103
நடத்தலாற்பதஞ்சிவத்தல், இருட் -19
நடை-[குதிரையின்]கதி, வாசு-16
நந்து-சங்கு, இருட்-11
நயனம்-கண், இருட்-110, படை-1
நரவரி-நரசிங்கம், உலோக-1
நராதிபர்-அரசர், இருட்-211, 213
நரைத்தல்-மயிர்வெளுத்தல், இருட் -238
நல்லுரைமறுத்தல், இருட்-109
நவரத்தகணகிரண உடு, அணி-22
நளினம்-தாமரை, அணி-13 [-1
நளினம் வெம்பதி-சூரியன், அண
நறு-தேன், உலோக-19

நன்றிகொல்லுதல் - உபகாரத்தை மறத்தல், இருட்-109
நனி-நன்று, இருட்-136
நாகர்-தேவர், இருட்-209, 250
நா காத்தல் - தீச்சொற்சொல்லா மல்அடக்குதல், இருட்-142
நாண்மலர்-புதியமலர், இருட்-110
நாதநாயகன் - தேவாதிதேவன், இருட்-110
நாம் - அச்சம் உணர்த்தும் உரிச் சொல், உலோக-18, இருட்-189
நாராணன்-நாராயணன், இருட்-209
நால்வகைஇசைக்கருவிகள், அணி -27 [-27
நாவல்பூதலம்-ஜம்பூத்வீபம், இருட்
நாவில் விளையு மாற்றம் வெள்ளை யாகியது, உலோக-4
நா விலங்குதல்-சொல் தவறுதல், இருட்-123
நாவொருமூன்றனவாஞ் சூலம் - முத்தலைவேல், இருட்-206
நானம்-ஸ்நானம், அணி-5
நிகாம்-கூட்டம், அணி-6
நிகழ்-விளங்குகின்ற, இருட்-9
நிகழ்ச்சி - சொல், இருட்-26
நிகழ்த்துதல்-கூறுதல், சஞ் - 12, இருட்-9
நிகாரி-சூரியன், அணி-20
நிசை-இருள், இருட்-138
நித்தர் - நித்யர்; கண்ணபிரான், இருட்-200
நித்திலம்-முத்து, இருட்-103
நிமலன்-குற்றமற்றவன்,இருட் -24, 146
நிரந்தரம்-இடைவிடாமல், இருட் - 184, 245 [சஞ்-9
நிராசர் - பற்றற்ற பெரியோர்கள்,
நிருதர்-அரக்கர், அணி-9
நிருபன்-அரசன், உலோக-18
நிரை-வரிசை, இருட்-64
நிலவறை-பூமிக்குள் வெட்டப்படும் பள்ளம், இருட்-180 [86
நிவத்தல்-மேலோங்குதல், இருட்-
நிழற்றல்-நிழலிச்செய்தல், இருட் -54
நிறம்-ஒளி, இருட்-205
நீண்டவன்-கண்ணபிரான், இருட்- 130
நீத்தம்-வெள்ளம், இருட்-26
நீதவன்-நீதிமுறைமையுடையவன், இருட்-210
நீர்மை-தன்மை, இருட்-64
நீராமகளிர்-நீரில்வாழும் தெய்வ மகளிர், இருட்-88 [58
நீராசனம்-மங்களவாலத்தி, இருட்-
நீளம் நீட்சி, இருட்-163
நீற்றணிஇமலன்-சிவபிரான், இருட் -146 [34
நீரூக்குதல்-அழியச்செய்தல்,இருட்
நீறு-விபூதி, இருட்-146
நூதல்-தெற்றி, இருட்-11
நூறுதல்-பொடியாக்குதல், இருட்- 215
நெடிதுயிர்த்தல் - பெருமூச்சுவிடு தல், சினக்குறி, இருட்-126
நெருநல்-நேற்று, உலோக-19
நெறுநெறென-ஒலிகுறிப்பு,இருட் -191
நென்னல்-நேற்று, சஞ்-14, இருட் -107
நேமி-சக்கரப்படை, வாசு-11;தேர் ச்சக்கரம், இருட்-53; ஆஜ்ஞாசக் கரம், சஞ் 8
நேர்-உவமை, இருட்-137
நேர்தல்-உடன்படுதல், களப்-5
நேரார்-பகைவர், இருட்-20
நைதல் - மனம் தளர்தல், இருட்- 162
நைந்து-வாடி, இருட்-262 [-8
பகடு-யானை, எருமைக்கடா, களப்
பகல்-தினம், அணி-32
பகழி-அம்பு, இருட்-95
பகழிக்கு அழகு குறித்த இலக்குத் தவறுமை, இருட்-258
பகோநி-கங்கை, இருட்-74, அணி- 31 [74
பகோதிமைந்தன் - வீடுமன், இருட்-
பங்கயம்-தாமரை, இருட்-48,194
பங்கயாசனமுனிவன் - பிரமன்போ ன்ற உலோகன், உலோக-20

பசு-யாகபசு, சஞ்-17
பஞ்சபூதங்கள், இருட்-51
பஞ்சவர் - பாண்டவர், இருட்-108
பஞ்சேந்திரியங்கள் பஞ்சபாண்டவர்க்கு உவமை, அணி-4
பட்டவர்த்தனர்-அரசர் பகுப்புக் களிலொன்று, இருட்-103
படாம்-சீலை, இருட்-98; வஸ்திரம், இருட்-251
படி - உவமை, இருட் - 60; பூமி, இருட்-183, 237
படியவர் - மண்ணுலகத்துள்ளார், இருட்-183
படுதல்-இறத்தல், இருட்-162
படுபொருள்-உண்டாகும் பொருள், இருட்-64
புண்-அலங்காரம், இருட்-263
பண்பிலை-இனிமையாக, இருட்-257
பணி-பாம்பு, இருட்-11, 192; ஆபரணம், இருட்-207
பணித்தல் - கூறுதல், உலக - 7; அமர்த்தி அடக்குதல், இருட்-17
பணிப்பகழி-நாகாஸ்திரம், இருட்-137
பணை-வாத்தியம், அணி-6
பதம்-பாதம், திருவடி, இருட்-19, 26, 196: கதி, இருட்-241
பதாகினி - சேனை, இருட் - 127, படை-7
பதாகை - பெருங்கொடி, இருட்-109
பதாகையாடை - கொடிச்சீலைகள், வாசு 6
பதாதி - காலாட்படை; மற்றைச் சேனைக்கு உபலட்சணம், இருட்-134
பதி - தலைவன், படை-12
பந்தி-வரிசை, இருட்-205
பப்பாவர் - பப்பாராட்டிலுள்ளவர், இருட்-181
பயம்-பால், சஞ்-1
பயம்பு-பள்ளம், குழி, மூகூர்-1
பயில உதைத்தல் - உறுத்தும்படி உதைத்தல், இருட்-196
பயிலுதல்-நடத்தல், இருட்-33
பயோததி-பாற்கடல், [பயம்-பால்; உததி - கடல்], இருட்-80
பரசு-கோடாலிப்படை, படை-24
பராசுதல்-நமஸ்கரித்தல், உலூக-7
பாணி, இருட்-134
பரத்துவாசன்-துரோணன், உலூக-15
பரந்தாமன்-கண்ணபிரான், இருட்-21, படை-13
பரமஞானம் - தத்துவஞானம், வாசு-7
பரமன் - யாவரிலும் சிறந்தவன், கண்ணன், இருட்-75
பரவை-கடல், இருட்-65
பரி-வரிசை, இருட்-65
பரி-குதிரை, இருட்-53
பரிசில்-வெகுமானம், இருட்-239
பரிசு-விதம், இருட்-256
பரிசை-கேடகம், இருட்-101
பரித்தாமா-அசுவத்தாமா, இருட்-227
பரிந்து-வருத்தப்பட்டு, இருட்-123
பரிபவம்-அவமானம், இருட்-18
பரியவன் - பெருமையுடையவன், உலூக-3
பரிதி - சூரியன், இருட்-61
பரிவு-வருத்தம், இருட்-17; அன்பு, இருட்-26, 124
பலபத்திரன்-பலராமன், அணி-5
பலவகைவாத்தியங்கள், அணி-15
பவனக்கிளை - சப்தமருத்துக்கள், [பவனம்-காற்று]; இருட்-202
பவனகுமாரன்-வீமன், இருட்-17, [பவனன்-காற்று]
பவனன்-வாயுதேவன், இருட்-194
பழனம்-கழனி, இருட்-94
பழுது-நிந்தனை, இருட்-133, வீணாய்ப்போதல், இருட்-216
பள்ளியுணர்தல் - தூக்கம் விழித்தெழுதல், வாசு-9
பற்பாரகம் - பதுமாகாரம் என்னுங்கல், இருட்-102
பற்பம்-தாமரைமலர், இருட்-197
பன்னகம்-பாம்பு, வாசு-14

பன்னகாதிபன்-ஆதிசேடன், இருட்-80
பன்னகம்-பாம்பு, இருட்-25
பன்னுதல்-சிறப்பித்துச் சொல்லுதல், இருட்-147
பனுவல்-பாடல், இருட்-236
பாக்கியம்-கல்வினைப்பயன், இருட்-252
பாடி-இடையர்சேரி, இருட்-91
பாடிவீடு - பகைமேற்செல்பவர் உறையுமிடம், பாசறை, சஞ்-4
பாதம் சிவப்பித்தல் - நடத்தல் என்றபடி, இருட்-247
பாதவம்-மரம், இருட்-170
பாதாலகங்கை, இருட்-59
பாந்தளம்பகழி-நாகாஸ்திரம், இருட்-258
பாயல்-படுக்கை, இருட்-80
பாயிரம்-முகவுரை, இருட்-208
பார்த்தன் - அருச்சுனன், இருட்-258, 259
பார்த்திவர்-அரசர், இருட்-173
பானு - சூரியன், இருட்-85
பிடர்க்கண் மதி - பின்புத்தி, சஞ்-15
பிணக்கு-மாறுபாடு, சஞ்-3
பிணை-பெண்குதிரை, உலோக-5
பிதாமகன் - பாட்டன், வீடுமன், இருட்-133, அணி-34
பிரமம்-தத்துவப்பொருள், சஞ்-14
பிலம்-பள்ளம், இருட் 182
பிறிதுமொழிதலணி, இருட் - 29, 146, 177
பின்னம்-மாறுபாடு, உலோக-11
பீடு-பெருமை, உலோக-11
பீறியது-கிழிந்தது, இருட்-98
புகர்-புள்ளி, அணி-6
புகல்வு-சொல்லுதல், சஞ்-11
புங்கவன் - தலைவன் என்றபொருளது, இருட்-90
புணரி-கடல், இருட் - 58
புத்தேள்-தேவன், இருட்-237
புந்தி-தத்துவஞானம், இருட்-75
புயகம்-பாம்பு, இருட்-197
புயங்கம்-பாம்பு, வாசு-2, இருட்-62
புரந்தான்-இந்திரன், இருட்-184, 245, 264
புரவி-குதிரை, இருட்-65
புரவித்தாமா-அசுவத்தாமா, இருட் 223 [வாசு-1
புராதனன்-பழையவன், திருமால்,
புரிசை-மதில், இருட்-60, 149
புரிதல்-விரும்புதல், இருட்-34
புரை-குற்றம், இருட்-147
புல்-இழிவான, [புன்மை - இழிவு] இருட்-121, 144, 246
புல்லார்-பகைவர், இருட்-49
புவனம்-உலகம், இருட்-81
புளகு - மயிர்ச்சிலிர்ப்பு [அன்பின் மெய்ப்பாடு], இருட்-252
புறக்கிடுவது - பின்னுக்குச்செல்வது, அணி-28
புறந்தருதல் - முதுகுகாட்டியோடுதல், இருட்-241
புறவு-முல்லைநிலம், இருட்-121
பூகம்-பாக்குமரம், இருட்-23
பூசல்-யுத்தம், இருட்-256
பூசுரன்-அந்தணன், உலோக-13
பூசை - வீட்டினுள்ளே வசிக்கும் பூனை, உலோக-13; உபசாரங்கள், இருட்-240
பூதேவர்-பிராமணர், இருட்-38
பூந்தவிசிற்பூவை-திருமகள், இருட்-12 [இருட்-136
பூபதி-பூமிக்குத்தலைவன், அரசன்,
பூபாரந்தீர்த்தல், இருட்-34
பூரி-பூரிச்சிரவசு, படை-20
பெண்ணீர்மை - பெண்மைக்குரிய குணங்கள், இருட்-51
பெயரிடம் - புடைபெயர்தற்குரிய இடம், இருட்-63
பெற்றி அல்லன-பெருமையல்லாத, தகாத, சஞ்-15
பேணுதல் - விரும்பிக்கொண்டாடுதல், இருட்-143
பேதம் - (பகைவர்மனத்தை)வேறுபடுத்தல், இருட்-2
பேதித்தல் - மாறுபாடு செய்தல், இருட்-229
பேழை-பெட்டி, இருட்-153. 249

பை-பசிய, கிருட்-140; படம், கிருட்-162; குளிர்ந்த, கிருட்-167
பைங்கூந்தல் - கரியகூந்தல், குளிர்ந்தகூந்தல், கிருட்-49
பை வண்ணம்-பசுமைநிறம், கிருட்-33
பைவு-வருத்தம், கிருட்-5
பொங்குதல்-விளங்குதல், கிருட்-54; சீறுதல், கிருட்-91
பொதுமடந்தையர் - விலைமகளிர், கிருட்-128
பொதுவர்-இடையர், சஞ்-1, கிருட்-32, 91, 121 [வாசு-11
பொய்த்துயில் - யோகநித்திரை,
பொருட்பின்வருநிலையணி, கிருட்-66, அணி-15
பொருப்பு-மலை, அணி-7
பொருளிசை மாட்சிமாரு அடிமறி மாற்றுப்பொருள்கோள், கிருட்-207 [-7
பொலந்தரு-கற்பகவிருட்சம், அணி
பொற்பு - அழகு, (உரிச்சொல்) கிருட்-164
பொறுத்தல்-சுமத்தல், கிருட்-119
பொறைவேந்தன்-தருமன், கிருட்-25 [194
பொன் வெற்பு-மேருமலை, கிருட்-
பொன்றுதல்-இறத்தல், உலோக-12; அழிதல், கிருட்-151
பொன்னுலகு - சுவர்க்கலோகம், கிருட்-62
போகம் - நிராசையப்பேரின்பம், வாசு-7; பாம்பின் உடம்பு, கிருட்-186
போதகம்-யானை, படை-3
போனகம்-உணவு, கிருட்-85
மகம்-யாகம், சஞ்-17
மகரம்-சுறாமீன், கிருட்-99, 116
மகரிகை - யானைக்கொம்பிற்பூண்; மகரிகாபத்திரமூமாம்: இது சுறாமீன்வடிவமாக எழுதப்படுஞ் சித்திரரேகை, அணி-22
மகவான் மைத்தன் - அருச்சுனன் [மகவான்-இந்திரன்], கிருட்-20, 160
மகாரதர்-அணி-1
மகிபர்-அரசர், அணி-13
மகிழ்நர்-கணவர், கிருட்-168
மகீபர்-அரசர், கிருட்-111
மகுடம்-சிகரம், கிருட்-69
மகுடவர்த்தனர் - அரசர்பகுப்புக் களிலொன்று, கிருட்-103
மஞ்சனமாடுதல் - ஸ்நானஞ்செய்தல், கிருட்-83
மடங்கல்-ஆண்சிங்கம், கிருட்-244
மடவால்-பெண், கிருட்-28
மடவியார்-அறியாமையையுடைய கீழ்மக்கள், சஞ்-6
மடை - சமைத்தல் (தாழில், படை-16
மடையர்-சமையற்காரர், கிருட்-81
மண்டலமதியம் - பூர்ணசந்திரன், கிருட்-148
மண்டலீகர்-சிற்றரசர், படை-7
மணி-மாணிக்கம், கிருட்-90
மத்திரபதி-சல்லியன், படை-15
மதலை - பிள்ளை, புத்திரன், கிருட்-153, 253
மதன்-மன்மதன், அணி-25
மதிப்பது-ஆலோசிப்பது, கிருட்-178
மதுகை-வலிமை, அணி-18
மந்தணம் - இரகசிய ஆலோசனை, கிருட்-52, 175
மந்தணத்தின் எய்தப் பெறுதார், கிருட்-52
மந்தரம்-மந்தரமலை, கிருட்-199
மந்தாகினி - ஆகாசகங்கை, கிருட்-61
மந்திரம்-ஆலோசனை, கிருட்-169
மந்தேகர்-சூரியனுக்குப்பகைவராய அசுரர், கிருட்-87
மயக்கு நிகைப்பு, கிருட்-201
மரகதம்-பச்சையிரத்தினம், கிருட்-208
மரு-வாசனை, உலோக-19; தேன், வாசு-12
மருகர்-சகோதரி மக்கள், படை-15
மருகன்-மருமகன், கிருட்-72
மருண்டு-பிரமித்து, படை-16

மருத்துவர் - அசுவினிதேவர்கள், அணி-16
மருது-மருதமரம், வாசு-18, இருட்-32, 91
மருந்து-தேவாமிருதம், இருட்-77
மருப்பு-தந்தம், இருட்-10
மருவார்-பகைவர், இருட்-50
மல்-மல்லர்கள், இருட்-131
மல்குதல்-பொருந்துதல், இருட்-109
மல்லல்-வளப்பம், [உரிச்சொல்], இருட்-71
மலர் உந்தி-நாபித்தாமரை, இருட்-110
மலர்மடந்தை-இலக்குமி, இருட்-110
மலர்மறந்தகுழல், இருட்-42
மலைத்தல்-போர் செய்தல், இருட்-122
மலையல்-கொல்லாதே [எதிர்மறையேவல்], இருட்-258
மழு-கோடாலிப்படை, உலோக-1, இருட்-204
மழுத்தரித்தகோ - பரசுராமன், உலோக-1
மழை-குளிர்ச்சி, அணி-13
மறலி-யமன், இருட்-191
மறித்தல்-இறத்தல், இருட்-237
மறுகுதல்-சுழலுதல், இருட்-207
மறுத்தும்-மறுபடியும், இருட்-258
மறை-வேதம், இருட்-66; மந்திரம், இருட்-244
மன்பிறப்பு - இராசகுலபிறப்பு, இருட்-121
மன்றல்-வாசனை, சஞ்-5, இருட்-96, 159
மன்று-சபை, இருட்-45
மன் னறம்-இராச தருமம், சஞ்-12
மனத்திருள்-அஜ்ஞானம், இருட்-183
மனம் கண்ணனுக்கு உவமை, அணி-4
மாகந்தம்-தேமாமரம், இருட்-57
மாசுணம்-பாம்பு, இருட்-145
மாடு-பக்கம், இருட்-116
மாண்டவர்-மாட்சிமைப்பட்டவர், இருட்-130
மாதவன் - திருமகள் கொழுநன், இருட்-210
மாதுலன்-மாமன், இருட்-180
மாயன்-விசித்திர சக்தியையுடையவன், கண்ணன், இருட்-9,36,51
மாயிரு-மிகப்பெரிய [ஒருபொருட் பன்மொழி], இருட்-208
மாயை-கூடாததையுங் கூட்டுவிக்குந் திறம், இருட்-32
மாயோன்-கண்ணன், இருட்-77
மாருதி-அனுமான், சஞ்-13
மாருதிதூவன் - வீமசேனன், சஞ்-13
மால்-திருமால், உலோக-1; பெருமை, இருட்-43
மாலை - சந்தி, அந்திப்போது, இருட்-164
மாழ்குதல்-அழிதல், சஞ்-16
மாற்றம்-சொல், உலோக-4, வாசு-19, இருட்-43, 172, 180
மாற்றலார்-பகைவர், இருட்-246
மாற்று - (பொன்னின்) உரை மாற்று, இருட்-164
மாற்றுரையணி, இருட்-49, 95
மாறு-வேற்றுமை, இருட் - 182; பகை, இருட்-232
மானம்-பெருமை, உலோக-8, இருட்-259; இலச்சை, இருட்-12; கௌரவம், இருட்-44
மிகைத்து-அதிகமாக, இருட்-114
மிடைதல்-செருங்குதல், இருட்-61
மித்திரர்-நண்பர், படை-15
மிதவை - மிதக்குந்தன்மையது, இருட்-153
மிலேச்சதல்-சூடுதல், அணி-1
மிலைதல்-சூடுதல், இருட்-89
மின்-பெண்; [உவமையாகுபெயர்], இருட்-124
மீவரும் அண்டம் உறுந்திருமேனி-விசுவரூபம், இருட்-213
மீளி-வலிமையிற் சிறந்தவன், சஞ்-2; அணி-31
மீன்-நட்சத்திரம், இருட்-65

முகங்கொடாது·லட்சியஞ்செய்யாமல், இருட்-107
முகடு-மேலிடம், அணி-29
முகத்தில் நயனம் வைத்தல்-நன்முக உற்றுப்பார்த்தல், இருட்-110
முகம் குவிதல்-முகம் வாடுதல், இருட்-165
முகிலேழ், படை-8
முகுந்தன்-திருமால், இருட்-187, படை-2
முட்டி-முஷ்டி, கைப்பிடி, இருட்-200
முட்டுதல்-மிகநெருங்குதல், இருட்-103
முடிநிலம்-சிகரத்தினிடம், இருட்-60
முண்டகம்-தாமரை, இருட்-165
முற்த-முதன்மையாக, இருட்-132
முந்நீர்-மூன்றுநீர்மையையுடையது, கடல், படை-21
மும்மதம், இருட்-43
மும்முரசு, இருட்-67
மும்மை-மூன்றுகாலவாலாறு, சஞ்-11; மூன்று, இருட்-1, 81
முரண்-வலிமை, உலோக-17
முரண்டு-பகைத்து, இருட்-237
முரலுதல்-ஒலித்தல், இருட்-10,70
முரன்று-ஒலித்து, இருட்-94
முருக்குதல்-அழித்தல், இருட்-196, அணி-31
முருகு-நறுமணம், இருட்-32
முழக்கு-ஆரவாரம், இருட்-93
முற்றுமோனை, இருட்-75, 78
முறுகுசினம்-மூண்டெழுந்தகோபம், இருட்-191
முறுவல்-புன்சிரிப்பு, இருட்-172
முறைமை மாறுதல்-நீதிதவறுதல், இருட்-104
முன்-தமையன்[காலவாகுபெயர்], வாசு-17
முன்றில்-வீட்டின்முன்னிடம் [இலக்கணப்போலி,] இருட்-11, 68
முன்னுதல்-மனத்திற்கொள்ளுதல், சஞ்-11,13; நினைத்தல், இருட்-152; ஆலோசித்தல், படை-2
முனி-கோபி, இருட்-251
முனிதல்-கோபித்தல், இருட்-210; கறுக்கொள்ளுதல், இருட்-232
முனிவர்சொல் பொய்யாது, உலோக-12
முனைதல்-எதிர்தல், இருட்-259
மூரி-வலிமை, பழைமை, இருட்-264
மூலப்பேர்-ஆதிமூலமே என்ற பெயர், இருட்-43
மூலம்-கிழங்கு, இருட்-8
மூலமாற்தோற்றம், இருட்-37
மூளா வாயுகுதல், இருட்-94
மெய்விளங்கவரு குருநிலம், இருட்-120
மேகத்தைக்கண்டு மகிழும் மயில் × கண்ணனேக்கண்டு மகிழுங்குந்தி, இருட்-148
மேகலைமணியுக எடுக்கவோ கோக்கவோ எனல், இருட்-255
மேதக-மேன்மையாக, இருட்-170
மேதினி-பூமி, உலோக-14; சஞ்-14
மேருக்குன்று குங்குமம் பூசிய தனைய தடம்புயம், உலோக-13
மேருமலை முக்குவடு தணிப்பட்டு முடங்கியது, இருட்-194
மேருவையெடுக்குந்தாள் ஏனம், உலோக-1
மேல் திசைக்கடவுள்-வருணன், இருட்-164
மேவுதல்-விரும்புதல், இருட்-56; உடன்படல், இருட்-122
மை-கருமை, இருட்-22, 50, 199, 200
மைத்துனர்-அத்தை மகார், [பாண்டவர்கள் இருஷ்ணனுக்கு இம்முறையினர்], இருட்-264
மைந்து-வலிமை, இருட்-198
மையல்-மயக்கம், இருட்-251
மொய்ம்பன்-வலிமையுடையவன் [மொய்ம்பு-வலிமை], இருட்-134
மொய்ம்பு-வலிமை, இருட்-197

மோத்தல் - மோர்த்து பார்த்தல், இருட்-252
யவனசவனம் - வடசொற்றொடர், அணி-23
யாகசேனன் - துருபதன், படை-3
யாதவகுமார் - நாராயணகோபாலர் களும் பிறரும், வாசு-19
யாதவன் - கண்ணபிரான், உலாக - 21; இருட்-170
யாமளம் - காளிக்குப்பலிகொடுத்தல் முதலியவற்றைக் கூறும் நூல், களப்-8
யானை உரல்போன்ற காலையுடை யது, உலாக-5
யோகத்தியில் - அறிதுயில், வாசு-8
யோனிகள் - பிறப்புக்கள், சஞ்-7
வகிர் - துண்டம், அணி-22
வகிர்படுதல் - பிளவுபடுதல், இருட்-200
வசை - பழி, சஞ்-11; இருட்-129
வஞ்சிப்பூமாலை பகைவர்மேற் பொரச்செல்வோர் அணிவது, அணி-1
வஞ்சினம் - சபதம், இருட்-9, 15
வஞ்சின வாசகம் - சபதவார்த்தை, இருட்-216
வடவையின்முகத்தீ - படபாமுகாக் கினி, இருட்-98
வடி - கூர்மை, இருட் - 204; படை - 21
வடு - பழிப்பு, இருட்-153
வண்ணம் - அழகு, இருட்-105; நிறம், படை-1; அழகு, படை-20
வண்மை - தானம்; ஏற்றார்க்கு மாற் றுத கொடுத்தல், இருட் - 147; 218
வணங்கலாமுடியினன் - துரியோ தனன், படை-9
வந்தவாறு - வந்தகாரியம், இருட் - 249
வந்தனை - வணங்குதல், இருட்-77
வம்பு - வாசனை, இருட்-57, 157, 175
வய - வலிமை; (உரிச்சொல்), உலாக-19

வயம் - வெற்றி, இருட்-243, களப் - 4; முகூர்-1
வயவர் - வீரர், அணி-21
வயிடூரியம் - வைடூரியம் என்னுங் கல், இருட்-102
வயிர் - ஊதுகொம்பு, அணி-15
வயிரம் - பகைமை, இருட்-6; வைரக் கல், இருட்-102
வர்க்கம் - கூட்டம், பல, இருட்-201, 205
வரம்பு - எல்லை, இருட்-171
வரிசிலை - கட்டமைந்தவில், வாசு - 15; இருட்-82
வருக்கை - பலா, இருட்-57
வருணன் திக்கு - மேற்குத்திக்கு, இருட்-163
வரை - மூங்கில், இருட் - 6; மலை, நிலை, வரம்பு, இருட்-55
வல் - சூதாடுகருவி; ஆட்டத்துக்கு இலக்கணை, உலாக-2; வினைவு குறிக்கும் இடைச்சொல், களப் - 3
வல்லவாறு - கூடினபடி, நீதிக்கு உரியபடி, விருப்பமானபடி, இருட்-112
வல்லியம் - புலி, படை-17
வல்வினையின்பயனலாது முயற்சி யால் வருவதொன்றில்லை, இருட்-257
வலம் - வெற்றி, இருட்-73
வலம்புரி - வலப்பக்கத்தாற் சுழிந் திருக்கும் சங்கு, இருட்-10, 67; நஞ்சாவயிட்டை மலர், இருட்-73, 229
வலம்புரித்தார்வன் துரியோத னன், இருட்-73
வலம் புரிதல் - சூழ்ந்து செல்லு தல், வெற்றியை விரும்புதல், இருட்-73
வழக்கு - நீதி, இருட்-93
வழங்குதல் - தருதல், உலாவப் பெறல், கொடுத்தல், இருட்-115
வழுவாத - தவறுமல், இருட்-111
வள் - அழகிய, இருட் - 110, 155, 165

வளவன்-சோழன், படை-18
வஜ்ர-சக்கு, இருட்-10
வன்பு-வலிமை, இருட்-72; பலாத்காரம், இருட்-127
வனிதையர்-மகளிர், இருட்-89
வாக்கு-வாய், இருட்-161
வாகு-தோள், அணி-34
வாகை-வெற்றி, இருட்-195
வாகைசூடுதல், படை-10
வாங்கு - வணங்க, உலுாக - 21; படை-7
வாங்குதல்-கழற்றுதல், இருட்-242
வாசகம்-வார்த்தை, இருட் -217
வாசநீர்-பனிநீர், இருட்-84
வாசம்-பரிமளம், இருட்-83
வாசவன்-தேவேந்திரன், இருட் - 103, 195, 213, 219, 245, 247
வாண்மை - வாளின்தொழில்வன்மை, படை-10
வாணன்-பாணாசுரன், இருட்-4
வாம்-வாவும், தாவிப்பாயும், இருட் - 82
வாமம்-அழகு, இருட்-213
வாய்மை - வார்த்தை, வாசு - 18; இருட் - 140, சத்தியம், இருட் - 112, 260
வாயிதழ்துடித்தல், இனக்குறி, இருட்-126
வாரணம்-யானை, இருட்-209
வாரணமிட்ட பொதுப்பெயர் - 'ஆதிமூலம்' என்பது,இருட்-209
வாரி-கடல், அணி-33
வாரிதி-கடல், இருட்-87, 99
வாழ்நினம் மாறுதல் - வாழ்நாள் கழிதல், சஞ்-6
வாள்-ஒளி, இருட் - 97; கொடிய, இருட்-99
வாளம்-சக்கரவாளம், இருட்-163
வாளமால்வரை-பெரியசக்கரவாள கிரி, இருட்-163
வாளவர்-வாள்வீரர், இருட்-82
வாளி-அம்பு, உலுாக-19, இருட்-23
வான்-பெரிய, இருட்-248
வான்துயில்-யோகநித்திரை, வாசு-9
வான்பட்ட பூவித்தேரோன் - சூரியன், இருட்-160
வானநதி-ஆகாசகங்கை,இருட்-100
வானநதிமைந்தன்-வீடுமன், இருட்-100
வானவன்-கடவுள், இருட்-210
விஞ்சையர் - வித்தியாதரர், வாசு-15
விடவி-மரம், சஞ்-6
வித்தகன் - எல்லாமறிந்தவன், சதுரப்பாடுடையவன், சஞ்-1
விதலை-நடுக்கம், அணி-28
விதாரம்-போர், இருட்-134
விதானம்-மேற்கட்டி, இருட்-182
விதிவலியாற் கெடுமதிகண்தோன்றுது, இருட்-25
விநாடகர்-மிகுதியாய்ப்பழிப்பவர், உலுாக-14
விந்தம் - விந்தியமலை, உலுாக - 9; இருட்-198
விபுதர்-தேவர்,இருட்-196;அணி-3
விமலன் - பரிசுத்தன், கண்ணன், இருட்-76
வியன் - விசாலமான, அகலமான, வாசு-6
வியாளம்-பாம்பு, அணி-31
வீரகு - மாறுபாடு, சஞ்-11; உபாயம், வாசு-5; தந்திரம், இருட் - 33, 113; வஞ்சனை, இருட்-183, 191, 242, 250
வீரதம் - கொள்கைதவறுமல் ஒழுகுதல், இருட்-224
விரவுதல் - பார்த்துபொருந்துதல் இருட்-65
வீராய்-கலந்து, அணி-14
விருத்தன்-பிழவன், இருட் - 241
விருதர்-காலாள்வீரர், அணி-9
விலை-வாசனை, இருட்-110
விரோசனன்-சூரியன், வாசு-2
வில்இரண்டு - இவைதுரசு விஷ்ணுதநுசு, இருட்-131
வில்லி - வில்லில் வல்லவன், இருட் - 132
விள-விளாமரம், இருட்-136
விளிதல்-இறத்தல், இருட் - 177

வீறல்-வெற்றி, இருட்-108
வீ-வண்டு, இருட்-189
வீடு-முத்தி, இருட்-78
வீரமாமுனி-தருமன், சஞ்-17
வீவது - அழிவது, அழிவு, இருட்-142
வெஃகுதல் - விரும்புதல், இருட்-150
வெங்கவனம் - விரைந்த கடை, இருட்-82
வெண்மை-சாரமின்மை, உலோக-4
வெம் - விரும்பப்படும், அணி - 13 ["வெம்மை வேண்டல்"]
வெம்பரி - விரைவையுடைய குதிரை, இருட்-56
வெய்யோன்-சூரியன், இருட்-159
வெயர்த்தல் - வேர்வையடைதல், இருட் - 126
வெயில்- ஒளி, இருட்-196
வெள்ளம் - ஓர்பெருந்தொகை, படை-20
வேத்தவை-இராசசபை, இருட்-13
வேத்திரத்தவர் - பிரம்பேந்திய காவலாளர், இருட்-189
வேத்திரம்-பிரப்பங்கோல், இருட்-189
வேத்துறீஇ, உலோக-2
வேதம் - பேதம்; பகுப்பு, இருட் - 185
வேதம்நாறும் மலருந்தி,இருட்-110
வேதமருத்துவர்- தேவவைத்தியர்களான அசுவினிதேவர்கள், இருட்-219
வேய்-புல்லாங்குழல், இருட்-105, மூங்கில், இருட்-182
வேலை-கடல், சஞ்-17, இருட்-59, 116
வேழம்-யானை,இருட்-63; படை-21
வேள் - சுப்பிரமணியக் கடவுள், முருகன், இருட்-196, அணி-3
வேற்றுப்பொருள்வைப்பணி, உலோக-12; இருட்-78, 125, 246
வேறல்-வெல்லுதல், களப்-3
வேனிலான்-மன்மதன், இருட்-166

அரும்பதவகராதி முதலியன முற்றிற்று.



இதனடியிற் குறித்துள்ள புத்தகங்கள் வை. மு. தரசிம்மன், (வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் குமாரர்) வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர் கம்பெனி, 17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு. திருவல்லிக்கேணி, சென்னை - 5 என்ற விலாசத்தில் கிடைக்கும்:—

வை. மு. கோ. பதிப்புகள்.

கம்பராமாயணம்:—

பாலகாண்டம்	உரையுடன்	...	9—00
அயோத்தியா காண்டம்	,,	...	9—00
ஆரணிய காண்டம்	,,	...	9—00
கிட்கிந்தா காண்டம்	,,	...	9—00
சுந்தர காண்டம்	,,	...	9—00
யுத்த காண்டம் 1-வது வால்யூம்	,,	...	9—00
,, 2-வது ,,	,,	...	10—00
உத்தர காண்டம் ,,	,,	...	(அச்சில்)

வில்லிபாரதம் :—

ஆதிபருவம்	உரையுடன்	...	4—50
சபாபருவம்	,,	...	4—50
ஆரணிய பருவம்	,,	...	4—50
விராட பருவம்	,,	...	2—50
உத்தியோக பருவம்	,,	...	4—50
வீட்டும துரோண கன்ன பருவங்கள்	,,	...	9—00
சல்லிய சௌப்திக பருவங்கள்	,,	...	3—00
கன்ன பருவம் மட்டும்	,,	...	3—00

திருக்குறள் :—

மூன்றுபாலும் (புதிய பதிப்பு)		...	10—00
அறத்துப்பால் பரிமேலழகருரையுடனும் அதற்குக் குறிப்புரையுடனும்		...	3—00
பொருட்பாலும் காமத்துப்பாலும்	,,	...	6—00

(பரிமேலழகருரைக்கு எழுதியுள்ள குறிப்புரைகள் கற்போர்க்குப் பரிமேலழகரின் உரைக்கருத்துக்களை ஐயந் திரிபுஅற விளக்குவதோடு அவர்களைச் சிறந்த புலவராக்கும்.)

பத்துப்பாட்டு - ஆராய்ச்சியுரையுடன் 9—00

(இவ்வுரை நச்சினார்கினியருரை நயத்தைத் தெளிவுறுத்துவதுடன் கற்போர்க்கு ஆராய்ச்சித் திறனையும் ஊக்குவிக்கும்.)

பத்துப்பாட்டில் தனியே கிடைக்கும் பகுதிகள் :—

திருமுருகாற்றுப்படை	ஆராய்ச்சியுரையுடன்	...	0—62
பட்டினப்பாலை	,,	...	0—75
பொருநராற்றுப்படை	,,	...	0—75

தண்டியலங்காரம் :—

தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் முழுவதும்) மூலம், பழைய வுரை, குறிப்புரையுடன்		...	3—50

அஷ்டப்ரபந்தம் - உரையுடன்

திருவரங்கத்துமாலை, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, ஸ்ரீரங்கராயகரூசல் முதலியன (ஒரே பகுதியில்)			6—00
திருவரங்கக்கலம்பகம்	உரையுடன்	...	1—50
திருவரங்கத்தந்தாதி	,,	...	1—00
திருவேங்கடத்தந்தாதி	,,	...	1—25
திருவேங்கடமாலை	,,	...	1—00

கம்பர் இயற்றிய புத்தகங்கள் :—

சடகோபரந்தாதி	உரையுடன்	...	2—00
சரசுவதி யந்தாதி	,,	...	0—50
ஏரெழுபது	,,	...	1—00
சிலையெழுபது	,,	...	0—75

இதர புத்தகங்கள் :—

திருப்பாவை தமிழ்நடை	உரையுடன்	...	0—50
நன்னூற்காண்டிகையுரை	,,	...	3—50
மதுரைக்கலம்பகம்	,,	...	1—50
அழகர்கலம்பகம்	,,	...	0—62
ஆழ்வார்கள் சரித்திரம், பட்டர் வைபவம், பிள்ளைலோகாசாரியர் வைபவம்		...	2—00
சந்திராபீடசரிதம்		...	0—37

நைடதகாரம் :—

காட்சிக்காதை	உரையுடன்	...	0—60
நாடுகாண்காதை	,,	....	0—50

மணிமேகலை :—

பாத்திரம்பெற்ற காதை	உரையுடன்	...	0—25
மலர்வனம்புக்க காதை	,,	...	0—25

—: o :—